# www.Padasalai.Net

படங்களை தொடுக! பாடசாலை வலைதளத்தை சமூக ஊடகங்களில் பின்தொடர்க!! உடனுக்குடன் புதிய செய்திகளை Notifications-ல் பெறுக!

Zoom Touch Below Links Download!


| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **12th Standard** | Syllabus | Books | Study Materials – EM | Study Materials - TM | Practical | Online Test (EM & TM) |
| | Monthly Q&A | Mid Term Q&A | Revision Q&A | PTA Book Q&A | Centum Questions | Creative Questions |
| | Quarterly Exam | Half Yearly Exam | Public Exam | NEET | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **11th Standard** | Syllabus | Books | Study Materials – EM | Study Materials - TM | Practical | Online Test (EM & TM) |
| | Monthly Q&A | Mid Term Q&A | Revision Q&A | Centum Questions | Creative Questions | |
| | Quarterly Exam | Half Yearly Exam | Public Exam | NEET | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **10th Standard** | Syllabus | Books | Study Materials - EM | Study Materials - TM | Practical | Online Test (EM & TM) |
| | Monthly Q&A | Mid Term Q&A | Revision Q&A | PTA Book Q&A | Centum Questions | Creative Questions |
| | Quarterly Exam | Half Yearly Exam | Public Exam | NTSE | SLAS | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **9th Standard** | Syllabus | Books | Study Materials | 1st Mid Term | 2nd Mid Term | 3rd Mid Term |
| | Quarterly Exam | Half Yearly Exam | Annual Exam | RTE | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **8th Standard** | Syllabus | Books | Study Materials | 1st Mid Term | 2nd Mid Term | 3rd Mid Term |
| | Term 1 | Term 2 | Term 3 | Public Model Q&A | NMMS | Periodical Test |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **7th Standard** | Syllabus | Books | Study Materials | 1st Mid Term | 2nd Mid Term | 3rd Mid Term |
| | Term 1 | Term 2 | Term 3 | Periodical Test | SLAS | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **6th Standard** | Syllabus | Books | Study Materials | 1st Mid Term | 2nd Mid Term | 3rd Mid Term |
| | Term 1 | Term 2 | Term 3 | Periodical Test | SLAS | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **1st to 5th Standard** | Syllabus | Books | Study Materials | Periodical Test | SLAS | |
| | Term 1 | Term 2 | Term 3 | Public Model Q&A | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **Exams** | TET | TNPSC | PGTRB | Polytechnic | Police | Computer Instructor |
| | DEO | BEO | LAB Asst | NMMS | RTE | NTSE |

| | | | |
|---|---|---|---|
| **Portal** | Matrimony | Mutual Transfer | Job Portal |

| | | | |
|---|---|---|---|
| **Volunteers** | Centum Team | Creative Team | Key Answer Team |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **Downloads** | LESSON PLAN | Department Exam | Income Tax | Forms & Proposals | Fonts | Downloads |
| | Proceedings | GO's | Regulation Orders | Pay Orders | Panel | |

**Padasalai – Official Android App – Download Here**

**Kindly Send Your Study Materials, Q&A to our Email ID** – Padasalai.net@gmail.com

www.Padasalai.Net

# கவிமணி இன்பத்தமிழ்

மலிவு விலையில் மாணவர் பதிப்பு !








90/90

11

பொதுத்தேர்வு வினாத்தாள் அடிப்படையில்
அமைக்கப்பட்ட புதிய பதிப்பு 2020-21

Published by :
MERCY PUBLICATIONS
EDUCATIONAL PUBLISHERS
43, Bunder Street, Chennai - 600 001
Ph : 044 - 2538 1415 | Mobile : 97100 02490

www.Padasalai.Net

# கவிமணி

# இன்பத்தமிழ்

## மேல்நிலை – முதலாம் ஆண்டு

## பொதுத்தமிழ்

## FOR ONLINE CLASSES

இவ்வுரை நூலில் ..........

- உரைநடை : வினா – விடை / கவிதைப்பேழை : வினா – விடை
- விரிவானம் (துணைப்பாடம்) : வினா – விடை
- இனிக்கும் இலக்கணம் : வினா – விடை
- இலக்கணத் தேர்ச்சிகொள் / செய்யுள்நயம் பாராட்டல்
- மொழியை ஆள்வோம் / மொழியாக்கம்
- மொழியோடு விளையாடு / நிற்க அதற்குத் தக
- கலைச்சொல் அறிவோம் / உள்நிலைத் தேர்வு வினாத்தாள்கள்
- மாதிரி வினாத்தாள்கள் / பொதுத்தேர்வு வினாத்தாள்கள்
- மனப்பாடப் பகுதி

அனைத்தும் இடம்பெற்றுள்ளன.

உரைநூல்களைச் சலுகை விலையில் வாங்க விரும்புவோர்
தொடர்பு கொள்க : 744 92 000 92

உருவாக்கம்:

பதிப்பகப் புலவர்குழு

MERCY Publications

Educational Publishers

43, Bunder Street, Chennai - 600 001

For Orders: 97100 02490 / 70102 31425 / 99415 16187

விலை : ரூ.200.00

## பதிப்புரை

**அன்புநிறை மாணவச் செல்வங்களே!**

உயர்நிலை கடந்து மேல்நிலையில் கற்க வந்துள்ள உங்களை வரவேற்று வாழ்த்துகிறோம். மேனிலை முதலாமாண்டு மொழிப்பாடத்தில் நீங்கள் உயர்மதிப்பெண் பெறவேண்டும் என்கிற உயர்நோக்கில், ‘கவிமணி இன்பத்தமிழ்’ என்னும் இவ்வுரைநூலைத் தெளிவான எளிய மொழி நடையில், படித்தவுடன் மனத்தில் பதியத்தக்க வகையில், புலமைமிகு புலவர்குழு அமைத்த சுருக்கமான விடைகளைக் கொண்டதாகச் சிறப்பாக உருவாக்கியுள்ளோம்.

உரைநடை உலகம், கவிதைப்பேழை, விரிவானம், இனிக்கும் இலக்கணம், நம்மை அளப்போம், மொழியை ஆள்வோம் என்னும் தலைப்புகளில் உள்ள வினா – விடைகள் அனைத்தும், தேவையான அளவிற்குப் பாடப்பொருள் விடுபடாத வகையில் சிறப்பாக முறைப் படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன.

பாடநூல் வினாக்கள் அனைத்திற்கும் விடைகள் எளிமையாகவும், தெளிவாகவும் கொடுக்கப்பட்டுள்ளன. இவை அனைத்தையும் நீங்கள் நன்கு படித்துக்கொள்ள வேண்டும். நீங்கள் சந்திக்க இருக்கும் அனைத்துத் தேர்வுகளுக்கும் இவற்றில் இருந்தே அதிகமான வினாக்கள் தேர்ந்தெடுத்துக் கேட்கப்படும். அத்துடன் பாடநூலில் இடம்பெற்றுள்ள அனைத்துப் பாடங்களையும் நீங்கள் முழுமையாக அறிந்தும் புரிந்தும் படிப்பதற்கு உதவும் வகையில் தேவையான, அளவிற்குக் கூடுதல் வினாக்களும் வழங்கப்பட்டுள்ளன. இடையிடையே அவற்றையும் படித்து நன்கு பயிற்சி செய்யுங்கள். அவற்றில் இருந்தும் தேர்வுக்கு வினாக்கள் கேட்கப்படலாம்.

ஒரு மதிப்பெண் வினாக்கள் அனைத்தையும் நன்கு பயிற்சி செய்யுங்கள். பாடநூல் பயிற்சி வினாக்கள் தவிர்த்து, தேர்வில் புதிதாகக் கேட்கப்படும் குறுவினா, சிறுவினாக்களுக்கும், நான்கு மதிப்பெண்களுக்குரிய அகமதிப்பீட்டுத் தேர்வுக்கும் நீங்கள் சிரமமின்றி எளிதில் விடையளிக்க இவை உற்றுழி உதவும். மேலும், உயர்மதிப்பெண் பெறும் உங்கள் கனவை நனவாக்கி, உங்களை வெற்றிச் சிகரத்திற்கு இவ்வுரைநூல் வழிநடத்திச் செல்லும். வாழ்க! வளர்க! வெல்க!

இந்நூலைப் பார்வையிட்டு மாணவர்களுக்குப் பரிந்துரை செய்யுமாறு ஆசிரியப் பெருமக்களை அன்புடன் வேண்டிக் கொள்கிறோம்.

– பதிப்பாளர்

---


**Bank Details for Direct Deposit**

| | |
|---|---|
| Account Name | : **Mercy Publications** |
| Bank Name | : Karur Vysya Bank |
| Branch | : Godown Street, Chennai - 600 001 |
| Account Number | : **1755135000013300** |
| IFSC | : **KVBL0001755** |

**முதல் பதிப்பு :** ஜூன், 2018

**திருத்திய பதிப்பு :** ஜூன், 2019

**திருத்திய மூன்றாம் பதிப்பு :** ஜூன், 2020

**அச்சிட்டோர் :** ஸ்ரீ முருகன் பிரிண்டர்ஸ், சென்னை – 05.


MERCY PUBLICATIONS - CHENNAI

www.Padasalai.Net



| இயல் | பொருளடக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| | செய்யுள் | யுகத்தின் பாடல் | 5 |
| 1. | உரைநடை | பேச்சுமொழியும் கவிதைமொழியும் | 7 |
| | செய்யுள் | நன்னூல் பாயிரம் | 12 |
| | துணைப்பாடம் | ஆறாம் திணை | 16 |
| | இலக்கணம் | மொழி முதல், இறுதி எழுத்துகள் | 17 |
| 2. | உரைநடை | இயற்கை வேளாண்மை | 26 |
| | செய்யுள் | ஏதிலிக்குருவிகள் | 30 |
| | | காவியம் | 32 |
| | | திருமலை முருகன் பள்ளு | 33 |
| | | ஐங்குறுநூறு | 37 |
| | துணைப்பாடம் | யானை டாக்டர் | 40 |
| | இலக்கணம் | புணர்ச்சிவிதிகள் | 42 |
| 3. | உரைநடை | மலை இடப்பெயர்கள்: ஓர் ஆய்வு | 57 |
| | செய்யுள் | காவடிச்சிந்து | 62 |
| | | குறுந்தொகை | 66 |
| | | புறநானூறு | 69 |
| | துணைப்பாடம் | வாடிவாசல் | 73 |
| | இலக்கணம் | பகுபத உறுப்புகள் | 74 |
| | வாழ்வியல் | திருக்குறள் | 84 |
| 4. | உரைநடை | தமிழகக் கல்வி வரலாறு | 93 |
| | செய்யுள் | பிள்ளைக்கூடம் | 102 |
| | | நற்றிணை | 103 |
| | | தொல்காப்பியம் – சிறப்புப் பாயிர உரைவிளக்கப் பாடல் | 109 |
| | துணைப்பாடம் | இதழாளர் பாரதி | 111 |
| | இலக்கணம் | படைப்பாக்க உத்திகள் | 112 |

www.Padasalai.Net


| இயல் | பொருளடக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| 5 | உரைநடை | ஆனந்தரங்கர் நாட்குறிப்பு | 123 |
| | செய்யுள் | சீறாப்புராணம் | 129 |
| | | அகநானூறு | 134 |
| | துணைப்பாடம் | பிம்பம் | 140 |
| | இலக்கணம் | பா இயற்றப் பழகலாம் | 141 |
| | வாழ்வியல் | திருக்குறள் | 148 |
| 6 | உரைநடை | காலத்தை வென்ற கலை | 154 |
| | செய்யுள் | ஆத்மாநாம் கவிதைகள் | 160 |
| | | குற்றாலக் குறவஞ்சி | 162 |
| | | திருச்சாழல் | 165 |
| | துணைப்பாடம் | இசைத்தமிழர் இருவர் | 169 |
| | இலக்கணம் | கலைச்சொல்லாக்கம் | 171 |
| 7 | உரைநடை | காற்றில் கலந்த பேரோசை | 186 |
| | செய்யுள் | புரட்சிக்கவி | 189 |
| | | பதிற்றுப்பத்து | 195 |
| | துணைப்பாடம் | சிந்தனைப் பட்டிமன்றம் | 200 |
| | இலக்கணம் | ஆக்கப்பெயர்கள் | 203 |
| 8 | உரைநடை | தாகூரின் கடிதங்கள் | 213 |
| | செய்யுள் | ஒவ்வொரு புல்லையும் | 218 |
| | | தொலைந்து போனவர்கள் | 220 |
| | | மனோன்மணீயம் | 222 |
| | துணைப்பாடம் | செவ்வி | 228 |
| | இலக்கணம் | மெய்ப்புத் திருத்தக் குறியீடுகள் | 229 |
| ➲ | | மாதிரி வினாத்தாள்கள் | 241 |
| ➲ | | பொதுத்தேர்வு வினாத்தாள்கள் மார்ச் – 2019 / 2020 | 256 |
| ➲ | | மனப்பாடப் பகுதி | 268 |

# இயல் – 1

## கவிதைப்பேழை

## யுகத்தின் பாடல்

### (சு. வில்வரத்தினம்)

### குறுவினாக்கள்

1. **என் அம்மை ஒற்றியெடுத்த**
**நெற்றிமண் அழகே!**
**வழிவழி நினதடி தொழுதவர்,**
**உழுதவர், விதைத்தவர்,**
**வியர்த்தவர்க்கெல்லாம்**
**நிறைமணி தந்தவளே! – இக்கவிதை அடிகளில் உள்ள வினையாலணையும் பெயர்களை எழுதுக.**
தொழுதவர், உழுதவர், விதைத்தவர், வியர்த்தவர்.

2. **இனம், மொழி குறித்த இரசூல் கம்சதோவ் பார்வையைக் குறிப்பிடுக.**
   ★ "தன் இனத்தையும் மொழியையும் பாடாத கவிதை, வேரில்லாத மரம்; கூடில்லாத பறவை"

### கூடுதல் வினா

3. **கவிஞர் சு. வில்வரத்தினம் குறித்து எழுதுக.**
   ★ கவிஞர் சு. வில்வரத்தினம், யாழ்ப்பாணம் புங்குடுத் தீவில் பிறந்தவர்.
   ★ கவிதைகள் இயற்றுவதிலும் சிறப்பாகப் பாடுவதிலும் திறனுடையவர்.
   ★ இவர் கவிதைகள், 'உயிர்த்தெழும் காலத்துக்கா' என்னும் தலைப்பில் தொகுக்கப்பட்டுள்ளன.

### சிறுவினா

1. **சு. வில்வரத்தினம் பாடத்தான் வேண்டும் என எவற்றைக் குறிப்பிடுகிறார்?**
   ★ பல தலைமுறை கடந்தும் தனது திருவடிகளைத் தொழச் செய்தவள். தமிழ்ப்பயிர் தழைத்தோங்க காலந்தோறும் வியர்வை சிந்த உழைத்து, கலைச் செல்வங்களைப் படைக்கச் செய்து, நிறைமணி தந்தவள். தமிழ் மொழியாகிய வயலினை அறிவு கொண்டு உழுது, நற்கருத்துகளை விளைவித்துத் தமிழ் நிலத்தில் ஊன்ற உதவியவள்.
   ★ ஒலிக்கும் கடலையும், நெருப்பாற்றையும், மலை உச்சிகளையும் காற்றில் ஏறிக் கடந்துசெல் என்னும் பாடலை, தொன்மையான கபாடபுரங்களைப் பலிகொண்ட பிறகும், காலத்தால் அழியாத செல்வங்களின் வலிமை சேரச் செய்தவள். ஏடு தொடக்கி வைத்து, விரலால் மண்ணில் தீட்டித்தீட்டி எழுதக் கற்பித்தவள்.
   ★ ஆதலால், தமிழன்னை பல்லாயிரம் ஆண்டுகள் வாழவேண்டும் எனப் பாடத்தான் வேண்டும் என்கிறார் சு. வில்வரத்தினம்.

### கூடுதல் வினாக்கள்

2. **சு. வில்வரத்தினம் தமிழ்த்தாய்க்கு எவ்வாறு பல்லாண்டு பாடுகிறார் ?**
   ★ "என் அம்மையே" எனத் தமிழ்த்தாயை அழைத்து, "வழிவழி உனது அடியைத் தொழுதவர், உழுதவர், விதைத்தவர், உழைத்து வியர்த்தவர் என அனைவர்க்கும் நிறைமணி தந்தவளே, உனக்குப் பல்லாண்டு பாடத்தான் வேண்டும்" என்று, சு. வில்வரத்தினம் பாடுகிறார்.

3. **சு. வில்வரத்தினம் தமிழன்னையை எவ்வாறு பாடவேண்டுமென்கிறார்?**
   ★ சுழன்றடிக்கும் காற்றையும், வீசும் அலைகடலையும், எழும் நெருப்பையும், மலையளவு எழும் பகையையும் வென்று, தமிழ்த்தாயின் தொன்மத்தைக் காலத்தால் அழியாவகையில் வலிமை சேர்க்கப் பாட வேண்டுமென சு. வில்வரத்தினம் வேண்டுகிறார்.

MERCY PUBLICATIONS - CHENNAI

## இலக்கணக் குறிப்பு

**வழிவழி, தீட்டித்தீட்டி** – அடுக்குத்தொடர்கள்

**தொழுதவர், உழுதவர், விதைத்தவர், வியர்த்தவர்** – வினையாலணையும் பெயர்கள்

**நிறைமணி, கனைகடல்** – வினைத்தொகைகள்

**சாகாத, எழுகின்ற** – பெயரெச்சங்கள்

உர**மெலாம்** (உரமெல்லாம்) – தொகுத்தல் விகாரம்

**மலைமுகடு** (மலையின்கண் உள்ள முகடு) – ஏழாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை

**விரல்முனை** (விரலினது முனை) – ஆறாம் வேற்றுமைத் தொகை

## உறுப்பிலக்கணம்

1. **தீட்டி – தீட்டு + இ**
   **தீட்டு** – பகுதி, **இ** – வினையெச்ச விகுதி.
2. **எழுகின்ற – எழு + கின்று + அ**
   **எழு** – பகுதி, **கின்று** – நிகழ்கால இடைநிலை, **அ** – பெயரெச்ச விகுதி.

## புணர்ச்சி விதிகள்

1. **ஒற்றியெடுத்த – ஒற்றி + எடுத்த**
   "இ ஈ ஐ வழி யவ்வும்" (ஒற்றி + ய் + எடுத்த)
   "உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே" (ஒற்றியெடுத்த)
2. **காற்றிலேறி – காற்றில் + ஏறி**
   "உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே" (காற்றிலேறி)
3. **பல்லாண்டு – பல + ஆண்டு**
   "பல சில எனும் இவைமுன் பிறவரின் அகரம் ஏகலும்" (பல் + ஆண்டு)
   "தனிக்குறில்முன் ஒற்று உயிர்வரின் இரட்டும் (பல்ல் + ஆண்டு)
   "உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே" (பல்லாண்டு)
4. **உரமெலாம் – உரம் + எலாம்**
   "உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே" (உரமெலாம்)
5. **சுவரெலாம் – சுவர் + எலாம்**
   "உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே" (சுவரெலாம்)

## பலவுள் தெரிக

1. "கபாடபுரங்களைக் காவுகொண்டபின்னும்
   காலத்தால் சாகாத தொல் கனிமங்கள்" – அடிமோனையைத் தெரிவு செய்க.
   அ) கபாடபுரங்களை – காவுகொண்ட ஆ) காலத்தால் – கனிமங்கள்
   இ) கபாடபுரங்களை – காலத்தால் ஈ) காலத்தால் – சாகாத
   **விடை :** இ) கபாடபுரங்களை – காலத்தால்

## கூடுதல் வினாக்கள்

2. கவிஞர் சு. வில்வரத்தினத்தின் கவிதைத் தொகுப்பு ______.
   அ) பறவைகள் ஒருவேளை தூங்கப் போயிருக்கலாம்
   ஆ) தமிழனின் கவிதை இயல்
   இ) புல்லின் இதழ்கள் ஈ) உயிர்த்தெழும் காலத்துக்காக
   **விடை :** ஈ) உயிர்த்தெழும் காலத்துக்காக
3. கவிஞர் சு. வில்வரத்தினம் பிறந்த புங்குடுத்தீவு, ______ உள்ளது.
   அ) அமெரிக்காவில் ஆ) கனடாவில் இ) இந்தியாவில் ஈ) யாழ்ப்பாணத்தில்
   **விடை :** ஈ) யாழ்ப்பாணத்தில்

MERCY PUBLICATIONS - CHENNAI

# உரைநடை உலகம்

## பேச்சுமொழியும் கவிதைமொழியும்

### இந்திரன்

### நம்மை அளப்போம்

### குறுவினாக்கள்

**1. பேச்சுமொழி எழுத்துமொழியைக் காட்டிலும் உணர்ச்சி வெளிப்பாட்டுச் சக்தி மிக்கது ஏன்?**

★ எழுத்துமொழி, பேச்சுமொழிக்குத் திரும்பும்போது வெளிப்பாட்டுச் சக்தி அதிகம் கொண்டதாக மாறி விடுகிறது. எழுத்துமொழி உணர்ச்சி வெளிப்பாட்டைத் தெரிவிப்பதில்லை. எனவே, எழுத்துமொழியைக் காட்டிலும் பேச்சுமொழி, உணர்ச்சி வெளிப்பாட்டுச் சக்தி மிக்கதாக உள்ளது.

### கூடுதல் வினாக்கள்

**2. இந்திரனின் பிற நூல்கள் யாவை ?**

★ **இந்திரனின் பிற நூல்கள் :** முப்படை நகரம், சாம்பல் வார்த்தைகள், தமிழ் அழகியல், நவீன ஓவியம்.

**3. வால்ட்விட்மனின் உலகப்புகழ் பெற்ற கவிதைநூல் எது?**

★ 'புல்லின் இதழ்கள், வால்ட் விட்மனின் உலகப்புகழ் பெற்ற கவிதை நூல்.

**4. 'நான்' உதயமானது எப்போது என இந்திரன் கூறுகிறார்?**

★ 'உலகம்' என்பது மொழியினால் கட்டமைக்கப்பட்டபிறகு, உலகத்திலிருந்து 'நான்' என்பது தனித்துப் பிரிந்து உதயமானதாக இந்திரன் கூறுகிறார்.

**5. சொற்கள் எதற்கு உதவும் ?**

★ உணர்ச்சியினால் நிரம்பி இருக்கிறபோது, அந்த வேகத்தைப் பதிவு செய்வதற்குச் சொற்கள் உதவும்.

**6. புதுக்கவிதை என்பது எது?**

★ மரபு சார்ந்த செய்யுள்களின் இலக்கணக் கட்டுப்பாடுகளில் இருந்து தன்னை விடுவித்துக்கொண்ட கவிதையே, புதுக்கவிதையாகும்.

**7. குறியீட்டுக்கவிதை என்பது எது?**

★ குறியீட்டுக் கவிதை என்பது, பொருளைப் பதிவு செய்வது அன்று; நினைவுகூரத்தக்க தருணங்களைப் பதிவு செய்வதாகும்.

**8. புதுக்கவிதையின் இருப்பு யாது?**

★ புதுக்கவிதை, தன்னைப் படிப்பவரின் ஆழ்மனத்தில் தாக்கத்தை ஏற்படுத்தும்.

★ படிப்போரின் சிந்தனைக்கு ஏற்ப, விரிவடையும் பன்முகத் தன்மையும் கொண்டிருக்கும்.

**9. பேச்சுமொழி, எழுத்துமொழிக் கவிதை குறித்து இந்திரன் கூறுவது யாது?**

★ "பேச்சுமொழியில் செய்யப்படுகிற கவிதைச் சொற்கள், உடம்பின் மேல்தோல்போல் இயங்குகின்றன.

★ எழுத்துமொழியில் அதே சொற்கள் கவிதையின் உணர்வை, உணர்ச்சியற்ற ஆடைபோல் மூடிப் போர்த்தி விடுகின்றன" என, இந்திரன் கூறுகிறார்.

**10. எது கவிஞனின் கடமையாகிறது?**

★ கவிதைக்குள் உலவும் மொழியின் தாக்கம், கவிதைக்கான உலகத்தைத் தட்டி எழுப்புகிறது. எனவே, எத்தகைய மொழியைக் கவிதைக்குப் பயன்படுத்துகிறோமோ, அதன் குணாம்சங்களையும், பேச்சு வழக்குகளையும் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டியது கவிஞனின் கடமையாகிறது.

**11. 'வால்ட்விட்மன்' குறித்து எழுதுக.**

★ 'வால்ட்விட்மன்', அமெரிக்காவைச் சேர்ந்தவர்; ஆங்கிலக் கவிஞர்; இதழாளர்; கட்டுரையாளர்; 'புதுக்கவிதை' இயக்கத்தைத் தோற்றுவித்தவர்.

★ இவர் படைத்த 'புல்லின் இதழ்கள்' (Leaves of Grass) உலகப் புகழ்பெற்ற நூல்.

MERCY PUBLICATIONS - CHENNAI

**12. ‘ஸ்டெஃபான் மல்லார்மே’ குறித்து நீ அறிந்தன யாவை?**

★ கவிஞர் ‘ஸ்டெஃபான் மல்லார்மே’, பிரான்சு நாட்டைச் சேர்ந்தவர்.

★ ஆங்கில ஆசிரியராகப் பணியாற்றியவர்; பிரெஞ்சுக் கவிஞர். இவர் கவிதைகளைப் புரிந்து கொள்வதன்மூலம், ‘சிம்பலிஸம்’ என்கிற ‘குறியீட்டியத்தை’ப் புரிந்துகொள்ள முடியும்.

**13. ‘பாப்லோ நெரூடா’ குறித்து நீ அறிவன யாவை?**

★ கவிஞர் ‘பாப்லோ நெரூடா’, தென் அமெரிக்காவின் சிலி நாட்டில் பிறந்தவர். இலத்தீன் அமெரிக்காவின் மிகச் சிறந்த ஆங்கிலக் கவிஞர். தம் கவிதைகளுக்காக, 1971ஆம் ஆண்டின் இலக்கியத்திற்கான ‘நோபல் பரிசை’ப் பெற்றவர்.

## சிறுவினாக்கள்

**1. ‘என்னுயிர் தமிழ்மொழி என்பேன்’ என்னும் தலைப்பில் நீவிர் கொண்டுள்ள மொழிப்பற்றினை எழுதுக.**

★ எனக்கு உயிர் தந்தவள் தாய். தான் ஊட்டிய பாலோடு, உலகை அறிமுகம் செய்ய ஊட்டி வளர்த்த மொழி தமிழ். என் உயிரோடு கலந்து உடலோடு வளர்ந்தது. வளர்ந்தபின் வளமான மொழியைக் கற்றபோது, அதன் வளத்தோடு வீச்சும், ஆழமும் புரிந்தது.

★ “யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல் இனிதாவது எங்கும் காணோம்” என்று, என் பாட்டன் பாரதி சொன்னதன் பொருளைப் புரிந்துகொண்டேன். “தமிழுக்கு அமுதென்று பேர்” என்று பாரதிதாசன் கூறியதைத் தெளிந்தேன். “தமிழன் என்றோர் இனமுண்டு! தனியே அவர்க்கோர் குணமுண்டு” என்று, நாமக்கல் கவிஞர் சொன்னதன் ஆழ்பொருள் அறிந்தேன். அதனால், என் தமிழை உயிரினும் மேலானதாக மதிக்கிறேன்.

**2. கூற்று : குறியீட்டுக் கவிதை என்பது பொருளைப் பதிவு செய்வதன்று; நினைவுகூரத்தக்க தருணங்களைப் பதிவு செய்வதாகும்.**

**கவிதை : கூண்டு திறந்தது**
**சிறகடிக்கவா?**
**இல்லை! சீட்டெடுக்க.**

**கூற்றில் ‘குறியீடு’ எனக் குறிப்பிடுவது கவிதையில் எப்பொருளாக வந்துள்ளது?**

★ குறியீட்டுக் கவிதை என்பது அந்த வேளையில் கண்டதன் நுண்பொருளைச் சிந்திக்கத் தூண்டும் எண்ணத்தைப் பதிவு செய்வதாகும்.

★ பறவைகளைக் கூட்டில் அடைத்து வைத்துச் சோதிடம் பார்ப்பதை அனைவரும் அறிவர். கூட்டைத் திறப்பது பறவைக்குச் சுதந்திரம் தருவதற்காகவா? அன்று.

★ அது சிறகசைத்துப் பறப்பதை மறக்க அடித்து அடிமைப்படுத்தி விடுகிறார்கள். அதற்கென ஒரு கொத்தடிமைத் தொழிலை முடிவு செய்கிறார்கள். இந்தக் குறியீடு, சமூக அவலத்தை வெளிப்படுத்தும்; சுருக்கமாகச் சுட்டிக்காட்ட உதவும்.

## கூடுதல் வினாக்கள்

**3. மொழி அளித்த திறன்களாக இந்திரன் கூறுவனவற்றை எழுதுக.**

★ மொழி தோன்றியவுடன், உலகம் கவனிப்புக்கு உரியதாக மாறியது. மொழி என்னும் சாவியால் திறந்தபோதெல்லாம், பெயர் சூட்டப்படாத பலவற்றைக் காணவும், அவற்றிற்குத் தாம் விரும்பும் பெயரைச் சூட்டவும் முடிந்தது.

★ அவற்றை விதவிதமான அடுக்குகளில், அவற்றின் முக்கியத்துவத்திற்கு ஏற்ப ஒருமை, பன்மை பிரித்து அடுக்கும் திறனையும் மொழி வழங்கியதாக இந்திரன் கூறியுள்ளார்.

**4. மொழி அதிகாரத்தை உருவாக்கிக் கொடுத்தது எப்போது என இந்திரன் கூறுகிறார்?**

★ வேலையில் மூழ்கியுள்ள தாயைக் குழந்தை ‘அம்மா’ என அழைத்தபோது கவனியாதவர், அவர் பெயரைச் சொல்லி அழைத்ததும் திடுக்கிட்டுத் திரும்பி வருகிறார்.

★ அப்போதுதான், பெயர்களிட்டு அழைக்கும்போது அவற்றின்மீது, ஓர் அதிகாரத்தை மொழி உருவாக்கிக் கொடுப்பதை உணரத் தலைப்பட்டதாக இந்திரன் கூறுகிறார்.

**5. ‘கவிதை என்பது எது’ என்பதற்கு இந்திரன் தரும் விளக்கம் யாது ?**

★ மொழிக்குள் உலகையும், உலகிற்குள் மொழியையும் முழுமையாக நுழைத்துவிட முயலும் தொடர் படைப்புச் செயல்பாடே கவிதை! எனவே, கவிதை என்பதே மொழிதான்.

MERCY PUBLICATIONS - CHENNAI

★ கவிதைக்குள் உலவும் மொழியின் தாக்கமே, கவிதைக்கான உலகத்தைக் கட்டி எழுப்புகிறது'' என்பதே, 'எது கவிதை' என்பதற்கு, இந்திரன் தரும் விளக்கமாகும்.

**6. பாடத்துள் இடம்பெற்ற 'வால்ட் விட்மன்' கவிதையின் கருத்து யாது?**

★ என் கனவில் 'நண்பர்கள் நகரம்' என்றொரு புது நகரம் வந்தது! அந்த நகரத்தில் அன்பைவிடப் பெரியது என்று ஒன்றும் இல்லை.

★ அன்பு என்னும் வழித்தடத்தில் எல்லாமும் சென்றன. அதன்பின்னே மக்கள் எந்நேரமும் செய்வன எவை என்றாலும், அவற்றில் எல்லாம் அன்புதான் தெரிந்தது. மக்கள் தோற்றத்திலும், அவர் பேசிய மொழியிலும் அன்பு ஒன்றே புலப்பட்டது'' என்பது, வால்ட் விட்மன் கவிதையின் கருத்தாகும்.

**7. கவிஞர் 'ஸ்டெஃபான் மல்லார்மே' கவிதை கூறும் செய்தி யாது?**

★ பாய்மரங்களைத் தூக்கி எறிந்துவிட்டிருக்கும் நீராவிக் கப்பலே, தொலைவான தேசத்திலுள்ள இயற்கையை நோக்கிப் புறப்படு! இரக்கம் இல்லாத எதிர்பார்ப்புகளில் மனம் உடைந்து ஆடும் கைக்குட்டைகளின் மகத்தான வழியனுப்புதலுக்கான அசைவை நம்பிக் கொண்டிருப்பது வேதனையே தரும்!

★ பாய்மரமும் இல்லாமல், போய்ச் சேர்வதற்குத் தீவுகளும் இல்லாமல் மூழ்கிவிட்ட கப்பல்களின்மேல் சாய்ந்து, புயலை அழைக்கும் பாய்மரங்கள்தாமே அவை? ஆனால், என் நெஞ்சே, மாலுமிகளின் பாடலை இதோ கேள்!'' என்பது, கவிஞர் 'ஸ்டெஃபான் மல்லார்மே' கவிதை கூறும் செய்தியாகும்.

**8. 'பாப்லோ நெரூடா' கவிதையால் பெறப்படும் செய்தி யாது?**

★ "திங்கள், செவ்வாய்க் கிழமைகளுடனும் ஆண்டு முழுவதுடன் வாரமும் சிக்கிக்கொண்டு உள்ளன. உமது களைத்துப் போன கத்தரிக்கோலால் காலத்தை வெட்டித் துண்டுபோட முடியாது.

★ பகலின் பெயர்கள் அனைத்தையும் இரவின் நீர் அழைக்கிறது. இரவில் உறங்கும்போது என்ன பெயர் சொல்லி அழைக்கின்றனர்? அல்லது, என்னவென்று அழைப்பதில்லை?

★ கண்மூடித் தூங்கும்போது நான் நானாக இல்லை என்றால், விழித்து எழுந்தபின் நான் யார்?'' என்பது, கவிஞர் பாப்லோ நெரூடாவின் கவிதையால் பெறப்படும் செய்தியாகும்.

## நெடுவினா

**1. நீங்கள் மொழியை வெளிப்படுத்தும் நிலையில் பேச்சுமொழியையும் எழுத்துமொழியையும் எவ்வாறு உணர்கிறீர்கள் என்பதை விவரிக்க.**

**பேச்சு மொழி என்பது, திரவநிலையில் இருந்து நம் விருப்பத்திற்குக் கையாளவும், உணர்வுகளை வெளிப்படுத்தவும், பிறரை உணரச் செய்யவும் துணைபுரிகிறது. எழுத்தாகப் பதிவு செய்யப்படும் மொழி, உறைந்துபோன பனிக்கட்டி போன்று, திடநிலை பெற்றுவிடுகிறது. ஆகவே, கையாள எளிதாக இருப்பதில்லை.**

**பேச்சுமொழிச் சிறப்பு :**

எழுத்தை மனிதனின் கை எழுதினாலும், அந்த எழுத்தின் உணர்ச்சியை முகத்திலுள்ள வாயினால் மட்டுமே வெளிப் படுத்த முடியும். அதனால் எழுத்துமொழியைவிடவும் பேச்சுமொழிக்கு ஆற்றல் அதிகம் உள்ளது. எழுத்து மொழியில், அதனைக் கேட்க எதிராளி என, ஒருவரும் இருப்பதில்லை. பேச்சுமொழி அப்படியன்று. எழுத்துமொழியைவிடவும் பேச்சு மொழிக்கு உணர்ச்சியை வெளிப்படுத்தும் ஆற்றல் மிகுதி.

**எழுத்துமொழி இயல்பு :**

எழுத்துமொழி என்பது, ஒருவகையில் தனக்குத்தானே பேசிக்கொள்ளும் மொழிபோல் தோன்றும்; உறைந்த பனிக்கட்டி போன்ற திடநிலை அடைந்துவிடும். எழுத்துமொழி, விருப்பம்போல் கையாள முடியாததாகி விடுகிறது. எழுத்துமொழி, நேரடிப் பயன்பாட்டிற்கு உதவாததால், வேற்றுமொழி போலாகிவிடுகிறது.

**பேச்சுமொழிக் கவிதை :**

பேச்சுமொழியே ஒரு கவிஞனை நிகழ்காலத்தவனா, இறந்தகாலத்தவனா என, நிர்ணயம் செய்யும் ஆற்றலுடையது. பேச்சுமொழியில் ஒரு கவிதையைப் படைக்கின்றபோது, அது உடம்பின் ஒரு மேல்தோல்போல் உயர்வுடன் இயங்குகிறது. ஆனால், எழுத்துமொழியில் அதே சொற்கள் அழகுடையதானாலும், உணர்ச்சி இல்லாத ஆடைபோல் போர்த்திக்கொள்ள உதவுகிறது. பேச்சுமொழியை உடனே தாகம் போக்கும் நீர் என்றும், எழுத்துமொழி உறைந்த பனிக்கட்டியானாலும், என்றேனும் ஒருநாள் பயன்தரும் எனவும் நான் உணர்கிறேன்.

SURA PUBLICATIONS - CHENNAI

## பலவுள் தெரிக

1. பொருத்தமானவற்றைத் தேர்ந்தெடுக்க.

அ) அ. முத்துலிங்கம் – யுகத்தின் பாடல் ஆ) பவணந்தி முனிவர் – நன்னூல்

இ) சு. வில்வரத்தினம் – ஆறாம் திணை ஈ) இந்திரன் – பேச்சுமொழியும் எழுத்துமொழியும்

i. அ, ஆ ii. அ, ஈ iii. ஆ, ஈ iv. அ, இ

**விடை :** iii. ஆ, ஈ

2. "ஒரு திரவநிலையில், நான் விரும்பும் வகையில் என்னிடம் கீழ்ப்படிந்து நடந்துகொள்ளும் எனது மொழி, எழுத்துமொழியாகப் பதிவு செய்யப்படுகிறபோது, உறைந்துபோன பனிக்கட்டியைப் போன்ற திடநிலையை அடைகிறது." – இவ்வரிகள் உணர்த்தும் கருத்து.

அ) மொழி என்பது திட, திரவ நிலைகளில் இருக்கும்.

ஆ) பேச்சுமொழி, எழுத்துமொழியைத் திட, திரவப் பொருள்களாக உருவகப்படுத்தவில்லை.

இ) எழுத்துமொழியைவிடப் பேச்சுமொழி எளிமையானது.

ஈ) பேச்சுமொழியைக் காட்டிலும் எழுத்துமொழி எளிமையானது.

**விடை :** இ) எழுத்துமொழியைவிடப் பேச்சுமொழி எளிமையானது.

## கூடுதல் வினாக்கள்

3. "கவிதையினை இயன்றவரை பேசுவதுபோல் எழுதுவதுதான் உத்தமம்" என்றும், அதுவே, "மானுடத்துக்கு எழுத்தாளர்கள் செய்யும் கடமை" என்றும் கூறியவர் ______.

அ) இராசேந்திரன் (இந்திரன்) ஆ) கா. சிவத்தம்பி

இ) மகாகவி பாரதியார் ஈ) ஆற்றூர் ரவிவர்மா

**விடை :** இ) மகாகவி பாரதியார்

4. "மொழி என்ற ஒன்று பிறந்தவுடன் 'உலகம்' என்பதும் 'நான்' என்பதும், தனித்தனியாகப் பிரிந்து தங்களைத் தனித்துவமாக நிலைநிறுத்திக் கொள்கின்றன" எனக் கூறியவர் ______.

அ) இந்திரன் ஆ) மனோரமா பிஸ்வாஸ்

இ) எர்னஸ்ட் காசிரர் ஈ) ஸ்டெஃபான் மல்லார்மே

**விடை :** இ) எர்னஸ்ட் காசிரர்

5. இந்திரனின் இயற்பெயர் ______.

அ) முத்துலிங்கம் ஆ) இராசேந்திரன் இ) ஜெயபாலன் ஈ) வில்வரத்தினம்

**விடை :** ஆ) இராசேந்திரன்

6. உணர்ச்சிக்கு மிக அருகில் இருக்கும் மொழி ______.

அ) இலக்கியமொழி ஆ) கவிதைமொழி இ) பேச்சுமொழி ஈ) எழுத்துமொழி

**விடை :** இ) பேச்சுமொழி

7. "பறவைகள் ஒருவேளை தூங்கப் போயிருக்கலாம்" – கவிதை ஆசிரியர்.

அ) ஸ்டெஃபான் மல்லார்மே ஆ) வால்ட் விட்மன்

இ) பாப்லோ நெரூடா ஈ) மனோரமா பிஸ்வாஸ்

**விடை :** ஈ) மனோரமா பிஸ்வாஸ்

8. அமெரிக்க நாட்டைச் சேர்ந்தவர் ______.

அ) பாப்லோ நெரூடா ஆ) ஸ்டெஃபான் மல்லார்மே

இ) சிவத்தம்பி ஈ) வால்ட் விட்மன்

**விடை :** ஈ) வால்ட் விட்மன்

9. 'வால்ட் விட்மன்', ______ நாட்டைச் சேர்ந்தவர்.

அ) பிரான்சு ஆ) அமெரிக்கா இ) சிலி ஈ) இங்கிலாந்து

**விடை :** ஆ) அமெரிக்கா

10. 'ஸ்டெஃபான் மல்லார்மே', ______ நாட்டவர்.

அ) அமெரிக்கா ஆ) சிலி இ) பிரான்சு ஈ) நார்வே

**விடை :** இ) பிரான்சு

MERCY PUBLICATIONS - CHENNAI

www.Padasalai.Net

11. 'பாப்லோ நெரூடா', ______ நாட்டைச் சேர்ந்தவர்.
அ) அமெரிக்கா ஆ) சிலி இ) பிரான்சு ஈ) இங்கிலாந்து
**விடை :** ஆ) சிலி

12. இலத்தீன் அமெரிக்காவின் மிகச்சிறந்த கவிஞர் ______.
அ) ஸ்டெஃபான் மல்லார்மே ஆ) வால்ட் விட்மன்
இ) பாப்லோ நெரூடா ஈ) சிவத்தம்பி
**விடை :** இ) பாப்லோ நெரூடா

13. 'தமிழின் கவிதையியல்' நூலின் ஆசிரியர் ______.
அ) இந்திரன் ஆ) பாரதியார் இ) கா. சிவத்தம்பி ஈ) ரவிவர்மா
**விடை :** இ) கா. சிவத்தம்பி

14. 1971ஆம் ஆண்டு 'நோபல் பரிசு' பெற்ற கவிஞர் ______.
அ) வால்ட் விட்மன் ஆ) பாப்லோ நெரூடா
இ) ஸ்டெஃபான் மல்லார்மே ஈ) கா. சிவத்தம்பி
**விடை :** ஆ) பாப்லோ நெரூடா

15. சாகித்திய அகாதெமி விருது பெற்ற "பறவைகள் ஒருவேளை தூங்கப் போயிருக்கலாம்" என்பது, ______ மொழி பெயர்க்கப்பட்டது.
அ) ஆங்கில மொழியிலிருந்து ஆ) பிரெஞ்சு மொழியிலிருந்து
இ) இலத்தீன் மொழியிலிருந்து ஈ) ஒரிய மொழியிலிருந்து
**விடை :** ஈ) ஒரிய மொழியிலிருந்து

16. 2011ஆம் ஆண்டு 'சாகித்திய அகாதெமி'யின் விருது பெற்ற நூல் ______.
அ) முப்பட்டை நகரம் ஆ) சாம்பல் வார்த்தைகள்
இ) தமிழ் அழகியல்
ஈ) பறவைகள் ஒருவேளை தூங்கப் போயிருக்கலாம்
**விடை :** ஈ) பறவைகள் ஒருவேளை தூங்கப் போயிருக்கலாம்

17. புதுக்கவிதை இயக்கத்தைத் தோற்றுவித்தவர் ______.
அ) ஸ்டெஃபான் மல்லார்மே ஆ) பாப்லோ நெரூடா
இ) வால்ட் விட்மன் ஈ) இந்திரன்
**விடை :** இ) வால்ட் விட்மன்

18. குறியீட்டுக் கவிதையை உருவாக்கியர் ______.
அ) பாப்லோ நெரூடா ஆ) மனோரமா பிஸ்வாஸ்
இ) வால்ட் விட்மன் ஈ) ஸ்டெஃபான் மல்லார்மே
**விடை :** ஈ) ஸ்டெஃபான் மல்லார்மே

19. வாழ்க்கையின் வடிவமற்ற தன்மையைப் பற்றிப் பேசும் கவிதை படைப்பவர் ______.
அ) ஸ்டெஃபான் மல்லார்மே ஆ) மனோரமா பிஸ்வாஸ்
இ) பாப்லோ நெரூடா ஈ) வால்ட் விட்மன்
**விடை :** இ) பாப்லோ நெரூடா

20. கீழ் உள்ளவற்றைப் பொருத்தி விடை காண்க.
அ) புதுக்கவிதை இயக்கத்தைத் தோற்றுவித்தவர்
ஆ) குறியீட்டுக் கவிதையைப் பதிவு செய்தவர்
இ) தேசியக் கவியாகப் போற்றப்படுகிறவர்
ஈ) இலக்கியத்திற்கு நோபல் பரிசுபெற்றவர்
1) வால்ட் விட்மன் 2) மகாகவி பாரதியார்
3) பாப்லோ நெரூடா 4) ஸ்டெஃபான் மல்லார்மே
அ) 1 3 4 2 ஆ) 1 4 2 3 இ) 4 3 2 1 ஈ) 2 1 4 3
**விடை :** ஆ) 1 4 2 3

MERCY PUBLICATIONS - CHENNAI

21. பொருத்துக.

| கவிஞர் | | மொழிபெயர்த்தவர் |
|---|---|---|
| i) வால்ட் விட்மன் | – | அ. ஆ. இரா. வேங்கடாசலபதி |
| ii) ஸ்டெஃபான் மல்லார்மே | – | ஆ. சங்கர் ஜெயராமன் |
| iii) பாப்லோ நெரூடா | – | இ. இராசேந்திரன் |
| iv) மனோரமா பிஸ்வாஸ் | – | ஈ. வெ. ஸ்ரீராம் |

**விடை :** i – ஆ, ii – ஈ, iii – அ, iv – இ.

22. பொருத்துக.

| கவிஞர் | | பாடியமொழி |
|---|---|---|
| i) மனோரமா பிஸ்வாஸ் | – | அ. ஆங்கிலமொழி |
| ii) ஸ்டெஃபான் மல்லார்மே | – | ஆ. மலையாளமொழி |
| iii) பாப்லோ நெரூடா | – | இ. ஒரியமொழி |
| iv) ஆற்றூர் ரவிவர்மா | – | ஈ. பிரெஞ்சுமொழி |

**விடை :** i – இ, ii – ஈ, iii – அ, iv – ஆ.

**விடைக்கேற்ற வினா அமைக்க.**

1. மொழி என்ற ஒன்று பிறந்தவுடன் 'உலகம்' என்பதும், 'நான்' என்பதும் தனித்தனியாகப் பிரிந்து, தங்களைத் தனித்துவமாக நிலைநிறுத்திக் கொள்கின்றன.

   **வினா :** 'உலகம்' என்பதும் 'நான்' என்பதும் தனித்தனியாகப் பிரிந்து, தங்களைத் தனித்துவமாக நிலைநிறுத்திக் கொள்வது எப்போது?

2. வால்ட் விட்மனைப் போன்றவருடைய கவிதைகளில், எந்த ஒரு சொல்லும் மற்றொரு சொல்லைவிட முக்கியமானதாகி விடுவதில்லை.

   **வினா :** எவர் போன்றவருடைய கவிதைகளில் எந்த ஒரு சொல்லும் மற்றொரு சொல்லைவிட முக்கிய மானதாகி விடுவதில்லை?

3. குறியீட்டுக் கவிதை என்பது பொருளைப் பதிவு செய்வதன்று; நினைவு கூரத்தக்க தருணங்களைப் பதிவு செய்வதாகும்.

   **வினா :** குறியீட்டுக் கவிதை என்பது எதைப் பதிவு செய்வதன்று? எவற்றைப் பதிவு செய்வது?

4. கவிதைக்குள் உலவும் மொழியின் தாக்கம், கவிதைக்கான உலகத்தைக் கட்டியெழுப்புகிறது.

   **வினா :** கவிதைக்குள் உலவும் மொழியின் தாக்கம், எதற்கான உலகத்தைக் கட்டியெழுப்புகிறது?

5. மொழி என்ற ஒன்று என்னுள் தோன்றியவுடன்தான் உலகம் எனது கவனிப்புக்குரிய ஒன்றாக மாறியது.

   **வினா :** எந்த ஒன்று என்னுடன் தோன்றியவுடன், உலகம் எனது கவனிப்புக்குரிய ஒன்றாக மாறியது?

## 2. நன்னூல் – பாயிரம்

### – பவணந்தி முனிவர்

### குறுவினா

**1. 'பாயிரம்' பற்றி நீங்கள் அறியும் கருத்து யாது?**

★ நூலை உருவாக்கும் ஆசிரியரின் சிறப்பையும், அந்நூல் வழங்கும் கருத்து வளத்தையும் தொகுத்து, நூல் முகப்பில் வைக்கும் முறை பற்றிப் பேசுவது பாயிரமாகும்.

### கூடுதல் வினாக்கள்

**2. பவணந்தி முனிவர் – குறிப்புத் தருக.**

★ 'நன்னூல்' என்னும் தமிழ் இலக்கண நூலை இயற்றியவர் பவணந்தி முனிவர்.

★ தம்மை ஆதரித்த சிற்றரசன் சீயகங்கனின் வேண்டுதலால், இந்நூலைப் பாடியதாகப் பாயிரம் கூறுகிறது.

MERCY PUBLICATIONS - CHENNAI

www.Padasalai.Net

**3. பாயிரம் எதற்கு உதவுகிறது?**

★ நூலைப்பற்றித் தெரிந்துகொள்வதற்கும், நூலைப் புரிந்துகொள்வதற்கும், நூலின் சிறப்பை உணர்ந்து விருப்பத்துடன் கற்பதற்கும் பாயிரம் உதவுகிறது.

**4. பாயிரத்தின் வேறு பெயர்கள் யாவை?**

★ முகவுரை, பதிகம், அணிந்துரை, நூல்முகம், புறவுரை, தந்துரை, புணர்ந்துரை என்பன, பாயிரத்தின் வேறு பெயர்கள்.

**5. நன்னூல் எழுத்ததிகாரப் பகுதிகள் யாவை?**

★ எழுத்தியல், பதவியல், உயிரீற்றுப் புணரியல், மெய்யீற்றுப் புணரியல், உருபுப் புணரியல் என்னும் ஐந்தும், நன்னூல் எழுத்ததிகாரப் பகுதிகளாகும்.

**6. நன்னூல் சொல்லதிகாரம் உணர்த்தும் பகுதிகள் எவை?**

★ பெயரியல், வினையியல், பொதுவியல், இடையியல், உரியியல் என்னும் ஐந்தும், நன்னூல் சொல்லதிகாரம் உணர்த்தும் பகுதிகளாகும்.

**7. எது சிறந்த நூலாக மதிக்கப்படாது?**

★ ஆயிரம் முகத்தைப் பெற்றிருந்தாலும், பல்வேறு துறைசார்ந்த செய்திகளை விரிவாகப் பெற்றிருந்தாலும், அந்த நூலுக்குப் பாயிரம் இல்லை என்றால், அது சிறந்த நூலாக மதிக்கப்படாது.

## சிறுவினா

**1. நூல் ஒன்றின் முகவுரையில் இடம்பெற வேண்டுவனவாக நன்னூல் எவற்றைக் குறிப்பிடுகிறது?**

★ நூலின் இயல்பு, ஆசிரியர் இயல்பு, கற்பிக்கும் முறை, மாணவர் இயல்பு, கற்கும் முறை, நூலாசிரியர் பெயர், நூல் பின்பற்றிய வழி, நூல் வழங்கப்படுகின்ற நிலப்பரப்பு, நூலின் பெயர், யாப்பு, நூலில் குறிப்பிடப்படும் கருத்து, நூலைக் கேட்போர், நூலைக் கற்பதனால் பெறுகின்ற பயன் ஆகியன, முகவுரையில் இடம்பெற வேண்டுவனவாக, நன்னூல் குறிப்பிடுகிறது.

## நெடுவினா

**1. நன்னூல் பொதுப்பாயிரம், சிறப்புப்பாயிரம் வாயிலாக அறியலாகும் செய்திகளைத் தொகுத்துரைக்க.**

**பாயிரம் :**

நூலை உருவாக்கும் ஆசிரியரின் சிறப்பையும், அந்நூல் வழங்கும் கருத்து வளத்தையும் தொகுத்து நூல் முகப்பில் வைக்கும் முறை பற்றிப் பேசுவது பாயிரமாகும்.

பாயிரம் (i) பொதுப்பாயிரம், (ii) சிறப்புப் பாயிரம் என இருவகைப்படும்.

**(i) பொதுப்பாயிரம் :**

எல்லா நூல்களின் முகப்பிலும் பொதுவாக உரைக்கப்படுவது, பொதுப்பாயிரம் எனப்படும்.

நூலின் இயல்பு, ஆசிரியரின் இயல்பு, கற்பிக்கும் முறை

மாணவரின் இயல்பு, கற்கும் முறை என்னும் ஐந்தையும் கூறுவது, பொதுப்பாயிரம் ஆகும்.

**(ii) சிறப்புப்பாயிரம் :**

தனிப்பட்ட சில நூல்களுக்கு மட்டும் சிறப்பாகக் குறிப்பிடப்படுவது, சிறப்புப்பாயிரம் எனப்படும்.

நூலாசிரியரின் பெயர்

நூல் பின்பற்றிய வழி

நூல் வழங்கப்படுகின்ற நிலப்பரப்பு;

நூலின் பெயர்; தொகை, வகை, விரி என்பவற்றுள் இன்னதில் இயற்றப்பட்டது என்னும் யாப்பு;

நூலில் குறிப்பிடப்படும் கருத்து; 5நூலைக் கற்பதனால் பெறுகின்ற பயன்;

இவற்றுடன் நூல் இயற்றப்பட்ட காலம்; அரங்கேற்றப்பட்ட அவைக்களம்;

இயற்றப்பட்ட காரணம் ஆகியவற்றைச் சேர்த்துக் கூறுவதும் ஆகிய எல்லாச் செய்திகளையும் செம்மையாகத் தெரிவிப்பது, சிறப்புப் பாயிரத்தின் இலக்கணம் ஆகும்.

MERCY PUBLICATIONS, CHENNAI

## இலக்கணக் குறிப்பு

**மாநகர்** – உரிச்சொற்றொடர்
**காட்டல், கோடல்** – தொழிற்பெயர்கள்
**கேட்போர், நுவல்வோன், கொள்வோன், ஆக்கியோன்** – வினையாலணையும் பெயர்கள்
**ஐந்தும்** – முற்றும்மை
**அமைதோள்** – உவமைத்தொகை
**மாடக்கு** – 'அத்து'ச் சாரியை தொக்கி நின்றது
**ஆடமை** (ஆடு அமை) – வினைத்தொகை

## உறுப்பிலக்கணம்

1. **வைத்தார் – வை + த் + த் + ஆர்.**
   **வை** – பகுதி, **த்** – சந்தி, **த்** – இறந்தகால இடைநிலை, **ஆர்** – பலர்பால் வினைமுற்று விகுதி.
2. **கொள்வோன் – கொள் + வ் + ஒன்.**
   **கொள்** – பகுதி, 'வ்' – எதிர்கால இடைநிலை, **ஓன்** – ஆண்பால் வினைமுற்று விகுதி.
3. **நின்ற – நில் (ன்) + ற் + அ.**
   **நில்** – பகுதி 'ல்', 'ன்' ஆனது விகாரம், **அ** – பெயரெச்ச விகுதி.
4. **ஏற்றி – ஏற்று + இ**
   **ஏற்று** – பகுதி, **இ** – வினையெச்ச விகுதி.

## புணர்ச்சி விதிகள்

1. **அணிந்துரை – அணிந்து + உரை**
   "உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்" (அணிந்த் + உரை)
   "உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே" (அணிந்துரை)
2. **பொதுச்சிறப்பு – பொது + சிறப்பு**
   "இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும்" (பொதுச்சிறப்பு)
3. **பயனோடு – பயன் + ஒடு**
   "உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே" (பயனோடு)
4. **முன்னுரை – முன் + உரை**
   "தனிக்குறில்முன் ஒற்று உயிர்வரின் இரட்டும்" (முன்ன் + உரை)
   "உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே" (முன்னுரை)
5. **நூன்முகம் – நூல் + முகம்**
   "லள வேற்றுமையில் மெலிமேவின் னணவும் ஆகும்" (நூன்முகம்)
6. **நூற்பெயர் – நூல் + பெயர்**
   "லள வேற்றுமையில் வலிவரின் றடவும் ஆகும்" (நூற்பெயர்)
7. **நன்னூல் – நன்மை + நூல்**
   "ஈறுபோதல்" – நன் + நூல், "னலமுன் றனவும் ஆகும் தநக்கள்" (நன் + னூல்)
8. **தந்துரை – தந்து + உரை**
   "உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்" (தந்த் + உரை)
   "உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே" (தந்துரை)
9. **பொதுப்பாயிரம் – பொது + பாயிரம்**
   "இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும்" (பொதுப்பாயிரம்)

## பலவுள் தெரிக

1. பாயிரம் இல்லது ______ அன்றே.
   அ) காவியம் ஆ) பனுவல் இ) பாடல் ஈ) கவிதை
   **விடை :** ஆ) பனுவல்

MERCY PUBLICATIONS - CHENNAI

www.Padasalai.Net

## கூடுதல் வினாக்கள்

2. நன்னூலின் ஆசிரியர் ______.
அ) தொல்காப்பியர் ஆ) அகத்தியர் இ) பவணந்தி முனிவர் ஈ) திருவள்ளுவர்
**விடை :** இ) பவணந்தி முனிவர்

3. நன்னூல் கூறும் இலக்கண வகை ______.
அ) எழுத்து, பொருள் ஆ) சொல், பொருள் இ) யாப்பு, சொல் ஈ) எழுத்து, சொல்
**விடை :** ஈ) எழுத்து, சொல்

4. நன்னூலைப் பவணந்தி முனிவர், ______ வேண்டுதலால் இயற்றினார்.
அ) பாரிவள்ளல் ஆ) சீதக்காதி இ) சீயகங்கன் ஈ) சடையப்பர்
**விடை :** இ) சீயகங்கன்

5. நன்னூல் விளக்கும் இலக்கண வகைகளின் எண்ணிக்கை
அ) 4 ஆ) 3 இ) 5 ஈ) 2
**விடை :** ஈ) 2

6. நூலுக்கு முகத்தைப் போன்று இருப்பதால், ______ எனப்பட்டது.
அ) முகவுரை ஆ) புனைந்துரை இ) புறவுரை ஈ) அணிந்துரை
**விடை :** அ) முகவுரை

7. நூலில் சொல்லிய பொருள் அல்லாதவற்றைத் தந்து உரைப்பது ______.
அ) முகவுரை ஆ) நான்முகம் இ) தந்துரை ஈ) புறவுரை
**விடை :** இ) தந்துரை

8. எல்லாவகை நூல்களுக்கும் அழகு சேர்ப்பது ______.
அ) அணிந்துரை ஆ) தந்துரை இ) சிறப்புரை ஈ) பதிகம்
**விடை :** அ) அணிந்துரை

9. நூலின் முதன்மையான கருத்துகளைத் தொகுத்துக் கூறுவதால் ______ எனப்பட்டது.
அ) முகவுரை ஆ) தந்துரை இ) பதிகம் ஈ) அணிந்துரை
**விடை :** இ) பதிகம்

10. நூலுக்கு அணியாக அமைவது ______.
அ) முகவுரை ஆ) நூன்முகம் இ) புனைந்துரை ஈ) அணிந்துரை
**விடை :** ஈ) அணிந்துரை

11. நூலின் கருத்தோடு அதன் வரலாற்றையும் எடுத்துரைப்பது ______.
அ) தந்துரை ஆ) அணிந்துரை இ) புறவுரை ஈ) பதிகம்
**விடை :** இ) புறவுரை

12. மாடங்களுக்கு அழகு தருவது ______.
அ) நகரங்கள் ஆ) மகளிர் இ) ஓவியங்கள் ஈ) வண்ணங்கள்
**விடை :** இ) ஓவியங்கள்

13. பெரிய நகரங்களுக்கு அழகு சேர்ப்பவை ______.
அ) மாடங்கள் ஆ) நகரங்கள் இ) வண்ணங்கள் ஈ) கோபுரங்கள்
**விடை :** ஈ) கோபுரங்கள்

14. அணிகலன்கள் அழகு சேர்ப்பது ______.
அ) குழந்தைகளுக்கு ஆ) அங்காடிகளுக்கு
இ) மகளிருக்கு ஈ) சிலைகளுக்கு
**விடை :** இ) மகளிருக்கு

15. ஆயிரம் முகத்தான் அகன்றது ஆயினும்
பாயிரம் இல்லது பனுவல் அன்றே – அடிஎதுகையைத் தெரிவு செய்க.
அ) ஆயிரம் முகத்தான் – அகன்றது ஆயிரம்
ஆ) ஆயிரம் முகத்தான் – பாயிரம் இல்லது
இ) பாயிரம் இல்லது – பனுவல் அன்றே
ஈ) அகன்றது ஆயினும் – பனுவல் அன்றே
**விடை :** ஆ) ஆயிரம் முகத்தான் – பாயிரம் இல்லது

MERCY PUBLICATIONS - CHENNAI

16. நன்னூலுக்குத் தொடர்பில்லாதது ______.

அ) முகவுரை, பதிகம், அணிந்துரை

ஆ) நூன்முகம், புறவுரை, தந்துரை

இ) வேற்றுமையணி, வேற்றுப்பொருள்வைப்பணி

ஈ) பொதுப் பாயிரம், சிறப்புப் பாயிரம்

**விடை :** இ) வேற்றுமையணி, வேற்றுப்பொருள்வைப்பணி

17. பொருத்துக.

| பொருள் | | அழகு சேர்ப்பவை |
|---|---|---|
| i) மாடங்கள் | – | அ. அணிந்துரை |
| ii) மாநகரங்கள் | – | ஆ. அணிகலன்கள் |
| iii) மகளிர் | – | இ. கோபுரங்கள் |
| iv) நூல்கள் | – | ஈ. ஓவியங்கள் |

i – ஈ, ii – இ, iii – ஆ, iv – அ.

18. பொருத்துக.

| சொல் | | பொருள் |
|---|---|---|
| i) பால் | – | அ. மாளிகை |
| ii) இயல்பு | – | ஆ. வகை |
| iii) மாடம் | – | இ. மூங்கில் |
| iv) அமை | – | ஈ. பண்பு |

i – ஆ, ii – ஈ, iii – அ, iv – இ.

## விரிவானம்

## ஆறாம் திணை

### (அ. முத்துலிங்கம்)

### நெடுவினா

**1. தமிழர் வாழ்வோடும் புலம்பெயர் நிகழ்வுகளோடும் அ.முத்துலிங்கத்தின் திணைப்பாகுபாடு எவ்வாறு இணைக்கப்படுகிறது? (அல்லது) புலம் பெயர்ந்த வலியையும் வாழ்வையும் ஆறாம் திணை வாயிலாக நீவிர் அறிவதைத் தொகுத்து எழுதுக.**

**அகதிகள் முகாம் வாழ்க்கை :**

இலங்கை, மவுண்லவினியாவில் வாடகை வீட்டில் வாழ்ந்த தமிழ்க் குடும்பம் ஒன்று, இனக் கலவரத்தின்போது வீட்டுக்காரரான சிங்களவரால் அன்று இரவு காப்பாற்றப்பட்டு, மறுநாள் அகதிகள் முகாமுக்குச் சென்றது. அங்கே யாரோ அணிந்த மேல்சட்டையை மட்டும் ஒருவர் மாற்று உடையாகப் பெற்றார். உணவுக்காகத் தட்டு ஏந்தி நின்றபோது, இப்படி ஒருகணம் தம் வாழ்வில் வராமல் பார்த்துக்கொள்ள வேண்டும் என முடிவு செய்து, உறுதியாக இருந்துள்ளார். பலவருடம் பல தேசங்களில் சுற்றி அலைந்துள்ளார்.

**புலம் பெயர்தல் காரணம் :**

புலம்பெயர்தல் என்பது, புதிதன்று. சங்ககாலத்தில் ஐந்நிலத்தில் வாழ்ந்த தமிழர், புலம்பெயர்ந்து வாழ்ந்ததை, இலக்கியங்களில் காணமுடிகிறது. அவர்கள் உயிர்க்காகவும், பொருள் தேடவும் புலம்பெயர்ந்தபோதும், ‘வெஞ்சின வேந்தன் பகைஅலைக் கலங்கி வாழ்வோர் போகிய பேரூர்பாழ்’ எனத் தனிமகனார் பாடியுள்ளார். அக்காலத்தில் அரசனின் சீற்றத்திற்கு அஞ்சிப் புலம்பெயர்ந்ததுபோலச் சமீப காலங்களில் தம்மைப் போன்றோர் புலம் பெயர நேரிட்டுள்ளது எனக் குறிப்பிட்டுள்ளார்.

**தீய சிந்தனையைச் சாக அடித்தவர்கள் :**

கனடாவுக்குப் புலம் பெயர்ந்த தமிழர்கள், சில வருடங்களில் தமிழ்ப் பத்திரிகைகள் தொடங்கி, கோரிக்கைகள் வெற்றி பெறாதநிலையில் நிரந்தர வேலையும் அடுத்தவேளை உணவும் நிச்சயமில்லா நிலையிலும், தங்கள் புதுவாழ்வைப் பதிவு செய்கின்றனர்.

MERCY PUBLICATIONS - CHENNAI

www.Padasalai.Net

**புலம்பெயர்ந்தோர் சாதனை :**

புலம்பெயர்ந்த இரண்டாம் தலைமுறை தமிழைக் கைவிடும் என்ற குற்றச்சாட்டைப் பொய்யாக்கி, கணினி யுகத்தில் தமிழ்கற்று உயர் இலக்கியங்களைப் படைத்துத் தமிழை உலக அரங்கில் முன்னிறுத்துகிறார்கள். நியூசிலாந்திலிருந்து அலாஸ்காவரை புலம் பெயர்ந்த தமிழர்கள், பத்துலட்சம் பேர் வாழ்கிறார்கள். கனடாவில் மட்டும் மூன்று லட்சம் தமிழர்கள். ஒருகாலத்தில் சூரியன் மறையாத பிரிட்டிஷ் ராச்சியம் என்று சொன்னதுபோல், இன்று 'சூரியன் மறையாத தமிழ்ப்புலம்' என்று, புலம் பெயர்ந்த தமிழர்கள் தோற்றுவித்துள்ளனர்.

கனடாவில் சாலை ஒன்றுக்கு வன்னி வீதி என்று பெயர் சூட்டப்பட்டிருக்கிறது. இப்பெயரை மாற்றவோ, சிதைக்கவோ முடியாது. 2012முதல் ஆண்டுதோறும் ஜனவரி 14ஆம் நாள், தமிழர் பாரம்பரிய நாள் எனப் பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது. இவை ஈழத் தமிழரின் புலம்பெயர்ந்த வரலாற்றை நினைவுபடுத்திக் கொண்டிருக்கும்.

**ஆறாம் திணையும் ஆறுமணிக் குருவியும் :**

ஆசிரியரின் ஈழத்துக் கொக்குவில் கிராமத்தில் காகமும் ஆறுமணிக் குருவியும் இருந்தன. காகம் பறக்க இரண்டு மைல் தூரமே எல்லை. ஆறுமணிக் குருவி, இமயத்தைக் கடந்தும் சென்று திரும்புமாம். ஈழத்திலிருந்து புலம் பெயர்ந்தவர்கள், இந்த ஆறுமணிக் குருவிபோல, அவர்களுக்கு எல்லை கிடையாது. இனி அந்தத் தமிழர்களின் புலம், பனியும் பனிசார்ந்த நிலமும். அதுவே ஆறாம்திணை என, அ. முத்துலிங்கம் பாகுபடுத்திக் கூறியுள்ளது சிறப்பாகும்.

# இனிக்கும் இலக்கணம்

## மொழி முதல், இறுதி எழுத்துகள்

### குறுவினா

1. **உயிரெழுத்து, பன்னிரண்டு, திருக்குறள், நாலடியார்–இச்சொற்களில் எவ்வகை ஈற்றெழுத்துகள் அமைந்துள்ளன?**
   ★ உயிரெழுத்து (த் + உ), பன்னிரண்டு (ட் + உ); உயிர்எழுத்து (குற்றியலுகர) ஈறு.
   ★ திருக்குறள், நாலடியார் – மெய்எழுத்து ஈறு.

### கூடுதல் வினாக்கள்

2. **புணர்ச்சி என்பது யாது?**
   ★ நிலைமொழியும் வருமொழியுமான இருசொற்கள் இணைவது புணர்ச்சி எனப்படும்.
3. **சொல்லுக்கு இறுதியில் வாராத எழுத்துகள் எவை?**
   ★ க், ச், ட், த், ப், ற் என்னும் வல்லின மெய்களும், 'ங்' என்னும் மெல்லின மெய்யும் சொல்லுக்கு இறுதியில் வாரா.
4. **இலக்கணவகைச் சொற்கள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?**
   ★ இலக்கணவகைச் சொற்கள், நான்கு வகைப்படும்.
   ★ அவை பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச்சொல், உரிச்சொல்.
5. **பெயரையும் வினையையும் சார்ந்துவரும் சொற்கள் எவை?**
   ★ இடைச்சொற்களும் உரிச்சொற்களும் தனித்து வாரா;
   ★ பெயர்ச்சொற்களையும் வினைச்சொற்களையும் சார்ந்து வரும்.
6. **குற்றியலுகர எழுத்துகள் யாவை?**
   ★ வல்லின மெய்களின்மேல் ஊர்ந்த கு, சு, டு, து, பு, று என்னும் ஆறு எழுத்துகளும் குற்றியலுகர எழுத்துகள் எனப்படும்.
7. **குற்றியலுகர நிலைமொழி என்பதை விளக்குக.**
   ★ குற்றியலுகரத்தை ஈற்றில் பெற்ற சொல், வருமொழியோடு புணரும்போது, 'குற்றியலுகர நிலைமொழி' எனப்படும்.
   எ – கா : பாக்கு + இல்லை – பாக்கில்லை. இதில் 'பாக்கு' என்பது குற்றியலுகர நிலைமொழி.

MERCY PUBLICATIONS CHENNAI

## சிறுவினா

**1. மொழிமுதல், மொழியிறுதி எழுத்துகள் யாவை? ஒவ்வொன்றிற்கும் எடுத்துக்காட்டுத் தருக.**

★ **மொழிமுதல் வரும் எழுத்துகள் :** பன்னிரண்டு உயிர்எழுத்துகளும், க், ங், ச், ஞ், த், ந், ப், ம், ய், வ் என்னும் பத்து மெய்யெழுத்துகள் உயிரெழுத்துகளோடு சேர்ந்தும் மொழிக்கு முதலில் வரும்.

★ எ – கா : அன்பு (அ), ஆடு (ஆ), இலை (இ) ஈகை (ஈ) உரல் (உ), ஊசி (ஊ) எருது (எ), ஏணி (ஏ) ஐந்து (ஐ) ஒன்று (ஒ) ஓணான் (ஓ) ஔவை (ஔ) என, உயிர் எழுத்துகள் பன்னிரண்டும் மொழிக்கு முதலில் வரும்.

★ (க்+அ) கலம், (ங்+அ) ஙனம், (ச்+அ) சங்கு, (ஞ்+அ) ஞமலி, (த்+அ) தமிழ், (ந்+அ) நலம், (ப்+அ) பழம், (ம்+அ) மலர், (ய்+அ) யவனம், (வ்+அ) வளம் என, மெய் எழுத்துகள் பத்தும் மொழிக்கு முதலில் வரும்.

★ **மொழிக்கு இறுதியில் வரும் எழுத்துகள் :** உயிர் எழுத்துகள் பன்னிரண்டும், ஞ், ண், ந், ம், ன், ய், ர், ல், வ், ழ், ள் என்னும் பதினொரு மெய்யெழுத்துகளும், (கு, சு, டு, து, பு, று என்னும்) குற்றியலுகரம் ஒன்றும் ஆக இருபத்து நான்கு எழுத்துகள், மொழிக்கு இறுதியில் வரும்.

★ எ – கா : பல (அ), பலா (ஆ), கிளி (இ), தேனீ (ஈ), தரு (உ), பூ (ஊ), (எ), ஒரே (ஏ), தளை (ஐ), (ஒ), பலவோ (ஓ), கௌ (ஔ) என, உயிர் எழுத்துகள் பன்னிரண்டும் மொழிக்கு இறுதியில் வரும்.

★ உரிஞ் (ஞ்), மண் (ண்), வெரிந் (ந்), பழம் (ம்), அறன் (ன்), மெய் (ய்), அவர் (ர்), அவல் (ல்), அவ் (வ்), தமிழ் (ழ்), அவள் (ள்) என, மெய்யெழுத்துகள் பதினொன்றும் மொழிக்கு இறுதியில் வரும்.

★ பாக்கு (கு), பஞ்சு (சு), எட்டு (டு), பந்து (து), சால்பு (பு), கயிறு (று) எனக் குற்றியலுகர எழுத்துகள் மொழிக்கு இறுதியில் வரும்.

## பலவுள் தெரிக

1. மொழிமுதல் எழுத்துகளின் அடிப்படையில் முறையானதைக் கண்டுபிடிக்க.

அ) அன்னம், கிண்ணம் ஆ) டமாரம், இங்ஙனம்

இ) ரூபாய், இலட்சாதிபதி ஈ) றெக்கை, அங்ஙனம்

**விடை :** அ) அன்னம், கிண்ணம்

## கூடுதல் வினாக்கள்

2. மொழி முதலில் வரும் தமிழ் எழுத்துகள் எத்தனை?

அ) பன்னிரண்டு ஆ) பதினெட்டு

இ) இருபத்து நான்கு ஈ) இருபத்து இரண்டு

**விடை :** ஈ) இருபத்து இரண்டு

3. மொழி இறுதில் வரும் தமிழ் எழுத்துகள் எத்தனை?

அ) பன்னிரண்டு ஆ) பதினெட்டு

இ) இருபத்து நான்கு ஈ) இருபத்து இரண்டு

**விடை :** இ) இருபத்து நான்கு

4. மொழி முதலில் வரும் மெய்யெழுத்துகள் ______.

அ) க் ச் ட் த் ப் ற் ஆ) ங் ஞ் ண் ந் ம் ன்

இ) ய் ர் ல் வ் ழ் ள் ஈ) க் ங் ச் ஞ் த் ந் ப் ம் ய் வ்

**விடை :** ஈ) க் ங் ச் ஞ் த் ந் ப் ம் ய் வ்

5. மொழி இறுதியில் வரும் மெய்யெழுத்துகள் ______.

அ) ய் ர் ல் வ் ழ் ள் ஆ) க் ச் ட் த் ப் ற்

இ) ஞ் ண் ந் ம் ன் ய் ர் ல் வ் ழ் ள் ஈ) க் ச் த் ந் ப் ம் ய் ஞ் ங்

**விடை :** இ) ஞ் ண் ந் ம் ன் ய் ர் ல் வ் ழ் ள்

6. தவறான இணையைத் தெரிவு செய்க.

அ) கயல் + விழி – பெயர் + பெயர் ஆ) தமிழ் + கற்றாள் – பெயர் + வினை

இ) வந்தாள்+மகாலட்சுமி–வினை+வினை ஈ) தொழுதனர்+மக்கள் – வினை + பெயர்

**விடை :** இ) வந்தாள்+மகாலட்சுமி–வினை+வினை

www.Padasalai.Net

## இலக்கணத் தேர்ச்சிகொள்

**1. தவறான இணையைத் தேர்வு செய்க.**

அ) மொழி + ஆளுமை – உயிர் + உயிர் ஆ) கடல் + அலை – உயிர் + மெய்

இ) தமிழ் + உணர்வு – மெய் + உயிர் ஈ) மண் + வளம் – மெய் + மெய்

**விடை :** ஆ) கடல் + அலை – உயிர் + மெய்

**2. கீழ்க்காணும் குறிப்புகளில் பொதிந்துள்ள மேடைப்பேச்சில் சிறந்து விளங்கிய தமிழறிஞர்களின் பெயர்களைக் கண்டறிக.**




அ) சென்னை மாகாணத்துக்குத் தமிழ்நாடு என்று பெயர் மாற்றம் செய்த முதல்வர் (3)

**விடை :** அறிஞர் அண்ணா

ஆ) தொழிலாளர்களின் தந்தை என்று அழைக்கப்படுபவர் (10)

**விடை :** திரு. வி. கலியாணசுந்தரனார்

இ) "உயிரை உணர்வை வளர்ப்பது தமிழே" என்று பாடியவர் (6)

**விடை :** பாரதிதாசன்

ஈ) பொதுவுடைமைக் கொள்கையின் முன்னோடிகளில் ஒருவர் (6)

**விடை :** ஜீவானந்தம்

**3. பேச்சுவழக்கை எழுத்துவழக்காக மாற்றுக.**

அ) காலங்காத்தால எந்திரிச்சு படிச்சா ஒரு தெளிவு கெடைக்கும்.
அதிகாலையில் எழுந்திருந்து படித்தால் ஒரு தெளிவு கிடைக்கும்.

ஆ) முயற்சி செஞ்சா அதுக்கேத்த பயன் வராம போவாது.
முயற்சி செய்தால் அதற்கேற்ற பயன் வராமல் போகாது.

இ) காலத்துக்கேத்த மாரி புதுசுபுதுசா மொழி வடிவத்த மாத்தனும்.
காலத்திற்கேற்ற மாதிரி புதிது புதிதாக மொழிவடிவத்தை மாற்ற வேண்டும்.

ஈ) ஒவ்வொருத்தரும் பேசிக்கிட்டிருக்கும்போது எல்லாத்தையும் கவனமா பதிய வைக்கனும்.
ஒவ்வொருவரும் பேசிக்கொண்டிருக்கும்போது, எல்லாவற்றையும் கவனமாகப் பதியவைக்க வேண்டும்.

உ) தேர்வெழுத வேகமாப் போங்க, நேரங்கழிச்சி போனா பதட்டமாயிரும்.
தேர்வெழுத வேகமாகப் போங்கள்; நேரம் கழித்துப் போனால் பதற்றமாகிவிடும்.

**4. வினாக்கள்**

**அ) மொழிக்கு முதலில் வரும் எழுத்துகள் எத்தனை? அவை யாவை?**

மொழிக்கு முதலில் வரும் எழுத்துகள் இருபத்திரண்டு. அவை உயிரெழுத்துகள் பன்னிரண்டு, மெய்யெழுத்துகளில் க், ச், த், ப், ங், ஞ், ந், ம், ய், வ் என்னும் பத்து ஆக இருபத்திரண்டு.

எ – டு :

i) அன்பு, ஆடு, இலை, ஈகை, உரல், ஊசி, எருது, ஏணி, ஐந்து, ஒன்று, ஓணான், ஔவை – இவை உயிர்முதல் எழுத்துகளாக அமைந்தன.

ii) கலம், ஙனம், சங்கு, ஞமலி, தமிழ், நலம், பழம், மலர், யவனம், வளம் – இச்சொற்களில் மெய்கள் முதலில் நிற்பதால் மெய்முதலாகும்.

"பன்னீ ருயிரும் கசதந பமவய
ஞங ஈரைந்து உயிர்மெய் மொழிமுதல்" என்பது நன்னூல் நூற்பா (102)].

**ஆ) மொழிக்கு இறுதியில் வரும் எழுத்துகள் எத்தனை? எடுத்துக்காட்டுத் தருக.**

மொழிக்கு இறுதியில் வரும் எழுத்துகள் இருபத்து நான்கு. அவை, உயிரெழுத்துகள் பன்னிரண்டு, மெய்யெழுத்துகளில் ஞ், ண், ந், ம், ன், ய், ர், ல், வ், ழ், ள் ஆகிய பதினொன்று, குற்றியலுகரம் ஒன்று ஆக இருபத்து நான்கு ஆகும்

எ – டு : i) தமிழ் – ஈற்றெழுத்து 'ழ்' மெய்யீறு.

MERCY PUBLICATIONS CHENNAI

www.Padasalai.Net

ii) கிளி – ஈற்றெழுத்து 'ளி' (ள் + இ); எனவே, உயிரீறு.

iii) ஆறு – ஈற்றெழுத்து 'று', குற்றியலுகரம்; எனவே, குற்றியலுகர ஈறு.

"ஆவி ஞணநமன யரலவ ழளமெய்
சாயும் உகரம் நாலாறும் ஈறே" என்பது நன்னூல் நூற்பா (107)].

(ஆவி – உயிரெழுத்து. சாயும் உகரம் – குற்றியலுகரம்.)

**இ) உயிரீறு, மெய்யீறு – விளக்குக.**

**உயிரீறு :** சொல்லின் (நிலைமொழியின்) இறுதியில் உயிரெழுத்து அமைவது உயிரீறு.

எ–கா: அருவி (வ்+இ), மழை (ழ்+ஐ) – இ, ஐ என்னும் உயிர் எழுத்துகள் ஈறுகளாக அமைந்தன.

**மெய்யீறு :** சொல்லின் (நிலைமொழியின்) இறுதியில் மெய் எழுத்து அமைவது மெய்யீறு.

எ – கா : தேன் (ன்), தமிழ் (ழ்) – ன், ழ் என்னும் மெய் எழுத்துகள் ஈறுகளாக அமைந்தன.

**ஈ) உயிர்முதல், மெய்ம்முதல் – எடுத்துக்காட்டுடன் விளக்குக.**

**உயிர்முதல் :** சொல்லுக்கு (வருமொழியின்) முதலில் உயிர் எழுத்து வருவது உயிர்முதல் ஆகும்.

எ – கா : அம்மா (அ), ஆடு (ஆ), ஐவர் (ஐ), ஔவையார் (ஔ) – முதலில் உயிர் எழுத்துகள் வந்ததால் உயிர் முதலாகும்.

**மெய்ம்முதல் :** சொல்லுக்கு (வருமொழியின்) முதலில் க், ச், த், ப், ங், ஞ், ந், ம், ய், வ் என்னும் பத்து எழுத்துகளில் ஒன்று, முதலில் வருவது மெய்ம்முதலாகும்.

எ – கா : கதவு (க் + அ = க), சங்கு (ச் + அ = ச), பந்து (ப் + அ = ப) – என, மெய்யெழுத்துகள் முதலில் வந்தன.

**உ) குரங்குக்குட்டி – குற்றியலுகரப் புணர்ச்சியை விளக்குக.**

குரங்கு + குட்டி = குரங்குக்குட்டி. 'குரங்கு' என்னும் நிலைமொழியின் இறுதியில் 'கு' குற்றியலுகரமாக அமைந்தது. 'குட்டி' என்னும் வருமொழியில் 'க்' வல்லினமெய் வந்தது.

இப்புணர்ச்சியில், 'இருபெயரொட்டுப் பண்புத்தொகையில் வல்லினம் மிகும்' என்னும் விதிப்படி, 'குரங்குக்குட்டி' எனப் புணர்ந்தது. ("இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும்" என்னும் விதிப்படி புணர்ந்ததாகவும் கொள்ளலாம்.)

**ஊ) 'ங்' என்னும் மெய் எவ்வாறு சொல்லுக்கு முதலில் வரும்?**

'ங்' என்னும் மெய், அகரத்துடன் சேர்ந்து (ங் + அ) 'ங' எனச் சொல்லுக்கு முதலில் 'ஙனம்' (விதம்) என வரும்.

இச்சொல்லும், சுட்டெழுத்துகள், வினா எழுத்துகளுடன் இணைந்தே வரும்.

எ – கா : அங்ஙனம், இங்ஙனம், உங்ஙனம், எங்ஙனம், யாங்ஙனம்.

## மொழியை ஆள்வோம்

### சான்றோர் சித்திரம்

"தமிழ் இலக்கிய வரலாற்றில், கம்பருக்குப் பின்னர், ஓராயிரம் ஆண்டு ஓய்ந்து கிடந்தபின், வாராது வந்துதித்த புலமைக் கதிரவன்" எனத் தமிழறிஞர்கள் போற்றிய தென்மொழிப் பெரும்புலவர் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரனார் ஆவார். திருச்சிராப்பள்ளி அருகில் உள்ள அதவத்தூர் என்னும் ஊரில் பிறந்த இவர், திருவாவடுதுறை மடத்தின் தலைமைப் புலவராக விளங்கினார்.

மீனாட்சிசுந்தரனார், தமிழறிஞர்களைத் தேடிக் கண்டு, வழிபட்டு, செவிதிறந்து கற்றார். திருவாவடுதுறை மடத்தின் தலைவர் சுப்பிரமணிய தேசிகர், சென்னைத் தாண்டவராயர், திருத்தணிகை விசாகப் பெருமாள் ஆகியோரிடம் பூக்கள்தோறும் சென்று தேனுண்ணும் வண்டுபோல் பாடம் கற்றார். அவர் இயற்றிய சேக்கிழார் பிள்ளைத்தமிழ் என்ற நூல், அவருடைய பெருமையை என்றும் உணர்த்தும். தல புராணங்கள் பாடுவதில் சிறந்தவர். யமக அந்தாதி, திரிபந்தாதி, வெண்பா அந்தாதிகள் ஆகியவற்றை உருவாக்கிப் புகழ் பெற்றார். மாலை, கோவை, கலம்பகம், பிள்ளைத்தமிழ் ஆகியவற்றைப் பாடிப் பெருமை அடைந்தார். உ.வே. சாமிநாதர், தியாகராசர், குலாம்காதிறு நாவலர் போன்றோர், இவரின் மாணவர்கள். மகாவித்துவான் திரிசிரபுரம் மீனாட்சிசுந்தரனார் அவர்களின் புகழ், தமிழ் உள்ளவரையிலும் வாழும்.

MERCY PUBLICATIONS - CHENNAI

www.Padasalai.Net

1. **தமிழிலக்கிய வரலாற்றில் புலமைக் கதிரவன் – இத்தொடரில் புலமைக் கதிரவன் என்பதற்கு இலக்கணக்குறிப்புத் தருக.**

   **புலமைக் கதிரவன்** – இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை.

2. **மேற்கண்ட பத்தியில் இடம்பெற்றுள்ள உவமை, உருவகத் தொடர்களைக் கண்டறிக.**

   புலமைக் கதிரவன் – உருவகத் தொடர்.

   (பூக்கள்தோறும் சென்று தேனுண்ணும்) வண்டுபோல் – உவமைத்தொடர்.

3. **மீனாட்சிசுந்தரனார் தலபுராணங்கள் பாடுவதில் சிறந்தவர் – விடைக்கேற்ற வினாவை அமைக்க.**

   மீனாட்சிசுந்தரனார் எவற்றைப் பாடுவதில் வல்லவர்?

4. **பத்தியில் மொழிமுதல் எழுத்துகளைக்கொண்டு அமைந்த சொற்களுள் எவையெவை வடமொழிச் சொற்கள் எனச் சுட்டுக.**

   மகாவித்துவான், தலபுராணம், தேசிகர், யமகம், அந்தாதி, கலம்பகம்.

5. **விளங்கினார் – பகுபத உறுப்பிலக்கணம் எழுதுக.**

   விளங்கினார் – விளங்கு + இன் + ஆர்

   விளங்கு – பகுதி, இன் – இறந்தகால இடைநிலை, ஆர் – பலர்பால் வினைமுற்று விகுதி.

**விடைக்கேற்ற வினா அமைக்க.**

1. மீனாட்சி சுந்தரனார், பூக்கள்தோறும் சென்று தேனுண்ணும் வண்டுபோலப் பாடம் கற்றார்.

   **வினா :** மீனாட்சி சுந்தரனார் எவ்வாறு பாடம் கற்றார்?

2. மீனாட்சி சுந்தரனார், தலபுராணங்கள் பாடுவதில் வல்லவர்.

   **வினா :** மீனாட்சி சுந்தரனார் எவற்றைப் பாடுவதில் வல்லவர்?

## தமிழாக்கம் தருக

1. The Pen is mightier than the Sword.

   எழுதுகோலின் முனை, வாளின் முனையைவிட வலிமையானது.

2. Winners don't do different things, they do things differently.

   வென்றோர், வேறுபட்ட செயல்களைச் செய்வதில்லை; அவர்கள் செயல்களை வேறுவிதமாகச் செய்வார்கள்.

3. A picture is worth a thousand words.

   ஒரு படம் என்பது, ஆயிரம் வார்த்தைகளைவிட மதிப்புள்ளது.

4. Work while you work and play while you play.

   உழைக்க வேண்டிய நேரத்தில் உழை! விளையாட வேண்டிய நேரத்தில் விளையாடு!

5. Knowledge rules the world.

   அறிவே உலகை ஆளுகிறது.

**பிறமொழிச் சொற்களைத் தமிழ்ப்படுத்துக:**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **வாடகை** | – குடிக்கூலி | **மாதம்** | – திங்கள் | **போலீஸ்** | – காவலர் |
| **நிச்சயம்** | – உறுதி | **உத்திரவாதம்** | – உறுதி | **சந்தோஷம்** | – மகிழ்ச்சி |
| **சம்பளம்** | – ஊதியம் | **ஞாபகம்** | – நினைவு | **வருடம்** | – ஆண்டு |
| **தேசம்** | – நாடு | **வித்தியாசம்** | – வேறுபாடு | **உற்சாகம்** | – பூரிப்பு |
| **விசா** | – நுழைவுஇசைவு | **பாஸ்போர்ட்** | – கடவுச்சீட்டு | **கம்பெனி** | – நிறுவனம் |
| **பத்திரிகை** | – நாளிதழ் | **கோரிக்கை** | – வேண்டுதல் | **யுகம்** | – ஊழி |
| **ராச்சியம்** | – மாநிலம்,நாடு | **சரித்திரம்** | – வரலாறு | **முக்கியத்துவம்** | – முதன்மை |
| **சொந்தம்** | – உறவு | **சமீபம்** | – அருகில் | **தருணம்** | – உரியவேளை |
| **பந்து** | – உறவினர் | **அலங்காரம்** | – ஒப்பனை | **இலட்சணம்** | – அழகு |

MERCY PUBLICATIONS - CHENNAI

 www.Padasalai.Net

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **அனுபவம்** | – பட்டறிவு | **நட்சத்திரம்** | – விண்மீன் | **ஜனங்கள்** | – மக்கள் |
| **பௌத்திரன்** | – பெயரன் | **நமஸ்காரம்** | – வணக்கம் | **கும்பாபிஷேகம்** | – குடமுழுக்கு |
| **ஆசீர்வதித்தல்** | – வாழ்த்துதல் | **சம்பிரதாயம்** | – மரபு | **ஜாஸ்தி** | – மிகுதி |
| **விஷயம்** | – செய்தி | **நாஷ்டா** | – சிற்றுண்டி | **அங்கத்தினர்** | – உறுப்பினர் |
| **அபூர்வம்** | – புதுமை | **ஆராதனை** | – வழிபாடு | **உபயோகம்** | – பயன் |
| **அபிஷேகம்** | – திருமுழுக்கு | **ஜென்ம நட்சத்திரம்** | – பிறந்தநாள் | **சிரஞ்சீவி** | – திருநிறை செல்வன் |

**கீழ்க்காணும் நிகழ்ச்சிநிரலினைப் படித்து நாளிதழில் செய்தியாக வெளியிட வேண்டி முதன்மை ஆசிரியருக்குக் கடிதம் எழுதுக.**

**நிகழ்ச்சி நிரல்**

**"அரியன கேள் புதியன செய்" (திங்கள் கூடுகை)**

| **நேரம்** : 2.30 பிற்பகல் | **இடம்** : அரசு மேல்நிலைப் பள்ளி |
|---|---|
| 2.30 | தமிழ்த்தாய் வாழ்த்து |
| 2.35 | வரவேற்புரை – மாணவர் இலக்கியச்செல்வன் |
| 2.40 | தலைமையுரை – திரு. எழிலன், தலைமை ஆசிரியர் |
| 2.50 | சிறப்புரை – கவிஞர் வாணி |
| **"புலம்பெயர் தமிழரின் வாழ்க்கை"** | |
| 3.45 | நன்றியுரை – மாணவர் ஏஞ்சலின் |
| 4.00 | நாட்டுப்பண் |

அனுப்புநர் :

மாணவர் இலக்கிய மன்றத் தலைவர்,
அரசு மேல்நிலைப் பள்ளி,
சென்னை – 600 001.

பெறுநர் :

முதன்மை ஆசிரியர்,
தினமணி நாளிதழ்,
சென்னை – 600 002.

ஐயா, எம் பள்ளியில் நடைபெற இருக்கும் திங்கள் கூடுகை நிகழ்வு குறித்த செய்தி அனுப்பியுள்ளேன். அதனை வெளியிட்டு உதவுமாறு பணிவுடன் வேண்டுகிறேன்.

உங்கள்
வேலன்
(மாணவர் தலைவர்)

ஜூலைத் திங்கள் வார இறுதி வெள்ளிக்கிழமை அன்று, அரசு மேனிலைப் பள்ளியில் பிற்பகல் 2.30 மணிக்கு 'அரியன கேள் புதியன செய்' என்னும் அமைப்பின் திங்கள் கூடுகை நிகழ்வு, தமிழ்த்தாய் வாழ்த்துடன் தொடங்குகிறது. மாணவர் இலக்கியச்செல்வன், 2.35 மணிக்கு வரவேற்புரை நிகழ்த்துகிறார். தலைமை ஆசிரியர் திரு. எழிலன் அவர்கள், 'புலம்பெயர் தமிழரின் வாழ்க்கை' என்னும் தலைப்பில், 2.50 மணிக்குச் சிறப்புரை நிகழ்த்துவார். 3.45 மணிக்கு மாணவர் ஏஞ்சலின் நன்றியுரை கூறிமுடித்தவுடன், 4.00 மணிக்கு நாட்டுப் பண்ணுடன் கூடுகை நிகழ்வு நிறைவு பெறும்.

**பத்தியினைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க**

'தமிழ்' என்ற சொல் தமிழர்க்கு இனிமையானது. 'இனிமையும் நீர்மையும் தமிழெனல்' ஆகும் என்று, பிங்கல நிகண்டு குறிப்பிடுகிறது. 'தமிழ்' என்ற சொல்லை இனிமை, பண்பாடு, அகப்பொருள் என்னும் பொருள்களிலும் வழங்கியுள்ளனர்.

MERCY PUBLICATIONS - CHENNAI

www.Padasalai.Net


"அதூஉம் சாலும் நற்றமிழ் முழுதறிதல்" என்ற புறநானூற்றுப் பாடலடியில், 'தமிழ்' எனும் சொல், மொழி, கவிதை என்பவற்றைத் தாண்டிப் "பல்கலைப் புலமை" என்ற பொருளில் ஆளப்பட்டுள்ளது. "தமிழ்கெழு கூடல்" என்றவிடத்திலும், "கலைப்புலமை" என்ற பொருளிலே ஆளப்பட்டுள்ளது. கம்பன், "தமிழ் தழீஇய சாயலவர்" என்னும் இடத்து, 'தமிழ்' என்பதற்கு அழகும் மென்மையும் பொருளாகின்றன.

தேவாரம் போன்ற பக்தி இலக்கியங்களில், 'தமிழ்', பாட்டு என்னும் பொருளில் ஆளப்படுகிறது. ஞானசம்பந்தன் சொன்ன 'தமிழ் இவை பத்துமே', 'மூலன் உரை செய்த மூவாயிரம் தமிழ்' என்பன எடுத்துக்காட்டுகளாகும். முப்பது பாட்டுகளாலான திருப்பாவையை ஆண்டாள், 'தமிழ்மாலை' என்றே குறிப்பது இங்கு எண்ணத்தகும். ('பண்பாட்டு அசைவுகள்' – தொ. பரமசிவன்)

**1. தமிழ் என்னும் சொல்லுக்குரிய பல்வேறு பொருள்கள் யாவை?**

இனிமை, பண்பாடு, அகப்பொருள் அழகு, மென்மை, பாட்டு என்பன, தமிழ் என்னும் சொல்லுக்குரிய பல்வேறு பொருள்கள்.

**2. பத்தியில் உள்ள அளபெடைகளைக் கண்டறிக.**

அதூஉம் – செய்யுளிசை அளபெடை, தழீஇய – சொல்லிசையளபெடை.

**3. தமிழ் என்றவுடன் உங்கள் மனத்தில் தோன்றுவதை ஒரு வரியில் குறிப்பிடுக.**

"தமிழுக்கு அமுதென்று பேர்"

**4. திருப்பாவைக்கு ஆண்டாள் குறிப்பிடும் பெயர் யாது?**

தமிழ்மாலை.

**5. பத்தியின் மையக்கருத்திற்கேற்ப ஒரு தலைப்பிடுக.**

காலந்தோறும் தமிழ்.

## மொழியோடு விளையாடு

**1. எண்ணங்களை எழுத்தாக்குக.**



வானத்தில் பறந்தென்ன
வண்ணத்தில் சிறந்தென்ன
சொட்டும் நீரின்றி
சொகுசாக வாழ முடியுமா?

**2. தொடரில் உள்ள சொற்களை ஒழுங்குபடுத்தி இரண்டு சொற்றொடர்களாக்குக.**

எ – கா : ஓர் பயிர் பறவை வளர வேண்டும் அழகான தண்ணீர் மயில்

அ) மயில் ஓர் அழகான பறவை.

ஆ) பயிர் வளரத் தண்ணீர் வேண்டும்.

i) பள்ளிக்கூடம் எல்லாம் தருபவை ஒவ்வொரு கலைகள் குழந்தையும் போக வேண்டும் மகிழ்ச்சி

**விடை :** ஒவ்வொரு குழந்தையும் பள்ளிக்கூடம் போகவேண்டும்.
கலைகள் எல்லாம் மகிழ்ச்சி தருபவை.

ii) நிலவு வீசுவதால் தெற்கிலிருந்து மாலை தென்றல் மகிழ்விக்கும் எனப்படுகிறது மனத்தை.

**விடை :** மாலை நிலவு மனத்தை மகிழ்விக்கும்.
தெற்கிலிருந்து வீசுவதால் தென்றல் எனப்படுகிறது.

iii) பிறர் செய்யாவிட்டாலும் செய்த தீமை மறக்கக்கூடாது நன்மை செய்யக்கூடாது உதவியை.

**விடை :** பிறர் செய்த உதவியை, நன்மையை மறக்கக்கூடாது.
நன்மை செய்யாவிட்டாலும் தீமை செய்யக்கூடாது.

iv) நேற்று ஏன் வந்த பையன் பக்கத்தில் யார் இருக்கவில்லை தெரியுமா?

**விடை :** நேற்று வந்த பையன் யார் தெரியுமா?
ஏன் பக்கத்தில் இருக்கவில்லை?

v) கோசல மக்கள் நாடு ஒரு மகிழ்ச்சியாக சிறந்த வாழ்ந்த நாடு வந்தனர்.

**விடை :** கோசல நாடு ஒரு சிறந்த நாடு.
மக்கள் மகிழ்ச்சியாக வாழ்ந்து வாந்தனர்.

MERCY PUBLICATIONS - CHENNAI

**3. வேர்ச்சொற்களை எடுத்துக்காட்டில் உள்ளவாறு தொடர்களாக மாற்றுக.**

அ) வா ஆ) பேசு இ) தா ஈ) ஓடு உ) பாடு

எ – கா : அ. வா – வேர்ச்சொல்.

அருணா, வீட்டுக்கு வந்தாள். (வினைமுற்று)

அங்கு வந்த பேருந்தில், அனைவரும் ஏறினர். (பெயரெச்சம்)

கருணாகரன், மேடையில் வந்து நின்றார். (வினையெச்சம்)

என்னைப் பார்க்க வந்தவர், என் தந்தையின் நண்பர். (வினையாலணையும் பெயர்)

ஆ) பேசு – வேர்ச்சொல்

அவள் பேசினாள். (வினைமுற்று)

அவள் பேசிய மொழி இனிமையாக இருந்தது. (பெயரெச்சம்)

அவள் பேசி முடித்தாள். (வினையெச்சம்)

மேடையில் பேசியவளைப் பார்த்தேன். (வினையாலணையும் பெயர்)

இ) தா – வேர்ச்சொல்

அண்ணன் தந்தான். (வினைமுற்று)

அண்ணன் தந்த பரிசு. (பெயரெச்சம்)

அண்ணன் தந்து சென்றான். (வினையெச்சம்)

அண்ணனிடம் தந்தவன் யாவன்? (வினையாலணையும் பெயர்)

ஈ) ஓடு – வேர்ச்சொல்

நான் வேகமாக ஓடினேன். (வினைமுற்று)

வேகமாக ஓடிய பையன் யார்? (பெயரெச்சம்)

அவன் ஓடிக் களைத்தான். (வினையெச்சம்)

அங்கே ஓடியவனைப் பார்த்தாயா? (வினையாலணையும் பெயர்)

உ) பாடு – வேர்ச்சொல்

சீதை பாடுகிறாள். (வினைமுற்று)

சீதை பாடிய பாட்டு. (பெயரெச்சம்)

சீதை பாடி முடித்தாள் (வினையெச்சம்)

மேடையில் பாடியவள் அவள். (வினையாலணையும் பெயர்)

## நிற்க அதற்குத் தக

| கோபம் வரும்போது... | உடலில் நிகழும் மாற்றங்கள் | மனத்தில் நிகழும் மாற்றங்கள் | நாம் செய்யவேண்டியது |
|---|---|---|---|
| கோபத்தை உடனடியாக வெளிப்படுத்துவது | முகம் இயல்பு நிலையிலிருந்து மாறுதல் | பதற்றம் | கோபத்தைக் கட்டுப்படுத்திப் பொறுமையுடன் செயல்படுவேன் |
| உள்ளேயே ஒளித்துக் கொள்வது | கை கால் நடுக்கம் | தடுமாற்றம் | |
| அமைதியாவது | வியர்வை பெருகுதல் | தவறான முடிவெடுத்தல் | |
| எதிர்மறையாகக் காட்டுவது | தலை வலித்தல் | பொறுமை இழத்தல் | |

**கலைச்சொல் அறிவோம்**

அழகியல் – Aesthetics
இதழாளர் – Journalist
கலை விமர்சகர் – Art Critic
புத்தக மதிப்புரை – Book Review
புலம் பெயர்தல் – Migration
மெய்யியலாளர் – Philosopher

MERCY PUBLICATIONS, CHENNAI

www.Padasalai.Net

# உள்நிலைத் தேர்வு

நேரம் : 40 நிமிடங்கள் மதிப்பெண் : 30

## I. பலவுள் தெரிக. 8 × 1 = 8

1. பாயிரம் இல்லது ______ அன்றே.
   அ) காவியம் ஆ) பனுவல் இ) பாடல் ஈ) கவிதை
2. பொருத்தமானவற்றைத் தேர்ந்தெடுக்க.
   அ) அ. முத்துலிங்கம் – யுகத்தின் பாடல் ஆ) பவணந்தி முனிவர் – நன்னூல்
   இ) சு. வில்வரத்தினம் – ஆறாம் திணை ஈ) இந்திரன் – பேச்சுமொழியும் எழுத்துமொழியும்
   i. அ, ஆ ii. அ, ஈ iii. ஆ, ஈ iv. அ, இ
3. மொழி முதலில் வரும் தமிழ் எழுத்துகள் எத்தனை?
   அ) பன்னிரண்டு ஆ) பதினெட்டு
   இ) இருபத்து நான்கு ஈ) இருபத்து இரண்டு
4. "பறவைகள் ஒருவேளை தூங்கப் போயிருக்கலாம்" – கவிதை ஆசிரியர்.
   அ) ஸ்டெஃபான் மல்லார்மே ஆ) வால்ட் விட்மன்
   இ) பாப்லோ நெரூடா ஈ) மனோரமா பிஸ்வாஸ்
5. கவிஞர் சு. வில்வரத்தினம் பிறந்த புங்குடுத்தீவு ______ உள்ளது.
   அ) அமெரிக்காவில் ஆ) கனடாவில் இ) இந்தியாவில் ஈ) யாழ்ப்பாணத்தில்
6. மாநகர் – இலக்கணக்குறிப்புத் தருக.
   அ) உரிச்சொற்றொடர் ஆ) வினைத்தொகை
   இ) தொழிற்பெயர் ஈ) வினையாலணையும் பெயர்
7. தவறான இணையைத் தேர்வு செய்க.
   அ) மொழி + ஆளுமை – உயிர் + உயிர் ஆ) கடல் + அலை – உயிர் + மெய்
   இ) தமிழ் + உணர்வு – மெய் + உயிர் ஈ) மண் + வளம் – மெய் + மெய்
8. தவறான இணையைத் தெரிவு செய்க.
   அ) கயல் + விழி – பெயர் + பெயர் ஆ) தமிழ் + கற்றாள் – பெயர் + வினை
   இ) வந்தாள்+மகாலட்சுமி–வினை+வினை ஈ) தொழுதனர்+மக்கள் – வினை + பெயர்

## II. எவையேனும் நான்கனுக்கு விடை தருக. 4 × 2 = 8

9. இனம், மொழி குறித்த இரசூல் கம்சதோவ் பார்வையைக் குறிப்பிடுக.
10. பேச்சுமொழி, எழுத்துமொழியைக் காட்டிலும் உணர்ச்சி வெளிப்பாட்டுச் சக்தி மிக்கது – ஏன்?
11. 'பாயிரம்' பற்றி நீங்கள் அறியும் கருத்து யாது?
12. உயிரெழுத்து, பன்னிரண்டு, திருக்குறள், நாலடியார்–இச்சொற்களில் எவ்வகை ஈற்றெழுத்துகள் அமைந்துள்ளன?
13. உயிரீறு, மெய்யீறு – விளக்குக.

## III. எவையேனும் இரண்டனுக்கு விடை தருக. 2 × 4 = 8

14. சு. வில்வரத்தினம் பாடத்தான் வேண்டும் என எவற்றைக் குறிப்பிடுகிறார்?
15. 'என்னுயிர் தமிழ்மொழி என்பேன்' என்னும் தலைப்பில் நீவிர் கொண்டுள்ள மொழிப்பற்றினை எழுதுக.
16. நூல் ஒன்றின் முகவுரையில் இடம்பெற வேண்டுவனவாக நன்னூல் எவற்றைக் குறிப்பிடுகிறது?
17. தமிழர் வாழ்வோடும் புலம்பெயர் நிகழ்வுகளோடும் அ.முத்துலிங்கத்தின் திணைப்பாகுபாடு எவ்வாறு இணைக்கப்படுகிறது?

## IV. பின்வரும் வினாக்களில் ஏதேனும் ஒன்றனுக்கு விரிவான விடை தருக. 1 × 6 = 6

18. நன்னூல் பொதுப்பாயிரம், சிறப்புப்பாயிரம் வாயிலாக அறியலாகும் செய்திகளைத் தொகுத்துரைக்க.
19. தமிழர் வாழ்வோடும் புலம்பெயர் நிகழ்வுகளோடும் அ.முத்துலிங்கத்தின் திணைப்பாகுபாடு எவ்வாறு இணைக்கப் படுகிறது?
20. அடிமாறாமல் செய்யுள் வடிவில் எழுதுக.
    ஏடு தொடக்கி வைத்து... எனத் தொடங்கும் யுகத்தின் பாடலை எழுதுக.

MERCY PUBLICATIONS - CHENNAI

# இயல் – 2

## உரைநடை உலகம்

## இயற்கை வேளாண்மை

### குறுவினா

**1. தமிழ்நாட்டின் மாநில மரம் – சிறு குறிப்பு வரைக.**

★ நம் தமிழ்நாட்டின் மாநில மரம் பனை.

★ இது, ஏழைகளின் கற்பக விருட்சம்.

★ சிறந்த காற்றுத் தடுப்பான்.

★ ஆழத்தில் நீர்மட்டம் குறையாமல் நீரைச் சேமித்து வைக்கும் தன்மையுடையது.

### கூடுதல் வினாக்கள்

**2. ‘தொழுஉரம்’ என்பது என்ன?**

★ **நன்செய்நிலத் தொழுஉரம் :** மாட்டுச் சாணமும், கோமியமும் வைக்கோலுடன் கலந்து மக்கச்செய்து உருவாக்குவது.

★ **புன்செய்நிலத் தொழுஉரம் :** காய்ந்த இலை, சருகு, கால்நடைச் சாணத்தை எரிப்பதால் கிடைக்கும் சாம்பல் கலந்தது.

**3. ஊடுபயிர் என்றால் என்ன?**

★ நெல் கதிர் சாயும்போது வயலில் ஊடுபயிராக உளுந்து போன்றவற்றை விதைப்பர்.

★ அவற்றின் வேர் முடிச்சுகளில் சேர்ந்திருக்கும் நைட்ரஜன், நிலத்தின் வளத்தைப் பெருக்கும்.

**4. மதிப்புக் கூட்டுப் பொருள் என்பது யாது?**

★ ஒரு பொருளை மேம்படுத்தி, மாற்றுப் பொருளாக மாற்றுவதை மதிப்புக் கூட்டுப் பொருள் என அழைக்கின்றனர். பனைமரப் பதநீரிலிருந்து பனங்கற்கண்டு, கருப்பட்டி தயாரிப்பது.

**5. எதனால் மண் நஞ்சாகிப் போனது?**

★ விவசாயத்திற்கு வேதி உரம், பூச்சிக் கொல்லிகளைப் பயன்படுத்தியதனால், மண் நஞ்சாகிப் போனது.

**7. நிலத்தை நஞ்சு நீக்கிச் சரிசெய்ய என்ன செய்ய வேண்டும்?**

★ நஞ்சு நீக்கி நிலத்தைச் சரிசெய்ய, அறுவடை முடிந்ததும், வைக்கோலை வயலில் சமமாகப் பரப்பி மடியச் செய்து, மறுபருவம் வந்தவுடன் மழைநீரைத் தேக்கி உழவேண்டும்.

**8. பூச்சிக் கொல்லியால் விளையும் கேடுகள் யாவை?**

★ பூச்சிக்கொல்லி, பயிரிலுள்ள பூச்சிகளைமட்டும் கொல்வதில்லை.

★ விளைபொருளுக்குள்ளும் அது ஊடுருவுகிறது. அந்த விளைபொருள்களை உண்ணும் மக்களுக்குப் புற்றுநோய், வயிற்றுப்புண், மலட்டுத்தன்மை முதலான நோய்கள் உண்டாகின்றன.

**9. எது இயற்கை வேளாண்மை?**

★ விதை விதைப்பதிலிருந்து விளைவை அறுவடை செய்கிறவரை, ஒட்டுமொத்தமாக வேதிப்பொருளான உரத்தையோ, பூச்சிக்கொல்லியையோ பயன்படுத்தாது இருப்பது, இயற்கை வேளாண்மையாகும்.

**10. இயற்கை விவசாய பூச்சிக்கொல்லி பற்றி எழுதுக.**

★ வேப்பங்கொட்டை, நொச்சி இலை, பிரண்டை, கற்றாழை ஆகியவற்றை இடித்துக் கோமியத்தில் ஊறவைத்து எடுத்த சாற்றில், நீர் கலந்து, இயற்கை விவசாயப் பூச்சிக்கொல்லி தயாரிப்பர்.

**11. நஞ்சை (நன்செய்) நிலத் தொழுஉரம் எவ்வாறு தயாரிக்கப்படுகிறது?**

★ தொழுஉரம் எனப்படும் மாட்டுச்சாணம், கோமியம் ஆகியவற்றை வைக்கோலுடன் கலந்து மக்கச் செய்து பெறுவது, நஞ்சை நிலத் தொழுஉரமாகும்.

**12. புஞ்சை (புன்செய்) நிலத் தொழுஉரம் எவ்வாறு தயாரிக்கப்படுகிறது?**

★ காய்ந்த இலைச் சருகு, கால்நடைகளின் சாணத்தை எரித்துக் கிடைக்கும் சாம்பல் ஆகியன கலந்தது, புஞ்சை நிலத் தொழுஉரமாகும்.

www.Padasalai.Net

**13. ஐந்து விவசாய மந்திரங்கள் எவை?**

★ உழப்படாத நிலம், இரசாயன உரம் இல்லா உற்பத்தி.
★ பூச்சிக்கொல்லி தெளிக்கப்படாத பயிர்ப் பாதுகாப்பு, தண்ணீர் நிறுத்தாத நெல் சாகுபடி.
★ ஒட்டுவிதை இல்லாமல் உயர் விளைச்சல்.

## சிறுவினா

**1. வேதிக்கலப்பில்லாத பூச்சிக்கொல்லி நடைமுறைக்குச் சாத்தியமா? – நும் கருத்தை எழுதுக.**

★ வேதிக்கலப்பில்லாத பூச்சிக்கொல்லி, நடைமுறைக்குச் சாத்தியமே.
★ பூச்சிக்கொல்லியைப் பயன்படுத்துவதால், மனிதர்களுக்குப் பல்வேறு நோய்கள் ஏற்படுகின்றன.
★ வேப்பங்கொட்டை, நொச்சி இலை, புங்கன், பிரண்டை, கற்றாழை ஆகிய அனைத்தையும் நன்றாக இடித்துக் கோமியத்தில் ஊற வைத்துப் பயிர்களில் தெளித்தால், பூச்சிகள் காணாமல் போய்விடும்.
★ வேதிக் கலப்பில்லாத பூச்சிக் கொல்லியால், நுண்ணுயிர்ப் பெருக்கம் ஏற்பட்டு, மண்வளம் பெருகும்.

## கூடுதல் வினாக்கள்

**2. இயற்கை வேளாண்மை மறுமலர்ச்சிக்கு வித்திட்டவர் யார்? அவர் உலகிற்குச் சொன்னது என்ன?**

★ இயற்கை வேளாண்மை மறுமலர்ச்சிக்கு வித்திட்டவர், மசானபு ஃபுகோகா ஆவார்.
★ மசானபு ஃபுகோகா ஜப்பான் நாட்டு அறிஞர்.
★ சிறப்பான விவசாயம் செய்வதற்கு உழப்படாத நிலம், இரசாயன உரம் இல்லாத உற்பத்தி, பூச்சிக் கொல்லி தெளிக்காத பயிர்ப் பாதுகாப்பு, தண்ணீர் நிறுத்தாத நெல் சாகுபடி, ஒட்டுவிதை இல்லாமல் உயர் விளைச்சல் என்னும் ஐந்து மந்திரங்களை உலகிற்கு வழங்கினார்.

**3. இயற்கை விவசாயம் சிறக்கச் சித்தப்பா சொக்கலிங்கம் கூறும் நெறிகள் யாவை?**

★ நிலத்தில் இடைவிடாமல் மாறிமாறிச் சாகுபடி செய்தல் கூடாது; நிலத்தை ஆறப்போட வேண்டும். சரியான இடைவெளியில் மாறிமாறிப் பயிரிட வேண்டும்.
★ நம்மைச் சுற்றியுள்ளவர்களின் பண்ணைகளைப் பார்வையிட வேண்டும். வேளாண்மை அலுவலகம் மூலம் அரசு செய்துள்ள வழிமுறைகளைத் தெரிந்துகொள்ளவேண்டும்.
★ வேளாண்துறை தரும் பயிற்சிகளில் கலந்துகொண்டு நல்ல வழிமுறைகளையறிந்து பயிரிட வேண்டும் என, இயற்கை விவசாயம் சிறக்கச் சித்தப்பா சொக்கலிங்கம் நெறிமுறைகளைக் கூறுகிறார்.

## நெடுவினா

**1. 'சுற்றுச்சூழலை வளப்படுத்துவது இயற்கை வேளாண்மையே' என்னும் தலைப்பில் மேடைப்பேச்சிற்கான உரையை உருவாக்குக.**

**வேதி உரத்தால் நிலம் நஞ்சாகும் :**

அதிக விளைச்சலை எதிர்பார்த்து, வேதி உரங்களையும் பூச்சிக் கொல்லிகளையும் விவசாயிகள் பயன்படுத்தினர். அச்செயல்களால் பல பின்னடைவுகள் ஏற்பட்டன. உயிர்களைப் பேணி வளர்க்க வேண்டிய நிலம், மலடாகிப் போனது. நிலத்திலிருந்த மண்புழு மற்றும் நன்மை செய்யும் நுண்ணுயிர்கள் அழிந்துபோயின. மண்ணும் நஞ்சானது. அந்த மண்ணில் விளைந்த பொருளும் உணவு என்ற பெயரில் மறைமுக நஞ்சானது.

**சுற்றுச்சூழலும் உயிரினங்களும் பாதிப்பு :**

இதனால் சுற்றுச்சூழல் பாதிப்பு அடைந்தது. மழை பெய்தபோது நிலத்தில் போட்ட வேதிப்பொருள் நீரோடு நீர்நிலைகளில் நீர்வாழ் உயிரினங்களையும் அழித்தது. மண்ணில் ஊறி நிலத்தடி நீரையும் நஞ் சாக்கியது. பூச்சி இனங்களும் பறவைகளும் அழிந்தன. மண்ணும் காற்றும் நீரும் மாசுபட்டன. சுற்றுச்சூழல் பெரிதும் பாதிப்பு அடைந்தது.

**நீர் நிலவள மீட்டெடுப்பு முயற்சி :**

நாம் வாழும் நிலப்பரப்பை மீண்டும் மீட்டெடுக்க வேண்டாமா? வேண்டும். முடியுமா? முடியும். அதற்கான முயற்சிதான் இயற்கை வேளாண்மை. வேதி உரங்களை நீக்கி, ஆடுமாடுகளின் சாணக்கழிவு, இலை தழைகளின் மட்கு ஆகியவற்றை மீண்டும் விவசாயத்தில் உரமாகப் பயன்படுத்த வேண்டும்.

வேதிப்பொருள் கலவாத பூச்சி விரட்டிகளைத் தயாரித்துப் பயன்படுத்த வேண்டும். இதனால் மீண்டும் மண் வளம்பெறும். நம் நாட்டு மரங்களை வளர்த்தால், காற்று தூய்மை அடையும். மழை பெருகும். ஆறு, குளம், கால்வாய்களைச் சரி செய்து, பெய்யும் மழைநீரைத் தேக்கி, இயற்கைமுறை விவசாயத்தை மீட்டெடுத்தால், மனிதர்களாகிய நாமும் வாழலாம்; நமக்கு நன்மை செய்யும் பூச்சி, பறவை இனங்களும் வாழும். இயற்கை, தன் பழமை மாறாது நமக்குப் பாதுகாப்பு அளிக்கும்.

MEENA PUBLICATIONS CHENNAI

## பலவுள் தெரிக

1. மண்ணுக்கு வளம் சேர்ப்பன ______.

அ) மண்புழு ஆ) ஊடுபயிர்

இ) இயற்கை உரங்கள் ஈ) இவை மூன்றும்

**விடை :** ஈ) இவை மூன்றும்

2. "வான் பொய்த்தது"– என்ற சொற்றொடர் உணர்த்தும் மறைமுகப்பொருள் ______.

அ) வானம் இடிந்தது ஆ) மழை பெய்யவில்லை

இ) மின்னல் வெட்டியது ஈ) வானம் என்பது பொய்யானது

**விடை :** ஆ) மழை பெய்யவில்லை

3. கருப்பட்டி, பனங்கற்கண்டு போன்றவை ______.

அ) மதிப்புக் கூட்டுப் பொருள்கள் ஆ) நேரடிப்பொருள்கள்

i) அ – மட்டும் சரி ii) ஆ – மட்டும் சரி

iii) இரண்டும் சரி iv) அ–தவறு, ஆ–சரி

**விடை :** i) அ – மட்டும் சரி

4. பிழையான தொடரைக் கண்டறிக.

அ) பதநீரிலிருந்து பனங்கற்கண்டு, கருப்பட்டி போன்றவற்றைத் தயாரிக்கின்றனர்.

ஆ) ஏதிலிக்குருவிகள் என்பது வாழ்வதற்கான சூழல் கிடைக்காத குருவிகளாகும்.

இ) குறைந்த எட்டுத்தொகை அடிகளை ஐங்குறுநூறு நூல்களுள் உடையது.

ஈ) யானைகளால் வெகுதொலைவில் உள்ள நீரினை, வாசனைமூலம் அறியமுடியும்.

**விடை :** இ) குறைந்த எட்டுத்தொகை அடிகளை ஐங்குறுநூறு நூல்களுள் உடையது.

## கூடுதல் வினாக்கள்

5. மதிப்புக் கூட்டுப் பொருள் என்பது ______.

அ) பனை மரத்திலிருந்து கிடைக்கும் பொருள்கள்

ஆ) பனங்கற்கண்டு கருப்பட்டி போன்றவற்றை விற்பது.

இ) ஒரு பொருளை மேம்படுத்தப்பட்ட மாற்றுப் பொருள்களாக மாற்றுவது

ஈ) மனிதத் தேவைகளை நல்ல முறையில் நிறைவு செய்வது

**விடை :** இ) ஒரு பொருளை மேம்படுத்தப்பட்ட மாற்றுப் பொருள்களாக மாற்றுவது

6. 'உழவர் உலகிற்கு அச்சாணி' எனக் கூறியவர் ______.

அ) பாரதி ஆ) பாரதிதாசன் இ) ஔவையார் ஈ) திருவள்ளுவர்

**விடை :** ஈ) திருவள்ளுவர்

7. "உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்" எனப் போற்றியவர் ______.

அ) புரட்சிக்கவிஞர் ஆ) பாரதியார் இ) ஔவையார் ஈ) நாமக்கல்லார்

**விடை :** ஆ) பாரதியார்

8. 'ஒற்றை வைக்கோல் புரட்சி' என்னும் நூலின் ஆசிரியர் ______.

அ) நம்மாழ்வார் ஆ) ஆர்.எஸ். நாராயணன்

இ) மசானபு ஃபுகோகா ஈ) பாமயன்

**விடை :** இ) மசானபு ஃபுகோகா

9. தமிழகத்தின் மாநில மரம் எது?

அ) அரசமரம் ஆ) பனைமரம் இ) ஆலமரம் ஈ) வேப்பமரம்

**விடை :** ஆ) பனைமரம்

10. மண்ணுக்கு நைட்ரஜன் சத்து அளிப்பது ______.

அ) பனைமரம் ஆ) இயற்கை உரம்

இ) சாணத்தை எரித்த சாம்பல் ஈ) உளுந்தின் வேர்முடிச்சு

**விடை :** ஈ) உளுந்தின் வேர்முடிச்சு

MERCY PUBLICATIONS - CHENNAI

11. இயற்கை வேளாண்மை செய்ய மங்கை பின்பற்றியது ______ வழி.
அ) சொக்கலிங்கம் ஆ) மல்லிகா இ) நம்மாழ்வார் ஈ) முன்னோர்
விடை : இ) நம்மாழ்வார்

12. கீழ்க்கண்டவற்றில் இயற்கை உரம் எது?
அ) யூரியா ஆ) பொட்டாசியம் இ) சாணம் ஈ) சல்பேட்
விடை : இ) சாணம்

13. ஏழைகளின் கற்பக விருட்சம் எனப் போற்றப்படும் மரம் எது?
அ) பனைமரம் ஆ) வாழைமரம் இ) முருங்கை மரம் ஈ) தென்னை மரம்
விடை : அ) பனைமரம்

14. கீழ்க்கண்டவற்றுள் மதிப்புக் கூட்டுப்பொருள் ______.
அ) பனங்கொட்டை ஆ) பனை ஓலை இ) பதநீர் ஈ) பனங்கற்கண்டு
விடை : ஈ) பனங்கற்கண்டு

15. புஞ்சை நிலத்திற்கு இடும் சாம்பல் என்பது ______.
அ) வைக்கோல் ஆ) தொழிற்சாலைக் கழிவு
இ) கால்நடைச் சாணத்தை எரித்தது ஈ) சாணம், சிறுநீர்
விடை : இ) கால்நடைச் சாணத்தை எரித்தது

16. 'கருப்பட்டி' என்பது ______.
அ) கரும்புச்சாறில் தயாரிப்பது ஆ) தென்னை சாறில் தயாரிப்பது
இ) பதநீரில் தயாரிப்பது ஈ) நுங்கில் தயாரிப்பது
விடை : இ) பதநீரில் தயாரிப்பது

17. கூற்று 1 : பனைமரம் ஏழைகளோட கற்பக விருட்சம்னு சொல்லலாம்.
கூற்று 2 : பனைமரத்திலிருந்து மதிப்புக் கூட்டுப்பொருள்களும் உருவாக்கலாம்.
அ) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு ஆ) கூற்று இரண்டும் சரி
இ) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி ஈ) கூற்று இரண்டும் தவறு
விடை : ஆ) கூற்று இரண்டும் சரி

**விடைக்கேற்ற வினா அமைக்க.**

1. ஒரு பொருளை மேம்படுத்தப்பட்ட மாற்றுப் பொருளாக மாற்றுவதை, மதிப்புக் கூட்டுப்பொருள் என அழைக்கின்றனர்.
வினா : மதிப்புக் கூட்டுப்பொருள் என, எதை அழைக்கின்றனர்?

2. நிலத்தைச் சரிசெய்ய அறுவடை முடிந்தபிறகு வைக்கோலைச் சமமாகப் பரப்பி, மடியச் செய்து, மறுபருவம் வந்தவுடன் நிலத்தில் நீரைத் தேக்கி உழவேண்டும்.
வினா : நிலத்தைச் சரிசெய்ய எது முடிந்தபிறகு வைக்கோலை சமமாகப் பரப்பி, மடியச் செய்து, எப்பருவம் வந்தவுடன் நிலத்தில் நீரைத் தேக்கி, பிறகு உழவேண்டும்?

3. நிலத்திலிருந்து கிடைக்கும் குப்பைகூளம், செடி செத்தைகளை நிலத்திற்கே கொடுப்பது என்ற செயல்கள், நெற்பயிரும் மாரிக்காலப் பயிரும் வளர்வதற்கான வளத்தைப் பூமிக்கு அளிக்கின்றன.
வினா : நெற்பயிரும் மாரிக்காலப் பயிரும் வளர்வதற்கான வளத்தைப் பூமிக்கு எவற்றை நிலத்திற்கே கொடுப்பது என்னும் செயல்கள் அளிக்கின்றன?

4. வைக்கோலைப் பற்றி மிகச்சிறந்த ஆய்வைச் செய்தவர், ஜப்பான் அறிஞர் மசானபு ஃபுகோகா.
வினா : ஜப்பான் அறிஞர் மசானபு ஃபுகோகா எதைப் பற்றி எத்தகைய ஆய்வைச் செய்தவர்?

5. பூச்சிக்கொல்லி, பயிரில் இருக்கிற பூச்சியை மட்டும் கொல்லாமல், விளைகிற பயிர்க்குள்ளேயும் ஊடுருவுகிறது?
வினா : பூச்சிக்கொல்லி, எதை மட்டும் கொல்லாமல், எதிலேயும் ஊடுருவுகிறது?

6. புஞ்சையென்றால், காய்ந்த இலைச்சருகு, சாம்பல் ஆகியவற்றைக் கலந்து போட்டால் போதும்.
வினா : புஞ்சையென்றால் எவற்றைக் கலந்துபோட்டால் போதும்?

MERCY PUBLICATIONS - CHENNAI

7. வேர்முடிச்சுகளில் இருக்கும் நைட்ரஜன், நிலத்தின் வளத்தைப் பெருக்கி, அடுத்த விளைச்சலை அதிகரிக்கச் செய்யும்.

**வினா :** வேர்முடிச்சுகளில் இருக்கும் நைட்ரஜன், எதைப் பெருக்கி, எதை அதிகரிக்கச் செய்யும்?

8. மண்ணில் உள்ள நுண்ணுயிர்ப் பெருக்கத்தினால், மண்ணும் தன்னுடைய வளத்தை இழக்கிறதில்லை.

**வினா :** மண்ணும் தன்னுடைய வளத்தை எதனால் இழக்கிறதில்லை?

## கவிதைப்பேழை

## 1. ஏதிலிக்குருவிகள்

(அழகிய பெரியவன்)

### குறுவினா

**1. ஏதிலியாய்க் குருவிகள் எங்கோ போயின – தொடரின் பொருள் யாது?**

★ மரங்கள் வெட்டப்பட்டதால், காடுகள் அழிந்து போயின.

★ மழை பெய்யவில்லை. மண்வளம் குன்றியது.

★ இயற்கைச்சூழலில் பல மாற்றங்கள் ஏற்பட்டுவிட்டதால், வாழ்வதற்கான சூழல் இல்லாததால், ஆதரவற்றனவாய்க் குருவிகள், இருப்பிடம் தேடி அலைந்தன.

### கூடுதல் வினாக்கள்

**2. 'அழகிய பெரியவன்' – குறிப்பு வரைக.**

★ அழகிய பெரியவன், வேலூர் மாவட்டம் பேரணாம்பட்டைச் சேர்ந்தவர். இயற்பெயர் அரவிந்தன்.

★ அரசுப் பள்ளி ஆசிரியர்; நாவல், சிறுகதை, கவிதை, கட்டுரை படைப்பவர்.

★ 'தகப்பன் கொடி' புதினத்திற்குத் தமிழக அரசின் விருது பெற்றவர்.

★ குறடு, நெரிக்கட்டு, உனக்கும் எனக்குமான சொல், அரூப நஞ்சு, மீள்கோணம், பெருகும் வேட்கை ஆகியன, இவர் படைப்புகள்.

**3. 'ஏதிலிக்குருவிகள்' காட்சிப்படுத்தும் அவலம் யாது?**

★ இயற்கைச் சூழலே உயிர்களின் இருப்பை முடிவு செய்கிறது.

★ இயற்கைக்கும் மனிதர்க்குமான தொப்புள்கொடி மழைத்துளிகள்.

★ முதல்துளி விழுகையில், உயிர்கள் மலர்கின்றன.

★ 'ஏதிலிக்குருவிகள்' கவிதை, சூழலியல் மாற்றத்தால் நிகழ்கிற அவலத்தைக் காட்சிப்படுத்துகிறது.

### சிறுவினா

**1. காற்றில் ஆடும் புல் வீடுகளுக்கு அழகிய பெரியவன் தரும் ஒப்பீடு யாது? ஏன்?**

★ சிற்றூர்களில் கூரை வேய்ந்த வீடுகள் இருந்த காலத்தில், நீர்வளம் கரைபுரண்டது; மரங்கள் நிறைந்திருந்தன; அவற்றில் குருவிகள் கூடுகட்டி வாழ்ந்தன.

★ தூக்கணாங் குருவிகள் கட்டிய கூடுகள், புல் வீடுகளாய்க் காற்றில் அசைந்தன; அவை, தூக்கணாங் குருவிகளின் வீடுகளாகும்.

★ இன்று மண்வளம் குறைந்தது; தாய்மடி சுரக்காததால், அதில் வாழ்ந்த உயிரினங்கள் மறைந்து போயின என்பதை, அழகிய பெரியவன் ஒப்பீடு செய்கிறார்.

### கூடுதல் வினா

**2. 'ஏதிலிக்குருவிகள்' கவிதையால் பெறப்படும் செய்தி யாது?**

★ ஊரில், இன்று குருவிகளையும் கூடுகளையும் பார்க்க இயலவில்லை. முன்பு அடைமழை என்றால் ஆற்றில் நீர் புரளும். கரைகளில் நின்ற நெடுமரங்களில் பறவைகள் குரலெழுப்பும்.

★ நடந்து போகும் வழிகளில் தூக்கணாங் குருவிகளின் கூடுகள், புல் வீடுகளாய்க் காற்றில் ஆடும். சிட்டுக் குருவிகள் மூங்கில் கிளைகளில் அமர்ந்து, சுழித்தோடும் நீருடன் பாடிக்கொண்டிருக்கும்.

★ இன்றோ, மரங்கள் வெட்டுண்டன; வானமோ பொய்த்தது; மண்ணோ மறுகிவிட்டது. குருவிகள் வாழ வழியின்றி அகதிகளாய் எங்கோ போய்விட்டன என்பதே கவிதைச் செய்தியாகும்.

MERCY PUBLICATIONS - CHENNAI

 www.Padasalai.Net 

## இலக்கணக்குறிப்பு

பார்க்க – வினையெச்சம்

மழைக்காலம் – இருபெயரொட்டுப் பண்புத்தொகை

நெடுமரம் – பண்புத்தொகை

## உறுப்பிலக்கணம்

1. பார்க்க – பார் + க் + க் + அ
   பார் – பகுதி, க் – சந்தி, க் – எதிர்கால இடைநிலை, அ – வினையெச்ச விகுதி.
2. சுரந்த – சுர + த் (ந்) + த் + அ
   சுர – பகுதி, த் – சந்தி 'ந்' ஆனது விகாரம், த் – இறந்தகால இடைநிலை, அ – பெயரெச்ச விகுதி.
3. பொய்த்தது – பொய் + த் + த் + அ + து
   பொய் – பகுதி, த் – சந்தி, த் – இறந்தகால இடைநிலை, அ – சாரியை, து – ஒன்றன்பால் வினைமுற்று விகுதி.
4. மறுகியது – மறுகு + இ (ன்) + ய் + து
   மறுகு – பகுதி, இன் – இறந்தகால இடைநிலை, 'ன' கரம் புணர்ந்து கெட்டது, ய் – உடம்படுமெய் சந்தி, து – ஒன்றன்பால் வினைமுற்று விகுதி.

## புணர்ச்சி விதிகள்

1. மழைக்காலம் – மழை + காலம்
   "இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும்" (மழைக்காலம்)
2. கரையெல்லாம் – கரை + எல்லாம்
   "இ ஈ ஐ வழி யவ்வும்" (கரை + ய் + எல்லாம்)
   "உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே" (கரையெல்லாம்)
3. நெடுமரம் – நெடுமை + மரம்
   "ஈறுபோதல்" (நெடுமரம்)
4. வழியெல்லாம் – வழி + எல்லாம்
   "இ ஈ ஐ வழி யவ்வும்" (வழி + ய் + எல்லாம்)
   "உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே" (வழியெல்லாம்)
5. காலமது – காலம் + அது
   "உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே" (காலமது)

## பலவுள் தெரிக

1. பொருத்தமான இலக்கிய வடிவம் எது?
   அ) ஏதிலிக் குருவிகள் – மரபுக் கவிதை ஆ) திருமலை முருகன் பள்ளு – சிறுகதை
   இ) யானை டாக்டர் – குறும் புதினம் ஈ) ஐங்குறுநூறு – புதுக்கவிதை
   விடை : இ) யானை டாக்டர் – குறும் புதினம்

## கூடுதல் வினா

2. கீழுள்ளவற்றைப் பொருத்தி விடை காண்க.
   அ) ஏதிலிக்குருவிகள் – 1. பேயனார்
   ஆ) திருமலை முருகன் பள்ளு – 2. ஜெயமோகன்
   இ) ஐங்குறு நூறு – 3. அழகிய பெரியவன்
   ஈ) யானை டாக்டர் – 4. பெரியவன் கவிராயர்
   i) 1 3 4 2 ii) 1 2 4 3 iii) 3 4 1 2 iv) 3 2 1 4
   விடை : iii) 3 4 1 2

MERCY PUBLICATIONS - CHENNAI

3. அழகிய பெரியவன் இயற்பெயர் ______.

அ) ராசேந்திரன் ஆ) ராசகோபாலன் இ) அரவிந்தன் ஈ) வில்வரத்தினம்

**விடை :** இ) அரவிந்தன்

4. அழகிய பெரியவன் ஊர் ______.

அ) யாழ்ப்பாணம் கொக்குவில் ஆ) ஈரோடு மாவட்ட மேட்டுப் புதூர்

இ) வேலூர் மாவட்டம் பேரணாம்பட்டு ஈ) சென்னிகுளம் கழுகுமலை

**விடை :** இ) வேலூர் மாவட்டம் பேரணாம்பட்டு

5. அழகிய பெரியவனின் தமிழக அரசு விருது பெற்ற நூல் ______.

அ) குறடு ஆ) நெறிக்கட்டு இ) வடக்குவீதி ஈ) தகப்பன் கொடி

**விடை :** ஈ) தகப்பன் கொடி

## 2. காவியம்

### (பிரமிள்)

### நம்மை அளப்போம்

### குறுவினா

**1. காற்றின் தீராத பக்கங்களில், எது எதனை எழுதிச் சென்றது?**

★ சிறகிலிருந்து பிரிந்த இறகு ஒன்று, ஒரு பறவையின் வாழ்வை எழுதிச் சென்றது.

### சிறுவினாக்கள் – கூடுதல் வினாக்கள்

**1. இறகு எழுதியது காவியமானதைப் பிரமிள் பார்வையில் விளக்குக.**

★ நிலத்துக்கும் வானுக்கும் இடையில், காற்று இடைவிடாது தழுவி, மண்ணில் விழாமல் காக்கிறது. அதனால், அந்த இறகு, பறவையின் வாழ்வை எழுதுவதுபோல் உள்ளது.

★ காவியங்களுள் பொதுவான பாடுபொருள் வாழ்வுதானே! அதனால், பிரமிள் பார்வையில் சிறகின் இடையறாத இருப்பு நிரந்தர வாழ்வாகிறது.

**2. பிரமிள் குறித்து நீ அறிவன யாவை?**

★ இலங்கையில் பிறந்த சிவராமலிங்கம், 'பிரமிள்' என்னும் பெயரில் எழுதினார். பானுசந்திரன், அரூப்சிவராம், தருமுசிவராம் எனப் பல புனைபெயர்களில் எழுதிவந்தார்.

★ புதுக்கவிதை, விமர்சனம், சிறுகதை, நாடகம், மொழியாக்கம் என விரிந்த தளங்களில் இயங்கினார். ஓவியம், சிற்பம் ஆகியவற்றிலும் ஈடுபாடு காட்டினார்.

★ இவர் கவிதைகள் அனைத்தும், 'பிரமிள் கவிதைகள்' என்னும் பெயரில் தொகுத்து வெளியிடப் பட்டுள்ளது. 'லங்காபுரி ராஜா' உள்ளிட்ட சிறுகதைத் தொகுப்புகளும், 'நக்ஷத்திரவாசி' என்னும் நாடகமும், 'வெயிலும் நிழலும்' உள்ளிட்ட கட்டுரைத் தொகுப்புகளும் வெளிவந்துள்ளன.

### பலவுள் தெரிக (கூடுதல்)

1. ஒரு பறவையின் வாழ்வை எழுதிச் சென்றது ______.

அ) சிறகு ஆ) இறகு இ) காற்று ஈ) ஒரு பறவை

1. அ சரி 2. ஆ சரி 3. இ சரி 4. ஈ தவறு

**விடை :** 2. ஆ சரி

2. 'பிரமிள்' என்னும் பெயரில் எழுதியவர் ______.

அ) இராசேந்திரன் ஆ) அரவிந்தன் இ) சிவராமலிங்கம் ஈ) விருத்தாசலம்

**விடை :** இ) சிவராமலிங்கம்

MERCY PUBLICATIONS - CHENNAI

www.Padasalai.Net

# 3. திருமலை முருகன் பள்ளு

(பெரியவன் கவிராயர்)

## நம்மை அளப்போம்

### குறுவினா

1. **வளருங் காவில் முகில்தொகை ஏறும் – பொன் மாடம் எங்கும் அகிற்புகை நாறும் – அடிக்கோடிட்ட தொடர் குறிப்பிடுவது என்ன?**

★ 'சோலையில் மேகக்கூட்டம் ஏறும்' என்பது பொருள். அதாவது, தென்கரை நாட்டின் மரங்கள் உயர்ந்து வளர்ந்த சோலைகளில், மேகக்கூட்டம் தங்கிச் செல்லும் என்பதாகும்.

★ மரங்கள் நிறைந்த இடத்தில் மழை பொழியும் என்னும் குறிப்பை, இதன்மூலம் அறியமுடிகிறது.

### கூடுதல் வினா

2. **'பள்ளு' – குறிப்பு வரைக.**

★ 'உழத்திப் பாட்டு' என அழைக்கப்படும் பள்ளு, தொண்ணூற்றாறு வகைச் சிற்றிலக்கியங்களுள் ஒன்று.

★ கலிப்பா, கலித்துறை, சிந்து ஆகிய பா வகைகளால் பாடப்படுகிறது.

★ உழவர், உழத்தியர் வாழ்வில் நிகழும் நிகழ்ச்சிகளை, எளியநடையில் நயம்படக் கூறுகிறது.

3. **'புலன்' எனத் தொல்காப்பியம் எதனைக் கூறுகிறது?**

★ பாமர மக்களுக்கு முதன்மை அளித்து உருவாக்கப்பட்ட இலக்கிய வகைகளான குறவஞ்சி, பள்ளு முதலானவற்றைத் தொல்காப்பியம் 'புலன்' எனக் குறிப்பிடுகிறது.

4. **இளைய பள்ளி 'காக்கும்' எனக் குறிப்பிட்டுள்ளவை எவை?**

★ தென்கரை நாட்டை முருகன் கைவேலும், ஊர்தியான மயிலும் காக்கும்.

★ நாட்டை மன்னனின் செங்கோல் ஆட்சி பாதுகாக்கும் என, இளைய பள்ளி குறிப்பிட்டுள்ளாள்.

### சிறுவினா

1. **"சலச வாவியில் செங்கயல் பாயும்" – இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.**

**இடம்** : திருமலை முருகன் பள்ளுவில், வடகரை நாட்டின் வளத்தைக் கூறும்போது, 'சலச வாவியில் செங்கயல் பாயும்' என்று, பெரியவன் கவிராயரால் கூறப்படுகிறது.

**பொருள்** : நீர் நிறைந்த தாமரைத் தடாகத்தில், செம்மையான கயல்மீன்கள் துள்ளிப்பாய்ந்து, விளையாடும் என்பது பொருளாகும்.

**விளக்கம்** : வடகரை நாடு நீர் நில வளம் மிக்கது. அங்குத் தாமரை நிறைந்த குளத்தில், கயல் மீன்கள் அச்சமின்றித் துள்ளிப் பாய்ந்து விளையாடும்; மீனைப் பிடித்துண்ண வந்து சங்கிலியில் அமர்ந்துள்ள உள்ளான் பறவை, வண்டுகளின் இசையில் மயங்கி, வாலை ஆட்டியபடி அமர்ந்திருக்கும் என்று கூறப்பட்டுள்ளது. இதில் வடகரை நாட்டின் நீர், நிலவளம் தெளிவாக விளக்கப்பட்டுள்ளது.

### கூடுதல் வினா

2. **'திருமலை முருகன் பள்ளு' – குறிப்பு எழுதுக.**

★ பண்புளிப்பட்டணம், திருநெல்வேலி மாவட்டம் குற்றாலத்திற்கு அருகிலுள்ள ஊர். இதனைப் 'பண்பை' எனவும், 'பண்பொழில்' எனவும் அழைப்பர். இவ்வூரிலுள்ள சிறுகுன்று திருமலைக் குன்று.

★ இத்திருமலைக் குன்றில் எழுந்தருளியுள்ள முருகக்கடவுளைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு, பெரியவன் கவிராயர் என்பவரால் பாடப்பட்டது, 'திருமலை முருகன் பள்ளு'.

★ கலித்துறை, கலிப்பா, சிந்து முதலான பாவகைகளால் பாடப்பட்ட இந்நூல், 'பள்ளிசை' எனவும், 'திருமலை அதிபர் பள்ளு' எனவும் வழங்கப்படுகிறது.

MERCY PUBLICATIONS - CHENNAI

## நெடுவினா

**1. 'திருமலை முருகன் பள்ளு' கூறும் வடகரை, தென்கரை நாட்டுப் பாடல்கள்வழி இயற்கை வளங்களை விவரிக்க.**

**திருமலை முருகன் பள்ளு கூறும் வடகரை நாட்டுவளம் :**

வடகரை நாட்டில் மலரில் மொய்க்கும் வண்டுகள், 'இந்தளம்' என்ற பண்ணை ரீங்காரமிட்டுப் பாடும். வண்டின் இசைகேட்டு வாய்க்காலில் மதகுகளிடையே கட்டப்பட்ட சங்கிலியில், மீனைப் பிடித்து உண்பதற்காக வந்த உள்ளான் பறவை, வாலை ஆட்டிக்கொண்டு அமர்ந்திருக்கும்.

தாமரைத் தடாகத்தில் மீன்கள் துள்ளிப் பாய்ந்து விளையாடும், முத்துகளை ஈன்ற வெண்மையான சங்குகள் பரவிக் காணப்படும். மின்னலையொத்த பெண்கள், பெய் என்றால் மழை பெய்யும். உள்ளங்கை ஏந்தி இரந்து உண்ணும் இயல்புடைய முனிவர்கள் கூறும் வார்த்தைகள் மெய்யாகும். இத்தன்மை கொண்ட திருமலையில், புலவர்கள் போற்றுகின்ற திருமலைச் சேவகன் வீற்றிருக்கின்றார்.

**திருமலை முருகன் பள்ளு கூறும் தென்கரை நாட்டுவளம் :**

தென்கரை நாட்டின் நீண்டு வளர்ந்த சோலையில், மேகக் கூட்டங்கள் தங்கிச் செல்லும். இந்நாட்டில் உள்ள பொன்னாலான மாடமாளிகைகளில், அகில்புகையின் நறுமணம் பரவிக்கொண்டே இருக்கும். இம்மாளிகைகளை மயில்களும் கார்கால மேகங்களும் சூழ்ந்து காக்கும். செங்கோலைக் கொண்ட மன்னர், தென்கரை நாட்டை நீதி தவறாமல் காவல் காப்பர். இளைய பெண்கள், பொன்னாலான அரங்கில் நடித்து விளையாடி மகிழ்ந்திருப்பர்.

இங்குள்ள குளங்களின் அலைகள், முத்துகளை ஏந்தி வரும்; அவ்வலைகள், கரைகளில் மோதும்பொழுது முத்துகள் சிதறி வெடிக்கும். இத்தன்மை கொண்ட குற்றாலத்தில் வண்டுகள் மொய்க்கும் கொன்றைமலரைச் சூடிய தென்னாடுடைய சிவபெருமானாகிய குற்றாலநாதர் வீற்றிருக்கின்றார்.

## இலக்கணக்குறிப்பு

**செங்கயல், வெண்சங்கு** – பண்புத்தொகைகள்.

**அகில்புகை, முகில்தொகை** – ஆறாம் வேற்றுமைத்தொகைகள்.

**கொன்றை சூடு** – இரண்டாம் வேற்றுமைத்தொகை.

**இந்துளம் பாடும், வந்துளம் ஆடும், கயல் பாயும், சங்கயல் மேயும், பெய்யெனப் பெய்யும், செய்யெனச் செய்யும், முகில்தொகை ஏறும், புகை நாறும், கொண்டலும் காக்கும், மண்டலங் காக்கும், அரங்கில் நடிக்கும், தரங்கம் வெடிக்கும்** – 'செய்யும்' என்னும் வாய்ப்பாட்டு வினைமுற்றுகள்.

**போற்றும் திருமலை, வளருங்காவில், சூடும் ஐயன்** – பெயரெச்சங்கள்.

மஞ்சை**யும்** கொண்ட**லும்** – எண்ணும்மை.

**ஏற்பவர்** – வினையாலணையும் பெயர்.

**மடை இடங்கணி, வாவித்தரங்கம்** – ஏழாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகைகள்.

**ஈன்ற சங்கு** – பெயரெச்சம்.

**ஏந்தி வெடிக்கும்** – வினையெச்சம்.

## உறுப்பிலக்கணம்

1. **ஈன்ற – ஈன் + ற் + அ**
   **ஈன்** – பகுதி, **ற்** – இறந்தகால இடைநிலை, **அ** – பெயரெச்ச விகுதி.
2. **அலர்ந்து – அலர் + த் (ந்) + த் + உ**
   **அலர்** – பகுதி, **த்** – சந்தி, 'ந்' ஆனது விகாரம், **த்** – இறந்தகால இடைநிலை,
   **உ** – வினையெச்ச விகுதி.
3. **ஆடுகம் – ஆடு + க் + அம்**
   **ஆடு** – பகுதி, **க்** – சந்தி, **அம்** – தன்மைப் பன்மை வினைமுற்று விகுதி.

MERCY PUBLICATIONS - CHENNAI

www.Padasalai.Net

4. **விரைந்து – விரை + த் (ந்) + த் + உ**

விரை – பகுதி, த் – சந்தி, 'ந்' ஆனது விகாரம், த் – இறந்தகால இடைநிலை, உ – வினையெச்ச விகுதி.

5. **ஆடும் – ஆடு + உம்**

ஆடு – பகுதி, உம் – பெயரெச்ச விகுதி.

6. **பெய்யும் – பெய் + ய் + உம்**

பெய் – பகுதி, ய் – சந்தி, உம் – பெயரெச்ச விகுதி.

7. **போற்றும் – போற்று + உம்**

போற்று – பகுதி, உம் – பெயரெச்ச விகுதி.

8. **நடிக்கும் – நடி + க் + க் + உம்**

நடி – பகுதி, க் – சந்தி, க் – எதிர்கால இடைநிலை, உம் – பெயரெச்ச விகுதி.

9. **காக்கும் – கா + க் + க் + உம்**

கா – பகுதி, க் – சந்தி, க் – எதிர்கால இடைநிலை, உம் – பெயரெச்ச விகுதி.

10. **வெடிக்கும் – வெடி + க் + க் + உம்**

வெடி – பகுதி, க் – சந்தி, க் – எதிர்கால இடைநிலை, உம் – பெயரெச்ச விகுதி.

11. **ஏந்தி – ஏந்து + இ**

ஏந்து – பகுதி, இ – வினையெச்ச விகுதி.

## புணர்ச்சி விதி

1. **செங்கயல் – செம்மை + கயல்**

"ஈறுபோதல்" (செம் + கயல்), "முன்நின்ற மெய் திரிதல்" – (செங்கயல்)

2. **அளியுலாம் – அளி + உலாம்**

"இஈ ஐவழி யவ்வும்" (அளி + ய் + உலாம்)

"உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே" – (அளியுலாம்)

3. **வெண்சங்கு – வெண்மை + சங்கு**

"ஈறுபோதல்" (வெண்சங்கு)

4. **திருமலைச்சேவகன் – திருமலை + சேவகன்**

"இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும்" (திருமலைச்சேவகன்)

5. **மண்டலங்காக்கும் – மண்டலம் + காக்கும்**

"மவ்வீறு ஒற்று வன்மைக்கு இனமாத் திரியும்" (மண்டலங்காக்கும்)

## பலவுள் தெரிக (கூடுதல் வினாக்கள்)

1. 'தரளம்' என்ற சொல்லின் பொருள் ______.

அ) முத்து ஆ) பவளம் இ) மாணிக்கம் ஈ) வைடூரியம்

**விடை :** அ) முத்து

2. 'பள்ளு' என்ற இலக்கிய வடிவத்தின் வேறுபெயர் ______.

அ) கவிப் பாட்டு ஆ) இயற்கைப் பாட்டு
இ) உழத்திப் பாட்டு ஈ) வயல் பாட்டு

**விடை :** இ) உழத்திப் பாட்டு

3. 'திருமலை முருகன் பள்ளு' நூலை இயற்றியவர் ______.

அ) அழகிய பெரியவன் ஆ) பெரியவன் கவிராயர்
இ) வில்வரத்தினம் ஈ) திரிகூடராசப்பர்

**விடை :** அ) அழகிய பெரியவன்

MERCY PUBLICATIONS - CHENNAI

4. திருமலை முருகன் பள்ளுக்கு வழங்கும் வேறு பெயர்கள் ______.

அ) பள்ளிசை குறவஞ்சி ஆ) திருமலை அதிபர் பள்ளு குறத்திப்பாட்டு

இ) திருமலை முருகன் பள்ளு, பள்ளிசை ஈ) முக்கூடற்பள்ளு, பள்ளிசை

**விடை :** இ) திருமலை முருகன் பள்ளு, பள்ளிசை

5. 'வட ஆரியநாடு' என வழங்கப் பெறுவது ______.

அ) குற்றாலம் ஆ) பண்பை இ) பண்புளிப்பட்டணம் ஈ) திருமலை

**விடை :** ஈ) திருமலை

6. 'தென் ஆரியநாடு' என வழங்கப்பட்டது ______.

அ) திருமலை ஆ) பண்பொழில் இ) பேரணாம்பட்டு ஈ) குற்றாலம்

**விடை :** ஈ) குற்றாலம்

7. 'திருமலை முருகன் பள்ளு'வில் 'திருமலை' எனக் குறிப்பிடப்படுவது ______.

அ) குற்றாலம் ஆ) தென் ஆரியநாடு

இ) வட ஆரியநாடு ஈ) திருநெல்வேலி

**விடை :** இ) வட ஆரியநாடு

8. பொருத்துக.

i) இந்துளம் – 1. மயில்

ii) இடங்கணி – 2. ஒருவகைப் பண்

iii) தரளம் – 3. சங்கிலி

iv) மஞ்ஞை – 4. முத்து

அ) 2, 3, 4, 1 ஆ) 3, 4, 2, 1 இ) 4, 3, 2, 1 ஈ) 2, 1, 4, 3

**விடை :** அ) 2, 3, 4, 1

9. வளருங்காவில் முகில்தொகை ஏறும் – பொன்
மாடம் எங்கும் அகிற்புகை நாறும்
குளிரும் மஞ்ஞையும் கொண்டலும் காக்கும்
கோல்முறை மன்னர் மண்டலங் காக்கும் – இயைபுத் தொடையைத் தெரிவு செய்க.

அ) வளரும் காவில் – முகில்தொகை

ஆ) மாடம் எங்கும் – அகில்புகை

இ) ஏறும் நாறும் – காக்கும் காக்கும்

ஈ) குளிரும் மஞ்ஞையும் – கொண்டலும் மண்டலம்

**விடை :** இ) ஏறும் நாறும் – காக்கும் காக்கும்

10. 'மஞ்ஞை' என்பது ______ குறிக்கும்.

அ) வண்டை ஆ) சேவலை இ) மயிலை ஈ) உள்ளான் பறவையை

**விடை :** இ) மயிலை

11. 'இந்தளம்' என்பது ______.

அ) ஒருவகைப் பண் ஆ) வண்டு இ) மயில் ஈ) உள்ளான் பறவை

**விடை :** அ) ஒருவகைப் பண்

12. 'அளி' என்பது ______ குறிக்கும்.

அ) முத்தை ஆ) வண்டை இ) சோலையை ஈ) உள்ளானை

**விடை :** ஆ) வண்டை

MERCY PUBLICATIONS - CHENNAI

www.Padasalai.Net

13. பொருத்துக.

| பொருள் | | சொல் |
|---|---|---|
| 1) மயில் | – | அ. அளி |
| 2) முத்து | – | ஆ. தரங்கம் |
| 3) சோலை | – | இ. மஞ்ஞை |
| 4) வண்டு | – | ஈ. கா |
| | – | உ. தரளம் |

விடை : 1–இ, 2–உ, 3–ஈ, 4–அ

14. பொருத்துக.

| சொல் | | பொருள் |
|---|---|---|
| 1. இடங்கணி | – | அ. மேகக் கூட்டம் |
| 2. சலச வாவி | – | ஆ. கார்கால மேகம் |
| 3. முகில் தொகை | – | இ. உள்ளான் பறவை |
| 4. கொண்டல் | – | ஈ. சங்கிலி |
| | – | உ. தாமரைத் தடாகம் |

விடை : 1–ஈ, 2–உ, 3–அ, 4–ஆ

15. பொருத்துக.

| நூல் | | ஆசிரியர் |
|---|---|---|
| 1. ஐங்குறுநூறு | – | அ. கோ. நம்மாழ்வார் |
| 2. ஏதிலிக்குருவிகள் | – | ஆ. மசானபு ஃபுகோகா |
| 3. திருமலை முருகன் பள்ளு | – | இ. அழகிய பெரியவன் |
| 4. இயற்கை வேளாண்மை | – | ஈ. பெரியவன் கவிராயர் |
| | – | உ. பேயனார் |

விடை : 1–உ, 2–இ, 3–ஈ, 4–அ

## 4. ஐங்குறுநூறு

### குறுவினாக்கள்

1. **அலர்ந்து – பகுபத உறுப்பிலக்கணம் தருக.**

அலர்ந்து – அலர் + த் (ந்) + த் + உ

அலர் – பகுதி, த் – சந்தி, 'ந்' ஆனது விகாரம், த் – இறந்தகால இடைநிலை,
உ – வினையெச்ச விகுதி.

### கூடுதல் வினாக்கள்

2. **'முல்லைத்திணை'க்குரிய சிறுபொழுது, பெரும்பொழுதுகள் யாவை?**

★ முல்லைத்திணைக்குரிய சிறுபொழுது – மாலை; பெரும்பொழுது – கார்காலம்.

3. **முல்லைநில மழைக்கால மலர்களாக ஐங்குறுநூறு கூறுவன யாவை?**

★ காயா, கொன்றை, நெய்தல், முல்லை, தவளம், பிடவம் ஆகியன, முல்லைநில மழைக்கால மலர்களாக ஐங்குறுநூறு குறிப்பிட்டுள்ளது.

4. **ஐங்குறுநூற்றின் பாடல்களைப் பாடிய புலவர்கள் யாவர்?**

★ ஐங்குறுநூற்றில், குறிஞ்சித் திணையைக் கபிலரும், முல்லைத் திணையைப் பேயனாரும், மருதத் திணையை ஓரம்போகியாரும், நெய்தல் திணையை அம்மூவனாரும், பாலைத் திணையை ஓதலாந்தையாரும் பாடியுள்ளனர்.

MERCY PUBLICATIONS - CHENNAI

## சிறுவினாக்கள்

**1. ஐங்குறுநூற்றுப் பாடல் சுட்டும் திணை, முதற்பொருள், கருப்பொருள்களை அட்டவணைப்படுத்துக.**

★ ஐங்குறுநூற்றுப் பாடல் சுட்டும் திணை – முல்லை.

★ முல்லைத் திணைக்குரிய உரிப்பொருள் : இருத்தலும் இருத்தல் நிமித்தமும்.

★ முல்லைத் திணைக்குரிய முதற்பொருள் : நிலம் – காடும் காடு சார்ந்த நிலமும்; பெரும்பொழுது – கார்காலம்; சிறுபொழுது – மாலை.

**முல்லைத் திணைக்குரிய கருப்பொருள்கள்:**

| | | | |
|---|---|---|---|
| தெய்வம் | – திருமால் | மக்கள் | – தோன்றல், ஆயர், ஆய்ச்சியர் |
| உணவு | – வரகு, சாமை | விலங்கு | – முயல், மான், புலி |
| பூ | – முல்லை, தோன்றி | மரம் | – கொன்றை, காயா |
| பறவை | – காட்டுக்கோழி, மயில் | ஊர் | – பாடி, சேரி |
| நீர் | – காட்டாறு | பறை | – ஏறுகோட்பறை |
| யாழ் | – முல்லை | பண் | – முல்லை |
| தொழில் | – ஏறுதழுவல், நிரை மேய்த்தல் | | |

## கூடுதல் வினா

**2. ஐங்குறுநூற்றுப் பாடலில் வரும் முல்லைநில இயற்கை அழகை விவரிக்க.**

★ ஐங்குறுநூற்றுப் பாடலில் இடம்பெறும் காடும் காடுசார்ந்த நிலமும் 'முல்லை நிலம்'. கார்காலம் வந்து விட்டமையால் காயா, கொன்றை, நெய்தல், முல்லை ஆகியவற்றின் மொட்டுகள் இதழ் விரிக்கச் செம்முல்லை, பிடவம் என்னும் தாவர வகைகள் பூத்துக் குலுங்கிக் காட்சியளிக்கின்றன.

★ அந்த முல்லை நிலத்தின் இயற்கை அழகைக் கண்ட தலைவன், தான் திரும்புவதாகக் கூறிப் பிரிந்து சென்ற கார்காலம் வருவதற்குமுன் தான் வந்து விட்டதைத் தலைவிக்கு உணர்த்த எண்ணி, அவற்றைப் பார்த்து மகிழ்ந்து, விரைந்து ஆட வருமாறு தலைவியை அழைக்கிறான்.

★ இல்லறம் சிறக்கப் பொருள் தேடித் தலைவன் வேற்றூர் செல்வதைச் சங்கப் பாடல்கள் பேசும். தலைவன் திரும்பி வருவதற்குரிய காலத்தை, மக்கள் வாழ்வோடு இயைந்த மலர்கள் மலர்ந்து தலைவிக்கு அறிவிப்பதனை, ஐங்குறுநூற்றுப் பாடல் உணர்த்துகிறது.

**2. ஐங்குறுநூறு – நூற்குறிப்புத் தருக.**

★ ஐந்து + குறுமை + நூறு – ஐங்குறுநூறு.

★ இது, மூன்றடிச் சிற்றெல்லையும், ஆறடிப் பேரெல்லையும் கொண்ட அகவற்பாக்களால் ஆன நூல்.

★ திணை ஒன்றிற்கு நூறு பாடல்களாக, ஐந்து திணைகளுக்கு ஐந்நூறு பாடல்கள் கொண்டது.

★ ஐங்குறுநூற்றின் கடவுள் வாழ்த்துப் பாடலைப் பாடியவர் பாரதம் பாடிய பெருந்தேவனார்.

★ இந்நூலைத் தொகுத்தவர் புலத்துறை முற்றிய கூடலூர்க்கிழார்.

★ தொகுப்பித்தவர் யானைக்கட்சேய் மாந்தரஞ் சேரலிரும்பொறை.

★ ஐந்திணைகளில் ஒன்றான முல்லைத்திணையைப் பற்றிய பாடல் நமக்குப் பாடமாக அமைந்துள்ளது. இப்பாடலைப் பாடியவர் பேயனார். இவர், சங்ககாலப் புலவர்களில் ஒருவர். இவர் இயற்றிய 105 பாடல்கள் கிடைத்துள்ளன.

**ஐந்து திணைகளைப் பாடிய புலவர்கள் :**

| | |
|---|---|
| குறிஞ்சித்திணை | – கபிலர் |
| முல்லைத்திணை | – பேயனார் |
| மருதத்திணை | – ஓரம்போகியார் |
| நெய்தல்திணை | – அம்மூவனார் |
| பாலைத்திணை | – ஓதலாந்தையார் |

MERCURY PUBLICATIONS - CHENNAI

www.Padasalai.Net

## இலக்கணம் அறிவோம்

**கொண்டன்றால்** (ஆல்) – அசைநிலை

**பேரமர்க் கண்ணி** – அண்மை விளி (அழைத்தல்)

**ஆடுகம் விரைந்தே** – தன்மைப் பன்மை வினைமுற்று

**காயா கொன்றை நெய்தல் முல்லை** – உம்மைத்தொகை

**போதவிழ் தளவொடு** – (அவிழ் தளவு) – வினைத்தொகை

**அலர்ந்து கவினி, விரைந்து** – வினையெச்சங்கள்

### உறுப்பிலக்கணம்

1. **அலர்ந்து – அலர் + த் (ந்) + த் + உ**
   **அலர்** –பகுதி, **த்**–சந்தி, 'ந்' ஆனது விகாரம், **த்**–இறந்தகால இடைநிலை,
   **உ** –வினையெச்ச விகுதி.
2. **ஆடுகம் – ஆடு + க் + அம்**
   **ஆடு** – பகுதி, **க்** – சந்தி, **அம்** – தன்மைப் பன்மை வினைமுற்று விகுதி.
3. **விரைந்து – விரை + த் (ந்) + த் + உ**
   **விரை** –பகுதி, **த்**–சந்தி, 'ந்' ஆனது விகாரம், **த்** –இறந்தகால இடைநிலை,
   **உ** – வினையெச்ச விகுதி.

### புணர்ச்சி விதிகள்

1. **போதவிழ் – போது + அவிழ்**
   "உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்" (போத் + அவிழ்)
   "உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே" (போதவிழ்)
2. **பிடவலர்ந்து – பிடவு + அலர்ந்து**
   "முற்றும் அற்று ஒரோவழி" (பிடவ் + அலர்ந்து)
   "உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே" (பிடவலர்ந்து)
3. **பூவணி – பூ + அணி**
   "ஏனை உயிர்வரின் வவ்வும்" (பூ + வ் + அணி)
   "உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே" (பூவணி)

### பலவுள் தெரிக (கூடுதல் வினாக்கள்)

1. பொருந்தாத ஒன்றைத் தேர்ந்தெடுக்க.
   அ) காயா ஆ) குறிஞ்சி இ) பிடவம் ஈ) கொன்றை
   **விடை :** ஆ) குறிஞ்சி
2. 'முல்லைத்திணை' பாடுவதில் வல்லவர் ______.
   அ) ஓரம்போகியார் ஆ) பேயனார் இ) அம்மூவனார் ஈ) கபிலர்
   **விடை :** ஆ) பேயனார்
3. ஐங்குறுநூறு – பிரித்தெழுத, ______ என வரும்.
   அ) ஐங் + குறுநூறு ஆ) ஐந்து + குறுநூறு
   இ) ஐந்து + குறுமை + நூறு ஈ) ஐங்குறுமை + நூறு
   **விடை :** இ) ஐந்து + குறுமை + நூறு
4. ஐங்குறுநூறு சிற்றெல்லை ______.
   அ) மூன்றடி ஆ) ஐந்தடி இ) நான்கடி ஈ) பதினோரடி
   **விடை :** அ) மூன்றடி
5. ஐங்குறுநூறு பேரெல்லை ______.
   அ) நான்கடி ஆ) ஆறடி இ) பன்னிரண்டடி ஈ) முப்பதடி
   **விடை :** ஆ) ஆறடி

MERCURY PUBLICATIONS - CHENNAI

6. ஐங்குறுநூறைத் தொகுத்தவர் ______.
அ) பாரதம் பாடிய பெருந்தேவனார் ஆ) பேயனார்
இ) புலத்துறை முற்றிய கூடலூர்க்கிழார் ஈ) பூரிக்கோ
விடை : இ) புலத்துறை முற்றிய கூடலூர்க்கிழார்

7. ஐங்குறுநூறைத் தொகுப்பித்தவர் ______.
அ) உறையூர் முதுகண்ணன் ஆ) மாந்தரஞ்சேரல் இரும்பொறை
இ) பாண்டியன் பெருவழுதி ஈ) கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி
விடை : ஆ) மாந்தரஞ்சேரல் இரும்பொறை

8. முல்லைநிலப் பூக்களில் பொருந்தாதவற்றைத் தெரிவு செய்க.
அ) காயா கொன்றை ஆ) நெய்தல் முல்லை
இ) குறிஞ்சி, வேங்கை ஈ) செம்முல்லை பிடவம்
விடை : இ) குறிஞ்சி, வேங்கை

9. தவறான இணையைத் தெரிவு செய்க.

| திணை | | பாடிய புலவர் |
|---|---|---|
| குறிஞ்சி | – | கபிலர் |
| முல்லை | – | பேயனார் |
| மருதம் | – | ஓதலாந்தையார் |
| நெய்தல் | – | அம்மூவனார் |

விடை : மருதம் – ஓதலாந்தையார்

## விரிவானம்

## யானை டாக்டர்

### குறும் புதினம்

### (ஜெயமோகன்)

### நெடுவினாக்கள்

**1. ‘யானை டாக்டர்’ கதை வாயிலாக இயற்கை, உயிரினப் பாதுகாப்பு ஆகியவை குறித்து நீவிர் அறிந்தவற்றைத் தொகுத்து எழுதுக.**

**யானைகளின் பண்பு :**

யானைகள், தம் இனத்தோடு சேர்ந்து கூட்டமாக வாழும். இவை, அதிக நினைவாற்றல் கொண்டவை. ஆப்பிரிக்கப் புதர்வெளி யானைகள், ஆப்பிரிக்கக் காட்டு யானைகள், ஆசிய யானைகள் என்னும் மூன்று சிற்றின யானைகளே, உலகில் காணப்படுகின்றன. இவை, ஏறத்தாழ எழுபதாண்டுகள் உயிர் வாழும்.

**காட்டின் பயன்கள் :**

யானைகள், ஓர் அற்புதமான படைப்பு. என்றைக்கேனும் தமிழ்நாட்டில் யானை இல்லாமல் போனால் அதற்குப்பின் நம் பண்பாட்டுக்கே அர்த்தமில்லாமல் போகும் என்பது, யானை மருத்துவரின் துணிவு. நாட்டுவளம் செழிக்கக் காட்டு விலங்குகள் தேவை. காட்டுயிரிகளால் காடுகளில் பல அரியவகை மரம், செடி, கொடிகள் தழைத்து வளர்கின்றன. பலவகைகளில் நற்பயனளிக்கும் காடுகளை, மக்கள் பாதுகாக்க வேண்டும்.

**மனிதனின் விதைப்பால் விலங்குகள் அறுவடை செய்கின்றன :**

மனிதனின் கீழ்மையான செயல்களால் யானைகளின் மரணங்கள் நிகழ்கின்றன. சுற்றுலா என்னும் பெயரில் காட்டுக்குள் புகுவோர், படித்தவர்கள்கூடக் குடித்துவிட்டுக் குப்பிகளை எறிகின்றனர். நெகிழிப் பொருள்களை வீசிவிட்டு வருகின்றனர். மென்மையான பாதத்தை உடைய யானைகள், உடைந்த குப்பிகளின்மேல் கால்பதித்து, உடைந்த புட்டிகள் கால்களுக்குள் புதைவதால், கால் வீங்கிச் சீழ் பிடித்து இறக்கின்றன.

**யானை வைத்தியம் :**

பழகிய யானைகள், அசையாமலிருந்து வைத்தியம் செய்து கொள்ளும். கூடி வாழும் இயல்புடைய யானைகள், இன்பத்திலும் துன்பத்திலும் இணைந்தே இருக்கும் என்பதை, மருத்துவர் சுட்டுவதால் அறியமுடிகிறது. யானைகள், முகாமில் துதிக்கைகளை உயர்த்தி ஒலி எழுப்பி வரவேற்பது, அவை நன்றி மறவாதவை என்பதை உணர்த்தும். குட்டியானை ஒன்று 300 கிலோமீட்டர் கடந்து தேடி வந்து மருத்துவம் செய்து கொண்டதை அறியும்போது வியப்பாக இருக்கிறது. சிறுதகவல்களைக் கூட யானை மறப்பதில்லை. வன உயிர்களின் பண்பு, பாராட்டத்தக்க செயல்பாடுகளை உடையன. இப்படிப்பட்ட கதைகளை, வரலாறுகளைப் படித்த பின்னராவது மனிதன் மரங்களை வெட்டுவது, விலங்குகள் குடியிருப்புகளை ஆக்கிரமிப்பது, அவற்றின் வாழ்விடங்களை மாசுபடுத்துவது என்னும் செயல்களைக் கைவிட வேண்டும். நாம் நலமாக வாழ விரும்புவதுபோலப் பிற உயிரினங்களையும் மகிழ்ச்சியாக வாழவிட வேண்டும். உலகின் நல வாழ்வுக்கு விலங்குகளின் வாழ்வும் இன்றியமையாதது என்பதை, யானை டாக்டர் கதை வாயிலாக அறியமுடிகிறது.

## கூடுதல் வினா

**2. 'யானை டாக்டர்' குறும் புதினக் கதையைப் பொருளும் சுவையும் குன்றாமல் சுருக்கி வரைக.**

**யானை டாக்டர் :**

முதுமலையில் யானை ஒன்று கால் வீங்கி அலைவதாக அறிந்து, அதைத்தேடி யானை டாக்டரும் வனத்துறை அதிகாரி ஜெயமோகனும் வனக்காவலருடன் ஜீப்பில் சென்றனர். காட்டுக் குறும்பர் இனமக்கள் அந்த யானையின் இருப்பிடத்தை அறிந்து வைத்திருந்ததால், அவர்களையும் துணைக்கு ஏற்றிக்கொண்டு பயணம் செய்தனர். நெடுந்தூரம் சென்றதும் ஜீப்பை நிறுத்திவிட்டு மூங்கில் காட்டில் தரையின் வேர் முடிச்சுகளை மிதித்தேறி நடந்தனர். ஓரிடத்தில் யானைகள் கூட்டமாக மேய்ந்து கொண்டிருந்ததைக் கண்டனர்.

**யானை நோயுறுதல் :**

நோய் பாதிப்பு உள்ள யானையைக் கண்டறிந்து, அதற்கு மருத்துவம் செய்ய, மயக்கம் தரும் மருந்தை உள்ளடக்கிய தோட்டாவைத் துப்பாக்கிக் கருவியில் பொருத்திக்கொண்டு, டாக்டர்மட்டும் தனித்துச் செல்கிறார். காட்டிற்கு வந்த எவனோ ஒருவன், குடித்துவிட்டு வீசி எறிந்த மதுக்குப்பி, காலில் தைத்ததால் பாதம் வீங்கி நடக்கமுடியாமல் தத்தளித்துக் கொண்டிருந்த யானையை மருத்துவர் கண்டுபிடிக்கிறார்.

**யானைக் கூட்டத்தின் செயல் :**

நோயுற்ற யானையை நெருங்கியபோது மற்ற யானைகள் பிளிறி அச்சுறுத்தின; எச்சரிக்கை செய்தன. இது இயற்கை என்பதை அறிந்திருந்தாலும், டாக்டர் கே, நோயுற்ற யானையை நெருங்கிய போது, வழி நடத்திய யானை பின்வாங்க, மற்றவை, மூங்கில் காட்டுக்குள் மறைந்தன. குடும்பமாக நீண்ட காலம் வாழும் வலிமையான விலங்கான யானை, அதிக ஞாபகசக்தி உடையது.

**யானை டாக்டர் சேவை :**

மற்ற கால்களைவிடப் பெரிதாக வீங்கிய பின்னங்காலை இழுத்து இழுத்து நடந்த யானையின் அருகில் சென்றதும், டாக்டர் மயக்க மருந்து தோட்டாவால் சுட்டார். சிறிதுசிறிதாகக் கால் மடித்து, மயக்க நிலையில் யானை பக்கவாட்டில் அசைவின்றி வீழ்ந்தது. மருத்துவர் தம் சேவையைத் தொடங்கி, அதன் காலில் தைத்திருந்த கண்ணாடிக் குப்பியைப் பிடுங்கி எறிந்தார். சீழ் கட்டிய பகுதியைச் சிறுகோடரிக் கருவியால் வெட்டி, ஆழப்பதிந்த குப்பியை நீக்கினார். தலையணை அளவுப் பஞ்சில் மருந்தை நனைத்துக் காலில் திணித்தார்.

கால் தோலில் எவர்சில்வர் கிளிப்பை மாட்டி, துணியைச் சுற்றிக்கட்டி, சேற்றை வாரி அதன்மேல் பூசினார். வேலை முடிந்ததும் எல்லாரும் அங்கிருந்து நீங்கினர். மறைந்திருந்த யானைகள் வெளிவந்து அதைச் சூழ்ந்து நின்று பிளிறின. நன்றி சொல்வதுபோல் துதிக்கைகளை ஆட்டின. ஒரு குட்டிமட்டும் மஞ் சணத்தி மரத்தடியில் நின்று, மருத்துவரைப் பார்த்துக் கொண்டே இருந்தது.

**வியப்பான வரவேற்பு :**

யானைகளைச் சோதித்து அறிக்கை தயாரிக்க மருத்துவர் கே. மறுமுறை வந்தபோது, முகாமிலிருந்த 48 யானைகள் துதிக்கை உயர்த்தி அவரை வரவேற்றன. அவர் அவற்றுடன் கொஞ்சிக் குலவியபடி வேலைகளில் மூழ்கினார். வனத்துறை அதிகாரி, இரவு அவருடனேயே தங்கினார். அரைமணி நேரத்தில் சமைத்து முடித்து, அதிகாரியை விருந்தினராக உபசரித்தாராம் மருத்துவர். அசதியில் இரவு பத்துமணிக்கு அதிகாரி படுத்து உறங்கிவிட்டார்.

MERCY PUBLICATIONS - CHENNAI

**குட்டி யானைக்கு மருத்துவம் :**

அறையில் வெளிச்சம் இருந்ததால் கண் விழித்த வனத்துறை அதிகாரி, டாக்டர் கம்பளிச் சட்டை அணிந்து புறப்படுவதைக் கண்டார். “வெளியில் யானை வாசம் அடிக்குது” எனக் கூறி, இருளில் டார்ச்சுடன் டாக்டர் புறப்பட, அதிகாரியும் உடன் சென்றார். இரண்டுவயதான குட்டியானை தனியே வந்திருப்பதை அறிந்த மருத்துவர், வெளிச்சம் அடிக்காமல் இருளிலேயே நடந்தார். யானைக்குட்டி துதிக்கை தூக்கி மோப்பம் பிடித்தபோது, மருத்துவர் குரல் கேட்டு அருகில் நெருங்கி வந்து, ஜெர்ஸி பசு கத்தும் ஒலியில் பிளிறியது. குட்டியானையின் செயல்கள் மருத்துவரை வரவேற்பதுபோல் இருந்ததாம்.

**தேடி வந்தது குட்டியானை :**

டாக்டர் சொன்னபடி வனத்துறை அதிகாரி மருத்துவப் பெட்டியை எடுத்து வந்தார். குட்டியின் வாயில் ஊசிபோடவும் அது தளர்ந்து சாய்ந்தது. அதன் கால் நுனியில் மதுக்குப்பி குத்தி, வெளியில் நீட்டிக் கொண்டிருந்தது. அதைப் பிடுங்கியதும் டாக்டரின் கை ரத்தத்தால் நனைந்தது. கையால் தடவிக் கண்ணாடிப் பிசிர் எதுவும் மீதம் ஒட்டிக்கொண்டு இல்லாததை மருத்துவர் உணர்ந்தபின், பஞ்சில் மருந்தை நனைத்து உள்ளே செலுத்திக் கட்டினார்.

“ஒருமணி நேரத்தில் எழுந்து காலையில் முதுமலைக்குப் போய்விடும்” என்று, மருத்துவர் கூறியதைக் கேட்டு, வனத்துறை அதிகாரி வியந்தார். அந்தக் குட்டி யானை தனக்கும் மருத்துவம் செய்துகொள்ள, முந்நூறு கிலோ மீட்டர் தூரம் தேடி வந்துள்ளது என்ற தகவலைக் கூறித் திகைக்க வைத்தார் டாக்டர். சிறு தகவலைக்கூட யானை மறப்பதில்லை என்பது வியப்பல்லவா? இதைப் படிக்கும்போது வன உயிரினங்களின் பண்பு நமக்கு வியப்பைத் தருகிறது.

**யானைகளின் நன்றி உணர்வு :**

பேசிக்கொண்டே வீட்டை அடைந்தபோது, இருளில் ஏதோ அசைவது தெரிந்தது. உற்றுப் பார்த்தபோது, யானைக்கூட்டம். அவை காதுகளை அசைத்துக்கொண்டு நின்றன. அங்கே கால் ஊனமான யானையை, அதன் மெல்லிய கோணல் நடையால் அடையாளம் காணமுடிந்தது. “வந்து கூட்டிக்கொண்டு போய்விடும் வா” என்றார் டாக்டர். இருபதுக்கு மேற்பட்ட யானைகள் பிளிறின. துதிக்கைகளை வீசி மீண்டும் மீண்டும் பிளிறின. இக்காட்சியைக் கண்ட வனத்துறை அதிகாரி, உடல் சிலிர்க்க, கண் பொங்கிப் பெருக நின்றார்.

# இனிக்கும் இலக்கணம்

## புணர்ச்சி விதிகள்

### கூடுதல் வினாக்கள்

**1. புணர்ச்சி என்பது என்ன? சான்று தருக.**

இருவேறு சொற்களான, நிலைமொழியும் வருமொழியும் இணையும் சேர்க்கை புணர்ச்சி எனப்படும்.

எ – கா : வாழை + மரம் = வாழைமரம் (இயல்பு புணர்ச்சி)

வாழை + பழம் = வாழைப்பழம் (தோன்றல் – விகாரப் புணர்ச்சி)

பால் + குடம் = பாற்குடம் (திரிதல் – விகாரப் புணர்ச்சி)

மரம் + வேர் = மரவேர் (கெடுதல் – விகாரப் புணர்ச்சி)

**2. புணர்ச்சி விதிகளை விளக்குக.**

★ சொற்களில் புணர்ச்சியின்போது, நிலைமொழி இறுதியிலும், வருமொழி முதலிலும் ஏற்படக்கூடிய மாற்றங்களைச் சுருக்கமாகச் சொல்லும் வரையறைகளைப் புணர்ச்சி விதிகள் எனக் கூறுவர்.

**3. புணர்ச்சி விதிகளை அறிவதன் பயன்களைக் கூறுக.**

★ தமிழ் மொழியைப் பிழையின்றிக் கையாளவும், பாடல் அடிகளைப் பொருள் உணர்வுக்கு ஏற்றவகையில் பிரித்து அறியவும், மொழியின் அமைப்பைப் புரிந்து கொள்ளவும் புணர்ச்சி விதிகள் பெரிதும் பயன்படும்.

**4. உடம்படு மெய்யெழுத்துகள் எவை?**

★ ய், வ் என்னும் இரண்டும் உடம்படு மெய்யெழுத்துகளாகும்.

MERCY PUBLICATIONS - CHENNAI

www.Padasalai.Net

**5. உடம்படு மெய் எங்குத் தோன்றும்? ஏன்?**

★ நிலைமொழி ஈற்று உயிரோடு, வருமொழி முதல் உயிர் (உயிர் + உயிர்) புணரும்போது, அவை பொருந்தா. அவற்றைப் பொருந்தச் செய்ய இடையில் ய், வ் என்னும் மெய்களுள் ஒன்று தோன்றும். அதுவே, ‘உடம்படுமெய்’ எனப்படும்.

**எ – கா :** கலை + அழகு = கலை + ய் + அழகு = கலையழகு (யகர உடம்படுமெய்)

பூ + அழகு = பூ + வ் + அழகு = பூவழகு (வகர உடம்படுமெய்)

**6. யகர (ய்) உடம்படுமெய் எங்குத் தோன்றும்? எடுத்துகாட்டுத் தருக.**

★ நிலைமொழி ஈற்றில், ‘இ, ஈ, ஐ’ என்னும் உயிர் ஒன்று இருந்து, வருமொழி முதலில் வேறு உயிர் வரும்போது, இடையே யகர (ய்) உடம்படுமெய் தோன்றும்.

**எ – கா :** காட்சி + அழகு = காட்சி + ய் + அழகு = காட்சியழகு

தீ + அணை = தீ + ய் + அணை = தீயணை

கலை + அறிவு = கலை + ய் + அறிவு = கலையறிவு

**7. வகர (வ்) உடம்படுமெய் எங்குத் தோன்றும்? எடுத்துக்காட்டுத் தருக.**

★ உயிர் எழுத்துகளுள் இ, ஈ, ஐ அல்லாத பிற உயிரெழுத்துகளுள் ஒன்றை இறுதியில் பெற்ற நிலைமொழியோடு, வருமொழிமுதல் உயிர் சேரும்போது, ‘வகர’ உடம்படுமெய் (வ்) தோன்றிப் புணரும்.

**எ – கா :** மா + இலை = மா + வ் + இலை = மாவிலை

கோ + இல் = கோ + வ் + ல் = கோவில்

பூ + அழகு = பூ + வ் + அழகு = பூவழகு

**8. ‘ஏ முன் இவ்விருமையும்’ – விளக்கி உதாரணம் தருக.**

★ நிலைமொழி ஈற்றில் ‘ஏ’ என்னும் உயிர் நின்று, வருமொழி உயிருடன் புணரும்போது, யகர உடம்படுமெய்யோ (ய்), வகர உடம்படுமெய்யோ (வ்) தோன்றும் என்பதாகும்.

எ – கா : சே + இழை = சே + ய் + இழை = சேயிழை

சே + அடி = சே + வ் + அடி = சேவடி

**9. குற்றியலுகரப் புணர்ச்சியாவது யாது?**

★ கு, சு, டு, து, பு, று என்பவற்றுள் ஒன்றை, நிலைமொழியின் இறுதியில் பெற்றுவரும் சொல்லுடன் வருமொழிமுதல் சேருவது குற்றியலுகரப் புணர்ச்சி எனப்படும்.

**எ – கா :** மாசு + அற்றார் = மாசற்றார், மாசு + யாது = மாசியாது

**10. குற்றியலுகரத்துடன் உயிர் எவ்வாறு புணரும்?**

★ வருமொழி முதலில் உயிரெழுத்து வந்தால், நிலைமொழி ஈற்றுக் குற்றியலுகரத்திலுள்ள உகரம், மெய்யை விட்டு நீங்கும். (உயிர்வரின் உக்குறள் மெய்விட்டு ஓடும்)

★ மாசு + அற்றார் = ‘மாச் + அற்றார்’. பின்னர் நிலைமொழி ஈற்று மெய்யுடன் வருமொழிமுதல் உயிர் சேர்ந்து ‘மாசற்றார்’ எனப் புணரும். (உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே).

**11. ‘வரவறிந்தான்’ பிரித்துப் புணர்ச்சிவிதி எழுதுக.**

★ வரவறிந்தான் – வரவு + அறிந்தான். ‘வரவு’ என்னும் நிலைமொழி ஈற்று முற்றியலுகரம், வருமொழியுடன் (அறிந்தான்) புணரும்போது, முதலில் உயிரெழுத்து வந்ததனால், (குற்றியலுகரம் போல்) குற்றியலுகரம் நீங்கியது. வரவ் + அறிந்தான்.

★ (**விதி :** முற்றும் அற்று ஒரோவழி). பின்னர், நிலைமொழி ஈற்று (வரவ்) மெய்யுடன் வருமொழி முதல் உயிர் சேர்ந்து (**விதி : உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே**) ‘வரவறிந்தான்’ எனப் புணர்ந்தது.

**12. காடு + மரம் – புணர்ச்சி விதி கூறுக.**

★ நெடில்தொடர்க் குற்றியலுகரமான ‘காடு’ என்பது ‘மரம்’ என்னும் வருமொழியுடன் புணரும்போது (நிலைமொழியின் இடையே) ‘ட்’ மெய் இரட்டித்து, ‘காட்டு’ என்றாகிக் ‘காட்டுமரம்’ எனப் புணர்ந்தது.

**விதி :** நெடிலோடு உயிர்த்தொடர்க் குற்றுகரங்களுள் ட ற ஒற்று இரட்டும் வேற்றுமை மிகவே.

MERCY PUBLICATIONS - CHENNAI

**13. வீடு + தோட்டம் = புணர்ச்சி விதி கூறுக.**

★ நெடில்தொடர்க் குற்றியலுகரமான 'வீடு' என்பது, 'தோட்டம்' என்னும் வருமொழியுடன் புணரும்போது, (சொல்லின் இடையில்) 'ட்' மெய் இரட்டித்து, 'வீட்டு + தோட்டம்' என்றானது. வன்தொடர்க் குற்றியலுகரத்தின்முன் வருமொழிமுதல் வல்லினம் மிகும் என்னும் விதிப்படி, 'வீட்டுத் தோட்டம்' எனப் புணர்ந்தது.

**விதி :** நெடிலோடு உயிர்த்தொடர்க் குற்றுகரங்களுள் ட ற ஒற்று இரட்டும் வேற்றுமை மிகவே.

**14. ஆற்றுநீர் – பிரித்துப் புணர்ச்சிவிதி கூறுக.**

★ ஆற்றுநீர் – ஆறு + நீர்.

★ நீர் என்னும் வருமொழியுடன், 'ஆறு' என்னும் நெடில்தொடர்க் குற்றியலுகர நிலைமொழி புணரும்போது, (அச்சொல் இடையே) 'ற்' என்னும் மெய் (ஒற்று) இரட்டித்து, 'ஆற்று+ நீர் = ஆற்றுநீர்' எனப் புணர்ந்தது.

★ **விதி :** நெடிலோடு உயிர்த்தொடர்க் குற்றுகரங்களுள், ட, ற ஒற்று இரட்டும் வேற்றுமை மிகவே.

**15. 'வயிற்றுப்பசி' – பிரித்துப் புணர்ச்சிவிதி கூறுக.**

★ வயிற்றுப்பசி = வயிறு + பசி. 'பசி' என்னும் வருமொழி, 'வயிறு' என்னும் உயிர்த் தொடர்க் குற்றியலுகரத்துடன் புணரும்போது, (சொல்லின்) இடையே 'ற்' ஒற்று இரட்டித்து 'வயிற்று + பசி' என்றானது. பின்னர் 'வயிற்று' என்னும் வன்தொடர்க் குற்றியலுகரத்துடன் வருமொழி (பசி) வல்லினமெய் (ப்) மிக்கு, 'வயிற்றுப்பசி' எனப் புணர்ந்தது.

**விதி :** நெடிலோடு உயிர்த்தொடர்க் குற்றுகரங்களுள் ட ற ஒற்று இரட்டும் வேற்றுமை மிகவே.

**16. 'பள்ளித் தோழன்' – பிரித்துப் புணர்ச்சிவிதி கூறுக.**

★ பள்ளித் தோழன்= பள்ளி + தோழன். 'பள்ளி' என்னும் நிலைமொழியின் இறுதியில் உயிர் நின்றதால், வருமொழி முதலின் (தோழன்) வல்லினமெய் (த்) மிக்கு, 'பள்ளித் தோழன்' எனப் புணர்ந்தது.

**17. 'நிலத்தலைவர்' – பிரித்துப் புணர்ச்சிவிதி எழுதுக.**

★ நிலத் தலைவர் = நிலம் + தலைவர். 'நிலம்' என்னும் நிலைமொழியின் மகர ஈறு (ம்), 'தலைவர்' என்னும் வருமொழியுடன் புணரும்போது 'மவ் ஈறு ஒற்று அழியும்' என்னும் விதிப்படி கெட்டு 'நில' என்னும் உயிர் ஈற்றுச் சொல்லானது. பின்னர்த் 'தலைவர்' வருமொழிமுதல் வல்லின மெய் 'த்' மிக்கு 'நிலத்தலைவர்' எனப் புணர்ந்தது.

**விதி :** இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் வலிமிகும்.

**18. திரைப்படம் – பிரித்துப் புணர்ச்சி விதி எழுதுக.**

★ திரைப்படம் – திரை + படம்.

★ 'இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும்' என்னும் விதிப்படி, 'திரைப்படம்' எனப் புணர்ந்தது.

**19. மரக்கலம் – பிரித்துப் புணர்ச்சி விதி எழுதுக.**

மரக்கலம் – மரம் + கலம்.

★ 'மவ்வீறு ஒற்று அழிந்து உயிர் ஈறு ஒப்பவும் ஆகும்' என்னும் விதிப்படி 'மர + கலம்'.

★ 'இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும்' விதிப்படி 'மரக்கலம்' எனப் புணர்ந்தது.

**20. பூப்பெயர்ப் புணர்ச்சி விளக்குக.**

★ 'பூ' என்னும் நிலைமொழியுடன் வருமொழி வல்லினம் புணரும்போது, அந்த வல்லினம் மிகுந்து புணரும்.

**(பூ + செடி – பூச்செடி);** அன்றி, வருமொழி வல்லின மெய்க்கு இனமாக மெல்லின மெய் மிகுந்தும் புணரும். (பூஞ் + செடி).

**விதி :** பூப்பெயர்முன் இன மென்மையும் தோன்றும்.

எ – கா : 1. பூ + கொடி = பூக்கொடி / பூங்கொடி

2. பூ + சோலை = பூச்சோலை / பூஞ்சோலை

3. பூ + தொட்டி = பூத்தொட்டி / பூந்தொட்டி

4. பூ + பந்தல் = பூப்பந்தல் / பூம்பந்தல்

MERCY PUBLICATIONS - CHENNAI

www.Padasalai.Net

**21. 'மண்மகள்' பிரித்துப் புணர்ச்சிவிதி கூறுக.**

'மண்மகள் = மண் + மகள்'.

★ 'மண்' என்னும் நிலைமொழி ஈற்றில் மெய் (ன்) நின்றது; 'மகள்' என்னும் வருமொழி முதலில் (ம்+ அ = ம) மெய்வந்தது. எனவே, 'மண்மகள்' என இயல்பாகப் புணர்ந்தது.

**22. 'வானொலி' – பிரித்துப் புணர்ச்சிவிதி கூறுக.**

வானொலி = வான் + ஒலி

★ 'வான்' என்னும் நிலைமொழி ஈற்றில் நின்ற மெய்யுடன் (ன்) (ஒ) 'ஒலி' என்னும் வருமொழி முதலில் நின்ற உயிர் இயல்பாகப் புணர்ந்து, (ன் + ஒ = னொ) 'வானொலி' என்றானது.

**விதி :** உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே'

**23. கல்லதர் – பிரித்துப் புணர்ச்சிவிதி கூறுக.**

கல்லதர் – கல் + அதர்

★ 'கல்' என்னும் சொல்லில், தனிக்குறிலை அடுத்த ஒற்று, வருமொழி முதலில் உயிர் வந்ததனால் இரட்டித்தது. கல்ல் + அதர். பின் நிலைமொழி ஈற்று மெய்யுடன் வருமொழி முதல் உயிர் புணர்ந்து, (ல் + அ = ல) 'கல்லதர்' என்றானது.

**விதி :** தனிக்குறில் முன்ஒற்று உயிர்வரின் இரட்டும் / உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே.

**24. பாடவேளை – பிரித்துப் புணர்ச்சிவிதி கூறுக.**

பாடவேளை – பாடம் + வேளை

★ 'பாடம்' என்னும் நிலைமொழி ஈற்று மகரமெய் (ம்) கெட்டு, 'வேளை' என்னும் வருமொழியுடன் 'பாடவேளை' எனப் புணர்ந்தது.

**25. 'பழத்தோல்' – பிரித்துப் புணர்ச்சிவிதி கூறுக.**

பழத்தோல் – பழம் + தோல்

★ 'பழம்' என்னும் நிலைமொழி ஈற்று மகரமெய் (ம்) கெட்டு, 'பழ' என உயிர் ஈறு ஆகி, 'தோல்' என்னும் வருமொழி முதலின் வல்லினம் (த்) மிக்குப் புணர்ந்து, 'பழத்தோல்' என்றானது.

**26. 'காலங்கடந்தவன்' – பிரித்துப் புணர்ச்சிவிதி கூறுக.**

காலங் கடந்தவன் – காலம் + கடந்தவன்

★ 'காலம்' என்னும் நிலைமொழி ஈற்று மகரமெய் (ம்) கெட்டு, 'கால' என உயிர் ஈறாகி, 'கடந்தான்' என்னும் வருமொழி முதல் வல்லின மெய்க்கு (க்) இனமான மெல்லின மெய் (ங்) பெற்றுப் புணர்ந்து, 'காலங் கடந்தவன்' என்றானது.

**விதி :** மவ்ஈறு ஒற்றுஅழிந்து உயிர்ஈறு ஒப்பவும்
வன்மைக்கு இனமாத் திரிபவும் ஆகும்.

**27. 'பெருவழி' – பிரித்துப் புணர்ச்சிவிதி தருக.**

பெருவழி – பெருமை + வழி

★ 'பெருமை' என்னும் பண்புச் சொல்லின் நிலைமொழி 'மை' விகுதி **'ஈறுபோதல்'** என்னும் விதிப்படி கெட்டு,'பெருவழி' எனப் புணர்ந்தது.

**28. 'கரியன்' – பிரித்துப் புணர்ச்சிவிதி கூறுக.**

கரியன் – கருமை + அன்.

ஈறுபோதல் – கரு + அன்

இடை உகரம் இய்யாதல் – கரி + அன்

உயிர்வரின்..... இ, ஈ, ஐ வழி யவ்வும் – கரிய் + அன்

உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே – கரியன்.

**29. 'மூதூர்' – பிரித்துப் புணர்ச்சிவிதி தருக.**

மூதூர் – முதுமை + ஊர்

ஈறுபோதல் – முது + ஊர்; ஆதிநீடல் – மூது + ஊர்

★ உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும் – மூத் + ஊர்;

★ உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே – மூதூர்.

MERCURY PUBLICATIONS - CHENNAI

**30. 'பைந்தமிழ்' – பிரித்துப் புணர்ச்சி விதி தருக.**

பைந்தமிழ் – பசுமை + தமிழ்

"ஈறுபோதல்" (பசு + தமிழ்)

"அடி அகரம் ஐ ஆதல்" (பைசு + தமிழ்)

"இனையவும் பண்பிற்கு இயல்பே" (பை + தமிழ்)

"இனம் மிகல்" (பைந்+தமிழ்–'பைந்தமிழ்' எனப் புணர்ந்தது.)

**31. 'வெற்றிலை' – பிரித்துப் புணர்ச்சிவிதி தருக.**

வெற்றிலை – வெறுமை + இலை

"ஈறுபோதல்" (வெறு + இலை)

"தன் ஒற்று இரட்டல்" (வெற்று + இலை)

"உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்" (வெற்ற் + இலை)

"உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே" (வெற்றிலை.)

**32. 'நல்லாடை' – பிரித்துப் புணர்ச்சிவிதி கூறுக.**

நல்லாடை – நன்மை + ஆடை

"ஈறுபோதல்" (நன் + ஆடை

"முன்நின்ற மெய் திரிதல்" (நல் + ஆடை)

"தனிக்குறில் முன்ஒற்று உயிர்வரின் இரட்டும்" (நல்ல் + ஆடை)

"உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே" (நல்லாடை.)

**33. தன்னொற்றிரட்டல் – விதியை எடுத்துக்காட்டுடன் விளக்குக.**

வெற்றிலை – வெறுமை + இலை

"ஈறுபோதல்" (வெறு + இலை); "தன்னொற்றிரட்டல்" (வெற்று + இலை)

"உயிர்வரின் உக்குறள் மெய்விட் டோடும்" (வெற்ற் + இலை)

"உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே" (வெற்றிலை)

## சிறுவினா (கூடுதல் வினாக்கள்)

**1. சான்று தந்து விளக்குக : அ. குற்றியலுகரப் புணர்ச்சி, ஆ. முற்றியலுகரப் புணர்ச்சி.**

**அ. குற்றியலுகரப் புணர்ச்சி :**

நிலைமொழி ஈற்றில் குற்றியலுகரம் இருந்து, வருமொழி முதலில் உயிரெழுத்து வந்தால் – நிலைமொழி ஈற்று உகரம் நீங்கி, மெய் நிற்கும்; அந்த மெய்யுடன் வருமொழிமுதல் உயிர் சேர்ந்து புணரும்.

எ–கா: மாசு+அற்றார் – மாசற்றார். "உயிர்வரின் உக்குறள் மெய்விட் டோடும்" (மாச் + அற்றார்)

"உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே" (மாசற்றார்).

[நிலைமொழி ஈற்றில் குற்றியலுகரம் இருந்து, வருமொழி முதலில் யகரம் வந்தால், உகரம் இகரமாகத் திரியும்.

எ – கா : மாசு + யாது – மாசி + யாது – மாசியாது ("உக்குறள் யவ்வரின் இய்யாம்").

**ஆ. முற்றியலுகரப் புணர்ச்சி :**

நிலைமொழி ஈற்றில் முற்றியலுகரம் இருந்து, வருமொழி முதலில் உயிரெழுத்து வந்தால், நிலைமொழி ஈற்று உகரம் நீங்கி, மெய் நிற்கும்; அந்த மெய்யுடன் வருமொழி முதல் உயிர் சேர்ந்து புணரும்.

எ – கா : வரவு + அறிந்தான் – வரவறிந்தான்.

"உயிர்வரின்.....முற்றும் அற்று" (வரவ் + அறிந்தான்)

"உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே" (வரவறிந்தான்)

(நிலைமொழி ஈற்றில் முற்றியலுகரம் இருந்து, வருமொழி முதலில் யகரம் வந்தால், உகரம் இகரமாகத் திரியும். எ– கா : வரவு + யாது – வரவியாது ("யவ்வரின் முற்றும் அற்று" – அதாவது, முற்றியலுகரமும் யவ்வரின் இய்யாகும்.)

MERCY PUBLICATIONS - CHENNAI

www.Padasalai.Net

## பலவுள் தெரிக

1. 'பெருங்கலம்' என்னும் சொல்லிற்குரிய புணர்ச்சி விதிகளைத் தேர்வு செய்க.
   அ) ஈறுபோதல், தன்னொற்றிரட்டல் ஆ) ஈறுபோதல், இனமிகல்
   இ) ஈறுபோதல், ஆதிநீடல் ஈ) ஈறுபோதல், இனையவும்
   **விடை :** ஆ) ஈறுபோதல், இனமிகல்

## கூடுதல் வினாக்கள்

2. உடம்படு மெய் (ய், வ்) நிலைமொழி ஈற்றில் ______ வருமொழி முதலில் ______ வந்து புணரும்போது தோன்றும்.
   அ) மெய் + மெய் ஆ) உயிர் + மெய் இ) உயிர் + உயிர் ஈ) மெய் + உயிர்
   **விடை :** இ) உயிர் + உயிர்
3. 'மெய்'யோடு 'மெய்' புணர்வதற்கு எடுத்துக்காட்டு ______.
   அ) மலை + நிலம் ஆ) நிலம் + கடலை இ) காட்சி + அழகு ஈ) தீ + அணை
   **விடை :** ஆ) நிலம் + கடலை
4. 'மெய்'யோடு 'உயிர்' புணர்வதற்கு எடுத்துக்காட்டு ______.
   அ) மலை + நிலம் ஆ) நிலம் + கடலை இ) காட்சி + அழகு ஈ) நாய் + இல்லை
   **விடை :** ஈ) நாய் + இல்லை
5. 'உயி'ரோடு 'உயிர்' புணர்வதற்கு எடுத்துக்காட்டு ______.
   அ) மலை + நிலம் ஆ) பல் + பொடி இ) மா + இலை ஈ) கால் + அடி
   **விடை :** இ) மா + இலை
6. 'உயி'ரோடு 'மெய்' புணர்வதற்கு எடுத்துக்காட்டு ______.
   அ) கால் + அடி ஆ) மலை + நிலம் இ) கல் + தாழை ஈ) மணி + அழகு
   **விடை :** ஆ) மலை + நிலம்
7. 'கலை + அறிவு' புணரும் புணர்ச்சிவகை ______.
   அ) குற்றியலுகரப் புணர்ச்சி ஆ) முற்றியலுகரப் புணர்ச்சி
   இ) உடம்படுமெய்ப் புணர்ச்சி ஈ) பண்புப்பெயர்ப் புணர்ச்சி
   **விடை :** இ) உடம்படுமெய்ப் புணர்ச்சி
8. கீழ்க்கண்ட தொடர்களில் குற்றியலுகரப் புணர்ச்சிக்கு எடுத்துக்காட்டு ______.
   அ) மணியழகு ஆ) வரவறிந்து இ) மாசற்றார் ஈ) பச்சிலை
   **விடை :** இ) மாசற்றார்
9. முற்றியலுகரப் புணர்ச்சிவிதிக்கு எடுத்துக்காட்டு ______.
   அ) தீயணைப்பான் ஆ) வெற்றிலை இ) கதவில்லை ஈ) பெருநகரம்
   **விடை :** இ) கதவில்லை
10. 'பள்ளி + தோழன்' என்பது, ______ புணர்வதற்கு எடுத்துக்காட்டு.
    அ) மெய்யோடு மெய் ஆ) மெய்யோடு உயிர்
    இ) உயிரோடு உயிர் ஈ) உயிரோடு மெய்
    **விடை :** ஈ) உயிரோடு மெய்
11. கீழ்க்காணும் கூற்றுகளை ஆராய்க.
    அ) பூ + கோதை – பூங்கோதை
    பூப்பெயர்முன் இனமென்மையும் தோன்றும்.
    ஆ) நீர் + இழிவு – நீரிழிவு
    மரம் + ஆகும் – மரமாகும்
    உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே.
    இ) மெய் + ஈறு – மெய்யீறு
    தனிக்குறில்முன் ஒற்று உயிர்வரின் இரட்டும்.
    1. அ மட்டும் சரி 2. ஆ மட்டும் சரி 3. இ மட்டும் சரி 4. அனைத்தும் சரி
    **விடை :** 4. அனைத்தும் சரி

MERCY PUBLICATIONS - CHENNAI

## இலக்கணத் தேர்ச்சிகொள்

**1. குற்றியலுகரப் புணர்ச்சியை எடுத்துக்காட்டுடன் விளக்குக.**

i. நிலைமொழி ஈற்றில் குற்றியலுகரம் இருந்து, வருமொழி முதலில் உயிர் எழுத்து வந்தால் – நிலைமொழி ஈற்று உகரம் நீங்கி, மெய் நிற்கும். அந்த மெய்யுடன் வருமொழி முதல் உயிர் சேர்ந்து புணரும்.

எ – கா : மாசு + அற்றார் – மாசற்றார்

"உயிர்வரின் உக்குறள் மெய்விட் டோடும்" (மாச் + அற்றார்)

"உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே" (மாசற்றார்)

ii. நிலைமொழி ஈற்றில் குற்றியலுகரம் இருந்து, வருமொழி முதலில் யகரம் வந்தால், உகரம் இகரமாகத் திரியும்.

எ – கா : மாசு + யாது – மாசியாது. "உக்குறள் யவ்வரின் இய்யாம்" (மாசி + யாது)

**2. i. கருவிழி, ii. பாசிலை, iii. சிறியன், iv. பெருங்கல் ஆகிய சொற்களைப் பிரித்துப் புணர்ச்சிவிதிகள் தருக.**

i. கருவிழி – கருமை + விழி – "ஈறுபோதல்" (கரு + விழி)

ii. பாசிலை – பசுமை + இலை

"ஈறு போதல்" (பசு + இலை), "ஆதிநீடல்" (பாசு + இலை), "உயிர்வரின் உக்குறள் மெய்விட் டோடும் (பாச் + இலை), "உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே" (பாசிலை)

iii. சிறியன் – சிறுமை + அன்

"ஈறுபோதல்" (சிறு + அன்), "இடை உகரம் இய்யாதல்" (சிறி + அன்), "உயிர்வரின் ..... இ ஈ ஐ வழி யவ்வும் உடம்படுமெய் என்றாகும்" (சிறிய் + அன்), "உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே" (சிறியன்)

iv. பெருங்கல் – பெருமை + கல் – "ஈறுபோதல் (பெரு + கல்), "இனமிகல்" (பெருங்கல்)

**3. புணர்ச்சிவிதி தந்து விளக்குக:**

அ. புலனறிவு, ஆ. வில்லொடிந்தது, இ. வழியில்லை, ஈ. திரைப்படம், உ. ஞாயிற்றுச் செலவு.

அ) புலனறிவு – புலன் + அறிவு

"உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே"(நிலைமொழி ஈற்று மெய்யுடன் வருமொழிமுதல் உயிர் சேர்ந்தது)

ஆ) வில்லொடிந்தது – வில் + ஒடிந்தது

i. "தனிக்குறில்முன் ஒற்று உயிர்வரின் இரட்டும்"

(நிலைமொழியாக அமைந்த சொல், தனிக்குறிலை அடுத்த மெய்யாக இருந்தால், அந்த மெய் இரட்டிக்கும்) (வில் + ல் + ஒடிந்தது).

ii. "உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே"

நிலைமொழி ஈற்று மெய்யுடன் வருமொழிமுதல் உயிர் சேரும். (வில்லொடிந்தது)

இ) வழியில்லை – வழி + இல்லை

i. "உயிர்வரின்.... இ ஈ ஐ வழி யவ்வும் உடம்படுமெய் என்றாகும்

(இ ஈ ஐ என்பவற்றுள் ஒன்றை இறுதியில் பெற்ற சொல், வருமொழிமுதல் உயிருடன் புணரும்போது, 'ய்' என்னும் உடம்படுமெய் பெறும்) (வழி + ய் + இல்லை)

ii. "உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே"

(நிலைமொழி ஈற்று மெய்யுடன் வருமொழிமுதல் உயிர் சேரும் – வழியில்லை)

ஈ) திரைப்படம் – திரை + படம்

"இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும்"

(நிலைமொழி இறுதியில் உயிர் எழுத்து இயல்பாகவோ, விதிப்படியோ வந்தால், வருமொழிமுதலில் வரும் க், ச், த், ப் மிகுந்து புணரும்) (திரை + ப் + படம் – திரைப்படம்)

உ) ஞாயிற்றுச்செலவு – ஞாயிறு + செலவு → ஞாயிற்று + செலவு →ஞாயிற்றுச் = செலவு

i. "நெடிலோடு உயிர்த்தொடர்க் குற்றுகரங்களுள் டற ஒற்று இரட்டும் வேற்றுமை மிகவே"

(நெடில் தொடர், உயிர்த்தொடர்க் குற்றியலுகரச் சொற்கள் வருமொழியோடு புணரும்போது, ட், ற் என்னும் மெய்கள் இரட்டிக்கும்) (ஞாயிறு – ஞாயிற்று + செலவு)

MERCY PUBLICATIONS - CHENNAI

ii. "இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும்"
(இயல்பாகவும் விதிப்படியும் நின்ற உயிர் ஈற்றின்முன் வந்த க், ச், த், ப் மிகும்) (ஞாயிற்றுச் + செலவு)

**4. விதி வேறுபாடறிந்து விளக்குக.**

i. தன்னொற்றிரட்டல் – தனிக்குறில் முன்ஒற்று உயிர்வரின் இரட்டும்.
ii. இனமிகல் – வன்மைக்கு இனமாத் திரிபவும் ஆகும்.
i. தன்னொற்றிரட்டல் – தனிக்குறில் முன்ஒற்று உயிர்வரின் இரட்டும்:

**தன்னொற்றிரட்டல் :** பண்புப்பெயர்ப் புணர்ச்சியில், "ஈறுபோதல்" என்னும் விதிப்படி 'மை' விகுதி போனபின், நிலைமொழி இறுதி 'உகரமாக' இருந்து வருமொழி முதலில் உயிர் எழுத்து வந்தால், "தன்னொற்று இரட்டல்" என்னும் விதி இடம்பெற வேண்டும்.

எ – கா : வெற்றிலை – வெறுமை + இலை
"ஈறுபோதல்" (வெறு + இலை), "தன்னொற்று இரட்டல்" (வெற்று + இலை)

**தனிக்குறில் முன்ஒற்று உயிர்வரின் இரட்டும் :** தனிக்குறிலைச் சார்ந்த மெய்எழுத்தைப் பெற்ற நிலைமொழி, உயிரை முதலாகப் பெற்ற வருமொழியுடன் சேரும்போது, நிலைமொழி ஈற்று மெய், இரட்டித்துப் புணரும். அப்போது, "தனிக்குறில் முன்ஒற்று உயிர்வரின் இரட்டும்" என்னும் விதி இடம்பெறும்.

எ – கா : கல் + எறிந்தான் – கல்ல் + எறிந்தான் – கல்லெறிந்தான்.
"தனிக்குறில் முன்ஒற்று உயிர்வரின் இரட்டும்" (கல்ல் + எறிந்தான்)
"உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே" (கல்லெறிந்தான்)

ii. இனமிகல் – வன்மைக்கு இனமாத் திரிபவும் ஆகும் :

**இனமிகல் :** பண்புப்பெயர் புணர்ச்சியில் – 'ஈறுபோதல்' விதிப்படி 'மை' விகுதி போனபின், மகர மெய் வராத நிலையில், வருமொழி முதலாகக் கசதப வந்தால், 'இனம்மிகல்' விதி இடம்பெறும்.

**எ – கா :** கருங்கடல் – கருமை + கடல்
"ஈறுபோதல்" (கரு + கடல்), "இனமிகல்" (கருங்கடல்)

**வன்மைக்கு இனமாத் திரிபவும் ஆகும் :**

மகரமெய்யை இறுதியாகப் பெற்ற நிலைமொழி, வல்லினத்தை முதலில் பெற்ற வருமொழியுடன் புணரும் போது, நிலைமொழி இறுதி மகரம், வருமொழிமுதல் வல்லினத்தின் இனமான மெல்லினமாகத் திரியும்.

**எ – கா :** காலம் + கடந்தான் – காலங் + கடந்தான் – காலங்கடந்தான்.
("மவ்வீறு ஒற்று வன்மைக்கு இனமாத் திரிபவும் ஆகும்")

5. பொருத்துக.

அ) அடி அகரம் ஐ ஆதல் – செங்கதிர்
ஆ) முன் நின்ற மெய் திரிதல் – பெருங்கொடை
இ) ஆதிநீடல் – பைங்கூழ்
ஈ) இனமிகல் – காரிருள்

**விடை**

அ) அடி அகரம் ஐ ஆதல் – பைங்கூழ் (பசுமை – பசு – பைசு – பைங் + கூழ்)
ஆ) முன் நின்ற மெய் திரிதல் – செங்கதிர் (செம்மை – செம் – செங் + கதிர்)
இ) ஆதிநீடல் – காரிருள் (கருமை – கரு – காரு + கார் + இருள்)
ஈ) இனமிகல் – பெருங்கொடை (பெருமை – பெரு – பெருங் + கொடை)

6. கூற்றுகளைப் படித்துக் கீழ்க்காண்பனவற்றுள் சரியானதைத் தேர்க.

அ) நிலைமொழியின் ஈறு குற்றியலுகரமாகவும், வருமொழியின் முதல் உயிரெழுத்தாகவும் அமையும் போது, 'உயிர்வரின் உக்குறள் மெய்விட்டு ஓடும்' என்னும் விதியைப் பெறும்.
ஆ) நிலைமொழியின் ஈற்றில் இ ஈ ஐ வரும்போது வகர உடம்படுமெய் பெறும்.
இ) பண்புப்பெயர்ப் புணர்ச்சியில் 'ஈறுபோதல்' என்னும் விதியே முதன்மையானதாக விளங்கும்.
ஈ) தன்னொற்றிரட்டல் என்னும் விதி, பண்புப்பெயர்ப் புணர்ச்சிக்குப் பொருந்தும்.

i) அ, ஆ, இ சரி, ஈ தவறு. ii) அ, இ, ஈ சரி, ஆ தவறு.

**விடை :** ii) அ, இ, ஈ சரி, ஆ தவறு.

MERCY PUBLICATIONS - CHENNAI

## மெய்ம்மயக்கம்

### குறுவினா

1. ய், வ், ஞ், ட், ற், ந் – மெய்களுக்கான வேற்றுநிலை உடனிலை மெய்ம்மயக்கங்களுக்கு எடுத்துக்காட்டுகள் தருக.

| வேற்றுநிலை | உடனிலை | வேற்றுநிலை | உடனிலை |
|---|---|---|---|
| ய் வாய்மை | செய்யாமை | ட் காட்சி | பட்டம் |
| வ் தெவ்யாது | இவ்வகை | ற் பயிற்சி | வெற்றி |
| ஞ் மஞ்சள் | விஞ்ஞானம் | ந் தந்த | செந்நெறி |

### சிறுவினா

**தமிழ் நெடுங்கணக்கு வரிசையில் இனவெழுத்துகளின் பங்கைக் குறிப்பிடுக.**

சொற்களுக்கு இடையில் மெல்லின எழுத்துகளுக்குப்பின் வல்லின மெய்கள் மட்டுமே வரும். மெல்லின மெய்யெழுத்துகள் ங், ஞ், ண், ந், ம், ன் ஆகும். அந்தந்த மெல்லின எழுத்துகளுக்குப் பின் அந்தந்த வல்லின எழுத்துகளே வரும். அவை க், ச், ட், த், ப், ற் ஆகும். எடுத்துக்காட்டாய் 'ங்' என்னும் எழுத்தைக் காணலாம். அதே எழுத்துக்கு நட்பு எழுத்து 'க்' ஆகும். அதாவது 'சங்கம்' என்னும் சொல்லில் 'ங்' மெல்லினத்திற்குப் பின் (க – க் + அ) 'க்' வந்துள்ளதை அறியலாம். இதைக் கருத்தில் கொண்டுதான் தமிழ் நெடுங்கணக்கில் நினைவில் கொள்ளும் வகையில் க் – ங், ச் – ஞ், ட் – ண், த் – ந், ப் – ம், ழ் – ள் என வரிசையாய் அமைத்துள்ளனர். இதை அறிந்துகொண்டால் பிழைகளைத் தவிர்க்கலாம்.

### தெரிந்துகொள்வோம்

1. **மெய்ம்மயக்கம் என்பது எது?**
   - ★ தமிழ்ச்சொற்களின் இடையில், எந்த மெய்யெழுத்தை அடுத்து எந்த மெய்யெழுத்து (இணைந்து) வரும் என்பதை விளக்குவது மெய்ம்மயக்கம் ஆகும்.
2. **மெய்ம்மயக்கம் எத்தனை வகைப்படும்? அவை யாவை?**
   - ★ மெய்ம்மயக்கம், இரண்டு வகைப்படும்.
   - ★ அவை : உடனிலை மெய்ம்மயக்கம் – எ – கா : அச்சம் (அச்ச்அம்), தண்ணீர் (தண்ண்ஈர்)
   - ★ வேற்றுநிலை மெய்ம்மயக்கம். – எ – கா : தேர்தல் (தேர்த்அல்), வாழ்வு (வாழ்வ்உ)
   - ★ ஈரொற்று மெய்ம்மயக்கம் என்ற ஒன்றும் உண்டு.
3. **உடனிலை மெய்ம்மயக்கம் என்பது யாது?**
   - ★ சொற்களின் இடையில் ஒரே மெய்யெழுத்து அடுத்து அடுத்து வருவது உடனிலை மெய்ம்மயக்கம் எனப்படும்.

   எ – கா : அச்சம் (அச்ச்அம்), தண்ணீர் (தண்ண்ஈர்)
4. **தம் மெய்யெழுத்துகளுடன் மட்டுமே சேர்ந்து உடனிலை மெய்ம்மயக்கமாக வரும் எழுத்துகள் எவை? சான்றுடன் விளக்குக.**
   - ★ க், ச், த், ப் என்னும் மெய்யெழுத்துகள், தம் மெய்யெழுத்துகளுடன் மட்டுமே சேர்ந்து, உடனிலை மெய்ம்மயக்கச் சொற்கள் வரும்.

     எ – கா : மக்கள் (மக்க்அள்), எச்சம் (எச்ச்அம்), மொத்தம் (மொத்த்அம்), அப்பம் (அப்ப்அம்)
   - ★ (க், ச், த், ப் எழுத்துகளை அடுத்துப் பிற மெய்யெழுத்துகள் வாரா. வந்தால் அச்சொல் தமிழ்ச்சொல்லாக இருக்காது. எ – கா : சகாப்த்அம்)
5. **தம் மெய்யெழுத்துகளுடன் சேர்ந்து வாரா எழுத்துகள் எவை?**
   - ★ ர், ழ் ஆகிய இரண்டு மெய்யெழுத்துகளும் தம் எழுத்துகளுடன் சேர்ந்து வாரா. பிற மெய்யெழுத்து களுடன் மட்டுமே சேர்ந்து வரும்.

     எ – கா : உயர்வு (உயர்வ்உ), வாழ்க (வாழ்க்அ)
6. **வேற்றுநிலை மெய்ம்மயக்கம் என்பது யாது?**
   - ★ சொற்களின் இடையில் வெவ்வேறு மெய்யெழுத்துகள் தொடர்ந்து வருவது, வேற்றுநிலை மெய்ம் மயக்கம் எனப்படும்.

     எ – கா : தேர்தல் (தேர்த்அல்), வாழ்வு (வாழ்வ்உ)

MERCY PUBLICATIONS CHENNAI

www.Padasalai.Net

**7. உடனிலை, வேற்றுநிலை என்னும் இருவகை மெய்ம்மயக்கங்களாக வரும் எழுத்துகள் எவை? சான்று தருக.**

★ மெய்யெழுத்துகள் பதினெட்டனுள் க், ச், த், ப், ர், ழ் என்னும் ஆறு நீங்கிய பிற (ட், ற், ங், ஞ், ண், ந், ம், ன், ய், ல், வ், ள்) பன்னிரண்டு மெய்யெழுத்துகளும் உடனிலை மெய்ம்மயக்கமாகவும், வேற்றுநிலை மெய்ம்மயக்கமாகவும் வரும்.

எ – கா :

| | உடனிலை | | வேற்றுநிலை | |
|---|---|---|---|---|
| ட் | பட்டம் | (பட்ட்அம்) | காட்சி | (காட்ச்இ) |
| ற் | வெற்றி | (வெற்ற்இ) | பயிற்சி | (பயிற்ச்இ) |
| ங் | அங்ஙனம் | (அங்ங்அனம்) | தங்கம் | (தங்க்அம்) |
| ஞ் | விஞ்ஞானம் | (விஞ்ஞ்அனம்) | மஞ்சள் | (மஞ்ச்அள்) |
| ண் | தண்ணீர் | (தண்ண்ஈர்) | நண்பகல் | (நண்ப்அகல்) |
| ந் | செந்நெறி | (செந்ந்எறி) | தந்த | (தந்த்அ) |
| ம் | அம்மா | (அம்ம்ஆ) | அம்பு | (அம்ப்உ) |
| ன் | மன்னன் | (மன்ன்அன்) | இன்பம் | (இன்ப்அம்) |
| ய் | செய்யாமை | (செய்ய்ஆமை) | வாய்மை | (வாய்ம்ஐ) |
| ல் | நல்ல | (நல்ல்அ) | செல்வம் | (செல்வ்அம்) |
| வ் | இவ்வகை | (இவ்வ்அகை) | தெவ்யாது | (தெவ்ய்ஆது) |
| ன் | உள்ளம் | (உள்ள்அம்) | கொள்கை | (கொள்க்ஐ) |

**8. ஈரொற்று மெய்ம்மயக்கமாவது யாது?**

★ தனிச் சொற்களிலோ, கூட்டுச் சொற்களிலோ சொற்களின் இடையில் ய், ர், ழ் ஆகிய மெய்கள் ஈரொற்றாய் (மூன்று மெய்களாக மயங்கி) வரும். இதனை ஈரொற்று மெய்ம்மயக்கம் என்பர். (இரண்டு + ஒற்று = ஈரொற்று, இரண்டு மெய்யெழுத்துகள்)

எ – கா : ய் : காய்ச்சல் (காய்ச்ச்அல்) நாய்க்கால் (நாய்க்க்ஆல்)

ர் : உயர்ச்சி (உயர்ச்ச்இ) தேர்க்கால் (தேர்க்க்ஆல்)

ழ் : வீழ்ச்சி (வீழ்ச்ச்இ) காழ்ப்பு (காழ்ப்ப்உ)

**சரியான விடையைத் தேர்க.**

1. உடனிலை மெய்ம்மயக்கத்திற்கு மட்டுமே உரிய மெய்யெழுத்துகள் ______.
   அ) க், ச், ண், ந் ஆ) த், ப், ட், ற் இ) க், ச், த், ப் ஈ) க், த், ட், ந்
   **விடை :** இ) க், ச், த், ப்
2. வேற்றுநிலை மெய்ம்மயக்கத்திற்கு மட்டுமே உரிய மெய்யெழுத்துகள் ______.
   அ) ங், ர், ஆ) ஞ், ழ் இ) ர், ழ் ஈ) க், ர்
   **விடை :** இ) ர், ழ்
3. இரு மெய்ம்மயக்கம் (வேற்றுநிலை, உடனிலை) பெறும் எழுத்துகள் ______.
   அ) க், ச், ட், ற் ஆ) த், ப், ண், ந் இ) ர், ழ், ங், ஞ் ஈ) ட், ற், ய், ன்
   **விடை :** ஈ) ட், ற், ய், ன்
4. ஈரொற்று மெய்ம்மயக்கமாய் வரும் எழுத்துகள் ______.
   அ) க், ச், ய் ஆ) ய், ர், ழ் இ) த், ப், ர் ஈ) ங், ஞ், ழ்
   **விடை :** ஆ) ய், ர், ழ்
5. பிறமொழிச் சொற்களைக் கண்டறிய உதவுவது ______.
   அ) தமிழ் எழுத்துகளை அறிவது
   ஆ) மொழி முதலில் வரும் எழுத்துகளை அறிவது
   இ) மொழி இடையில் வரும் எழுத்துகளை அறிவது
   ஈ) மொழி இறுதியில் வரும் எழுத்துகளை அறிவது
   **விடை :** இ) மொழி இடையில் வரும் எழுத்துகளை அறிவது

MERCY PUBLICATIONS CHENNAI

6. மெய்ம்மயக்கம் எனப்படுவது ______.
அ) மொழி முதலில் வரும் மெய்யெழுத்துகளில் இடம்பெறும்
ஆ) மொழி இறுதியில் வரும் மெய்யெழுத்துகளில் இடம்பெறும்
இ) சொல்லின் கடைசியில் வரும் மெய்யெழுத்துகளில் இடம்பெறும்
ஈ) மொழிக்கு இடையில் வரும் மெய்யெழுத்துகளில் இடம்பெறும்
**விடை :** ஈ) மொழிக்கு இடையில் வரும் மெய்யெழுத்துகளில் இடம்பெறும்

7. உடனிலை மெய்ம்மயக்கச் சொல் தொகுதியைக் கண்டறிக.
அ) அக்காள், அச்சம், ஆட்சி, கப்பம்
ஆ) மக்கள், பயிற்சி, மன்னன், கொள்கை
இ) பக்கம், எச்சம், சாத்தன், அப்பம்
ஈ) பக்கம், எச்சம், மஞ்சள், மங்கை
**விடை :** இ) பக்கம், எச்சம், சாத்தன், அப்பம்.

8. சொற்களின் இடையில் ஒரே மெய்யெழுத்து அடுத்தடுத்து வருவது ______.
அ) மெய்ம்மயக்கம்
ஆ) வேற்றுநிலை மெய்ம்மயக்கம்
இ) உடனிலை மெய்ம்மயக்கம்
ஈ) ஈரொற்று மெய்ம்மயக்கம்
**விடை :** இ) உடனிலை மெய்ம்மயக்கம்

9. சொற்களின் இடையில் வெவ்வேறு மெய்யெழுத்துகள் தொடர்ந்து வருவது ______.
அ) ஈரொற்று மெய்ம்மயக்கம்
ஆ) மெய்ம்மயக்கம்
இ) வேற்றுநிலை மெய்ம்மயக்கம்
ஈ) உடனிலை மெய்ம்மயக்கம்
**விடை :** இ) வேற்றுநிலை மெய்ம்மயக்கம்

10. ஈரொற்று மெய்ம்மயக்கம் என்பது ______.
அ) சொற்களின் இடையில் ஒரே மெய்யெழுத்து அடுத்தடுத்து வருவது
ஆ) சொற்களின் இடையில் வெவ்வேறு மெய்யெழுத்துகள் தொடர்ந்து வருவது
இ) மெய்யெழுத்துகள் உடனிலையாகவும் வேற்றுநிலையாகவும் வருவது
ஈ) சொற்களின் இடையிர் ய், ர், ழ் மெய்களைத் தொடர்ந்து ஈரொற்றாய் வருவது
**விடை :** ஈ) சொற்களின் இடையிர் ய், ர், ழ் மெய்களைத் தொடர்ந்து ஈரொற்றாய் வருவது

## மொழியை ஆள்வோம் – சான்றோர் சித்திரம்

தமிழிசை இயக்கத்தின் தந்தை என்று போற்றப்படும் ஆபிரகாம் பண்டிதர், தென்காசிக்கு அருகேயுள்ள சாம்பவர் வடகரை என்னும் சிற்றூரில் பிறந்தவர். இளமையிலேயே புகைப்படக்கலை, அச்சுக்கலை, சோதிடம், மருத்துவம், இசை ஆகிய துறைகளில் பெருவிருப்பம்கொண்டு, நேரம் கிடைக்கும்போதெல்லாம் அதன் நுட்பங்களைப் பயின்றார். திண்டுக்கல்லில் ஆசிரியராகப் பணியாற்றும்போதே சித்தமருத்துவத்தில் சீரிய அறிவு பெற்று, மக்களால் அன்புடன் 'பண்டுவர்' (மருத்துவர்) என்று அழைக்கப்பட்டார். சில ஆண்டுகள் பணியாற்றியபின் அதைவிடுத்து முழுமையாகச் சித்த மருத்துவத்தில் கவனம் செலுத்தினார். தஞ்சையில் குடியேறினார். மக்கள் அவரைப் 'பண்டிதர்' என அழைக்கத் தொடங்கினர். பண்டைத் தமிழ் நூல்களையெல்லாம் ஆழ்ந்து கற்று, 'சங்கீத வித்தியா மகாஜன சங்கம்' என்னும் அமைப்பை உருவாக்கி, தமது சொந்தச் செலவிலேயே தமிழிசை மாநாடுகள் நடத்தினார். அனைத்திந்திய அளவில் நடந்த இசை மாநாடுகளுக்கும் சென்று உரையாற்றினார். அவருடைய இசைத்தமிழ்த் தொண்டின் சிகரம் 'கருணாமிர்த சாகரம்'. எழுபத்தோராண்டுகள் வாழ்ந்து, தமிழுக்குத் தொண்டு செய்தவர் ஆபிரகாம் பண்டிதர்.

**வினாக்களுக்கு விடையளிக்க.**

**1. உடனிலை மெய்ம்மயக்கச் சொற்களை எடுத்து எழுதுக.**

இயக்கம், என்னும், சிற்றூரில், மருத்துவம், மக்கள், சித்த, மருத்துவத்தில், செலுத்தி, அழைக்க, அமைப்பை, உருவாக்கி, நடத்தினார்.

**2. வேற்றுநிலை மெய்ம்மயக்கச் சொற்களை எடுத்து எழுதுக.**

தந்தை, என்று, பண்டிதர், பிறந்தவர், பயின்றார், அன்புடன், பண்டுவர், ஆண்டு, நடந்த.

**3. உடனிலை மெய்ம்மயக்கமாகவும், வேற்றுநிலை மெய்ம்மயக்கமாகவும் உள்ள சொற்களை எழுதி, மெய்களை அடிக்கோடிடுக.**

விரு<u>ப்ப</u>ம், க<u>ல்லி</u>ல், அழை<u>க்க</u>, எ<u>ல்லா</u>ம், வி<u>த்தி</u>யா – உடனிலை மெய்ம்மயக்கம்.

கொ<u>ண்டு</u>, நு<u>ட்ப</u>ம், தி<u>ண்டு</u>, தொட<u>ங்கி</u>, நூ<u>ல்க</u>ளை, ச<u>ங்கீ</u>த – வேற்றுநிலை மெய்ம்மயக்கம்.

www.Padasalai.Net

**4. கீழ்க்காணும் வடமொழிச் சொற்களைத் தமிழாக்குக.**

அ) சங்கீதம் – இசை ஆ) வித்தியா – கலையறிவு இ) மகாஜனம் – பெருமக்கள் ஈ) சாகரம் – கடல் (ஆழி)

**5. இலக்கணக்குறிப்பும் பகுபத உறுப்பிலக்கணமும் தருக.**

**அ) பயின்றார் – படர்க்கைப் பலர்பால் இறந்தகால வினைமுற்று.**

**பயின்றார்** – பயில் (ன்) + ற் + ஆர் : **பயில்** – பகுதி, 'ல்', 'ன்' ஆனது விகாரம், **ற்** – இறந்தகால இடைநிலை, **ஆர்** – பலர்பால் வினைமுற்று விகுதி.

**ஆ) தொடங்கினார் – படர்க்கைப் பலர்பால் இறந்தகால வினைமுற்று.**

**தொடங்கினார்** – தொடங்கு + இன் + ஆர்

**தொடங்கு** – பகுதி, **இன்** – இறந்தகால இடைநிலை, **ஆர்** – பலர்பால் வினைமுற்று விகுதி.

**விடைக்கேற்ற வினா அமைக்க.**

1. சித்த மருத்துவத்தில் சீரிய அறிவு பெற்ற ஆபிரகாம் பண்டிதர், மக்களால் 'பண்டுவர்' என்று அன்புடன் அழைக்கப்பட்டார்.

**வினா :** ஆபிரகாம் பண்டிதர், மக்களால் என்னவென்று, எவ்வாறு அழைக்கப்பட்டார்?

2. ஆபிரகாம் பண்டிதருடைய இசைத்தமிழ்த் தொண்டின் சிகரம் 'கருணாமிர்த சாகரம்' என்பது.

**வினா :** 'கருணாமிர்த சாகரம்' என்பது எது?

**தமிழாக்கம் தருக**

1. Just living is not enough. One must have sunshine, freedom and a little flower - Hans Anderson.

ஏதோ வாழ்ந்தோம் என்பதுமட்டும் போதாது. ஒருவன், சூரிய ஒளியில் பிரகாசித்துச் சுதந்திரமாக ஒரு சிறு மலர்போல் விளங்க வேண்டும். – ஹென்ஸ் ஆண்டர்சன்

2. In nature, light creats the colour. In the picture, colour creates the light - Hans Hofmann.

இயற்கையில், ஒளி என்பது வண்ணங்களைக் காட்சிப்படுத்துகிறது. ஓவியங்களில், வண்ணங்கள் ஒளியை உருவாக்குகின்றன. – ஹென்ஸ் ஹோஃப்மன்

3. Look deep into nature and then you will - understand everything better - Albert Einstein

இயற்கையை ஆழ்ந்து நோக்குங்கள்; அப்போது எல்லாவற்றைப் பற்றியும் தெளிவாகப் புரிந்து கொள்ளலாம். – ஆல்பர்ட் ஐன்ஸ்டின்

4. Simplicity is nature's first step, and the last of art - Philip James Bailey.

எளிமை என்பது இயற்கையின் முதல் படி; அதுவே கலையின் இறுதி நிலை – பிலிப் ஜேம்ஸ் பெய்லி

5. Roads were made for journeys not destination - Confucius.

சாலைகள், பயணம் செய்வதற்காக உருவாக்கப்பட்டவை. அவையே குறிப்பிட்ட இடங்கள் அல்ல. – கன்ஃபுஷியஸ்.

**மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக.**

| | | |
|---|---|---|
| 1. உலை, உளை, உழை | 2. வலி, வளி, வழி | 3. கலை, களை, கழை |
| 4. கனை, கணை | 5. குரை, குறை | 6. பொரி, பொறி |

எ–கா: **1. உலை, உளை, உழை :**

மன உளைச்சல் தீரவும், வீட்டில் உலை கொதிக்கவும் உழைக்க வேண்டும்.

2. **வலி, வளி, வழி :** கடுமையான வளி வீசியதால், வழி அறியாமல் ஓடி விழுந்ததால், உடலுக்கு வலி ஏற்பட்டது.
3. **கலை, களை, கழை :** இனிக்கும் கழைப் பயிரில், களை எடுப்பது ஒரு கலை.
4. **கனை, கணை :** குதிரை கனைத்ததால், வீரன் கணை வீசினான்.
5. **குரை, குறை :** நாய் குரைக்காமல் போனது பெரிய குறைதான்.
6. **பொரி, பொறி :** சோளம் பொரிக்கப் பொறியைப் பயன்படுத்துகின்றனர்.

MERCY PUBLICATIONS - CHENNAI

**கீழ்க்காண் விளம்பரத்தைப் பத்தியாக மாற்றி அமைக்க.**



உடல் வளர்த்தேன்! உயிர் வளர்த்தேன்!!

**இயற்கை உணவுத் திருவிழா**

**நாள்** : தை 5முதல் 11வரை **நேரம்** : மாலை 6–10 மணி

**இடம்** : தீவுத்திடல், சென்னை

| | | |
|---|---|---|
| ஆவாரம்பூச் சாறு | தூதுவளைச் சாறு | குதிரைவாலிப் பொங்கல் |
| சாமைப் பாயசம் | வாழைப்பூ வடை | கேழ்வரகு உப்புமா |
| தினைப் பணியாரம் | கம்புப் புட்டு | வல்லாரை அப்பளம் |
| அகத்திப்பூப் போண்டா | முடக்கத்தான் தோசை | முள்முருங்கை அடை |

இன்னும் பல......

## செய்திப் பத்தி

சென்னை தீவுத்திடலில் தை மாதம் 5முதல் 11வரை மாலை 6முதல் இரவு 10மணிவரை, இயற்கை உணவுத் திருவிழா நடைபெற இருக்கிறது. அங்கு ஆவாரம்பூச் சாறு, குதிரைவாலிப் பொங்கல், வாழைப்பூ வடை, தினைப் பணியாரம், வல்லாரை அப்பளம், முடக்கத்தான் தோசை, தூதுவளைச் சாறு, சாமைப் பாயசம், கேழ்வரகு உப்புமா, கம்புப் புட்டு, அகத்திப்பூப் போண்டா, முள்முருங்கை அடை மற்றும் பலவும் கிடைக்கும். இவற்றை உண்டு உடலையும், உயிரையும் பேணி வளருங்கள்.

## நயம் பாராட்டுக

மீன்கள்கோடி கோடிசூழ வெண்ணிலாவே! ஒரு
வெள்ளியோடம்போல வரும் வெண்ணிலாவே!

வளர்ந்துவளர்ந்து வந்த வெண்ணிலாவே! மீண்டும்
வாடிவாடிப் போவேதேனோ? வெண்ணிலாவே!

கூகை ஆந்தைபோல நீயும் வெண்ணிலாவே! பகல்
கூட்டினில் உறங்குவாயோ? வெண்ணிலாவே!

பந்தடிப்போம் உன்னையென்று வெண்ணிலாவே! நீயும்
பாரில்வர அஞ்சினையோ? வெண்ணிலாவே!

– **கவிமணி**

**ஆசிரியர் :** இப்பாடலைப் பாடியவர், 'கவிமணி' என்னும் சிறப்புப் பெயர் பெற்ற 'தேசிக விநாயகம்' ஆவார். இவரே முதன்முதலில் குழந்தைகளுக்காக அறிவை வளர்க்கும், சிந்திக்கத் தூண்டும் இனிய, எளிய பாடல்களைப் பாடி வழங்கியவர். தொடக்கப்பள்ளியில் படித்த 'தோட்டத்தில் மேயுது வெள்ளைப் பசு' எனத் தொடங்கும் பாடலை எவரும் மறக்க முடியாது. இனிப் பாடல்செய்தி காண்போம்.

**திரண்ட செய்தி :** விண்ணில் வெண்ணிலவு பவனி வருகிறது. அது வளர்பிறையாக வானில் தோன்றும்போது, வெள்ளி ஓடம்போலக் காட்சி தருகிறது. விண்ணிலுள்ள மீன்கள் பலவும் அதனைச் சூழ்ந்திருப்பதுபோலத் தோன்றுகிறது. இப்படிச் சிறிது சிறிதாக வளர்ந்து முழுநிலவாக மாறி, ஒருநாள்மட்டுமே ஒளிவீசித் தோன்றும் முழுநிலவு, பின்னர்ச் சிறிது சிறிதாகத் தேய்ந்து, ஒருநாள் காணாமல் போய் நமக்கெல்லாம் வாட்டத்தை ஏற்படுத்துகிறது.

பகல் பொழுதில் உன்னைக் காணமுடிவதில்லையே! அப்போது நீ ஆந்தையைப் போலவும், கோட்டானைப் போலவும் எங்காவது கூட்டில் மறைந்து உறங்குகிறாயோ? உருண்டையாக இருப்பதனால் நாங்கள் உன்னைப் பந்தாக விளையாட எடுத்துக் கொள்வோம் என எண்ணி, இந்த உலகிற்கு வர அச்சப்படுகிறாயோ?

www.Padasalai.Net

**மையக்கருத்து :** நிலவு முழுமை அடைவதும், தேய்வதும், பகலில் கண்ணில் படாததும், மண்ணிற்கு வராததும் ஆகிய செயல்களுக்குத் தனக்குத் தோன்றிய காரணங்களைக் கூறி ஆறுதல் பெறுவதுபோலப் பாடியுள்ளமை, குழந்தைகளை மகிழச் செய்வதற்கேயாகும்.

**நயம் :** வெண்ணிலவு ஓடமாக விண்ணில் வலம் வருதல்; மீன்கள் சூழ்ந்திருத்தல்; வளர்ந்து முழுமை பெறுவது; தேய்ந்து வாடுவது; பகலில் காணாததற்குக் காரணமாகக் கூறும் உவமை; நிலத்தில் வாராமைக்குக் கண்டறிந்து கூறும் காரணம் – எல்லாம் சுவையானவை. தெளிவு இல்லாமல் இதுவோ, அதுவோ என ஐய உணர்வை வெளிப்படுத்துவது என எல்லாமும் சுவைதாம். இனிய கருத்தைக் குழந்தைகளுக்குப் புரியும் வகையில் எளிய சொற்களில் கூறுவதில் கவிஞரை மிஞ்ச ஒருவரும் இல்லை எனலாம். எல்லா அடிகளுமே 'வெண்ணிலாவே' என முடிந்து, 'இயைபு' என்னும் தொடை பெற்று ஓசை நயம் தருகிறது.

**வா**ளர்ந்து – **வா**டி; **கூ**கை – **கூ**ட்டினில்; **ப**ந்தடிப்போம் – **பா**ரில் – அடிமோனைத்தொடை.

ஒவ்வோர் அடியின் இறுதியிலும் 'வெண்ணிலாவே' என்னும் சீர் அமைந்து, இயைபுத் தொடை பெற்றுள்ளது.

'வளர்ந்து வளர்ந்து', 'வாடி வாடி' என்னும் அடுக்குத்தொடர்ச் சொற்கள் அமைந்து இனிமை பயக்கிறது.

பிறைவடிவை 'வெள்ளி ஓடம்போல்' என உவமித்துள்ளார்.

உவமை அணி அமைந்து, இரண்டிரண்டு அடிகளாய்க் 'கண்ணி' என்னும் 'சிந்து'ப் பாடலாக அமைந்து, இனிய சந்த நயம் பெற்றுள்ளது.

## மொழியோடு விளையாடு

**எண்ணங்களை எழுத்தாக்குக.**



படத்தைப் பார்த்தாயா? மரங்களை வெட்டியது யார்? மனிதன்தானே! ஒருமரம் வளர, எத்தனை ஆண்டுகளாகும்? வெட்டி வீழ்த்தவோ, சிலமணி நேரம் போதுமே! வெட்டியவனால் வளர்க்க முடியுமா? அந்த மரம் தந்த பயனை அறியாதவனா வெட்டியவன்? சுயநலம்! சுயநலம்! தன்சுகம் ஒன்றே கருத்து. காடுகளை அழித்தால் மழை வருமா? தூய காற்றுதான் கிடைக்குமா? சூரியன் ஏன் தகிக்கிறான்? மரங்களை வெட்டியவனை மட்டுமல்ல, அதைத் தடுக்காதவனையும் அழிக்கத்தானே தகிக்கிறான்! இந்த ஒற்றை மரமாவது இளைப்பாற நிற்குமா? இல்லை, இதையும் பாதியளவு வெட்டித்தானே விட்டுள்ளனர். மீதியையும் வெட்டுவர். அனுபவித்தாலும் புத்தி வராது. இது அழிவைப் பற்றி நினையாதவர் செயல்!

**புதிர்களில் மறைந்துள்ள சொற்களைக் கண்டுபிடிக்க.**

1. ஐந்தெழுத்துக்காரன்
   முதலிரண்டோ பாட்டெழுதுபவரின் பட்டம் (கவி)
   இரண்டும் மூன்றுமோ பசுப்பால் என்பதன் பின் இறுதி (ஆவின்)
   கடைசி இரண்டெழுத்தோ மானினத்தில் ஒரு வகையாம் (கலை)
   இரண்டும் ஐந்துமோ பொருளை விற்கத் தேவையாம் (விலை)
   அது என்ன? (கவின்கலை)
2. இறுதி இரண்டெழுத்தோ
   பழத்தின் முந்தைய பச்சைநிலை (காய்)
   தமிழ்க்கடவுளின் முற்பாதியை முதலிரு எழுத்துகளில் வைத்திருக்கும் (முரு)
   நடுவிலோ ஒரெழுத்து ஒருமொழி (கை)
   அதற்கும் முன் பொட்டு வைத்த ஙகரம் (ங்)
   சேர்த்தால் காயாவான் (காய்)
   பிரித்தால் நிலைமொழியில் மரமாவான் (முருங்கை)
   ஏழெழுத்துக்காரன் – அவன் யார்? (முருங்கைக்காய்)

இவைபோன்ற சிறுசிறு புதிர்க் கவிதைகளை எழுதிப் பழகுக.

MERCURY PUBLICATIONS - CHENNAI

**சுற்றுச்சூழல் விழிப்புணர்வு, இயற்கைப் பாதுகாப்புக் குறித்த முழக்கத்தொடர்கள் எழுதிக் காட்சிப்படுத்துக.**

எ – கா : 1. விதைப்பந்து எறிந்திடுவீர்! பூமிப்பந்து காத்திடுவீர்!
2. சிட்டுக்குருவிக்குக் கொஞ்சம் அரிசியிடு! உலக உயிர்களுக்கு உன் கருணையிடு!
3. மரம் ஒன்று நட்டு மழை பெற முயல்!
4. நீர் ஓடை அமைத்துத் தண்ணீரைத் தேக்கு!
5. மண்வளம் காக்க மாசுகளை அகற்று!

**வேளாண்மைத் தொடர்பான சொற்கள் விளக்க அகராதி ஒன்று உருவாக்குக.**

கலப்பை, ஏர், உழவு, பயிர், விளைவு, உரம், பூச்சிக்கொல்லி, மண்வெட்டி, தண்ணீர், வாய்க்கால், பாசனம், பாத்தி.

## நிற்க அதற்குத் தக

**முன்மாதிரியானவர்கள் என்று யாரைக் கருதுவீர்கள்? அவர்களிடமிருந்து நீங்கள் கற்றுக்கொள்ள விரும்பும் நற்பண்புகளைக் குறிப்பிடுக.**

| முன்மாதிரியானவர் | நான் விரும்பும் நற்பண்பு |
|---|---|
| தந்தை | நேரந்தவறாமை |
| தொடக்கப்பள்ளி ஆசிரியர் | எதற்கும் அஞ்சாமை |
| உறவினர் | எதையும் பெரிய துன்பமாக எண்ணாதவர் |

**கலைச்சொல் அறிவோம்**

இயற்கை வேளாண்மை – Organic Farming
மதிப்புக்கூட்டுப் பொருள் – Value Added Product
வேதி உரங்கள் – Chemical Fertilizers
வேர்முடிச்சுகள் – Root Nodes
அறுவடை – Harvesting
ஒட்டுவிதை – Shell Seeds
தூக்கணாங்குருவி – Weaver Bird
தொழுஉரம் – Farmyard Manure
தொழுஉரம் – Farmyard Manure

## உள்நிலைத் தேர்வு

நேரம் : 40 நிமிடங்கள் மதிப்பெண் : 30

**I. பலவுள் தெரிக.** **8 × 1 = 8**

1. பொருத்தமான இலக்கிய வடிவம் எது?
அ) ஏதிலிக் குருவிகள் – மரபுக் கவிதை ஆ) திருமலை முருகன் பள்ளு – சிறுகதை
இ) யானை டாக்டர் – குறும் புதினம் ஈ) ஐங்குறுநூறு – புதுக்கவிதை
2. ‘தரளம்’ என்ற சொல்லின் பொருள் ______.
அ) முத்து ஆ) பவளம் இ) மாணிக்கம் ஈ) வைடூரியம்
3. மண்ணுக்கு வளம் சேர்ப்பன ______.
அ) மண்புழு ஆ) ஊடுபயிர் இ) இயற்கை உரங்கள் ஈ) இவை மூன்றும்
4. பொருந்தாத ஒன்றைத் தேர்ந்தெடுக்க.
அ) காயா ஆ) குறிஞ்சி இ) பிடவம் ஈ) கொன்றை
5. கூற்றுகளைப் படித்துக் கீழ்க்காண்பனவற்றுள் சரியானதைத் தேர்க.
அ) நிலைமொழியின் ஈறு குற்றியலுகரமாகவும், வருமொழியின் முதல் உயிரெழுத்தாகவும் அமையும் போது, ‘உயிர்வரின் உக்குறள் மெய்விட்டு ஓடும்’ என்னும் விதியைப் பெறும்.
ஆ) நிலைமொழியின் ஈற்றில் இ ஈ ஐ வரும்போது வகர உடம்படுமெய் பெறும்.
இ) பண்புப்பெயர்ப் புணர்ச்சியில் ‘ஈறுபோதல்’ என்னும் விதியே முதன்மையானதாக விளங்கும்.
ஈ) தன்னொற்றிரட்டல் என்னும் விதி, பண்புப்பெயர்ப் புணர்ச்சிக்குப் பொருந்தும்.
i) அ, ஆ, இ சரி, ஈ தவறு ii) அ, இ, ஈ சரி, ஆ தவறு.
6. தவறான இணையைத் தேர்வு செய்க.
அ) மொழி + ஆளுமை – உயிர் + உயிர் ஆ) கடல் + அலை – உயிர் + மெய்
இ) தமிழ் + உணர்வு – மெய் + உயிர் ஈ) மண் + வளம் – மெய் + மெய்

MERCY PUBLICATIONS - CHENNAI

www.Padasalai.Net

7. ஐங்குறுநூறு – பிரித்தெழுத ______ என வரும்.
அ) ஐங் + குறுநூறு ஆ) ஐந்து + குறுநூறு
இ) ஐந்து + குறுமை + நூறு ஈ) ஐங்குறுமை + நூறு
8. 'பெருங்கலம்' என்னும் சொல்லிற்குரிய புணர்ச்சிவிதிகளைத் தேர்வு செய்க.
அ) ஈறுபோதல், தன்னொற்றிரட்டல் ஆ) ஈறுபோதல், இனமிகல்
இ) ஈறுபோதல், ஆதிநீடல் ஈ) ஈறுபோதல், இனையவும்

**II. எவையேனும் நான்கனுக்கு விடை தருக.** **4 × 2 = 8**

9. தமிழ்நாட்டின் மாநில மரம் – சிறு குறிப்பு வரைக.
10. ஏதிலியாய்க் குருவிகள் எங்கோ போயின – தொடரின் பொருள் யாது?
11. 'தொழுவுரம்' என்பது என்ன?
12. அலர்ந்து – பகுபத உறுப்பிலக்கணம் தருக.
13. வளருங் **காவில் முகில்தொகை ஏறும்** – பொன்
மாடம் எங்கும் அகிற்புகை நாறும் – அடிக்கோடிட்ட தொடர் குறிப்பிடுவது என்ன?

**III. எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** **2 × 4 = 8**

14. வேதிக்கலப்பில்லாத பூச்சிக்கொல்லி நடைமுறைக்குச் சாத்தியமா? – நும் கருத்தை எழுதுக.
15. காற்றில் ஆடும் புல் வீடுகளுக்கு அழகிய பெரியவன் தரும் ஒப்பீடு யாது? ஏன்?
16. இறகு எழுதியது காவியமானதைப் பிரமிள் பார்வையில் விளக்குக.
17. சான்று தந்து விளக்குக : அ. குற்றியலுகரப் புணர்ச்சி, ஆ. முற்றியலுகரப் புணர்ச்சி.

**IV. பின்வரும் வினாக்களில் ஏதேனும் ஒன்றனுக்கு விடை தருக.** **1 × 6 = 6**

18. 'சுற்றுச்சூழலை வளப்படுத்துவது இயற்கை வேளாண்மையே' என்னும் தலைப்பில் மேடைப்பேச்சிற்கான உரையை உருவாக்குக
19. 'திருமலை முருகன் பள்ளு' கூறும் வடகரை, தென்கரை நாட்டுப் பாடல்கள்வழி இயற்கை வளங்களை விவரிக்க.
20. 'யானை டாக்டர்' கதை வாயிலாக இயற்கை, உயிரினப் பாதுகாப்பு ஆகியவை குறித்து நீவிர் அறிந்தவற்றைத் தொகுத்து எழுதுக.

# இயல் – 3

## உரைநடை உலகம்

## மலை இடப்பெயர்கள் : ஓர் ஆய்வு

(ஆர். பாலகிருஷ்ணன் இ. ஆ. ப.)

### குறுவினா

**1. 'கோட்டை' என்னும் சொல் திராவிட மொழிகளில் எவ்வாறு எடுத்தாளப்பட்டுள்ளது?**

★ 'கோட்டை' என்னும் சொல், கோட்ட, கோடு, கோட்டே, கோண்டே, க்வாட் எனத் திராவிட மொழிகளில் எடுத்தாளப்படுகிறது.

### கூடுதல் வினாக்கள்

**2. திராவிடப் பழங்குடி இனப்பெயர்கள் எதன் அடிப்படையில் ஆக்கப்பெற்றுள்ளன?**

★ இந்தியாவில் வாழும் பல்வேறு திராவிடப் பழங்குடி இனக்குழுப் பெயர்கள், மலை, குன்று என்று பொருள்தரும் சொற்களை அடிப்படையாகக் கொண்டு ஆக்கப்பெற்றுள்ளன.

**3. திராவிட மலைவாழ் மக்களின் குடியிருப்புகள் எவற்றை உணர்த்துகின்றன?**

★ திராவிட மலைவாழ் மக்களின் குடியிருப்புகள், அப்பழங்குடியினரின் மலைசார்ந்த வாழ்வியல் சமூக, சமயக் கூறுபாடுகளைக் குறித்த புரிதலை உணர்த்துகின்றன.

**4. மலை, குன்று சொல்லாட்சியை உறுதி செய்வது எது?**

★ 'மலை' என்பது உயரமானதையும், 'குன்று' என்பது உயரம் குறைவானதையும் குறிக்கின்றன. மலை, குன்று என்னும் சொல்லாட்சிகள் வெளிப்படுத்தும் உயர வேறுபாட்டை, வடமேற்குப் பகுதிகளில் பயன்படுத்தப்படும் மலை சார்ந்த இடப்பெயர்கள் உறுதி செய்வது வியப்பளிப்பதாக உள்ளது.

MERCY PUBLICATIONS - CHENNAI

 www.Padasalai.Net

**5. ‘வரை’ என்னும் சொல்வழக்குக் குறித்து அறியப்படுவது யாது?**

★ ‘நுனிமுதல் அடிவரை’, ‘அடிமுதல் நுனிவரை’ என்னும் தொடர்களில் ‘வரை’ என்ற சொல், ‘விளிம்பு’ என்னும் பொருளில் பயன்படுத்தப்பட்டுள்ளது.

**6. பழந்தமிழ்ச் சமூகத்திற்கு ஆணிவேர் அடையாளங்களாகத் திகழும் ஊர்கள் எவை?**

★ கொற்கை, வஞ்சி, தொண்டி என்னும் ஊர்கள், பழந்தமிழ்ச் சமூகத்திற்கு ஆணிவேர் அடையாளங்களாக திகழும் ஊர்களாகும்.

## சிறுவினா

**1. ‘மலை, மனித வாழ்வில் சிறப்பிடம் பெற்றுள்ளது’ என்பதை எடுத்துக்காட்டுகளுடன் விவரிக்க.**

★ மனித சமூகத்தின் ஆதிநிலம் மலை.

★ மலைநிலத்தைத் தமிழ் இலக்கியம், ‘குறிஞ்சி’ என்றே குறிப்பிடுகிறது.

★ திராவிடர்களைக் கமில் சுவலபில், ‘மலைநில மனிதர்கள்’ என்கிறார்.

★ இந்தியப் பழங்குடியினர் பெயர்கள், மானுடப் புவிச்சூழலை வெளிப்படுத்துகின்றன.

★ பழங்குடியினர், உயரமான இடத்தில் ஓடும் சிற்றாறு, ஓடைகளை ஒட்டிக் குடியிருப்பை அமைத்துள்ளனர்.

★ அவை, பழங்குடியினரின் மலைசார்ந்த சமூக, சமயக் கூறுபாடு சார்ந்த புரிதலைத் தருகின்றன.

## கூடுதல் வினாக்கள்

**2. கடந்தகால வரலாற்றிற்கான அடையாளச் சின்னங்களாக ஆசிரியர் கூறியுள்ளன யாவை? (அல்லது) கொற்கை, வஞ்சி, தொண்டி வளாகம் – குறிப்பு எழுதுக.**

★ கொற்கை, வஞ்சி, தொண்டி என்னும் ஊர்ப் பெயர்கள், பழந்தமிழரின் அரசியல், பொருளியல், பண்பாடு களின் விளைவால் உருவானவை. சங்ககாலப் பழந்தமிழ்ச் சமூகத்திற்குக் கொற்கையும், வஞ்சியும், தொண்டியும் ஆணிவேர் அடையாளங்கள்.

★ இப்பெயர்களில் எதையும் வடமொழி இலக்கியங்கள் பதிவு செய்யவில்லை. ஆனால், சங்ககால மன்னர்கள், குறுநிலத் தலைவர்கள் ஆகியவர்களின் தலைநகரங்கள், துறைமுகங்கள், போர்க்களங்கள் ஆகியவற்றின் பெயர்களோடு, வடமேற்குப் பகுதிகளில் உள்ள ஊர்ப்பெயர்கள் பொருந்திப் போகின்றன.

★ கொற்கை, வஞ்சி, தொண்டி காட்டும் பொதுத்தன்மைகள் மிக முக்கியமானவை. இவை கடந்தகால வரலாற்றிற்கான அடையாளச் சின்னங்கள் என ஆசிரியர் கூறுகிறார்.

**3. கொற்கை, வஞ்சி, தொண்டிவளாகம் – குறிப்புத் தருக.**

★ கொற்கை, வஞ்சி, தொண்டிவளாகம் என்னும் ஊர்ப்பெயர்கள், பழந்தமிழரின் அரசியல், பொருளியல், பண்பாடுகளின் விளைவால் உருவானவை. சங்ககாலப் பழந்தமிழ்ச் சமூகத்திற்குக் கொற்கையும், வஞ்சியும், தொண்டியும் ஆணிவேர் அடையாளங்கள்.

★ சங்ககால மன்னர்கள், குறுநிலத் தலைவர்கள் ஆகியவர்களின் தலைநகரங்கள், துறைமுகங்கள், போர்க்களங்கள் ஆகியவற்றின் பெயர்களோடு, வடமேற்குப் பகுதிகளில் உள்ள ஊர்ப்பெயர்கள் பொருந்திப் போகின்றன. இவை, கடந்தகால வரலாற்றிற்கான அடையாளச் சின்னங்கள்.

**4. ‘மலை’, ‘கோட்டை’ என்னும் சொற்களை அடிப்படையாகக் கொண்ட திராவிட இனப்பெயர்கள் யாவை?**

★ மால் பஹாடியா (ஜார்கண்ட்), மல அரயன், மல குறவன், மல மூத்தன், மல பணிக்கர், மலயன், மல வேடா (கேரளம், மலேரு (கர்நாடகம்), என்னும் பழங்குடி இனப்பெயர்கள், ‘மலை’ என்னும் சொல்லடியால் உருவான திராவிட இனப்பெயர்களாகும்.

★ கோட்டா (நீலகிரி), கொண்ட தோரா (ஆந்திரம்), கொண்டு, கொய்டர் (ஒடிஸா) என்னும் பழங்குடி திராவிட இனப்பெயர்கள், ‘கோட்டை’ என்பதன் அடிப்படையில் உருவானவை.

MERCY PUBLICATIONS - CHENNAI

www.Padasalai.Net

## நெடுவினா

1. "இயற்கையோடு இயைந்த வாழ்ந்த தமிழர்களின் வாழ்வில் இருப்பிடங்களின் பெயர்களும் இயற்கையோடு இயைந்தே இருந்தன" – கூற்றினை மெய்ப்பிக்க.

**மனிதன் தோன்றியது மலைநிலம்:**

★ மலை, மனித சமூகத்தின் ஆதி நிலமாகும். தமிழரின் பண்டைப் பதிவுகள், கடவுளையும் மலையையும் வாழ்வில் தொடர்புபடுத்துவனவாக விளங்குகின்றன.

★ மலை, தமிழ் இலக்கியங்களில் 'குறிஞ்சி' எனக் குறிக்கப்படுகிறது. திராவிடப் பழங்குடிகளின் இனக்குழுப் பெயர்கள், மலைசார்ந்த மானுடப் புவிச்சூழலை வெளிப்படுத்துகின்றன.

★ இயற்கையோடு இயைந்த வாழ்வு :

★ பழங்குடியினர் ஓடும் நீரையே குடிநீராகப் பயன்படுத்தினர். தம் குடியிருப்புப் பகுதியைவிட உயரமான இடத்தில் ஓடும் சிற்றாறுகள், ஓடைகளில் நீர் எடுத்துப் பருகினர்.

★ மலைஉச்சியில் அமைந்த பழங்குடித் தலைவரின் வீடு, வாழ்விட வடிவமைப்பு, வாழ்வியலில் உயரமான இடங்கள் செலுத்தும் தாக்கத்தைக் காட்டுகின்றன.

**சொல்வழக்கு :**

★ சிந்துவெளி, திராவிட மலைவாழ் மக்களின் அன்றாடப் புழங்கு சொற்களின் தொடர்ச்சி சிந்திக்கத்தக்கதாகும்.

★ தென்னிந்திய மலைவாழ் மக்களிடையே மலை, மலா, மலே என்னும் சொற்கள் வழங்குகின்றன.

★ 'மலை', 'குன்று' என்னும் சொல்லாட்சி, மலை சார்ந்த மக்களிடம் வழங்குகிறது சிறப்பாகும்.

**கோட்டை :**

★ 'கோட்டை' என்னும் சொல், செயற்கையான காப்பு அரண்களான கோட்டைகளைக் கட்டி எழுப்பிய நகர நாகரிகத்தின் பின்னணியில் தோன்றின என்பதைவிட, தொன்மையான மலை சார்ந்த வாழ்வியல் சூழலில் உருப்பெற்றிருக்கும் என்பதே உண்மை.

**மலைப் பெயர்களின் நீட்சி :**

★ வடமேற்கு நாடுகளில் கண்டறியப்பட்ட சான்றுகள், பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் நெடுமலைகளோடு பொருந்திப் போகும் திராவிடர்களின் மலைப் பெருமிதத்தின் நீட்சியாக உள்ளன. அப்பகுதிகளில் திராவிடர் வாழ்ந்த சான்றுகளை உறுதி செய்கின்றன.

★ இவற்றால், இயற்கையோடு இயைந்த வாழ்வு நடத்திய தமிழர்களின் வாழ்வில், இருப்பிடங்களின் பெயர்களும் இயற்கையோடு இயைந்தே இருந்தமை புலப்படும்.

## பலவுள் தெரிக

1. கூற்று : 'கோடு' என்பது தமிழ்ச்சொல் ஆகும்.
விளக்கம் : 'கோடு' என்னும் சொல்லுக்கு மலையுச்சி, வல்லரண், கோட்டை என்னும் பொருள்களும் உண்டு.
அ) கூற்று சரி, விளக்கம் தவறு ஆ) கூற்றும் சரி, விளக்கமும் சரி
இ) கூற்று தவறு, விளக்கம் சரி ஈ) கூற்றும் தவறு, விளக்கமும் தவறு
**விடை :** ஆ) கூற்றும் சரி, விளக்கமும் சரி

## கூடுதல் வினாக்கள்

2. அகத்திணை இயல், மலை மற்றும் மலைசார்ந்த பகுதியை, ______ எனக் குறித்தது.
அ) பாலை ஆ) முல்லை இ) குறிஞ்சி ஈ) மருதம்
**விடை :** இ) குறிஞ்சி

3. மலை. குன்றுகளின் பெயர்கள் குறித்த ஆய்வை, ______ என்னும் கலைச்சொல் குறிக்கும்.
அ) Biology ஆ) Geology இ) Zoology ஈ) Orology
**விடை :** ஈ) Orology

MERCY PUBLICATIONS - CHENNAI

4. முருகனைச் “சேயோன் மேய மைவரை உலகம்” எனக் கூறும் நூல் ______/
அ) திருமுருகாற்றுப்படை ஆ) நற்றிணை
இ) தொல்காப்பியம் ஈ) நன்னூல்
விடை : இ) தொல்காப்பியம்

5. “விண்பொரு நெடுவரை குறிஞ்சிக் கிழவ” எனக் குறிப்பிடும் நூல் ______.
அ) தொல்காப்பியம் ஆ) புறநானூறு
இ) திருமுருகாற்றுப்படை ஈ) பரிபாடல்
விடை : இ) திருமுருகாற்றுப்படை

6. திராவிடர்களை ‘மலைநில மனிதர்கள்’ என அழைத்தவர் ______.
அ) ஆர். பாலகிருஷ்ணன் ஆ) அண்ணாமலையார்
இ) கமில் சுவலபில் ஈ) தி. சு. செல்லப்பா
விடை : இ) கமில் சுவலபில்

7. பால் எருமைக் கொட்டில்களைப் புனித இடமாகக் கருதுபவர் ______.
அ) குறும்பர் ஆ) ஜதாப்பு இ) தோடர் ஈ) கோட்டா
விடை : இ) தோடர்

8. ‘கடையெழு வள்ளல்கள்’ வாழ்ந்த இடம் ______.
அ) பாலை ஆ) காடு இ) மலை ஈ) தீவு
விடை : இ) மலை

9. ‘கொண்டா தோரா’ இனக் குழுவினர் வாழும் பகுதி ______.
அ) தமிழ்நாடு ஆ) ஆந்திரப்பிரதேசம்
இ) ஒடிஸா ஈ) பீஹார்
விடை : ஆ) ஆந்திரப்பிரதேசம்

10. வீடுகளில் மேடைகள் அமைக்க முக்கியத்துவம் கொடுத்தோர் ______.
அ) கோண்டு இனத்தார் ஆ) தோடர்
இ) ஜதாப்பு ஈ) கொய்டெர் இனத்தவர்
விடை : ஆ) தோடர்

11. தாழ்வாரத்தை ‘மெட்டு’ எனக் குறிப்பிட்டவர் ______.
அ) ஜதாப்பு ஆ) குறும்பர் இ) தோடர் ஈ) கோண்டு
விடை : ஆ) குறும்பர்

12. ‘மலை’ என்னும் திராவிடச் சொல், வடமொழியில் ______ என வழங்கப்படுகிறது.
அ) வரை ஆ) மலா இ) மலே ஈ) மலய
விடை : ஈ) மலய

13. ‘விளிம்பு’ என்னும் பொருள் தரும் சொல் ______.
அ) முதல் ஆ) அடி இ) நுனி ஈ) வரை
விடை : ஈ) வரை

14. ‘தோணிமலை’ என்னும் பெயர் உள்ள இடம் ______.
அ) கேரளம் ஆ) ஆந்திரம் இ) கர்நாடகம் ஈ) தமிழகம்
விடை : இ) கர்நாடகம்

15. காவல்மிகு காப்பரண் கொண்ட மதில் சூழ்ந்த கட்டமைப்பு, ______ என வழங்கப்பட்டது.
அ) தோணிமலை ஆ) மலையரண் இ) கோட்டை ஈ) காட்டரண்
விடை : இ) கோட்டை

MERCY PUBLICATIONS - CHENNAI

www.Padasalai.Net

16. 'மலை இடப்பெயர்கள் ஓர் ஆய்வு' கட்டுரை இடம்பெற்றுள்ள நூல் ______.
   அ) கொற்கை, வஞ்சி, தொண்டி வளாக ஆய்வு   ஆ) அன்புள்ள அம்மா
   இ) சிந்துவெளிப் பண்பாட்டின் திராவிட அடித்தளம்   ஈ) சிறகுக்குள் வானம்
   **விடை :** இ) சிந்துவெளிப் பண்பாட்டின் திராவிட அடித்தளம்

17. சரியானதைத் தேர்க.
   அ) 'வரை' என்ற சொல் கோடு, மலை, சிகரம் என்னும் பொருள்களில் பயன்படுத்தப்படுகிறது.
   ஆ) நுனிமுதல் அடிவரை; அடிமுதல் நுனிவரை என்ற தொடர்களில், வரை என்பது விளிம்பு என்ற பொருளில் பயன்படுத்தப்பட்டுள்ளது.
   1. அ, ஆ இரண்டும் சரி   2. அ சரி, ஆ – தவறு
   3. அ தவறு, ஆ சரி   4. அ, ஆ இரண்டும் தவறு
   **விடை :** 1. அ, ஆ இரண்டும் சரி

18. கீழ்க்காணும் கூற்றுகளுள் தவறானதைத் தேர்க.
   கொற்கை, வஞ்சி, தொண்டி என்பன
   அ) பழந்தமிழ் ஊர்ப் பெயர்கள்
   ஆ) அரசியல், பொருளியல், பண்பாட்டில் உருவானவை
   இ) ஆணிவேர் அடையாளங்கள்
   ஈ) வடமொழி இலக்கியப் பிரிவுகள்
   **விடை :** ஈ) வடமொழி இலக்கியப் பிரிவுகள்

19. கீழ்க்காணும் கூற்றுகளை ஆராய்ந்து தவறானதைத் தேர்க.
   அ) மலை, மனித சமூகத்தின் ஆதி நிலம்
   ஆ) மலை, மனித முன்னேற்றத்திற்கு ஒரு தடை
   இ) மலை, மற்றும் மலை சார்ந்த பகுதி குறிஞ்சி
   ஈ) மலை, திராவிடப் பழங்குடிகளின் வாழ்விடம்
   1. அ தவறு   2. இ தவறு   3. ஆ தவறு   4. ஈ தவறு
   **விடை :** 3. ஆ தவறு

**விடைக்கேற்ற வினா அமைக்க.**

1. நீலகிரியில் உள்ள தோடர் இனத்தவர், பால் எருமைக் கொட்டில்களைப் புனித இடமாகக் கருதுபவர்.
   **வினா :** பால் எருமைக் கொட்டில்களைப் புனித இடமாகக் கருதுபவர் எவர்?
2. திராவிடச் சொல்லான 'மலை' என்பது. சமஸ்கிருத மொழியில் 'மலய' என்று வழங்கப்படுகிறது.
   **வினா :** திராவிடச் சொல்லான 'மலை' என்பது, சமஸ்கிருத மொழியில் எவ்வாறு வழங்கப்படுகிறது?
3. 'நுனிமுதல் அடிவரை' மற்றும் 'அடிமுதல் நுனிவரை' என்ற தொடர்களில், 'வரை' என்ற சொல் 'விளிம்பு' என்ற பொருளில் பயன்படுத்தப்பட்டுள்ளது.
   **வினா :** 'வரை' என்ற சொல், எந்தெந்தத்தொடர்களில் 'விளிம்பு' என்ற பொருளில் பயன்படுத்தப் பட்டுள்ளது?
4. தமிழ்மொழியில் 'கோட்டை' என்ற சொல், காவல் மிகுந்த காப்பரண் கொண்ட மதில்சுவர்களால் சூழப்பட்ட கட்டமைப்பைக் குறிக்கிறது.
   **வினா :** தமிழ்மொழியில் 'கோட்டை' என்ற சொல், எக்கட்டமைப்பைக் குறிக்கிறது?
5. 'கோடு' என்ற தமிழ்ச் சொல்லுக்கு மலையுச்சி, சிகரம், மலை என்ற பொருள்களோடு வல்லரண், கோட்டை என்ற பொருள்களும் உண்டு.
   **வினா :** 'கோடு' என்ற தமிழ்ச் சொல்லுக்கு எவ்வெப் பொருள்கள் உண்டு?
6. சங்க இலக்கியம் காட்டும் பழந்தமிழ்ச் சமூகத்திற்குக் கொற்கை, வஞ்சி, தொண்டி ஆகிய பெயர்கள், ஆணிவேர் அடையாளங்கள் ஆகும்.
   **வினா :** சங்க இலக்கியம் காட்டும் பழந்தமிழ்ச் சமூகத்திற்கு எப்பெயர்கள் ஆணிவேர் அடையாளங்கள் ஆகும்?

MERCY PUBLICATIONS - CHENNAI

www.Padasalai.Net

# கவிதைப்பேழை

## 1. காவடிச்சிந்து

### (சென்னிகுளம் அண்ணாமலையார்)

### குறுவினா

1. **காவடிச்சிந்து என்பது யாது?**

★ தமிழ்நாட்டில் பண்டைக்காலம்முதல் நாட்டார் வழக்கிலுள்ள இசை மரபே, 'காவடிச்சிந்து' எனப்படும்.

### கூடுதல் வினாக்கள்

2. **தன் காவடிச்சிந்தின் சிறப்பாக அண்ணாமலைதாசன் குறிப்பிடுவது யாது?**

★ நான் பாடியது, உலகம் போற்றும் 'காவடிச்சிந்து' என்றும், இனிமையான தன் கவிமாலையை, மலைபோல் அகன்ற தோள்களில் முருகன் சார்த்திக்கொள்கிறான் என்றும் கூறுகிறார்.

3. **கழுகுமலை முருகன் கோவில் அமைப்பை அண்ணாமலையார் எவ்வாறு கூறியுள்ளார்?**

★ கடலில் வாழும் மீன், மகரம்போன்ற உருவ அமைப்புக் கொண்ட கொடிகள் எல்லாம் சிறக்கக் கழுகுமலை முருகன் கோவில் திகழ்வதாக அண்ணாமலையார் கூறுகிறார்.

4. **திருப்புகழ் முழக்கம் எங்குச் சென்றடைவதாகக் காவடிச்சிந்து கூறுகிறது?**

★ அமராவதிப் பட்டினத்திலுள்ள தேவர்களின் செவிகளைச் சென்றடைவதாகக் காவடிச்சிந்து கூறுகிறது.

5. **முருகன் அருள்பெற்று அடியார் எவ்வாறு இன்பம் அடைவர்?**

★ காவடியைத் தோளில் தூக்கிக் கொண்டு, கனலில் உருகிய மெழுகென முருகனை நோக்கிப் பக்தியோடு பாடி ஆடி வரும் அன்பர்கள் அனைவரும், முருகனின் அருளைப் பெற்று இன்பம் அடைவர்.

### சிறுவினா

1. **தமிழ்ப் பண்பாட்டின் அடையாளம் காவடிச்சிந்து என்பதை விளக்குக.**

★ 'காவடி' என்பது, தமிழ்ப் பண்பாட்டுக் கூறுகளுள் ஒன்று. உலகின் பல்வேறு பகுதிகளிலும் வாழும் தமிழ்மக்கள், குன்றுதோறும் வீற்றிருக்கும் முருகனின் கோவிலை நோக்கி வழிபடச் செல்வர்.

★ அப்போது முருகப்பெருமானின் வழிபாட்டிற்காகப் பால் முதலான வழிபாட்டுப் பொருள்களைக் காவடிகளில் கொண்டு செல்வர். அப்படிச் செல்லும்போது வழிநடைக் களைப்புப் போக, முருகப் பெருமானின் புகழைச் சிந்துவகைப் பாடலாகப் பாடுவர்.

### கூடுதல் வினாக்கள்

2. **அண்ணாமலையார் குறித்து அறிவன யாவை?**

★ சென்னிகுளம் என்னும் ஊரினரான அண்ணாமலையார், தம் 18ஆம் வயதில் ஊற்றுமலைக் குறுநிலத் தலைவரான 'இருதயாலய மருதப்பத் தேவர்' அரசவைப் புலவராக இருந்தார். இவர் பாடிய காவடிச்சிந்து, அருணகிரியாரின் திருப்புகழ்த் தாக்கத்தால் விளைந்த சிறந்த சந்த இலக்கியம்.

★ காவடிச்சிந்து பாடலுக்குரிய மெட்டுகள், அண்ணாமலையாராலேயே அமைக்கப்பட்டவையாகும். எனவே, 'காவடிச்சிந்தின் தந்தை' எனப் போற்றப் பெற்றார். இவர் வீரைத் தலபுராணம், வீரை நவநீத கிருஷ்ணசாமிப் பதிகம், சங்கரன் கோவில் திரிபந்தாதி, கருவை மும்மணிக்கோவை, கோமதி அந்தாதி ஆகிய நூல்களையும் இயற்றியுள்ளார்.

MERCY PUBLICATIONS - CHENNAI

www.Padasalai.Net

## நெடுவினா

**காவடிச்சிந்து ஒரு வழிநடைப் பாடல் – இக்கூற்றை அண்ணாமலையாரின் பாடல்வழி மதிப்பீடு செய்க.**

**முருக வழிபாடு :**

குன்றுதோறும் கோவில் கொண்டிருக்கும் தமிழ்க்கடவுள் முருகன். அந்த முருகப் பெருமானை வழிபடச் செல்வோர், பால் முதலான வழிபாட்டுப் பொருள்களைக் காவடிகளில் வைத்துத் தோள்களில் இட்டுச் சுமந்து செல்வர். இது, தமிழ்ப் பண்பாட்டுக்கூறுகளுள் ஒன்றாகும்.

**காவடி எடுத்தல் :**

காவடி எடுத்துச் செல்வதைச் சுமையாகக் கருதாமல், சுகமாக எண்ணி, வழிநடையில் மணிகளை ஒலித்துக்கொண்டும், பாடிக்கொண்டும், ஆடிக்கொண்டும் பாதசாரிகள் செல்வர். இது, தமிழ்நாட்டில் பண்டைக்காலம் முதல் 'நாட்டார் வழக்கியல்' என்னும் இசைமரபோடு கூடியதாக அமைந்துள்ளது.

**முருகன் பெருமை :**

'காவடிச்சிந்தின் தந்தை' எனப் போற்றப் பெறுபவர், சென்னிகுளம் அண்ணாமலையார். இவர் பாடிய காவடிச்சிந்து, அருணகிரியாரின் திருப்புகழ் தந்த தாக்கத்தால் விளைந்த சிறந்த சந்த இலக்கியமாகும்.

கழுகுமலை முருகனை வழிபடக் காவடி எடுத்துவரும் அடியவர்கள் பாடும் பாடல் முழக்கம், வானுலகத்திலுள்ள தேவர்களின் செவியைச் சென்றடையும் என்கிறார். அண்ணாமலையார் சிந்தில், கழுகுமலை முருகன் சிறப்புகள், அருள்புரியும் திறம், பக்தர்கள் வழிபடும்முறை எனப் பலவும் சிறப்பித்துக் கூறப்பெற்றுள்ளன.

வழிநடைக் களைப்பின்றி, முருகன் அருள்பெற நல்வழி காட்டுவதாக, அண்ணாமலையார் காவடிச் சிந்து அமைந்துள்ளது. பயணக் களைப்பைப் போக்குவதோடு, வழி இடையே விலங்குகளின் தொல்லைகளிலிருந்தும் பாதுகாத்துக்கொள்ளக் காவடிச்சிந்து உதவுகிறது.

## கற்பவை கற்றபின்

**1. எந்தெந்த நாடுகளில் காவடி ஆட்டம் இன்றளவும் நிகழ்த்தப்படுகிறது? அதற்கான காரணங்களைத் திரட்டிக் கலந்துரையாடல் நிகழ்த்துக.**

**வேலன்** : எழில், எங்கே இரண்டு நாள்களாக உன்னைப் பள்ளியில் காணவில்லை.

**எழில்** : என் அப்பாவும் மாமாவும் விரதம் இருந்து காவடி எடுத்து முருகன் கோவிலுக்குச் சென்றனர். நானும் உடன் சென்றிருந்தேன்.

**வேணி** : இது, புதிய பழக்கமாகத் தெரிகிறதே!

**எழில்** : இல்லை. காவடி எடுப்பது என்பது, தமிழகத்தில் பழைய வழக்கமாக நிகழும் விழாக்காலக் கொண்டாட்டமாகும்.

**வேணி** : காவடி ஏன் எடுக்கிறார்கள்?

**எழில்** : முருகனை வழிபடச் செல்பவர்கள், பால், தேன், தினைமாவு, முக்கனி, தேங்காய், சூடம் முதலான வழிபாட்டுக்குரிய பொருள்களை ஒரு கழியின் இரு முனைகளிலும் கட்டித் தோள்மேல் சுமந்து, மலைமேல் ஏறிச் சென்று வழிபடுவார்கள். அதுவே காலப்போக்கில் முருகனைக் காவடி எடுத்து வழிபடும் முறையாக மாறிவிட்டது.

**வேணி** : ஏன் முருகன் கோவில் மலைமேல் உள்ளது?

**எழில்** : உலகில் மனிதன் தோன்றிய முதல் இடம் மலை. ஆதி குடிகளான தமிழர்கள், இயற்கையில் அழகையும் தெய்வத் தன்மையையும் கண்டு, தாங்கள் வாழ்ந்த மலைநிலத்தில் அழகான தமிழ்க்கடவுள் முருகனுக்குக் கோவிலமைத்து வழிபட்டார்கள். அதுவே பிற்காலத்தில் முருகன் கோவில்கள், மலைமேல் அமைவதற்குரிய காரணமாயிற்று.

**தேன்மொழி** : காவடி எடுப்பவர்கள், காவடிச்சிந்து பாடிச் செல்கிறார்களே? ஏன்?

**எழில்** : வழிநடைக் களைப்புத் தெரியாமல் இருக்கத் தாங்கள் வழிபடும் முருகப்பெருமானின் பெருமைகளைக் கூறிச் செல்வது வழிபாட்டுக்கு உகந்தமுறை என்பதால், முருகன் புகழ்பாடக் காவடிச் சிந்தைப் பயன்படுத்துகிறார்கள்.

**மலர்விழி** : அது சரி! இந்த வழிபாட்டு முறை, தமிழ்நாட்டில் மட்டும்தான் உள்ளதா?

MERCURY PUBLICATIONS CHENNAI

**எழில்** : இல்லை. பொருள் தேடத் தமிழர்கள் எங்கெல்லாம் உழைக்கச் சென்றார்களோ அங்கெல்லாம், தங்கள் கடவுள் முருகனுக்குக் கோயிலெடுத்து இந்தமுறையில் வழிபடுகிறார்கள்.

**வேணி** : ஆமாம். இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், பர்மா, இந்தோனேசியா, தென் ஆப்பிரிக்கா ஆகிய நாடுகளில் எல்லாம்கூட முருக வழிபாடு சிறப்பாக நடத்தப்படுகிறது எனக் கேள்விப்பட்டிருக்கிறேன்.

**எழில்** : வாணிகம் செய்யச் சென்ற நாடுகளில் எல்லாம், அந்த வாணிகர்கள், முருகனுக்குக் கோயில் எடுத்தார்கள். பின்னர்ப் பிழைப்புத் தேடி ஆப்பிரிக்கா, பர்மா, மாலத்தீவுகள், லட்சத் தீவுகள், மொரீஷியஸ் தீவு முதலான இடங்களுக்குச் சென்ற உழைக்கும் தமிழரும் மறக்காமல் முருகனை வழிபடக் கோவில்களை அமைத்தனர். முருகனுக்குக் காவடி எடுப்பதை விழாவாக நடத்துகிறார்கள். குறிப்பாகத் தைப்பூச விழாவும், பங்குனி உத்திர விழாவும் பெரிதாகக் கொண்டாடப்படுகின்றன.

**தேன்மொழி** : அப்பாடா, எவ்வளவு செய்திகளைத் தெரிந்து வைத்துள்ளீர்கள்! நன்றி.

## இலக்கணக்குறிப்பு

**தாவி, மேவி, உயர்ந்து, போற்றி, ஏற்றி** – வினையெச்சங்கள்

**மாதே** – விளி

**நுண்ணிடை, கொழுங்கனல்** – பண்புத்தொகைகள்

**உயர்ந்தோங்கும்** – ஒருபொருட்பன்மொழி

**நகர்வாசன்** – ஐந்தாம் வேற்றுமைத்தொகை

**புயவரை** – உருவகம்

**புனைதீரன், தருகழுகாசலம், இடுமுழவோசை** – வினைத்தொகைகள்

**பதம்பணி** (பதத்தைப் பணி), **கொடி சூடிய** (கொடியைச் சூடிய) – இரண்டாம் வேற்றுமைத் தொகைகள்

**குறவள்ளி** – ஐந்தாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை.

**மொழிபோதினில்** (மொழியைக் கூறும் போதினில்) – இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை.

**நூபுரத்துத் தொனி** (நூபுரத்தினது தொனி), **அடியார் கணம்** – (அடியாரது கணம்) – ஆறாம் வேற்றுமைத் தொகைகள்.

**தங்கக்காவடி** – (தங்கத்தால் ஆகிய காவடி) – மூன்றன் உருபும் பயனும் உடன்தொக்க தொகை.

**பூண்டார்** – வினையாலணையும் பெயர்

## பகுபத உறுப்பிலக்கணம்

1. **வருகின்ற – வா (வரு) + கின்று + அ**
   **வா** – பகுதி, 'வரு' ஆனது விகாரம், **கின்று** – நிகழ்கால இடைநிலை, **அ** – பெயரெச்ச விகுதி.
2. **சொல்வன் – சொல் + வ் + அன்**
   **சொல்** – பகுதி, **வ்** – எதிர்கால இடைநிலை, **அன்** – தன்மை ஒருமை வினைமுற்று விகுதி.
3. **ஏறிய – ஏறு + இ(ன்) + ய் + அ.**
   **ஏறு** – பகுதி, **இன்** – இறந்தகால இடைநிலை, 'ன்' புணர்ந்து கெட்டது,
   **ய்** – சந்தி (உடம்படுமெய்), **அ** – பெயரெச்ச விகுதி.
4. **மேவி – மேவு + இ**
   **மேவு** – பகுதி, **இ** – வினையெச்ச விகுதி.
5. **போற்றி – போற்று + இ**
   **போற்று** – பகுதி, **இ** – வினையெச்ச விகுதி.
6. **ஏற்றி – ஏற்று + இ**
   **ஏற்று** – பகுதி, **இ** – வினையெச்ச விகுதி.

MERCY PUBLICATIONS - CHENNAI

www.Padasalai.Net

7. **காண்பார் – காண் + ப் + ஆர்**
**காண்** – பகுதி, **ப்** – எதிர்கால இடைநிலை, **ஆர்** – பலர்பால் வினைமுற்று விகுதி.

## புணர்ச்சி விதிகள்

1. **திருப்புகழ் – திரு + புகழ்**
"இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும்" (திருப்புகழ்)
2. **உயர்ந்தோங்கும் – உயர்ந்து + ஓங்கும்**
"உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்" (உயர்ந்த் + ஓங்கும்)
"உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே" (உயர்ந்தோங்கும்)
3. **நுண்ணிடை – நுண்மை + இடை**
"ஈறுபோதல்" (நுண்+இடை),
"தனிக்குறில் முன்ஒற்று உயிர்வரின் இரட்டும்" (நுண்ண்+இடை),
"உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே" (நுண்ணிடை)
4. **முழவோசை – முழவு + ஓசை**
"உயிர்வரின்... முற்றும் அற்று" (முழவ் + ஓசை)
"உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே" (முழவோசை)
5. **கொழுங்கனல் – கொழுமை + கனல்**
"ஈறுபோதல்" (கொழு + கனல்), "இனம் மிகல்" (கொழுங்கனல்)
6. **தங்கத்தூபி – தங்கம் + தூபி**
"மவ்வீறு ஒற்றழிந்து உயிர்ஈறு ஒப்பவும் ஆகும்" (தங்க + தூபி)
"இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும்" (தங்கத்தூபி)
7. **செகமெச்சிய – செகம் + மெச்சிய**
"மவ்வீறு ஒற்றழிந்து உயிர்ஈறு ஒப்பவும் ஆகும்" (செகமெச்சிய)
8. **பொன்னாட்டு – பொன் + நாட்டு**
"னலமுன் றனவும் ஆகும் தநக்கள்" (பொன்னாட்டு)
9. **தங்கக்காவடி – தங்கம் + காவடி**
"மவ்வீறு ஒற்றழிந்து உயிரீறு ஒப்பவும் ஆகும்" (தங்க + காவடி)
"இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும். (தங்கக்காவடி)
10. **மின்னிக்கறங்கும் – மின்னி + கறங்கும்**
"இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும். (மின்னிக்கறங்கும்)
11. **இமையோர் – இமை + ஓர்**
"இ ஈ ஐ வழி யவ்வும்" (இமை + ய் + ஓர்)
"உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே" (இமையோர்)

## பலவுள் தெரிக

1. 'காவடிச் சிந்துக்குத் தந்தை' என்று அழைக்கப்படுபவர் யார்?
அ) பாரதிதாசன் ஆ) அண்ணாமலையார்
இ) முருகன் ஈ) பாரதியார்
**விடை :** ஆ) அண்ணாமலையார்

## கூடுதல் வினாக்கள்

2. கூற்று 1 : வழிநடைப் பாடல் வகையிலிருந்து தோன்றிய பா வடிவம் சிந்து.
கூற்று 2 : நாட்டார் வழக்கியல் இசைமரபு சிந்து.
அ) கூற்று 1 சரி 2 தவறு ஆ) கூற்று 1 தவறு கூற்று 2 சரி
இ) கூற்று 1, 2 சரி ஈ) கூற்று 1, 2 தவறு
**விடை :** இ) கூற்று 1, 2 சரி

MERCY PUBLICATIONS - CHENNAI

3. கூற்று 1 : காவடிச் சிந்துவுக்கு மெட்டு அமைத்தவர் அருணகிரியார்.
கூற்று 2 : அண்ணாமலையார் காவடிச் சிந்துக்கு மெட்டுகள் அமைத்தார்.
அ) கூற்று 1 சரி 2 தவறு ஆ) கூற்று 1 தவறு கூற்று 2 சரி
இ) இரண்டு கூற்றும் சரி ஈ) இரண்டு கூற்றும் தவறு
**விடை :** ஆ) கூற்று 1 தவறு கூற்று 2 சரி

4. 'ஊற்றுமலை' இருதயாலய மருதப்பத் தேவரின் அவைப் புலவராக இருந்தவர் ______.
அ) அருணகிரியார் ஆ) உமறுப்புலவர் இ) அண்ணாமலையார் ஈ) பாரதியார்
**விடை :** இ) அண்ணாமலையார்

5. காவடி எடுக்கும் அடியார் பாடிய திருப்புகழ் முழக்கம், ______ தேவர்களின் செவியை அடைகிறது.
அ) கைலாயம் ஆ) வைகுண்டம்
இ) அமராவதிப் பட்டினம் ஈ) சென்னைப் பட்டினம்
**விடை :** இ) அமராவதிப் பட்டினம்

## 2. குறுந்தொகை

### (வெள்ளிவீதியார்)

### நம்மை அளப்போம்

### குறுவினா

**1. குறுந்தொகை குறித்து நீங்கள் அறியும் செய்தி யாது?**

★ எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று.
★ அகத்திணைச் சார்ந்த 401 பாடல்களைக் கொண்டது.
★ உரையாசிரியர் பலரால் மேற்கோள் காட்டப்பட்டுள்ளது.
★ இதனைத் தொகுத்தவர் 'பூரிக்கோ'.

### கூடுதல் வினா

**2. குறுந்தொகைத் தலைவன் பரிசுப் பொருட்களை எவ்வாறு அனுப்பினான்?**

★ தலைப்பாகை அணிந்து, கையில் தண்டுடன் சென்ற முதியவர்கள் வாயிலாகப் பெண்வீட்டார் போதும் போதும் என்று கூறும் அளவுக்குப் பரிசுப் பொருள்களைக் குறுந்தொகைத் தலைவன் அனுப்பினான்.

### சிறுவினா

**1. சங்ககாலத்தில் நடைபெற்ற சமூக நிகழ்வு வெள்ளிவீதியார் பாடலில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. இக்காலச் சமூக நிகழ்வுகள் எழுத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளமையை ஒப்பிட்டு விளக்குக.**

★ சங்ககாலத் தமிழகத்தில் நடைபெற்ற சமூக நிகழ்வுகளுள் ஒன்றான திருமணத்திற்கு, மணமகன் முதியவர்கள் மூலம் தலைவியின் இல்லத்திற்குப் பரிசுப் பொருள்களை அனுப்பித் திருமணத்தை உறுதி செய்ததை, வெள்ளிவீதியார் பாடலால் அறிய முடிகிறது.
★ அதாவது, அக்காலத்தில் பெண்ணுக்கு, மணமகன் பொன்பொருள் அளித்து மணந்தமை புலப்படுகிறது. ஆனால், இக்காலத்தில் இதே சமூக நிகழ்வு, மணம் பேசுதல் எப்படி நடைபெறுகிறது என்பதைக் கவிதைகளும் சிறுகதைகளும் நாவல்களும் சுட்டிக்காட்டுகின்றன.
★ பெண்ணை மணப்பதற்கு, மணமகனுக்கு மணக்கொடை அளித்தால்தான் திருமணம் நிச்சயம் நடைபெறும் என்ற இழிநிலை காணப்படுகிறது.
★ பொன் கொடுத்துப் பெண் கொண்டதைப் பெருமையாகக் கருதிய அதே தமிழகத்தில்தான் இன்று, "பொன் கொடுத்தால்தான் பெண் கொள்வேன்" என்னும் அவலநிலை ஏற்பட்டுள்ளது.
★ எனினும், எங்கோ சில இடங்களில் வரதட்சணை பெறாமல் மணம்புரியும் நிகழ்வும் நடைபெறுகிறது.

MERCY PUBLICATIONS - CHENNAI

www.Padasalai.Net

## கூடுதல் வினாக்கள்

**2. குறிஞ்சித்திணை – விளக்குக.**

- ★ தலைவன் தலைவியர் கூடுதலையும், அதற்குக் காரணமான நிகழ்வுகளையும் உரிப்பொருளாகக் கொண்ட ஒழுக்கம் குறிஞ்சித்திணையாகும்.
- ★ இந்நிகழ்வுக்கு மலையும் மலைசார்ந்த நிலமும், குளிர்காலமும் முன்பனிக் காலமுமாகிய பெரும்பொழுதுகளும், யாமம் என்னும் சிறுபொழுதும் பின்புலமாக அமையும்.
- ★ அத்துடன், குறிஞ்சித் தெய்வம் (முருகன்), உணவு (மலைநெல், தினை), விலங்கு (புலி, கரடி), பறவை (கிளி, மயில்), தொழில் (தேன் எடுத்தல், கிழங்கு அகழ்தல்) முதலான கருப்பொருள்களும் பின்புலமாகும்.

**3. துறை : 'தலைமகன் தமர் வரைவொடு வந்து சொல்லாடுகின்றுழி வரைவு மறுப்பவோ' எனக் கவன்ற தலைமகட்குத் தோழி சொல்லியது – விளக்குக.**

- ★ தலைவியை மணம் முடிப்பது குறித்துப் பேசத் தலைவன், அவனுடைய சுற்றத்தவரான சான்றோரை அனுப்புகிறான். அப்போது தன் பெற்றோர் மணம் பேச மறுத்துவிடுவார்களோ, எனத் தலைவி மனம் கலங்குகிறாள்.
- ★ இந்நிலையில் தலைவியிடம் தோழி, 'தலைவனின் தரப்பினராகிய சான்றோரைத் தலைவியின் பெற்றோர் ஏற்றுக்கொண்டனர்' என்று, சொன்னதைக் குறித்து விளக்குவதாகும்.

**4. குறுந்தொகைத் தோழி தலைவியை எவ்வாறு தேற்றினாள்?**

- ★ மணம் பேசத் தலைவன் சார்பாக வந்தவர்களைத் தன் பெற்றோர் மறுத்து அனுப்பி விடுவார்களோ எனத் தலைவி கவலை கொண்டாள். அவளைத் தேற்றும்வகையில் தோழி, "ஊர் மக்களின் அவையில், முன்பு பலமுறை தலைவனின் பரிசுப் பொருள்கள் திருப்பி அனுப்பப்பட்டன.
- ★ இன்றோ, தலைப்பாகை அணிந்து, கையில் தண்டுடன் இருக்கும் முதியவர்கள் மூலமாகப் போதுமென்று கூறத்தக்க அளவுக்குப் பரிசுப் பொருள்களைத் தலைவன் அனுப்பி, அவைமுன் வைத்துள்ளான்.
- ★ நம் உறவினரும் அவற்றைக் கண்டு, 'நன்று நன்று' எனக் கூறி மகிழ்ந்தனர். எனவே, "தோழி! நம் ஊரில் முன்பெல்லாம் பரிசுத்தொகை போதாதென்று பிரித்து விடப்பட்ட தலைவன் தலைவியரைப் போதிய பரிசுத்தொகை அளித்ததும் சேர்த்து வைப்போர் இருந்தனரா?" என வினா எழுப்பி, விரைவில் மணம் முடியும் என்பதைத் தோழி உறுதிப்படுத்தித் தலைவியைத் தேற்றி மகிழ்வித்தாள்.

## கற்பவை கற்றபின்

**திருமணங்களில் மணக்கொடை கேட்பது குற்றமே – விவாதிக்க.**

**முகிலன்** : நீ இன்று ஏதோ திருமணத்திற்குச் செல்வதாகச் சொன்னாயே! போகவில்லையா?

**தமிழ்** : அதை ஏன் கேட்கிறாய்? அந்தத் திருமணம் கடைசி நேரத்தில் நின்று போனது.

**முகிலன்** : ஏன், என்ன காரணம்?

**தமிழ்** : மணமகன் வீட்டார், திடீரென்று இரண்டுலட்சம் ரூபாய், மணக்கொடை கேட்டுள்ளனர். பெண்வீட்டார், 'கொஞ்சம் குறைத்துக் கொடுக்கிறோம்; நகை எல்லாம் போட்டுக் கலியாணச் செலவையும் பார்ப்பதால் முடியவில்லை' என்று சொல்லியுள்ளார்கள். மணமகன் வீட்டார், 'அதெல்லாம் முடியாது' என்று திருமணத்தை நிறுத்திவிட்டார்கள்.

**எழிலி** : இது மிகவும் கொடிய செயல். மணக்கொடை கேட்டதாகக் காவல் துறையில் புகார் செய்து, மணமகன் வீட்டாரைத் தண்டித்திருக்க வேண்டும்.

**தமிழ்** : உணர்ச்சி வசப்பட்டுப் பேசாதே. இது இந்தக் கால வழக்கமாகிவிட்டது. சரி இல்லை என்றால் ஒதுக்கிவிட்டு, நம் வேலையைப் பார்ப்பதுதான் நல்லது. திருமணத்திற்குப்பின் இப்படி நிகழ்ந்திருந்தால் என்னவாகியிருக்கும்?

**எழிலி** : இந்த வழக்கம் எப்படி வந்தது? நாம் பழைய இலக்கியங்களில் ஏன், சில நாவல்களில்கூட மணமகன் வீட்டார் பொன் கொடுத்துப் பெண் கொண்டதாகத்தானே படிக்கிறோம். தமிழகத்தில் இந்த நிலை ஏன் உருவானது?

MERCY PUBLICATIONS - CHENNAI

**முகிலன்** : இதை எல்லாம் ஆராய்ந்து பயனில்லை. சமுதாயப் பழக்க வழக்கங்களை மாற்ற இளையோர் முடிவு எடுக்கவேண்டும். ஆணோ, பெண்ணோ நன்றாகப் படித்து, ஒரு தொழிலைச் செம்மையாகச் செய்ய உறுதி எடுக்கவேண்டும். அதன்பின் திருமணம் பற்றிச் சிந்திக்க வேண்டும்.

**தமிழ்** : நல்ல படிப்பு, நல்ல தொழில், நல்லொழுக்கம் இவற்றை அடிப்படையாக வைத்துத் தகுதியானவரைத் தேர்வு செய்து மணக்கவேண்டும். பணம் பணம் என்று அலைபவர்களை ஒதுக்கவேண்டும்.

**எழிலி** : மணக்கொடை கொடுக்கவும் கூடாது; கேட்கவும் கூடாது. பெற்றோர் விரும்பிச் செய்வதை ஏற்கின்ற மனப்பக்குவத்தை, எதிர்கால இளைஞர்கள் பெறவேண்டும். தனித்து நின்று போராட ஒவ்வொருவரும் முன்வர வேண்டும்.

**முகிலன்** : நன்றாகச் சொன்னாய். எதிர்காலத்தில் நாம் இதை நிறைவேற்றிச் சமூக மாற்றத்தை ஏற்படுத்த, நண்பர்களோடு கலந்துபேச வேண்டும். இதை உறுதிமொழியாக ஏற்போம்.
"நான் மணக்கொடை கேட்கவும் மாட்டேன்! மணக்கொடை கொடுக்கவும் மாட்டேன்" என்று, எல்லாரும் சொல்லுங்கள் பார்ப்போம். உழைப்போம்! உயர்வோம்!

## இலக்கணக்குறிப்பு

**புணர்ப்போர், பிரிந்தோர்** – வினையாலணையும் பெயர்கள்

**நன்று நன்று** – அடுக்குத்தொடர்

**வாழி** – வியங்கோள் வினைமுற்று

**வெண்டலை** – பண்புத்தொகை

**அம்ம** – முன்னிலை விளி

**கொல்லோ** (கொல் + ஒ) – அசைகள்

## உறுப்பிலக்கணம்

1. **பிரிந்தோர் – பிரி + த் (ந்) + த் + ஓர்**
   **பிரி** – பகுதி, **த்** – சந்தி, 'ந்' ஆனது விகாரம், **த்** – இறந்தகால இடைநிலை,
   **ஓர்** – பலர்பால் வினைமுற்று விகுதி.
2. **வாழி – வாழ் + இ**
   **வாழ்** – பகுதி, **இ** – வியங்கோள் வினைமுற்று விகுதி.
3. **இருந்தனர் – இரு + த் (ந்) + த் + அன் + அர்**
   **இரு** – பகுதி, **த்** – சந்தி, 'ந்' ஆனது விகாரம், **த்** – இறந்தகால இடைநிலை,
   **அன்** – சாரியை, **அர்** – பலர்பால் வினைமுற்று விகுதி.

## புணர்ச்சி விதிகள்

1. **தண்டுடை – தண்டு + உடை**
   "உயிர்வரின் உக்குறள் மெய்விட் டோடும்" (தண்ட் + உடை)
   "உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே" (தண்டுடை)
2. **நம்மூர் – நம் + ஊர்**
   "தனிக்குறில் முன்ஒற்று உயிர்வரின் இரட்டும்" (நம்ம் + ஊர்)
   "உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே" (நம்மூர்)
3. **வெண்டலை – வெண்மை + தலை**
   "ஈறுபோதல்" (வெண் + தலை)
   "ணளமுன் டணவும் ஆகும் தநக்கள்" (வெண்டலை)
4. **மக்களோடு – மக்கள் + ஒடு**
   "உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே" (மக்களோடு)

MERCY PUBLICATIONS - CHENNAI

www.Padasalai.Net

## பலவுள் தெரிக

1. சங்ககாலப் பெண்பால் புலவர்களுள் ஒருவர் ______.
   அ) காரைக்காலம்மை ஆ) மணிமேகலை இ) ஆண்டாள் ஈ) வெள்ளிவீதியார்
   **விடை :** ஈ) வெள்ளிவீதியார்
2. தொகைநூல்களுள் முதலில் தொகுக்கப்பட்டது ______.
   அ) நற்றிணை ஆ) புறநானூறு இ) குறுந்தொகை ஈ) ஐங்குறு நூறு
   **விடை :** இ) குறுந்தொகை
3. 'குறுந்தொகை' நூலைத் தொகுத்தவர் ______.
   அ) வெள்ளிவீதியார் ஆ) சாத்தனார்
   இ) பூரிக்கோ ஈ) பெருந்தேவனார்
   **விடை :** இ) பூரிக்கோ
4. குறுந்தொகைக் கடவுள் வாழ்த்தைப் பாடியவர் ______.
   அ) நக்கீரர் ஆ) சாத்தனார் இ) பெருந்தேவனார் ஈ) பூரிக்கோ
   **விடை :** இ) பெருந்தேவனார்
5. குறுந்தொகை, ______ திணை சார்ந்த நூல்.
   அ) அகத் ஆ) புறத் இ) உயர் ஈ) அல்
   **விடை :** அ) அகத்
6. "தண்டுடைக் கையர் வெண்டலைச் சிதவலர்" – இத்தொடரில் 'தலைப்பாகை' என்னும் பொருளுடைய சொல் ______.
   அ) தண்டு ஆ) கையர் இ) வெண்டலை ஈ) சிதவல்
   **விடை :** ஈ) சிதவல்
7. சரியான விடையைத் தேர்க.
   "நன்றுநன் றென்னும் மாக்களொடு
   இன்றுபெரிது என்னும் ஆங்கண தவையே" – இப்பாடல் வரிகளின் பொருள்.
   அ) குறிஞ்சித்திணை சார்ந்தது ஆ) முல்லைத்திணை சார்ந்தது
   இ) மருதத்திணை சார்ந்தது ஈ) நெய்தல்திணை சார்ந்தது
   **விடை :** அ) குறிஞ்சித்திணை சார்ந்தது

# 3. புறநானூறு

## (கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி)

### குறுவினா

**1. தமிழர்கள் புகழையும் பழியையும் எவ்வாறு ஏற்றதாகப் புறநானூறு கூறுகிறது?**
- ★ **புகழ் :** புகழ் வரும் என்றால், தமிழர்கள் தம் உயிரையும் கொடுப்பர்.
- ★ **பழி :** பழி வரும் என்றால், உலகம் முழுவதும் கிடைத்தாலும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்.

### கூடுதல் வினாக்கள்

**2. தமிழர் எதனை உண்ணார், எதற்கு அஞ்சுவர் எனப் புறநானூறு கூறுகிறது?**
- ★ இந்திரனுக்குரிய அமிழ்தமே கிடைப்பதாயினும், தமிழர் தனித்து உண்ணமாட்டார்.
- ★ பிறர் அஞ்சுவனவற்றுக்குத் தாமும் அஞ்சுவர் எனப் புறநானூறு கூறுகிறது.

**3. இளம்பெருவழுதி பாடல் எவ்விழுமியம் பற்றிப் பேசுகிறது?**
- ★ புறநானூற்றில் அமைந்த இளம்பெருவழுதி பாடல், வீரத்தையும் ஈரத்தையும் பற்றிப் பேசாமல், வாழ்வின் விழுமியமான, தமக்கென வாழாது பிறர்க்கென வாழ்வதே பிறவிப்பயன் என்னும் கருத்தைப் பேசுகிறது.

MERCY PUBLICATIONS - CHENNAI

**4. பொதுவியல் திணை – விளக்குக.**

★ புறப்பொருள்களாகிய வெட்சித்திணைமுதல் பாடாண்திணைவரை கூறப்பெறாத செய்திகளையும், பிற பொதுச்செய்திகளையும் தொகுத்துக் கூறுவது பொதுவியல் திணையாகும்.

★ 'உண்டாலம்ம' எனத் தொடங்கும் புறப்பாடல், பொதுவியல் திணைக்குச் சான்றாக அமையும்.

**5. பொருண்மொழிக்காஞ்சித் துறை – விளக்குக.**

★ மக்களுக்கு நலன்செய்யும் வாழ்வியல் நெறிகளை எடுத்துக்கூறுவது, பொருண்மொழிக்காஞ் சித்துறை யாகும். இவ்வுலகம் நிலைப்பதற்கான காரணங்களை உரைக்கும் கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதியின் பாடல், 'பொருண்மொழிக்காஞ்சிக்கு'ச் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

## சிறுவினா

**1. புறநானூற்றுப் பாடலின் கருத்திற்கு இணையான குறட்பாக்களைக் குறிப்பிடுக.**

i. "வசைஒழிய வாழ்வாரே வாழ்வார் இசைஒழிய
வாழ்வாரே வாழா தவர்"

(பழி நீங்கிப் புகழோடு வாழ்பவரே வாழ்பவராவார்; புகழின்றிப் பழியோடு வாழ்பவர் வாழாதவரே ஆவார்.)

ii. "அஞ்சுவது அஞ்சாமை பேதைமை அஞ்சுவது
அஞ்சல் அறிவார் தொழில்"

(உலகம் அஞ்சும் செயல்களைச் செய்வது அறியாமை; உலகம் அஞ்சும் செயல்களுக்கு அஞ்சுவது அறிவுடையார் செயல்.)

## கூடுதல் வினாக்கள்

**2. புறநானூறு குறித்துக் குறிப்பெழுதுக.**

★ புறநானூறு, எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று. புறப்பொருள் சார்ந்த 400 பாடல்களைக் கொண்டது.

★ சங்க காலத்தில் வாழ்ந்த அரசர்கள், குறுநில மன்னர்கள், வள்ளல்கள், படைத்தலைவர்கள் எனப் பலரின் சமூக வாழ்வைப்பற்றிப் பல்வேறு புலவர்கள் பாடிய பாடல்களை உள்ளடக்கியது. இந்நூலால், பண்டைத் தமிழகம் பற்றியும், தமிழர் நாகரிகம், பண்பாடு, சமூக வாழ்க்கை குறித்தும் அறிய முடிகிறது.

**3. கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி குறித்து அறிவன யாவை?**

★ 'பெருவழுதி' என்னும் பெயரில் பாண்டிய மன்னர்கள் பலர் இருந்தனர். எனினும், அரிய குணங்கள் பலவற்றையும் இளமைமுதலே பெற்றிருந்தமையால், இவரை 'இளம்பெருவழுதி' என மக்கள் போற்றினர்.

★ கடற்செலவு ஒன்றை மேற்கொண்டபோது இறந்தமையால், 'கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி' என அழைக்கப்பெற்றார். இவர் பாடியனவாகப் பரிபாடலில் ஒன்றும், புறநானூற்றில் ஒன்றும் ஆக, இரு பாடல்கள் காணப்படுகின்றன. புறநானூற்றுப் பாடலில் வீரத்தைப் பேசாமல், 'தனக்கென வாழாது பிறர்க்கென வாழும் பிறவிப் பயன்' பற்றிப் பேசுகிறார்.

**4. இவ்வுலகம் நிலைத்திருப்பதற்கான காரணங்களாக இளம்பெருவழுதி கூறுவனவற்றை எழுதுக.**

★ அமிழ்தமே கிடைத்தாலும், அஃது இனிமையானது என எண்ணித் தனித்து உண்ணாதவர்கள்.

★ எவரையும் வெறுக்காதவர்கள்; சோம்பலின்றிச் செயல்படுபவர்கள்.

★ பிறர் அஞ்சுவனவற்றிற்குத் தாமும் அஞ்சுபவர்கள்.

★ புகழோடு வருவதாயின், உயிரையும் கொடுக்கக் கூடியவர்கள்.

★ பழியுடன் வருவதாயின், உலகமே கிடைத்தாலும் ஏற்க விரும்பாதவர்கள். எதற்கும் மனம் தளராதவர்கள்.

★ தமக்கென உழைக்காமல் பிறர்க்காகப் பெருமுயற்சிகளை மேற்கொண்டு உழைப்பவர்கள் எனப் பல சிறப்புகளைப் பெற்றோர் இருப்பதனால்தான், இவ்வுலகம் இன்றளவும் நிலைத்து இயங்கிக் கொண்டிருக்கிறது எனக் கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி, தம் பாடலில் கூறியுள்ளார்.

MEENA PUBLICATIONS - CHENNAI

## இலக்கணக்குறிப்பு

**உண்டு, இனிது** – குறிப்பு வினைமுற்று
**ஆல்** – தேற்றம்
**உண்டல், அஞ்சல்** – தொழிற்பெயர்கள்
**முயலா** – ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்
**உலகம்** – இடவாகு பெயர்
**இந்திரர் அமிழ்தம்** (இந்திரர்க்கு உரிய அமிழ்தம்) – நான்காம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்கதொகை
**அஞ்சுவது அஞ்சி** – வினையாலணையும் பெயர்
**உயிரும் கொடுக்குவர்** – உம்மை, இறந்தது தழுவிய எச்சவும்மை
**கொடுக்குவர்** – படர்க்கைப் பலர்பால் எதிர்கால வினைமுற்று
**நோன்தாள்** – உரிச்சொற்றொடர்
**அம்ம** – அசைநிலை
**அனையர்** – வினையாலணையும் பெயர்
**அயர்விலர்** – எதிர்மறை வினையாலணையும் பெயர்

## உறுப்பிலக்கணம்

1. **துஞ்சல் – துஞ்சு + அல்**
   **துஞ்சு** – பகுதி, **அல்** – தொழிற்பெயர் விகுதி.
2. **முனிவிலர் – முனிவு + இல் + அர்**
   **முனிவு** – பகுதி, **இல்** – எதிர்மறை இடைநிலை, **அர்** – பலர்பால் வினைமுற்று விகுதி.
3. **கொடுக்குவர் – கொடு + க் + கு + வ் + அர்**
   **கொடு** – பகுதி, **க்** – சந்தி, **கு** – சாரியை, **வ்** – எதிர்கால இடைநிலை,
   **அர்** – படர்க்கைப் பலர்பால் வினைமுற்று விகுதி.
4. **அஞ்சி – அஞ்சு + இ**
   **அஞ்சு** – பகுதி, **இ** – வினையெச்ச விகுதி.

## புணர்ச்சி விதிகள்

1. **இயைவதாயினும் – இயைவது + ஆயினும்**
   "உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்" (இயைவத் + ஆயினும்)
   "உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே" (இயைவதாயினும்)
2. **புகழெனின் – புகழ் + எனின்**
   "உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே" (புகழெனின்)
3. **முனிவிலர் – முனிவு + இலர்**
   "உயிர்வரின்....முற்றும் அற்று"(முனிவ்+இலர்),
   "உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே" (முனிவிலர்)
4. **அஞ்சுவதஞ்சி – அஞ்சுவது + அஞ்சி**
   "உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்" (அஞ்சுவத் + அஞ்சி)
   "உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே" (அஞ்சுவதஞ்சி)
5. **பழியெனின் – பழி + எனின்**
   "இ ஈ ஐ வழி யவ்வும்" (பழி + ய் + எனின்),
   "உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே" (பழியெனின்)
6. **உலகுடன் – உலகு + உடன்**
   "உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்" (உலக் + உடன்)
   "உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே" (உலகுடன்)

MERCY PUBLICATIONS - CHENNAI

7. **தமக்கென – தமக்கு + என**
"உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்" (தமக்க் + என)
"உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே" (தமக்கென)

8. **பிறர்க்கென – பிறர்க்கு + என**
"உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்" (பிறர்க்க் + உடன்)
"உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே" (பிறர்க்கென)

## பலவுள் தெரிக

1. பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுக்க.
   1. வெள்ளிவீதியார் – அ. புறநானூறு
   2. அண்ணாமலையார் – ஆ. வாடிவாசல்
   3. சி.சு.செல்லப்பா – இ. குறுந்தொகை
   4. இளம்பெருவழுதி – ஈ. காவடிச்சிந்து

   i. அ ஆ இ ஈ  ii. ஆ ஈ அ இ  iii. இ ஈ ஆ அ  iv. இ ஈ அ ஆ

   **விடை :** iii. இ ஈ ஆ அ

2. 'இனிதென' – இச்சொல்லில் அமைந்த புணர்ச்சி விதிகளை வரிசைப்படுத்துக.
   அ) உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்; உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே.
   ஆ) தனிக்குறில் முன்ஒற்று உயிர்வரின் இரட்டும்; உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்.
   இ) உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே.
   ஈ) உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்.

   **விடை :** அ) உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்; உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே.

## கூடுதல் வினாக்கள்

3. புறநானூறு என்பது, ______ எனப் பிரியும்.
   அ) புற + நானூறு  ஆ) புறநா + னூறு
   இ) புறம் + நான்கு + நூறு  ஈ) புறம் + நாலு + நூறு

   **விடை :** இ) புறம் + நான்கு + நூறு

4. தமிழரின் வாழ்வியல் கருவூலமாகக் கருதப்படுவது ______.
   அ) அகநானூறு  ஆ) புறநானூறு  இ) பதிற்றுப்பத்து  ஈ) கலித்தொகை

   **விடை :** ஆ) புறநானூறு

5. 'புறம்', 'புறப்பாட்டு' என வழங்கப்படும் நூல் ______.
   அ) பரிபாடல்  ஆ) பதிற்றுப்பத்து  இ) கலித்தொகை  ஈ) புறநானூறு

   **விடை :** ஈ) புறநானூறு

6. கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி பாடிய மற்றொரு பாடல் அமைந்த நூல் ______.
   அ) குறுந்தொகை  ஆ) அகநானூறு  இ) பத்துப்பாட்டு  ஈ) பரிபாடல்

   **விடை :** ஈ) பரிபாடல்

7. "உண்டாலம்ம இவ்வுலகம்" என்னும் புறப்பாடல், ______ வகையைச் சார்ந்தது.
   அ) இன்னிசை ஆசிரியப்பா  ஆ) நேரிசை ஆசிரியப்பா
   இ) நிலைமண்டில ஆசிரியப்பா  ஈ) அடிமறி மண்டில ஆசிரியப்பா

   **விடை :** ஆ) நேரிசை ஆசிரியப்பா

8. அடிக்கோடிட்ட தொடரின் பொருளைத் தெரிவு செய்து, சரியான விடையைத் தேர்க.
   <u>பிறர் அஞ்சுவது அஞ்சிப்</u>
   புகழ் எனில் உயிரும் கொடுக்குவர்
   அ) போரிடுவதற்கு அஞ்சுதல்  ஆ) விலங்கினத்திற்கு அஞ்சுதல்
   இ) பழிச்செயல் புரிய அஞ்சுதல்  ஈ) பிறர் புகழ்கண்டு அஞ்சுதல்

   **விடை :** இ) பழிச்செயல் புரிய அஞ்சுதல்

MERCY PUBLICATIONS – CHENNAI

www.Padasalai.Net

9. தவறான விடையைத் தேர்வு செய்க.

அ) காணலன் – காண் + அல் + அன் ஆ) எழுதிலன் – எழுது + இல் + அன்

இ) வருந்திலன் – வருந்து + இல் + அன் ஈ) நடந்திலன் – நடந்து + அல் + அன்

**விடை :** ஈ) நடந்திலன் – நடந்து + அல் + அன்

# விரிவானம்

## வாடிவாசல்

(சி. சு. செல்லப்பா)

### நெடுவினா

**1. வாடிவாசல் கதை வாயிலாக நீங்கள் உணர்ந்த கருத்துகளை விளக்குக. (அல்லது) 'வாடிவாசல்' என்னும் குறும் புதினம் தமிழர் பண்பாட்டின் அடையாளத்தைப் புலப்படுத்துவதை நிறுவுக.**

**ஜல்லிக்கட்டு ஒரு விளையாட்டு :**

வாடிவாசல் நிகழ்வில், மனிதன் இரத்தம் சிந்தலாம்; உயிரை விடலாம். ஆனால், காளையின் உடலில் ஒருதுளி இரத்தம்கூட வெளிப்படக் கூடாது. இறுதியில் மனிதனோ, காளையோ வென்று, செம்மாந்து நிமிர்ந்து நிற்க நேரிடும். மனிதன் தன் வீரத்தை வெளிப்படுத்தும் விளையாட்டாகக் கருதும்போக்கு, ஜல்லிக்கட்டில் நிலவுகிறது.

**கறுப்புப் பிசாசு வருது :**

வாடிவாசல் வேலி அடைப்பின்மீது வேடிக்கை பார்க்க உட்கார்ந்திருந்தவர்கள், திடீரெனக் கத்தினார்கள். வாடிபுரம் காளை வருது டோய்; கறுப்புப் பிசாசுடா. அவர்கள் குரலில் திகில் வெளிப்பட்டது. காளை, அவிழ்த்து விடப்பட்டது. அது ஒரு முக்காரமிட்டது. அது விட்ட மூச்சில் தரைமண் பறந்தது. காளையின் கழுத்தில் கட்டப்பட்டிருந்த பட்டு, உருமா, இரண்டு பவுன் தங்கம் எல்லாம், அங்கிருந்தவர்கள் கண்களில் பட்டன.

**ஆசைக்கு உலை வைத்த காளை :**

தன் லங்கோட்டைச் சரிசெய்து கொண்ட பிச்சி, மருதவனை உஷார் படுத்திவிட்டுக் காளை பிடிக்க ஆயத்தமானான். பிடிக்கப் புறப்பட்டவனுக்காகச் சிலர் பரிதாபப் பட்டனர். பார்வையாளராக அமர்ந்திருந்த ஜமீன்தார், தம் பார்வையிலேயே பிச்சியை ஊக்கப்படுத்தினார். கேலி பேசியவர்களைக் கண்டித்தார்.

காளை, திட்டிவாசலில் தலைநிமிர்ந்து நின்றது. மண் சிதறக் காளை ஒருமுறை மூச்சுவிட்டு, மீண்டும் தரையை மோந்தது. எதிரில் நின்ற பிச்சிக்குத் தன் தந்தையின் ஆசைக்கும் உயிருக்கும் உலை வைத்த அடையாளமாகக் காளையின் கொம்பில் ரத்தம் தெரிந்தது.

**காளையை அடக்கத் திட்டமிடல் :**

டுர்ரீ எனக் குரல் கொடுத்த மருதன், காளையின் வாலைத் தொட்டுவிட்டு ஒதுங்கினான். மருதன்மீது பாயக் காளை திரும்பியது. பிச்சி, காளைமீது சடக்கெனப் பாய்ந்து, திமிலில் இடக்கை போட்டு நெஞ்சோடு இறுக்கி அணைத்து, உடலைக் காளையின் கழுத்தோடு ஒட்டி, வலக்கையால் காளையின் கொம்பைப் பற்றிக்கொண்டான். பிச்சியின் எதிர்பாராத பாய்ச்சல், காளைக்குப் பாதகமாகி விட்டது. ஆனாலும், மிருக சுபாவத்துடன் சமாளித்த பிச்சியைக் கீழே தள்ள முயன்று, தவ்வி ஆள் உயரம் குதித்தது. பிச்சியின் பிடி இறுகியது.

**நீயா நானா போராட்டம் :**

ஆள் உயரத்திற்கு எம்பித் தவ்வி இரண்டாவது முறையும் காளை பிச்சியைக் கீழே தள்ள முயன்றது. பிச்சி, தன் கால்களைத் தரையில் பதிக்க முயன்றான். காளை துள்ளியது. காளை களைத்துப் போனதால், மூன்றாம்முறை தவ்வ இயலவில்லை. பிச்சியைக் காளை உருட்டித் தள்ளிக் கிழித்திருக்க வேண்டும். ஆனால், "கிழக்கத்தியான், வென்றுட்டான்டா..." என்றது கூட்டம்.

**பிச்சி பெற்ற வெற்றி :**

காளையின் நெற்றித்திட்டில் பிச்சி கைபோட்டு, உருமால் பட்டையை இழுத்து மெடல், சங்கிலி பட்டுத்துணியை வாயில் கவ்வியபடி, தரையில் கால்பதித்து அழுத்தி, மார்பில் அழுத்தம் கொடுத்துக் காளையை எதிர்ப்பக்கம் தள்ளிவிட்டு ஒதுங்கினான். "உசிலனூர் அம்பிலியின் பேரைக் காப்பாத்திட்டேடா! நீ புலிக்குப் பொறந்தவன்டா" என்று பாராட்ட, பிச்சியின் கண்களில் ஆனந்தக் கண்ணீர் வழிந்தது.

**பண்பாடு உயிர்ப்பு :**

அடங்காத காளையை அடக்க, எவ்வாறு திட்டமிட வேண்டும்? காளையை எப்படிப் பற்றிப் பிடிக்க வேண்டும்? பிடி தளர்த்தாமல் இறுதி வரை ஏன் போராட வேண்டும்? என்பனவற்றை எல்லாம், வாடிவாசல் கதையால் அறியமுடிகிறது. போட்டியில் கலந்துகொள்ளும்போது மற்றவர் போற்றுவதையும் தூற்றுவதையும் காதில் வாங்காமல் கருமமே கண்ணாகச் செயல்பட வேண்டும் என்பதை எல்லாமும் அறியமுடிகிறது.

தமிழர் பண்பாட்டில், காளையை அடக்குவதை மனிதன் விளையாட்டாக நினைக்கிறான். காளைக்கு அது விளையாட்டு இல்லை. பண்பாட்டின் உயிர்ப்பில் இந்தத் தெளிவு மிகமிக அவசியம் என்பதும் தெளிவாகிறது.

## கற்பவை கற்றபின்

**நீங்கள் கண்டுகளித்த ஏறு தழுவுதல் நிகழ்வின் காட்சிகளை வகுப்பில் நேர்முக வருணனை செய்து காட்டுக.**

இன்னும் சிறிது நேரத்தில் காளைவிடும் விழா தொடங்க இருக்கிறது. விழிப்பாக இருங்கள். உள்ளே காளைகள் வரிசையாக வந்து நிற்கின்றன. இனிக் காளைகள் ஒவ்வொன்றாக வாடிவாசல் வழியே வெளிவரும். அங்குக் காளைகளை அடக்கப் போகிறவர்கள் திரண்டு நிற்கிறார்கள்.

காளையை அடக்குவது என்பது அவ்வளவு எளிதான காரியமா? எதற்காகக் காளையை அடக்கப் போகிறார்கள்? அது தமிழர் பண்பாட்டுப் பெருமை! அடக்கினால் பெயர்பெற்ற வீரனாகலாம்! பரிசுகளோடு பாராட்டுகளும் கிடைக்கும். அங்கே திரண்டிருக்கும் காளையருக்குப் பரிசும் பாராட்டும் பெரிதல்ல!

காளையை அடக்குவதனால் கிடைக்கும் வெற்றிப் பெருமிதம்தான் முக்கியம். அந்தப் பெருமிதத்தைத் தொடுவதற்காக எத்தனை இளைஞர்கள் காத்துக் கிடக்கிறார்கள்? துடிப்புள்ள இளைஞர்களின் துணிச்சலான செயலை, இன்னும் சிறிது நேரத்தில் நாம் அனைவரும் காணப் போகிறோம்!

அதோ வாடிவாசல் திறக்கப்பட்டு விட்டது! முதலில் வெளிவந்த சிவப்புநிறக்காளை, திமில் நிமிர்த்து – தன் தலையை அசைத்து வெளிவருகிறது. அந்தச் செவலைக் காளையைக் கண்டு, நம் இளங்காளையர் சிலர் அஞ்சி ஒதுங்குகின்றனர். தன்னை எவரும் அடக்க, ஏன் நெருங்கவே முடியாது என்பதை உண்மையாக்கி அந்தச் சிவப்புக்காளை துள்ளிக் குதித்துப் பெருமிதத்தோடு ஓடுகிறது! வெற்றி காளைக்குத்தான்.

அடுத்து வாடிவாசல் வழியாகக் கறுப்புநிறக் கரிக்காளை வருகிறது. எவ்வளவு பெரிய திமில் – கூட்டத்தைக் கண்டு மிரளாமல், எல்லாரையும் தன் மூச்சுக் காற்றால் மிரட்டுகிறது. கழுத்தில் மாலை! கொம்புகளுக்கு இடையே உருமால். களத்தில் நின்று, நெருங்கியவர் எல்லாரையும் மிரட்டி விட்டு, வெற்றியோடு ஓடுகிறது. இதோ அடுத்ததாக வாடிவாசலில் துள்ளிக்குதித்தபடி ஒரு பால்போல் வெளுத்த வெள்ளைநிறக்காளை வெளிவருகிறது.

அதன் வெள்ளைநிறமே எல்லார் கண்களையும் பறிக்கிறது. எவரும் நெருங்க முடியவில்லை. இப்படியாகப் பல காளைகள் வந்தன. சில காளைகள் பிடிபட்டன. பிடித்தவர் பரிசு பெற்றார். பிடிபடாத காளைகளின் சொந்தக்காரர்களும் பரிசு பெற்றனர். வென்றவர் முகத்தில் பெருமிதம் மின்னியது.

MERCY PUBLICATIONS, CHENNAI

# இனிக்கும் இலக்கணம்

## பகுபத உறுப்புகள்

### சிறுவினாக்கள்

1. **பகுபத உறுப்பிலக்கணம் கூறுக. அ. வருகின்றாள் ஆ. வாழ்வான் இ. காண்பிப்பார் ஈ. பிரிந்த**

**அ. வருகின்றாள் – வா (வரு) + கின்று + ஆள்**

**வா** – பகுதி, ‘வரு’ ஆனது விகாரம், **கின்று** – நிகழ்கால இடைநிலை,

**ஆள்** – படர்க்கைப் பெண்பால் வினைமுற்று விகுதி.

**ஆ. வாழ்வான் – வாழ் + வ் + ஆன்**

**வாழ்** – பகுதி, **வ்** – எதிர்கால இடைநிலை, **ஆன்** – படர்க்கை ஆண்பால் வினைமுற்று விகுதி.

**இ. காண்பிப்பார் – காண்பி + ப் + ப் + ஆர்**

**காண்பி** – (பிறவினைப்) பகுதி, **ப்** – சந்தி, **ப்** – எதிர்கால இடைநிலை,

**ஆர்** – படர்க்கைப் பலர்பால் வினைமுற்று விகுதி.

 www.Padasalai.Net 

ஈ. பிரிந்த – பிரி + த் (ந்) + த் + அ

பிரி – பகுதி, த் – சந்தி, 'ந்' ஆனது விகாரம், த் – இறந்தகால இடைநிலை, அ – பெயரெச்ச விகுதி.

## கூடுதல் வினாக்கள்

**2. 'பகுதி' என்பதனை விளக்குக.**

★ சொல்லின் முதலில் நிற்கும் உறுப்பு; முதல்நிலை ; பகுதி; அடிச்சொல்; வேர்ச்சொல்.

★ பகுதி, ஏவல் வினையாக அமையும். மேலும் பிரிக்க இயலாது.

★ எ – டு: செய், உண், கல், படி, நட, ஓடு, தா, பாடு, எழுது.

**3. 'விகுதி' என்பதனை விளக்குக.**

★ சொல்லின் இறுதியில் நிற்கும் உறுப்பு; இறுதிநிலை; விகுதி.

★ வினைமுற்றுச் சொல் விகுதி. இடம் (தன்மை, முன்னிலை, படர்க்கை), பால் (ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால்), எண் (ஒருமை, பன்மை), திணை (உயர்திணை, அஃறிணை) என்பவற்றை உணர்த்தும்.

★ எச்சம், தொழிற்பெயர், ஏவல், வியங்கோள் – அவ்வவற்றிற்கு உரிய விகுதி பெறும்.

| | விகுதி | இடம் | எண் |
|---|---|---|---|
| எ – கா : செய்தேன் – செய் + த் + ஏன் | ஏன் | தன்மை | ஒருமை |
| செய்தோம் – செய் + த் + ஓம் | ஓம் | தன்மை | பன்மை |
| உண்டாய் – உண் + ட் + ஆய் | ஆய் | முன்னிலை | ஒருமை |
| உண்டீர் – உண் + ட் + ஈர் | ஈர் | முன்னிலை | பன்மை |

| | விகுதி | இடம் | எண் |
|---|---|---|---|
| கற்றான் – கல் (ற்)+ ற் + ஆன் | ஆன் | படர்க்கை | ஆண்பால் |
| சென்றாள் – செல் (சென்) + ற் +ஆள் | ஆள் | படர்க்கை | பெண்பால் |
| ஆடினார் – ஆடு + இன் + ஆர் | ஆர் | படர்க்கை | பலர்பால் |
| பறந்தது – பற + த் (ந்) + த் + அ + து | து | படர்க்கை | ஒன்றன்பால் |
| மேய்கின்றன – மேய் + கின்று+அன்+அ | அ | படர்க்கை | பலவின்பால் |

**4. இடைநிலை என்பதை விளக்குக.**

இடைநிலை என்பது, சொல்லின் இடையில் நிற்கும்; காலம் காட்டும்; சில, எதிர்மறைப் பொருள் உணர்த்தும்.

| | | | |
|---|---|---|---|
| செய்தேன் | – செய் + த் + ஏன் | த் | – இறந்தகாலம் |
| உண்டீர் | – உண் + ட் + ஈர் | ட் | – இறந்தகாலம் |
| கற்றார் | – கல் (கற்) + ற் + ஆர் | ற் | – இறந்தகாலம் |
| ஆடினார் | – ஆடு + இன் + ஆர் | இன் | – இறந்தகாலம் |
| உண்கிறது | – உண் + கிறு + அ + து | கிறு | – நிகழ்காலம் |
| ஓடுகின்றன | – ஓடு + கின்று + அன் + அ | கின்று | – நிகழ்காலம் |
| படிப்பேன் | – படி + ப் + ப் + ஏன் | ப் | – எதிர்காலம் |
| ஓடுவான் | – ஓடு + வ் + ஆன் | வ் | – எதிர்காலம் |
| செய்யற்க | – செய் + ய் + அல் (அற்) + க | அல் | – எதிர்மறை இடைநிலை |
| உண்டிலன் | – உண் + ட் + இல் + அன் | இல் | – எதிர்மறை இடைநிலை |
| செய்யோம் | – செய் + ய் + (ஆ) + ஓம் | ஆ | – எதிர்மறை இடைநிலை |

MERCY PUBLICATIONS CHENNAI

**5. சந்தி என்பதனை விளக்குக.**

★ 'சந்தி' என்பது பகுபத உறுப்புகள் புணரும்போது இடையில் தோன்றுவது.

★ பெரும்பாலும் பகுதிக்கும் இடைநிலைக்கும் இடையில் வரும். (புணர்ச்சியில் திரிதலும் கெடுதலும் – விகாரமாகும்).

★ த், ப், க் என்னும் மெய்களும் ய், வ் உடம்படு மெய்களுமாகும்.

★ இடைநிலைக்கும் விகுதிக்கும் இடையிலும் சில சொற்களில் இடம்பெறும்.

| | | |
|---|---|---|
| எ – கா : படித்தான் | – படி + த் + த் + ஆன் | த் சந்தி |
| நடந்தான் | – நட + த் (ந்) + த் + ஆன் | த் சந்தி, 'ந்' ஆகத் திரிந்தது |
| படிக்கிறான் | – படி + க் + கிறு + ஆன் | க் சந்தி |
| நடிப்பான் | – நடி + ப் + ப் + ஆன் | ப் சந்தி |
| வணங்கிய | – வணங்கு + இ(ன்) + ய் + அ | ய் சந்தி |

(இடைநிலைக்கும் விகுதிக்கும் இடையில் வந்தது)

**6. சாரியை என்பதனை விளக்குக.**

★ இடைநிலையையும் விகுதியையும் பொருந்தச் (இயைபச்) செய்வது, 'சாரியை' என்னும் உறுப்பு. அ, அன், கு என்பவை சாரியையாக வரும். பகுதிக்கும் இடைநிலைக்கும் இடையில் வரும் உயிர்மெய் எழுத்தும் சாரியை எனப்படும்.

| | | |
|---|---|---|
| எ – கா : பறந்தது | – பற + த் (ந்) + த் + அ + து | அ சாரியை |
| செல்கின்றன | – செல் + கின்று + அன் + அ | அன் சாரியை |
| காண்குவாம் | – காண் + கு + வ் + ஆம் | கு சாரியை. |

(பகுதிக்கும் இடைநிலைக்கும் இடையில் உயிர்மெய்யாகச் சாரியை வந்தது.)

**7. விகாரம் என்பது யாது?**

★ பகுபத உறுப்புகள் புணரும்போது ஏற்படும் எழுத்துகளின் வடிவமாற்றம் (திரிதல், கெடுதல், குறுகல்) விகாரம் எனப்படும்.

**நினைவில் கொள்க**

| | |
|---|---|
| இறந்தகால இடைநிலைகள் | த், ட், ற், இன் |
| நிகழ்கால இடைநிலைகள் | கிறு, கின்று, ஆநின்று |
| எதிர்கால இடைநிலைகள் | ப், வ் |
| எதிர்மறை இடைநிலைகள் | ஆ, அல், இல் |
| தன்மை ஒருமை வினைமுற்று விகுதிகள் | என், ஏன், அல், அன், கு, டு, து, று |
| தன்மைப் பன்மை வினைமுற்று விகுதிகள் | எம், ஏம், அம், ஆம், ஓம், கும், டும், தும், றும் |
| முன்னிலை ஒருமை வினைமுற்று விகுதிகள் | ஐ, ஆய், இ |
| முன்னிலைப் பன்மை வினைமுற்று விகுதிகள் | இர், ஈர், மின் |
| படர்க்கை ஆண்பால் வினைமுற்று விகுதிகள் | அன், ஆன் |
| படர்க்கைப் பெண்பால் வினைமுற்று விகுதிகள் | அள், ஆள் |
| படர்க்கைப் பலர்பால் வினைமுற்று விகுதிகள் | அர், ஆர், ப, மார், கள் |
| படர்க்கை ஒன்றன்பால் வினைமுற்று விகுதிகள் | து, று, டு |
| படர்க்கைப் பலவின்பால் வினைமுற்று விகுதிகள் | அ, ஆ |
| வியங்கோள் வினைமுற்று விகுதிகள் | க, இய, இயர் |
| தெரிநிலைப் பெயரெச்ச விகுதிகள் | அ, உம் |
| தெரிநிலை வினையெச்ச விகுதிகள் | உ, இ, அ |

MERCY PUBLICATIONS CHENNAI

## பலவுள் தெரிக

1. பகுபத உறுப்புகளுள் இடம்பெறும் அடிப்படை உறுப்புகள் எவை?
   அ) பகுதி, இடைநிலை, சந்தி, சாரியை, விகுதி, விகாரம்
   ஆ) பகுதி இடைநிலை, சாரியை
   இ) பகுதி, சந்தி, விகாரம் ஈ) பகுதி, விகுதி
   **விடை :** ஈ) பகுதி, விகுதி, இடைநிலை

## கூடுதல் வினாக்கள்

2. இலக்கண வகையில் சொற்கள், ______ வகைப்படும்.
   அ) இரண்டு ஆ) மூன்று இ) நான்கு ஈ) ஐந்து
   **விடை :** இ) நான்கு
3. பகுபத உறுப்புகள் மொத்தம் ______.
   அ) இரண்டு ஆ) மூன்று இ) ஆறு ஈ) எட்டு
   **விடை :** இ) ஆறு
4. பகுபதத்தில் அடிப்படை உறுப்புகள் ______.
   அ) மூன்று ஆ) ஆறு இ) நான்கு ஈ) இரண்டு
   **விடை :** ஈ) இரண்டு
5. பகுபதத்தில் 'பகுதி' என்பது, சொல்லின் ______ அமையும்.
   அ) இடையில் ஆ) முதலில் இ) இறுதியில் ஈ) எங்கும் இல்லை
   **விடை :** ஆ) முதலில்
6. பகுதி என்பது, ______ வரும்.
   அ) பெயர்ச்சொல்லாக ஆ) இடைச்சொல்லாக
   இ) ஏவல்வினையாக ஈ) உரிச்சொல்லாக
   **விடை :** இ) ஏவல்வினையாக
7. திணை, பால், எண், இடம் காட்டும் உறுப்பு ______.
   அ) பகுதி ஆ) சந்தி இ) விகுதி ஈ) இடைநிலை
   **விடை :** இ) விகுதி
8. ஏவல்வினையாக அமையும் உறுப்பு ______.
   அ) விகுதி ஆ) இடைநிலை இ) சந்தி ஈ) பகுதி
   **விடை :** ஈ) பகுதி
9. காலம் காட்டும் உறுப்பு, ______ பகுபதத்தில் வரும்.
   அ) பெயர் ஆ) இடை இ) உரி ஈ) வினை
   **விடை :** ஈ) வினை
10. எதிர்மறைப் பொருளைத் தரும் உறுப்பு ______.
   அ) பெயர் இடைநிலை ஆ) காலம் காட்டும் இடைநிலை
   இ) எதிர்மறை இடைநிலை ஈ) எதுவும் இல்லை
   **விடை :** இ) எதிர்மறை இடைநிலை
11. பொருத்துக.

| | | |
|---|---|---|
| 1. ப், வ் | – | அ. நிகழ்கால இடைநிலை |
| 2. த், ட், ற், இன் | – | ஆ. எதிர்மறை இடைநிலை |
| 3. கிறு, கின்று, ஆநின்று | – | இ. பெயரிடைநிலை |
| 4. ஆ, அல், இல் | – | ஈ. இறந்தகால இடைநிலை |
| | – | உ. எதிர்கால இடைநிலை |

   **விடை :** 1 – உ, 2 – ஈ, 3 – அ, 4 – ஆ

MERCY PUBLICATIONS - CHENNAI

12. இவற்றில் இறந்தகால இடைநிலை பெற்ற சொல் ______.
அ) பெறுவாள் ஆ) நடக்கிற இ) பாடினாள் ஈ) உண்ண
**விடை :** இ) பாடினாள்

13. இவற்றில் நிகழ்கால இடைநிலை பெற்ற சொல் ______.
அ) ஆடுவாள் ஆ) ஆடியது இ) செல்லும் ஈ) பாடுகிறது
**விடை :** ஈ) பாடுகிறது

14. கொடுப்பாள் – இதில் இடம்பெற்றுள்ளது ______ இடைநிலை.
அ) இறந்தகால ஆ) நிகழ்கால இ) எதிர்கால ஈ) எதிர்மறை
**விடை :** இ) எதிர்கால

15. தவறான விடையைத் தெரிவு செய்க.
இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும்
அ) திரு + புகழ் – திருப்புகழ் ஆ) கவிதை + பேழை – கவிதைப்பேழை
இ) காவடி + சிந்து – காவடிச்சிந்து ஈ) இந்த + பாடல் – இப்பாடல்
**விடை :** ஈ) இந்த + பாடல் – இப்பாடல்

16. கீழுள்ளவற்றைப் பொருத்தி விடை காண்க.
அ) பகுதி ஆ) விகுதி இ) இடைநிலை ஈ) சாரியை
1) திணை, பால் காட்டும் 2) பொருள் இல்லை
3) முதனிலை எனப்படும் 4) காலம் உணர்த்தும்
i) அ – 1, ஆ – 2, இ – 4, ஈ – 3 ii) அ – 1, ஆ – 3, இ – 2, ஈ – 4
iii) அ – 3, ஆ – 1, இ – 4, ஈ – 2 iv) அ – 3, ஆ – 2, இ – 1, ஈ – 4
**விடை :** iii) அ – 3, ஆ – 1, இ – 4, ஈ – 2

## இலக்கணத் தேர்ச்சிகொள்

**1. பகுபத உறுப்புகள் எத்தனை? அவை யாவை?**

பகுபத உறுப்புகள் ஆறு. அவை : பகுதி, விகுதி, இடைநிலை, சந்தி, சாரியை, விகாரம்.

**2. காலம் காட்டும் இடைநிலைகளை எடுத்துக்காட்டுடன் விளக்குக.**

த், ட், ற், இன் – என்னும் இடைநிலைகள், இறந்தகாலம் காட்டும்.

எ – கா : செய்தான் – செய் + த் + ஆன்; உண்டாள் – உண் + ட் + ஆள்
கற்றார் – கல் (ற்) + ற் + ஆர்; வணங்கினேன் – வணங்கு + இன் + ஏன்

கிறு, கின்று, ஆநின்று – நிகழ்காலம் காட்டும் இடைநிலைகள்.

எ – கா : உண்கிறான் – உண் + கிறு + ஆன், உண்கின்றன – உண் + கின்று + அன் + அ,
செய்யா நின்றான் – செய் + ஆநின்று + ஆன்

ப், வ் – எதிர்காலம் காட்டும் இடைநிலைகள்.

எ – கா : படிப்பான் – படி + ப் + ப் + ஆன் வருவான் – வா (வரு) + வ் + ஆன்

**3. பகுபதத்தில் சந்தி, சாரியை எவ்வெவ்விடங்களில் அமையும்?**

★ **சந்தி :** பகுதிக்கும் இடைநிலைக்கும் இடையில் அமையும். சிறுபான்மை இடைநிலைக்கும் விகுதிக்கும் இடையில் அமையும்.

★ **சாரியை :** இடைநிலைக்கும் விகுதிக்கும் இடையில் அமையும். சிறுபான்மை பகுதிக்கும் இடைநிலைக்கும் இடையில் அமையும்.

**4. விகுதிகள், எவற்றை உணர்த்தும்?**

★ விகுதிகள், திணை (உயர்திணை, அஃறிணை), பால் (ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால்), எண் (ஒருமை, பன்மை), இடம் (தன்மை, முன்னிலை, படர்க்கை) ஆகியவற்றை உணர்த்தும்.

MERCY PUBLICATIONS CHENNAI

5. **பகுபத உறுப்பிலக்கணம் தருக.**

| | பகுதி | சந்தி | விகாரம் | இடைநிலை | சாரியை | விகுதி |
|---|---|---|---|---|---|---|
| அமைந்து | அமை | த் | ந் | த் | | உ |
| பார்த்தான் | பார் | த் | | த் | | ஆன் |
| தோன்றி | தோன்று | | | | | இ |
| வருகிறார் | வா | | வரு | கிறு | | ஆர் |
| செய்க | செய் | | | | | க |
| நடந்தனன் | நட | த் | ந் | த் | அன் | அன் |
| கொடுத்த | கொடு | த் | | த் | | அ |

6. **பின்வருவனவற்றுள் பொருந்தாத இணையைத் தேர்க.**

அ) அன் – வந்தனன் ஆ) இன் – முறிந்தது இ) கு – காண்குவன் ஈ) அன் – சென்றன

**விடை :** ஆ) இன் – முறிந்தது

7. **பகுதி, விகுதி, இடைநிலை ஆகியவற்றைப் பயன்படுத்திச் சொற்களை உருவாக்குக.**




பேசினான், பேசுகிறான், பேசுவான், பேசான்.

எழுதினான், எழுதுகிறான், எழுதுவான், எழுதான்.

வணங்கினான், வணங்குகிறான், வணங்குவான், வணங்கான்.

8. **வேர்ச்சொல், எதிர்மறை இடைநிலை, விகுதி ஆகியவற்றைச் சேர்த்துச் சொற்களை உருவாக்குக.**




பாரான், பாராள், பாரார்.

காணான், காணாள், காணார்.

உரையான், உரையாள், உரையார்.

## மொழியை ஆள்வோம்

### சான்றோர் சித்திரம்

'தமிழ்ப் பதிப்புலகின் தலைமகன்' என்று போற்றப்படும் சி. வை. தாமோதரனார் இலங்கை, யாழ்ப்பாணத்தில் பிறந்தவர். தமிழ்நாட்டுக்கு வருகைபுரிந்து, தம் இருபதாவது வயதிலேயே 'நீதிநெறி விளக்கம்' என்னும் நூலை உரையுடன் பதிப்பித்து வெளியிட்டு, அறிஞர்களின் கவனத்தைக் கவர்ந்தார். 1868ஆம் ஆண்டு, தொல்காப்பியச் சொல்லதிகாரத்திற்குச் சேனாவரையர் உரையையும், பின்னர்க் கலித்தொகை, இறையனார் அகப்பொருள், வீரசோழியம் உள்ளிட்ட பல நூல்களையும் செம்மையாகப் பதிப்பித்துப் புகழ்கொண்டார். அத்துடன் நில்லாது, கட்டளைக் கலித்துறை, நட்சத்திர மாலை, சூளாமணி வசனம் ஆகிய நூல்களையும் எழுதியுள்ளார். ஆறாம் வாசகப் புத்தகம் முதலிய பள்ளிப்பாட நூல்களையும் எழுதினார்.

அவருடைய தமிழ்ப்பணியைக் கண்ட பெர்சிவல் பாதிரியார், அவரைத் தாம் நடத்திய 'தினவர்த்தமானி' என்னும் இதழுக்கு ஆசிரியராக்கினார். அவ்வமயம் அவர் ஆங்கிலேயர் பலருக்கும் தமிழ் கற்றுத் தந்தார். அரசாங்கத்தாரால், சென்னை மாநிலக் கல்லூரியில் தமிழ்ப் பண்டிதராக நியமிக்கப்பட்டார். பிறகு, பி. எல். தேர்விலும் தேர்ச்சி பெற்று, கும்பகோணத்தில் வழக்கறிஞராகப் பணியாற்றி, 1884ஆம் ஆண்டில் புதுக்கோட்டை உயர்நீதிமன்ற நீதிபதியாக நியமிக்கப்பட்டார். தாமோதரனார் எந்தப் பணி ஆற்றினாலும் தமது சொந்தப் பணியாகக் கருதிக் கடமையாற்றினார்.

MERCY PUBLICATIONS - CHENNAI

**1. மாநிலக் கல்லூரி – புணர்ச்சிவிதி கூறுக.**

மாநிலக்கல்லூரி – மாநிலம் + கல்லூரி

“மவ்வீறு ஒற்றழிந்து உயிரீறு ஒப்பவும் ஆகும்” (மாநில + கல்லூரி)

“இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும்” (மாநிலக்கல்லூரி)

**2. ஆசிரியராக்கினார் – இதன் பகுதி ______.**

அ) ஆசு ஆ) ஆசிரி இ) ஆசிரியராக்கு ஈ) ஆசி

**விடை :** இ) ஆசிரியராக்கு

**3. சிறுசிறு தொடர்களாக மாற்றி எழுதுக.**

தாமோதரனார், நீதிநெறி விளக்கம் என்ற நூலைப் பதிப்பித்து வெளியிட்டுக் கலித்தொகை, வீரசோழியம் உள்ளிட்ட நூல்களைப் பதிப்பித்துக் கட்டளைக் கலித்துறை, நட்சத்திரமாலை, சூளாமணி வசனம் ஆகிய நூல்களை எழுதியுள்ளார்.

தாமோதரனார், நீதிநெறி விளக்கம் என்ற நூலைப் பதிப்பித்து வெளியிட்டார்.

தாமோதரனார், கலித்தொகை, வீரசோழியம் உள்ளிட்ட நூல்களைப் பதிப்பித்தார்.

தாமோதரனார், கட்டளைக் கலித்துறை, நட்சத்திர மாலை, சூளாமணி கவசம் ஆகிய நூல்களை எழுதியுள்ளார்.

**4. பெரும்புகழ் – இலக்கணக்குறிப்புத் தருக.**

பண்புத்தொகை.

**5. கல்லூரி, உயர்நீதிமன்றம், வரலாறு, பணி ஆகியவற்றிற்குப் பொருத்தமான ஆங்கிலச் சொற்களை எழுதுக.**

கல்லூரி – College, உயர்நீதிமன்றம் – High Court. வரலாறு – History, பணி – Work, Job

**விடைக்கேற்ற வினா அமைக்க.**

1. தாமோதரனார், கட்டளைக் கலித்துறை, நட்சத்திர மாலை, சூளாமணி வசனம் ஆகிய நூல்களை எழுதியுள்ளார்.

   **வினா :** தாமோதரனார், எந்நூல்களை எழுதியுள்ளார்?

2. தாமோதரனார், எந்தப் பணி ஆற்றினாலும் தமது சொந்தப் பணியாகக் கருதிக் கடமையாற்றினார்.

   **வினா :** தாமோதரனார், எந்தப் பணி ஆற்றினாலும், எவ்வாறு கருதிக் கடமையாற்றினார்?

**வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.**

1. குமரனை பற்றி தெரிந்துக்கொள்ள வேண்டுமா? என் வீட்டிற்கு வருகைத் தாருங்கள். என் வீட்டிற்கு பக்கத்து வீடுதான் குமரனது வீடு.

   **விடை :** குமரனைப் பற்றித் தெரிந்துகொள்ள வேண்டுமா? என் வீட்டிற்கு வருகை தாருங்கள். என் வீட்டிற்குப் பக்கத்து வீடுதான் குமரனது வீடு.

2. அனைத்துத் துறைகளிலும் ஆண்களை போலவேப் பெண்களும் அரசு பணியை பெறவேண்டும்.

   **விடை :** அனைத்துத் துறைகளிலும் ஆண்களைப் போலவே பெண்களும் அரசுப் பணியைப் பெற வேண்டும்.

3. கல்வி கேள்விகளில் சிறந்தவர் நன்மைத் தீமைகளை புரிந்து பேசுவர்.

   **விடை :** கல்வி கேள்விகளில் சிறந்தவர், நன்மை தீமைகளைப் புரிந்து பேசுவர்.

4. தமிழர் ஆற்று தண்ணீரை தேக்கி சேமித்து கால்வாய் வெட்டிப் பாசனம் செய்தனர்.

   **விடை :** தமிழர், ஆற்றுத் தண்ணீரைத் தேக்கிச் சேமித்துக் கால்வாய் வெட்டிப் பாசனம் செய்தனர்.

5. சான்றோர் மிகுந்தப் பொறுப்புடன் சிறப்பான சேவைப் புரிந்து கொள்கையை நிலைநாட்ட செய்தனர்.

   **விடை :** சான்றோர், மிகுந்த பொறுப்புடன் சிறப்பான சேவை புரிந்து, கொள்கையை நிலைநாட்டச் செய்தனர்.

MERCY PUBLICATIONS - CHENNAI

## தமிழாக்கம் தருக

1. Education is the most powerful weapon, which you can use to change the world.
   கல்வி என்பது அதிக ஆற்றல் வாய்ந்த கருவி என்பதனைக் கொண்டு, நீ உலகையே மாற்றலாம்.
2. Looking at beauty in the world is the first step of purifying the mind.
   உலகில் காணப்படும் அழகை நோக்குவதே, மனத்தைத் தூய்மை செய்வதற்கு முதல் படியாகும்.
3. Culture does not make people; People make culture.
   பண்பாடு என்பது மக்களை உருவாக்குவதில்லை; மக்களே பண்பாட்டை உருவாக்குகிறார்கள்.
4. People without the knowledge of their past history and culture is like a tree without roots.
   கடந்தகால வரலாற்றையும் நாகரிகத்தையும் பற்றிய அறிவைப் பெறாத மக்கள், வேர் இல்லாத மரத்திற்கு ஒப்பாவர்.
5. A nation's culture resides in the hearts and in the soul of its people.
   ஒரு தேசத்தின் பண்பாடு என்பது, அத் தேசமக்களின் இதயங்களிலும் ஆன்மாவிலும் தங்கியுள்ளது.

**கீழ்க்காணும் செய்தியைப் படித்து அறிவிப்புப் பதாகை ஒன்றை உருவாக்குக.**

| | |
|---|---|
| ஜனவரி 13 மதுரை தமிழர்களின் பண்பாட்டுச் சிறப்புக் குறித்தும், பண்பாடு குறித்தான தேடலின் தேவை குறித்தும் சிறகுகள் சமூக அமைப்பின் சார்பாக ஒருநாள் கருத்தரங்கம் நடைபெற உள்ளது. | மதுரையை மையமாகக் கொண்டு இயங்கி வரும் சமூகநல அமைப்பான சிறகுகள் சார்பில் ஒருநாள் கருத்தரங்கம் தெப்பக்குளம் அருகில், பாரதி கலைக்கூட அரங்கில் ஜனவரி 13ஆம் நாள் நடைபெற உள்ளது. இதில் தமிழர்களின் பண்பாட்டுச் சிறப்புக் குறித்தும், தொலைத்த பண்பாட்டை மீட்டெடுப்பது குறித்தும் 'பண்பாடுகளால் வாழும் தமிழர்' என்னும் தலைப்பில் சமூக ஆர்வலரும் கவிஞருமான அன்பரசி பேசவிருக்கிறார். இதன் இறுதிப்பகுதியாகக் கலந்துரையாடலும் நடைபெறுகிறது. விருப்பம் உள்ள சமூக ஆர்வலர்கள், கல்லூரி மாணவர்கள், பள்ளி மாணவர்கள் கலந்து கொள்ளலாம் என்று, சிறகுகள் அமைப்பின் ஒருங்கிணைப்பாளரான இனியன் தெரிவித்துள்ளார். |

### அறிவிப்புப் பதாகை உருவாக்கம்

தமிழ்ப் பண்பாட்டுக் கருத்தரங்கு

பங்கு பெற வருக!

இடம் : பாரதி கலைக்கூட அரங்கு (மதுரை) (தெப்பக்குளம் அருகில்)

நாள் : ஜனவரி – 13,

தலைப்பு : **'பண்பாடுகளால் வாழும் தமிழர்'**

உரையாற்றுபவர் : கவிஞர் அன்பரசி (சமூக ஆர்வலர்)

கலந்துரையாடலும் நடைபெறும்.

ஆர்வலர்களே! மாணவர்களே! கலந்து கொள்ளத் திரண்டுவருக!

ஒருங்கிணைப்பாளர் :
இனியன்
(சிறகுகள் அமைப்பு)

## மொழியோடு விளையாடு

**கட்டுரை எழுதுக.**

**'பண்பாட்டைப் பாதுகாப்போம்! பகுத்தறிவு போற்றுவோம்' – என்னும் பொருள்பட ஒருபக்க அளவில் கட்டுரை எழுதுக.**

**பண்பாடாவது யாது ? :**

நெடுங்காலம் தொடர்ந்து வாழ்ந்த வாழ்க்கை முறையில் உருவான சிறந்த பண்புகளை உள்ளடக்கிய நெறிமுறைகளைப் பண்பாடு என்று கூறுவர். குறிப்பிட்ட இனம் சார்ந்த மக்கள் நடத்தும் வாழ்க்கை நெறிமுறை, உறைவிட அமைப்பு, இறைவழிபாடு, ஆடல் பாடல் சார்ந்த கலை, சுற்றுச்சூழல் சார்ந்த வாழ்வுநிலை, உணவு உடை தொடர்பானவை அனைத்தையும் உள்ளடக்கியதைப் பண்பாடு எனக் கூறுவர்.

MERCY PUBLICATIONS - CHENNAI

**முன்னோர் வகுத்தளித்த நெறிகள் :**

நமக்கென முன்னோர்கள் விட்டுச் சென்றுள்ள பாரம்பரிய நன்னெறிப் பண்புகளை, அவர்களது வழிவந்த சந்ததியினர் என்கிற முறையில் நாமும் பின்பற்றி வருகிறோம். 'யாதும் ஊரே யாவரும் கேளிர்', ''ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு', 'கூடி வாழ்ந்தால் கோடி நன்மை', 'பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல்', 'வறியார்க்கு ஒன்று ஈதல்' என்னும் பல்வேறு பண்பாட்டு நெறிகளை நம் முன்னோர் நமக்கு வகுத்தளித்துள்ளனர். அந்த வகையில் கூடி வாழ்தல், ஒருவருக்கொருவர் உதவி செய்து கொள்ளுதல், பிறர் துன்பம் கண்டு வருந்தி, அத் துன்பத்தையும் பகிர்ந்து கொள்ளுதல், உற்றுழி உதவுதல், இல்லாதார்க்கு ஈதல் என்கிற எத்தனையோ பண்புகள் நம்மிடையே காணப்படுகின்றன.

**பண்பாடு கெடாமல் வாழ்க :**

பண்படுத்தப்பட்ட நிலம்தான் நல்ல விளைவைக் கொடுக்கும். நல்ல விளைபொருளைப் பெறுவதற்கு நிலத்தைப் பலமுறை உழுது பண்படுத்தி, நீர் தேங்க வழிவகுத்துக் கொள்வதுபோல, நம் நல வாழ்வுக்குத் தேவையான பல நெறிமுறைகளை முன்னோர் வாழ்விலிருந்து அறிந்து கொள்கிறோம். உலகில் எண்ணற்ற இனம் சார்ந்த மக்கள், பலவேறு குழுக்களாக வாழ்கிறார்கள். அவ்வக் குழுக்களுக்கும் சில பண்பாட்டுப் பழக்கங்கள் உண்டு. ஒரு குழுவின் பண்பாடு, மற்றொரு குழுவுக்குப் பிடிக்காமல் போகலாம்; பிடித்தும் இருக்கலாம். எனினும், அவற்றிலிருந்து நல்லனவற்றை ஏற்று, நம் பண்பாடும் பழக்க வழக்கங்களும் கெடாமல் வாழப் பழகுதல் வேண்டும்.

**நம் வாழ்க்கைமுறை :**

மேற்கத்திய வாழ்வில் கூட்டுக்குடும்ப வாழ்க்கை கிடையாது. வயது வந்த பிள்ளைகள் பிரிந்து சென்று, தனிவாழ்வை நடத்துகின்றனர். நம் நாட்டுக் கூட்டுக்குடும்ப வாழ்க்கை, முதியவர்க்கும் குழந்தைகளுக்கும் பாதுகாப்பாக அமைந்தது. உணவும் உடைகளும் நம் தட்பவெப்ப நிலைக்கு ஏற்ப, உடலுக்கு ஊறு செய்யாதவை. பழக்க வழக்கங்கள், வாழ்க்கை நெறிமுறைகள், உணவு உடை பழக்கம் என எல்லாம் எல்லாராலும் போற்றப்படுபவை.

**பண்பாடே பாதுகாப்பு :**

எனவே, புதியதான நாகரிகத்தையும் பண்பாட்டையும் தேடி அலைவோர், சிறிது சிந்தித்துப் பார்த்து, அதன் நன்மை தீமைகளைப் பகுத்தறிந்து, ஏற்றதை மேற்கொள்வதே நல்ல வாழ்வைத் தரும். நமது பண்பாடும், நாகரிகமும் தொன்மை மிக்கவை. அவை பல ஆயிரம் ஆண்டுகள் பண்பட்டுத் தேர்ந்து வளர்ந்தவை. அவற்றை நாமும் தொடர்ந்து கடைப்பிடிப்பது நமது நல வாழ்வுக்கு வழிவகுக்கும். நம் சந்ததியினருக்கு நல்ல வாழ்வுக்குரிய நெறியைக் காட்டும். எனவே, பண்பாட்டைப் பாதுகாப்போம்; பகுத்தறிவைப் போற்றுவோம்.

## உடன்பட்டும் மறுத்தும் பேசுக 1. ஆங்கிலேயர் வருகை / உடன்படல் / மறுத்தல்

**ஆங்கிலேயர் வருகை (உடன்படல்)**

ஆங்கிலேயர் வருகையால், இந்தியா முழுவதும் இரயில் பாதைகள் அமைக்கப்பட்டன. தொலைத்தொடர்பு வசதி, அவர்களாலேயே அறிமுகப்படுத்தப்பட்டது. நமது நாட்டின் மிகப்பெரிய அலுவலகக் கட்டடங்கள், அவர்கள் கட்டுமானத்தால் ஆனவையேயாகும். மேலும், நமது தொழில்துறையை மேம்படுத்தியதும் அவர்களே. அவர்களின் காலம், வளர்ச்சிப் படிநிலையின் விடியற்காலம் எனலாம்.

**ஆங்கிலேயர் வருகை (மறுத்தல்)**

ஆங்கிலேயர், இந்தியாவில் இரயில் பாதைகளைத் துறைமுகங்களோடு இணைத்து, அதன் வழியாக நமது அரிய செல்வங்களையும் உற்பத்திப் பொருள்களையும் பிரிட்டனுக்குக் கொண்டு சென்றனர். அவர்கள் வாழ்வை மேம்படுத்திக் கொள்வதற்காகவே. தொலைத்தொடர்பு வசதிகளையும் பெரிய கட்டடங்களையும் உருவாக்கினர்; இந்தியர்களுக்காகச் செய்து கொடுக்கவில்லை. அவர்களின் ஆட்சிமுறைத் தேவைகளுக்காகவே செய்துகொண்டனர். எனவே, ஆங்கிலேயர் நம்மை ஆட்சி செய்த காலம், நம்மை நாமே தொலைத்திருந்த இருண்டகாலம் எனலாம்.

## 2. தொழில் நுட்பத்தால் விளைந்தது வளர்ச்சியே / தளர்ச்சியே

**தொழில் நுட்பத்தால் விளைந்தது வளர்ச்சியே!**

தொழில் நுட்பம் வளர்ந்ததால், மின்விசைக் கருவிகள் கிடைத்தன. ஆழ்துளைக் கிணறுகள் அமைத்துத் தேவையான நீரைப் பெற முடிந்தது. எண்ணற்ற தொழில்கள் பெருகித் தொழிற்சாலைகள் வளர்ந்தன. போக்குவரத்து வசதிகள் பெருகியுள்ளன. உணவு உற்பத்தியில் தன்னிறைவு பெற்றுள்ளோம். நிலத்தை உழவும், களை எடுக்கவும், அறுவடை செய்யவும் புதிய புதிய கருவிகள் கிடைத்துள்ளன.

**தொழில் நுட்பத்தால் விளைந்தது தளர்ச்சியே !**

தொழில்நுட்பம் பெருகியதால் சிற்றூர்கள் அழிந்தன. பேரூர்கள் பெருகின. தொழிற்பேட்டைகள் வளர்ந்தன. எரிபொருளுக்காகக் காடுகளை அழித்தனர். ஆழத் துளையிட்டு நீரை எடுத்ததால், பூமித்தாய் ஈரப்பசையை இழந்துவிட்டாள். இந்த மண்ணுலகம் மனிதனுக்குமட்டும் சொந்தமானதன்று. மனித இனம் தோன்றுவதற்கு முன் தோன்றிய எண்ணற்ற உயிரினங்கள் வாழ்கின்றன. அவற்றின் கதி என்ன? அவை இல்லாமல் மனிதன்மட்டும் தனித்து வாழ முடியுமா? காற்றுமாசு, நீர்மாசு, நிலமாசு எனச் சுற்றுச்சூழல் மாசுபடத் தொழில்நுட்பப் பெருக்கம்தானே காரணம்? அதனால் உலக உயிரின வீழ்ச்சிக்கு அடிப்படையே தொழில்நுட்ப வளர்ச்சிதான் என்பதை நிறுவ, எத்தனையோ சான்றுகளைத் தரலாம்.

### 2. தற்போதைய உணவுமுறை நல்வாழ்வை வளர்க்கிறது / குறைக்கிறது

**தற்போதைய உணவுமுறை நல்வாழ்வை வளர்க்கிறது.**

உயிர் வாழ்க்கைக்கு உணவு இன்றியமையாதது. இன்றைய நிலையில் விரைவாகச் செயல்பட வேண்டியது இன்றியமையாததாக உள்ளது. எனவே, உணவுக்காகச் செலவிடும் நேரத்தைச் சுருக்கமாகச் செலவிட எண்ணுகின்றனர். சிற்றுண்டி உணவு வகைகளைத் தயாரிக்க ஆகும் கால தாமதத்தைத் தவிர்க்கக் கடைகளில் வாங்கிக் கொள்வது எளிதாக உள்ளது. எனவே, விரைவு உணவகங்கள் பெருகியுள்ளன. பயணம் செய்யும்போது உண்பதற்கெனப் பல உணவு வகைகள் கிடைக்கின்றன. உழைப்பு பெருகவும், விரைந்து செயல்படவும், நம் வாழ்வை எளிமையாக்கவும் இன்றைய உணவுப் பழக்கம் சிறப்பானதாக உள்ளது.

தற்போதைய உணவுமுறை நல்வாழ்வைக் குறைக்கிறது.

உயிர் வாழ்க்கைக்கு மட்டுமல்ல. நோயற்ற வாழ்வுக்கும் உணவு இன்றியமையாததாகிறது. நம் வீட்டில் சமைக்கும் உணவில் சத்துப் பொருள்கள் சரிவிகிதத்தில் இடம்பெறுகின்றன. விரைவு உணவகங்களில் விற்கப்படும் உணவு வகைகளில் மணத்திற்காகவும் சுவைக்காகவும் சேர்க்கப்படுகின்ற வேதிப்பொருள்கள், முதுமைக் காலத்தில் நோய் செய்யும். பதப்படுத்தப்பட்ட உணவு வகைகள் கையாளுவதற்கு வசதியாக இருந்தாலும், அவற்றில் கலந்துள்ள வேதிப்பொருள்கள் உடலுக்கு ஊறுவிளைக்கும். எனவே, இன்றைய நிலையில் கடைப்பிடிக்கப்படும் உணவுமுறை, நல்வாழ்வை வளர்ப்பதாக இல்லை; குறைப்பதாகவே உள்ளது.

### 4. தமிழர்கள் பண்பாட்டைத் தக்கவைத்திருக்கிறார்கள் / தள்ளி வைத்திருக்கிறார்கள்

**தமிழர்கள் பண்பாட்டைத் தக்கவைத்திருக்கிறார்கள் :**

தமிழர்களின் பண்பாடு தொன்மையானது; பரம்பரை பரம்பரையாகத் தொடர்ந்து வந்து கொண்டிருப்பது; உடை, உணவு, பழக்கவழக்கம், வாழ்க்கைமுறை ஆகியவற்றில் வெளிப்படுவது. இன்றளவும் தமிழர் தம் பண்பாட்டைத் தொடர்ந்து தக்கவைத்துக்கொண்டுதான் இருக்கிறார்கள். முன்னோர் கடைப்பிடித்த நெறிமுறைகளை இன்றளவும் இடைவிடாமல் தொடர்ந்துகொண்டுதான் வருகிறார்கள். வேலை, தொழில் எனப் பல்வேறு காரணங்களுக்காக வெளிநாடுகளுக்குச் செல்ல வேண்டியநிலை ஏற்பட்டாலும், மொழியையும் பண்பாட்டையும் மறவாமல் கடைப்பிடித்துக் கொண்டுதானே வருகிறார்கள். இந்த வகையில் தமிழர்கள் பண்பாட்டைத் தக்கவைத்திருக்கிறார்கள் என்றுதான் கூற வேண்டும்.

**தமிழர்கள் பண்பாட்டைத் தள்ளி வைத்திருக்கிறார்கள் :**

பண்பாட்டுப் பழமையும் பாரம்பரியப் பெருமையும் கொண்ட தமிழ்மக்கள், இன்று அவற்றைக் கடைப்பிடிக்கின்றனரா? கேள்விக்குறியாகவே உள்ளது. முதலில் தங்களைப் பெற்றவர்களை 'அம்மா' என்றும் 'அப்பா' என்றும் அழைக்கிறார்களா? தாய்மொழியைக் கற்கின்றனரா? பிழை இன்றிப் பேசவும் எழுதவும் செய்கின்றனரா? இல்லையே! தமிழைக் கெடுத்து ஆங்கிலக் கலவையோடுதானே பேசுகின்றனர்! அதுமட்டுமா? உணவுமுறை, உடை மற்றும் பழக்க வழக்கங்களைக்கூட மாற்றிக்கொண்டுள்ளதைக் காண்கிறோம் அல்லவா? நம் முன்னோர் கொண்டாடிய பொங்கல், தீபாவளி முதலான விழாக்களை, நம் முன்னோர் கொண்டாடியபடி கொண்டாடுகிறோமா? எங்கோ சிலர் பின்பற்றுகின்றனர். பெரும்பான்மையினராகிய தமிழர், பெயரளவில் தமிழராக வாழ்கின்றனர். தங்கள் பண்பாட்டைத் தள்ளிவைத்து, அன்னிய மோகத்தில் மிதந்து கொண்டிருக்கின்றனர் என்பதே உண்மை.

MERCY PUBLICATIONS - CHENNAI

## நிற்க அதற்குத் தக

| வேலைகள் | ஆண் | பெண் | இருவரும் | ஆண் – பெண் ஏதேனும் ஒன்றைமட்டும் தேர்வு செய்தால் அதற்கான காரணத்தை எழுதுக. |
|---|---|---|---|---|
| பூ கட்டுவது | | பெண் | | பெண்கள்தான் பூ விற்கும் தொழிலை அதிகம் செய்து வாழ்வை நடத்துகின்றனர். பூ கட்டுதல் என்பது தனிக்கலை. அதைப் பொறுமையுடன் செய்வோர் பெண்களே. |
| கணினியில் பணி | | | இருவரும் | |
| காவலர் | | | இருவரும் | |
| சமைப்பது | | பெண் | | ஆண்கள், எங்காவது ஓரிருவர் சமைக்கலாம். கலை என்ற நிலை உருவானதால், ஆண்களில் சிலர் அதில் தேர்ச்சி பெற்று, வல்லவர்களாகித் தொழில் செய்கின்றனர். இல்லந்தோறும் சமைப்போர், பெண்களே என்பதை மறுக்கமுடியாது. |
| மருத்துவம் | | | இருவரும் | |
| வழக்கறிஞர் | | | இருவரும் | |
| வீட்டின் தூய்மை | | | இருவரும் | |
| தொழில் முனைவோர் | ஆண் | | | பெரும்பாலும் ஆண்கள். இந்நூற்றாண்டில் பெண்களில் சிலர், தொழில் முனைவோர்களாக வளர்ந்து வருகின்றனர். |

### கலைச்சொல் அறிவோம்

**இனக்குழு** – Ethnic Group
**புவிச்சூழல்** – Earth Environment
**வேர்ச்சொல் அகராதி** – Rootword Dictionary
**முன்னொட்டு** – Prefix
**பின்னொட்டு** – Suffix
**பண்பாட்டுக்கூறுகள்** – Cultural Elements

## வாழ்வியல்

## திருக்குறள்

### குறுவினாக்கள்

**1. தீயினால் சுட்டதைப் 'புண்' என்றும் நாவினால் சுட்டதை 'வடு' என்றும் வள்ளுவம் கூறுவது ஏன்?**

★ தீயினால் சுட்டது உடலில் வடுவாக இருந்தாலும், உள்ளத்தில் ஆறிவிடும்.
★ நாவினால் சுட்டது மனத்தில் என்றும் ஆறாத வடுவாக நிலைத்துவிடும்.
★ எனவே, தீயினால் சுட்டதைப் 'புண்' என்றும், நாவினால் சுட்டதை 'வடு' என்றும் வள்ளுவம் கூறுகிறது.

**2. மருந்தாகித் தப்பா மரத்தற்றால் செல்வம்**
**பெருந்தகை யான்கண் படின். – இக்குறட்பாவின் உவமையைப் பொருளோடு பொருத்துக.**

★ மருந்தாகித் தப்பா மரம், தன் எல்லா உறுப்புகளாலும் மருந்தாகப் பயன்படும் மரம் என்பது உவமை.
★ செல்வம், பிறருக்குப் பயன்படும்வகையில் வாழும் பெருந்தகையானுக்கு உவமையாகக் கூறப்பட்டது.
★ மரம் – உவமானம்; பெருந்தகையான் – உவமேயம்; பயன்படல் – பொதுத்தன்மை; 'அற்று' – உவமை உருபு.

MERCY PUBLICATIONS - CHENNAI

www.Padasalai.Net

**3. எதற்குமுன் நல்ல செயல்களை விரைந்து செய்ய வேண்டும் என்று திருக்குறள் கூறுகிறது?**

★ நாக்கு அடைத்து, விக்கல் வந்து உயிர்க்கு இறுதி வருமுன், நல்ல செயல்களை விரைந்து செய்யவேண்டும் என்று, திருக்குறள் கூறுகிறது.

**4. சீர்தூக்கி ஆராய வேண்டிய ஆற்றல்கள் யாவை?**

★ செயலின் வலிமை, தன்னின் வலிமை, பகைவனின் வலிமை, துணையானவரின் வலிமை

**5. மருந்து எது? மருந்து மரமாக இருப்பவர் யார்?**

★ **மருந்து மரமாக இருப்பவர்** : பெருந்தகையாளர் **மருந்து** : செல்வம்

## கூடுதல் வினாக்கள்

**6. மலையினும் மாணப்பெரியது எது?**

★ தனக்குரிய நேர்வழியில் மாறாது, அடக்கமாக இருப்பவனின் உயரிய தோற்றமானது, மலையின் மாண்பைக் காட்டிலும் பெரியதாகும்.

**7. நாவை ஏன் காக்க வேண்டும்?**

★ எதனை அடக்கிக் காக்காவிட்டாலும், நாவை மட்டுமாவது அடக்கிக் காக்க வேண்டும். அவ்வாறு நாவைக் காக்காவிட்டால், சொல்குற்றம் ஏற்பட்டுத் துன்பப்படுவர்.

**8. தாளாற்றிப் பொருளீட்டுவது எதற்காக எனக் குறள் கூறுகிறது?**

★ விடாமுயற்சி செய்து பொருளீட்டுவது, தகுதியானவருக்கு உதவி செய்வதற்கேயாகும் எனக் குறள் கூறுகிறது.

**9. உயிர் வாழ்வார், செத்தார் – எவர் எவர்?**

★ உலக நடைமுறையோடு பொருந்தி ஒத்து வாழ்பவரே உயிர் வாழ்பவராவார். அவ்வாறு வாழாதவர் செத்தவராவர்.

**10. உலகில் நிலைத்து நிற்பதாகக் குறள் கூறுவது யாது?**

★ இணையற்ற, உயர்ந்த புகழே அல்லாமல், இந்த உலகத்தில் ஒப்பற்று உயர்ந்து நிலைத்து நிற்பது, வேறு எதுவுமில்லை எனக் குறள் கூறுகிறது.

**11. 'நன்று' என வள்ளுவர் எதனைக் கூறுகிறார்?**

★ தோன்றினால், புகழ்தரும் பண்புகளுடன் தோன்ற வேண்டும். இல்லையெனில், தோன்றாமல் இருப்பதே நன்று என, வள்ளுவர் கூறுகிறார்.

**12. வாழ்வார், வாழாதவர் எவர் எவர் என வள்ளுவர் கூறுகிறார்?**

★ பழி இல்லாமல் வாழ்பவரே வாழ்பவராவார்; புகழ் இல்லாமல் வாழ்பவர், வாழாதவராவார் என, வள்ளுவர் கூறுகிறார்.

**13, செய்தவம் ஈண்டு முயலப்படுவது ஏன்?**

★ விரும்பியதை விரும்பியவாறே பெற முடியும் என்பதனால், செய்ய முடிந்த தவம், இங்கேயே முயன்று பார்க்கப்படுகிறது என, வள்ளுவர் கூறியுள்ளார்.

**14. தவமிருப்பார் பெறும் பயன் யாது?**

★ பொன்னை நெருப்பில் புடம் இட்டுச் சுடும்போது, மாசு நீங்கி ஒளிவிடும்.

★ அதுபோல், தவம் இருந்து, துன்பத்தில் தம்மை வருத்திக் கொள்பவருக்கு, ஞானம் ஒளி பெற்று வளரும்.

**15. இவ்வுலகு எத்தகைய பெருமையை உடையது?**

★ நேற்று உயிருடன் இருந்தவன், இன்று இல்லை என்னும் நிலையாமைப் பெருமையை உடையது இவ்வுலகம்.

**16. கோடியும் அல்ல பல. – கருதுபவர் எவர்?**

★ வாழ்வின் தன்மையை ஒரு வேளையாயினும் சிந்திக்காதவர், ஒரு கோடியினும் அதிகமாக எண்ணுவர்.

**17. நோதல் இலன் – எவன்?**

★ பொருள்களிடமிருந்து பற்றுதலை நீக்கியவனாக எவனொருவன் இருக்கிறானோ, அவன் அந்தப் பொருள்களால் துன்பம் அடைவது இல்லை.

MERCY PUBLICATIONS - CHENNAI

**18. பற்றை விட என்ன செய்ய வேண்டும்?**

★ பற்றை விட்டு அகல்வதற்குப் பற்று இல்லாத (இறை)வனைப் பற்றி நிற்க வேண்டும்.

**19. இன்பம் எப்பொழுது இடைவிடாது பெருகும்?**

★ பேராசை என்னும் பெருந்துன்பம் தொலைந்துபோனால், இன்பம் என்பது இடைவிடாது பெருகும்.

**20. பேரா இயற்கை பெற வழியாது?**

★ எக்காலத்திலும் நிறைவு செய்யமுடியாத இயல்புடைய ஆசை என்பதனை விட்டொழித்தால், நிலையான இன்பத்தைப் பெற முடியும்.

**21. விரைந்து கெடுபவன் யார்?**

★ மற்றவருடன் ஒத்துப் போகாதவனும், தன் வலிமையை அறியாதவனும், தன்னைப் பெரிதாக நினைப்பவனும் விரைந்துக் கெடுபவனாவான்.

**22. இல்லாகித் தோன்றாக் கெடுபவன் யார்?**

★ தன்னிடம் உள்ள பொருள் முதலானவற்றின் அளவை அறிந்து வாழாதவன், வாழ்க்கையில் எல்லா வளமும் பெற்றிருப்பதுபோல் காட்சி தந்து, தோற்றம் இல்லாமல் கெட்டு அழிவான்.

**23. எவருக்கு அருவினை என்பது இல்லையாம்?**

★ உரிய கருவிகளுடன், தக்க காலம் அறிந்து செயலைச் செய்பவனுக்கு, செய்தற்கு அரிய செயல் என்று எதுவும் இல்லையாம்.

**24. எவரால் ஞாலத்தையும் பெறமுடியும்?**

★ உரிய காலத்தில், பொருத்தமான இடத்தில் செயலைச் செய்யும் ஆற்றலைப் பெற்றவனால், ஞாலத்தையும் பெறமுடியும்.

**25. காலம் கருதி இருப்பவர் – எவர்?**

★ உலகத்தை வெல்லக் கருதுபவர், மனம் கலங்காமல் அதற்கு உரிய காலத்திற்காகக் காத்திருப்பர்.

**26. அரிய செயலை எப்போது செய்து முடிக்கவேண்டும்?**

★ கிடைப்பதற்கு அரிய காலம் வாய்த்தால், முடிப்பதற்கு அரிய செயலை, அப்போதே செய்து முடிக்க வேண்டும்.

**27. திருக்குறளுக்கு வழங்கும் வேறு பெயர்கள் யாவை?**

★ உலகப்பொதுமறை, பொய்யாமொழி, வாயுறை வாழ்த்து, முப்பால், உத்தரவேதம், தெய்வநூல் எனப் பல பெயர்கள், திருக்குறளுக்கு வழங்கப்பெறுகின்றன.

**28. மருத்துவத்தின் பிரிவுகளாகக் குறள் கூறுவன யாவை?**

★ நோயாளி, மருத்துவர், மருந்து, மருந்தாளுநர்.

## சிறுவினாக்கள்

**1. தீயினாற் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே**
**நாவினாற் சுட்ட வடு – இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்குக.**

★ இக்குறட்பாவில் வேற்றுமை அணி பயின்று வந்துள்ளது.

★ இரு பொருள்களின் ஒற்றுமையை முதலில் கூறிப் பின்னர் அவற்றின் வேற்றுமையைக் கூறுவது வேற்றுமை அணி. தீயினால் சுட்ட புண்ணும், நாவினால் சுட்ட வடுவும் சுடுதலால், ஒற்றுமை உடையன. புண் ஆறும்; வடு ஆறாது என்பது வேற்றுமை. எனவே, வேற்றுமை அணி பயின்று வந்துள்ளது.

**2. புகழுக்குரிய குணங்களாக நீவிர் கருதுவன யாவை? புகழின் பெருமையைப் பொதுமறைவழி நின்று கூறுக.**

★ உலகநடை அறிந்து, அடக்கத்தோடு பிறருக்கு உதவி செய்து வாழ்வதே, புகழுக்குரிய குணங்கள் ஆகும்.

★ இணையற்ற இந்த உலகத்தில், உயர்ந்த புகழே அல்லாமல், உயர்ந்து ஒப்பற்று நிலைத்து நிற்பது வேறு எதுவும் இல்லை.

★ எனவே, வாழ்ந்தால் புகழ் தரும் பண்புகளுடன் வாழ வேண்டும். இல்லையெனில் தோன்றாமல் இருப்பதே நல்லது. ஏனெனில், பழி இல்லாமல் வாழ்பவரே வாழ்பவராவார். புகழ்பெற இயலாமல் வாழ்பவர், வாழாதவரேயாவார் எனப் புகழின் பெருமையைப் பொதுமறை விளக்குகிறது.

MERCY PUBLICATIONS - CHENNAI

www.Padasalai.Net

**3. நாச்செற்று விக்குள்மேல் வாராமுன் நல்வினை**
**மேற்சென்று செய்யப் படும் – இக்குறட்பாவை அலகிட்டு வாய்பாடு கூறுக.**

| சீர் | அசை | வாய்பாடு |
|---|---|---|
| நாச் / செற் / று | நேர் நேர் நேர் | தேமாங்காய் |
| விக் / குள் / மேல் | நேர் நேர் நேர் | தேமாங்காய் |
| வா / ரா /முன் | நேர் நேர் நேர் | தேமாங்காய் |
| நல் / வினை | நேர் நிரை | கூவிளம் |
| மேற் / சென் / று | நேர் நேர் நேர் | தேமாங்காய் |
| செய் / யப் | நேர் நேர் | தேமா |
| படும் | நிரை | மலர் |
| இக்குறட்பா, '**மலர்**' என்னும் வாய்பாட்டால் முடிந்துள்ளது. | | |

**4. சொற்பொருள் பின்வருநிலையணியை விளக்கிக் கீழ்க்காணும் குறளுக்கு இவ்வணியைப் பொருத்தி எழுதுக.**

வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும்
துணைவலியும் தூக்கிச் செயல்.

★ செய்யுளில் முன்னர்வந்த சொல், மீண்டும் மீண்டும் அதே பொருளில் பலமுறை வருமானால், அது சொற்பொருள் பின்வருநிலை அணி எனப்படும்.
★ இக்குறளில் 'வலி' என்னும் சொல், 'வலிமை' என்னும் பொருளில் பலமுறை வந்துள்ளது. எனவே, இச்செய்யுளில் சொற்பொருள் பின்வருநிலையணி பயின்று வந்துள்ளது.

**5. விரும்பியதை அடைவது எப்படி? குறள்வழி விளக்குக.**

★ செய்ய முடிந்த தவத்தை முயன்று பார்த்தால், விரும்பியதை விரும்பியபடி பெறமுடியும். பொன்னை நெருப்பில் இட்டுச் சுடும்போது, அது மாசு நீங்கி ஒளிவிடுவதுபோலத் தவத்தை மேற்கொண்டு வருந்தினால், ஞானம் என்னும் அறிவுஒளி பெறலாம்.
★ உரிய காலத்தில், பொருத்தமான இடத்தில் தக்க செயலை மேற்கொண்டால், உலகத்தையே பெறக் கருதினாலும் கிடைத்துவிடும் எனக் குறள் வழிகாட்டுகிறது.

## கூடுதல் வினாக்கள்

**6. மருந்தாகித் தப்பா மரத்தற்றால் செல்வம்**
**பெருந்தகை யான்கண் படின். – இதில் பயின்றுள்ள அணியைச் சுட்டி விளக்குக.**

★ இதில் உவமை அணி பயின்றுள்ளது. உவமானம் ஒரு தொடராகவும், உவமேயம் ஒரு தொடராகவும் அமைய, இடையில் உவமை உருபைக் கொடுத்துக் கூறுவது உவமை அணியாகும்.
★ மருந்தாகித் தப்பா மரம் – உவமானம்; செல்வம் பெருந்தகையான்கண் படின் – உவமேயம்.
★ அற்று – உவமைஉருபு. எனவே, உவமையணி பயின்றுள்ளது.

**7. சுடச்சுடரும் பொன்போல் ஒளிவிடும் துன்பம்**
**சுடச்சுட நோற்கிற் பவர்க்கு. – இதில் பயின்றுள்ள அணியைச் சுட்டி விளக்குக.**

★ இதில் உவமை அணி பயின்றுள்ளது.
★ உவமானம், உவமேயம், உவமை உருபு ஆகியவற்றைப் பெற்றிருப்பது உவமை அணி.
★ சுடச்சுடரும் பொன் – உவமானம்; துன்பம் சுடச்சுட நோற்கிற்பவர்க்கு ஒளிவிடும் – உவமேயம்; போல் – உவமஉருபு. எனவே, உவமையணி பயின்றுள்ளது.

**8. பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்**
**பற்றுக பற்று விடற்கு. – இக்குறளில் பயிலும் அணியைச் சுட்டி விளக்குக.**

★ இக்குறளில் சொற்பொருள் பின்வரு நிலையணி பயின்றுள்ளது.
★ ஒருசொல் அதே பொருளில், பலமுறை இடம்பெறுவது, சொற்பொருள் பின்வருநிலையணி ஆகும்.
★ 'பற்று' என்னும் சொல், 'பிடித்தல்' என்னும் பொருளில் பலமுறை இடம்பெற்றதால், சொற்பொருள் பின்வரு நிலையணியாயிற்று.

MERCY PUBLICATIONS - CHENNAI

**9. பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டம்**
**சால மிகுத்துப் பெயின். – இக்குறளில் பயின்று வரும் அணியைச் சுட்டி விளக்குக.**

★ இக்குறளில் பிறிது மொழிதல் அணி பயின்றுள்ளது. கூறக்கருதிய பொருளை நேரே கூறாமல், பிறிது ஒன்றைக் கூறி, அதன்மூலம் விளக்குவது. அதாவது, உவமானத்தைக் கூறி, உவமேயத்தைப் பெற வைப்பது, பிறிது மொழிதலணியாகும்.

★ "இலேசான மயிலிறகேயானாலும், அளவுக்கு அதிகமாக ஏற்றினால், வண்டியின் வலிமையான அச்சும் முறிந்துவிடும்" என்னும் உவமையைக் கூறி, "வலிமை இல்லாதவராயினும் பலர் ஒன்று சேர்ந்தால், வலிமை பொருந்தியவனையும் அழித்திட இயலும்" என்னும் பொருளைப் பெறவைத்தமையால், பிறிது மொழிதலணியாகும்.

**10. அருவினை யென்ப உளவோ கருவியான்**
**காலம் அறிந்து செயின். – அலகிட்டு வாய்பாடு கூறுக.**

| சீர் | அசை | வாய்ப்பாடு |
|---|---|---|
| அரு / வினை | நிரை நிரை | கருவிளம் |
| யென் / ப | நேர் நேர் | தேமா |
| உள / வோ | நிரை நேர் | புளிமா |
| கரு / வியான் | நிரை நிரை | கருவிளம் |
| கா / லம் | நேர் நேர் | தேமா |
| அறிந் / து | நிரை நேர் | புளிமா |
| செயின் | நிரை | மலர் |

**11. நிலையின் திரியா தடங்கியான் தோற்றம்**
**மலையினும் மாணப் பெரிது – அலகிட்டு வாய்பாடு கூறுக.**

| சீர் | அசை | வாய்ப்பாடு |
|---|---|---|
| நிலை / யின் | நிரை நேர் | புளிமா |
| திரி / யா | நிரை நிரை | புளிமா |
| தடங் / கியான் | நேர் நேர் | கருவிளம் |
| தோற் / றம் | நேர் நேர் | தேமா |
| மலை / யினும் | நிரை நிரை | கருவிளம் |
| மா / ணப் | நேர் நேர் | தேமா |
| பெரி / து | நிரைபு | பிறப்பு |

**12. திருக்குறள் குறித்து நீ அறிவன யாவை?**

★ தமிழ் இலக்கியங்களுள் வாழ்வியலுக்கு வழிகாட்டும் நூல் திருக்குறள்.

★ இது, பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று; 1330 குறள் வெண்பாக்களால் ஆகியது.

★ உலக மக்கள் அனைவருக்கும், எக்காலத்திற்கும் பொருந்தும் கருத்துகளை உள்ளடக்கியது.

★ 'உலகப் பொதுமறை' எனப் போற்றப்படுவது. குறள் வெண்பாக்களால் ஆகியதால், 'குறள்' எனவும், 'திரு' என்னும் அடைமொழி பெற்றுத் 'திருக்குறள்' எனவும் வழங்கப்பெறுவது.

**13. திருக்குறளுக்குள்ள உரைகள் பற்றி எழுதுக.**

★ பரிமேலழகர், மணக்குடவர், காலிங்கர், பரிதி, பரிப்பெருமாள், தருமர், தாமத்தர், நச்சர், திருமலையர், மல்லர் என்னும் பத்துப் பேருடைய பழைய உரைகள் உள்ளன.

★ இன்றளவும், காலத்திற்கு ஏற்பப் பலர் உரை எழுதி வருகின்றனர். உலகமொழிகள் பலவற்றில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. திருக்குறளின் சிறப்பை விளக்கிப் பலர் பாடிய பாடல்களின் தொகுப்பு, 'திருவள்ளுவமாலை' என வழங்கப் பெறுகிறது.

**14. திருவள்ளுவர் குறித்து அறிவன யாவை?**

★ திருக்குறளை இயற்றியவர் குறித்த வரலாற்றுச் செய்திகள் எதுவும் தெளிவாகக் கிடைக்கவில்லை.

★ எனினும், தேவர், நாயனார், தெய்வப்புலவர், செந்நாப்போதார், பெருநாவலர், பொய்யாமொழிப் புலவர், மாதானுபங்கி, முதற்பாவலர் என்னும் சிறப்புப் பெயர்களால் அழைக்கப் பெறுகிறார்.

MERCY PUBLICATIONS - CHENNAI

www.Padasalai.Net

**15. திருக்குறள் அதிகாரங்கள், இயல்கள் குறித்து எழுதுக.**

★ திருக்குறள் அறத்துப்பால் (38 அதிகாரங்கள்), பொருட்பால் (70 அதிகாரங்கள்), இன்பத்துப்பால் (25 அதிகாரங்கள்) என்னும் முப்பிரிவுகளையும், 133 அதிகாரங்களையும் கொண்டது.

★ அறத்துப்பால் – பாயிரவியல் (4), இல்லறவியல் (20), துறவறவியல் (13), ஊழியல் (1) என்னும் நான்கு இயல்களைக் கொண்டுள்ளது.

★ பொருட்பால் – அரசியல் (25), அமைச்சியல் (32), ஒழிபியல் (13) என்னும் மூன்று இயல்களைக் கொண்டுள்ளது.

★ இன்பத்துப்பால் : களவியல் (7), கற்பியல் (18) என்னும் இரண்டு இயல்களைக் கொண்டுள்ளது.

**16. மருந்து, மருத்துவர், மருத்துவம் ஆகியன பற்றித் திருக்குறள் கூறுவன யாவை?**

★ **மருந்து :** முன்னர் உண்டது செரித்ததை அறிந்து உண்டால், மருந்து என ஒன்று உடலுக்குத் தேவையில்லை.

★ **மருத்துவர் :** நோயையும் அதன் காரணத்தையும் அதை நீக்கும் வழியையும் ஆராய்ந்து, நோயாளியின் வயதையும் நோயின் அளவையும் மருத்துவம் செய்தற்குரிய காலத்தையும் ஆராய்ந்து, மருத்துவர் செயல்பட வேண்டும்.

★ **மருத்துவம் :** நோயாளி, மருத்துவர், மருந்து, மருந்தாளுநர் என்னும் நான்கு வகைகளுள் அடங்கும்.

## நெடுவினா

**1. கொடையில் சிறந்து விளங்க வள்ளுவம் கூறும் வழிகளை ஒப்புரவறிதல் அதிகாரம்வழி நிறுவுக.**

★ உலகியல்பு அறிந்து, கைம்மாறு கருதாமல், கண்ணோட்டத்துடன் பிறர்க்கு உதவி வாழ்தலே ஒப்புரவறிதலாகும்.

★ ஒப்புரவு அறிந்தவர், தம் கைப்பொருளைப் பிறர் நலனுக்குத் தேவையுள்ளபோது செலவழிப்பவராக இருப்பர். விடாமுயற்சி செய்து பொருள் ஈட்டும் செயல் எல்லாம், தகுதியானவர்க்குக் கொடுத்து உதவுவதற்கே ஆகும்.

★ உலகநடை அறிந்து, உயர்ந்தவர் அனைவரோடும் ஒத்துப்போகிறவனே உயிர் வாழ்பவனாவான்.

★ பொருட்செல்வமானது, பெருந்தன்மை பொருந்தியவனிடம் சென்று சேருமானால், அது தன் உறுப்புகளால் மருந்தாகப் பயன்படும் மரம், ஊர் நடுவில் பழுத்து உள்ளதற்குச் சமமாகும் என, வள்ளுவர் கூறுகிறார்.

★ இவற்றால் ஒப்புரவு அறிந்தவரே, கொடையில் சிறந்து விளங்க முடியும் என்பதனைத் தெளியலாம்.

**2. ‘அடக்கமுடைமை ஒருவரை வாழ்வினில் உயர்த்தும்’ – இக்கூற்றை முப்பால்வழி விளக்குக.**

★ ஒருவர் மனம், மொழி, செயல்களால் அடங்கி இருப்பதே அடக்கமாகும். அந்த அடக்கமுடைமை ஒருவனை வாழ்வில் எவ்வெவ்வாறு உயர்த்தும் என்பதை முப்பால்வழிக் காண்போம்.

★ தன் தகுதிக்கென ஆன்றோர் கூறிய நேர்வழி மாறாது, ஒருவன் அடக்கமாக இருப்பானாயின், அவன் உயர்வானது, மலையின் மாண்பைக் காட்டிலும் பெரிதாக விளங்கும்.

★ அடக்கம் என்பதில் புலன் அடக்கம் முக்கியம். அவ்வகையில் எதனை அடக்கிக் காக்கவில்லையானாலும், நாவை மட்டுமாவது அடக்கிக் காக்க வேண்டும். அப்படி நாவை அடக்கிக் காக்கவில்லையானால், பேசும் சொற்களில் குற்றம் ஏற்பட்டு, சிக்கலுக்கு உள்ளாகித் துன்பப்படுவர்.

★ நாவை ஏன் அடக்க வேண்டும்? தீயினால் சுட்ட புண், உடலில் வடுவாகக் கிடந்தாலும், உள்ளத்துள் ஆறிவிடும். நாவினால் கூறும் சுடுசொல் புண்ணாகும் வகையில் சுடாது. ஆனால், வடுவாகவே உள்ளத்தில் நிலைத்திருந்து ஊறு செய்யும்.

★ எனவே, ஒருவர் வாழ்வில் பழிபாவமின்றி உயர்வு பெற, அடக்கம் இன்றியமையாதது என்பதை முப்பால் தெளிவுபடுத்துகிறது.

## இலக்கணக்குறிப்பு

**அடங்கியான், அறிவான், வாழ்வான், வாழ்வாரே, நீங்கியான், வியந்தான், கருதுபவர்** – வினையாலணையும் பெயர்கள்

**தோற்றம், நோதல், வாழ்க்கை** – தொழிற்பெயர்கள்

மலையி**னும்** – உயர்வு சிறப்பும்மை

**யா** – அஃறிணைப் பன்மை வினாப்பெயர்

MERCY PUBLICATIONS - CHENNAI

**நா காக்க** (நாவைக் காக்க), **நாச்செற்று** (நாவினைச் செற்று), **அவா நீப்பின்** (அவாவை நீப்பின்) – இரண்டாம் வேற்றுமைத்தொகைகள்

**சுடச்சுடரும்** (சுடுவதால் சுடரும்) – மூன்றாம் வேற்றுமைத்தொகை

**நெருநல் உளன்** (நேற்றைக்கு உளன்), **இன்று இல்லை** – நான்காம் வேற்றுமைத்தொகைகள்

**வினைவலி, தன்வலி, மாற்றான்வலி, துணைவலி** – ஆறாம் வேற்றுமைத்தொகைகள்

**காக்க, தோன்றுக, பற்றுக** – வியங்கோள் வினைமுற்றுகள்

**சோகாப்பர்** – பலர்பால் வினைமுற்று

**சொல்லிழுக்கு** (சொல்லால் உண்டாகும் இழுக்கு) – மூன்றன் உருபும் பயனும் உடன்தொக்க தொகை

**காவாக்கால், பொன்றாது, இடையறாது, கலங்காது** – எதிர்மறை வினையெச்சங்கள்

**சுட்ட புண், சுட்ட வடு, தந்த பொருள்** – இறந்தகாலப் பெயரெச்சங்கள்

**ஆறும்** – உடன்பாட்டு ஒன்றன்பால் வினைமுற்று

## புணர்ச்சி விதிகள்

1. **தாளாற்றி – தாள் + ஆற்றி.**
   "உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே" (தாளாற்றி).
2. **பொருளெல்லாம் – பொருள் + எல்லாம்.**
   "உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே" (பொருளெல்லாம்).
3. **அச்சிறும் – அச்சு + இறும்.**
   "உயிர்வரின் உக்குறள் மெய்விட் டோடும்" (அச்ச் + இறும்)
   "உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே" (அச்சிறும்).

## கற்பவை கற்றபின்

**1. படத்துக்குப் பொருத்தமான திருக்குறளைக் கண்டுபிடிக்க.**



அ) வேண்டிய வேண்டியாங்கு எய்தலால் செய்தவம் ஈண்டு முயலப் படும்.

ஆ) அளவறிந்து வாழாதான் வாழ்க்கை உளபோல இல்லாகித் தோன்றாக் கெடும்.

இ) நிலையின் திரியாது அடங்கியான் தோற்றம் மலையினும் மாணப் பெரிது.

**விடை:** இ) நிலையின் திரியாது அடங்கியான் தோற்றம் மலையினும் மாணப் பெரிது.

**2. துன்பப்படுபவர் ______.**

அ) தீக்காயம் பட்டவர் ஆ) தீயினால் சுட்டவர்

இ) பொருளைக் காக்காதவர் ஈ) நாவைக் காக்காதவர்

**விடை :** ஈ) நாவைக் காக்காதவர்

**3. பின்வரும் நாலடியார் பாடலின் பொருளுக்குப் பொருத்தமான திருக்குறளைக் கண்டறிக.**

மலைமிசைத் தோன்றும் மதியம்போல் யானைத்
தலைமிசைக் கொண்ட குடையர் – நிலமிசைத்
துஞ்சினார் என்றெடுத்துத் தூற்றப்பட் டாரல்லால்
எஞ்சினார் இவ்வுலகத் தில்.

அ) ஒன்றா உலகத்து உயர்ந்த புகழல்லால் பொன்றாது நிற்பதொன்று இல்.

ஆ) நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும் பெருமை உடைத்திவ் வுலகு.

இ) அளவறிந்து வாழாதான் வாழ்க்கை உளபோல இல்லாகித் தோன்றாக் கெடும்.

**விடை :**

ஆ) நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும் பெருமை உடைத்திவ் வுலகு.

www.Padasalai.Net


**4. கீழ்க்காணும் புதுக்கவிதைக்குப் பொருந்தும் திருக்குறளைத் தேர்ந்தெடுக்க.**

பூக்களுக்கும் முட்களுக்கும் இடையில்
புழுங்குகிறது யோசனை
பாசத்துக்கும் நியாயத்துக்கும் நடுவில்
நசுங்குகிறது அறம்
இன்பத்துக்கும் பேராசைக்கும் நடக்கும்
போராட்டத்தில் வெடிக்கின்றன
வெளியில் குண்டுகளும்
வீட்டில் சண்டைகளும்
ஆசை அறுத்தல் எளிதல்ல!
முயன்று பார்க்கலாம் வா!

அ) அருவினை யென்ப உளவோ கருவியான் காலம் அறிந்து செயின்.
ஆ) பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டம் சால மிகுத்துப் பெயின்.
இ) இன்பம் இடையறாது ஈண்டும் அவாவென்னும் துன்பத்துள் துன்பம் கெடின்.

**விடை :** இ) இன்பம் இடையறாது ஈண்டும் அவாவென்னும் துன்பத்துள் துன்பம் கெடின்.

**5. ஒப்புரவு என்பதன் பொருள் ______.**

அ) அடக்கமுடையது ஆ) பண்புடையது
இ) ஊருக்கு உதவுவது ஈ) செல்வமுடையது

**விடை :** இ) ஊருக்கு உதவுவது

**6. பொருத்துக.**

| | | | |
|---|---|---|---|
| அ) வாழ்பவன் | – | i) | காத்திருப்பவன் |
| ஆ) வாழாதவன் | – | ii) | மருந்தாகும் மரமானவன் |
| இ) தோன்றுபவன் | – | iii) | ஒத்ததறிபவன் |
| ஈ) வெல்ல நினைப்பவன் | – | iv) | புகழ் தரும் பண்புடையவன் |
| உ) பெரும் பண்புடையவன் | – | v) | இசையொழிந்தவன் |
| | – | vi) | வீழ்பவன் |

**விடை :** அ – iii, ஆ – v, இ – iv, ஈ – i, உ – ii.

**7. இலக்கணக் குறிப்புத் தருக.**

அ) சுடச்சுடரும் – மூன்றாம் வேற்றுமைத்தொகை
ஆ) சுடச்சுடரும் பொன் – எதிர்காலப் பெயரெச்சத் தொடர்
இ) சுடச்சுட – அடுக்குத்தொடர்

**8. விரைந்து கெடுபவன் யார்?**

அ) பிறருடன் ஒத்துப் போனவன், தன் வலிமை அறிந்தவன், தன்னை உயர்வாக நினைப்பவன்.
ஆ) பிறருடன் ஒத்துப் போகாதவன், தன் வலிமை அறியாதவன், தன்னை உயர்வாக நினைக்காதவன்.
இ) பிறருடன் ஒத்துப் போனவன், தன் வலிமை அறிந்தவன், தன்னை உயர்வாக நினைக்காதவன்.
ஈ) பிறருடன் ஒத்துப் போகாதவன், தன் வலிமை அறியாதவன், தன்னை உயர்வாக நினைப்பவன்.

**விடை :** ஈ) பிறருடன் ஒத்துப் போகாதவன், தன் வலிமை அறியாதவன், தன்னை உயர்வாக நினைப்பவன்.

**9. வேளாண்மை செய்தற் பொருட்டு – பொருள் கூறுக.**

**விடை :** உதவி செய்வதற்கே ஆகும்.

**10. பற்று நீங்கியவனுக்கு உண்டாவது – பற்றற்றவனைப் பற்றுவதால் உண்டாவது**

அ) பற்றுகள் பெருகும் – பொருள்களின் இன்பம் பெருகும்
ஆ) பற்றுகள் அகலும் – பொருள்களின் துன்பம் அகலும்
இ) பொருள்களின் துன்பம் அகலும் – பற்றுகள் அகலும்
ஈ) பொருள்களின் இன்பம் பெருகும் – பற்றுகள் பெருகும்

**விடை :** இ) பொருள்களின் துன்பம் அகலும் – பற்றுகள் அகலும்

**11. அருவினை – புணர்ச்சிவிதி கூறுக.**

அருவினை – அருமை + வினை – "ஈறுபோதல்" (அருவினை)

MERCY PUBLICATIONS - CHENNAI

**கூடுதல் வினா**

**12. சொல்லிழுக்குப் படுபவர் ______.**

அ) அடக்கமில்லாதவர் ஆ) தீயினால் சுட்டவர்

இ) நாவைக் காக்காதவர் ஈ) பொருளைக் காக்காதவர்

**விடை :** இ) நாவைக் காக்காதவர்

## உள்நிலைத் தேர்வு

நேரம் : 40 நிமிடங்கள் மதிப்பெண் : 30

**I. பலவுள் தெரிக. 8 × 1 = 8**

1. கூற்று : 'கோடு' என்பது தமிழ்ச்சொல் ஆகும்.
   விளக்கம் : 'கோடு' என்னும் சொல்லுக்கு மலையுச்சி, வல்லரண், கோட்டை என்னும் பொருள்களும் உண்டு.
   அ) கூற்று சரி, விளக்கம் தவறு ஆ) கூற்றும் சரி, விளக்கமும் சரி
   இ) கூற்று தவறு, விளக்கம் சரி ஈ) கூற்றும் தவறு, விளக்கமும் தவறு
2. பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுக்க.
   1. வெள்ளிவீதியார் – அ. புறநானூறு
   2. அண்ணாமலையார் – ஆ. வாடிவாசல்
   3. சி.சு.செல்லப்பா – இ. குறுந்தொகை
   4. இளம்பெருவழுதி – ஈ. காவடிச்சிந்து

   i. அ ஆ இ ஈ ii. ஆ ஈ அ இ iii. இ ஈ ஆ அ iv. இ ஈ அ ஆ
3. 'காவடிச் சிந்துக்குத் தந்தை' என்று அழைக்கப்படுபவர் யார்?
   அ) பாரதிதாசன் ஆ) அண்ணாமலையார்
   இ) முருகன் ஈ) பாரதியார்
4. படத்துக்குப் பொருத்தமான திருக்குறளைக் கண்டுபிடிக்க.



   அ) வேண்டிய வேண்டியாங்கு எய்தலால் செய்தவம்
   ஈண்டு முயலப் படும்.
   ஆ) அளவறிந்து வாழாதான் வாழ்க்கை உளபோல
   இல்லாகித் தோன்றாக் கெடும்.
   இ) நிலையின் திரியாது அடங்கியான் தோற்றம்
   மலையினும் மாணப் பெரிது.
5. பகுபத உறுப்புகளுள் இடம்பெறும் அடிப்படை உறுப்புகள் எவை?
   அ) பகுதி, இடைநிலை, சந்தி, சாரியை, விகுதி, விகாரம்
   ஆ) பகுதி இடைநிலை, சாரியை
   இ) பகுதி, சந்தி, விகாரம் இ) பகுதி, விகுதி
6. தவறான விடையைத் தெரிவு செய்க.
   இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும்
   அ) திரு + புகழ் – திருப்புகழ் ஆ) கவிதை + பேழை – கவிதைப்பேழை
   இ) காவடி + சிந்து – காவடிச்சிந்து ஈ) இந்த + பாடல் – இந்தப்பாடல்
7. ஆசிரியராக்கினார் – இதன் பகுதி ______.
   அ) ஆசு ஆ) ஆசிரி இ) ஆசிரியராக்கு ஈ) ஆசி
8. பகுபதத்தில் அடிப்படை உறுப்புகள் ______.
   அ) மூன்று ஆ) ஆறு இ) நான்கு ஈ) இரண்டு

www.Padasalai.Net

**II. எவையேனும் நான்கனுக்கு விடை தருக. 4 × 2 = 8**

9. காவடிச்சிந்து என்பது யாது?
10. 'கோட்டை' என்னும் சொல் திராவிட மொழிகளில் எவ்வாறு எடுத்தாளப்பட்டுள்ளது?
11. குறுந்தொகைத் தலைவன் பரிசுப் பொருட்களை எவ்வாறு அனுப்பினான்?
12. தமிழர்கள் புகழையும் பழியையும் எவ்வாறு ஏற்றதாகப் புறநானூறு கூறுகிறது?
13. ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் கூறுக.
    அ) வருகின்றாள் ஆ) காண்பிப்பார்

**III. எவையேனும் இரண்டனுக்கு விடை தருக. 2 × 4 = 8**

14. 'மலை, மனித வாழ்வில் சிறப்பிடம் பெற்றுள்ளது' என்பதை எடுத்துக்காட்டுகளுடன் விவரிக்க.
15. தமிழ்ப் பண்பாட்டின் அடையாளம் காவடிச்சிந்து என்பதை விளக்குக.
16. சங்ககாலத்தில் நடைபெற்ற சமூக நிகழ்வு வெள்ளிவீதியார் பாடலில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. இக்காலச் சமூக நிகழ்வுகள் எழுத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளமையை ஒப்பிட்டு விளக்குக.
17. பகுபத உறுப்பிலக்கணம் கூறுக. அ. வருகின்றாள் ஆ. வாழ்வான் இ. காண்பிப்பார் ஈ. பிரிந்த

**IV. பின்வரும் வினாக்களில் ஏதேனும் ஒன்றனுக்கு விரிவான விடை தருக. 1 × 6 = 6**

18. வாடிவாசல் கதை வாயிலாக நீங்கள் உணர்ந்த கருத்துகளை விளக்குக.
19. 'அடக்கமுடைமை ஒருவரை வாழ்வினில் உயர்த்தும்' – இக்கூற்றை முப்பால்வழி விளக்குக.
20. "இயற்கையோடு இயைந்த வாழ்வு நடத்திய தமிழர்களின் வாழ்வில் இருப்பிடங்களின் பெயர்களும் இயற்கையோடு இயைந்தே இருந்தன" – கூற்றினை மெய்ப்பிக்க.

# இயல் – 4

## உரைநடை உலகம்

## தமிழகக் கல்வி வரலாறு

### குறுவினாக்கள்

**1. சங்ககாலத்தில் தமிழ்மொழியின் நிலைபற்றி இராசமாணிக்கனாரின் கூற்று யாது?**

★ "சங்க காலத்தில் தமிழகத்தில் ஆட்சி மொழியாகவும், பயிற்று மொழியாகவும், இலக்கிய மொழியாகவும் தமிழ் விளங்கியுள்ளது. மேலும், தமிழ் மொழியே சமயம், வாணிகம் முதலான எல்லாத் துறைகளிலும் பொதுமொழியாகவும் விளங்கி வந்தது" என இராசமாணிக்கனார் கூறியுள்ளார்.

**2. உ.வே.சா. அவர்கள் பயின்ற கல்விமுறை குறித்துக் குறிப்பு வரைக.**

★ மரபுவழிக் கல்வி முறைகளுள் ஒன்றான உயர்நிலைக் கல்விமுறையில் உ.வே.சா. பயின்றார்.
★ இக்கல்விமுறை, தனிநிலையில் புலவர்களிடத்துக் கற்கும் உயர்நிலைக் கல்விமுறையாகும்.
★ மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்களிடம், உ.வே.சா. பாடம் பயின்றமுறை இம்முறையாகும்.

### கூடுதல் வினாக்கள்

**3. தமிழகத்தின் சங்க காலத்திய கற்பித்தல் பணி பற்றி எழுதுக.**

★ 'சங்கம்' என்னும் அமைப்பு, பலர் கூடி விவாதிக்கும் பாங்குடையது. சங்கம் தவிர மன்றம், சான்றோர் அவை, அறங்கூர் அவையம், சமணப் பள்ளி, பௌத்தப் பள்ளி போன்ற அமைப்புகள், சங்க காலத்திலும் சங்கம் மருவிய காலத்திலும் தமிழகத்தில் கற்பித்தல் பணியைச் செய்து வந்துள்ளன.

MERCY PUBLICATIONS - CHENNAI

**4. எவர் 'ஆசிரியர்' எனப்பட்டனர்?**

★ பிற்காலத்தில் ஐந்தாக விரித்து உரைக்கப்பட்ட மூவகை இலக்கணத்தையும், அவற்றுக்கு எடுத்துக் காட்டுகளான பேரிலக்கியங்களையும் கற்பித்தோர், ஆசிரியர் எனப்பட்டனர்.

**5. 'குரவர்' என அழைக்கப்பட்டோர் எவர்?**

★ சமயநூலும் தத்துவநூலும் கற்பித்தோர், 'குரவர்' என அழைக்கப்பட்டனர்.

**6. கல்வியின் நோக்கம் யாது?**

★ கற்பவர் மனத்தில் ஆழப் புதைந்துள்ள சிந்தனைகளைத் தோண்டி வெளிக்கொணர்வதே, கல்வியின் நோக்கமாகும்.

**7. கல்வி கற்பிக்கும் இடங்களைத் தமிழ்நூல்கள் எவ்வாறு வழங்கின?**

★ கல்வி கற்பிக்கப்பெற்ற இடங்களைப் 'பள்ளி' எனப் பெரிய திருமொழியும்,

★ 'ஓதும் பள்ளி' எனத் திவாகர நிகண்டும்,

★ 'கல்லூரி' எனச் சீவக சிந்தாமணியும் குறிப்பிடுகின்றன.

**8. கற்றலுக்கு உரிய சுவடிகள் எவ்வாறு வழங்கப்பெற்றன?**

★ கற்றலுக்கு உரிய ஏட்டுக் கற்றைகள் ஏடு, சுவடி, பொத்தகம், பனுவல், நூல் என வழங்கப்பெற்றன.

**9. தமிழகத்துப் பட்டி மண்டபம் குறித்து எழுதுக.**

★ 'பட்டி மண்டபம்' என்பது, சமயக் கருத்துகளை விவாதிக்கும் இடம் என்று மணிமேகலை சுட்டுகிறது.

**10. திண்ணைப் பள்ளிகளை யார், எப்படிப் பாராட்டினர்?**

★ சென்னை மாகாணத்தில் இயங்கி வந்த 12,498 திண்ணைப் பள்ளிகளின் கல்வித்தரத்தைச் சென்னை மாகாண கவர்னர் சர் தாமஸ் மன்றோ ஆராய்ந்தார்.

★ "திண்ணைப் பள்ளிகளின் கல்வித்தரம், பல ஐரோப்பிய நாடுகளின் அப்போதைய கல்வித் தரத்தைக் காட்டிலும் உயர்ந்ததாகவே உள்ளது" எனப் பாராட்டி ஆய்வு அறிக்கை தந்தார்.

**11. ஐரோப்பிய டச்சுக்காரர்களின் கல்விப்பணி யாது?**

★ ஐரோப்பியருள் டச்சுக்காரர்களின் சமயப்பரப்புச் சங்கம், தமிழகத்தின் தரங்கம்பாடியில் அச்சகம் நிறுவியது. மாணவர்களுக்குத் தேவையான தமிழ்ப் புத்தகங்களை அச்சடித்தது. அறப்பள்ளிகளையும் ஆசிரியப் பயிற்சிப் பள்ளிகளையும் நிறுவி, முதன்முதலில் கல்விப் பணியில் ஈடுபட்டது.

**12. மாநில மொழிக்கல்வி மறுக்கப்பட்டது ஏன்?**

★ லார்டு மெக்காலே தலைமையில் 1835இல் அமைக்கப்பட்ட கல்விக்குழு, மேனாட்டுக் கல்வி முறையைப் பின்பற்றி, ஆங்கிலவழிக் கல்வி கற்பிக்க வலியுறுத்தியது.

★ அதனால் தமிழ் உள்ளிட்ட மாநில மொழிவழிக் கல்வி மறுக்கப்பட்டது.

**13. 'திண்ணைப்பள்ளிக் கல்விமுறை' எங்கு நடைமுறையில் உள்ளது?**

★ திண்ணைப்பள்ளிக் கல்விமுறை, ஸ்காட்லாந்தில் 'மெட்ராஸ் சிஸ்டம்', 'பெல் சிஸ்டம்', 'மானிடரி சிஸ்டம்' என அழைக்கப்பெறுகிறது. அங்கு அங்கீகரிக்கப்பட்டு, இன்றும் நடைமுறையில் உள்ளது.

## சிறுவினாக்கள்

**1. தமிழ் இலக்கியங்களில் கல்வி குறித்து நீங்கள் அறிந்த செய்திகளை அட்டவணைப்படுத்துக.**

★ தொல்காப்பியம், கல்வி கற்பதற்காகப் பிரிந்து செல்வதை, 'ஓதற் பிரிவு' எனக் குறிப்பிடுகிறது.

★ அத்துடன், "கல்வியின் பொருட்டு ஒருவருக்குப் பெருமிதம் தோன்றும்" எனவும் குறிப்பிடுகிறது.

★ ஆசிரியர்கள், மாணவர்களுக்கான இலக்கணங்களைத் தொல்காப்பியமும் நன்னூலும் வகுத்துள்ளன.

★ சங்க இலக்கியங்களும் கல்வியின் சிறப்பைப் பெரிதும் போற்றுகின்றன. புறநானூறு, "உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும் பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே" எனக் குறிப்பிடுகிறது.

★ "துணையாய் வருவது தூயநற் கல்வியே" எனத் திருமந்திரமும், "கல்வி அழகே அழகு" என நாலடியாரும், "இளமையில் கல்" என ஆத்திசூடியும் கல்வியின் சிறப்புக் குறித்துக் கூறுகின்றன.

MERCY PUBLICATIONS - CHENNAI

www.Padasalai.Net

**2. சமணப் பள்ளிகளும், பெண்கல்வியும் – குறிப்பு வரைக.**

**சமணப் பள்ளி :**

★ கல்வி, மருந்து, உணவு, அடைக்கலம் என்பன, சமண சமயத்தின் அறக்கொடைகள். மலைக்குகைகளில் தங்கிய சமணத் திகம்பரத் துறவிகள், அங்கிருந்தே கல்வியையும் சமயக் கருத்துகளையும் மாணவர்க்குப் போதித்தனர். சமணப் பள்ளிகளில் கல்வி கற்றதனால் கல்விக்கூடம், "பள்ளிக்கூடம்" என அழைக்கப்பட்டது.

**பெண்கல்வி :**

★ வந்தவாசிக்கு அருகிலுள்ள 'வேடல்' கிராமத்திலிருந்த சமணப்பள்ளியின் பெண்சமண ஆசிரியர், 500 மாணவர்களுக்குக் கல்வி கற்பித்துள்ளார். சமணப்பெண் ஆசிரியர் "பட்டினிக்குரத்தி", விளாப்பாக்கத்தில் பள்ளி ஒன்றை நிறுவியுள்ளார். இவற்றால் சமணப்பள்ளிகளில், பெண்கள் ஆசிரியர்களாக இருந்துள்ளமை வெளிப்படுகிறது. அத்துடன், பெண்களுக்கு எனத் தனியாகக் கல்வி கற்பிக்கும் சமணப்பள்ளிகள் இருந்தமையும் புலப்படுகிறது.

## கூடுதல் வினாக்கள்

**3. மரபுவழிக் கல்வி முறைகளில் எவையேனும் இரண்டனை விளக்குக.**

★ மரபுவழிக் கல்விமுறை சார்ந்த குருகுலக் கல்வி முறையில், மாணவர்கள் ஆசிரியர்களை அணுகிப் பல ஆண்டுகள் அவருடன் தங்கி இருந்து, ஆசிரியருக்குத் தேவையான பணிகளைச் செய்து கல்வி கற்றனர்.

★ குருகுலக் கல்வி முறையானது செய்து கற்றல், வாழ்ந்து கற்றல், எளிமையாக வாழ்தல் என்னும் அடிப்படையில் அமைந்திருந்தது. இம்முறையானது, வாழ்வியலைக் கட்டமைப்பதில் உறுதியானதாக விளங்கியது.

★ 19ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில், சிற்றூர்கள்தோறும் பெருமளவில் திண்ணைப் பள்ளிகள் தோன்றின. இவற்றைத் 'தெற்றிப் பள்ளிகள்' என அழைத்தனர். இதன் ஆசிரியர் 'கணக்காயர்' என அழைக்கப்பட்டார்.

★ இப்பள்ளிகள் ஒரே மாதிரியாக வரன்முறை செய்யப்படவில்லை. ஆங்கிலேயர்கள் திண்ணைப் பள்ளிகள், பாடசாலைகள், மத்தாபுகள் போன்ற கல்வி அமைப்புகளை 'நாட்டுக்கல்வி' என அழைத்தனர்.

★ இப்பள்ளிகளுக்கான பாடத்திட்டம், பள்ளிநேரம், பயிற்றுவிக்கும்முறை ஆகியன ஆசிரியர்களின் விருப்பப்படி அமைந்திருந்தன. இவை பொதுமக்களின் கல்வித் தேவையை நிறைவு செய்தன.

★ சென்னை மாகாணத்தில் 12,498 திண்ணைப் பள்ளிகள் இருந்ததாகவும், அவற்றின் கல்வித்தரம் ஐரோப்பிய நாடுகளின் கல்வித்தரத்தைவிட உயர்ந்திருந்ததாகவும் தாமஸ் மன்றோ நடத்திய ஆய்வு உறுதி செய்துள்ளது.

**4. 'குருகுலக் கல்விமுறை' குறித்துப் பெறப்படும் செய்தி யாது?**

★ 'குருகுலக்' கல்வி முறையில், மாணவர்கள் இளம் வயதுமுதலே தகுதிக்கும் திறமைக்கும் ஏற்பக் கல்வி கற்றனர். இம்முறையில் ஆசிரியரை அணுகி, அவருடன் பல ஆண்டுகள் தங்கி, அவருக்குத் தேவைப்பட்ட பணிகளைச் செய்து, மாணவர்கள் கல்வி கற்றனர்.

★ செய்து கற்றல், வாழ்ந்து கற்றல், எளிமையாக வாழ்தல் என்னும் அடிப்படையில், குருகுலக் கல்விமுறை அமைந்திருந்தது. போதனா முறையைத் தாண்டி, வாழ்வியலைக் கட்டமைப்பதில் குருகுலக் கல்விமுறை, உறுதியாக விளங்கியது.

**6. தமிழ் இலக்கியங்களில் கல்வி குறித்து நீங்கள் அறிந்த செய்திகளை அட்டவணைப்படுத்துக.**

★ பண்டைத் தமிழ் இலக்கணமாகிய தொல்காப்பியம், எண்வகை மெய்ப்பாடுகள் பற்றிக் கூறும்போது, "கல்வியின் பொருட்டு ஒருவருக்குப் 'பெருமிதம்' தோன்றும்" எனக் குறிப்பிடுகிறது.

புறநானூறு – "உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும் பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே"

திருமந்திரம் – "துணையாய் வருவது தூயநற் கல்வியே"

நாலடியார் – "கல்வி அழகே அழகு"

ஆத்திசூடி – "இளமையில் கல்"

MERCURY PUBLICATIONS - CHENNAI

## நெடுவினா

**1. பௌத்தக் கல்வி, சமணக் கல்வி, மரபுவழிக் கல்வி முறைகளால் தமிழகக் கல்விமுறையில் ஏற்பட்ட பல்வேறு மாறுதல்களை விவரிக்க.**

**தலையாய அறம் :**

கல்வி, மருத்துவம், உணவு, அடைக்கலம் என்பன, சமண சமயத்தின் தலையாய அறங்கள். சங்க காலத்திலும் சங்கம் மருவிய காலத்திலும் சமண, பௌத்தப் பள்ளிகள் இருந்துள்ளன.

**சமண பௌத்தப் பள்ளிகள் :**

சமண, பௌத்தத் துறவிகள் தங்கிய இடம், 'பள்ளி' எனப்பட்டது. அங்கு, மாணவர்கள் சென்று கற்றதால், கல்வி கற்பிக்கும் இடம், பிற்காலத்தில் 'பள்ளிக்கூடம்' எனப்பட்டது.

சமணப் பள்ளிகளில் பயின்ற மாணவர் சிலர், சமணப்படுக்கைகள் அமைத்தமை குறித்துத் திருச்சி மலைக் கோட்டை, கழுகுமலைக் கல்வெட்டுகள் கூறுகின்றன.

**கல்வி கற்பித்தல் :**

சமண சமயத் திகம்பரத் துறவிகள், தாங்கள் தங்கி இருந்த மலைக்குகைப் பள்ளிகளில், மாணவர்களுக்குக் கல்வியையும் சமயக் கருத்துகளையும் போதித்துள்ளனர்.

'பள்ளி' என்பது சமண, பௌத்தச் சமயங்களின் கொடையாகும். 'வேடல்' என்னும் ஊரில் பெண் சமணத் துறவி, 500 மாணவர்களுக்குக் கல்வி கற்பித்துள்ளார். விளாப்பாக்கத்தில், பட்டினிக்குரத்தி என்னும் சமணப் பெண் ஆசிரியர், பள்ளியை நிறுவிக் கற்பித்துள்ளார்.

**மரபுவழிக் கல்வி :**

மரபுவழிக் கல்வியில், 'குருகுலக் கல்வி' முறையில், மாணவர்கள் குருவோடு தங்கி, அவருக்குரிய பணிகளைச் செய்து கல்வி கற்றனர். செய்து கற்றல், வாழ்ந்து கற்றல், எளிமையாக வாழ்தல் ஆகிய அடிப்படையில் இக்கல்விமுறை அமைந்தது. போதனை முறையைத் தாண்டி, வாழ்வியலைக் கட்டமைப்பதில் குருகுலக் கல்வி முறை, உறுதியாக விளங்கியது.

**ஆங்கிலேயர் போற்றிய திண்ணைப்பள்ளி :**

19ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் கிராமங்களில் திண்ணைப் பள்ளிகள் என்னும் தெற்றிப்பள்ளிகள் மரபுவழிக் கல்வி என்னும் அமைப்புக் கல்வியைக் கற்பித்தன. மரபுவழிக் கல்விக் கூடங்களான திண்ணைப் பள்ளிகள், பாடசாலைகள், மக்தாபுகள், மதரஸாக்கள் போன்றவற்றை, ஆங்கிலேயர் 'நாட்டுக்கல்வி' அமைப்பு என அழைத்தனர். அப்பள்ளிகளில் பள்ளிநேரம், பயிற்றுமுறை எல்லாம், ஆசிரியர் விருப்பப்படி அமைந்திருந்தன.

## பலவுள் தெரிக

1. ஏடு, சுவடி, பொத்தகம், பனுவல் முதலிய சொற்கள் தரும் பொருள் ______ என்பதாகும்.

அ) நூல் ஆ) ஓலை இ) எழுத்தாணி ஈ) தாள்

**விடை :** அ) நூல்

2. சரியான விடையைத் தேர்க.

| | | |
|---|---|---|
| அ) கல்வி அழகே அழகு | – | 1. தொல்காப்பியம் சிறப்புப்பாயிர உரைப்பாடல் |
| ஆ) இளமையில் கல் | – | 2. திருமந்திரம் |
| இ) துணையாய் வருவது தூயநற் கல்வி | – | 3. ஆத்திசூடி |
| ஈ) பாடம் போற்றல் கேட்டவை நினைத்தல் | – | 4. திருக்குறள் |
| | – | 5. நாலடியார் |

i) அ – 2, ஆ – 3, இ – 4, ஈ – 1 ii) அ – 3, ஆ – 4, இ – 1, ஈ – 2

iii) அ – 5, ஆ – 3, இ – 2, ஈ – 1 iv) அ – 4, ஆ – 1, இ – 2, ஈ – 5

**விடை :** iii) அ – 5, ஆ – 3, இ – 2, ஈ – 1

MERCY PUBLICATIONS - CHENNAI

www.Padasalai.Net

## கூடுதல் வினாக்கள்

3. "பட்டி மண்டபத்துப் பாங்கறிந்து ஏறுமின்" என்னும் அடிகள் இடம் பெற்ற நூல் ______.
அ) சிலப்பதிகாரம் ஆ) சீவகசிந்தாமணி
இ) மணிமேகலை ஈ) வளையாபதி
**விடை :** இ) மணிமேகலை

4. தனிமனிதனைச் சமுதாயத்திற்கு ஏற்றவனாக மாற்றுவது ______.
அ) வேலை ஆ) பணம் இ) வியாபாரம் ஈ) கல்வி
**விடை :** ஈ) கல்வி

5. கல்வி கற்பதற்காகப் பிரிந்து செல்வதை, 'ஓதற் பிரிவு' எனக் கூறும் நூல் ______
அ) ஆத்திசூடி ஆ) திருமந்திரம் இ) மணிமேகலை ஈ) தொல்காப்பியம்
**விடை :** ஈ) தொல்காப்பியம்

6. கல்வியினால் ஒருவனுக்குத் தோன்றுவது ______.
அ) அறிவு ஆ) செருக்கு இ) பெருமிதம் ஈ) செல்வம்
**விடை :** இ) பெருமிதம்

7. ஆசிரியர், மாணவர்க்கான இலக்கணம் வகுத்த நூல்கள் ______.
அ) தொல்காப்பியம், திருக்குறள் ஆ) நன்னூல், ஆத்திசூடி
இ) தொல்காப்பியம், நன்னூல் ஈ) நன்னூல், திருமந்திரம்
**விடை :** இ) தொல்காப்பியம், நன்னூல்

8. மன்னராட்சிக் காலத்தில் முக்கியக் கல்வியாகக் கருதப்பட்டது ______.
அ) குருகுலப் பயிற்சி ஆ) தொழில் பயிற்சி இ) போர்ப் பயிற்சி ஈ) சமயக் கல்வி
**விடை :** இ) போர்ப் பயிற்சி

9. எழுத்தும் இலக்கியமும், உரிச்சொல்லும் கணக்கும் கற்பித்தோரைக் ______ என அழைத்தனர்.
அ) ஆசிரியர் ஆ) குரவர் இ) குரு ஈ) கணக்காயர்
**விடை :** ஈ) கணக்காயர்

10. மூவகை இலக்கணத்தையும், அவற்றிற்கு எடுத்துக்காட்டுகளான பேரிலக்கியங்களையும் கற்பித்தோர் ______ என அழைக்கப் பெற்றனர்.
அ) ஆசிரியர் ஆ) குரவர் இ) குரு ஈ) கணக்காயர்
**விடை :** அ) ஆசிரியர்

11. சமய நூல்களையும், தத்துவ நூலையும் கற்பித்தோர், ______ என அழைக்கப்பட்டனர்.
அ) ஆசிரியர் ஆ) குரவர் இ) குரு ஈ) கணக்காயர்
**விடை :** ஆ) குரவர்

12. கலைகள், கல்வி கற்பிக்கும் இடங்களாக விளங்கியவை ______.
அ) மன்றங்கள் ஆ) பள்ளிகள் இ) சான்றோர் அவைகள் ஈ)கூடங்கள்
**விடை :** ஆ) பள்ளிகள்

13. கற்ற வித்தைகளை அரங்கேற்றும் இடமாகத் திகழ்ந்தது ______.
அ) பள்ளி ஆ) மன்றம் இ) சான்றோர் அவை ஈ) பட்டி மன்றம்
**விடை :** ஆ) மன்றம்

14. செயல்களைச் சீர்தூக்கிப் பார்க்கும் அவை ______.
அ) பட்டி மன்றம் ஆ) பேச்சு மன்றம் இ) கலைக்கூடம் ஈ) சான்றோர் அவை
**விடை :** ஈ) சான்றோர் அவை

15. கல்வி கற்பிக்கப்படும் இடங்களைப் 'பள்ளி' என்று குறித்தது ______.
அ) திவாகர நிகண்டு ஆ) மணிமேகலை இ) சீவகசிந்தாமணி ஈ) பெரிய திருமொழி
**விடை :** ஈ) பெரிய திருமொழி

MERCY PUBLICATIONS - CHENNAI

16. கல்வி கற்பிக்கப்படும் இடங்களை 'ஓதும்பள்ளி' எனக் கூறியது ______.
அ) பெரிய திருமொழி ஆ) சீவகசிந்தாமணி இ) திவாகர நிகண்டு ஈ) சிலப்பதிகாரம்
**விடை :** இ) திவாகர நிகண்டு

17. கல்வி கற்பிக்கப்படும் இடங்களைக் 'கல்லூரி' எனக் கூறியுள்ளது ______.
அ) பெரிய திருமொழி ஆ) திவாகர நிகண்டு
இ) மணிமேகலை ஈ) சீவகசிந்தாமணி
**விடை :** ஈ) சீவகசிந்தாமணி

18. 'தெற்றிப் பள்ளிகள்' என அழைக்கப்பட்டவை ______.
அ) சமணப் பள்ளிகள் ஆ) பௌத்த பள்ளிகள்
இ) திண்ணைப் பள்ளிகள் ஈ) ஐரோப்பியப் பள்ளிகள்
**விடை :** இ) திண்ணைப் பள்ளிகள்

19. சென்னை மாகாணத் திண்ணைப் பள்ளிகளின் கல்வித் தரத்தைப் பாராட்டியவர் ______.
அ) ஜான் கூடன்பர்க் ஆ) யுவான் சுவாங் இ) தாமஸ் மன்றோ ஈ) சார்லஸ்வுட்
**விடை :** இ) தாமஸ் மன்றோ

20. "ஆசிரியர்களால் சர்வ வல்லமையிலும் பாதிப்பினை ஏற்படுத்த இயலும். அவர்களால் ஏற்படப்போகும் நல்ல விளைவுகளை அவர்களாலேயே மதிப்பிட இயலாது" என்று கூறியவர் ______.
அ) சார்லஸ் உட் ஆ) ஹென்றி ஆடம்ஸ்
இ) ரெவரெண்டு பெல் ஈ) ஹண்டர்
**விடை :** ஆ) ஹென்றி ஆடம்ஸ்

21. தாய்நாட்டு இலக்கியங்களையும், கீழைத்தேசத்துக் கலைகளையும் பயிற்றுவிக்க வேண்டும் என்பதைக் கொள்கையாகக் கொண்டோர் ______.
அ) ஐரோப்பியர் ஆ) மேற்கத்தியவாதிகள்
இ) டச்சுக்காரர்கள் ஈ) கீழைத்தேயவாதிகள்
**விடை :** ஈ) கீழைத்தேயவாதிகள்

22. தற்காலக் கல்வி முறையும், தேர்வு முறையும் உருவெடுக்கக் காரணம் ______.
அ) ஹண்டர் கல்விக்குழு ஆ) லண்டன் பாராளுமன்றம்
இ) தாமஸ் மன்றோ ஆய்வு ஈ) சார்லஸ் உட் அறிக்கை
**விடை :** ஈ) சார்லஸ் உட் அறிக்கை

23. 'இந்தியக் கல்வி வளர்ச்சியின் மகாசாசனம்' எனப் போற்றப்பட்டது ______.
அ) ஹண்டர் கல்விக்குழு ஆ) தாமஸ் மன்றோ ஆய்வு
இ) சார்லஸ் உட் அறிக்கை ஈ) ஹென்றி ஆடம்ஸ் அறிக்கை
**விடை :** இ) சார்லஸ் உட் அறிக்கை

24. பள்ளிகளில் சீருடை முறை, தாய்மொழிவழிக் கல்வி போன்றவற்றைக் கட்டாயமாக்கியது ______.
அ) சார்லஸ் உட் அறிக்கை ஆ) தாமஸ் மன்றோ ஆய்வு
இ) ஹென்றி ஆடம்ஸ் அறிக்கை ஈ) ஹண்டர் கல்விக்குழு
**விடை :** ஈ) ஹண்டர் கல்விக்குழு

25. புதுப்பள்ளிகளைத் தொடங்கி நடத்தும் பொறுப்பைத் தனியாருக்கு வழங்கப் பரிந்துரைத்தது ______.
அ) சார்லஸ் உட்குழு ஆ) ஹண்டர் கல்விக்குழு
இ) ஹென்றி ஆடம்ஸ் அறிக்கை ஈ) டச்சு சமயப் பரப்புக் குழு
**விடை :** ஆ) ஹண்டர் கல்விக்குழு

MERCY PUBLICATIONS - CHENNAI

www.Padasalai.Net

26. 'சட்டாம் பிள்ளை' என அழைக்கப்படுபவர்
அ) மாணவர் தலைவர் ஆ) ஆசிரியர்
இ) பெற்றோர் ஈ) துணை ஆசிரியர்
**விடை :** அ) மாணவர் தலைவர்

27. "உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும் பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே" எனக் கூறிக் கல்வியின் சிறப்பை விளக்கியவர் ______.
அ) தொல்காப்பியர் ஆ) ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன்
இ) வள்ளுவர் ஈ) ஔவையார்
**விடை :** ஆ) ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன்

28. ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் பாடல் காணப்படும் நூல் ______.
அ) சிலப்பதிகாரம் ஆ) திருமந்திரம் இ) நன்னூல் ஈ) புறநானூறு
**விடை :** ஈ) புறநானூறு

29. "துணையாய் வருவது தூயநற் கல்வி" எனக் கூறும் நூல் ______.
அ) தொல்காப்பியம் ஆ) நன்னூல் இ) நாலடியார் ஈ) திருமந்திரம்
**விடை :** ஈ) திருமந்திரம்

30. "கல்வி அழகே அழகு" என்னும் பாடல்வரி இடம்பெற்ற நூல் ______.
அ) நன்னூல் ஆ) புறநானூறு இ) நாலடியார் ஈ) சிலப்பதிகாரம்
**விடை :** இ) நாலடியார்

31. "கற்றில னாயினும் கேட்க" எனக் கூறியவர் ______.
அ) தொல்காப்பியர் ஆ) திருவள்ளுவர் இ) நன்னூலார் ஈ) திருமூலர்
**விடை :** ஆ) திருவள்ளுவர்

32. 'கண்ணுடையர் என்பவர் கற்றோர்' எனக் கூறும் நூல் ______.
அ) நன்னூல் ஆ) நாலடியார் இ) சிலப்பதிகாரம் ஈ) திருக்குறள்
**விடை :** ஈ) திருக்குறள்

33. 'இளமையில் கல்' எனக் கூறியவர் ______.
அ) தொல்காப்பியர் ஆ) நாலடியார் இ) ஔவையார் ஈ) நாடக மகளிர்
**விடை :** இ) ஔவையார்

34. 'பட்டிமண்டபம்' என்பது, சமயக் கருத்துகளை விவாதிக்கும் இடம் என்று சுட்டும் நூல் ______.
அ) தொல்காப்பியம் ஆ) மணிமேகலை இ) புறநானூறு ஈ) சிலப்பதிகாரம்
**விடை :** ஆ) மணிமேகலை

35. "கணக்காயர் இல்லாத ஊர், நன்மை பயக்காது" என்று கூறும் நூல் ______.
அ) திருக்குறள் ஆ) ஆத்திசூடி இ) திருமந்திரம் ஈ) திரிகடுகம்
**விடை :** ஈ) திரிகடுகம்

36. சென்னை ஆளுநர் சர் தாமஸ்மன்றோ ஆணைப்படி தொடங்கப்பட்டது ______.
அ) சென்னை மருத்துவக் கல்லூரி ஆ) சென்னைப் பல்கலைக்கழகம்
இ) இடைநிலைக் கல்வி வாரியம் ஈ) பொதுக்கல்வி வாரியம்
**விடை :** ஈ) பொதுக்கல்வி வாரியம்

37. "மேற்கத்திய பாணி (ஆங்கில வழி)க் கல்வி முறையால் மட்டுமே இந்தியர் முன்னேற முடியும்" எனக் கூறியோர் ______.
அ) டச்சு சமயப் பரப்புச் சங்கத்தார் ஆ) கீழைத்தேசியவாதிகள்
இ) ஹண்டர் கல்விக்குழு ஈ) மேற்கத்தியவாதிகள்
**விடை :** ஈ) மேற்கத்தியவாதிகள்

MERCY PUBLICATIONS - CHENNAI

38. கீழைத்தேசியவாதிகள், மேற்கத்தியவாதிகள் கருத்து வேறுபாடுகளைத் தீர்க்க அமைக்கப்பட்ட கல்விக்குழு ______.

அ) சார்லஸ் உட்குழு ஆ ஹண்டர் கல்விக்குழு

இ) கட்டாய இலவசக் கல்வி ஈ) மெக்காலே கல்விக்குழு

**விடை :** ஈ) மெக்காலே கல்விக்குழு

39 சரியான விடையைத் தெரிவு செய்க.

அ. ஆசிரியர் – 1. நிகண்டும் கணக்கும் கற்பிப்போர்

ஆ. கணக்காயர் – 2. நடனமும் நாட்டியமும் கற்பிப்போர்

இ. குரவர் – 3. இலக்கணம், பேரிலக்கியம் கற்பிப்போர்

– 4. சமய, தத்துவ நூல் கற்பிப்போர்

1. அ – 3, ஆ – 4, இ – 2 2. அ – 3, ஆ – 1, இ – 4

3. அ – 1, ஆ – 2, இ – 3 4. அ – 2, ஆ – 3, இ – 1

**விடை :** 2. அ – 3, ஆ – 1, இ – 4

40. கூற்று 1 : மரபுவழிக் கல்விமுறை, போதனா முறையைத் தாண்டி வாழ்வியலைக் கட்டமைப்பதில் உறுதியானதாக விளங்கியது.

கூற்று 2 : காஞ்சி மாநகரத்திற்கு வந்த சீனப்பயணி, 'யுவான் சுவாங்', அங்கிருந்த பௌத்தப் பல்கலைக்கழகத்தில் தங்கிச் சிறப்புரை ஆற்றினார்.

அ) கூற்று 1 சரி, இரண்டு தவறு ஆ கூற்று 1 தவறு, இரண்டு சரி

இ) இரு கூற்றுகளும் தவறு ஈ) இரு கூற்றுகளும் சரி

**விடை :** ஈ) இரு கூற்றுகளும் சரி

41. சரியான விடையைத் தெரிவு செய்க.

மரபுவழிக் கல்வி முறைகள் ______.

1. குருகுலக் கல்விமுறை 2. திண்ணைப்பள்ளிக் கல்விமுறை

3. உயர்நிலைக் கல்விமுறை

அ) 1 மட்டும் சரி ஆ) 1, 2 மட்டும் சரி இ) 2 மட்டும் சரி ஈ) அனைத்தும் சரி

**விடை :** ஈ) அனைத்தும் சரி

42. சரியான விடையைத் தெரிவு செய்க.

கல்வியின் நோக்கம் ______

அ) கற்றலும் கற்பித்தலும் வளர்ப்பது

ஆ) கல்விக் கூடங்களைப் பெருக்குவது

இ) நாகரிகத்தையும் பண்பாட்டையும் வளர்ப்பது

ஈ) மாணவர்க்கும் ஆசிரியர்க்கும் உதவுவது

**விடை :** இ) நாகரிகத்தையும் பண்பாட்டையும் வளர்ப்பது

43. சரியான விடையைத் தெரிவு செய்க.

இந்திய அரசியலமைப்பு வழங்கும் "அனைவருக்கும் கட்டாய இலவசக் கல்வி" என்பது ______.

அ) 5 வயதிற்கு உட்பட்டவர்களுக்கு ஆ) 12 வயதிற்கு உட்பட்டவர்களுக்கு

இ) 14 வயதிற்கு உட்பட்டவர்களுக்கு ஈ) 21 வயதிற்கு உட்பட்டவர்களுக்கு

**விடை :** இ) 14 வயதிற்கு உட்பட்டவர்களுக்கு

44. பொருந்தாததை நீக்குக.

நன்னூல், புறநானூறு, திருமந்திரம், நாலடியார், நாடக மகளிர்

**விடை :** நாடக மகளிர்

MERCY PUBLICATIONS - CHENNAI

www.Padasalai.Net

45. பொருத்துக.

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | கல்வி சிறந்த தமிழ்நாடு | – | அ. | சமண முனிவர் |
| 2. | பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே | – | ஆ. | திருவள்ளுவர் |
| 3. | துணையாய் வருவது தூயநற் கல்வி | – | இ. | தொல்காப்பியர் |
| 4. | கல்வி அழகே அழகு | – | ஈ. | பாரதியார் |
| 5. | கண்ணுடையர் என்பவர் கற்றோர் | – | உ. | ஔவையார் |
| 6. | இளமையில் கல் | – | ஊ. | திருமூலர் |
| | | – | எ. | நெடுஞ்செழியன் |

**விடை :** 1–ஈ, 2–எ, 3–ஊ, 4–அ, 5–ஆ, 6–உ

46. கூற்று 1 : தரங்கம்பாடியில் அச்சுக்கூடத்தை ஆங்கிலேயர் நிறுவினர்.

கூற்று 2 : டச்சுக்காரர்களின் சமயப் பரப்புச் சங்கம், அறப்பள்ளிகளையும் ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளையும் நிறுவியதோடு, இந்திய மொழிகளில் தமிழ்மொழியை அச்சேறிய முதல் மொழியாக்கியது.

அ) இரண்டு கூற்றுகளும் சரி
ஆ கூற்று 1 தவறு, இரண்டு சரி
இ) கூற்று 1 சரி, இரண்டு தவறு
ஈ) இரு கூற்றுகளும் தவறு

**விடை :** ஆ கூற்று 1 தவறு, இரண்டு சரி

**விடைக்கேற்ற வினா அமைக்க.**

1. கல்வியின் நோக்கம், நாகரிகத்தையும் பண்பாட்டையும் வளர்ப்பதாகும்.

**வினா :** கல்வியின் நோக்கம் எவற்றை வளர்ப்பதாகும்?

2. காலந்தோறும் மக்களின் தேவைகளுக்கேற்பக் கற்றலும் கற்பித்தலும், பல்வேறு பரிமாணங்களைப் பெற்று வளர்ந்துள்ளன.

**வினா :** காலந்தோறும் கற்றலும் கற்பித்தலும், எவற்றுக்கேற்ப எவ்வாறு வளர்ந்துள்ளன?

3. சங்க காலத்தவர், குடும்பம், அரசு, சமூகம் என்ற மூன்று நிலைகளிலும் சிறப்பினைப் பெறக் கல்வி தேவை என்பதை உணர்ந்து கற்றனர்.

**வினா :** சங்க காலத்தவர், எந்த மூன்று நிலைகளிலும் எதனைப் பெற, எது தேவை என்பதை உணர்ந்து கற்றனர்?

4. சங்கம் என்ற அமைப்புப் பலர்கூடி விவாதிக்கும் பாங்குடையது.

**வினா :** பலர்கூடி விவாதிக்கும் பாங்குடையது எவ்வமைப்பு?

5. கல்வி, மருந்து, உணவு, அடைக்கலம் ஆகிய நான்கு கொள்கைகளும் சமண சமயத்தின் தலையாய அறங்களாகும்.

**வினா :** எந்நான்கு கொள்கைகள், சமண சமயத்தின் தலையாய அறங்களாகும்?

6. 'ரெவரெண்ட் பெல்' என்ற ஸ்காட்லாந்து பாதிரியார், தமிழகத் திண்ணைப் பள்ளிக் கல்வி முறையைக் கண்டு வியந்தார்.

**வினா :** 'ரெவரெண்ட்' பெல் என்ற ஸ்காட்லாந்து பாதிரியார், எந்தக் கல்வி முறையைக் கண்டு வியந்தார்?

7. செய்து கற்றல், வாழ்ந்து கற்றல், எளிமையாக வாழ்தல் என்ற அடிப்படையில், குருகுலக் கல்விமுறை அமைந்திருந்தது.

**வினா :** குருகுலக் கல்விமுறை, எவ்வெவ் வடிப்படையில் அமைந்திருந்தது?

8. திண்ணைப் பள்ளி ஆசிரியர், கணக்காயர் என்று அழைக்கப்பட்டனர்.

**வினா :** திண்ணைப் பள்ளி ஆசிரியர், எவ்வாறு அழைக்கப்பட்டனர்?

9. ஹண்டர் கல்விக்குழு, சீருடைமுறை, தாய்மொழிக் கல்வி போன்றவற்றைக் கட்டாயமாக்கியது.

**வினா :** சீருடைமுறை, தாய்மொழிக் கல்வி போன்றவற்றைக் கட்டாயமாக்கியது எக்குழு?

MERCY PUBLICATIONS CHENNAI

# கவிதைப்பேழை

## 1. பிள்ளைக்கூடம்

### (இரா. மீனாட்சி)

### குறுவினா

1. இங்கே ஐம்பதாண்டு வேம்பு
கோடையில் கொட்டும் பூக்களை
எண்ணச் சொல்கிறார்கள் – எண்ணச் சொல்கிறவர்கள் யார்? எண்ணுபவர்கள் யார்?

★ எண்ணச் சொல்கிறவர்கள் : தாய்மொழியில் கற்பிப்போர்.

★ எண்ணுபவர்கள் : தாய்மொழியில் கற்போர்.

### கூடுதல் வினாக்கள்

2. இரா. மீனாட்சியின் கவிதைத் தொகுப்புகள் யாவை?

★ நெருஞ்சி, சுடுபூக்கள், தீபாவளிப்பகல், மறுபயணம், வாசனைப்புல், உதயநகரிலிருந்து, கொடிவிளக்கு என்பன, இரா. மீனாட்சியின் கவிதைத் தொகுப்புகளாகும்.

3. பிள்ளைகள் எவற்றினைப்போல் நடக்க, இசைக்க, பறக்கவேண்டுமெனப் பிள்ளைக்கூடக் கவிதை கூறுகிறது?

★ பிள்ளைகள், காலையில் மயிலுடன் நடக்க வேண்டும்; மாமரக் குயிலுடன் கூவி இசைக்க வேண்டும். வண்ணத்துப் பூச்சிகளுடன் பறக்கவேண்டுமெனப் பிள்ளைக்கூடக் கவிதை கூறுகிறது.

### சிறுவினா (கூடுதல்)

1. இரா. மீனாட்சி குறித்துக் குறிப்பெழுதுக.

★ புதுச்சேரியில் ‘ஆரோவில்’ என்னும் இடத்தில் இரா. மீனாட்சி வாழ்கிறார். ஆசிரியப் பணியிலும், கிராம மேம்பாட்டிலும் ஈடுபட்டுள்ளார். நெருஞ்சி, சுடுபூக்கள், தீபாவளிப்பகல், மறுபயணம், வாசனைப் புல், உதயநகரிலிருந்து, கொடிவிளக்கு என்னும் கவிதைத் தொகுப்புகளைப் படைத்துள்ளார்.

★ பாடமாக அமைந்த கவிதை, ‘கொடிவிளக்கு’ நூலிலிருந்து தேர்வு செய்யப் பெற்றுள்ளது. இயற்கையோடு இயைந்த கல்வியை வரவேற்று, அதனால் கிடைக்கும் மகிழ்வைக் கவிதையாக்கி அளித்துள்ளார்.

### இலக்கணக்குறிப்பு

கற்பிக்கும் – பெயரெச்சம்

பறந்து, நடக்க, இசைக்க, வீழ்ந்து – வினையெச்சங்கள்

### உறுப்பிலக்கணம்

1. வீழ்ந்து – வீழ் + த் (ந்) + த் + உ
வீழ் –பகுதி, த் –சந்தி, ‘ந்’ ஆனது விகாரம், த் –இறந்தகால இடைநிலை,
உ –வினையெச்ச விகுதி.

2. பறந்து – பற + த் (ந்) + த் + உ
பற –பகுதி, த் – சந்தி, ‘ந்’ ஆனது விகாரம், த் – இறந்தகால இடைநிலை,
உ – வினையெச்ச விகுதி.

3. பயின்று – பயில் (ன்) + ற் + உ
பயில் – பகுதி, ‘ல்’ ‘ன்’ ஆனது விகாரம், த் – இறந்தகால இடைநிலை,
உ – வினையெச்ச விகுதி.

4. விரும்புகின்றேன் – விரும்பு + கின்று + ஏன்
விரும்பு – பகுதி, கின்று – நிகழ்கால இடைநிலை, ஏன் – தன்மை ஒருமை வினைமுற்று விகுதி.

MERCY PUBLICATIONS - CHENNAI

www.Padasalai.Net

### புணர்ச்சி விதிகள்

1. **பள்ளிக்கூடம் – பள்ளி + கூடம்**
   "இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும்" (பள்ளிக்கூடம்)
2. **ஐம்பதாண்டு – ஐம்பது + ஆண்டு**
   "உயிர்வரின் உக்குறள் மெய்விட் டோடும்" (ஐம்பத் + ஆண்டு)
   "உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே" (ஐம்பதாண்டு)
3. **தட்டுக்கூடை – தட்டு + கூடை**
   "இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசபத மிகும்" (தட்டுக்கூடை)
4. **சர்க்கரைப் பண்டம் – சர்க்கரை + பண்டம்**
   "இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும்" (சர்க்கரைப்பண்டம்)
5. **குறுஞ்செடி – குறுமை + செடி**
   "ஈறுபோதல்" (குறு + செடி); "இனமிகல்" (குறுஞ்செடி)

### பலவுள் தெரிக (கூடுதல்)

1. கீழ்உள்ளவற்றைப் பொருத்தி விடை காண்க.

| | | |
|---|---|---|
| அ. கொட்டும் பூக்களை | – | 1. குறிக்கச் சொல்கிறார்கள் |
| ஆ. தியானிக்கும் நேரத்தை | – | 2. ஓவியமாகத் தீட்டச் சொல்கிறார்கள் |
| இ. எறும்புகளின் வேகத்தை | – | 3. கவிதை எழுதச் சொல்கிறார்கள் |
| ஈ. மழைத்துளிகளின் வடிவத்தை | – | 4. எண்ணச் சொல்கிறார்கள் |
| | – | 5. அளக்கச் சொல்கிறார்கள் |

   1. அ – 2, ஆ – 1, இ – 4, ஈ – 3. 2. அ – 1, ஆ – 3, இ – 5, ஈ – 2.
   3. அ – 3, ஆ – 2, இ – 1, ஈ – 5. 4. அ – 4, ஆ – 1, இ – 5, ஈ – 2.

   **விடை :** அ – 2, ஆ – 1, இ – 4, ஈ – 3.
2. சரியான விடையைத் தெரிவு செய்க.
   'பிள்ளைக்கூடம்' என்னும் கவிதை இடம்பெற்ற நூல் ______.
   அ) சுடுபூக்கள் ஆ) கொடிவிளக்கு இ) மறு பயணம் ஈ) வாசனைப்புல்
   **விடை :** ஆ) கொடிவிளக்கு
3. 'பிள்ளைக்கூடம்' என்னும் கவிதையை எழுதியவர் ______.
   அ) மீ. ராசேந்திரன் ஆ) இரா. மீனாட்சி இ) அழகிய பெரியவன் ஈ) சு. வில்வரத்தினம்
   **விடை :** ஆ) இரா. மீனாட்சி

## 2. நற்றிணை

(போதனார்)

### குறுவினா

1. **கொழுஞ்சோறு – புணர்ச்சிவிதி கூறுக.**

**கொழுஞ்சோறு – கொழுமை + சோறு** – "ஈறுபோதல்" (கொழு + சோறு), "இனமிகல்" (கொழுஞ்சோறு)

### கூடுதல் வினாக்கள்

2. **செவிலியர் நடை தளர்ந்து நின்றது ஏன்?**

★ தலைவியின் குழந்தைப் பருவத்தில், உணவாக ஊட்டப் பொற்கிண்ணத்தில் பால் ஏந்திச் சென்றனர் செவிலியர். "நான் உண்ணேன்" என மறுத்து முத்துப்பரல் பொற்சிலம்பு ஒலிக்க, பந்தரைச் சுற்றிச் சுற்றி ஓடினாள். அவளைப் பின்தொடர முடியாமல் செவிலியர், நடை தளர்ந்தனர்.

MERCY PUBLICATIONS CHENNAI

**3. "ஒழுகுநீர் நுணங்கறல் போலப்**
**பொழுது மறுத்து உண்ணும் சிறுமது கையளே" – பொருள் தருக.**

★ பெருகி ஓடும் நீரில் கிடக்கும் நுண்மணல் இடைவெளி விட்டு இருக்கும். அதுபோல் தலைவி தன் குடும்ப நிலைக்கேற்ப ஒரு பொழுது விட்டு இன்னொரு பொழுது உண்ணும் வன்மையைப் பெற்றிருந்தாள் என்பதாம்.

## சிறுவினாக்கள்

**1. "ஏவல் மறுக்கும் சிறுவிளை யாட்டி**
**அறிவும் ஒழுக்கமும் யாண்டுணர்ந் தனள்கொல்" – இடம் சுட்டிப் பொருள் விளக்குக.**

**இடம் :** நற்றிணையில் தலைவியைக் கண்டுவந்த செவிலித்தாய், நற்றாயிடம் கூறுவதாக இவ்வடிகள் அமைந்துள்ளன.

**பொருள் :** "நாம் உண்ணுமாறு கூறியதை மறுத்து விளையாட்டுக் காட்டி ஓடியவள், இல்லறம் நடத்துதற்கு உரிய அறிவையும் ஒழுக்கத்தையும் எவ்வாறு உணர்ந்தாளோ?" என்பது இக்கூற்றின் பொருள்.

**விளக்கம் :** மணம் முடிந்து, கணவன் வீட்டில் வசிக்கும் தலைவியைக் காணச் சென்ற செவிலித்தாய், தலைவி நடத்தும் செம்மையான இல்லற வாழ்வைக் கண்டு வியந்தாள். அதனைத் தலைவியைப் பெற்ற நற்றாயிடம் கூறும்போது, "நம் வீட்டில் உணவு ஊட்ட விடுக்கும் வேண்டுதலை மறுத்து விளையாட்டுக் காட்டியவள், கணவன் உற்ற வறுமையை வெளிக்காட்டாது, தன் வீட்டு வளமான வாழ்வை நினையாமல், ஒருபொழுது விட்டு ஒருபொழுது உண்ணும் மனவன்மையைப் பெற்றுள்ளாள். இவள் இந்த அறிவையும் ஒழுக்கத்தையும் எங்குக் கற்றாளோ?" எனக் கூறிச் சொல்லி வியந்தாள்.

**2. சின்னதொரு துண்டைத்**
**திரும்பத் திரும்பக் கட்டி**
**அழகு பார்க்கிறாள் செல்லமகள்!**
**முந்தானையை இழுத்துப் போர்த்திக் கொள்கிறாள்!**
**ஒரு குட்டி நாற்காலியே வீடாகிவிடுகிறது!**
**துண்டைக் கட்டிக்கொண்டு தாயாகவும்**
**மாறிக்கொள்ள முடிகிறது அவளால்,**
**துண்டு ஒன்றுதான்.....**
**அதுவே அவளது மகிழ்ச்சியும்**
**என் துக்கமும்**
**– இப்புதுக்கவிதையில் வெளிப்படும் கருத்தை ஆராய்ந்து எழுதுக.**

★ பெண்குழந்தை ஒன்று, துண்டு ஒன்றை எடுத்து, அதைத் திரும்பத் திரும்பத் தன்மேல் சுற்றிக் கொண்டு அழகு பார்க்கிறது. தன்னை ஒரு வளர்ந்த பெண்ணாக, தாயாகக் கருதிக்கொண்டு செயல்படுகிறது.

★ அதனால் பெண்மைக்குரிய நாணத்தோடு முந்தானையை இழுத்துத் தன்னைப் போர்த்திக் கொள்கிறாள், பாதுகாப்பாக; விளையாட்டுப் பருவக் குழந்தை. எனவே, சிறியதொரு நாற்காலியைத் தன் வீடாக்கிக் கொள்கிறாள்; மனத்தில் கற்பித்துக் கொள்கிறாள்.

★ துண்டைக் கட்டிக்கொண்டதால், அவளால் தாயாக மாற முடிகிறது. அச்செயலே அவளுக்கு மகிழ்ச்சி அளிக்கிறது. ஆனால், பெற்றவர் என்ன நினைத்திருப்பார்? பெண்ணைப் படிக்க வைத்து மருத்துவ ராகவோ, ஆசிரியையாகவோ, அதிகாரியாகவோ உருவாக்க நினைத்திருப்பார்.

★ பெற்றவர் நினைக்கும் திட்டம் அது. ஆனால், பேதைப் பருவப் பெண்குழந்தை சமுதாயத்தில், சூழலில் காணும் காட்சிகளை வைத்துக்கொண்டு, தன் எதிர்காலத்திற்குத் திட்டமிடுகிறது. அதனால் மகிழ்ச்சி கொள்கிறது. பெண்குழந்தையின் மகிழ்ச்சிச் செயல், பெற்றவருக்குத் துன்பமாக மாறுகிறது.

MERCY PUBLICATIONS - CHENNAI

www.Padasalai.Net

## கூடுதல் வினாக்கள்

**3. நற்றிணை – குறிப்பெழுதுக.**

★ நற்றிணை என்பது, எட்டுத்தொகை நூல்களுள் முதலில் வைத்து எண்ணப்படுவது. ஒன்பது அடிகளைச் சிற்றெல்லையாகவும், பன்னிரண்டு அடிகளைப் பேரெல்லையாகவும் கொண்ட நானூறு பாடல்களின் தொகுப்பாகும். இப்பாடல்கள், இருநூற்று எழுபத்தைந்து புலவர்களால் பாடப்பட்டவையாகும்.

★ பாடமாக அமைந்த பாடலைப் பாடியவர், சங்ககாலத்தில் வாழ்ந்த 'போதனார்' என்கிற புலவராவார். நற்றிணையைத் தொகுப்பித்தவன், பன்னாடுதந்த பாண்டியன் 'மாறன்வழுதி'. இந்நூலுக்குக் கடவுள் வாழ்த்துப் பாடியவர் 'பெருந்தேவனார்.'

**4. பாலைத்திணை – விளக்குக.**

★ அகப்பொருள் பாடலுள் பாலைத்திணைக்குரிய உரிப்பொருள், 'பிரிதலும் பிரிதல் நிமித்தமுமாகும்'. இது அக ஒழுக்கத்தின் நிகழ்வாகும்.

★ பாலைத்திணைக்குரிய முதற்பொருள்களுள் சுரமும் சுரம் சார்ந்த இடமும் நிலமாகும்.

★ இந்நிலத்தின் அகஒழுக்கத்திற்குரிய பெரும்பொழுது இளவேனில், முதுவேனில், பின்பனிப் பருவங்களாகும்; சிறுபொழுது நண்பகலாகும்.

★ கொற்றவை (தெய்வம்), எயினர் – எயிற்றியர் (மக்கள்), வழிப்பறி செய்த பொருள் (உணவு), புறா – பருந்து (பறவை), வழிப்பறி செய்தல், நிரை கவர்தல் (தொழில்) முதலானவை கருப்பொருள்களாகும்.

★ இவற்றைப் பின்னணியாகக் கொண்டு, 'பிரிதலும் பிரிதல் நிமித்தமும்' என்னும் உரிப்பொருளை வெளிப்படுத்தும் அகப்பாடல் அமையும்.

**5. மகள்நிலை உரைத்தல் – துறை விளக்குக.**

★ திணையின் உட்பிரிவு துறை. 'மகள்நிலை உரைத்தல்' என்பது, பாலைத்திணையின் உட்பிரிவாகும்.

★ தலைவனோடு உடன்போகிய (தலைவனை மணம்புரியப் பிரிந்துபோன) விளையாட்டுப் பருவம் மாறாத மகள் நடத்தும் இல்லறச் சிறப்பைக் கண்ட செவிலித்தாய், அது குறித்து நற்றாயிடம் வியந்து கூறுவதாக அமைந்தது. இதனை 'மனைமருட்சி' (மகள்நிலை உரைத்தல்) எனவும் கூறுவர்.

## நெடுவினா

**1. தலைவியின் இல்லறப் பாங்கினைப் பற்றிச் செவிலித்தாய் நற்றாயிடம் வியந்து கூறுவன யாவை?**

★ விளையாட்டுப் பருவம் மாறாதவள் தலைவி. அவள் தலைவனோடு உடன்போக்கிற்கு உட்பட்டாள்.

★ பின்னர் வரைந்து (மணம் முடித்து) இல்லறத்தில் ஈடுபட்டாள்.

★ அந்நிலையில் அவளைக் காணச் சென்ற செவிலித்தாய், தலைவியான தன் வளர்ப்புமகள் நடத்தும் குடும்பப் பாங்கைக் கண்டாள். அதனை நற்றாயிடம் வியந்து பாராட்டினாள்.

**பிள்ளைப்பருவ விளையாட்டு :**

★ "நம் வீட்டில் பொற்கிண்ணத்தில் தேன்கலந்த பாலை ஒரு கையிலேந்தி, அச்சுறுத்தி உண்ண வைப்ப தற்குப் பூச்சுற்றிய மென்மையான கோலை இன்னொரு கையிலேந்தி, 'இதனை உண்' என்று கூறினோம்.

★ அப்போது, வீட்டு முற்றத்தில் இருந்த பந்தரைச் சுற்றிச்சுற்றி ஓடி, 'நான் உண்ணேன்' என்று மறுப்பாள். கால் சிலம்பு ஒலிக்க ஓடிய அவளைப் பின்தொடர முடியாமல், செவிலியர் களைத்துப் போவோம்.

**வியப்புத் தரும் இல்லறப்பாங்கு :**

★ இப்படி விளையாட்டுக் காட்டிய பெண்ணாகிய நம் மகள், இத்தகைய அறிவையும், ஒழுக்கத்தையும் எங்குக் கற்றாளோ என வியப்பாக உள்ளது!

★ தான் மணந்த கணவன் வீட்டில் வறுமையுற்ற நிலையிலும், தன் தந்தையின் வீட்டில் பெற்ற வளமான உணவினைப் பற்றி நினையாமல், ஓடும் நீரில் கிடக்கும் நுண்மணலில் இடைவெளி இருப்பதுபோல, ஒருபொழுது விட்டு ஒருபொழுது உண்ணும் மனவலிமையைப் பெற்றவளாக இருக்கிறாள்.

★ இது என்னே வியப்பு?" என்று, நற்றாயிடம் செவிலித்தாய் கூறினாள்.

MERCY PUBLICATIONS - CHENNAI

## இலக்கணக்குறிப்பு

**வெண்சுவை, தீம்பால், சிறுகோல், முதுசெவிலி, சிறுவிளையாட்டு, கொடுஞ்சோறு** – பண்புத் தொகைகள்

**விரிகதிர், ஒழுகுநீர்** – வினைத்தொகைகள்

**பொற்கலம், பொற்சிலம்பு** – மூன்றாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகைகள்

**கலந்த, கொண்ட, கொடுத்த** – பெயரெச்சங்கள்

**ஏந்தி, பிழைப்ப, ஒழிய, ஒடி, மெலிந்து, மறுத்து** – வினையெச்சங்கள்

அறி**வும்** ஒழுக்க**மும்** – எண்ணும்மை

**பந்தர்** – (பந்தல்) ஈற்றுப்போலி அல்லது இறுதிப்போலி அல்லது கடைப்போலி.

**உள்ளாள்** – முற்றெச்சம்

**தத்துற்று ஒடி** – வினையெச்சம்

**கொழுநன்குடி** (கொழுநனது குடி) – ஆறாம் வேற்றுமைத்தொகை

**உண்** – முன்னிலை ஏவல் ஒருமை வினைமுற்று.

**ஒக்குபு** – ‘செய்பு’ என்னும் வாய்பாட்டு வினையெச்சம்.

## உறுப்பிலக்கணம்

1. **மெலிந்து – மெலி + த் (ந்) + த் + உ**
   **மெலி** – பகுதி, **த்** – சந்தி, ‘ந்’ ஆனது விகாரம், **த்** – இறந்தகால இடைநிலை, **உ** – வினையெச்ச விகுதி.
2. **மறுத்து – மறு + த் + த் + உ**
   **மறு** – பகுதி, **த்** – சந்தி, **த்** – இறந்தகால இடைநிலை, **உ** – வினையெச்ச விகுதி.
3. **பிழைப்ப – பிழை + ப் + ப் + அ**
   **பிழை** – பகுதி, **ப்** – சந்தி, **ப்** – எதிர்கால இடைநிலை, **அ** – வினையெச்ச விகுதி.
4. **ஏந்தி – ஏந்து + இ**
   **ஏந்து** – பகுதி, **இ** – வினையெச்ச விகுதி.
5. **உணர்ந்தனள் – உணர் + த் (ந்) + த் + அன் + அள்**
   **உணர்** – பகுதி, **த்** – சந்தி, ‘ந்’ ஆனது விகாரம், **த்** – இறந்தகால இடைநிலை, **அன்** – சாரியை, **அள்** – பெண்பால் வினைமுற்று விகுதி.
6. **கொண்ட – கொள் (ண்) + ட் + அ**
   **கொள்** – பகுதி, **ள்** – ‘ண்’ ஆனது விகாரம், **ட்** – இறந்தகால இடைநிலை, **அ** – பெயரெச்ச விகுதி.

## புணர்ச்சி விதிகள்

1. **சிறுகோல் – சிறுமை + கோல்**
   “ஈறுபோதல்” (சிறு = கோல்)
2. **பொற்சிலம்பு – பொன் + சிலம்பு**
   “ணன வல்லினம் வரடறவும் ஆகும்” (பொற் = சிலம்பு)
3. **கொழுஞ்சோறு – கொழுமை + சோறு**
   “ஈறுபோதல்” (கொழு + சோறு), “இனமிகல்” (கொழுஞ்சோறு)
4. **பூந்தலை – பூ + தலை**
   “பூப்பெயர் முன் இனமென்மையும் தோன்றும்” (பூந்தலை)
5. **யாண்டுணர்ந்தனள் – யாண்டு + உணர்ந்தனள்**
   “உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்” (யாண்ட் + உணர்ந்தனள்)
   “உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே” (யாண்டுணர்ந்தனள்)
6. **பொற்கலம் – பொன் + கலம்**
   “ணன வல்லினம் வரடறவும் ஆகும்’ (பொற் = கலம்)

MERCY PUBLICATIONS - CHENNAI

www.Padasalai.Net

7. **தெண்ணீர் – தெள் + நீர்**
"ணளமுன் டணவும் ஆகும் தநக்கள்" (தெள் + ணீர்)
"லள வேற்றுமையில் மெலிமேவின் னணவும் ஆகும்" (தெண்ணீர்)
8. **முத்தரி – முத்து + அரி**
"உயிர்வரின் உக்குறள் மெய்விட் டோடும்" (முத்த் + அரி)
"உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே" (முத்தரி)
9. **நரைக்கூந்தல் – நரை + கூந்தல்**
"இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும்" (நரைக்கூந்தல்)
10. **உற்றென – உறு + என**
"முற்றும் அற்று ஒரோவழி" (உற் + என),
"தனிக்குறில் முன்ஒற்று உயிர்வரின் இரட்டும்" (உற்ற் + என)
"உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே" (உற்றென)
11. **வெண்சுவை – வெண்மை + சுவை**
"ஈறுபோதல்" (வெண்சுவை)

## பலவுள் தெரிக

1. 9 அடிச் சிற்றெல்லையும் 12 அடிப் பேரெல்லையும் கொண்ட நூல் ______.
அ) நற்றிணை ஆ) குறுந்தொகை இ) அகநானூறு ஈ) ஐங்குறுநூறு
**விடை :** அ) நற்றிணை

## கூடுதல் வினாக்கள்

2. எட்டுத்தொகை நூல்களுள் முதலாவதாக வைத்துப் பாடப்பட்டது ______.
அ) அகநானூறு ஆ) புறநானூறு இ) குறுந்தொகை ஈ) நற்றிணை
**விடை :** ஈ) நற்றிணை
3. 'நற்றிணை' என்னும் தொடரைப் பிரித்தால், ______ என அமையும்.
அ) நல் + திணை ஆ) நற் + றிணை இ) நன்மை + திணை ஈ) நல்ல + திணை
**விடை :** இ) நன்மை + திணை
4. நற்றிணையைத் தொகுப்பித்தவன் ______.
அ) பூரிக்கோ ஆ) பன்னாடு தந்த பாண்டியன் மாறன் வழுதி
இ) பாண்டியன் பெருவழுதி ஈ) பாரதம் பாடிய பெருந்தேவனார்
**விடை :** ஆ) பன்னாடு தந்த பாண்டியன் மாறன் வழுதி
5. நற்றிணைக்குக் கடவுள் வாழ்த்துப் பாடியவர் ______.
அ) நச்சினார்க்கினியர் ஆ) பாரதம் பாடிய பெருந்தேவனார்
இ) பாண்டியன் இளம்பெருவழுதி ஈ) தொல்காப்பியர்
**விடை :** ஆ) பாரதம் பாடிய பெருந்தேவனார்
6. 'மகள் நிலை உரைத்தல்' என்னும் துறை, ______ எனவும் குறிப்பிடப்படும்.
அ) தலைவி ஆற்றுவித்தல் ஆ) மகள் மறுத்து மொழிதல்
இ) செவிலி கண்டுரைத்தல் ஈ) மனை மருட்சி
**விடை :** ஈ) மனை மருட்சி
7. தலைவியின் இல்லறப் பாங்கை நற்றாயிடம் பாராட்டியது ______.
அ) தலைவன் ஆ) தந்தை இ) தோழி ஈ) செவிலித்தாய்
**விடை :** ஈ) செவிலித்தாய்
8. "பொழுது மறுத்து உண்ணும் சிறுமது கையள்" எனப் போற்றப்பட்டவள்______.
அ) செவிலித்தாய் ஆ) நற்றாய் இ) தலைவி ஈ) தோழி
**விடை :** இ) தலைவி

MERCY PUBLICATIONS - CHENNAI

9. ‘பிரசம் கலந்த வெண்சுவைத் தீம்பால்’– இத்தொடரில் ‘தேன்’ என்பதைக் குறிக்கும் சொல் ______

அ) கலந்த ஆ) தீம்பால் இ) பிரசம் ஈ) வெண்சுவை

**விடை :** இ) பிரசம்

10. ‘முத்தரிப் பொற்சிலம் பொலிப்பத் தத்துற்று’ – இத்தொடரில் ‘பரல்’ என்னும் பொருளுடைய சொல் ______.

அ) முத்து ஆ) அரி இ) சிலம்பு ஈ) ஒலிப்ப

**விடை :** ஆ) அரி

11. பொழுது மறுத்து உண்ணும் சிறுமது கையளே – இத்தொடரில் ‘பெருமிதம்’ என்னும் பொருளுணர்த்தும் சொல் ______.

அ) மறுத்து ஆ) சிறுமது இ) மதுகை ஈ) உண்ணும்

**விடை :** இ) மதுகை

12. கீழ்க்காணும் கூற்றுகளை ஆராய்ந்து வரிசைப்படுத்துக.

அ) செவிலியர், பொற்கலத்தில் பால் உணவை ஏந்தி வருவர்

ஆ) செவிலியர், மகளைப் பின்தொடர முடியாமல் நடை தளர்வர்

இ) ‘இதை உண்பாயாக’ எனச் செல்லமாக அடிப்பதுபோல் வேண்டுவர்

ஈ) பூச்சுற்றிய கோலைச் செவிலியர், கையில் வைத்திருப்பர்

உ) ‘நான் உண்ணேன்’ என மறுத்து மகள் அங்கும் இங்கும் ஓடுவாள்

1) அ ஆ உ ஈ இ 2) ஈ அ இ உ ஆ

3) அ ஈ இ உ ஆ 4) ஈ அ உ ஆ இ

**விடை :** 3) அ ஈ இ உ ஆ

13. அடிக்கோடிட்ட சொற்களின் பொருளைத் தெரிவு செய்க.

<u>பிரசம்</u> கலந்த வெண்சுவைத் தீம்பால்

கொண்ட கொழுநன் <u>குடிவறன் உற்றென</u>

அ) இனிப்பு, நன்மை ஆ) தேன், வறுமை இ) செல்வம், வீடு ஈ) இனியபால், உணவு

**விடை :** ஆ) தேன், வறுமை

14. சரியான விடையைத் தேர்வு செய்க.

நற்றிணைப் பாடல்களின் அடிவரையறை ______.

அ) 4முதல் 8வரை ஆ) 9முதல் 12வரை

இ) அடிவரையறையில்லை ஈ) 13முதல் 31வரை

**விடை :** ஆ) 9முதல் 12வரை

15. பொருத்துக.

1. பிரசம் – அ. வறுமை
2. உள்ளாள் – ஆ. பெருமிதம்
3. வறன் – இ. ஒச்சுதல்
4. மதுகை – ஈ. நினையாள்

– உ. தேன்

**விடை :** 1–உ, 2–ஈ, 3–அ, 4–ஆ

16. சரியான விடை தேர்க

i. நற்றிணை – 9 அடிமுதல் 12 அடிவரை

ii. குறுந்தொகை – 4 அடிமுதல் 8 அடிவரை

iii. அகநானூறு – 11 அடிமுதல் 31 அடிவரை

iv. ஐங்குறுநூறு – 3 அடிமுதல் 6 அடிவரை

அ. i ii iii சரி ஆ. i iii iv சரி இ. ii iii iv சரி ஈ. i ii iv சரி

**விடை :** ஈ. i ii iv சரி

MERCY PUBLICATIONS - CHENNAI

www.Padasalai.Net

# 3. தொல்காப்பியம்

## சிறப்புப் பாயிர உரைவிளக்கப் பாடல்

### குறுவினாக்கள் – கூடுதல் வினாக்கள்

**1. தொல்காப்பியம் குறித்துக் குறிப்பெழுதுக.**

★ தமிழ்மொழியில் கிடைத்துள்ள நூல்களில், காலத்தால் மிகமிகப் பழமையான இலக்கணநூல் தொல்காப்பியம். இது எழுத்து, சொல், பொருள் என்னும் மூன்று அதிகாரங்களையும், அதிகாரத்திற்கு ஒன்பது இயல்களாக இருபத்தேழு இயல்களையும் பெற்றுள்ளது. இதனை இயற்றியவர் தொல்காப்பியர்.

**2. தொல்காப்பியச் சிறப்புப் பாயிர உரைவிளக்கப் பாடல், தெள்ளிதின் விளக்குவது யாது?**

★ நாட்டின் எதிர்காலமாக விளங்கும் பெருமை பொருந்திய மாணவர்கள், எவ்வாறு கற்க வேண்டும் என்பதனைத் தொல்காப்பியச் சிறப்புப் பாயிர உரைவிளக்கப் பாடல் தெள்ளிதின் விளக்குகிறது.

**3. கற்றலில் சிறப்புற மாணவர் என்னென்ன செய்வர்?**

★ கற்றலில் சிறப்புற மாணவர், ஆசிரியரிடம் உலகவழக்கு, நூல்வழக்கு இலக்கணங்களைக் குற்றம் நீங்கக் கற்பர். உயர்சிந்தனை உடையவர்களுடன் கலந்து உரையாடிப் பயிற்சியும் பெறுவர். தம் ஐயங்களை ஆசிரியர்களிடம் வினவித் தெளிவு பெற்று, அவற்றைப் பிறருக்கு உணர்த்தியும் தெளிவு அடையச் செய்வர்.

### சிறுவினா – கூடுதல் வினா

**1. மாணவர் பாடம் கேட்கும் முறைமை குறித்துத் தொல்காப்பியம் கூறும் செய்திகளைத் தொகுத்தெழுதுக.**

**மாணவர் அறியாமை இருள் நீக்குநெறி :**

★ உலகவழக்கு, நூல்வழக்கு என்னும் மொழி வழக்கு இலக்கணங்களை அறிதல் வேண்டும்.

★ பாடங்களைப் போற்றிக் கற்றல், கற்றலின்போது கேட்டவற்றை மீண்டும் நினைத்தல் வேண்டும்.

★ ஆசிரியரை நெருங்கிப் பொருந்தி இருந்து, கருத்துகளைக் கேட்டுத் தெளிவு அடைதல் வேண்டும்.

★ உயர்சிந்தனை உடையவர்களுடன் கலந்து, உரையாடிப் பயிற்சி பெறுதல் வேண்டும்.

★ தங்களுக்கு ஏற்படும் ஐயங்களை வினாவாக எழுப்பித் தெளிவு பெறுதல் வேண்டும்,

★ அவ்வாறு உணர்ந்த கருத்துகளைப் பிறர்க்கு உணர்த்தித் தெளிவு பெறச்செய்தல் வேண்டும்.

★ இவையே, பாடம் கேட்கும் மாணவர் அறியாமையை நீக்கும் நெறிமுறைகளாகும்.

**பாடம் கேட்கும் முறை :**

★ பாடம் கேட்கும்போது, ஆசிரியர் கூறும் கருத்துகளை மாணவர்கள் ஒருமுறைக்கு இருமுறை கேட்டால், நூலைப் பிழையின்றிக் கற்கும் திறன் பெறுவர்; மும்முறை கேட்டால், பிறர்க்கு முறையாக எடுத்து உரைக்கும் ஆற்றலையும் பெறுவர்.

★ பாடம் கேட்டலைக் கடமையாகக் கொண்ட மாணவர்கள், இந்நெறிகளைக் கடைப்பிடித்தால், அறியாமையிலிருந்து விலகிச் சிறப்புறுவர் எனத் தொல்காப்பியச் சிறப்புப் பாயிர உரைவிளக்கப் பாடல் உணர்த்துகிறது.

### இலக்கணக்குறிப்பு

**அறிதல், போற்றல், நினைத்தல், கேட்டல், பயிறல், வினாதல், விடுத்தல்** – தொழிற்பெயர்கள்

**நனிஇகக்கும்** – உரிச்சொற்றொடர்

**இகக்கும், உரைக்கும்** – செய்யும் என்னும் வாய்பாட்டு வினைமுற்றுகள்.

**கேட்போன்** – வினையாலணையும் பெயர்.

### உறுப்பிலக்கணம்

**1. விடுத்தல் – விடு + த் + தல்**

**விடு** – பகுதி, **த்** – சந்தி, **தல்** – தொழிற்பெயர் விகுதி.

2. **அறிந்து – அறி + த் (ந்) + த் + உ**
**அறி** – பகுதி, **த்** – சந்தி, 'ந்' ஆனது விகாரம், **த்** – இறந்தகால இடைநிலை,
**உ** – வினையெச்ச விகுதி.

3. **கேட்டல் – கேள் (ட்) + ட் + அல்.**
**கேள்** – பகுதி, 'ள்', 'ட்' ஆனது விகாரம், **ட்** – சந்தி, **அல்** – தொழிற்பெயர் விகுதி.

## புணர்ச்சி விதிகள்

1. **இழுக்கின்றி – இழுக்கு + இன்றி**
"உயிர்வரின் உக்குறள் மெய்விட் டோடும்" (இழுக்க் + இன்றி)
"உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே" (இழுக்கின்றி)

2. **முறையறிந்து – முறை + அறிந்து**
"இ ஈ ஐ வழி யவ்வும்" (முறை + ய் + அறிந்து)
"உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே" (முறையறிந்து)

3. **ஆசாற்சார்ந்து – ஆசான் + சார்ந்து**
"ணனவல் லினம்வர டறவும்" (ஆசாற்சார்ந்து)

## பலவுள் தெரிக

1. தொல்காப்பியத்திலுள்ள மொத்த இயல்களின் எண்ணிக்கை ______.
அ) 9 ஆ) 3 இ) 27 ஈ) 2
**விடை :** இ) 27

## கூடுதல் வினாக்கள்

2. தொல்காப்பியத்திற்கு உரை எழுதியவர்கள் ______.
அ) இளம்பூரணர், பரிமேலழகர் ஆ) இளம்பூரணர், சேனாவரையர்
இ) மணக்குடவர், சேனாவரையர் ஈ) நச்சினார்க்கினியர், பரிமேலழகர்
**விடை :** ஆ) இளம்பூரணர், சேனாவரையர்

3. தொல்காப்பியத்தில் இடம்பெற்றுள்ள அதிகாரங்கள் ______.
அ) ஐந்து ஆ) இரண்டு இ) நான்கு ஈ) மூன்று
**விடை :** ஈ) மூன்று

4. தொல்காப்பியத்தின் ஒவ்வோர் அதிகாரமும், ______ இயல்களைக் கொண்டுள்ளது.
அ) மூன்று ஆ) எட்டு இ) ஒன்பது ஈ) பத்து
**விடை :** இ) ஒன்பது

5. தொல்காப்பியத்தில் வாழ்வியல் இலக்கணம் கூறுவது ______.
அ) எழுத்ததிகாரம் ஆ) சொல்லதிகாரம் இ) பொருளதிகாரம் ஈ) யாப்பதிகாரம்
**விடை :** இ) பொருளதிகாரம்

6. தொல்காப்பியம் முழுமைக்கும் உரை எழுதியவர் ______.
அ) கல்லாடனார் ஆ) பேராசிரியர் இ) சேனாவரையர் ஈ) இளம்பூரணர்
**விடை :** ஈ) இளம்பூரணர்

7. 'கடனாக் கொளினே மடம்நனி இகக்கும்' – இத்தொடரில் 'கடமை' என்னும் பொருளுணர்த்தும் சொல் ______.
அ) கொளின் ஆ) மடம் இ) கடன் ஈ) இகக்கும்
**விடை :** இ) கடன்

8. முறையறிந்து உரைக்கும் ஆற்றல் பெற, ______ வேண்டும்.
அ) ஒருமுறை கேட்க ஆ) இருமுறை கேட்க
இ) மும்முறை கேட்க ஈ) நான்குமுறை கேட்க
**விடை :** இ) மும்முறை கேட்க

MERCY PUBLICATIONS – CHENNAI

9. "முக்காற் கேட்பின் முறையறிந்து உரைக்கும்" என்னும் தொல்காப்பிய நூற்பா இடம்பெற்ற பகுதி, ______.

அ) பொதுப் பாயிரம் ஆ) சிறப்புப் பாயிரம் இ) எழுத்ததிகாரம் ஈ) சொல்லதிகாரம்

**விடை :** ஆ) சிறப்புப் பாயிரம்

10. பொருத்துக.

1. இழுக்கு – அ. நீக்கும்
2. மடம் – ஆ. சிறப்பு
3. மாண்பு – இ. மனக்கலக்கம்
4. இகக்கும் – ஈ. அறிவின்மை
   – உ. குற்றம்

**விடை :** 1 – உ, 2 – ஈ, 3 – ஆ, 4 – அ

## விரிவானம்

## இதழாளர் பாரதி

### (கடிதம்)

### நெடுவினா

**1. பாரதியின் இதழாளர் முகம் குறித்து நீங்கள் அறிவன யாவை?**

**பாரதியின் பன்முகம் :**

பாரதியார், கவிஞர்மட்டும் அல்லர்! சிறந்த பேச்சாளர்; பாடகர்; கட்டுரையாளர்; கதாசிரியர்; மொழிபெயர்ப்பாளர்; அரசியல் ஞானி; ஆன்மிகவாதி; அனைத்திற்கும் மேலாகச் சிறந்த இதழாளர்.

**இதழாளர் பாரதி :**

பாரதி, 'சுதேசிமித்திரன்' இதழில் உதவி இதழாசிரியராகச் சேர்ந்தார். அதனால் அவரது உலகளாவிய பார்வை கூர்மைப்பட்டுச் சிறந்த இதழாளரானார். தொடர்ந்து சக்கரவர்த்தினி, இந்தியா, பாலபாரதி, விஜயா, கர்மயோகி எனப் பல இதழ்களில் பணியாற்றித் தம் வாழ்க்கைப் போராட்டத்திற்கு இடையிலேயும் பாரதி, உலகப் பார்வை கொண்டு செயல்பட்டார்.

**படைப்பில் புதுமை :**

'தான்' என்பதை ஒழித்து, தன்னை முன்னிலைப்படுத்திக் கொள்ளாமல், விடுதலை வேட்கையைத் தூண்டப் பல புனைபெயர்களில் எழுதினார். தாம் பணியாற்றிய இதழ்களில் கருத்துடன் காட்சியும் இடம்பெற வேண்டும் எனக் கருதிக் கருத்துப் படங்களைக் கேலிச் சித்திரங்களாக வெளியிட்டுத் தமிழ் இதழ்களில் 'கார்ட்டூன்' என்பதை அறிமுகப்படுத்தினார்.

**வழித்தடம் அமைத்தவர் :**

இதழியல் துறையில் பலர் பாரதியைப் பின்பற்றிச் செயல்பட்டனர். தமிழ் இதழ்களில் ஆண்டு, திங்கள், நாள் என, நல்ல தமிழை முதலில் அறிமுகம் செய்தவர் பாரதியே. அவர் மூச்சும் பேச்சும் இளைஞருக்காகவும், பெண்களுக்காகவு மானவையாக இருந்தன. 'சக்ரவர்த்தினி' என்னும் தம் இதழில், குறள்வெண்பாவை எழுதிப் பெண் விடுதலைக்குப் பாடுபட்டார். புரட்சியையும், விடுதலையையும் குறிக்க, 'இந்தியா' இதழைச் சிவப்பு வண்ணத்தில் வெளியிட்டார்.

**புனைபெயர் பயன்படுத்தல் :**

தான் மட்டுமன்றித் தம் நண்பர்களும் ஆங்கிலேயர் கெடுபிடிக்கு ஆளாகக் கூடாதென விரும்பி, நண்பர் பெயர்களையும் அவர்கள் கூடிப் பேசும் இடங்களையும்கூடப் புனைபெயர்களிலேயே சுட்டி வந்தார். பாரதியார் பயன்படுத்திய புனைபெயர்களில் அவரின் இதழியல் அறத்தைக் காணமுடியும்.

**புதுமை விரும்பி பாரதி :**

இதழியலில் தேதி குறிப்பிடல், கருத்துப்படம் வெளியிடல், 'மகுடமிடல்' என்னும் தலைப்பிடல் ஆகிய பல நிலைகளில் முன்னோடியாக விளங்கினார். ஆங்கிலேயர் அளித்த பல கெடுபிடிகளுக்கும் நெருக்கடிகளுக்கும் இடையிலும், இதழியல் பணியைக் கைவிடாது செயல்படுத்தினார்.

MERCY PUBLICATIONS - CHENNAI

www.Padasalai.Net

# இனிக்கும் இலக்கணம்

## படைப்பாக்க உத்திகள்

### குறுவினா

**1. உவமை, உருவகம் – வேறுபடுத்துக.**

- **உவமை :** சொல்வதை எளிதில் உணருமாறு கூற உவமை பயன்படும்.
- உவமை முன்னும், உவமேயம் பின்னும் அமையும். எ – கா : மதி போன்ற முகம் / மதிமுகம்
- **உருவகம் :** ஒப்பீட்டுச் செறிவும், பொருள் அழுத்தமும் கொண்டது உருவகம். உவமேயம் முன்னும் உவமை பின்னும் அமையும்.
  எ – கா : முகமாகியமதி / முகமதி

### கூடுதல் வினாக்கள்

**2. உவமை என்பது யாது? உவமையை ஏன் பயன்படுத்தினர்?**

- ஒரு பொருளை மற்றொரு பொருளோடு ஒப்பிட்டுக் கூறுவது உவமையாகும்.
- ஒரு கருத்தைக் கூறுகையில், கேட்போர் மனத்தைக் கவரும் வகையிலும், எளிதில் உணரும் வகையிலும் கூறுவதற்கு உவமையைப் பயன்படுத்தினர்.

**3. உவமை, எவ்வெவற்றின் அடிப்படையில் தோன்றும்? சான்று தருக.**

- வினை (தொழில்), பயன், வடிவம் (மெய்), உரு (நிறம்) என்னும் நான்கின் அடிப்படையில் உவமை உருவாகும்.
- எ–கா : புலிபோல–தொழில்உவமை, மழைபோல – பயன்உவமை, துடி போன்ற – வடிவுஉவமை, தளிர் போல – நிறஉவமை.

**4. உவமையில் அமையும் உறுப்புகள் யாவை? சான்று தருக.**

- உவமானம் (உவமை), உவமேயம் (பொருள்), உவமை உருபு, பொதுத்தன்மை என்னும் நான்கு உறுப்புகள் உவமையில் அமையும்.
- சான்று : செல்வன் புலி போலப் பாய்ந்தான்.
- உவமானம் (உவமை) – புலி; உவமேயம் (பொருள்) – செல்வன்; உவமை உருபு–போல; பொதுத்தன்மை – பாய்தல்.

**5. உருவகமாவது யாது? சான்று தருக.**

- உவமானத்தையும் (உவமையையும்), உவமேயத்தையும் (பொருளையும்) வேறுபடுத்தாமல் இரண்டும் ஒன்றே என்பதுபோலக் கூறுவது உருவகமாகும்.
  எ – கா : முகமதி, பாதமலர்.
  (உருவகத்தில் பொருள் (உவமேயம்) முன்னும், உவமை (உவமானம்) பின்னும் அமையும்.)

**6. உருவகம் எவ்வெவற்றின் அடிப்படையில் அமையும்? சான்று தருக.**

- உருவகம், வினை, பயன், வடிவம், உரு என்பவற்றின் அடிப்படையில் அமையும்.
  எ – கா : எண்ணவலை பின்னும் மூளைச்சிலந்தி – வினை உருவகம்.
- ஆவேசப் புயல்களாலும் அசைக்க முடியாத ஆகாசப் பூ (சூரியன்) – பயன் உருவகம்.
- நிலவயலின் நட்சத்திர மணிகள் (வானம் விண்மீன்கள்) – வடிவ உருவகம்.
- மலைக்கிழவியின் நரைத்த கூந்தல் (அருவி) – நிற உருவகம்.

**7. உள்ளுறை உவமம் என்பது யாது?**

- கவிஞர் தாம் கூறக் கருதிய, அகமாந்தர்களின் மன உணர்வுகளை வெளிப்படையாகக் கூறாமல், கருப் பொருள்கள்மூலம் உவமைப்படுத்துவது, உள்ளுறை உவமம் ஆகும்.

**8. உள்ளுறை எவ்வாறு உருவாக்கப்படுகிறது?**

- வினை, பயன் போன்றவற்றின் அடிப்படைகளில் தோன்றும் குறியீடுகளைக் கொண்டு, உள்ளுறை உருவாக்கப் படுகிறது.

www.Padasalai.Net

## சிறுவினாக்கள்

**1. உள்ளுறை உவமை, இறைச்சி – எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.**

**உள்ளுறை :**

★ கவிஞர் தாம் கூறக் கருதிய பொருளை வெளிப்படையாகக் கூறாமல், அகமாந்தரின் மன உணர்வு களை, இயற்கைப் புனைந்துரைமூலம் கருப்பொருள்களால் உவமைப்படுத்துவது 'உள்ளுறை' ஆகும்.

★ பாடலில் இடம்பெறும் மாந்தரின் உள்ளத்தில் எழும் உணர்வுகளின் குறிப்புப் பொருளாகவும் அமையும்.

★ அகநானூற்றில் தோழிக்குச் சொல்வதுபோல் மறைந்துநிற்கும் தலைவனுக்குத் தலைவி கூறுவதாகப் பெருங்குன்றூர்கிழார் பாடிய "ஈயல் புற்றத்து" எனத் தொடங்கும் பாடல், 'உள்ளுறை' உணர்த்துவதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

**இறைச்சி :**

★ அகப்பாடலில் இடம்பெறும் உள்ளுறை போன்ற மற்றொரு உத்தி, இறைச்சி. 'இறைச்சி' என்பது உரிப்பொருளோடு நேரிடைத் தொடர்பு இல்லாத குறிப்புப் பொருளாகும்.

★ இது அகப்பாடலில் மட்டுமே இடம்பெறும். தலைவியை ஆற்றுவிக்கும் தோழி, "தலைவன் செல்லும் வழியில் ஆண்யானை, பெண்யானையின் பசியைப் போக்க, 'யா' மரத்தின் பட்டையை உரித்து, நீர்ச்சுவையைப் பருகச் செய்யும்" என்று கூறுவாள்.

★ இது பாடலின் கருத்து. ஆனால், "தலைவன் இந்தக் காட்சியைக் காண்பான். விரைவில் திரும்பி, தலைவியின் துன்பம் தீர்ப்பான்' என்பது, இது உணர்த்தும் குறிப்புப் பொருளாகும். இவ்வாறு உரிப்பொருளின் புறத்தே நின்று, வேறு கருத்தைக் குறிப்பாக உணர்த்துவது, 'இறைச்சி' ஆகும்.

## பலவுள் தெரிக

1. நிழல் போலத் தொடர்ந்தான் – இது எவ்வகை உவமை?

அ) வினை ஆ) பயன் இ) வடிவம் ஈ) மெய்

**விடை :** இ) வடிவம்

## கூடுதல் வினாக்கள்

2. 'புலிபோலப் பாய்ந்தான்' என்பது, ______ அடிப்படையில் தோன்றிய உவமை.

அ) நிறம் ஆ) வடிவம் இ) பயன் ஈ) தொழில்

**விடை :** ஈ) தொழில்

3. 'மழைபோலக் கொடுக்கும் கை' என்பது, ______ அடிப்படையில் தோன்றிய உவமை.

அ) உரு ஆ) மெய் இ) பயன் ஈ) வினை

**விடை :** இ) பயன்

4. 'துடிபோலும் இடை' என்பது, ______ அடிப்படையில் தோன்றிய உவமை.

அ) வினை ஆ) பயன் இ) நிற ஈ) வடிவ (மெய்)

**விடை :** ஈ) வடிவ (மெய்)

5. 'தளிர்போலும் மேனி' என்பது, ______ அடிப்படையில் தோன்றிய உவமை.

அ) தொழில் ஆ) பயன் இ) வடிவ ஈ) நிற (உரு)

**விடை :** ஈ) நிற (உரு)

6. அவர்கள் மூளையில்
விதையைப் போல்
தூவப்பட வேண்டிய அறிவு
ஆணியைப் போல்
அறையப்படுகின்றது! – இக்கவிதையில் இடம்பெறும் உவமை ______.

அ) உரு உவமை ஆ) வடிவ உவமை இ) பயன் உவமை ஈ) வினை உவமை

**விடை :** ஈ) வினை உவமை

MERCY PUBLICATIONS - CHENNAI

7. வறண்ட வாழ்வு
தளிர்க்க
மழைபோல் வந்தாய் நீ! – இக்கவிதையில் இடம்பெறும் உவமை ______.
அ) வடிவ உவமை ஆ) பயன் உவமை இ) வினை உவமை ஈ) உரு உவமை
**விடை :** ஆ) பயன் உவமை

8. சுருக்கிய
குடையைப் போலத்
தோன்றும்
அசோக மரம்! – இக்கவிதையில் இடம்பெறும் உவமை ______.
அ) வினை (தொழில்) உவமை ஆ) பயன் உவமை
இ) வடிவ (மெய்) உவமை ஈ) நிற (உரு) உவமை
**விடை :** இ) வடிவ (மெய்) உவமை

9. சோடியம் விளக்காய்
மாலை நேரச் சூரியனின்
மஞ்சள் வெளிச்சம்
தெருவில் நிரம்பி வழிந்தது! – இக்கவிதையில் இடம்பெறும் உவமை ______.
அ) தொழில் (வினை) உவமை ஆ) பயன் உவமை
இ) மெய் (வடிவ) உவமை ஈ) நிற (உரு) உவமை
**விடை :** ஈ) நிற (உரு) உவமை

10. ஒரு பொருளுக்கு மற்றொரு பொருளை ஒப்பிட்டுக் கூறுவது ______.
அ) உருவகம் ஆ) இறைச்சி இ) உள்ளுறை ஈ) உவமை
**விடை :** ஈ) உவமை

11. உவமானத்தையும் உவமேயத்தையும் (உவமிக்கப்படும் பொருளையும்) வேறுபடுத்தாமல் இரண்டும் ஒன்றே எனக் கூறுவது ______.
அ) உவமை ஆ) இறைச்சி இ) உருவகம் ஈ) உள்ளுறை
**விடை :** இ) உருவகம்

12. ‘உவமையின் செறிவார்ந்த வடிவமே ______ எனப்படும்.
அ) உவமை ஆ) இறைச்சி இ) உள்ளுறை ஈ) உருவகம்
**விடை :** ஈ) உருவகம்

13. உவமிக்கப்படும் பொருளே ______ ஆகும்.
அ) உவமை ஆ) உருவகம் இ) உவமைத்தொகை ஈ) உவமேயம்
**விடை :** ஈ) உவமேயம்

14. ஒப்பாகக் காட்டப்படும் பொருள் ______ ஆகும்.
அ) உவமேயம் ஆ) உருவகம் இ) உவமை ஈ) உவமைத்தொகை
**விடை :** இ) உவமை

15. “எண்ணவலை பின்னும் மூளைச்சிலந்தி (சிந்தனை) – இதில் இடம்பெறும் உருவகம் ______.
அ) நிற உருவகம் ஆ) மெய் உருவகம் இ) பயன் உருவகம் ஈ) வினை உருவகம்
**விடை :** ஈ) வினை உருவகம்

16. “ஆவேசப் புயல்களாலும் அசைக்க முடியாத ஆகாசப் பூ” (சூரியன்) – இதில் இடம் பெற்றுள்ள உருவகம் ______.
அ) நிற உருவகம் ஆ) வினை உருவகம்
இ) பயன் உருவகம் ஈ) மெய் உருவகம்
**விடை :** இ) பயன் உருவகம்

MERCY PUBLICATIONS - CHENNAI

www.Padasalai.Net


17. "நீல வயலின் நட்சத்திர மணிகள்" (வானமும் விண்மீன்களும்) – இதில் இடம்பெறுவது______.
அ) நிற உருவகம் ஆ) வினை உருவகம்
இ) பயன் உருவகம் ஈ) மெய் உருவகம்
**விடை :** ஈ) மெய் உருவகம்

18. "மலைக்கிழவியின் நரைத்த கூந்தல்" (அருவி) – இதில் இடம் பெற்றுள்ளது______.
அ) வினை உருவகம் ஆ) மெய் உருவகம் இ) நிற உருவகம் ஈ) பயன் உருவகம்
**விடை :** இ) நிற உருவகம்

19. தமிழ் இலக்கியத்திற்கே உரிய ஒப்பற்ற நெறி ______.
அ) இறைச்சி ஆ) உவமை இ) உருவகம் ஈ) உள்ளுறை உவமம்
**விடை :** ஈ) உள்ளுறை உவமம்

20. உரிப்பொருளோடு நேரிடைத் தொடர்பில்லாத குறிப்புப் பொருளே ______.
அ) உவமை ஆ) உருவகம் இ) உள்ளுறை ஈ) இறைச்சி
**விடை :** ஈ) இறைச்சி

21. உவமைக்குள் மற்றொரு பொருளைக் குறிப்பாக உணர்த்துவது ______.
அ) உருவகம் ஆ) உவமை இ) உள்ளுறை உவமை ஈ) இறைச்சி
**விடை :** இ) உள்ளுறை உவமை

22. குறிப்புப் பொருளுக்குள் மேலும் ஒரு குறிப்புப் பொருளை அமைத்துரைப்பது ______.
அ) உவமானம் ஆ) உவமேயம் இ) உள்ளுறை உவமை ஈ) இறைச்சி
**விடை :** ஈ) இறைச்சி

23. கவிதைப் பொருளோடு சேர்ந்து காணப்படுவது ______.
அ) உவமைத்தொகை ஆ) உருவகம் இ) உள்ளுறை உவமம் ஈ) இறைச்சி
**விடை :** இ) உள்ளுறை உவமம்

24. கவிதைப் பொருளின் புறத்தே குறிப்புப் பொருளாய் வெளிப்படுவது ______.
அ) உருவகம் ஆ) உவமைத்தொகை
இ) இறைச்சி ஈ) உள்ளுறை
**விடை :** இ) இறைச்சி

25. சரியான விடையைத் தெரிவு செய்க.
1. உவமை – அ. சினத்தீ
2. உருவகம் – ஆ. நும்மினும் சிறந்தது நுவ்வை
3. உள்ளுறை உவமை – இ. துடிஇடை
4. இறைச்சி – ஈ. இந்த உலகமும் ஒன்றேதான்
– உ. பெருங்கை ஏற்றை வள்ளுகிர் கதுவலின் பாம்புமதன் அழியும்

1. 1 – இ, 2 – ஆ, 3 – அ, 4 – ஈ 2. 1 – ஆ, 2 – இ, 3 – உ, 4 – அ
3. 1 – இ, 2 – அ, 3 – ஆ, 4 – உ 4. 1 – அ, 2 – உ, 3 – ஈ, 4 – ஆ
**விடை :** 3. 1 – இ, 2 – அ, 3 – ஆ, 4 – உ

26. சரியான விடையைத் தேர்வு செய்து பொருத்துக.
அ) மழைத்துளிபோல் வந்தாய்
ஆ) மஞ்சள் வெளிச்சம் நிரம்பி வழிந்தது
இ) அறிவு ஆணியைப்போல் அறையப்படுகிறது
ஈ) குடையைப்போலத் தோன்றும் அசோகமரம்
1. வினை உவமம் 2. பயன் உவமம் 3. மெய் உவமம் 4. உரு உவமம்

1. அ – 1, ஆ – 3, இ – 2, ஈ – 4 2. அ – 3, ஆ – 2, இ – 4, ஈ – 1
3. அ – 4, ஆ – 1, இ – 3, ஈ – 2 4. அ – 2, ஆ – 4, இ – 1, ஈ – 3
**விடை :** 4. அ – 2, ஆ – 4, இ – 1, ஈ – 3

MERCY PUBLICATIONS - CHENNAI

## கற்பவை கற்றபின்

1. "பூவைவிட்டு இறங்காதே
இறக்கை முறிந்த வண்ணத்துப் பூச்சியே
உனக்காக எறும்புகள்"
– இக்கவிதையின் படைப்பாக்கத் தனி உத்தி :

விருப்பப்படி பறக்க உதவும் இறக்கை முறிந்தால், வண்ணத்துப் பூச்சியின் கதி என்னவாகும்? எறும்பு உள்ளிட்டவற்றிற்குக் கொண்டாட்டம்தான்.

உடலில் உயிரிருந்தாலும் காத்துக்கொள்ள முடியுமா? பறக்க உதவும் இறகே முறிந்தால் என்னாவது?

விரும்பியபடி மலர்த்தேனை உண்ண முடியுமா? மகரந்தச் சேர்க்கைக்குத்தான் உதவமுடியுமா?

எனவே, விழிப்புணர்வு தேவை. வானில் பறக்கும் வண்ணத்துப் பூச்சியும் தன் நிலை தவறினால் உயிரிழக்க நேரும்.

இங்குக் கூறப்பட்ட அறிவுரை, வண்ணத்துப் பூச்சிக்கு மட்டுமன்று; ஆறறிவு படைத்த மனிதனுக்கும்தான். மெய்ப்பொருள் காண்பது அறிவு!

2. மனிதர்க்கு உணவாவதை எண்ணிக்
கண்ணீர் விட்டனவோ மீன்கள்!
கடல் நீரில் உப்பு.
– இக்கவிதையின் படைப்பாக்கத் தனி உத்தி :

கடல்நீர், அது தோன்றிய காலத்திலிருந்தே உப்புக் கரித்துக் கொண்டுதான் உள்ளது.

இப்பாடலைப் பாடிய கவிஞர், அதற்கு வேறு ஒரு புதிய காரணத்தைக் கற்பித்துக் கூறியுள்ளார்.

மீனின் சுவை அறிந்த மனிதன், அதை விட்டுவைக்க நினைப்பானா? மீன்கள், மனிதர்க்கு உணவாவதை எண்ணிக் கண்ணீர் வடிப்பதனால், கடல்நீர் உப்பானதாகக் கூறுகிறார்.

உண்மையில் இது அழகானதொரு கற்பனைதான். இயற்கை நிகழ்வை உள்ளது உள்ளபடி கூறுவர் சிலர். அந்த இயற்கை நிகழ்வில், தம் கற்பனையை ஏற்றிக் கூறுவர் சிலர். இப்புதுக்கவிதை, அவ்வகையில் தற்குறிப்பு ஏற்ற அணியைப் படைப்பு உத்தியாகக் கொண்டுள்ளது எனலாம்.

## இலக்கணத் தேர்ச்சிகொள்

1. உவமை எவ்வெவற்றின் அடிப்படையில் தோன்றும்?

வினை (தொழில்), பயன், மெய் (வடிவம்), உரு (நிறம்) என்னும் நான்கின் அடிப்படையில் உவமை தோன்றும்

| | | |
|---|---|---|
| எ – கா : | புலிபோல் பாய்ந்தான் | – வினை (தொழில்) உவமை |
| | மழை போலக் கொடுக்கும் கை | – பயன் உவமை |
| | துடி போன்ற இடை | – மெய் (வடிவம்) உவமை |
| | தளிர் போலும் மேனி | – உரு (நிறம்) உவமை |

2. உவமைத்தொடர்களால் அழைக்கப்பெறும் சங்கப்புலவர்கள் பெயர்களைத் தொகுத்து அவற்றில் உள்ள உவமைகளைக் கண்டறிக.

செம்புலப்பெயல்நீரார், தேய்புரிபழங்கயிற்றினார், அணிலாடுமுன்றிலார் என்போர், உவமைகளால் பெயர் பெற்ற புலவர்களாவர்.

செம்புலப்பெயல்நீர் – உவமை. செம்மண் நிலத்தில் பெய்த மழைநீர் (போல)
தேய்புரிபழங்கயிறு – உவமை. தேய்ந்து மெலிந்த பழைய கயிறு (போல)
அணிலாடுமுன்றில் – உவமை. அணில் விளையாடும் வீட்டின் முற்றம் (போன்ற)

3. ஒட்டுப் போடாத
ஆகாயம் போல – இந்த
உலகமும் ஒன்றேதான்.... – இக்கவிதையில் பயின்று வருவது

அ) உவமை ஆ) உருவகம் இ) உள்ளுறை ஈ) இறைச்சி

விடை : அ) உவமை

MERCY PUBLICATIONS - CHENNAI

www.Padasalai.Net

**4. கீழ்க்காண்பனவற்றுள் 'இறைச்சி' பற்றிய கூற்றைத் தேர்க.**

அ) குறியீடுகளைக் கொண்டு உருவாக்கப்படும்.

ஆ) ஒப்பீட்டுச் செறிவும் பொருள் அழுத்தமும் சிறக்க அமையும்.

இ) வினை, பயன், வடிவம், நிறம் ஆகிய நான்கின் அடிப்படையில் தோன்றும்.

ஈ) உரிப்பொருளோடு நேரிடைத் தொடர்பில்லாத குறிப்புப்பொருள்.

**விடை :** ஈ) உரிப்பொருளோடு நேரிடைத் தொடர்பில்லாத குறிப்புப்பொருள்.

**5. உள்ளுறைக்கும் இறைச்சிக்கும் உள்ள வேறுபாட்டினைச் சான்றுகளுடன் ஆய்க.**

**உள்ளுறை :**

அகமாந்தர்களின் மன உணர்வைக் (சொற்களில் வெளிப்படுத்தாமல், கருப்பொருள்களின் காட்சி இயற்கைப் புனைந்துரைகளாக, நாகரிகமாக மறைத்துக் கூறி) குறிப்புப்பொருளாக வெளிப்பட வைப்பது உள்ளுறை.

தோழிக்குக் கூறுவதுபோல் மறைந்து நின்ற தலைவனுக்குத் தலைவி கூறியதாகப் பெருங்குன்றூர் கிழார் பாடிய "ஈயல் புற்றத்து" எனத் தொடங்கும் பாடல், உள்ளுறைக்குச் சிறந்த சான்று.

இதில் பசியுடன் அலையும் கரடி, ஈசல் புற்றில் கைவிட்ட செயலும், அங்குப் பதுங்கி இருந்த பாம்பு, கரடி நகம் பட்டுத் துன்புறும் செய்தியும் சுட்டப்பட்டுள்ளன.

இரவில் காட்டைக் கடந்துவரும் தலைவன் செயலுக்குத் தலைவி அஞ்சுவது மறைபொருளாகச் சுட்டப் பட்டுள்ளது. தலைவனுக்குக் கரடியும், தலைவிக்குப் பாம்பும் குறியீடுகளாக அமைந்த உள்ளுறை உவமமாகும்.

**இறைச்சி :**

உரிப்பொருளோடு நேரிடைத் தொடர்பு இல்லாத குறிப்புப்பொருளே இறைச்சியாகும்.

"நசை பெரிது" எனத் தொடங்கும் குறுந்தொகைப் பாடல், இறைச்சிக்குச் சிறந்த சான்றாகும்.

தலைவியை ஆற்றுவிக்கும் தோழி, "தலைவன் செல்லும் வழியில் களிறு (ஆண்யானை), தன் பிடியின் (பெண்யானையின்) பசியைப் போக்க, 'யா' மரத்தின் பட்டையை உரித்து, அதன் ஈரச் சுவையைப் பருகத் தரும்" என்று கூறுவாள். இதில் சொல்லப்பட்ட குறிப்புப்பொருள், "தலைவன் இந்த அன்புக் காட்சியைக் காண்பான். அதனால் உடனே திரும்பி வந்து, உன் துயர் தீர்ப்பான்" என்பதாகும். இவ்வகைக் குறிப்புப்பொருளே 'இறைச்சி' ஆகும். அதாவது, "உரிப்பொருளின் புறத்தே நின்று, அதன் கருத்தை மேலும் சிறப்பிக்கப் பயன்படுவது" என்பதே 'இறைச்சி''

## மொழியை ஆள்வோம்

### சான்றோர் சித்திரம்

செந்தமிழ்ச் செம்மல் டாக்டர் ஜி.யு.போப், 1839ஆம் ஆண்டில், தென்னிந்தியாவுக்கு வந்தார். சென்னையை அடைந்த போப், 'சாந்தோம்' என்னும் இடத்தில் முதன்முதலாகத் தமிழ் உரையைப் படித்துச் சொற்பொழிவாற்றினார். ஆங்கிலேயரான அவரின் தமிழுரை, கூடியிருந்த தமிழர்களுக்குப் பெருவியப்பளித்தது. தமிழ் மொழியைப் பயிலத்தொடங்கிய சிறிது காலத்திலேயே, ஐரோப்பியரும் படித்துப் பயன்பெற வேண்டுமென்ற எண்ணத்தில், தமிழ் நூல்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்ததாகக் குறிப்பிட்டுள்ளார். இவரது திருக்குறள், திருவாசக ஆங்கில மொழிபெயர்ப்புகள் சிறப்பு வாய்ந்தவை.

போப் அவர்கள் தஞ்சாவூரில் வாழ்ந்தபோது, தமிழ் இலக்கிய இலக்கணங்களைத் தெளிவுற அறிந்தார். அப்போதுதான் தொல்காப்பியம், நன்னூல் முதலிய பேரிலக்கண நூல்களைப் பாடசாலை மாணவர் படிப்பது எளிதன்று என்பதைக் கண்டு, சிறிய தமிழ் இலக்கண நூல்கள் சிலவற்றை எழுதி வெளியிட்டார். ஐரோப்பியர், தமிழ் மொழியைக் கற்றுக் கொள்வதற்குரிய நூல் ஒன்றை (Tamil Hand Book) எழுதினார். ஆங்கில மொழியில் எழுதப் பெற்றிருந்த தமிழ்நாட்டு வரலாற்றை, தமிழில் எழுதிப் பதிப்பித்தார். பள்ளிக்கூடங்களில் பயிலும் மாணவர்கள், தாய்மொழி வழியாகவே அனைத்துத் துறைக் கல்வியையும் பெறுதலே முறையானதென்றும், அத்தகைய கல்வியே பயனளிக்குமென்றும் போப் கருதினார். எழுபது ஆண்டுகள் தமிழோடு வாழ்ந்திருந்து, தமிழுக்கு நலம் அருளிய பெரியார் ஜி. யு. போப் ஆவார்.

MERCY PUBLICATIONS - CHENNAI

**கீழ்க்காணும் வினாக்களுக்கு விடை தருக.**

**1. இலக்கணக் குறிப்புத் தருக. அ) பிறந்தார் ஆ) அருளிய**

**அ. பிறந்தார்** – படர்க்கைப் பலர்பால் இறந்தகால வினைமுற்று. **ஆ. அருளிய** – பெயரெச்சம்.

**2. திருக்குறளை ஐரோப்பியரும் படித்துப் பயன்பெற வேண்டும் என்ற எண்ணத்தில், அதை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர் ஜி.யு. போப் – விடைக்கேற்ற வினாவை எழுதுக.**

ஜி.யு. போப், எந்த எண்ணத்தில் திருக்குறளை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார்?

**3. பதிப்பித்தார் – பகுபத உறுப்பிலக்கணம் தருக.**

பதிப்பித்தார் – பதிப்பி + த் + த் + ஆர்

**பதிப்பி** – (பிறவினைப்) பகுதி, **த்**–சந்தி, **த்**– இறந்தகால இடைநிலை,

**ஆர்**–பலர்பால் வினைமுற்று விகுதி.

**4. வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.**

பள்ளிகூடங்களில் பயிலும் மாணவர்கள், தாய்மொழி வழியாகவே அனைத்துத் துறை கல்வியையும் பெறுதலே முறையானதென்றும், அத்தகையக் கல்வியேப் பயனளிக்குமென்றும் போப் கருதினார்.

**விடை :** பள்ளிக்கூடங்களில் பயிலும் மாணவர்கள், தாய்மொழி வழியாகவே அனைத்துத் துறைக் கல்வியையும் பெறுதலே முறையானதென்றும், அத்தகைய கல்வியே பயனளிக்குமென்றும் போப் கருதினார்.

**5. பொருத்துக.**

அ) தொல்காப்பியம் – i) சங்கநூல்
ஆ) திருக்குறள் – ii) பக்திநூல்
இ) புறநானூறு – iii) அறநூல்
ஈ) திருவாசகம் – iv) இலக்கணநூல்

**விடை :** அ – iv ஆ – iii இ – i ஈ – ii

**விடைக்கேற்ற வினா அமைக்க.**

1. தமிழ்மொழியை ஐரோப்பியர் கற்றுக்கொள்வதற்குரிய நூல் ஒன்றைப் போப் எழுதினார்.

**வினா :** எந்த மொழியை, யார் கற்றுக்கொள்வதற்குரிய நூல் ஒன்றைப் ‘போப்’ எழுதினார்?

2. தாய்மொழி வழியாகவே அனைத்துத்துறைக் கல்வியையும் பெறுதலே முறையானதென்றும், அத்தகைய கல்வியே பயனளிக்குமென்றும் போப் கருதினார்.

**வினா :** கல்வி கற்றல் குறித்துப் ‘போப்’ கருத்து யாது?

**செய்திக்குக் கீழுள்ள ஆங்கிலச் சொற்களுக்கு இணையான தமிழ்ச்சொற்களை மொழிபெயர்ப்புப் பகுதியிலிருந்து கண்டறிந்து எழுதுக.**

The Chinese have no religious science. The practices of their religion (Buddhism) are derived from India. They believe that it is the Indians who brought idols to them and that the latter were their religious educators. In China and in India they believe in metempsychosis. The Chinese and Indians draw from the same religious principles different conclusions. In India medicine and philosophy are practiced. The Chinese practice medicine equally. Their chief treatment is cauterization. The Chinese practice astronomy but the Indians practice this science still more.

Written by Abu Zayd Al Sirafi, traveler,
10th century.
Foreign notices of South India by K.A.Neelakanda Sastri.

சீனாவுக்கென்று தனியாக மதங்கள் இல்லை. இந்தியாவின் மதத்தை (பவுத்தம்) அவர்கள் கடைப்பிடிக்கின்றனர். சிலைகளைத் தங்களுக்கு அறிமுகம் செய்தோர் இந்தியர்கள் என்று நம்பும் சீனர்கள், இந்தியர்களே தங்களின் மத ஆசிரியர்கள் என்றும் கருதுகின்றனர். இந்தியாவிலும் சீனாவிலும் மரணத்துக்குப் பிந்தைய மறுபிறப்பை நம்புகின்றனர். ஒரே மதக் கோட்பாடு இருந்தாலும், சீனர்களும் இந்தியர்களும் வெவ்வேறு தீர்மானங்களுக்கு வருகிறார்கள். இந்தியாவில் மருத்துவமும், தத்துவமும் நடைமுறையில் உள்ளன. அவர்களுக்குச் சமமான சீனர்களும் மருத்துவத்தை நடைமுறையில் வைத்திருக்கிறார்கள். ‘தீய்த்தல்’ அவர்களது பிரதான சிகிச்சை முறை. சீனர்கள் வானியல் சாஸ்திரப் பயிற்சியில் ஈடுபடுகிறார்கள். ஆனால், இந்த அறிவியலை இந்தியர்கள் இன்னும் அதிகமாய்ப் பயன்படுத்துகின்றனர்.

MERCY PUBLICATIONS - CHENNAI

www.Padasalai.Net

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Religion | மதம் (சமயம்) | Medicine | மருத்துவம் | Philosophy | தத்துவம் |
| Science | அறிவியல் | Idols | சிலைகள் | | |

**கீழ்க்காணும் பத்தியில் உள்ள உவமைகளையும் உருவகங்களையும் பட்டியலிடுக. உருவகங்களை உவமை களாக மாற்றுக. உவமைகளை எவ்வகை உவமைகள் என்றும் எழுதுக.**

விழிச்சுடர், வாசலில் உட்கார்ந்திருந்தாள். அவளது எண்ணவலையில் மின்னல்களைப் போன்ற சொற்கள் தோன்றி மறைந்தன. அடுக்கிவைக்கப்படாத புத்தகங்களைப்போலக் குழம்பிய எண்ணங்களை ஒழுங்குபடுத்த நினைத்தாள். நேரம், நத்தையைப்போல மெதுவாக நகர்ந்தது. அண்ணாந்து பார்த்தாள். நீலப்பட்டு உடுத்தியதைப் போன்ற வானம், அம்மாவை நினைவூட்டியது. பூனைக்குட்டியைப்போல் அம்மாவின் முந்தானைக்குள் சுருண்டு கொள்ள நினைத்தாள். பூனைக்குட்டியை மடியில் வைத்துக்கொண்டதைப்போல், அம்மாவின் கதகதப்பை உணர்ந்தாள். பசிக்கயிற்றால் சுண்டிவிடப்பட்டவள், பூட்டியிருந்த வீட்டுக்கதவின்மேல் சாய்ந்தபடி, அம்மாவின் வருகைக்காகக் காத்திருக்கத் தொடங்கினாள்.

**1. உவமை** — **உருவகங்கள்**

| உவமை | உருவகங்கள் |
|---|---|
| 1. மின்னல்களைப் போன்ற சொற்கள் | 1. விழிச்சுடர் |
| 2. அடுக்கிவைக்கப்படாத புத்தகங்களைப் போல | 2. எண்ணவலை |
| 3. நத்தையைப் போல | 3. நீலப்பட்டு உடுத்திய வானம் |
| 4. பூனைக்குட்டியை மடியில் வைத்துக் கொண்டதைப் போல் | 4. பசிக்கயிறு |

**2. உருவகங்களை உவமைகளாக்குதல்.**

| | | |
|---|---|---|
| எண்ணவலை | – வலைஎண்ணம் (வலை போன்ற எண்ணம்) | – வடிவம் |
| விழிச்சுடர் | – சுடர்விழி (சுடர் போன்ற விழி) | – தொழில் |
| பசிக்கயிறு | – கயிறுபசி (கயிறு போன்ற பசி) | – தொழில் |
| நீலப்பட்டு | – பட்டுநீலம் | – நிறம் |

**உவமையை உருவகமாக்கல் :** மின்னல்களைப் போன்ற சொற்கள் – சொற்களாகிய மின்னல்

**3. மின்னல் போன்ற சொற்கள் – வினை**

| | |
|---|---|
| அடுக்கி வைக்கப்படாத புத்தகங்கள் | – வடிவம் |
| நத்தையைப் போல | – வினை |
| நீலப்பட்டு உடுத்தியதைப் போல | – வண்ணம் |
| பூனைக்குட்டியை மடியில் வைத்துக் கொண்டதைப்போல் | – தொழில் |

**கீழ்க்காணும் பத்திகளைப் படித்து மூன்றில் ஒரு பங்காகச் சுருக்கி எழுதுக.**

கல்வி என்றால் என்ன? புத்தகங்களைப் படிப்பதா? பலவிதமானவற்றைக் குறித்த அறிவா? எதுவும் இல்லை. எத்தகைய பயிற்சியின்மூலம் மனவுறுதியின் வேகமும் அதன் வெளிப்படும் தன்மையும் கட்டுப்பாட்டிற்கு உட்பட்டுப் பயன்தரும் வகையில் அமைகிறதோ, அந்தப் பயிற்சிதான் கல்வியாகும். அக்கல்வி வளர்ச்சிக்கு ஒரே ஒரு வழிதான் உண்டு. அதுதான் மனத்தை ஒருமுகப்படுத்துதல் என்பது. கல்வியின் நோக்கம் செய்திகளைப் பற்றிய அறிவைச் சேமிப்பதன்று; மனத்தை ஒருமுகப்படுத்துவதுதான். மனவொருமைப்பாடே கல்வியின் அடிப்படை.

எல்லோரும் தங்கள் அறிவு வளர்ச்சிக்கு அம்முறையைத்தான் பின்பற்றியாக வேண்டும். மனத்தை ஒருமுகப்படுத்தும் அளவுக்கு அறிவும் வளரும். இயற்கையால் மூடப்பட்டிருக்கும் அறிவுச்சுடரைப் பெறுவதற்கு இதுவொன்றே சிறந்த வழியாகும். மனிதன் தன் சக்தியை நூற்றுக்குத் தொண்ணூறு விழுக்காடு வீண் செய்து விடுகிறான். இதனால்தான், அவன் அடிக்கடி தவறுகள் செய்கிறான். பண்புடைய மனத்தைப் பெற்றவன், ஒரு தவறையும் செய்ய மாட்டான்.

மனிதனுக்கும் விலங்கிற்கும் உள்ள முக்கிய வேறுபாடு, மனத்தை ஒருமுகப்படுத்துவதில்தான் இருக்கிறது. எத்துறையிலும் வெற்றி பெறுவது இதைப் பொறுத்துத்தான் இருக்கிறது. இசை, ஓவியம், சிற்பம் முதலிய எல்லாக் கலைகளிலும் சிறப்பாகத் தேர்ச்சி பெறச் செய்வது, மன ஒருமைப்பாடுதான். மேலும், உலகத்தின் புதிர்களை மூடி வைத்திருக்கும் கதவுகளைத் திறக்கக்கூடிய வலிமை மாத்திரம் நாம் பெற வேண்டும். இவ்வலிமையை நமக்கு அளிக்கக்கூடியது, மன ஒருமைப்பாடுதான். அதுவே கல்விக்கு அடிப்படையாகும். (கல்வி – சுவாமி விவேகானந்தர்) (140)

MERCY PUBLICATIONS - CHENNAI

**மாதிரிப்படி**

பயிற்சியின்மூலம் மனவுறுதியைக் கட்டுப்படுத்தி, பயன்தரச் செய்வதே கல்வி. அதனை வளர்க்க, மன ஒருமைப்பாடே அடிப்படை. அறிவை வளர்க்கவும் மன ஒருமைப்பாட்டைப் பின்பற்ற வேண்டும். இயற்கை மூடியுள்ள அறிவுச் சுடரைப்பெற அதுவே சிறந்த வழி. சக்தியை மனிதன் வீணாக்கிவிடுவதால், அடிக்கடி தவறு செய்கிறான். பண்புடை மனம் பெற்றவன், தவறு செய்யான். மனத்தை ஒருமுகப்படுத்தி வெற்றி பெற்று, மனிதன் விலங்கிலிருந்து வேறுபடுகிறான். கலைகளில் தேர்ச்சி பெற, மன ஒருமை தேவை. புதிர்களை விடுவிக்கும் திறம் அதற்கு உண்டு. அதுவே கல்விக்கு அடிப்படை. (55)

**உண்மைப்படி – மன ஒருமையே வெற்றி**

மனவுறுதியைக் கட்டுப்படுத்திப் பயிற்சியால் பயன்தரச் செய்வதே கல்வி. மனவொருமைப்பாடே கல்வியை வளர்க்க அடிப்படை. அறிவு வளர, மனவொருமைப்பாட்டைப் பின்பற்ற வேண்டும். இயற்கை மூடியுள்ள அறிவுச்சுடரைப் பெறச் சிறந்தவழி அதுவே. சக்தியை மனிதன் வீணாக்கி விடுவதால் தவறிழைக்கிறான். மனத்தை ஒருமுகப்படுத்தி வெற்றி பெற்றதால், மனிதன் விலங்கிலிருந்து வேறுபடுகிறான். கலைகளில் தேர்ச்சி பெற, மனஒருமை தேவை. புதிர்களை விடுவிக்கும் திறம் அதற்குண்டு. அதுவே கல்விக்கு அடிப்படை. (45)

**இலக்கிய நயம் பாராட்டுக**

பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான் – புவி
பேணி வளர்த்திடும் ஈசன்;
மண்ணுக்குள்ளே சிலமூடர் – நல்ல
மாதர் அறிவைக் கெடுத்தார்.
கண்கள் இரண்டினில் ஒன்றைக் – குத்திக்
காட்சி கெடுத்திட லாமோ?
பெண்கள் அறிவை வளர்த்தால் – வையம்
பேதைமை யற்றிடும் காணீர்.

– பாரதியார்

**ஆசிரியர் :** இப்பாடலைப் பாடியவர் நற்றமிழ்க் கவிஞர் பாரதியாராவார். இப்பாடலில் சமுதாயத்தில் பெண்கள் கல்வி கற்க வேண்டுவதை வலியுறுத்தியுள்ளார்.

**மையக்கருத்து :** பெண்கள் அறிவை வளர்க்கக் கல்வி அளிக்கவேண்டும். அதனால் உலகமே வெளிச்சம் பெறும் என்பதை மையக் கருத்தாக வைத்துப் பாடியுள்ளார்.

**எதுகைத்தொடை :** அடிதோறும் முதல் சீர்களில் இரண்டாம் எழுத்து பெண்ணுக்கு, மண்ணுக்குள், கண்கள், பெண்கள் என ஒன்றிவந்தது. எனவே, அடி எதுகை அமைந்துள்ளது.

**அணி :** பெண்கள் கல்வி பெற வேண்டும் என்பதனை நயம்பட இயல்பான சொற்களால் விளக்கியுள்ளார். எனவே, இயல்பு நவிற்சி அணி அமைந்துள்ளது. எனினும், “கண்கள் இரண்டினில் ஒன்றைக் குத்திக் காட்சி கெடுத்திடலாமோ?” என வினவுவதால் உவமையும் அமைந்துள்ளது.

**சந்த நயம் :** இப்பாடலில் எதுகை மோனைச் சொற்கள் அமைய எளிய, இனிய சொற்களைக் கொண்டு சுவையுடன் பாடத்தக்க வகையில் பாடியுள்ளமையால், சந்த நயம் வெளிப்படுகிறது.

## மொழியோடு விளையாடு

**எண்ணங்களை எழுத்தாக்குக**



இயற்கையாகப் பெற்ற அறிவால் கற்றுப் பெற வேண்டியது அதிகம்.
கலைகள் கற்போம்; ஓயுதல் செய்யோம்;
நல்ல ஆடை செய்வோம்; நாகரிகம் வளர்ப்போம்;
நடையும் பரப்பும் உணர் ஊர்திகள் செய்வோம்;
சட்டம் கற்போம்; சகலகலை திட்டம் வகுப்போம்;
மண்ணை ஆய்வோம்!
விண்ணையும் ஆய்வோம்!
திறமை, ஊக்கம், நேர்மை மறவாமல் உழைப்போம்!
ஆணும் பெண்ணும் சமம் என உழைப்போம்!
தேடு பொருள் அத்தனையும் தேசியம் செய்வோம்!

MURCY PUBLICATIONS - CHENNAI

www.Padasalai.Net

**மறைந்திருக்கும் சொற்களைக் கண்டுபிடிக்க.**

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| கோ | ஸா | ல் | சு | யா | ம் | மா | ண் | பு | பௌ |
| த் | ர | வ | வ | ஜ | ற | யா | ஜ | வி | த் |
| தா | த | னு | டி | வி | ன் | தி | வே | க் | த |
| ரி | ம | ப | ட் | டி | ம | ண் | ட | ப | ம் |
| ர் | ம் | க | ந | ற் | றி | ணை | ல் | போ | ட |
| னா | ண | ண | ம் | பா | ர் | ப் | ர | த | கூ |
| ட | க | க் | க | ல | யா | ப | ம் | னா | க் |
| லா | க் | கா | த | பா | தி | ள் | ண | ர் | ளை |
| ல் | ல | ய | த் | ர | ர | ளி | ம | கு | ள் |
| க | இ | ன் | பொ | தி | பா | ம் | ச | ர | பி |

**மேலிருந்து கீழ் :** கோத்தாரி, கணக்காயன், சுவடி, பாலபாரதி, வேடல், திண்ணைப்பள்ளி, புவி, போதனார், பௌத்தம்.

**கீழிருந்து மேல் :** கல்லாடனார், இலக்கணம், மதரஸா, பனுவல், பாரதியார், விஜயா, மன்றம், பொத்தகம், சமணம், பிள்ளைக்கூடம்.

**வலமிருந்து இடம் :** பாதி, பிரசம், பொன். **இடமிருந்து வலம் :** பட்டிமண்டபம், நற்றிணை, பொதி.

**சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க**

எ – கா: கால்நடை : **கால்நடை**களை மேய்ச்சல் நிலத்திற்கு ஓட்டிப்போனார்கள்.

சிறிய தொலைவைக் கடக்கக் **கால்நடையாகச்** செல்வது உடலுக்கு நலம் பயக்கும்.

1. **பிண்ணாக்கு** – கடலைப் பிண்ணாக்கு, கால்நடைத் தீவனமாகப் பயன்படும்.
   **பிள்நாக்கு** – பாம்பு, தன் பிண்ணாக்கை (பிள் நாக்கை )வெளியே நீட்டியது.
2. **எட்டுவரை** – அவன் எட்டுவரை தெளிவாக எண்ணினான்.
   **எள்துவரை** – அவன் தன் நிலத்தில் எட்டுவரை (எள் துவரை) விதைத்தான்.
3. **அறிவில்லாதவன்** – அறிவில்லாதவனுக்கு எதையும் பலமுறை சொன்னால்தான் புரியும்.
   **அறிவில் ஆதவன்** – ஆசிரியர் கந்தனைப் பார்த்து, "நீ அறிவில் ஆதவன்" என்று கூறிப் புகழ்ந்தார்.
4. **தங்கை** – தங்கை தன் அண்ணனைப் போற்றிப் பேசினாள்.
   **தம் கை** – பண்புடையோர் தங்கையே (தம்கையே) தமக்குதவி என வாழ்வர்.
5. **வைகை** – வைகை நதியைப் பாரதியார், "தமிழ் கண்டதோர் வைகை" எனப் பாடியுள்ளார்.
   **வை கை** – குழந்தை, தெருவிற்குச் செல்லாமல் இருக்க, "வை கை"யை என்று கூறினாள்.
6. **நஞ்சிருக்கும்** – வாழைப்பழத்தை நஞ்சிருக்கும்போது தின்னக் கூடாது.
   **நஞ்சு இருக்கும்** – பாம்புக்குப் பல்லில் நஞ்சு இருக்கும்.

## நிற்க அதற்குத் தக

**கல்வி நம்மைப் பண்படுத்த வேண்டும். நாம் பண்பட்டிருக்கிறோமா?**

| கல்வியின் விளைவு | என்ன செய்தாய் / செய்வாய்? |
|---|---|
| பெரியவர்களுக்கு மதிப்பளித்தல் | செய்கிறேன் |
| பகுத்தறிவுச் சிந்தனையை வளர்த்தல் | வளர்ப்பேன் |
| பொறுமையைக் கடைப்பிடித்தல் | கடைப்பிடிக்கிறேன் |
| தன்னை அறிதல், தன்னம்பிக்கை வளர்த்தல் | அறியவும் வளர்க்கவும் முயல்கிறேன் |
| சமத்துவம் பேணுதல் | கடைப்பிடிக்கிறேன் |
| உயிர்களிடத்தில் அன்பு செலுத்துதல் | செலுத்துகிறேன் |

MERCY PUBLICATIONS - CHENNAI

**கலைச்சொல் அறிவோம்**

| | | | |
|---|---|---|---|
| கல்விக்குழு | – Education Committee | உள்கட்டமைப்பு | – Infrastructure |
| செம்மொழி | – Classical Language | மூதாதையர் | – Ancestor |
| மதிப்புக்கல்வி | – Value Education | மனஆற்றல் | – Mental Ability |

## உள்நிலைத் தேர்வு

நேரம் : 40 நிமிடங்கள் மதிப்பெண் : 25

**I. பலவுள் தெரிக.** **8 × 1 = 10**

1. ஏடு, சுவடி, பொத்தகம், பனுவல் முதலிய சொற்கள் தரும் பொருள் ______ என்பதாகும்.
   அ) நூல் ஆ) ஓலை இ) எழுத்தாணி ஈ) தாள்
2. கீழ்உள்ளவற்றைப் பொருத்தி விடை காண்க.
   அ. கொட்டும் பூக்களை – 1. குறிக்கச் சொல்கிறார்கள்
   ஆ. தியானிக்கும் நேரத்தை – 2. ஓவியமாகத் தீட்டச் சொல்கிறார்கள்
   இ. எறும்புகளின் வேகத்தை – 3. கவிதை எழுதச் சொல்கிறார்கள்
   ஈ. மழைத்துளிகளின் வடிவத்தை – 4. எண்ணச் சொல்கிறார்கள்
   – 5. அளக்கச் சொல்கிறார்கள்
   1. அ – 2, ஆ – 1, இ – 4, ஈ – 3. 2. அ – 1, ஆ – 3, இ – 5, ஈ – 2.
   3. அ – 3, ஆ – 2, இ – 1, ஈ – 5. 4. அ – 4, ஆ – 1, இ – 5, ஈ – 2.
3. 9 அடிச் சிற்றெல்லையும் 12 அடிப் பேரெல்லையும் கொண்ட நூல் ______.
   அ) நற்றிணை ஆ) குறுந்தொகை இ) அகநானூறு ஈ) ஐங்குறுநூறு
4. தொல்காப்பியத்திலுள்ள மொத்த இயல்களின் எண்ணிக்கை ______.
   அ) 9 ஆ) 3 இ) 27 ஈ) 2
5. கீழ்க்காணும் விருதுகளை வரிசைப்படுத்துக.
   i. பத்மஸ்ரீ ii. பத்ம விபூஷன் iii. பத்மபூஷன் iv. பாரத ரத்னா
   அ) iv, iii, ii, i ஆ) iv, ii, iii, i இ) iv, i , ii, iii ஈ) iv, ii, i, iii
6. ‘புலிபோலப் பாய்ந்தான்’ என்பது ______ அடிப்படையில் தோன்றிய உவமை.
   அ) நிறம் ஆ) வடிவம் இ) பயன் ஈ) தொழில்
7. செம்மொழி – கலைச்சொல்லாக்குக.
8. Philosophy ஆங்கிலச் சொல்லுக்கு இணையான தமிழ்ச்சொல்லைக் கண்டறிந்து எழுதுக.

**II. எவையேனும் நான்கனுக்கு விடை தருக.** **4 × 2 = 8**

9. மருந்தாகித் தப்பா மரத்தற்றால் செல்வம்
   பெருந்தகை யான்கண் படின். – இக்குறட்பாவின் உவமையைப் பொருளோடு பொருத்துக.
10. உ.வே.சா. அவர்கள் பயின்ற கல்விமுறை குறித்துக் குறிப்பு வரைக.
11. இங்கே ஐம்பதாண்டு வேம்பு
    கோடையில் கொட்டும் பூக்களை
    எண்ணச் சொல்கிறார்கள் – எண்ணச் சொல்கிறவர்கள் யார்? எண்ணுபவர்கள் யார்?
12. கொழுஞ்சோறு – புணர்ச்சிவிதி கூறுக.?
13. வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.
    பள்ளிகூடங்களில் பயிலும் மாணவர்கள், தாய்மொழி வழியாகவே அனைத்துத் துறை கல்வியையும் பெறுதலே முறையானதென்றும், அத்தகையக் கல்வியேப் பயனளிக்குமென்றும் போப் கருதினார்.

MERCY PUBLICATIONS - CHENNAI

www.Padasalai.Net

**III. எவையேனும் இரண்டனுக்கு விடை தருக. 2 × 4 = 8**

14. "ஏவல் மறுக்கும் சிறுவிளை யாட்டி
அறிவும் ஒழுக்கமும் யாண்டுணர்ந் தனள்கொல்" – இடம் சுட்டிப் பொருள் விளக்குக.

15. இலக்கிய நயம் பாராட்டுக. (ஏற்புடைய நயங்களில் எவையேனும் நான்கனை எழுதவும்)

பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான் – புவி
பேணி வளர்த்திடும் ஈசன்;
மண்ணுக்குள்ளே சிலமூடர் – நல்ல
மாதர் அறிவைக் கெடுத்தார்.
கண்கள் இரண்டினில் ஒன்றைக் – குத்திக்
காட்சி கெடுத்திட லாமோ?
பெண்கள் அறிவை வளர்த்தால் – வையம்
பேதைமை யற்றிடும் காணீர்.

– பாரதியார்

16. மாணவர் பாடம் கேட்கும் முறைமை குறித்துத் தொல்காப்பியம் கூறும் செய்திகளைத் தொகுத்தெழுதுக.

17. உள்ளுறைக்கும் இறைச்சிக்கும் உள்ள வேறுபாட்டினைச் சான்றுகளுடன் ஆய்க.

**IV. பின்வரும் வினாக்களில் ஏதேனும் ஒன்றனுக்கு விரிவான விடை தருக. 1 × 6 = 6**

18. பௌத்தக் கல்வி, சமணக் கல்வி, மரபுவழிக் கல்வி முறைகளால் தமிழகக் கல்விமுறையில் ஏற்பட்ட பல்வேறு மாறுதல்களை விவரிக்க.

19. தலைவியின் இல்லறப் பாங்கினைப் பற்றிச் செவிலித்தாய் நற்றாயிடம் வியந்து கூறுவன யாவை?

20. பாரதியின் இதழாளர் முகம் குறித்து நீங்கள் அறிவன யாவை?

# இயல் – 5

## உரைநடை உலகம்

## ஆனந்தரங்கர் நாட்குறிப்பு

### குறுவினா

**1. ஆனந்தரங்கரின் வருணனைத் திறனுக்கு ஓர் எடுத்துக்காட்டுத் தருக.**

★ "கப்பல்கள் வருகின்ற செய்தியைக் கேட்டதும், நஷ்டப்பட்ட திரவியம் மீண்டும் கிடைத்தாற்போலவும்,
★ மரணமுற்ற உறவினர்கள் உயிர்பெற்று எழுந்து வந்ததுபோலவும்,
★ நீண்டநாள் தவமிருந்து புத்திரப் பாக்கியம் கிட்டினாற்போலவும்,
★ தேவாமிர்தத்தைச் சுவைத்தது போலவும் மக்கள் சந்தோஷப்பட்டார்கள் எனப் பதிவு செய்துள்ளார்.
★ இதனை ஆனந்தரங்கரின் வருணனைத் திறனுக்குச் சிறந்த எடுத்துக்காட்டாகக் கொள்ளலாம்.

### கூடுதல் வினாக்கள்

**2. 'உலக நாட்குறிப்பு இலக்கியத்தின் தந்தை' என அழைக்கப்படுபவர் யார்?**

★ ஆங்கிலேயக் கடற்படையில் பணியாற்றிய சாமுவேல் பெப்பிசு, 'உலக நாட்குறிப்பு இலக்கியத்தின் தந்தை' என அழைக்கப்படுகிறார்.

**3. முகலாய மன்னர் கால நாட்குறிப்புப் பற்றி அறியும் செய்திகள் யாவை?**

★ முகலாய மன்னர்களுள் பாபர் காலம்முதல், நாட்குறிப்பு எழுதும் வழக்கம் இருந்துள்ளது. ஔரங்கசீப் ஆட்சியின்போது, இம்முறை தடை செய்யப்பட்டது.

**4. நாட்குறிப்பு என்பது யாது? அதன் மூலம் எது?**

★ ஒருவரின் அன்றாட நிகழ்வுகளையோ, பணிகளையோ பதிவு செய்யும் ஏடு, 'நாட்குறிப்பு' எனப்படும். இலத்தீன் மொழியின் மூலச்சொல்லான 'டைஸ்' என்பதில் உருவான 'டைரியம்' என்பது, 'டைரி'க்கு மூலச் சொல்லாகும்.

MERCY PUBLICATIONS - CHENNAI

5. **ஆனந்தரங்கர் நாட்குறிப்பு வரலாற்றுக் கருவூலமாக எவ்வகையில் திகழ்கிறது?**

★ ஆனந்தரங்கரின் நாட்குறிப்பு, இருபத்து ஐந்து ஆண்டுகாலத் தென்னிந்திய வரலாற்றை வெளிப் படுத்துகிறது. அக்காலப் பிரெஞ்சு அரசு பற்றி அறிய உதவும் சிறந்த வரலாற்றுக் கருவூலமாகவும் திகழ்கிறது.

6. **ஆனந்தரங்கர் வாழ்வில் உயர்வு பெற்றதை விளக்குக.**

★ உழைப்பு, உண்மை, உறுதிமிக்க ஆனந்தரங்கர், பிரெஞ்சு ஆளுநர் 'துய்ப்ளே'யின் காலத்தில் தலைமைத் 'துவிபாஷி'யாகப் பணியாற்றினார். பிரெஞ்சு ஆட்சியரின் நம்பிக்கைக்கு உரியவராகவும், அரசியல் செல்வாக்கு மிக்கவராகவும் ஆனந்தரங்கர் திகழ்ந்தது, வாழ்வில் பெற்ற உயர்வாகும்.

7. **ஆனந்தரங்கர் தம் நாட்குறிப்பில் எவற்றைப் பதிவு செய்துள்ளார்?**

★ தமிழ்நாட்டுப் பண்பாடு, சமயம், சாதி, நீதி, வாணிகம், நம்பிக்கைகள் முதலான கூறுகள் அடங்கிய நிகழ்வுகளைத் தம் நாட்குறிப்பில் ஆனந்தரங்கர் பதிவு செய்துள்ளார்.

8. **ஆனந்தரங்கர் தம் நாட்குறிப்பில் ஒவ்வொரு நாள் நிகழ்விற்கும் எவ்வெவற்றைக் குறிப்பிட்டார்?**

★ ஆனந்தரங்கர் தம் நாட்குறிப்பில் ஒவ்வொரு நாள் நிகழ்வுக்கும் உரிய ஆண்டு, திங்கள், நாள், கிழமை, அந்நாளின் நேரம், நிகழ்விடம் ஆகியவற்றைக் குறிப்பிட்டபின் செய்திகளை எழுதியுள்ளார்.

9. **ஆனந்தரங்கர் நாட்குறிப்புக் குறித்து உ.வே.சா. கூறிய கருத்து யாது?**

★ "நெருப்பினாலும் வெள்ளத்தினாலும் தமிழ்த்தாய் பாதிக்கப்பட்டாலும், அவளுடைய ஆபரணங்கள், தொலைவில் உள்ள நகரமான பாரீசில் மிகவும் பாதுகாக்கப்பட்டுப் பராமரிக்கப்படுகின்றன" என்று, உ.வே.சா., ஆனந்தரங்கர் நாட்குறிப்புக் குறித்துக் கூறியுள்ளார்.

10. **மகாகவி பாரதியார் ஆனந்தரங்கர் நாட்குறிப்புக் குறித்துக் கூறியுள்ள செய்தி யாது?**

★ "அந்தக் காலத்தில் நடந்த செய்திகளை எல்லாம் ஒன்று தவறாமல் நல்ல பாஷையில் அன்றாடம் விஸ்தாரமாக எழுதி வைத்திருக்கிறார்" என்று, ஆனந்தரங்கர் நாட்குறிப்புக் குறித்து, மகாகவி பாரதியார் கூறியுள்ளார்.

11. **உ.வே.சா. பயின்ற கல்விமுறை குறித்துக் குறிப்பு வரைக.**

★ மரபுவழிக் கல்வி முறைகளுள் ஒன்றான உயர்நிலைக் கல்விமுறையில் உ.வே.சா. பயின்றார். இக்கல்விமுறை, தனிநிலையில் புலவர்களிடத்துக் கற்கும் உயர்நிலைக் கல்விமுறை என்னும் வகைமைக்குள் அடங்கும்.

★ மகாவித்வான் மீனாட்சி சுந்தரம்பிள்ளையிடம், உ.வே.சா. பயின்ற கல்விமுறை இம்முறையாகும்.

## சிறுவினா

1. **ஆனந்தரங்கர், ஒரு வரலாற்று ஆசிரியர் என்பதைப் பாடப் பகுதிவழி எடுத்துக்காட்டுக.**

★ ஆனந்தரங்கர் நாட்குறிப்பில், அவர் காலப் புதுவை, தமிழகம், தென்னிந்திய நிகழ்வுகளைப் பதிவு செய்துள்ளார்.

★ பிரெஞ்சு ஆளுநர் டூமாஸ், நாணய அச்சடிப்பு உரிமை பெற்றது,

★ பிரெஞ்சுக் கப்பல் தளபதி லெபூர் தொனே, சென்னையைக் கைப்பற்றியது,

★ சினமுற்ற ஆற்காடு நவாபு, தம் மூத்த மகனை அனுப்பிப் பிரெஞ்சு அரசை எதிர்த்துப் போரிட்டது.

★ தேவனாம் பட்டணத்தைக் கைப்பற்றப் பிரெஞ்சு அரசு நடத்திய போர்,

★ புகழ்பெற்ற ஆம்பூர்ப் போர், தஞ்சைக் கோட்டை முற்றுகை, இராபர்ட் கிளைவ் படையெடுப்பு எனப் பல வரலாற்றுச் செய்திகளை நேரில் கண்டு உரைப்பதுபோல், நாட்குறிப்பில் எழுதி வைத்துள்ளார். இவற்றை நோக்க, ஆனந்தரங்கர் ஒரு வரலாற்று ஆசிரியராகத் திகழ்வது புலப்படும்.

## கூடுதல் வினாக்கள்

2. **ஆனந்தரங்கர் நாட்குறிப்பின் சிறப்பு யாது?**

★ ஆனந்தரங்கர் நாட்குறிப்பு, பன்னிரண்டு தொகுதிகளாகத் தமிழில் வெளிவந்துள்ளன.

★ ஒவ்வொரு நாள் நிகழ்வுக்கும் ஆண்டு, திங்கள், நாள், கிழமை, நேரம், நிகழ்விடம் ஆகியவற்றைக் குறிப்பிட்ட பின்னரே, செய்திகளை எழுதியுள்ளார்.

★ ஆனந்தரங்கர் எழுதிய நாட்குறிப்பே, இந்தியாவின் முதன்மையான நாட்குறிப்பாகும். ஆனந்தரங்கர் நாட்குறிப்புகள், தென்னிந்தியாவின் 25 ஆண்டுகால வரலாற்றை வெளிப்படுத்துகின்றன.

★ சிறந்த வரலாற்றுக் கருவூலமாகவும், ஆவணமாகவும், இலக்கியமாகவும் திகழ்கின்றன.

MERCY PUBLICATIONS - CHENNAI

www.Padasalai.Net

**3. ஆனந்தரங்கரின் இறுதிக்கால நாட்குறிப்புகளில் இடம் பெற்ற செய்திகளை விவரிக்கவும்.**

★ புதுச்சேரியை ஆங்கிலேயர் முற்றுகை இட்டதையும் புதுச்சேரியின் வீழ்ச்சியையும் ஆனந்தரங்கரின் இறுதிக் கால நாட்குறிப்புகள் பேசுகின்றன. புதுச்சேரியைத் தாக்க 1760 பிப்ரவரியில் ஆங்கிலக் கப்பல்கள் வந்தன.

★ செஞ்சியைச் சுற்றியுள்ள பகுதிகளை வென்ற ஆங்கிலத் தளபதி புதுச்சேரியில் நெருங்கியது, ஆங்கிலப் படைகள் சாரம்வரை வந்துவிட்டதைப் பொதுமக்கள் வேடிக்கைப் பார்த்தது, புதுச்சேரியில் பீதி நிலவும் வகையில் குண்டு சாலையை ஆங்கிலேயர் பிடித்தது,

★ தேவனாம் பட்டணத்தில் மேலும்மேலும் ஆங்கிலத் துருப்புகள் கப்பலில் வந்து இறங்கியது, புதுச்சேரியைச் சுற்றியுள்ள பகுதிகள் அனைத்தையும் ஆங்கிலேயர் கைப்பற்றியது என்னும் செய்திகளை எல்லாம் தம் குறிப்பேட்டில் ஆனந்தரங்கர் எழுதிவைத்துள்ளார். இவை இறுதிக்கால நாட்குறிப்புகளாகும்.

**4. ஆனந்தரங்கர் 'இந்தியாவின் பெப்பிசு' என அழைக்கப்படுவது ஏன்?**

★ 'உலக நாட்குறிப்பு இலக்கியத்தின் தந்தை' என அழைக்கப்படுபவர், 'சாமுவேல் பெப்பிசு' ஆவார்.

★ இவர் ஆங்கிலேயக் கடற்படையில் பணியாற்றியவர். இரண்டாம் சார்லஸ் மன்னர் காலத்து நிகழ்வுகளை இவர் நாட்குறிப்பாகப் பதிவு செய்துள்ளார். இதுவே முதல் நாட்குறிப்பு.

★ இவரைப் போல் ஆனந்தரங்கரும் தம் கால நிகழ்வுகளை, நாட்குறிப்பாக எழுதி வைத்துள்ளார். இந்நாட் குறிப்பு, இந்தியாவின் முதன்மையான நாட்குறிப்பாகும்.

★ எனவே, ஆனந்தரங்கர், 'இந்தியாவின் பெப்பிசு' என அழைக்கப்படுகிறார்.

## நெடுவினா

**1. "தாம் வாழ்ந்த காலகட்டத்தின் நாகரிகப் புதையலாக நாட்குறிப்பைப் பயன்படுத்தியவர் ஆனந்தரங்கர்" என்பதை நிறுவுக.**

**காலப்பெட்டகமான நாட்குறிப்பு :**

ஆனந்தரங்கர் நாட்குறிப்பு, தென்னிந்திய வரலாற்றை வெளிப்படுத்துவதாகவும், அக்காலப் பிரெஞ்சு அரசு பற்றி அறிய உதவும் வரலாற்றுப் பேழையாகவும் உள்ளது. அந்த நாட்குறிப்பு நிகழ்வு, நடைபெற்ற ஆண்டு, மாதம், நாள், கிழமையோடு 12 தொகுதிகளாக வெளிவந்துள்ளது.

**அரசியல் நிகழ்வுகள் :**

அக்காலத்தில் நாணயம் அச்சடிக்க உரிமை பெற்றது. பிரெஞ்சு – ஆங்கிலப்படைகள் தங்களுக்கு இடையே நாடு பிடிக்கப்பட்டது. ஆற்காடு நவாபின் செயல்பாடுகள் முதலான அரசியல் நிகழ்வுகளையும் நாட்குறிப்பில் பதித்துள்ளார். 18ஆம் நூற்றாண்டில் தமிழகத்தின் சமூகத்தில் நிலவிய பண்பாடு, சமயம், சாதி, நீதி, வாணிகம், நம்பிக்கை முதலான பல்வேறு கூறுகளை உள்ளடக்கியதாக ஆனந்தரங்கர், தம் நாட்குறிப்பைப் பதிவு செய்துள்ளார்.

**சமுதாய செய்தி :**

நீதி வழங்குதல், பல்வேறு காரணங்களுக்காக மரணதண்டனை வழங்கல், காதறுத்தல், சாட்டையடி, கிடங்கில் போடுதல் முதலிய அக்காலச் செயல்களைப் பற்றிப் பதிவு செய்துள்ளார். தொடர்ந்து வீடுகளில் திருடியவர்களைப் பிடித்துத் தலைவனைக் கடைத்தெருவில் தூக்கிலிட்டது. ஒருவருக்குக் காதறுத்து, ஐம்பது கசையடி கொடுத்தது ஆகியவற்றை எழுதியுள்ளார். பிரெஞ்சுக் கிழக்கிந்தியக் கழகம், வணிகர் பலர்மூலம் கடல் வணிகம் செய்ததைத் தெளிவுபட எழுதியுள்ளார். ஐரோப்பியக் கப்பல்கள் ஆறு மாதம் பயணம் செய்து புதுவை வந்ததும், பீரங்கி முழங்கி வரவேற்றதையும் ஆனந்தரங்கர் நாட்குறிப்பால் அறியமுடிகிறது.

**வர்த்தகச் செய்தி :**

துணி வர்த்தகம் செய்த முறை, புதுச்சேரியில் நாணயம் அச்சிட்ட செய்தி, 1742இல் வீசிய பெருங்காற்று, அதனால் மக்கள் பெற்ற துயர், வாடிய மக்களுக்கு ஒழுகரை கனகராயர் பெருஞ்சோறு அளித்தது, 1745இல் கப்பல் வருகை இன்மையால் புதுவையில் ஏற்பட்ட பொருளாதாரத் தட்டுப்பாடு, அதை நீக்க லெபூர் தொனேவின் ஒன்பது கப்பல்கள் வந்தது, மக்கள் அடைந்த மகிழ்ச்சி என, அனைத்தையும் பதித்துள்ளார். இவற்றை எல்லாம் நோக்கத் தம் நாட்குறிப்பை ஆனந்தரங்கர், தாம் வாழ்ந்த காலத்தின் நாகரிகப் புதையலாகப் பயன்பட வைத்துள்ளமை புலப்படும்.

MERCY PUBLICATIONS - CHENNAI

## பலவுள் தெரிக

1. பொருந்தாததைத் தேர்க.
   அ) ஆனந்தரங்கர் எழுதிய நாட்குறிப்புகள், பன்னிரண்டு தொகுதிகளாக வெளிவந்துள்ளன.
   ஆ) ஒவ்வொரு நாள் நிகழ்வுக்கும் ஆண்டு, திங்கள், நாள், கிழமை, நேரம், நிகழ்விடம் ஆகியவற்றைக் குறிப்பிடாமல் செய்திகளை எழுதியுள்ளார்.
   இ) ஆனந்தரங்கரின் நாட்குறிப்பு, 18ஆம் நூற்றாண்டின் தமிழ்ச் சமூகத்தைப் படம்பிடித்துக் காட்டுவதாக அமைந்துள்ளது.
   ஈ) ஐரோப்பாவிலிருந்து இந்தியாவை அடையக் கப்பல்களுக்கு எட்டுத் திங்கள்கள் தேவைப்பட்டன.
   i) அ, ஆ  ii) ஆ, இ  iii) அ, இ  iv) ஆ, ஈ
   **விடை :** iv) ஆ, ஈ
2. ஆனந்தரங்கருக்குத் தொடர்பில்லாதது எது?
   அ) மொழிபெயர்ப்பாளர்  ஆ) இந்தியாவின் பெப்பிசு
   இ) தலைமைத் துவிபாஷி  ஈ) உலக நாட்குறிப்பு இலக்கியத்தின் தந்தை
   **விடை :** ஈ) உலக நாட்குறிப்பு இலக்கியத்தின் தந்தை

## கூடுதல் வினாக்கள்

3. 18ஆம் நூற்றாண்டின் புதுவை வரலாற்றை அறிந்து கொள்ளக் கிடைத்த அரிய பெட்டகம் ______.
   அ) துய்ப்ளே நாட்குறிப்பு  ஆ) வாஸ்கோடகாமா நாட்குறிப்பு
   இ) சாமுவேல் பெப்பிசு நாட்குறிப்பு  ஈ) ஆனந்தரங்கர் நாட்குறிப்பு
   **விடை :** ஈ) ஆனந்தரங்கர் நாட்குறிப்பு
4. நாட்குறிப்பை ஆங்கிலத்தில் ______ என அழைப்பர்.
   அ) டைஸ்  ஆ) டைரியம்  இ) டைரி  ஈ) எபிமரிடிஸ்
   **விடை :** இ) டைரி
5. நாட்குறிப்புகளின் முன்னோடியாகத் திகழும் ‘EPHEMERIDES’ என்பது ______.
   அ) ஆங்கிலக் குறிப்பேடு  ஆ) இலத்தீன் குறிப்பேடு
   இ) கிரேக்கக் குறிப்பேடு  ஈ) பிரெஞ்சுக் குறிப்பேடு
   **விடை :** இ) கிரேக்கக் குறிப்பேடு
6. ‘EPHEMERIDES’ என்பதற்கு, ______ என்பது பொருள்.
   அ) ஒரு மாதத்துக்கான முடிவு  ஆ) ஒரு நாளுக்கான முடிவு
   இ) வரலாறு  ஈ) ஓர் ஆண்டுக்கான முடிவு
   **விடை :** ஆ) ஒரு நாளுக்கான முடிவு
7. உலக நாட்குறிப்பு இலக்கியத்தின் தந்தை ______.
   அ) சாமுவேல் பெப்பிசு  ஆ) கீட்ஸ்  இ) ஜான்ரஸ்கின்  ஈ) ஜி. யு. போப்
   **விடை :** அ) சாமுவேல் பெப்பிசு
8. முகலாய மன்னர்களிடையே நாட்குறிப்பு எழுதும் வழக்கம், ______ காலம்முதல் வழக்கத்தில் இருந்தது.
   அ) அக்பர்  ஆ) ஔரங்கசீப்  இ) பாபர்  ஈ) சலீம்
   **விடை :** இ) பாபர்
9. ஆனந்தரங்கரின் நாட்குறிப்பு, தென்னிந்தியாவின் ______ ஆண்டுகால வரலாற்றை வெளிப்படுத்துகிறது.
   அ) பத்து  ஆ) பதினைந்து  இ) இருபத்தைந்து  ஈ) முப்பது
   **விடை :** இ) இருபத்தைந்து
10. ஆனந்தரங்கர், தமிழில் எழுதிய நாட்குறிப்பு, ______ தொகுதிகளாக வெளிவந்துள்ளன.
    அ) பத்து  ஆ) இருபத்தைந்து  இ) பன்னிரண்டு  ஈ) பதினெட்டு
    **விடை :** இ) பன்னிரண்டு

MERCY PUBLICATIONS - CHENNAI

www.Padasalai.Net

11. சென்னைக் கோட்டையை 1758இல் முற்றுகையிட்டுத் தாக்கியது ______.
அ) துய்ப்ளே ஆ) மகபூஸ்கான் இ) லல்லி ஈ) லெபூர்தொனே
**விடை :** இ) லல்லி

12. 1758இல் சென்னைக் கோட்டையின் கவர்னராக இருந்தவர் ______.
அ) இராபர்ட் கிளைவ் ஆ) துய்ப்ளே இ) மன்றோ ஈ) மேஸ்தர்பிகட்
**விடை :** ஈ) மேஸ்தர்பிகட்

13. புதுச்சேரியிலிருந்து மணிலாவுக்குச் சென்ற கப்பலில் அழகப்பன், ______ பணியாற்றினார்.
அ) ஆளுநராக ஆ) பணியாளாக இ) மாலுமியாக ஈ) எடுபிடியாக
**விடை :** இ) மாலுமியாக

14. ஐரோப்பாவிலிருந்து கப்பல்கள் இந்தியாவை அடைய, ______ திங்கள்களானது.
அ) இரண்டு ஆ) மூன்று இ) ஆறு ஈ) எட்டு
**விடை :** இ) ஆறு

15. நாணயம் அச்சிடும் உரிமையை நிஜாமிடமிருந்து பெற்றது ______.
அ) ஆங்கில அரசு ஆ) பிரெஞ்சு அரசு
இ) ஆங்கில வணிகக்கழகம் ஈ) பிரெஞ்சு வணிகக்கழகம்
**விடை :** ஈ) பிரெஞ்சு வணிகக்கழகம்

16. வணிகர் பலரைப் பங்குதாரராகக் கொண்ட கூட்டு நிறுவனம் ______.
அ) ஆங்கிலக் கிழக்கிந்தியக் கழகம் ஆ) போர்ச்சுகீசியக் கிழக்கிந்தியக் கழகம்
இ) டச்சுக் கிழக்கிந்தியக் கழகம் ஈ) பிரெஞ்சுக் கிழக்கிந்தியக் கழகம்
**விடை :** ஈ) பிரெஞ்சுக் கிழக்கிந்தியக் கழகம்

17. புதுச்சேரியில் எட்டு மாற்றுக்குக் குறைவாக வராக நாணயங்களை வைத்திருப்பது, தண்டனைக்குரிய குற்றம் என அறிவித்தது ______.
அ) ஆங்கில மன்னர் ஆ) ஆற்காட்டு நவாப்
இ) பிரெஞ்சு மன்னர் ஈ) புதுவை கவர்னர்
**விடை :** இ) பிரெஞ்சு மன்னர்

18. நாட்குறிப்பு எழுதுவது தடை செய்யப்பட்டது, ______ காலத்தில்.
அ) பாபர் ஆட்சி ஆ) ஔரங்கசீப் ஆட்சி
இ) பிரெஞ்சு ஆட்சி ஈ) ஆங்கில ஆட்சி
**விடை :** ஆ) ஔரங்கசீப் ஆட்சி

19. இந்தியாவுக்குக் கடல் வழியைக் கண்டுபிடித்த மாலுமி வாஸ்கோடகாமா, ______ மாலுமி.
அ) முகலாய ஆ) ஆங்கிலேய இ) போர்ச்சுக்கீசிய ஈ) பிரெஞ்சு
**விடை :** இ) போர்ச்சுக்கீசிய

20. பிரெஞ்சு அரசுபற்றி அறிய உதவும் வரலாற்றுக் கருவூல ஆவணமாக இருப்பது ______.
அ) வாஸ்கோடகாமா நாட்குறிப்பு ஆ) சாமுவேல் பெப்பிசு நாட்குறிப்பு
இ) ஆனந்தரங்கர் நாட்குறிப்பு ஈ) பாபர் நாட்குறிப்பு
**விடை :** இ) ஆனந்தரங்கர் நாட்குறிப்பு

21. ஆனந்தரங்கர், பிரெஞ்சு ஆளுநர் ______காலத்தில், தலைமைத் துவிபாஷியாகப் பணியாற்றினார்.
அ) கியோம் ஆந்த்ரே ஆ) பிரான்சுவா மார்த்தேன்
இ) துய்ப்ளே ஈ) லெபூர்தொனே
**விடை :** இ) துய்ப்ளே

22. ஆனந்தரங்கரைப் பரங்கிப்பேட்டை நெசவுச்சாலைக் கிடங்குத் தலைவராக நியமித்தவர் _____.
அ) கியோம் ஆந்த்ரே ஆ) அலனுவார் இ) துய்ப்ளே ஈ) லெபூர்தொனே
**விடை :** ஆ) அலனுவார்

23. நாணய அச்சடிப்பு உரிமை பெற்ற பிரெஞ்சு ஆளுநர் _____.
அ) துய்ப்ளே ஆ) அலனுவார் இ) லெபூர்தொனே ஈ) டூமாஸ்
**விடை :** ஈ) டூமாஸ்

MERCY PUBLICATIONS - CHENNAI

24. புதுச்சேரியைப் பெருங்காற்றுச் சூறையாடிய ஆண்டு _____.
அ) 1736 ஆ) 1993 இ) 1745 ஈ) 1717
விடை : இ) 1745

25. புதுவையைக் காப்பாற்ற ஆங்கிலேயக் கப்பல்கள், துருப்புகளை மேலும்மேலும் இறக்கிய இடம் _____.
அ) செஞ்சி ஆ) சாரம் இ) தேவனாம்பட்டணம் ஈ) புதுவை
விடை : இ) தேவனாம்பட்டணம்

26. செய்திகளை ஒன்று தவறாமல் சித்திரகுப்தனைப்போல் ஆனந்தரங்கர் நாட்குறிப்பில் எழுதி வைத்துள்ளார் எனக் குறிப்பிட்டவர் _____.
அ) திருவேங்கடம் ஆ) நைனியப்பர் இ) ஆளுநர் துய்ப்ளே ஈ) மகாகவி பாரதியார்
விடை : ஈ) மகாகவி பாரதியார்

27. புதுச்சேரியிலிருந்து மணிலா சென்ற கப்பலில் மாலுமியாகப் பணியாற்றியவர் _____.
அ) திருவேங்கடம் ஆ) கனகராயர் இ) அழகப்பன் ஈ) நைனியப்பர்
விடை : இ) அழகப்பன்

28. 'இந்தியாவின் பெப்பிசு' என்று அழைக்கப்படுபவர்
அ) சாமுவேல் ஆ) ஆனந்தரங்கர் இ) துய்ப்ளே ஈ) இராபர்ட் கிளைவு
விடை : ஆ) ஆனந்தரங்கர்

29. கீழ்க்காண்பவற்றைப் பொருத்திச் சரியான விடையைத் தெரிவு செய்க.
ஆனந்தரங்கர் பற்றிய நூல்கள் – எழுதியோர்
அ) ஆனந்தரங்கர் கோவை ஆ) ஆனந்தரங்கர் பிள்ளைத்தமிழ் இ) வானம் வசப்படும்
1. புலவரேறு அரிமதி தென்னகன் 2. பிரபஞ்சன்
3. தியாகராய தேசிகர் 4. சாமுவேல் பெப்சு
1. அ – 1, ஆ – 2, இ – 4 2. அ – 3, ஆ – 1, இ – 2
3. அ – 4, ஆ – 3, இ – 2 4. அ – 3, ஆ – 4, இ – 1
விடை : 2. அ – 3, ஆ – 1, இ – 2

**விடைக்கேற்ற வினா அமைக்க.**

1. ஆனந்தரங்கர் எழுதிய நாட்குறிப்புகள் 12 தொகுதிகளாகத் தமிழில் வெளிவந்துள்ளன.
வினா : ஆனந்தரங்கர் எழுதிய நாட்குறிப்புகள் எத்தனை தொகுதிகளாகத் ஆனந்தரங்கர் எழுதிய நாட்குறிப்புகள் வெளிவந்துள்ளன?
2. உலக நாட்குறிப்பு இலக்கியத்தின் தந்தை என அழைக்கப்படுபவர், சாமுவேல் பெப்பிசு ஆவார்.
வினா : உலக நாட்குறிப்பு இலக்கியத்தின் தந்தை என அழைக்கப்படுபவர் யார்?
3. பண்பாடு, சமயம், சாதி, நீதி, வணிகம், நம்பிக்கைகள் முதலான பல்வேறு கூறுகள் அடங்கிய நிகழ்வுகளை, ஆனந்தரங்கர் பதிவு செய்துள்ளார்.
வினா : ஆனந்தரங்கர் எவ்வெக் கூறுகள் அடங்கிய நிகழ்வுகளைப் பதிவு செய்துள்ளார்?
4. ஆனந்தரங்கர் நாட்குறிப்பில் பெரும்பகுதி வணிகச் செய்திகளையே விவரித்துள்ளது.
வினா : ஆனந்தரங்கர் நாட்குறிப்பில் பெரும்பகுதி எச்செய்திகளையே விவரித்துள்ளது?
5. பிரெஞ்சுக் கிழக்கிந்தியக் கழகம், வணிகர் பலரைப் பங்குதாரராகக் கொண்ட கூட்டு நிறுவனம்.
வினா : பிரெஞ்சுக் கிழக்கிந்தியக் கழகம் எவரைப் பங்குதாரராகக் கொண்டு கூட்டு நிறுவனம்?
6. நாணயம் அச்சிடும் உரிமையை நிஜாமிடமிருந்து பிரெஞ்சு வணிகக் கழகம் பெற்றது.
வினா : புதுச்சேரியில் பிரெஞ்சு வணிகக் கழகம் நிஜாமிடமிருந்து எவ்வுரிமையைப் பெற்றது?
7. மாலைப்பொழுதில் வீசிய பெருங்காற்று, புதுச்சேரியைச் சூறையாடியது.
வினா : எப்பொழுது வீசிய பெருங்காற்று, புதுச்சேரியைச் சூறையாடியது எது?
8. புதுச்சேரிக்குக் கப்பல்களின் வருகை தடைப்பட்டுப் பெரும் பொருளாதாரத் தட்டுப்பாடு தோன்றியது.
வினா : எவற்றின் வருகைத் தடைப்பட்டுப் புதுச்சேரிக்குப் பெரும் பொருளாதாரத் தட்டுப்பாடு தோன்றியது?

MERCY PUBLICATIONS - CHENNAI

www.Padasalai.Net

# கவிதைப்பேழை

## 1. சீறாப்புராணம்

(உமறுப்புலவர்)

### குறுவினாக்கள்

**1. மதீனா நகரம் ஒரு மாளிகை நகரம் என்னும் கூற்றினை உறுதிப்படுத்துக.**

★ மேருமலைபோல் மதீனா நகரின் மேல்மாடங்கள் உயர்ந்திருந்தன.

★ அங்காடிகள் நிறைந்த தெருக்களில் எழுந்த பேரொலி, பெருங்கடல்போல் இருந்தது.

★ மதீனா நகரின் வீதிகள், பிரபஞ்சம்போல் பரந்து விரிந்திருந்தன.

★ அத்துடன் பெரிய மாளிகைகள் சிறிதும் இடைவெளியின்றி நெருக்கமாக அமைந்திருந்தன.

★ தோரணங்களும், கொடிகளும் கட்டப்பட்டுப் பொன்னகர்போல் பொலிந்தது.

★ அதனால், மதீனா நகரம், ‘ஒரு மாளிகை நகரம்’ என்பது உறுதிப்பட்டது.

**2. “ஊனமில் ஊக்கமும் ஒளிரக் காய்த்தநல்**
**தீன்எனுஞ் செல்வமே பழுத்த சேணகர்”– இப்பாடலடிகளில் ஒளிரக் காய்த்தது எது? பழுத்தது எது?**

★ மதீனா நகரில், திண்ணிய வலிமை நல்கும் வெற்றியும், அவ்வெற்றியைத் தரும் குறைவற்ற ஊக்கமும் காய்த்திருந்தன; தீன் என்னும் செல்வம் பழுத்திருந்தது.

### கூடுதல் வினாக்கள்

**3. மதீனா நகரம், எவ்வாறெல்லாம் அழைக்கப்படுகிறது?**

★ மாளிகைநகரம், கொடைநகரம், பொன்னகரம், மனைநகரம், மாநகரம், ஒண்ணகரம், செம்மைநகரம் என்றெல்லாம் மதீனா நகரம் அழைக்கப்படுகிறது.

**4. நபிகள் நாயகம், மதீனாவுக்கு எவ்வாறு சென்றார்?**

★ மதீனா நகர மக்களின் அழைப்பை ஏற்று, தம் துணைவரான அபூபக்கர் முதலானவர்களுடன் முல்லை, குறிஞ்சி நிலங்களைக் கடந்து, நபிகள் நாயகம் மதீனாவுக்குச் சென்றார்.

**5. சீறாப்புராணம் – பொருள் தருக.**

★ ‘சீறத்’ என்னும் அரபுச் சொல்லின் திரிபான ‘சீறா’ என்பதற்கு, ‘வாழ்க்கை’ என்பது பொருள். ‘புராணம்’ என்பது பழைய வரலாறு. எனவே, சீறாப்புராணம் என்பதற்கு, “நபிகள் பெருமானின் வாழ்க்கை வரலாற்றைக் கூறுவது” என்பது பொருள்.

**6. மதீனா நகரத்தை எவை தீண்டவில்லை?**

★ மதீனா நகரத்தைப் பகை, வறுமை, நோய்கள் தீண்டவில்லை.

### சிறுவினாக்கள்

**1. “கலைவலார் மறையவர் கருத்தில் எண்ணியது” – யாது?**

★ மதினா நகரில் வாரி வழங்கும் வள்ளன்மை கொண்டோர் நிறைந்திருந்ததால் கலைஞர்களும், மறையவர்களும் தாம் எண்ணிய பொருள்வளத்தைக் கொண்டிருந்தனர் என்பதாம்.

**2. “மறுவிலா அரசென இருந்த மாநகர்” – உவமையைப் பொருளுடன் விளக்குக.**

‘குற்றம் குறை இல்லாத அரசன் ஆட்சி நடத்துவதுபோல’ என்பது உவமையின் பொருள்.

★ மதீனா நகருக்கு இது உவமையாகக் கூறப்பட்டுள்ளது.

★ மதீனா நகரில் பகை, வறுமை, நோய் முதலானவை இல்லை. அவை ஓடி மறைந்த நிலையில் குறைவில்லாத மானுட அறம், அந்நகரில் செங்கோலாட்சி புரிந்தது. அதனால் மதீனா நகரம், சிறந்த அரசைப்போல் பொலிவுடன் இருந்தது என, உமறுப்புலவர் கூறுகிறார்

## கூடுதல் வினாக்கள்

**3. 'பூரணப் புவி' என மதீனா பொலிந்ததை எழுதுக.**

★ தோரணங்களாலும் கொடிகளாலும் மதீனா நகர வீதிகள், காடுகள்போல் நெருங்கி இருந்தன.
★ அவ்வீதிகளில் மலைபோன்ற யானைகள் நிறைந்திருந்தன. வீதிகள் யாவும் ஒழுங்குடன் காணப்பட்டன.
★ இவற்றால் பொன்போல் பொலிந்த மதீனா நகரமானது, 'பூரணப் புவி' எனப் பொலிந்தது.

**4. மதீனா நகர், எவற்றால் ஒளி பெற்றுத் திகழ்ந்தது?**

★ அலைவீசும் கடலானது முத்துகளையும் பல்வேறு அணி வகைகளையும் சிதறுவதுபோல், மதீனா நகரத்தில் வாழ்ந்த மக்கள், பல்வேறு மொழிகளைப் பேசினார்கள். பல்வேறு பொருள் வளத்தால் நிறைந்திருந்ததால், தேன் உண்டவர் மயங்குவதுபோல் மதீனா நகர், ஒண்ணகராய் ஒளிபெற்றுத் திகழ்ந்தது.

**5. மதீனா, செம்மையான நகராகத் திகழ்ந்தமையை விளக்குக.**

★ தானம், தவம், ஒழுக்கம், ஈகை, மானம் முதலானவை, மதீனா நகரில் பூத்திருந்தன.
★ திண்ணிய வலிமை நல்கும் வெற்றியும், வெற்றியைத் தரும் குறைவற்ற ஊக்கமும் காய்த்திருந்தன.
★ தீன் என்னும் செல்வமும் பழுத்திருந்ததால் மதீனா, செம்மை பொருந்திய நகரமாக இருந்தது.

**6. சீறாப்புராணம் குறித்துக் குறிப்பெழுதுக.**

★ நபிகள் பெருமானின் வாழ்க்கை வரலாற்றைக் கூறும் நூல் 'சீறாப்புராணம்'.
★ வள்ளல் சீதக்காதியின் வேண்டுகோளுக்கு இணங்கி, உமறுப்புலவர் இதனை இயற்றினார்.
★ இசுலாமியத் தமிழ் இலக்கியத்தில் முதன்மையான நூலாக விளங்குவது சீறாப்புராணம்.
★ இது, விலாதத்துக் காண்டம், நுபுவ்வத்துக் காண்டம், ஹிஜிறத்துக் காண்டம் என மூன்று காண்டங்களையும், 92 படலங்களையும், 5027 விருத்தப் பாடல்களையும் பெற்றுள்ளது.

**7. உமறுப்புலவர் குறித்துக் குறிப்பெழுதுக.**

★ இசுலாமியத் தமிழ்ப்புலவர் உமறுப்புலவர்.
★ இவர், எட்டயபுர அரசவைப் புலவர் கடிகைமுத்துப் புலவரின் மாணவர்.
★ வள்ளல் சீதக்காதியின் வேண்டுதலால், சீறாப்புராணத்தைப் பாடியவர்.
★ நபிகள் நாயகத்தின்மீது 'முதுமொழிமாலை' என்னும் நூலையும் இயற்றியுள்ளார்.
★ வள்ளல் சீதக்காதியும், அப்துல்காசிம் மரைக்காயரும் உமறுப்புலவரை ஆதரித்தனர்.

## நெடுவினா

**1. "மதீனா நகரம் ஒரு வளமான நகரம்" என உமறுப்புலவர் வருணிக்கும் செய்திகளைத் தொகுத்து எழுதுக.**

**மதீனா நகர வீதிகள் :**

மதீனா நகரில், மாளிகைகளின் மேல்மாடங்கள், மேருமலைபோல் உயர்ந்திருந்தன. அங்காடித் தெருக்களில் பெருங்கடல் ஒலிபோல் மக்கள் ஆரவாரம் செய்தனர். வீதிகள், பிரபஞ்சம்போல் பரந்து விரிந்து கிடந்தன.

**கொடைநகர் மதீனா :**

கலைஞர்களும் மறையவர்களும் எண்ணிய வளத்தைப் பெறும் வகையில் வாரி வழங்கும் வள்ளல்கள் பலர், பழமையான மதீனா நகரிலும் இருந்தனர். அவர்களால் மதீனா மேலும் புகழ்பெற்றது. தோரணங்களாலும் கொடிகளாலும் மதீனா நகரின் வீதிகள் ஒழுங்குடன் காணப்பட்டன.

**செங்கோலாட்சி நகர் :**

பொன்னகர்போல் விளங்கிய மதீனா நகர மாளிகைகள், வெண்சுண்ணச் சாந்தில் பொலிந்து ஒளிர்ந்தன. வீதிகளில் புதிய மலர்கள், சிந்திக் கிடந்தன. விருந்தினர் உபசரிக்கப்பட்டதால், வீடுகள் திருமண வீடுகள்போல் பொலிந்தன. பகை, வறுமை, நோய் இல்லாத மதீனா நகரம், மானுட அறத்தைக் கடைப்பிடிக்கும் செங்கோல் ஆட்சி புரிவதுபோல் பெரும்புகழ் பெற்றுச் சிறந்தது.

MERCY PUBLICATIONS CHENNAI

www.Padasalai.Net

**தீன் பழுத்த நகர் மதீனா :**

பல்வேறு மொழிகள்பேசும் மக்கள் நிறைந்திருந்ததால், மணி, முத்து அணிகளைச் சிதறும் கடல்போல், மதீனா நகர் காட்சி தந்தது. தானம், தவம், ஒழுக்கம், ஈகை, மானம் எங்கும் பூத்துத் திண்ணிய வலிமை நல்கும் வெற்றி குறையாத ஊக்கம் செழித்துத் 'தீன்' என்னும் பழம் பழுத்துச் செம்மை பொருந்திய நகராகத் திகழ்ந்தது.

## இலக்கணக் குறிப்பு

**மலிந்த, மண்டிய, பூத்த, பொலிந்த, படைத்த** – பெயரெச்சங்கள்

**இடன்** (இடம்) – ஈற்றுப்போலி

**பெரும்புகழ், தெண்டிரை, அரும்பொருள், தொன்னகர், புதுமலர்** – பண்புத்தொகைகள்

**பொன்னகர்** – இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை

**மாநகர், உறுபகை** – உரிச்சொற்றொடர்கள்

யாவும், ஐந்தும் – முற்றும்மை

**சிந்தி, பணிந்து** – வினையெச்சம்

**வறுமைநோய்** – உருவகம்

ஆரமும் பூணும் தானமும் ஒழுக்கமும் தவமும் மறனும் வெற்றியும் – எண்ணும்மைகள்.

**தரும்** – செய்யும் என்னும் வாய்பாட்டுப் பெயரெச்சம்

**மலைவிலா, தொலைவிலா** – ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சங்கள்

**இடுவிருந்து** – வினைத்தொகை

## உறுப்பிலக்கணம்

1. **மலிந்த – மலி + த் (ந்) + த் + அ**
   மலி – பகுதி, த் – சந்தி, 'ந்' ஆனது விகாரம், த் – இறந்தகால இடைநிலை, அ – பெயரெச்ச விகுதி.
2. **நெருங்கின – நெருங்கு + இன் + அ**
   நெருங்கு – பகுதி, இன் – இறந்தகால இடைநிலை, அ – பெயரெச்ச விகுதி.
3. **அளந்தன – அள + த் (ந்) + த் + அன் + அ**
   அள – பகுதி, த் – சந்தி, 'ந்' ஆனது விகாரம், த் – இறந்தகால இடைநிலை, அன் – சாரியை, அ – பலவின்பால் வினைமுற்று விகுதி.
4. **படைத்த – படை + த் + த் + அ**
   படை – பகுதி, த் – சந்தி, த் – இறந்தகால இடைநிலை, அ – பெயரெச்ச விகுதி.
5. **மலிந்து – மலி + த் (ந்) + த் + உ**
   மலி – பகுதி, த் – சந்தி, 'ந்' ஆனது விகாரம், த் – இறந்தகால இடைநிலை, உ – வினையெச்ச விகுதி.
6. **பொலிந்த – பொலி + த் (ந்) + த் + அ**
   பொலி – பகுதி, த் – சந்தி, 'ந்' ஆனது விகாரம், த் – இறந்தகால இடைநிலை, அ – பெயரெச்ச விகுதி.
7. **உண்டார் – உண் + ட் + ஆர்**
   உண் – பகுதி, ட் – இறந்தகால இடைநிலை, ஆர் – பலர்பால் வினைமுற்று விகுதி.
8. **மண்டிய – மண்டு + இ(ன்) + ய் + அ**
   மண்டு – பகுதி, இன் – இறந்தகால இடைநிலை, 'ன' கரம் புணர்ந்து கெட்டது, ய் – உடம்படு மெய், அ – பெயரெச்ச விகுதி.
9. **சிந்தி – சிந்து + இ**
   சிந்து – பகுதி, இ – வினையெச்ச விகுதி.
10. **பணிந்து – பணி + த் (ந்) + த் + உ**
    பணி – பகுதி, த் – சந்தி, 'ந்' ஆனது விகாரம், த் – இறந்தகால இடைநிலை, உ – வினையெச்ச விகுதி.

MERCURY PUBLICATIONS - CHENNAI

www.Padasalai.Net

11. **இருந்த – இரு + த் (ந்) + த் + அ**
இரு – பகுதி, த் – சந்தி, 'ந்' ஆனது விகாரம், த் – இறந்தகால இடைநிலை, அ – பெயரெச்ச விகுதி.

12. **காய்ந்த – காய் த் (ந்) + த் + அ**
காய் – பகுதி, த் – சந்தி, 'ந்' ஆனது விகாரம், த் – இறந்தகால இடைநிலை, அ – பெயரெச்ச விகுதி.

13. **பழுத்த – பழு + த் + த் + அ**
பழு – பகுதி, த் – சந்தி, த் – இறந்தகால இடைநிலை, அ – பெயரெச்ச விகுதி.

## புணர்ச்சி விதிகள்

1. **அரும்பொருள் – அருமை + பொருள்**
"ஈறுபோதல்" (அரு + பொருள்), "இனமிகல்" (அரும்பொருள்)

2. **மனையென – மனை + என**
"இ ஈ ஐ வழி யவ்வும்" (மனை + ய் + என)
"உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே" (மனையென)

3. **மலைவிலாது – மலைவு + இலாது**
"முற்றும் அற்று" (மலைவ் + இலாது)
"உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே" (மலைவிலாது)

4. **தொலைவிலா – தொலைவு + இலா**
"முற்றும் அற்று" (தொலைவ் + இலா)
"உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே" (தொலைவிலா)

5. **குறைவற – குறைவு + அற**
"முற்றும் அற்று" (குறைவ் + அற)
"உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே" (குறைவற)

6. **கம்பலைப்புடவி – கம்பலை + புடவி**
"இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும்" (கம்பலைப்புடவி)

7. **கடலென – கடல் + என**
"உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே" (கடலென)

8. **இடனற – இடன் + அற**
"உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே" (இடனற)

9. **பெரும்புகழ் – பெருமை + புகழ்**
"ஈறுபோதல்" (பெரு + புகழ்), "இனமிகல்" (அரும்பொருள்)

10. **தொன்னகர் – தொன்மை + நகர்**
"ஈறுபோதல்" (தொன் + நகர்)
"னல முன் றனவும் ஆகும் தநக்கள்" (தொன்னகர்)

11. **பொன்னகர் – பொன் + நகர்**
"னல முன் றனவும் ஆகும் தநக்கள்" (பொன்னகர்)

12. **புதுமலர் – புதுமை + மலர்**
"ஈறுபோதல்" (புதுமலர்)

13. **மனையென – மனை + என**
"இ ஈ ஐ வழி யவ்வும்" (மனை + ய் + என)
"உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே" (மனையென)

14. **அரசென – அரசு + என**
"உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்" (அரச் + என)
"உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே" (அரசென)

MERCY PUBLICATIONS - CHENNAI

www.Padasalai.Net

15. ஒண்ணகர் – ஒண்மை + நகர்

"ஈறுபோதல்" (ஒண் + நகர்) "ணள முன் டணவும் ஆகும் தநக்கள்" (ஒண்ணகர்)

16. குறைவற – குறைவு + அற

"முற்றும் அற்று ஒரோ வழி" (குறைவ் + அற)

"உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே" (குறைவற)

## பலவுள் தெரிக

1. உறுபகை, இடன் ஆகிய சொற்களின் இலக்கணக் குறிப்பு ______.

அ) உரிச்சொல்தொடர், ஈற்றுப்போலி ஆ) வினைத்தொகை, இடவாகுபெயர்

இ) வினையெச்சம், வினைத்தொகை ஈ) பெயரெச்சம், பண்புத்தொகை

**விடை :** அ) உரிச்சொல்தொடர், ஈற்றுப்போலி

2. சரியானவற்றைத் தேர்ந்தெடு.

அ) வரை – மலை ஆ) வதுவை – திருமணம்

இ) வாரணம் – யானை ஈ) புடவி – கடல்

i) அ, ஆ, இ – சரி; ஈ – தவறு ii) ஆ, இ, ஈ – சரி; அ – தவறு

iii) அ, இ, ஈ – சரி; ஆ – தவறு iv) அ, ஆ, ஈ – சரி; இ – தவறு

**விடை :** i) அ, ஆ, இ – சரி; ஈ – தவறு

## கூடுதல் வினாக்கள்

3. நபிகள் நாயகத்தின் சீரிய வரலாற்று இலக்கியம் ______.

அ) சின்னச் சீறா ஆ) முதுமொழிமாலை

இ) சீறாப்புராணம் ஈ) தேம்பாவணி

**விடை :** இ) சீறாப்புராணம்

4. பகையும் வறுமையும் நோயும் தீண்டாப் பொருள்வளம் நிறைந்த நகர் ______.

அ) பாக்தாத் நகர் ஆ) மக்கா நகர் இ) மதீனா நகர் ஈ) முத்து நகர்

**விடை :** இ) மதீனா நகர்

5. மதீனா நகர மக்கள், தீன் நெறியை வளர்த்த பாங்கினைக் கூறுவது ______.

அ) ஆரணிய காண்டம் ஆ) விலாதத்துக் காண்டம்

இ) நுபுவ்வத்துக் காண்டம் ஈ) ஹிஜிரத்துக் காண்டம்

**விடை :** ஈ) ஹிஜிரத்துக் காண்டம்

6. 'சீறத்' என்னும் அரபுச்சொல், ______ எனத் திரிந்தது.

அ) சிறா ஆ) சீரா இ) சீற் ஈ) சீறா

**விடை :** ஈ) சீறா

7. 'வாழ்க்கை' என்னும் பொருளை உணர்த்தும் சொல் ______.

அ) சீறக் ஆ) புராணம் இ) சீறா ஈ) சீரா

**விடை :** இ) சீறா

8. உமறுப்புலவர், சீறாப்புராணத்தை வள்ளல் ______ வேண்டுகோளுக்கிணங்கி இயற்றினார்.

அ) சடையப்பர் ஆ) பனு அகமது மரைக்காயர்

இ) சீதக்காதி ஈ) அப்துல்காசிம் மரைக்காயர்

**விடை :** இ) சீதக்காதி

9. 'முதுமொழிமாலை'யை நபிகள்நாயகம்மீது பாடியவர் ______.

அ) பனு அகமது மரைக்காயர் ஆ) அப்துல்காசிம் மரைக்காயர்

இ) கடிகை முத்துப் புலவர் ஈ) உமறுப்புலவர்

**விடை :** ஈ) உமறுப்புலவர்

MERCY PUBLICATIONS - CHENNAI

10. எட்டயபுரத்தின் அரசவைப் புலவராகப் பதவி வகித்தவர் ______.
அ) சீதக்காதி ஆ) பனு அகமது மரைக்காயர்
இ) உமறுப்புலவர் ஈ) அப்துல்காசிம் மரைக்காயர்
**விடை :** இ) உமறுப்புலவர்

11. 'சின்னச் சீறா' என்னும் நூலைப் பாடியவர் ______.
அ) சீதக்காதி ஆ) கடிகை முத்துப் புலவர்
இ) பனு அகமது மரைக்காயர் ஈ) அப்துல்காசிம் மரைக்காயர்
**விடை :** இ) பனு அகமது மரைக்காயர்

12. கடிகை முத்துப் புலவரின் மாணவர் ______.
அ) சீதக்காதி ஆ) அப்துல்காசிம் இ) பனு அகமது ஈ) உமறுப்புலவர்
**விடை :** ஈ) உமறுப்புலவர்

13. முகம்மது நபி, மதீனாவிற்கு யாருடன் சென்றார்?
அ) அகுமதுவுடன் ஆ) அப்துல்காசீமுடன்
இ) அபூபக்கருடன் ஈ) பனு அகமதுவுடன்
**விடை :** இ) அபூபக்கருடன்

14. மதீனா நகரின் வீதிகள், ______ போன்று பரந்திருந்தன.
அ) குறிஞ்சி ஆ) மேருமலை இ) முல்லை ஈ) பிரபஞ்சம்
**விடை :** ஈ) பிரபஞ்சம்

15. உமறுப்புலவரை ஆதரித்த வள்ளல்கள் ______.
அ) அப்துல்காசிம் மரைக்காயர், பனு அகமது
ஆ) சீதக்காதி, பனு அகமது மரைக்காயர்
இ) வள்ளல் சீதக்காதி, அப்துல்காசிம் மரைக்காயர்
ஈ) வள்ளல் சீதக்காதி, கடிகை முத்துப் புலவர்
**விடை :** இ) வள்ளல் சீதக்காதி, அப்துல்காசிம் மரைக்காயர்

16. உமறுப்புலவர், நபிகள்மீது பாடிய நூல்கள் ______.
அ) தேம்பாவணி, சீறாப்புராணம் ஆ) சீறாப்புராணம், முதுமொழிமாலை
இ) முதுமொழிமாலை, நொண்டி நாடகம் ஈ) தேம்பாவணி, முதுமொழிமாலை
**விடை :** ஆ) சீறாப்புராணம், முதுமொழிமாலை

17. பொருத்துக.

| | சொல் | | பொருள் |
|---|---|---|---|
| 1. | துன்ன | – | அ. அளித்தல் |
| 2. | எய்துதல் | – | ஆ. நிறைந்த |
| 3. | மண்டிய | – | இ. திறந்து |
| 4. | நல்கல் | – | ஈ. பெறுதல் |
| | | – | உ. நெருங்கிய |

**விடை :** 1 – உ, 2 – ஈ, 3 – ஆ, 4 – அ

## 2. அகநானூறு

### (வீரை வெளியன் தித்தனார் பாடல்)

### குறுவினா

**1. நெருங்கின, இரங்கி – உறுப்பிலக்கணம் தருக.**

**நெருங்கின – நெருங்கு + இன் + அ**
**நெருங்கு** – பகுதி, **இன்** – இறந்தகால இடைநிலை, **அ** – பெயரெச்ச விகுதி.
**இரங்கி – இரங்கு + இ**
**இரங்கு** – பகுதி, **இ** – வினையெச்ச விகுதி.

MERCY PUBLICATIONS - CHENNAI

www.Padasalai.Net

### கூடுதல் வினாக்கள்

**2. அகநானூற்றின் பிரிவுகள் யாவை?**

★ அகநானூற்றின் பிரிவுகள் மூன்று.

★ அவை : களிற்றியானைநிரை, மணிமிடைப்பவளம், நித்திலக்கோவை.

**3. அகநானூற்றுப் பாடல்களின் சிறப்பு யாது?**

★ சொல்லவந்த கருத்தை, 'உள்ளுறை' வழியாக உரைப்பது, அகநானூற்றுப் பாடல்களின் சிறப்பாகும்.

**4. 'உள்ளுறை'யைக் கவிஞர் எவ்வாறு கூறுவர்?**

★ உள்ளுறை பொதிந்த பாடலைப் பாடும் கவிஞர், சொல்லின் பயன்பாடு குறையாமல் கூறுவர்.

★ அவ்வாறு கூறும்போது, மரபின் நாகரிகம் குறைவுபடாது கூறவும் வேண்டும்.

★ அன்பை மறைக்கவும் வேண்டும்; பயன்பாடு கருதி வெளிப்படுத்தவும் வேண்டும்.

**5. தோழியின் பொறுப்பு யாது?**

★ தலைவியைத் தலைவன் சந்திக்க வேண்டிய குறியிடத்துக் குறிப்பைப் பொதிந்து வெளியிடுவது தோழியின் பொறுப்பாகும்.

**6. அகத்திணைகள் எத்தனை? அவை யாவை?**

★ அகத்திணைகள் ஐந்து.

★ அவை : குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலைத்திணைகள்.

**7. சிறுபொழுதுகள் எத்தனை? அவை யாவை?**

★ சிறுபொழுதுகள் ஆறு.

★ அவை : காலை, நண்பகல், எற்பாடு, மாலை, யாமம், வைகறை என்பன.

**8. பெரும்பொழுதுகள் எத்தனை?அவை யாவை?**

★ பெரும்பொழுதுகள் ஆறு. **அவை** : கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில் என்பன.

**9. கருப்பொருள்கள் யாவை?**

★ தெய்வம், மக்கள், புள் (பறவை), விலங்கு, ஊர், நீர், பூ, மரம், உணவு, பறை, யாழ், பண், தொழில் என்பன, கருப்பொருள்கள் ஆகும்.

### சிறுவினா

**1. மேகத்திடம் கூறுவதுபோலத் தோழி தலைவனுக்கு உணர்த்திய இறைச்சிப் பொருள் யாது?**

★ மேகத்திடம் கூறுவதுபோலத் தோழி தலைவனுக்குக் குறியிடம் சொல்கிறாள்.

★ வேங்கைமலர் அணிந்து தலைவி, தோழியருடன் தழலை, தட்டை என்னும் கருவிகளைக்கொண்டு, ஒலியெழுப்பிப் பறவைகளை ஓட்டிக்கொண்டு தினைப்புனம் காக்கின்றாள்.

★ அங்கே மழை பொழிவாயாக என்று மேகத்திடம் கூறுவதுபோல், தோழி குறிப்பால் உணர்த்துகிறாள்.

★ இதில் உணர்த்தப்படும் இறைச்சிப் பொருளாவது, தலைவி தினைப்புனம் காக்கும் இடத்துக்குத் தலைவன் சென்று சந்திக்கலாம் என்பதாகும்.

### கூடுதல் வினாக்கள்

**2. அகநானூறு – குறிப்பெழுதுக.**

★ அகம்+ நான்கு + நூறு = அகநானூறு. அகப்பொருள் குறித்து 145 புலவர்கள் பாடிய, நானூறு பாக்களைக் கொண்ட தொகுப்பு. எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று.

★ இதனை அகம், நெடுந்தொகை எனவும் கூறுவர். இது களிற்றியானைநிரை, மணிமிடைப்பவளம், நித்திலக்கோவை என்னும் முப்பிரிவுகளைக் கொண்டது.

**3. குறிஞ்சித்திணை – விளக்குக.**

★ 'புணர்தலும் புணர்தல் நிமித்தமும்' என்னும் உரிப்பொருளைக் கொண்ட அகப்பாடல், குறிஞ்சித் திணைக்குரியது. மலையும் மலை சார்ந்த இடமும் குறிஞ்சி நிலமாகும்.

★ 'யாமம்' என்னும் சிறுபொழுதையும், 'குளிர்காலம், முன்பனிக்காலம்' என்னும் பெரும்பொழுதுகளையும், தெய்வம், உணவு, ஊர், தொழில் முதலான கருப்பொருள்களையும் கொண்டமைவது, குறிஞ்சித் திணையாகும்.

MERCY PUBLICATIONS - CHENNAI

**4. 'இரவில் சிறைப்புறமாகத் தோழி சொல்லியது' துறை – விளக்குக.**

★ இரவில் சிறைப்புறமாக வந்து நின்ற தலைவனுக்குத் தலைவியின் தோழி, இவ்வாறு இரவில் தலைவியைச் சந்திப்பது முறையன்று.

★ விரைவில் மணந்துகொள்க என்பதைக் குறிப்பினால் உணர்த்தி, அறிவுறுத்துவதாகும். இங்குத் தோழி மேகத்திடம் கூறுவதுபோல், தலைவனுக்கு அறிவுறுத்துகிறாள்.

**5. மேகத்தை நோக்கித் தோழி கூறிய செய்தி யாது? அதனால் அறிவுறுத்தப்பட்டது யாது?**

★ "பெருங்கடலின் நீரை முகந்து எடுத்துச்செல்லும் மேகக்கூட்டமே! வானம் இருளும்படி நீ உலாவுகிறாய்! போர் முரசுபோல் முழங்குகிறாய்! போர்க்களத்தில், ஆற்றல்மிக்க போர்வீரர்கள் சுழற்றும் வாள்போல் மின்னுகின்றாய்!

★ நாள்தோறும் இடி முழக்கமும் மின்னலுமாகப் பயனின்றி வெற்று ஆரவாரம் செய்வாயா? அன்றி மழை பொழிவாயா?" எனத் தோழி வினவினாள்.

★ அதாவது, தலைவன் நாள்தோறும் வந்து, ஊர்மக்கள் அறிந்து பழிச்சொல் தூற்றுமாறு செயல்படுவ தனினும் விரைவாகத் தலைவியை மணந்து கொள்வது, நலம் எனக் குறிப்பாக அறிவுறுத்துகிறாள்.

**6. தலைவியின் நிலை குறித்துத் தோழி கூறும் செய்தி யாது?**

★ தன் தோழியர் கூட்டத்தோடு, தலைவி மெல்ல மெல்ல நடந்து, தினைப்புனம் சென்றுள்ளாள். அவள் அங்குத் தினை உண்ணவரும் பறவைகளைத் தழலை, தட்டை என்னும் கருவிகளைக் கொண்டு ஒலியெழுப்பி ஓட்டிக் கொண்டிருப்பாள்.

★ கொழுந்து இலைகளைத் தழைஆடையாக அணிந்து, தினைப்புனம் காக்கும் பகுதியில், மழையே நீ பொழிவாயாக" எனத் தோழி கூறி – தன் தலைவியின் இருப்பிட நிலையைத் தலைவனுக்கு உணர்த்தினாள். அதாவது, தலைவி தினைப்புனம் காக்கும் இடத்திற்குத் தலைவன் செல்லலாம் என்பதைக் குறிப்பால் உணர்த்தினாள்.

## கூடுதல் வினா

**சிறைப்புறத்தானாகிய தலைவனுக்கு மேகத்திடம் கூறுவதுபோல் தோழி சொல்லியன யாவை?**

**மேகக்கூட்டத்தின் ஆரவாரம் :**

பெருங்கடல் நீரை முகந்து செல்லும் மேகக்கூட்டமே! வானம் இருளுமாறு நீ உலவுகிறாய்! போர்முரசுபோல் முழங்குகிறாய்! முறைமை தெரிந்து அறநெறி பிழையாத திறமையுடன் ஆளும் அரசனின் போர்க்களத்தில் ஆற்றல்மிக்க வீரர்கள் சுழற்றும் வாள்போல் மின்னுகிறாய்!

**தலைவனுக்கு அறிவுறுத்தல் :**

நாள்தோறும் இடிமுழக்கமும் மின்னலுமாகப் பயனின்றி வெறும் ஆரவாரம் செய்கின்றாயா, அன்றி மழை பொழிவாயா எனச் சிறைப்புறத்தானாகிய தலைவன் கேட்குமாறு தோழி கூறினாள். அதாவது, தலைவன் நாள்தோறும் வருவதை ஊர்மக்கள் அறிந்து பழிச்சொல் பேசுமாறு செயல்படுவதாயினும், விரைவாகத் தலைவியை மணந்துகொள்வது நலம் எனக் குறிப்பாக அறிவுறுத்துகிறாள்.

**தலைவி செயல் :**

மலர்ந்த வேங்கை மலர்களைத் தொகுத்துக் கட்டி அணிந்து கொண்டிருக்கும் தோழியர் கூட்டத்தோடு, தலைவி மெல்ல நடந்து, தினைப்புனம் சென்றுள்ளாள். அவள் அங்குத் தினை உண்ணவரும் பறவைகளைத் தழலை, தட்டை என்னும் கருவிகளைக் கொண்டு, ஒலியெழுப்பி ஓட்டிக் கொண்டிருப்பாள்.

**தினைப்புனத்தில் மழை பொழிக :**

செழுந்தீ போன்ற அசோகின் கொழுந்து இலைகளைத் தழைஆடையாக அணிந்து, தினைப்புனம் காக்கும் பகுதியில், மழையே நீ பொழிவாயாக எனத் தோழி கூறித் தன் தலைவியின் இருப்பிட நிலையைத் தலைவன் அறியுமாறு உணர்த்தினாள். அதாவது, தலைவி தினைப்புனம் காக்கும் இடத்திற்குத் தலைவன் செல்லலாம் என்பதைக் குறிப்பால் உணர்த்தினாள்.

## இலக்கணக் குறிப்பு

**பெருங்கடல், அருஞ்சமத்து** – பண்புத்தொகைகள்

**முகந்த, எதிர்ந்த, மலர்ந்த, பொலிந்த** – பெயரெச்சங்கள்

**இரங்கி, சுழித்து** – வினையெச்சங்கள்

MERCY PUBLICATIONS - CHENNAI

www.Padasalai.Net

**பிழையா** – ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்
**அறிமன்னர், உயர் விசும்பு, எறிவாள்** – வினைத்தொகைகள்
**வளைஇ, அசைஇ** – சொல்லிசை அளபெடைகள்
**வாழிய** – வியங்கோள் வினைமுற்று
**அறன்** (அறம்), **திறன்** (திறம்) – ஈற்றுப்போலிகள்

## உறுப்பிலக்கணம்

1. **இரங்கி – இரங்கு + இ**
   **இரங்கு** – பகுதி, **இ** – வினையெச்ச விகுதி.
2. **கழித்து – கழி + த் + த் + உ**
   **கழி** – பகுதி, **த்** – சந்தி, **த்** – இறந்தகால இடைநிலை, **உ** – வினையெச்ச விகுதி.
3. **மலர்ந்த – மலர் + த் (ந்) + த் + அ**
   **மலர்** – பகுதி, **த்** – சந்தி, 'ந்' ஆனது விகாரம், **த்** – இறந்தகால இடைநிலை, **அ** – பெயரெச்ச விகுதி.
4. **பொலிந்த – பொலி + த் (ந்) + த் + அ**
   **பொலி**– பகுதி, **த்** – சந்தி, 'ந்' ஆனது விகாரம், **த்** – இறந்தகால இடைநிலை, **அ** – பெயரெச்ச விகுதி.
5. **வாழிய – வாழ் + இய**
   **வாழ்** – பகுதி, **இய** – வியங்கோள் வினைமுற்று விகுதி.
6. **புரிந்து – புரி + த் (ந்) + த் + உ**
   **புரி** – பகுதி, **த்** – சந்தி, 'ந்' ஆனது விகாரம், **த்** – இறந்தகால இடைநிலை, **உ** – வினையெச்ச விகுதி.

## புணர்ச்சி விதிகள்

1. **பெருங்கடல் – பெருமை + கடல்**
   "ஈறுபோதல்" (பெரு + கடல்), "இனமிகல்" (பெருங்கடல்)
2. **ஆயமொடு – ஆயம் + ஒடு**
   "உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே" (ஆயமொடு)
3. **மின்னுடைக் கருவி – மின்னுடை + கருவி**
   "இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும்" (மின்னுடைக் கருவி)

## பலவுள் தெரிக கூடுதல் வினாக்கள்

1. சொல்லவந்த கருத்தை 'உள்ளுறை' வழியாக உரைப்பது ______ பாடல்களின் சிறப்பு.
   அ) கலித்தொகை ஆ) பரிபாடல் இ) அகநானூறு ஈ) புறநானூறு
   **விடை :** இ) அகநானூறு
2. 'அகநானூற்று'ப் பாடல்களைப் பாடிய புலவர்கள் எண்ணிக்கை ______.
   அ) 400 ஆ) 145 இ) 300 ஈ) 140
   **விடை :** ஆ) 145
3. 'அகநானூறு', ______ பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.
   அ) இரண்டு ஆ) ஐந்து இ) மூன்று ஈ) ஒரே நூல்
   **விடை :** இ) மூன்று
4. அகநானூற்றின் வேறு பெயர் ______.
   அ) அகப்பொருள் ஆ) குறுந்தொகை இ) பெருந்திணை ஈ) நெடுந்தொகை
   **விடை :** ஈ) நெடுந்தொகை
5. தினைப்புனம் காப்பவள், ______ எனக் குறிக்கப் பெற்றுள்ளாள்.
   அ) தலைவி ஆ) தோழி இ) குறமகள் ஈ) செவிலித்தாய்
   **விடை :** இ) குறமகள்

MERCY PUBLICATIONS - CHENNAI

6. சிறைப்புறமாக நின்ற தலைவனுக்குக் குறியிடம் (தலைவி உள்ள இடம்) சொன்னது ______.
அ) செவிலி ஆ) நற்றாய் இ) தோழி ஈ) எவரும் இல்லை
விடை : இ) தோழி

7. சிறைப்புறம் நின்ற தலைவனுக்குத் தோழி கூறியதில் எப்பொருள் வெளிப்படுகிறது?
அ) உள்ளுறைப் பொருள் ஆ) கருப்பொருள்
இ) உரிப்பொருள் ஈ) இறைச்சிப்பொருள்
விடை : ஈ) இறைச்சிப்பொருள்

## ஐந்திணை முதற்பொருளும் உரிப்பொருளும்

1. 'குறிஞ்சித்திணை'

**முதற்பொருள்**

நிலம் : மலையும் மலை சார்ந்த இடமும்.
சிறுபொழுது : யாமம்
பெரும்பொழுது : கூதிர், முன்பனி.

**கருப்பொருள்**

தெய்வம் : முருகன்
மக்கள் : குறவர், குறத்தியர், கானவர்.
பறவை : கிளி, மயில்.
விலங்கு : புலி, கரடி, யானை, சிங்கம்.
ஊர் : சிறுகுடி
நீர் : சுனைநீர், அருவிநீர்.
மலர் : காந்தள், குறிஞ்சி, வேங்கை.
மரம் : அகில், சந்தனம், வேங்கை.
உணவு : தினை, மலைநெல், மூங்கிலரிசி.
பறை : வெறியாட்டுப்பறை, தொண்டகப்பறை.
பண் : குறிஞ்சிப்பண்
யாழ் : குறிஞ்சியாழ்
தொழில் : தேனெடுத்தல், கிழங்ககழ்தல், வெறியாடல், நெல் விதைத்தல்.
உரிப்பொருள் : புணர்தலும் புணர்தல் நிமித்தமும்.

2. 'முல்லைத்திணை'

**முதற்பொருள்**

நிலம் : காடும் காடுசார்ந்த இடமும்
சிறுபொழுது : மாலை
பெரும்பொழுது : கார்காலம்

**கருப்பொருள்**

தெய்வம் : திருமால்
மக்கள் : ஆயர், ஆய்ச்சியர், இடையர், இடைச்சியர்.
பறவை : கானக்கோழி
விலங்கு : முயல், மான்.
ஊர் : பாடி, சேரி.
நீர் : குறுஞ்சுனை, கானாறு
மலர் : முல்லை, குல்லை, பிடவம், தோன்றி.
மரம் : கொன்றை, குருந்தம், காயா.
உணவு : வரகு, சாமை, முதிரை.
பறை : ஏறுகோட்பறை
பண் : முல்லைப்பண் (சாதாரி)

MERCY PUBLICATIONS - CHENNAI

www.Padasalai.Net

யாழ் : முல்லையாழ்
தொழில் : வரகு விதைத்தல், களை பறித்தல், ஆநிரை மேய்த்தல், குழலூதல், காளை தழுவல்.
உரிப்பொருள் : இருத்தலும் இருத்தல் நிமித்தமும்.

### 3. 'மருதத்திணை'

**முதற்பொருள்**

நிலம் : வயலும் வயல்சார்ந்த இடமும்
சிறுபொழுது : காலை
பெரும்பொழுது : ஆறு பெரும்பொழுதுகளும்

**கருப்பொருள்**

தெய்வம் : வேந்தன்
மக்கள் : ஊரன், மகிழ்நன், கிழத்தி, மனைவி, உழவர், உழத்தியர், கடையர், கடைச்சியர்.
பறவை : நாரை, குருகு, அன்னம், தாரா.
விலங்கு : எருமை, நீர்நாய்.
ஊர் : பேரூர், மூதூர்.
நீர் : ஆற்றுநீர், குளத்துநீர்.
மலர் : நெய்தல், தாமரை, கழுநீர்.
மரம் : மருதம், வஞ்சி, காஞ்சி.
உணவு : செந்நெல், வெண்ணெல்.
பறை : நெல்லரிகிணை, மணமுழவு.
பண் : மருதப்பண்
யாழ் : மருதயாழ்
தொழில் : விழாச் செய்தல், வயலில் களைகட்டல், நெல்லரிதல்.
உரிப்பொருள் : ஊடலும் ஊடல் நிமித்தமும்.

### 3. 'நெய்தல்திணை'

**முதற்பொருள்**

நிலம் : கடலும் கடல் சார்ந்த இடமும்.
சிறுபொழுது : எற்பாடு
பெரும்பொழுது : ஆறு பெரும்பொழுதுகளும்

**கருப்பொருள்**

தெய்வம் : வருணன்
மக்கள் : பரதர், பரத்தியர், நுளையர், நுளைச்சியர்.
பறவை : நீர்க்காக்கை
விலங்கு : சுறா
ஊர் : பட்டினம், பாக்கம்.
நீர் : உவர்நீர்க்கேணி, உவர்க்கழி.
மலர் : தாழை, நெய்தல், புன்னை.
மரம் : புன்னை, தாழை.
உணவு : மீனையும் உப்பையும் விற்றுப் பெறும் பொருள்.
பறை : மீன்கோட் பறை, நாவாய்ப் பம்பை.
பண் : நெய்தல்பண் (செவ்வழி)
யாழ் : விளரியாழ்
தொழில் : மீன் பிடித்தல், உப்பு விற்றல்.
உரிப்பொருள் : இரங்கலும் இரங்கல் நிமித்தமும்.

MERCY PUBLICATIONS - CHENNAI

**4. பாலைத்திணை**

**முதற்பொருள்**

| | | |
|---|---|---|
| **நிலம்** | : | சுரமும் சுரம் சார்ந்த இடமும். |
| **சிறுபொழுது** | : | நண்பகல் |
| **பெரும்பொழுது** | : | வேனில், பின்பனி. |

**கருப்பொருள்**

| | | |
|---|---|---|
| **தெய்வம்** | : | துர்க்கை |
| **மக்கள்** | : | காளை, விடலை, மீளி, எயினர், எயிற்றியர், மறவர், மறத்தியர். |
| **பறவை** | : | கழுகு, பருந்து, புறா. |
| **விலங்கு** | : | செந்நாய், வலிமை இழந்த புலி. |
| **ஊர்** | : | குறும்பு |
| **நீர்** | : | நீர்வற்றிய சுனை |
| **மலர்** | : | பாதிரிப்பூ, மராம்பூ, குரா. |
| **மரம்** | : | பாலை, இலுப்பை, ஓமை. |
| **உணவு** | : | வழிப்பறி செய்த பொருள். |
| **பறை** | : | போர்ப்பறை, |
| **பண்** | : | பாலைப்பண் |
| **யாழ்** | : | பாலையாழ் |
| **தொழில்** | : | நிரைகவர்தல், சூறையாடல், வழிப்பறி செய்தல். |
| **உரிப்பொருள்** | : | பிரிதலும் பிரிதல் நிமித்தமும் ஆகும். |

## விரிவானம்

## பிம்பம்

(பிரபஞ்சன்)

### நெடுவினா

**1. 'பிம்பம்' கதையின் வாயிலாகப் பிரபஞ்சன் தெளிவுபடுத்தும் மனித முகங்களைப் பற்றி விவரிக்க.**

**முகமூடி அணிதல் மனித இயல்பு :**

மனிதன் ஒருவன், மற்றவர் இயல்புக்கு ஏற்பத் தன்னை மாற்றிக் கொள்ளும்போது, அவன் அவனாக இருப்பதில்லை. அவ்வேளைகளில் அவரவருக்கு ஏற்ப வெவ்வேறு முகமூடியை அணிந்துகொள்கிறான். சில சமயங்களில் மனிதன், இப்படி அடிக்கடி முகமூடியை மாற்றி மாற்றி வாழ்வதால், அவனது உண்மைத் தன்மையை, உண்மை முகத்தையே இழந்துவிடுகிறான். அதனால் சமுதாயத்தில் அடையாளம் தெரியாமல் போய்விடுகிறான்.

**வேண்டாத விருந்தினர் :**

பிம்பம் கதையைப் பிரபஞ்சன், தம்மையே முன்னிலைப்படுத்திக்கொண்டு எழுதுகிறார். காரணம் ஏதுமின்றி எந்த நேரத்திலும் அது வெளிவருகிறது. தன் கட்டளைக்கு உடன்படாமல், வீட்டில் உரையாடி மகிழ்வதற்கு என்றில்லாமல், விரும்பும்போது இம்சிக்க வருவதுபோல் இருக்கிறது. அது வேண்டாத விருந்தாளியாகத் தன் விருப்பம்போல் சுற்றி அலைந்து, எதையும் துருவித்துருவிக் கேட்கிறது.

**கேள்விகளால் துளைத்தால் :**

மனிதன் தன்னையும் தன் மனச்சாட்சியையும் ஏமாற்றுவதை வெளிப்படச் செய்கிறது. நிதானமாக எண்ணிப்பார்த்தால், ஒரு மனிதன் எத்தனை வண்ணங்களில், வெவ்வேறு அளவுகளில், பல்வேறு கோணங்களில், பல முகங்களோடு வாழ்வது வெளிப்படும். எதிரில் உள்ளவர் தாயானாலும், அவர் காட்டும் முகபாவத்திற்கு ஏற்பத் தன் முகபாவத்தை மாற்றிக் கொள்ளும் மனிதர்கள்தாம் உள்ளனர்.

MERCY PUBLICATIONS - CHENNAI

www.Padasalai.Net

முகங்களின் குவியல் :

ஒவ்வொருவர் காலடியிலும் பல முகங்கள் குவிந்து கிடக்கின்றன. அவற்றில் தேவையானதைத் தேவையானபோது பயன்படுத்திக் கொள்வதே சகஜம். இத்துணை நிகழ்வுகளுக்கும் விவாதங்களுக்கும் பிறகு வந்த பிம்பம் விடைபெறுவதோடு பிரபஞ்சன், பிம்பம் கதையை முடித்துள்ளார். விடைபெறும் பிம்பத்தால், சொந்த முகம் என்று எதுவும் மனிதனிடம் இல்லை என்பது தெளிவுபடுத்தப்படுகிறது.

மனச்சாட்சி :

ஒவ்வொரு மனிதனிடமும் விருப்பு வெறுப்புகள் உள்ளன. எனினும், பிறருடன் உறவு பாராட்டும்போது, அவரவர் இயல்புக்கு ஏற்பத் தன்னை மறைத்து, மாற்றிக் கொள்கிறான். எனினும், அவனவன் மனச்சாட்சி என்பது, உண்மையை நினைவூட்டிக்கொண்டே இருக்கும். இவ்வகையில் மனிதன் வாழ்க்கையில் இப்படி முகம் மாற்றி முகம் மாற்றித் தன் உண்மை முகத்தை இழந்து, அடையாளமற்ற தன்மையில் காட்சியளிக்கிறான்.,

# இனிக்கும் இலக்கணம்

## பா இயற்றப் பழகலாம்

### குறுவினா

1. ஈரசைச் சீர்களுக்கு வழங்கப்படும் வேறு பெயர்கள் யாவை?

★ ஈரசைச்சீர்களுக்கு வழங்கப்படும் வேறு பெயர்கள், இயற்சீர், ஆசிரிய உரிச்சீர் என்பன. ஈரசைச்சீர்கள் மாச்சீர் (தேமா, புளிமா), விளச்சீர் (கூவிளம், கருவிளம்) என இரு வகைப்படும்.

### கூடுதல் வினாக்கள்

2. ‘செய்யுள்’ என்னும் பொருளைக் குறிக்கும் சொற்கள் எவை?

★ செய்யுள் என்னும் பொருளைக் குறிக்கும் சொற்கள், தூக்கு, கவி, கவிதை, பாட்டு என்பன.

3. செய்யுள் உறுப்புகள் எவை?

★ எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை என்பன செய்யுள் உறுப்புகளாகும்.

4. அசையாவது யாது? அது எத்தனை வகைப்படும்? அவை யாவை?

★ எழுத்தோ எழுத்துகளோ சேர்ந்து அசைத்து, இசைபொருந்த சீர்க்கு உறுப்பாக வருவது அசை.

★ அது இரண்டு வகைப்படும். அவை : நேர், நிரை.

5. நேரசை எவ்வாறு அமையும்?

★ குறில் தனித்தோ, குறில் ஒற்றிணைந்தோ, நெடில் தனித்தோ, நெடில் ஒற்றிணைந்தோ ‘நேர்’ அசை அமையும்.

6. நிரையசை எவ்வாறு அமையும்?

★ இருகுறில் இணைந்தோ, இருகுறிலோடு ஒற்றிணைந்தோ, குறில்நெடில் இணைந்தோ, குறில்நெடிலோடு ஒற்றிணைந்தோ, நிரை அசை அமையும்.

7. நேரிசை ஆசிரியப்பா எவ்வாறு அமையும்?

★ ஈற்றயல் அடி மூன்று சீர்களாய் அமைய, ஏனைய அடிகள் நான்கு சீர்களாக அமைய வருவது, நேரிசை ஆசிரியப்பா.

8. எல்லா அடிகளும் நான்கு சீர்களாக அமைந்து வரும் ஆசிரியப்பாப் பெயர் என்ன?

★ எல்லா அடிகளும் நான்கு சீர்களாக அமைந்து வரும் ஆசிரியப்பா ‘நிலைமண்டில ஆசிரியப்பா’. இது ‘ஏ’, ‘என்’ என்னும் ஈற்று அசை பெறுவது சிறப்பு என்பர்.

9. இணைக்குறள் ஆசிரியப்பா எவ்வாறு அமையும்?

★ முதல் அடியும் இறுதி அடியும் நான்கு சீர்களைப் பெற்று, இடையடிகள் ஈரசை, மூவசைச் சீர்களைப் பெற்று வருவது, இணைக்குறள் ஆசிரியப்பா.

10. அடிமறிமண்டில ஆசிரியப்பா என்பது யாது?

★ அடிகளை முன்பின்னாக மாற்றிப் பாடினாலும் பொருளோ, ஓசையோ மாறாது அமைவது அடிமறிமண்டில ஆசிரியப்பா ஆகும்.

11. ஆசிரியப்பாவின் இனங்கள் யாவை?

★ ஆசிரியத்தாழிசை, ஆசிரியத்துறை, ஆசிரியவிருத்தம் என்பன, ஆசிரியப்பாவின் இனங்களாகும்.

MERCY PUBLICATIONS - CHENNAI

## சிறுவினா

**1. ஆசிரியப்பாவின் பொது இலக்கணத்துள், எவையேனும் நான்கினைக் கூறுக.**

★ எல்லா அடிகளும் நான்கு சீர்களைப் பெற்று வரும்.
★ இயற்சீர் மிகுந்தும் பிறசீர் கலந்தும் வரும்.
★ நிரை நடுவாகிய (கூவிளங்கனி, கருவிளங்கனி) வஞ்சி உரிச்சீர்கள் வாரா.
★ இறுதி அடியின் இறுதிச் சீர் 'ஏ' என்னும் ஓசையில் முடிவது சிறப்பு.

## பலவுள் தெரிக

1. நேரொன்றாசிரியத்தளை எனப்படுவது ______.
அ) காய் முன் நேர் ஆ) காய் முன் நிரை
இ) கனி முன் நிரை ஈ) மா முன் நேர்
**விடை :** ஈ) மா முன் நேர்

## கூடுதல் வினாக்கள்

2. பாக்களின் வகை, ஓசை இயற்றும் விதிமுறைகளைக் கூறும் நூல் ______.
அ) நன்னூல் ஆ) தொல்காப்பியம்
இ) யாப்பருங்கலக்காரிகை ஈ) புறம்பொருள் வெண்பா மாலை
**விடை :** இ) யாப்பருங்கலக்காரிகை

3. பா (செய்யுள்) எத்தனை வகைப்படும்?
அ) இரண்டு ஆ) மூன்று இ) நான்கு ஈ) ஆறு
**விடை :** இ) நான்கு

4. கலிப்பாவிற்கு உரிய ஓசை ______.
அ) துள்ளலோசை ஆ) செப்பலோசை இ) அகவலோசை ஈ) தூங்கலோசை
**விடை :** அ) துள்ளலோசை

5. 'அகவலோசை' பெற்று வருவது ______.
அ) வெண்பா ஆ) கலிப்பா இ) ஆசிரியப்பா ஈ) வஞ்சிப்பா
**விடை :** இ) ஆசிரியப்பா

6. செய்யுளில் இசையைப் பிணைப்பவை ______.
அ) எழுத்து, அசை, சீர் ஆ) எதுகை, மோனை, இயைபு
இ) அடி, தொடை, பா ஈ) சீர், அடி, தொடை
**விடை :** ஆ) எதுகை, மோனை, இயைபு

9. 'அகவற்பா' எனக் குறிப்பிடப்படுவது ______.
அ) வெண்பா ஆ) ஆசிரியப்பா இ) வஞ்சிப்பா ஈ) கலிப்பா
**விடை :** ஆ) ஆசிரியப்பா

10. 'ஆசிரிய உரிச்சீர்' என்று அழைக்கப்படுவது ______.
அ) ஈரசைச்சீர் ஆ) மூவசைச்சீர் இ) ஓரசைச்சீர் ஈ) நாலசைச்சீர்
**விடை :** அ) ஈரசைச்சீர்

13. எல்லா அடிகளும் அளவடி (நாற்சீர் அடி) பெற்று வருவது ______.
அ) நிலைமண்டில ஆசிரியப்பா ஆ) இணைக்குறள் ஆசிரியப்பா
இ) நேரிசை ஆசிரியப்பா ஈ) அடிமறிமண்டில ஆசிரியப்பா
**விடை :** அ) நிலைமண்டில ஆசிரியப்பா

14. முதலடியும் இறுதி அடியும் அளவடிகளாகவும், இடையடிகள் குறளடி, சிந்தடிகளாகவும் வரும் ஆசிரியப்பா ______.
அ) நேரிசை ஆசிரியப்பா ஆ) நிலைமண்டில ஆசிரியப்பா
இ) இணைக்குறள் ஆசிரியப்பா ஈ) அடிமறிமண்டில ஆசிரியப்பா
**விடை :** இ) இணைக்குறள் ஆசிரியப்பா

MERCY PUBLICATIONS - CHENNAI

www.Padasalai.Net

## இலக்கணத் தேர்ச்சிகொள்

**1. ஆசிரியப்பா எத்தனை வகைப்படும்? அவை யாவை?**

★ ஆசிரியப்பா, நான்கு வகைப்படும். அவை: நேரிசை ஆசிரியப்பா, இணைக்குறள் ஆசிரியப்பா, நிலைமண்டில ஆசிரியப்பா, அடிமறி மண்டில ஆசிரியப்பா.

**2. ஆசிரியப்பாவிற்குரிய சீரும் தளையும் யாவை?**

★ மாச்சீர், விளச்சீர் எனும் ஈரசைச் சீர்கள், ஆசிரியப்பாவிற்குரிய சீர்களாகும்.

★ வெண்பாவிற்குரிய காய்ச்சீர்கள் வரலாம்.

★ நேரொன்றாசிரியத் தளையும், நிரையொன்றாசிரியத் தளையும் ஆசிரியப்பாவின் தளைகளாகும்.

★ பிற தளையும் கலந்து வரும்.

**3. அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தங்களின் வகைகளையும், அவை இயற்றுவதற்கான விதிகளையும் கூறுக.**

★ ஆறுசீர்கள் நான்கு கொண்டதாக அமைந்து, நான்கு அடிகளும் அளவு ஒத்து வரவேண்டும்.

★ முதல்சீரிலும், நான்காம் சீரிலும் மோனை அமைத்தும், முதல் சீரிலும் ஐந்தாம் சீரிலும் மோனை அமைத்தும் அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம் எழுதலாம்.

**4. பொருத்துக.**

| | | | |
|---|---|---|---|
| அ) | நேரிசை ஆசிரியப்பா | – i) | முதலடியும் இறுதியடியும் அளவடிகளாய் வரும் |
| ஆ) | இணைக்குறள் ஆசிரியப்பா | – ii) | அடிகளை மாற்றிப் பாடினாலும் ஓசையும் பொருளும் மாறாது வரும் |
| இ) | நிலைமண்டில ஆசிரியப்பா | – iii) | ஈற்றயல் அடி சிந்தடியாய் வரும் |
| ஈ) | அடிமறிமண்டில ஆசிரியப்பா | – iv) | எல்லா அடிகளும் அளவடி பெற்று வரும் |

**விடை :** அ – iii  ஆ – i  இ – iv  ஈ – ii

## மொழியை ஆள்வோம்

### சான்றோர் சித்திரம்

#### இரசிகமணி டி. கே. சிதம்பரநாதர் (1882 – 1954)

தமிழில் எல்லாம் உண்டு; தமிழின் கவிச் சுவைக்கு ஈடுமில்லை இணையுமில்லை; தமிழால் அறிவியல் மட்டுமன்று; அனைத்து இயல்களையும் கற்க முடியும் எனச் சான்றுகளுடன் எடுத்துச் சொன்ன பெருந்தகை இரசிகமணி டி. கே. சிதம்பரநாதர். இவர், தமது இலக்கிய இரசிகத் தன்மையால் தமிழுக்கும் தமிழருக்கும் புத்துணர்வு ஊட்டியவர். டி. கே. சி.யின் வீட்டுக் கூடத்தில் வட்டவடிவமான தொட்டிக் கட்டு. ஞாயிறுதோறும் மாலை ஐந்து மணிக்குக் கூடிய கூட்டம், இலக்கியத்தைப் பற்றிப் பேசியது. அவ்வமைப்பு, ‘வட்டத் தொட்டி’ என்றே பெயர் பெற்றது. டி. கே. சி., இலக்கியங்களின் நயங்களைச் சொல்லச் சொல்லக் கூட்டத்திலுள்ள அனைவரும் தங்களை மறந்து இலக்கியத்தில் திளைப்பர். தமிழின் இனிமை என்பது மட்டும் அவர்கள் உள்ளங்களில் நிறைந்திருக்கும். வழக்கறிஞராகத் தொழில் புரிவதைவிடத் தமிழின்பத்தில் திளைப்பதையே டி.கே.சி. விரும்பினார். தமிழ்க்கலைகள், தமிழ்இசை, தமிழ் இலக்கியம் ஆகியவற்றின் சுவையையும் மேன்மையையும் தனித்தன்மையையும் எடுத்துச் சொன்னார். கடிதங்களிலும் அவற்றையே வியந்து எழுதினார். அவர்தம் கடிதங்கள் இலக்கியத் தரம் கொண்டு புதிய இலக்கிய வகையாகவே கருதப்பட்டன. இதய ஒலி, கம்பர் யார்? முதலான நூல்களும், முத்தொள்ளாயிரம், கம்பராமாயணம் ஆகியவற்றுக்கு எழுதிய உரையும் அவர்தம் இலக்கிய நுகர்வுக்கடலின் சில அலைகள் எனலாம். சென்னை மாநில மேலவையின் உறுப்பினராகவும், அறநிலையத் துறையின் ஆணையராகவும் திகழ்ந்த டி.கே.சி. ஏற்றிய இலக்கிய ஒளி, தமிழ் அழகியலை வெளிச்சப்படுத்தியது.

**வினாக்களுக்கு விடையளிக்க.**

**1. அன்று, அல்ல என்பவற்றுக்கான பொருள்வேறுபாடு அறிந்து தொடர் அமைக்க.**

அன்று : நீ செய்யும் செயல் நன்று அன்று.

அல்ல : நான் கேட்டவை இவை அல்ல.

**2. சொல்லச் சொல்ல, திளைப்பர் – இலக்கணக் குறிப்புத் தருக.**

சொல்லச் சொல்ல – அடுக்குத்தொடர்

திளைப்பர் – படர்க்கைப் பலர்பால் எதிர்கால வினைமுற்று.

MERCY PUBLICATIONS - CHENNAI

**3. ரசிகர் – தமிழ்ச்சொல் எழுதுக. மாநில மேலவை – ஆங்கிலக் கலைச்சொல் தருக.**

ரசிகர் – சுவைப்பவர், சுவைஞர்,

மாநில மேலவை – Legislative Council

**4. வழக்கறிஞராகத் தொழில் புரிவதைவிடத் தமிழின்பத்தில் திளைப்பதையே டி.கே.சி. விரும்பினார் – விடைக்கேற்ற வினா அமைக்க.**

விடை : வழக்கறிஞராகத் தொழில் புரிவதைவிட, எதில் திளைப்பதையே டி.கே.சி. விரும்பினார்?

**5. மேலவை, புத்துணர்வு – இச்சொற்களின் புணர்ச்சி வகையைக் கண்டறிக.**

மேலவை – மேல் + அவை

“உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே” (மேலவை)

புத்துணர்வு – புதுமை + உணர்வு

“ஈறுபோதல்” (புது + உணர்வு)“தன் ஒற்று இரட்டல்” (புத்து + உணர்ச்சி)

“உயிர்வரின் உக்குறள் மெய்விட் டோடும்” (புத்த் + உணர்வு)

“உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே” (புத்துணர்வு)

**விடைக்கேற்ற வினா அமைக்க.**

1. டி. கே. சிதம்பரநாதர் தமது இலக்கிய இரசிகத் தன்மையால் தமிழுக்கும் தமிழருக்கும் புத்துணர்வு ஊட்டினார்.

   **வினா :** டி. கே. சிதம்பரநாதர் தமிழுக்கும் தமிழருக்கும் எவ்வாறு புத்துணர்வு ஊட்டினார்?

2. டி. கே. சி. எழுதிய கடிதங்களும் நூல் உரைகளும் அவர்தம் இலக்கிய நுகர்வுக்கடலின் சில அலைகள் எனலாம்.

   **வினா :** எவற்றை டி. கே. சி. இலக்கிய நுகர்வுக்கடலின் சில அலைகள் எனலாம்?

## தமிழாக்கம் தருக

The folk songs of TamilNadu have in them a remarkable charm just as we find in the folk songs of any other country. But what is special in these Tamil songs is, they not only possess a native charm and the aroma of the soil but have preserved in them a certain literary and artistic quality. This is so because the people who speak the language of these folk songs, the Tamils, have had a great historical past and a wonderful literary tradition. Folk songs are so old and yet so full of life that they are always new and progressively modern. These songs were born several centuries ago; they are being born every generation; they will be born and reborn over and over again!

தமிழ்நாட்டின் நாட்டுப்புறப் பாடல்கள், பிறமொழி நாட்டுப்புறப் பாடல்களைவிட ஒரு குறிப்பிடத்தக்க அழகுணர்ச்சி நிறைந்த கவர்ச்சியைத் தன்னகத்தே கொண்டிருக்கிறது. அதனால், தமிழில் உள்ள பாடல்கள் தனிச்சிறப்பு உடையன. இயற்கை அழகின் தோற்றத்தையும், சொந்த மண்ணின் மணத்தையும், குறிப்பிட்ட இலக்கிய மற்றும் கலை உணர்வுகளையும் தன்னகத்தே பாதுகாத்து வைத்துள்ளது. நாட்டுப்புறப் பாடல்கள், அவை புழங்கும் தமிழ்மொழி ஒரு பெரிய வரலாற்றைக் கடந்த அற்புதமான இலக்கியப் பாரம்பரியத்தைக் கொண்டதாக இருந்துள்ளது. நாட்டுப்புறப் பாடல்கள், மிகவும் பழைமையானவை. அது புதிய வாழ்க்கையையும் படிப்படியாக நவீனமயமாக்கப்படும் வாழ்க்கையையும் பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் ஒவ்வொரு தலைமுறையினருக்கும் மறுபடியும் மறுபடியும் தோன்றிப் புதுப்பித்து வந்துள்ளது.

**கீழ்க்காணும் பாடலின் முதலடியைக் கவனித்துப் பிற அடிகளில் உள்ள சீர்களை ஒழுங்கு செய்க.**

கோடையிலே இளைப்பாற்றிக் கொள்ளும்வகை கிடைத்த
குளிர்தருவே தருநிழலே நிழல்கனிந்த கனியே
ஓடையிலேஊறுகின்றதீஞ்சுவைத்தண்ணீரே
உகந்ததண்ணீர்இடைமலர்ந்தசுகந்தமணமலரே
மேடையிலேவீசுகின்றமெல்லியபூங்காற்றே
மென்காற்றில்விளைசுகமேசுகத்திலுறும்பயனே
ஆடையிலேஎனைமணந்தமணவாளாபொதுவில்
ஆடுகின்றஅரசேஎன்அலங்கலணிந்தருளே.

**விடை :**

MERCURY PUBLICATIONS - CHENNAI

www.Padasalai.Net

கோடையிலே இளைப்பாற்றிக் கொள்ளும்வகை கிடைத்த
குளிர்தருவே தருநிழலே நிழல்கனிந்த கனியே
ஓடையிலே ஊறுகின்ற தீஞ்சுவைத்தண் ணீரே
உகந்ததண்ணீர் இடைமலர்ந்த சுகந்தமண மலரே
மேடையிலே வீசுகின்ற மெல்லியபூங் காற்றே
மென்காற்றில் விளைசுகமே சுகத்திலுறும் பயனே
ஆடையிலே எனைமணந்த மணவாளா பொதுவில்
ஆடுகின்ற அரசேஎன் அலங்கலணிந் தருளே!

**படித்துப் பார்த்துப் படைத்துக் காட்டுக**

புத்தகத் திருவிழா தொடக்க நிகழ்ச்சிக்கு வருகை தந்த சான்றோர் குறித்த அறிமுக உரை :

பேரன்பு கொண்டோரே! பேரறிவுச் செல்வமே பெருஞ்செல்வம் எனக் கருதி வந்திருக்கும் சான்றோரே! இளைய தலைமுறையே! உங்கள் அனைவருக்கும் முதற்கண் வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

புத்தக வாசிப்பை மூச்சுக்காற்றாய்ச் சுவாசித்து வாழ்கின்ற படிப்பாளர்களாகிய உங்கள் முன்பு ஒரு படைப்பாளரை, மிகச் சிறந்த பண்பாளரை அறிமுகப்படுத்துவதில் பெருமகிழ்வு கொள்கின்றேன். சிறுவயது முதலாகத் தனக்குப் பெற்றோர்கள் அளித்த சில்லறைகளைச் சேகரித்து, ஆண்டுதோறும் புத்தகம் வாங்கும் வழக்கத்தைக் கொண்டவர். புத்தகங்களோடு வாழ்ந்து வருபவர். புத்தகத்தை வாங்குவதோடு மட்டுமல்லாமல் முழுமையாக அவற்றை வாசிப்பதும், குறிப்பெடுப்பதும் இளைய தலைமுறையினர்க்குத் தன்னம்பிக்கை அளிக்கும் கூட்டங்களில் பேசுவதும் எனப் பல்வேறு திறன்களைப் பெற்றவர்.

ஷேக்ஸ்பியர் என்னும் மாபெரும் படைப்பாளரின் பிறந்த நாளான ஏப்ரல் 23ஐ, உலகம் முழுவதும் புத்தக நாளாகக் கொண்டாடப்படுகிறது. அதற்குக் காரணம் அவரிடம் இருந்த வாசிப்பு வழக்கமே ஆகும். அவ்வகையில் வாசிப்பையே தம் வாழ்க்கையாய்க் கொண்டிருக்கும் நம் சிறப்பு விருந்தினர், நமக்கெல்லாம் முன்மாதிரியானவர். அவர் வழியில் புத்தக வாசிப்பைத் தொடர்வோம்! புதியதோர் உலகம் படைப்போம்! வெல்வோம்!

**உங்கள் பகுதி நூலகத்தில் வாசகர்களுக்கு நூலக உறுப்பினர் அட்டை வழங்க வருகைதரும் அறிஞரை அறிமுகம் செய்க.**

திரண்டுள்ள அனைவருக்கும் வணக்கம்.

நாம் இன்று இங்குத் திரண்டிருப்பதன் நோக்கத்தை அனைவரும் அறிவீர்கள். இன்று, பெருமைக்குரிய ஐயா, அறிவொளி அவர்கள் இங்கு உங்கள் அனைவருக்கும் நூலக உறுப்பினர் அட்டை வழங்க வந்துள்ளார் என்பதை உணர்ந்திருப்பீர்கள். இவரை நான் உங்களுக்கு அறிமுகம் செய்ய வேண்டியதில்லை. இருப்பினும் சில கூறி முடிக்கிறேன். இவர் சிறந்த சொற்பொழிவாளர், உன்னதமான எழுத்தாளர், உலகின் பல்வேறு பல்கலைக்கழகங்களுக்குச் சென்று, நம் தமிழின் பெருமையை, தமிழ்ப் பண்பாட்டின் சிறப்பைப் பறையறைந்து கொண்டிருப்பவர். இவர் போன்றவர்களை நாம் பெற்றிருப்பது, நம் நாட்டுக்கும் மொழிக்கும் பெருமை சேர்க்கிறது.

இவரை உங்களுக்கு அறிமுகம் செய்து வைப்பதில் நான் பெருமகிழ்ச்சியும் பெருமிதமும் கொள்கிறேன். இந்த விழாவைப் பற்றிக் குறிப்பிட்டு அழைத்ததும், முகமலர்ச்சியோடு மறுப்புத் தெரிவிக்காமல் வர உடன்பட்டார். இனி அவர் தரும் நூலக அட்டைகளைப் பெற்றுச் சென்று, இந்த நூலகத்திலுள்ள நூல்களை வீட்டிற்கு எடுத்துச் சென்று வாசித்து, மகிழ்ச்சி அடையுமாறு வேண்டுகிறேன்.

ஐயாவுக்கும் உங்களுக்கும் நன்றி. வணக்கம்.

**இலக்கிய நயம் பாராட்டுக**

செந்நெல்லும் கரும்பும் விளைந்தனவே – நல்ல
தேன்பொழி மலர்களும் விரிந்தனவே
இன்னலும் பசியும் போயொழிக – தேசம்
எழிலுடன் கூடியே நலமுறுக

பிரிவுகள் பேசியே பூசலிட்ட – பழம்
பேதமை தனைத்தள்ளி அனைவருமே
ஒருதனிக் குடும்பமாய் வாழ்ந்திடுவோம் – நம்முள்
ஒற்றுமை ஓங்கிடச் செய்திடுவோம்

தமிழன் திருநாள் பொங்கலென்றால் – அதில்
தமிழன் பண்புகள் பொங்குமன்றோ?
புவியெலாம் சேர்ந்தொரு வீடதிலே – யாரும்
புறம்பிலை என்றசொல் தமிழன்றோ?

யாதும் ஊரெனச் சாற்றியதும் – மக்கள்
யாவரும் கேளிர் என்றதுவும்
மேதினிக் குரைத்தவர் நம்முன்னோர் – இன்று
வேற்றுமை நாமெண்ணல் சரியாமோ?

– பெ. தூரன்

MERCY PUBLICATIONS CHENNAI

**ஆசிரியர் குறிப்பு :** 'பெ. தூரன்' என்று சுருக்கப் பெயரில் குறிப்பிடப் பெறுபவர், 'பெரியசாமித் தூரன்'. இவர் சிறந்த இலக்கியப் புலமையும், ஆழ்ந்த அறிவியல் அறிவும் பெற்றவர். தமிழில் பல நூல்களை எழுதியுள்ளார். குழந்தைகளுக்காகத் தாய்மொழியில் இனிய எளிய பாடல்களை எழுதி, நல்லறிவு புகட்ட முயன்றார். தமிழ்மொழியில் குழந்தைகளுக்கான கலைக்களஞ்சியத்தைப் படைத்தளித்த உழைப்பாளி.

**திரண்ட செய்தி :** இயற்கையைப் போற்ற வேண்டும். அதனால் வளம் பெருகும். உணவுப் பொருள் உற்பத்தி பெருகும். வறுமை போகும் என்பவற்றை வலியுறுத்துகிறார். முன்பு சாதி, சமய வேறுபாடுகளால் சிதைந்து அடிமைப்பட்டதைச் சுட்டிக்காட்டி, அவற்றை நீக்கி அனைவரும் ஒரு குடும்பமாக வாழவேண்டுமென அறிவுரை கூறுகிறார். ஒற்றுமையுடன் அனைவரும் ஒன்றுபட்டு வாழ்வது நல்லது என்னும் செய்தி, உறுதிபடக் கூறப்பட்டுள்ளது. தமிழர் திருநாளான பொங்கலில் தமிழ்ப்பண்பு வெளிப்பட விழா எடுத்து வாழவேண்டும் என்று சுட்டிக்காட்டுகிறார். வேற்றுமைகளை மறந்து, மனித இன உயர்வுக்குப் பாடுபட வேண்டுமென்பதை வலியுறுத்துகிறார். எளிய சொற்களில், இனிய கருத்தை அருமையாகச் சுட்டிக்காட்டியுள்ளார்.

**தொடை நயம் :**

**மோனைத்தொடை :** **ஒ**ருதனி, **ஒ**ற்றுமை; **த**மிழன், **த**மிழன்; **பு**வியெலாம், **பு**றம்பிலை; **யா**தும், **யா**வரும் என்னும் சீர்களில், முதலெழுத்து ஒன்றிவந்து, சீர்மோனை அமைந்துள்ளது.

**இயைபுத்தொடை :** விளைந்தனவே, விரிந்தனவே; போயொழிக, நலமுறுக; வாழ்ந்திடுவோம், செய்திடுவோம்; சாற்றியதும், ஏற்றதுவும் என்னும் ஈற்றுச் சீர்களில், ஓசைநயம் பொருந்தி, இயைபுத்தொடை அமைந்துள்ளது.

**சந்தநயம் :** எளிய சொற்களில் ஓசைநயம் பெறப் பாடி இன்புறுவதற்கு ஏற்ற வகையில் அமைந்துள்ளமை, சந்தநயத்தைப் புலப்படுத்தும்.

## மொழியோடு விளையாடு

**கருத்துப்படத்தைப் புரிந்துகொண்டு பத்தியாக எழுதுக.**




தமிழ் மொழியின் ஐவகை இலக்கணப் பிரிவுகளுள் 'பொருள் இலக்கணம்' தமிழர் வாழ்வுமுறை கூறுவதாகும். இந்தப் பொருள் இலக்கணம் என்பது, அகம் (அகப்பொருள்), புறம் (புறப்பொருள்) என இருவகையாகப் பிரிக்கப் பெற்றுள்ளது. அன்பு நிறை காதல் வாழ்வைப் பற்றிக் கூறும் அகப்பொருள் செய்திகளை விளக்கும் இலக்கணம் முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் என்னும் மூவகைப் பிரிவுகளைக் கொண்டுள்ளது.

முதல்பொருள் என்பது (நிகழ்வு நடைபெறும்) நிலத்தையும் பொழுதையும் குறிக்கும். நிலமானது குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என ஐந்து வகைப்படும்.

'குறிஞ்சி' என்பது மலையும் மலை சார்ந்த நிலத்தையும் குறிக்கும்.

'முல்லை' என்பது காடும் காடு சார்ந்த நிலத்தையும் குறிக்கும்.

'மருதம்' என்பது வயலும் வயல் சார்ந்த நிலத்தையும் குறிக்கும்.

'நெய்தல்' என்பது கடலும் கடல் சார்ந்த நிலத்தையும் குறிக்கும்.

'பாலை' என்பது சுரமும் சுரம் சார்ந்த நிலத்தையும் குறிக்கும்.

பொழுது என்பதைச் சிறுபொழுது, பெரும்பொழுது என இருவகைகளாகப் பிரிப்பர். சிறுபொழுது என்பது ஒருநாளின் வைகறை, காலை, நண்பகல், மாலை, எற்பாடு, யாமம் என்னும் ஆறு பிரிவுகளைக் கொண்டதாகும். பெரும்பொழுது என்பது ஓர் ஆண்டின் கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில் என்னும் ஆறு பிரிவுகளைக் கொண்டதாகும்.

'கருப்பொருள்' என்பது தெய்வம், மக்கள், புள் (பறவை), விலங்கு, ஊர், நீர், பூ, மரம், உணவு, பறை, யாழ், பண், தொழில் என்னும் பிரிவுகளைக் கொண்டது. இது ஐந்து திணைகளுக்கும் தனித்தனியே அமையும்.

MERCURY PUBLICATIONS - CHENNAI

www.Padasalai.Net

'உரிப்பொருள்' என்பது புணர்தல் புணர்தல் நிமித்தம், பிரிதல் பிரிதல் நிமித்தம், இருத்தல் இருத்தல் நிமித்தம், ஊடல் ஊடல் நிமித்தம், இரங்கல் இரங்கல் நிமித்தம் என ஐந்து வகைப்படும். இவை முறையே குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல் திணைகளுக்கு உரியனவாகும்.

**புதிர்களுக்கான விடைகளைத் தேர்ந்தெடுத்து எழுதுக. (கம்பு, மை, வளை, மதி, இதழ், ஆழி)**

1. எலியும் நுழையும்; எழிலரசி கையும் நுழையும் ______.
2. அடிக்கவும் செய்யலாம்; கோடைக்குக் கூழாகக் குடிக்கவும் செய்யலாம் ______.
3. கண்ணிலும் எழுதலாம்; வெண்தாளிலும் எழுதலாம்.
4. அறிவின் பெயரும் அதுதான்; அம்புலியின் பெயரும் அதுதான்______.
5. பூவின் உறுப்பும் நானே; புன்னகையின் பிறப்பிடமும் நானே ______.
6. வண்டியையும் இயக்கும்; பெரும் கப்பலையும் தாங்கும்.

**விடை :** 1. வளை, 2. கம்பு, 3. மை, 4. மதி, 5. இதழ், 6. ஆழி.

**எண்ணங்களை எழுத்தாக்குக.**



கத்திக்கும் ஈட்டிக்கும் இப்போது இடமில்லை!
புத்திக்கும் உழைப்புக்குமே இடம் உண்டு!

முயற்சி செய் முடிவு உன்கையில்!
உழைப்பவர்க்கே ஊதியம் கிடைக்கும்.
எண்ணித் துணிந்தால் எதுவும் கைகூடும்.
வெற்றி எப்போதும் எட்டாக் கனிதான்
ஏன் எட்டாது என முயன்று பார்!
மனம் ஊனமுற்றால் உழைக்க முடியாது
உறுதியோடு போரிட்டவனே உலகை ஆண்டான்
விதியே உன்னதம் என்றால், உன் முயற்சி என்னவானது?

நம்பிக்கை உள்ளோர் பிரச்சனைகளை மிதித்து வாய்ப்பை எதிர்நோக்குவர்!
வெற்றியை உறுதிசெய்யச் சோம்பலை விரட்டு!
அண்டவிட்டால் அழிவது உறுதி!
அச்சப்படாமல் தொட்டுப் பார்!
பயத்தைப் பலியிட்டு, உரிய காலத்தோடு கைகுலுக்கு!

ஆழ்கடல் மூழ்கியோர் முத்தெடுப்பர்.
அடுத்து முயல்வோர் இமய உச்சி மிதிப்பர்!
கண் மூடாதே. பசி நோக்காதே!
பழிமொழி கேளாதே, புகழ்மொழி தவிர்!
குறிக்கோள் ஒன்றே குறியாக நில். வெற்றி உனதே!

## நிற்க அதற்குத் தக

| நாகரிகம் | கடைப்பிடிப்பேன் |
|---|---|
| கலைவாணன், தொலைக்காட்சி பார்த்துக் கொண்டிருக்கிறான். கடைக்குச் சென்ற அவன் தாத்தா, பை நிறையப் பொருள்களைத் தூக்கிக்கொண்டு வருகிறார். சுமை தாங்காது உதவிக்கு அழைக்கிறார். தொலைக்காட்சியில் வைத்த கண் வாங்காமல் நிகழ்ச்சியொன்றினைப் பார்த்துக் கொண்டிருக்கும் அவன் என்ன செய்ய வேண்டும்? | உடனே சென்று தாத்தா தூக்கிக்கொண்டு வரும் பையை வாங்கிக்கொண்டு, அன்போடு அழைத்துவர வேண்டும். |
| உங்களது வீட்டிற்கு விருந்தினர் ஒருவர் வந்திருக்கிறார். முன்னறிவிப்பின்றி வந்திருக்கும் அவர், மிகவும் களைப்புடன் காணப்படுகிறார். நீங்கள் அவரை எவ்விதம் வரவேற்பீர்கள்? | முன்னறிவிப்பின்றி வந்தாலும், அவர் நம் வீட்டிற்கு வந்த விருந்தினர். எனவே, அன்புடன் வரவேற்று, உட்கார இடம் அளித்து, வந்த களைப்புப் போக நல்ல தண்ணீர் கொடுத்து வரவேற்பேன். அதன்பின் வந்த காரணத்தைக் கேட்பேன். |

MERCY PUBLICATIONS

### கலைச்சொல் அறிவோம்

| | | |
|---|---|---|
| ஆவணம் – Document | உப்பங்கழி – Backwater | ஒப்பந்தம் – Agreement |
| படையெடுப்பு – Invasion | பண்பாடு – Culture | மாலுமி – Sailor |

## வாழ்வியல்

## திருக்குறள்

### குறுவினாக்கள்

**1. மருத்துவத்தின் பிரிவுகளாகக் குறள் கூறுவன யாவை?**

★ நோயாளி, மருத்துவர், மருந்து, மருந்தாளுநர் என்னும் நான்கு பிரிவுகளை உடையது மருத்துவம் எனக் குறள் கூறுகிறது.

**2. படைக்குப் பாதுகாப்பாக இருப்பவை எவை?**

★ வீரம், மானம், முன்னோர்வழி நடத்தல், நம்பிக்கைக்கு உரியவராதல் என்னும் நான்கும் படைக்குப் பாதுகாப்பாக இருப்பவை ஆகும்.

**3. பகைவர் வலிமையற்று இருக்கும்போதே வென்றுவிடவேண்டும் என்னும் குறட்பாவைக் கூறுக.**

இளைதாக முள்மரம் கொல்க களையுநர்
கைகொல்லும் காழ்த்த இடத்து.

**4. எப்போது மருந்து தேவையில்லை என்று திருவள்ளுவர் கூறுகிறார்?**

★ "முன் உண்டது செரித்ததை அறிந்து, அடுத்து உண்டால், மருந்து என ஒன்று தேவையில்லை" என்று, திருவள்ளுவர் கூறுகிறார்.

### கூடுதல் வினாக்கள்

**5. இகழ்ச்சியில் கெட்டாரை எப்போது நினைத்தல் வேண்டும்?**

★ மகிழ்ச்சியில் தங்கள் கடமையை மறக்கும்போது, மறதியால் கெட்டவர்களை நினைத்துப் பார்த்தல் வேண்டும்.

**6. எண்ணியதை அடைதல் எப்போது எளிதாகும்?**

★ எண்ணியதை எப்போதும் எண்ணிக் கொண்டிருந்தால், எண்ணியதை அடைதல் என்பது எளிதாகும்.

**7. எதைக் கொடுத்து யாரைத் துணையாகக் கொள்ள வேண்டும்?**

★ முகக் குறிப்பால் அகக் குறிப்பை அறிபவரை, எதையேனும் கொடுத்தாவது துணையாக்கிக் கொள்ள வேண்டும்.

**8. கண் உரைப்பவை எவை?**

★ பகைமையையும், நட்பையும் கண் உரைத்துவிடும்.

**9. நகையேயும் வேண்டற் பாற்று அன்று – எது?**

★ பகை என்னும் பண்பற்றதை, விளையாட்டிற்குக் கூட ஒருவன் விரும்பக்கூடாது.

**10. திருவள்ளுவர் எவர் பகையைக் கொள்ளற்க என்கிறார்?**

★ திருவள்ளுவர், வில்லேர் உழவரின் பகையைக் கொண்டாலும், சொல்லேர் உழவரின் பகையைக் கொள்ளல் கூடாது என்கிறார்.

**11. உலகியற்றியான் எவ்வாறு கெடல் வேண்டும் எனத் திருவள்ளுவர் கூறுகிறார்?**

★ பிறரிடம் யாசித்து உயிர் வாழும் நிலை இருக்குமானால், அப்படிப்பட்ட உயிர் வாழ்க்கையைப் படைத்தவன், இவ்வுலகில் அலைந்து கெடட்டும் என்கிறார் திருவள்ளுவர்.

**12. ஏமாப்பில் தோணி எது? அது எப்போது பக்குவிடும்?**

★ பிறரை எதிர்பார்த்து யாசித்து வாழ்தல் என்பது, பாதுகாப்பு இல்லாத படகு ஆகும். ஈயாமை என்னும் பாறை மோதினால், அது உடைந்துவிடும்.

MERCY PUBLICATIONS - CHENNAI

www.Padasalai.Net

## சிறுவினாக்கள்

**1. உருவக அணிக்குத் திருக்குறள் ஒன்றை எடுத்துக்காட்டாகத் தந்து விளக்குக.**

★ உவமானத்தின் தன்மையை உவமேயத்தின்மேல் ஏற்றிக் கூறுவது உருவகம். இவ்வகை உருவகம் இடம் பெற்றுள்ள செய்யுளை, உருவக அணிச் செய்யுள் எனக் கூறுவர்.

எ – கா: இரவென்னும் ஏமாப்பில் தோணி கரவென்னும்
பார்தாக்கப் பக்கு விடும்.

★ **விளக்கம் :** இக்குறளில் ‘இரவு’ (யாசித்தல்) ‘ஏமாப்புஇல்’ (பாதுகாப்பு இல்லாத) தோணியாகவும், ‘கரவு’ (ஈயாமை–கொடுக்காமை) ‘பார்’ (பாறை) ஆகவும் உருவகம் செய்யப் பெற்றுள்ளன. எனவே, உருவக அணி அமைந்துள்ளது.

**2. இளைதாக முள்மரம் கொல்க களையுநர்
கைகொல்லும் காழ்த்த இடத்து – இக்குறட்பாவில் பயின்றுவரும் அணியை விளக்குக.**

★ இக்குறட்பாவில் ‘பிறிதுமொழிதலணி’ பயின்று வந்துள்ளது.

★ உவமானத்தைக் கூறி, உவமேயத்தைப் பெறவைப்பது, பிறிதுமொழிதல் அணியாகும்.

★ ‘சிறியதாக இருக்கும்போதே முள்மரத்தைக் களைந்துவிட வேண்டும். முதிர்ந்தால் வெட்டுபவரின் கையை வருத்தும்’ என்னும் உவமானத்தைக் கூறி, “பகைவர் வலிமை பெறாது இருக்கும்போதே அழித்துவிட வேண்டும். வலிமை பெற்றால் வெல்லுவது எளிதாக இருக்காது” என்னும் உவமேயத்தைப் பெறவைத்தமையால், ‘பிறிதுமொழிதலணி’ பயின்று வந்துள்ளது.

**3. மருந்து, மருத்துவர், மருத்துவம் ஆகியன பற்றித் திருக்குறள் கூறுவன யாவை?**

★ முன்னர் உண்டது செரித்ததை அறிந்து உண்டால், மருந்து என ஒன்று உடலுக்குத் தேவை இல்லை.

★ நோயையும், அதன் காரணத்தையும் அதை நீக்கும் வழியையும் ஆராய்ந்து, நோயாளியின் வயதையும், நோயின் அளவையும், மருத்துவம் செய்தற்குரிய காலத்தையும் ஆராய்ந்து, அதன்பின் மருத்துவர் செயல்பட வேண்டும்.

★ மருத்துவம் என்பது நோயாளி, மருத்துவர், மருந்து, மருந்தாளுநர் என்னும் நான்கு வகைக்குள் அடங்கும் என்று, திருவள்ளுவர் கூறியுள்ளார்.

## கூடுதல் வினாக்கள்

**4. மறதி குறித்துத் திருவள்ளுவர் கூறுவன யாவை?**

★ மகிழ்ச்சி மிகுதியால் ஒருவன் தான் ஆற்ற வேண்டிய கடமையை மறக்கும்போது, மறதியால் கெட்டவர்களை அவன் நினைத்துப் பார்த்தல் வேண்டும். மறவாமல் எப்போதும் எண்ணியதையே எண்ணிக்கொண்டு இருப்பதனால், எண்ணியதை அடைவது எளிதாகும் எனத் திருவள்ளுவர் கூறியுள்ளார்.

**5. ‘குறிப்பறிதல்’ வாயிலாகத் திருவள்ளுவர் கூறும் செய்திகளை எழுதுக.**

★ முகக்குறிப்பினால் அகக்குறிப்பை அறிந்துகொள்ளும் ஆற்றலுடையவருக்கு, எப்பொருளையாவது கொடுத்து நமக்குத் துணையாக்கிக் கொள்ளல் வேண்டும்.

★ ஏனென்றால், கண்ணின் குறிப்புகளை உணர்ந்து அறிபவரைப் பெற்றால், அவரது கண்ணே பகைமை யையும் நட்பையும் அறிந்து உணர்த்தும் எனக் ‘குறிப்பறிதல்’ சிறப்பைத் திருவள்ளுவர் கூறுகிறார்.

**6. ‘பகைத்திறம் தெளிதல்’ குறித்துத் திருவள்ளுவர் கூறுவனவற்றை விளக்குக.**

★ ‘பகைமை’ என்பது பண்பற்ற செயல். அதனை ஒருவன் விளையாட்டுக்குக்கூட விரும்பக்கூடாது.

★ வில்லைக் கருவியாக உடைய வீரனின் பகைமையைத் தேடிக் கொண்டாலும், சொல்லைக் கருவியாகக் கொண்ட அறிஞரின் பகையை உருவாக்கிக் கொள்ளல் கூடாது.

★ முள்மரத்தை முதிர்ந்தபின் வெட்டுபவனின் கைகளை அது வருத்தும். அதனால் பகைமையை ஆராய்ந்து அறிந்து, வலிமை பெறும் முன்பே களைய வேண்டும் என்பதைத் திருவள்ளுவர் வலியுறுத்துகிறார்.

MERCY PUBLICATIONS - CHENNAI

**7. நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்**
**வாய்நாடி வாய்ப்பச் செயல். – இதில் பயின்றுள்ள அணியைச் சுட்டி விளக்குக.**

★ இதில் **'சொற்பொருட் பின்வரு நிலையணி'** அமைந்துள்ளது.

★ முன்னர் வந்த சொல், அதே பொருளில் பின்னரும் பலமுறை வருவது, சொற்பொருட் பின்வருநிலையணியாகும். இக்குறளில் 'நாடி' என்னும் சொல், 'ஆராய்ந்து' என்னும் பொருளில் பலமுறை வந்துள்ளது. எனவே, 'சொற்பொருட் பின்வருநிலையணி' பயின்றுள்ளது

## நெடுவினா

**1. வாழ்வின் உயர்வுக்கு உறுதுணையாக நீங்கள் கருதும் குறட்பாக்கள் சிலவற்றை விளக்கிக் கட்டுரையாக்குக.**

வாழ்க்கையின் முன்னேற்றத்திற்கு அரிய பண்புகள் சிலவற்றை வளர்த்துக்கொள்ள வேண்டும். அதற்கு உறுதுணையாகப் பல செய்திகளைத் திருக்குறள் தன்னிடத்தில் பெற்றுள்ளது. இனிக் குறளின் துணையுடன் வாழ்வின் உயர்வுக்கு உதவும் செய்திகளை ஆராய்வோம்.

**மறதியை விலக்கு :**

'மறதி' என்பது மிகமிகக் கெட்ட பழக்கம். எதனையும் காலம் தாழ்த்திச் செய்வதால், 'மறதி' என்பது குடி கொள்ளும். மறதியைப் போக்க, நாம் எண்ணியதை மீண்டும் மீண்டும் நினைத்துச் செயல்பட வேண்டும்.

**வாழத் தெரிந்துகொள் :**

வாழ்க்கை என்பது பலருடன் சேர்ந்து வாழ்வதாகும். எனவே, பிறருடன் பழகும்போது அவர்தம் மனக் குறிப்பை அறிந்து பழகவேண்டும். மனக்கருத்தை முகக்குறியே காட்டிவிடும். ஆகையால் எவருடனும் முகம் பார்த்துப் பழக வேண்டும். அதனால் பகைமையையும் நட்பையும் பிரித்துப் புரிந்துகொள்ள முடியும்.

பிறரிடம் பகைமை பாராட்டுவதனை விளையாட்டுக்காகக்கூட விரும்பக் கூடாது. அச்செயல், தெளிவான வாழ்க்கையை அமைத்துக் கொள்ளப் பயன்படாது. முகக்குறிப்பால் அகக்குறிப்பை அறியும் ஆற்றலுடையவருக்கு, ஏதேனும் ஒன்றைக் கொடுத்தாவது துணையாக்கிக் கொள்வது, நம் வாழ்க்கைக்குப் பக்கபலமாக அமையும்.

**பிரச்சனை போக்கு :**

எந்தப் பிரச்சனையாக இருந்தாலும், அது தோன்றும்போதே களைந்து எறிந்து தீர்வு காண்பது நற்பயன் தரும். இல்லையானால் அது பெரிதாக வளர்ந்து, பெருந்துன்பத்தை ஏற்படுத்தும். இதனையே திருவள்ளுவர்,

"இளைதாக முள்மரம் கொல்க களையுநர்
கைகொல்லும் காழ்த்த இடத்து"

**எனக் கூறியுள்ளார்.**

**நோயற்ற வாழ்வு :**

உடல் நோயுற்றால், மருத்துவரையும் மருந்தையும் தேடிச் செல்லவேண்டி இருக்கும். இத்துன்ப நீக்கத்திற்கு எளியதொரு வழியைத் திருவள்ளுவர், 'மருந்து' என்னும் அதிகாரத்தில் கூறியுள்ளார். நாம் உண்ட உணவு செரித்ததை அறிந்து, அடுத்த வேளை உணவையும் அளவறிந்து உண்டால், மருந்து என ஒன்று தேவையில்லை என்று, திருவள்ளுவர் கூறுவதை அறிந்து கடைப்பிடிக்கலாம். அத்துடன் நோய் வந்தால், நோய்க்கான அடிப்படையை ஆராய்ந்து, அதைப் போக்குவதற்கு மருந்தளிக்கும் மருத்துவரைத் தேடிச்செல்ல வழியும் கூறுகிறார்.

**கொடியது களைக :**

உலகில் வறுமை என்பதே கொடியது. அந்தக் கொடுமையைப் போக்கப் பொருள் இல்லாதவர்க்கு நம்மால் இயன்ற பொருளைக் கொடுத்து வாழ்வது சிறந்த வாழ்வாக அமையும். இப்படி நம் வாழ்வின் உயர்வுக்கு உறுதுணையாகும் கருத்துகள், திருக்குறட்பாக்களில் மிகுதியாகக் காணப்படுகின்றன. வாழ்விற்குப் பெருமை சேர்க்கும் நெறிகளைக் கொண்டமைந்த நூல் திருக்குறள். எனவே, திருக்குறளைத் தெளிவாகக் கற்று, மனத்தில் இருத்தி, கற்றதன்வழி வாழ்வை நடத்தி உயர்வோமாக.

MERCY PUBLICATIONS - CHENNAI

www.Padasalai.Net

## கற்பவை கற்றபின்

1. படத்துக்குப் பொருத்தமான திருக்குறளைக் கண்டுபிடிக்க.



அ) வில்லேர் உழவர் பகைகொளினும் கொள்ளற்க
சொல்லேர் உழவர் பகை.

ஆ) இரவென்னும் ஏமாப்பில் தோணி கரவென்னும்
பார்தாக்கப் பக்கு விடும்.

இ) உள்ளியது எய்தல் எளிதுமன் மற்றும்தான்
உள்ளியது உள்ளப் பெறின்.

2. கவிதைக்குப் பொருந்தும் திருக்குறளைக் கண்டறிக.

கொடி தவித்ததைப் பாரி
அறிந்துகொண்டான்
மயில் தவித்ததைப் பேகன்
உணர்ந்துகொண்டான்
பிள்ளையின் பரிதவிப்பைத்
தாய்அறிவாள்
பளிங்கு முகத்தைப் படித்துக்கொள்
அப்படிப் படித்தவர்களைப்
பிடித்துக்கொள்.

அ) இகழ்ச்சியில் கெட்டாரை உள்ளுக தாம்தம்
மகிழ்ச்சியின் மைந்துறும் போழ்து.

ஆ) குறிப்பில் குறிப்புணர் வாரை உறுப்பினுள்
யாது கொடுத்தும் கொளல்.

இ) இளைதாக முள்மரம் கொல்க களையுநர்
கைகொல்லும் காழ்த்த விடத்து.

3. மகிழ்ச்சியின் மைந்துறும் போழ்து ______ நினை.
அ) முகக்குறிப்பை அறிந்தவரை ஆ) எண்ணியதை எண்ணியவரை
இ) மறதியால் கெட்டவர்களை ஈ) சொல்லேர் உழவரை
**விடை :** இ) மறதியால் கெட்டவர்களை

4. பொருள் கூறுக.
அ) ஏமம் – பாதுகாப்பு
ஆ) மருந்துழைச் செல்வான் – மருந்தாளுநர்

5. இலக்கணக்குறிப்புத் தருக.
அ) கெடுக – வியங்கோள் வினைமுற்று
ஆ) குறிப்புணர்வார் – வினையாலணையும் பெயர்

## கூடுதல் வினாக்கள்

6. முகக்குறிப்பால் அகக் குறியை அறிபவரை ______ ஆக்கிக்கொள்ள வேண்டும்.
அ) பகை ஆ) நகை இ) துணை ஈ) இணை
**விடை :** இ) துணை

7. பகைமை என்னும் பண்பை ______ கூட ஒருவன் விரும்பக் கூடாது.
அ) மறதியாக ஆ) இகழ்ச்சியாக இ) குறிப்பாக ஈ) விளையாட்டாக
**விடை :** ஈ) விளையாட்டாக

8. எவருடைய பகையைக் கொள்ளக்கூடாது?
அ) வில்லேர் உழவர் ஆ) உழவர் இ) மருத்துவர் ஈ) சொல்லேர் உழவர்
**விடை :** ஈ) சொல்லேர் உழவர்

9. பாதுகாப்பற்ற படகு போன்றது ______.
அ) மறதியுடன் வாழ்வது ஆ) கண்ணோட்டமின்றி வாழ்தல்
இ) இரந்து வாழ்தல் ஈ) பகையோடு வாழ்தல்
**விடை :** இ) இரந்து வாழ்தல்

10. மகிழ்ச்சியின் மைந்துறும்போது ______ உள்ளுக.
அ) குறிப்பில் குறிப்புணர்வாரை ஆ) மானம் மாண்ட வழிச்செலவு
இ) பகை என்னும் பண்பில் அதனை ஈ) இகழ்ச்சியின் கெட்டாரை
**விடை :** ஈ) இகழ்ச்சியின் கெட்டாரை

MERCY PUBLICATIONS - CHENNAI

11. கொடுத்தும் கொளல் வேண்டும் – எவரை ?
அ) இகழ்ச்சியில் கெட்டாரை ஆ) பகைமையைக் கொண்டாரை
இ) குறிப்பில் குறிப்புணர்வாரை ஈ) கண்ணியம் இல்லாரை
**விடை :** இ) குறிப்பில் குறிப்புணர்வாரை

12. நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல் – இதில் பயின்றுள்ள அணி
அ) பிறிதுமொழிதலணி ஆ) பொருள் பின்வருநிலையணி
இ) சொற்பின்வருநிலையணி ஈ) சொற்பொருள் பின்வருநிலையணி
**விடை :** ஈ) சொற்பொருள் பின்வருநிலையணி

13. ‘இளைதாக முள்மரம்’ எனத் தொடங்கும் குறளில் ஈற்றடி ஈற்றுச்சீர், ______ என்னும் வாய்பாட்டால் முடிந்துள்ளது.
அ) நாள் ஆ) மலர் இ) காசு ஈ) பிறப்பு
**விடை :** ஈ) பிறப்பு

## அலகிடுதல்

**1. உற்றான் அளவும் பிணியளவும் காலமும்
கற்றான் கருதிச் செயல் – அலகிட்டு வாய்பாடு தருக.**

| சீர் | அசை | வாய்பாடு |
|---|---|---|
| உற் / றான் | நேர் நேர் | தேமா |
| அள / வும் | நிரை நேர் | புளிமா |
| பிணி / யள / வும் | நிரை நிரை நேர் | கருவிளங்காய் |
| கா / லமும் | நேர் நிரை | கூவிளம் |
| கற் / றான் | நேர் நேர் | தேமா |
| கரு / திச் | நிரை நேர் | புளிமா |
| செயல் | நிரை | **மலர்** |

**2. குறிப்பில் குறிப்புணர் வாரை உறுப்பினுள்
யாது கொடுத்தும் கொளல் – அலகிட்டு வாய்பாடு தருக.**

| சீர் | அசை | வாய்பாடு |
|---|---|---|
| குறிப் / பில் | நிரை நேர் | புளிமா |
| குறிப் / புணர் | நிரை நிரை | கருவிளம் |
| வா / ரை | நேர் நேர் | தேமா |
| உறுப் / பினுள் | நிரை நிரை | கருவிளம் |
| யா / து | நேர் நேர் | தேமா |
| கொடுத் / தும் | நிரை நேர் | புளிமா |
| கொளல் | நிரை | **மலர்** |

# உள்நிலைத் தேர்வு

நேரம் : 40 நிமிடங்கள் மதிப்பெண் : 25

**I. பலவுள் தெரிக. 8 × 1 = 8**

1. ஆனந்தரங்கருக்குத் தொடர்பில்லாதது எது?
அ) மொழிபெயர்ப்பாளர் ஆ) இந்தியாவின் பெப்பிசு
இ) தலைமைத் துவிபாஷி ஈ) உலக நாட்குறிப்பு இலக்கியத்தின் தந்தை

MERCY PUBLICATIONS - CHENNAI

2. உறுபகை, இடன் ஆகிய சொற்களின் இலக்கணக் குறிப்பு ______.
அ) உரிச்சொல்தொடர், ஈற்றுப்போலி ஆ) வினைத்தொகை, இடவாகுபெயர்
இ) வினையெச்சம், வினைத்தொகை ஈ) பெயரெச்சம், பண்புத்தொகை

3. பகையும் வறுமையும் நோயும் தீண்டாப் பொருள்வளம் நிறைந்த நகர் ______.
அ) பாக்தாத் நகர் ஆ) மக்கா நகர் இ) மதீனா நகர் ஈ) முத்து நகர்

4. 'பிம்பம்' என்பது, ______ வகை சார்ந்தது.
அ) புதினம் ஆ) குறும் புதினம் இ) புதுக்கவிதை ஈ) சிறுகதை

5. பா (செய்யுள்) எத்தனை வகைப்படும்?
அ) இரண்டு ஆ) மூன்று இ) நான்கு ஈ) ஆறு

6. பிரபஞ்சனின் இயற்பெயர் ______.
அ) ரங்கராஜன் ஆ) ராஜேந்திரன் இ) வைத்தியலிங்கம் ஈ) சிவலிங்கம்

7. சரியானவற்றைத் தேர்ந்தெடு.
அ) வரை – மலை ஆ) வதுவை – திருமணம்
இ) வாரணம் – யானை ஈ) புடவி – கடல்
i) அ, ஆ, இ – சரி; ஈ – தவறு ii) ஆ, இ, ஈ – சரி; அ – தவறு
iii) அ, இ, ஈ – சரி; ஆ – தவறு iv) அ, ஆ, ஈ – சரி; இ – தவறு

8. 'EPHEMERIDES' என்பதற்கு, ______ என்பது பொருள்.
அ) ஒரு மாதத்துக்கான முடிவு ஆ) ஒரு நாளுக்கான முடிவு
இ) வரலாறு ஈ) ஓர் ஆண்டுக்கான முடிவு

## II. எவையேனும் ஐந்தனுக்கு விடை தருக. 4 × 2 = 8

9. ஆனந்தரங்கரின் வருணனைத் திறனுக்கு ஓர் எடுத்துக்காட்டுத் தருக.

10. "ஊனமில் ஊக்கமும் ஒளிரக் காய்த்தநல்
தீன்எனுஞ் செல்வமே பழுத்த சேணகர்"– இப்பாடலடிகளில் ஒளிரக் காய்த்தது எது? பழுத்தது எது?

11. எப்போது மருந்து தேவையில்லை என்று திருவள்ளுவர் கூறுகிறார்?

12. ஈரசைச் சீர்களுக்கு வழங்கப்படும் வேறு பெயர்கள் யாவை?

13. ரசிகர் – தமிழ்ச்சொல் எழுதுக. மாநில மேலவை – ஆங்கிலக் கலைச்சொல் தருக.

## III. எவையேனும் இரண்டனுக்கு விடை தருக. 2 × 4 = 8

14. ஆனந்தரங்கர், ஒரு வரலாற்று ஆசிரியர் என்பதைப் பாடப் பகுதிவழி எடுத்துக்காட்டுக.

15. "மறுவிலா அரசென இருந்த மாநகர்" – உவமையைப் பொருளுடன் விளக்குக.

16. மேகத்திடம் கூறுவதுபோலத் தோழி தலைவனுக்கு உணர்த்திய இறைச்சிப் பொருள் யாது?

17. ஆசிரியப்பாவின் பொது இலக்கணத்துள், எவையேனும் நான்கினைக் கூறுக.

## IV. பின்வரும் வினாக்களில் ஏதேனும் ஒன்றனுக்கு விரிவான விடை தருக. 1 × 5 = 5

18. 'பிம்பம்' கதையின் வாயிலாகப் பிரபஞ்சன் தெளிவுபடுத்தும் மனித முகங்கள் பற்றி விவரிக்க.

19. "மதீனா நகரம் ஒரு வளமான நகரம்" என உமறுப்புலவர் வருணிக்கும் செய்திகளைத் தொகுத்து எழுதுக.

20. "தாம் வாழ்ந்த காலகட்டத்தின் நாகரிகப் புதையலாக நாட்குறிப்பைப் பயன்படுத்தியவர் ஆனந்தரங்கர்" என்பதை நிறுவுக.

MERCY PUBLICATIONS - CHENNAI

# இயல் – 6

## உரைநடை உலகம்
## காலத்தை வென்ற கலை

### குறுவினாக்கள்

**1. இந்தியக் கட்டடக் கலையின் மூன்று வகைகள் யாவை?**

★ நாகரம், வேசரம், திராவிடம்.

**2. ஒலோகமாதேவீச்சுரம் கோவில் கல்வெட்டில் காணலாகும் பெண் அதிகாரிகளின் பெயர்களிலிருந்து நீங்கள் அறிவது யாவை?**

★ ஒலோகமாதேவீச்சுரம் கோவில் கல்வெட்டில் 'எருதந் குஞ்சர மல்லி' என்ற பெண் அதிகாரி பற்றியும், இன்னொரு கல்வெட்டில் 'சோமயன் அமிர்தவல்லி' என்ற பெண் அதிகாரி பற்றியும் குறிப்புகள் உள்ளன.

★ இதனால் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே, பெண்கள் அதிகாரிகளாகப் பணிபுரிந்தனர் என்பதை அறிந்துகொள்ள முடிகிறது.

### கூடுதல் வினாக்கள்

**4. கோபுரம், விமானம் – வேறுபாடு என்ன?**

★ நுழைவு வாயிலின்மேல் அமைக்கப்படுவது கோபுரம்.

★ 'கருவறை' என்னும் அகநாழிகையின்மேல் அமைக்கப்படுவது விமானம்.

**5. பிற்காலச் சோழர்களின் தனி அடையாளம் எது?**

★ தஞ்சைப் பெரிய கோவிலில் முதலில் உள்ள கேரளாந்தகன் திருவாயில், அடுத்து உள்ள இராசராசன் திருவாயில் ஆகிய இரண்டு வாயில்களிலும் கோபுரங்கள் உள்ளன. இவை பிற்காலச் சோழர்களின் சிறப்பான தனி அடையாளங்கள்.

**6. கற்றளிக் கோவில்கள் சிலவற்றைக் கூறுக.**

★ மகாபலிபுரம் கடற்கரைக் கோவில், காஞ்சிபுரம் கைலாசநாதர் கோவில், பனைமலைக் கோவில், தஞ்சைப் பெரிய கோவில் ஆகியன, கற்றளிக் கோவில்களாகும்.

**7. 'கற்றளி'க் கோவிலை முதலில் உருவாக்கியவன் யார்?**

★ கருங்கற்களை ஒன்றன்மேல் ஒன்றாக அடுக்கிக் 'கற்றளி'க் கோவிலை கி.பி. ஏழாம் நூற்றாண்டில், இரண்டாம் நரசிம்மவர்ம பல்லவ மன்னன் உருவாக்கினான்.

**8. பழங்காலத்தில் கோவில்கள் எப்படிக் கட்டப்பட்டன?**

★ பழங்காலத்தில் கோவில்களை மண்ணால்கட்டி, மேலே மரத்தால் சட்டகம் இட்டனர்.

★ அவற்றின்மேல் செப்பு, பொன் தகடுகளைக் கூரையாக வேய்ந்தனர்.

★ அடுத்து, செங்கற்களை அடுக்கிக் கோவில்களைக் கட்டினர்.

**10. குடைவரைக் கோவில் என்பது யாது?**

★ செங்கல், சுண்ணாம்பு, மரம், உலோகம் முதலானவற்றைப் பயன்படுத்தாமல், மலைகளைக் குடைந்து அமைக்கப்பட்ட கோவில், குடைவரைக் கோவிலாகும்.

### சிறுவினா

**1. ஃப்ரெஸ்கோ ஓவியங்கள், கற்றளிக் கோவில்கள் குறித்து நீவிர் அறிவன யாவை?**

**ஃபிரெஸ்கோ ஓவியங்கள் :**

★ 'ஃபிரெஸ்கோ' என்னும் இத்தாலியச் சொல்லிற்குப் 'புதுமை' என்று பொருள். சுண்ணாம்புக் காரைப்பூச்சுமீது, அதன் ஈரம் காயும்முன் வரையப்படும் பழமையான ஓவியக் கலைநுட்பம்.

★ ஃபிரெஸ்கோ வகை ஓவியங்களை அஜந்தா, எல்லோரா, சித்தன்னவாசல் முதலான இடங்களில் காணலாம்.

MERCY PUBLICATIONS - CHENNAI

www.Padasalai.Net

**கற்றளிக் கோவில்கள் :**

★ செங்கற்களை ஒன்றன்மேல் ஒன்றாக அடுக்கிக் கோவில் கட்டுவதுபோல், கருங்கற்களை அடுக்கிக் கோவில் கட்டுவது 'கற்றளி' எனப்படும். மகாபலிபுரம் கடற்கரைக்கோவில், காஞ்சி கைலாச நாதர்கோவில், பனைமலைக்கோவில் ஆகியவை, கற்றளிக் கோவில்களுக்குச் சான்றுகளாகும்.

## கூடுதல் வினாக்கள்

**2. கற்றளிக் கோவில்கள் என்றால் என்ன? எடுத்துக்காட்டுகள் தருக.**

★ செங்கற்களை ஒன்றன்மேல் ஒன்றாக அடுக்கிக் கட்டுவதைப்போல் கருங்கற்களை அடுக்கிக் கட்டுவதற்குக் 'கற்றளி' என்று பெயர். இவ்வடிவத்தை ஏழாம் நூற்றாண்டில் பல்லவ மன்னன் இரண்டாம் நரசிம்மவர்மன் உருவாக்கினான்.

★ மகாபலிபுரம் கடற்கரைக் கோவில், காஞ்சிபுரம் கைலாசநாதர் கோவில், பனைமலைக்கோவில் ஆகியவற்றைக் கற்றளிக் கோவில்களுக்கு உதாரணங்களாகச் சொல்லலாம்.

★ அந்தவகையில் இராசராசசோழன் கட்டியது மிகப் பெரிய கற்றளிக் கோவிலாகும். 'தட்சிணமேரு' என இராசராசனால் பெருமையுடன் அழைக்கப்பட்ட தஞ்சைப் பெரியகோவில் நம் நாட்டிலுள்ள கற்றளிக் கோவில்களில் பெரியதும் உயரமானதுமாகும்.

**3. கோவில்கள் வெறும் வழிபாட்டுத் தலங்கள் மட்டுமல்ல – நிறுவுக.**

★ பெரிதாகக் கட்டப்பட்ட தமிழகக் கோவில்கள், வெறும் வழிபாட்டுத் தலங்களாக மட்டும் இல்லை.

★ இசை, நடனம், நாடகம் முதலான அருங்கலைகள், அக்கோவில்களில் போற்றி வளர்க்கப்பட்டன.

★ மக்கள் ஒன்றுகூடும் இடங்களாகக் கோவில்கள் இருந்ததனால், மக்களுக்குத் தெரிவிக்க வேண்டிய செய்திகள் அனைத்தையும் கல்வெட்டுகளாகப் பொறித்தனர்.

★ பஞ்சம் ஏற்படும் காலத்தில், மக்களுக்கு உதவுவதற்காகத் தானியக் கிடங்குகளையும் கோவில்களில் அமைத்திருந்தனர். கருவூலமாகவும், மருத்துவமனையாகவும், போர்க்காலங்களில் படைவீரர்கள் தங்கும் இடமாகவும் கோவில்கள் பயன்பட்டன.

**4. தஞ்சைப் பெரிய கோவில் விமான அமைப்பின் சிறப்பினை விளக்குக.**

★ கற்றளிக் கோவில்களிலேயே மிகமிக உயரமானதும் பெரியதும் தஞ்சைப் பெரிய கோவிலாகும். முழுவதும் கருங்கற்களை ஒன்றன்மேல் ஒன்றாக அடுக்கிக் கட்டப்பட்ட கோவில் இது.

★ ஏறத்தாழ ஆறு ஆண்டுகள் முயன்று, இராசராச சோழனால் இது கட்டி முடிக்கப்பட்டது.

★ இக்கோவில் கருவறை விமானம், 216 அடி உயரத்தையும், 13 தளங்களையும் கொண்டுள்ளது.

★ இதனை இராசராசன், 'தட்சிணமேரு' எனப் பெருமையுடன் அழைத்தான்.

**5. கோவில் கோபுரம் அமைக்கும் மரபு குறித்து எழுதுக.**

★ பழமையான கோவில்களில் கோபுரங்கள் சிறியனவாக இருந்தன. வெளிக்கோபுரம் உயரமாகவும், உள்கோபுரம் உயரம் குறைவாகவும் இரண்டு கோபுரம் அமைக்கும் மரபை இராசராசன் தோற்றுவித்தான்.

★ 12ஆம் நூற்றாண்டில் கோபுரங்கள் அமைப்பு, தனிச்சிறப்புப் பெற்றது. நான்கு புறங்களில், நான்கு கோபுரங்கள் எழுப்பும் மரபு, இரண்டாம் குலோத்துங்கச் சோழன் காலத்தில் தொடங்கியது.

★ புகழ்பெற்ற கோவில்கள் பலவற்றில் மிக உயரமான கோபுரங்களை எழுப்பியது விஜயநகர அரசு. கோபுரங்களின் கீழ்ப்பகுதி கருங்கல்லாலும், மேற்பகுதி செங்கற்களாலும் கட்டி இருப்பர்.

★ காஞ்சி, தில்லை, திருவண்ணாமலை, திருவரங்கம், மதுரை ஆகிய இடங்களிலுள்ள கோவில் கோபுரங்கள், நூற்றைம்பது அடி உயரத்திற்குமேல் இருக்கும்.

**6. 'கலை' என்பது குறித்து நீ அறிவன யாவை?**

★ மனிதனின் படைப்புத் திறனால் உருவானது கலை. கலை, நம் மனத்தில் அழகுணர்வைத் தூண்டி மகிழ்ச்சியைத் தருகிறது. நுண்கலை, பயன்கலை, பருண்மைக்கலை, கவின்கலை, நிகழ்த்துகலை எனப் பலவிதமாகப் பிரிப்பர்.

★ கலை என்பது, ஒரு சமூகத்தின் நாகரிகத்தையும் பண்பாட்டு மேன்மையையும் பிரதிபலிக்கிறது.

★ சிற்பம், கட்டடம், ஆடல், பாடல் முதலான கலைகளில், தமிழகம் பழங்காலத்திலேயே சிறப்புற்றிருந்தது.

MERCY PUBLICATIONS - CHENNAI

## நெடுவினா

**1. 'கல்லும் கதை சொல்லும்' – என்னும் தொடர், தஞ்சைப் பெரிய கோவிலுக்குப் பொருந்துவதை விளக்கி எழுதுக.**

**காலத்தை வென்று நின்ற கலை :**

ஒரு சமூகத்தின் நாகரிகம், பண்பாட்டு மேன்மைகளைப் பிரதிபலிப்பது கலை. தஞ்சைப் பெரிய கோவில், தமிழ்ச் சமுதாயத்தின் கலையாற்றலுக்குச் சிறந்த எடுத்துக்காட்டு. அந்தக் கருங்கல் கலைச்செல்வம், தமிழரின் வரலாற்றுப் பெருமைகளை இன்றளவும் கதையாகக் கூறிக் கொண்டிருக்கிறது. தஞ்சையில் அமைந்துள்ள கோவில், இராசராச சோழனால் 11ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டது. கருங்கற்களே இல்லாத நிலப்பரப்பில், கருங்கற் கொண்டு 216அடி உயரம் உடையதாகவும், கருவறை விமானம், 13 தளங்களை உடையதாகவும் கட்டப்பட்டது.

**கதை சொல்லும் கல்வெட்டு :**

சுற்றுச்சுவரில் அமைந்துள்ள கல்வெட்டுச் செய்திகள், எண்ணற்ற பழமையான வரலாற்றைக் கூறுகின்றன. கதை சொல்லும் அந்தக் கல் இசை, நடனம், நாடகம் எனப் பல அருங்கலைகளைப் பேணி வளர்த்த செய்தியைத் தன்னுள் கொண்டுள்ளது. பஞ்ச காலத்தில் மக்களுக்கு உதவும் தானியக் கிடங்குகளைத் தன்னிடம் கொண்டிருந்ததை அறிய முடிகிறது. கருவூலமாக, மருத்துவமனையாக, படைவீரர் தங்கும் கூடமாகக் கோவில் பயன்பட்ட கதைகளைக் கேட்டறிய முடிகிறது.

**கோவில் உருவான கதையைக் கூறுகிறது :**

கோவிலை உருவாக்க மக்களும் அதிகாரிகளும் செயல்பட்டதைக் கதைபோல் எண்ணிப் பார்க்கச் செய்கிறது. இராசராசன் அமைத்த கோவிலின் முன்வாயில்கள், எண்ணற்ற வரலாற்றுக் கதைகளைக் கூறுகின்றன.

**ஓவியங்கள் கூறும் கதை :**

கோவிலின் கருவறைத் தளங்களில் உள்ள சுற்றுக்கூடம், சாந்தார நாழிகைப் பகுதிச் சுவர்களில், தட்சிணாமூர்த்தி ஓவியம், சுந்தரர் வரலாறு, திரிபுராந்தகர் ஓவியம் முதலியவற்றைப் பெரிய அளவில் வரைந்து வைத்துள்ளதை, இன்றளவும் காணமுடிகிறது. கோவில் கட்டுவதில் புதிய மரபு படைத்த இராசராசன் அமைத்த சிலைவடிவங்கள், வண்ண ஓவியங்கள் என யாவும், ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே தமிழர் கலை வளர்த்ததைக் கதைகதையாக இன்றும் இந்தப் பெரிய கோவில் நமக்குக் கூறுகிறது.

**கல் சொல்லும் கதை :**

ஆண்களே அன்றிப் பெண்களும் அதிகாரிகளாகப் பணி புரிந்த செய்தியைக் கல்வெட்டுகள் கதைபோல் பாதுகாத்து வைத்துள்ளன. தஞ்சைப் பெரிய கோவிலை ஒருமுறை காணும்போது, 'கல்லும் கதை சொல்லும்' என்பது தெளிவாகப் புலப்படும்.

## பலவுள் தெரிக

1. கூற்று 1 : தஞ்சைப் பெரியகோவிலிலுள்ள ஓவியங்களை எஸ். கே. கோவிந்தசாமி கண்டறிந்தார்.
   கூற்று 2 : அங்குள்ள சோழர்காலத்து ஓவியங்கள், ஃப்ரெஸ்கோ வகையைச் சார்ந்தவை

   அ) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு ஆ) கூற்று இரண்டும் தவறு
   இ) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி ஈ) கூற்று இரண்டும் சரி

   **விடை :** ஈ) கூற்று இரண்டும் சரி

## கூடுதல் வினாக்கள்

2. மனிதகுல வளர்ச்சியுடன் பின்னிப் பிணைந்தவை ______.

   அ) கல்வியும் தொழிலும் ஆ) கல்வியும் கலையும்
   இ) கலையும் அறிவியலும் ஈ) தொழிலும் அறிவியலும்

   **விடை :** இ) கலையும் அறிவியலும்

3. ஒரு சமூகத்தின் நாகரிகத்தையும் பண்பாட்டு மேம்பாட்டையும் பிரதிபலிப்பது ______.

   அ) கல்வி ஆ) அறிவியல் இ) கோவில் ஈ) கலை

   **விடை :** ஈ) கலை

www.Padasalai.Net

4. கட்டடக் கலை என்பது, 'உறைந்து போன இசை' என்று கூறியவர் ______.
அ) எஸ். கே. கோவிந்தசாமி ஆ) ஃப்ரெஸ்கோ
இ) ஷூல்ஸ் ஈ) பிரடிரிகா வொன்ஸ்லீவிங்
**விடை :** ஈ) பிரடிரிகா வொன்ஸ்லீவிங்

5. தஞ்சைப் பெரிய கோவில் கோபுரங்களில் உயரமானது ______.
அ) இராசராசன் திருவாயில் கோபுரம் ஆ) கேரளாந்தகன் திருவாயில் கோபுரம்
இ) மதுராந்தகன் கோபுரம் ஈ) இராசராசன் கோபுரம்
**விடை :** ஆ) கேரளாந்தகன் திருவாயில் கோபுரம்

6. 'தட்சிண மேரு' என அழைக்கப்படுவது ______.
அ) காஞ்சிபுரம் கைலாசநாதர் கோவில் ஆ) திருவில்லிபுத்தூர் கோவில்
இ) தஞ்சைப் பெரிய கோவில் ஈ) ஒலோகமாதேவிச்சுரம் கோவில்
**விடை :** இ) தஞ்சைப் பெரிய கோவில்

7. செங்கற்களாலான எழுபத்தெட்டுக் கோவில்களைக் கட்டியவன் ______.
அ) முதலாம் மகேந்திரவர்மன் ஆ) இராசசிம்மன்
இ) இரண்டாம் குலோத்துங்க சோழன் ஈ) சோழன் செங்கணான்
**விடை :** ஈ) சோழன் செங்கணான்

8. 'இராசசிம்மேச்சுரம்' என அழைக்கப்படும் கோவில் ______.
அ) திருப்பத்தூர் திருத்தளிநாதர் கோவில் ஆ) தஞ்சைப் பெரிய கோவில்
இ) காஞ்சி கைலாசநாதர் கோவில் ஈ) தாராசுரம் ஐராவதேசுவரர் கோவில்
**விடை :** இ) காஞ்சி கைலாசநாதர் கோவில்

9. இராசராசனுக்குப் பெரியதொரு கோவிலைக் கட்ட வேண்டுமென்ற எண்ணத்தைத் தூண்டிய கோவில் ______.
அ) தில்லைக் கோவில் ஆ) குற்றாலநாதர் கோவில்
இ) திருவில்லிபுத்தூர் ஆண்டாள் கோவில் ஈ) காஞ்சி கைலாசநாதர் கோவில்
**விடை :** ஈ) காஞ்சி கைலாசநாதர் கோவில்

10. ஃப்ரெஸ்கோ வகை ஓவியங்கள் காணப்படும் இடம் ______.
அ) காஞ்சிபுரம், தஞ்சாவூர், திருவில்லிபுத்தூர் ஆ) தஞ்சாவூர், அஜந்தா, திருவில்லிபுத்தூர்
இ) அஜந்தா, எல்லோரா, சித்தன்னவாசல் ஈ) காஞ்சிபுரம், எல்லோரா, சித்தன்னவாசல்
**விடை :** இ) அஜந்தா, எல்லோரா, சித்தன்னவாசல்

11. தஞ்சைப் பெரிய கோவிலில் அமைந்த கட்டடக்கலைப் பாணி ______.
அ) நாகர கலைப்பாணி ஆ) வேசர கலைப்பாணி
இ) திராவிட கலைப்பாணி ஈ) மாயன் கலைப்பாணி
**விடை :** இ) திராவிட கலைப்பாணி

12. தஞ்சைப் பெரிய கோவிலில் உள்ள ஓவியங்களைக் கண்டறிந்தவர் ______.
அ) எஸ்.கே.கோவிந்தசாமி ஆ) பி. கே. கோவிந்தசாமி
இ) வி. கே. கோவிந்தராஜன் ஈ) எம். எஸ். கோவிந்தராஜன்
**விடை :** அ) எஸ்.கே.கோவிந்தசாமி

13. 'கற்றளி'க் கோவிலை முதன்முதலில் உருவாக்கியவர் ______.
அ) முதலாம் நரசிம்மவர்மன் ஆ) இராசராசசோழன்
இ) இரண்டாம் நரசிம்மவர்மன் ஈ) மகேந்திரவர்மன்
**விடை :** இ) இரண்டாம் நரசிம்மவர்மன்

14. காஞ்சி கைலாசநாதர் கோவிலை அமைத்த மன்னன் ______.
அ) மகேந்திரவர்மன் ஆ) இராசசிம்மன் இ) நரசிம்மவர்மன் ஈ) இராசராசன்
**விடை :** ஆ) இராசசிம்மன்

MERCY PUBLICATIONS - CHENNAI

15. குடைவரைக் கோவில்களை அமைத்தவன் ______.
அ) இராசசிம்மன் ஆ) முதலாம் மகேந்திரவர்மன்
இ) இரண்டாம் நரசிம்மன் ஈ) இராசராச சோழன்
**விடை :** ஆ) முதலாம் மகேந்திரவர்மன்

16. தஞ்சைப் பெரிய கோவிலை இராசராசன்தான் கட்டினான் என உறுதி செய்தவர் ______.
அ) இத்தாலி ஃப்ரெஸ்கோ ஆ) ஜெர்மனி அறிஞர் ஷுல்ஸ்
இ) எஸ். கே. கோவிந்தசாமி ஈ) கோவலூார் உடையான்
**விடை :** ஆ) ஜெர்மனி அறிஞர் ஷுல்ஸ்

17. தமிழக அரசின் சின்னம் ______.
அ) ஆலமரம் ஆ) கோவில் நந்தி இ) கோவில் கோபுரம் ஈ) திருவாயில்
**விடை :** இ) கோவில் கோபுரம்

18. இரண்டு கோபுரங்களைக் கட்டும் புதிய மரபைத் தோற்றுவித்தவர் ______.
அ) நாயக்க மன்னர் ஆ) பல்லவர் இ) குலோத்துங்கன் ஈ) இராசராசன்
**விடை :** ஈ) இராசராசன்

19. நான்கு கோபுரங்கள் எழுப்பும் மரபைத் தொடங்கியவன் ______.
அ) இரண்டாம் நரசிம்மவர்மன் ஆ) இரண்டாம் குலோத்துங்க சோழன்
இ) இரண்டாம் இராசராசன் ஈ) இரண்டாம் மகேந்திரவர்மன்
**விடை :** ஆ) இரண்டாம் குலோத்துங்க சோழன்

20. பெரிய கோவிலில் காணப்படும் பெரிய நந்தியும் மண்டபமும், ______ காலத்தில் கட்டப்பட்டவை.
அ) சோழர் ஆ) சேரர் இ) பல்லவர் ஈ) நாயக்கர்
**விடை :** ஈ) நாயக்கர்

21. புகழ்பெற்ற கோவில்களில் மிக உயர்ந்த கோபுரங்களை எழுப்பியது ______.
அ) சோழ அரசு ஆ) பல்லவ அரசு இ) பாண்டிய அரசு ஈ) விஜயநகர அரசு
**விடை :** ஈ) விஜயநகர அரசு

22. 'ஒலோகமாதேவீச்சுரம்' கோவிலைத் திருவையாற்றில் கட்டியவர் ______.
அ) எருதந் குஞ்சர மல்லி ஆ) சோமயன் அமிர்தவல்லி
இ) ஒலோகமாதேவி ஈ) குந்தவைதேவி
**விடை :** இ) ஒலோகமாதேவி

23. 'ஒலோகமாதேவீச்சுரம்' கோவில் கல்வெட்டால் அறியப்படும் பெண் அதிகாரிகள் ______.
அ) குந்தவை, எருதஞ் குஞ்சர மல்லி
ஆ) சோமயன் அமிர்தவல்லி , குந்தவை
இ) எருதந் குஞ்சர மல்லி, சோமயன் அமிர்தவல்லி
ஈ) ஒலோகமாதேவி, எருதந் குஞ்சர மல்லி
**விடை :** இ) எருதந் குஞ்சர மல்லி, சோமயன் அமிர்தவல்லி

24. சரியான விடையைத் தெரிவு செய்க.
இந்தியக் கட்டடக் கலையின் மூன்று வகை ______.
அ) நாகரம் ஆ) வேசரம் இ) தட்சிணம் ஈ) திராவிடம்
1. அ, ஆ, இ 2. அ, ஆ, ஈ 3. ஆ, இ, ஈ 4. அ, இ, ஈ
**விடை :** 2. அ, ஆ, ஈ

25. சரியான விடையைத் தெரிவு செய்க.
அ) தஞ்சாவூர் – 1. கடற்கரைக் கோவில்
ஆ) மகாபலிபுரம் – 2. ஒலோகமாதேவீச்சுரம்
இ) காஞ்சிபுரம் – 3. தட்சிண மேரு
ஈ) திருவையாறு – 4. கைலாசநாதர் கோவில்

MERCY PUBLICATIONS - CHENNAI

www.Padasalai.Net

அ) அ – 1, ஆ – 2, இ – 3, ஈ – 4 ஆ) அ – 3, ஆ – 1, இ – 4, ஈ – 2
இ) அ – 2, ஆ – 4, இ – 1, ஈ – 3 ஈ) அ – 4, ஆ – 3, இ – 2, ஈ – 1

**விடை :** ஆ) அ – 3, ஆ – 1, இ – 4, ஈ – 2

26. சரியான விடையைத் தெரிவு செய்க.

1) 'தட்சிண மேரு' என்பது – அ. வாயில்களின்மேல் அமைவது
2) 'விமானம் என்பது – ஆ. தானியக் கிடங்கு
3) 'கோபுரம்' என்பது – இ. தஞ்சைப் பெரிய கோவில்
4) 'கற்றளி' என்பது – ஈ. அகநாழிகைமேல் அமைக்கப்படுவது
உ. கருங்கற்களை அடுக்கிக் கட்டுவது

அ) 1 – ஆ, 2 – இ, 3 – ஈ, 4 – உ ஆ) 1 – உ, 2 – இ, 3 – ஆ, 4 – ஈ
இ) 1 – இ, 2 – ஈ, 3 – அ, 4 – உ ஈ) 1 – ஈ, 2 – அ, 3 – ஆ, 4 – இ

**விடை :** இ) 1 – இ, 2 – ஈ, 3 – அ, 4 – உ

27. பொருத்துக.

1. வளர்க்கப்பட்ட அருங்கலைகள் – அ. பஞ்சகாலத்தில் மக்களுக்கு உதவ.
2. கல்வெட்டுகளாகப் பொறிக்கப்பட்டவை – ஆ. போர்க்காலத்தில் படைவீரர்களுக்கு.
3. தானியக் கிடங்குகள் – இ. மக்களுக்குத் தெரிவிக்க வேண்டிய செய்திகள்.
4. தங்கும் இடம் – ஈ. மக்கள் ஒன்று கூடும் இடம்.
– உ. இசை, நடனம், நாடகம்.

**விடை :** 1 – உ, 2 – இ, 3 – அ, 4 – ஆ

**விடைக்கேற்ற வினா அமைக்க.**

1. கலை, ஒரு சமூகத்தின் நாகரிகம் மற்றும் பண்பாட்டு மேன்மையைப் பிரதிபலிக்கிறது.
**வினா :** கலை, எவற்றைப் பிரதிபலிக்கிறது?
2. தஞ்சைப் பெரிய கோவிலின் கட்டடக் கலைநுட்பம் நம்மை வியப்படையச் செய்கிறது.
**வினா :** எக்கோவிலின் கட்டடக் கலைநுட்பம், நம்மை வியப்படையச் செய்கிறது?
3. கருவறையை அகநாழிகை என்று அழைப்பார்கள்.
**வினா :** எதனை அகநாழிகை என்று அழைப்பார்கள்?
4. தஞ்சைப் பெரிய கோவில், நம் நாட்டிலுள்ள கற்றளிக் கோவில்களிலேயே பெரியதும் உயரமானதும் ஆகும்.
**வினா :** நம் நாட்டிலுள்ள கற்றளிக் கோவில்களிலேயே பெரியதும் உயரமானதும் எது?
5. பஞ்ச காலத்தில் மக்களுக்கு உதவுவதற்காகத் தானியக் கிடங்குகளும் கோவிலுக்குள் அமைக்கப் பட்டிருந்தன.
**வினா :** கோவிலுக்குள் தானியக் கிடங்குகளும் எதற்காக அமைக்கப்பட்டிருந்தன?
6. தஞ்சைப் பெரிய கோவில் எண்பட்டை வடிவில் கட்டப்பட்ட திராவிடக் கலைப்பாணியாகும்.
**வினா :** தஞ்சைப் பெரிய கோவில் எப்படிக் கட்டப்பட்ட வடிவு கலைப்பாணி எவை?
7. ஃப்ரெஸ்கோ என்ற இத்தாலியச் சொல்லுக்குப் 'புதுமை' என்று பொருள்.
**வினா :** எந்த இத்தாலியச் சொல்லுக்குப் 'புதுமை' என்று பொருள்?
8. வரலாற்றைப் படைத்த நமக்கு அதனைப் பாதுகாக்கத் தெரியவில்லை.
**வினா :** வரலாற்றைப் படைத்த நமக்கு, எது தெரியவில்லை?
9. கங்கை கொண்ட சோழபுரம், தாராசுரம், திரிபுவனம் ஆகிய இடங்களில் இரண்டு வாயில்கள் இருப்பதைப் பார்த்திருக்கிறோம்.
**வினா :** கங்கை கொண்ட சோழபுரம், தாராசுரம், திரிபுவனம் ஆகிய இடங்களில் எதனைப் பார்த்திருக்கிறோம்.
10. ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே, பெண்கள் அதிகாரிகளாகப் பணிபுரிந்திருக்கின்றனர் என்பது, ஆச்சரியமாக இருக்கிறது.
**வினா :** ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே ஆச்சரியமாக இருக்கிறது என்பது எது?

MERCY PUBLICATIONS - CHENNAI

11. தான் மட்டுமே பங்களிக்காமல், மற்றவர்களின் உதவியையும் பெற்றதோடு, அதனைக் கல்வெட்டாகவும் ஆவணப்படுத்தி இருக்கும் இராசராசனின் பாங்கு போற்றத்தக்கது.

**வினா :** இராசராசன், எதனை ஆவணப்படுத்திய பாங்கு போற்றத்தக்கதாகும்?

## கவிதைப்பேழை

## 1. ஆத்மாநாம் கவிதைகள்

(கேள்வி – ஒரு புளியமரம்)

### குறுவினாக்கள் (கூடுதல்)

**1. ஆத்மாநாம் தம் கவிதைவழி தூண்டுவது யாது?**

★ விலங்குகளும் தாவர வகைகளும் இயற்கைவழி இன்ப வாழ்வு வாழ்வதை விளக்கித் தம் கவிதைவழி ஆத்மாநாம், சிந்தனையைத் தூண்டியுள்ளார்.

**2. அணில் எங்கே உறங்கச் சென்றது? அதன் கனவு எதைக் குறித்தது?**

★ மலர்க்கிளைப் படுக்கையிலோ, ஆற்று மணல் சரிவிலோ, சதுர வட்டக் கோண மயக்கச் சந்து பொந்துகளிலோ அணில் உறங்கச் சென்றது. உணவு, உறக்கம் குறித்தே அது கனவு கண்டது.

### சிறுவினா

**1. உணவும் உறக்கமும் அணில் கனவாம் – உங்கள் கனவை உங்கள் சொற்களில் விளக்குக.**

★ காலை எழுந்ததும் பள்ளிக்குச் செல்ல ஆயத்தமாக வேண்டும்.

★ அதற்குமுன் ஆசிரியர் கொடுத்த வீட்டுப்பாட வேலைகளை முடித்தோமா என்று பார்க்கவேண்டும்.

★ உணவூட்டக் காத்திருக்கும் அம்மாவுக்குப் பதில் சொல்லவேண்டும்.

### கூடுதல் வினாக்கள்

**2. 'கேள்வி' என்னும் தலைப்பில், 'ஆத்மாநாம்' உணர்த்தும் செய்திகளை எழுதுக.**

★ காலையில் எழுந்ததும் இரை தேடத் துள்ளி ஓடும் அணில், இரவு எங்கே உறங்குகிறது?

★ மலர்க்கிளையாகிய படுக்கையிலா? ஆற்று மணல் சரிவிலா? சந்து பொந்துகளிலா?

★ ஒன்றல்ல, நூற்றுக்கணக்கில் இருக்கும் இந்த அணில்கள், நிச்சயம் தம் குழந்தைத்தனமான முகங்களுடனும் சிறுபிள்ளைக் கைகளுடனும் அனுபவித்தே உண்ணும்!

★ இவை உணவையும் உறக்கத்தையும் தவிர, தங்களைப் பற்றி என்ன கனவு காணும்? என்பது, ஆத்மாநாமின் 'கேள்வி'க் கவிதைச் செய்தியாகும்.

**3. புளியமர நிழலில் கேட்டதாக ஆத்மாநாம் கூறுவன யாவை?**

★ சமீபத்தில் ஒரு புளியமரம் என் நண்பனாயிற்று! தற்செயலாக நான் அப்புறம் சென்றபோது, "என்னைத் தெரிகிறதா? நினைவு இருக்கிறதா? அன்று ஒரு நாள் நீ புளியம் பழங்கள் பொறுக்க வந்தபோது, என் தமக்கையின் மடியில் அயர்ந்து போனாய்!

★ அப்போது உன் முகம் உடல் எங்கும் குளிர்காற்றை வீசினேனே! எப்படியும் என் மடிக்கு வா!" என, நிழலிலிருந்து குரல் கேட்டதாக ஆத்மாநாம் கூறுகிறார்.

**4. ஆத்மாநாம் – குறிப்பெழுதுக.**

★ மதுசூதனன் என்பது, 'ஆத்மாநாம்' என்பாரின் இயற்பெயர்.

★ முப்பத்திரண்டு ஆண்டுகளே வாழ்ந்தவர்.

★ 156 கவிதைகளை எழுதித் தமிழ்க்கவிதை உலகில் ஆளுமை மிக்கவராகத் திகழ்ந்தார்.

★ 'காகிதத்தில் ஒரு கோடு' என்பது இவருடைய கவிதைத் தொகுப்பு.

★ 'ழ' என்னும் சிற்றிதழைச் சில காலம் நடத்தினார்.

★ கவிதை, கட்டுரை, மொழிபெயர்ப்பு என்னும் மூன்று தளங்களில் இயங்கினார்.

MERCY PUBLICATIONS - CHENNAI

www.Padasalai.Net

## இலக்கணக்குறிப்பு

உணவையும், உறக்கத்தையும் – எண்ணும்மை

சதுர வட்டக் கோணம் – உம்மைத்தொகை

## உறுப்பிலக்கணம்

1. **சென்ற – செல் (ன்) + ற் + அ**

   செல் – பகுதி, ல் 'ன்' எனத் திரிந்தது விகாரம், ற் – இறந்தகால இடைநிலை, அ – பெயரெச்ச விகுதி.

2. **குளிர்ந்த – குளிர் + த் (ந்) + த் + அ**

   குளிர் – பகுதி, த் – சந்தி, 'ந்' ஆனது விகாரம், த் – இறந்தகால இடைநிலை, அ – பெயரெச்ச விகுதி.

## புணர்ச்சி விதிகள்

1. **நூற்றுக்கணக்கு – நூறு + கணக்கு**

   "நெடிலோடு உயிர்த்தொடர்க் குற்றுகரங்களுள் டற ஒற்று இரட்டும்" (நூற்று + கணக்கு)

   "இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும்" (நூற்றுக்கணக்கு)

2. **நண்பனாயிற்று – நண்பன் + ஆயிற்று**

   "உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே" (நண்பனாயிற்று)

3. **நிழலிலிருந்து – நிழலில் + இருந்து**

   "உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே" (நிழலிலிருந்து)

## பலவுள் தெரிக

1. 'ழ' என்னும் பெயரில் கவிஞர் ஆத்மாநாமால் வெளியிடப்பட்டது; 'கவிதைக் கிரீடம்' என்று போற்றப்படுவது ______.

   அ) சிற்றிதழ்; குற்றாலக்குறவஞ்சி ஆ) கவிதைநூல், திருச்சாழல்

   இ) நாளிதழ், நன்னகர் வெண்பா ஈ) கட்டுரை நூல், குற்றாலக்கோவை

   **விடை :** அ) சிற்றிதழ்; குற்றாலக்குறவஞ்சி

2. 'ஆத்மாநாம்' இயற்பெயர் யாது?

   அ) ரங்கராஜன் ஆ) மதுசூதனன் இ) ராசேந்திரன் ஈ) மீனாட்சி

   **விடை :** ஆ) மதுசூதனன்

3. ஆத்மாநாமின் கவிதைத் தொகுப்பு ______.

   அ) ஒன்றே ஒன்று ஆ) இரண்டு இ) ஆறு ஈ) எதுவும் இல்லை

   **விடை :** அ) ஒன்றே ஒன்று

4. அணிலையும் புளியமரத்தையும் காட்சிப்படுத்திக் கவிதை படைத்தவர் ______.

   அ) வில்வரத்தினம் ஆ) மீரா இ) மீனாட்சி ஈ) ஆத்மாநாம்

   **விடை :** ஈ) ஆத்மாநாம்

5. ஆத்மாநாம் அவர்களின் முக்கியமான கவிதைத் தொகுப்பு ______.

   அ) கொடி விளக்கு ஆ) கனவுகள் + கற்பனைகள் = காகிதங்கள்

   இ) காகிதத்தில் ஒரு கோடு ஈ) உதயத்திலிருந்து

   **விடை :** இ) காகிதத்தில் ஒரு கோடு

MERCY PUBLICATIONS - CHENNAI

# 2. குற்றாலக் குறவஞ்சி

## (திரிகூட ராசப்பக் கவிராயர்)

## குறுவினாக்கள் (கூடுதல்)

**1. திரிகூட ராசப்பக் கவிராயர் இயற்றிய நூல்கள் யாவை?**

★ குற்றாலக் குறவஞ்சி, குற்றால மாலை, குற்றாலச் சிலேடை, குற்றாலப் பிள்ளைத் தமிழ், குற்றால யமக அந்தாதி ஆகியன, திரிகூட ராசப்பக் கவிராயர் இயற்றிய நூல்கள் ஆகும்.

**2. சிங்கிக்குப் பரிசளித்த நாடுகள் எவை?**

★ சேலத்து நாடு, கோலத்து நாடு, பாண்டி நாடு, கண்டி நாடு ஆகியவை, சிங்கிக்குப் பரிசளித்த நாடுகளாகும்.

**3. சிங்கி பெற்ற பரிசுப் பொருட்களுள் நான்கினைக் குறிப்பிடுக.**

★ சிலம்பு, தண்டை, பாடகம், காலாழி.

## சிறுவினா

**1. சிங்கி பெற்ற பரிசுப் பொருட்களாகக் குற்றாலக் குறவஞ்சி கூறுவன யாவை?**

★ சேலத்து நாட்டில் பெற்ற சிலம்பு;

★ கோலத்து நாட்டாரிடம் பெற்ற முறுக்கிட்ட தண்டை;

★ பாண்டியனார் மகள் கொடுத்த பாடகம்;

★ குற்றாலர் சந்நிதிப் பெண்கள் கொடுத்த அணிமணிக் கெச்சம்;

★ கண்டி தேசத்தில் பெற்ற காலாழி.

## கூடுதல் வினாக்கள்

**2. குறவஞ்சி – பெயர்க்காரணம் குறித்துக் குறிப்பெழுதுக.**

★ குறவஞ்சி, சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்று; தமிழ்ப் பாடல் நாடக இலக்கிய வடிவாகும்.

★ பாட்டுடைத் தலைவன் உலாவரக் கண்ட தலைவி, அத் தலைவன்மீது காதல் கொள்வாள்.

★ அப்போது வரும் குறவர்குலப் பெண் ஒருத்தி, தலைவிக்கு நற்குறி கூறிப் பரிசில்களைப் பெறுவாள்.

★ இவ்வகையில் அமைவது, 'குறவஞ்சி' இலக்கியம். இதனைக் 'குறத்திப் பாட்டு' எனவும் கூறுவர்.

**3. குற்றாலக் குறவஞ்சி – குறிப்புத் தருக.**

★ சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்றான குற்றாலக் குறவஞ்சி, நாடக இலக்கிய வடிவில் அமைந்ததாகும். இது இயற்றமிழின் செழுமையையும், இசைத்தமிழின் இனிமையையும், நாடகத்தமிழின் எழிலினையும் ஒருங்கே கொண்ட முத்தமிழ்க் காவியமாகத் திகழ்வது. உலா வந்த தலைவன்மீது காதல் கொண்ட தலைவிக்குக் குறத்தி குறி சொல்லிப் பரிசு பெறுவதுபோன்ற அமைப்புடையது.

★ தென்காசிக்கு அருகிலுள்ள குற்றாலத்தில் எழுந்தருளியுள்ள குற்றாலநாதரைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு, திரிகூட ராசப்பக் கவிராயர் பாடிய குறவஞ்சி, 'திருக்குற்றாலக் குறவஞ்சி' என வழங்கப்பெறுகிறது. இது 'கவிதைக் கிரீடம்' எனப் போற்றப்படுகிறது.

**4. திரிகூட ராசப்பக் கவிராயர் குறித்து அறிவன யாவை?**

★ திருநெல்வேலி விசய நாராயணம் என்னும் ஊரில் வாழ்ந்தவர், திரிகூட ராசப்பக் கவிராயர்.

★ திருக்குற்றால நாதர் கோவிலில் பணிபுரிந்தார்.

★ சைவசமயக் கல்வியிலும் இலக்கிய இலக்கணங்களிலும் தேர்ச்சி பெற்றிருந்தவர்.

★ குற்றாலத் தலபுராணம், மாலை, சிலேடை, பிள்ளைத்தமிழ், யமக அந்தாதி முதலிய நூல்களை இயற்றி யுள்ளார். திருக்குற்றாலநாதர் கோவிலின் 'வித்துவான்' என்னும் சிறப்புப் பெயர் பெற்றவர்.

★ மதுரை முத்து விசயரங்க சொக்கலிங்கனார் வேண்டுதலின்படி, திருக்குற்றாலக் குறவஞ்சியைப் பாடி அரங்கேற்றினார்.

www.Padasalai.Net

## நெடுவினா – கூடுதல் வினா

**1. சிங்கன் சிங்கி – உரையாடலை விரித்துரைக்க.**

**குறி சொல்லப் போன குறவஞ்சி :**

குறி சொல்லிப் பரிசில்களைப் பெற்றுக்கொண்டு திரும்பிய குறத்தி சிங்கியை, அவள் கணவன் சிங்கன் சந்தித்தான். அவள் அணிந்திருந்த அணிவகைகளைக் கண்டு வியந்தான்.

"நெடுநாள் பிரிந்திருந்தமையால், "என்னிடம் சொல்லாமல் இத்தனை நாள்களாக எங்கே சென்றாய்?" என வினவினான்.

**அதற்குச் சிங்கி :**

"கொத்தான மலர்களால் அலங்கரித்த கூந்தலையுடைய பெண்களுக்குக் குறி சொல்லப் போனேன்" என்று கூறினாள்.

**சிங்கனின் வினா – சிங்கி விடை :**

**சிங்கன் :** "உன்னைப் பார்க்க அதிசயமாகத் தோன்றுகிறது! ஆனால் அது பற்றிப் பேசப் பயமாக இருக்கிறது!".

**சிங்கி :** "எவர்க்கும் பயப்படாமல் தோன்றுவதை அஞ்சாமல் சொல்",

**சிங்கன் :** "காலுக்கு மேல் பெரிய விரியன் பாம்புபோல் கடித்துக் கிடப்பது என்ன?"

**சிங்கி :** "சேலத்து நாட்டில் குறி சொல்லியதற்குப் பரிசாகப் பெற்ற சிலம்பு".

**சிங்கன் :** "அதற்கு மேல் திருகு முருகாகக் கிடப்பது என்ன?"

**சிங்கி :** "கலிங்க நாட்டில் கொடுத்த முறுக்கிட்ட தண்டை" .

**சிங்கன் :** "சரி, நாங்கூழ்ப் புழுபோல் நீண்டு நெளிந்து குறுகிக் கிடப்பது என்ன?"

**சிங்கி :** "பாண்டியனார் மகளுக்குச் சொன்ன குறிக்குப் பரிசாக அளித்த பாடகம்" என்றாள்.

**சிங்கன் :** "உன் காலிலே பெரிய தவளைபோல் கட்டியுள்ளது என்னடி?",

**சிங்கி :** "இறைவன் குற்றாலநாதர் சந்நிதிப் பெண்கள் கொடுத்த அணிமணிக் கெச்சம்".

**சிங்கன் :** "அப்படியானால் சுண்டு விரலிலே குண்டலப் பூச்சிபோல் சுருண்டு கிடப்பது என்ன?"

**சிங்கி :** "கண்டி தேசத்தில் முன்பு நான் பெற்ற காலாழி".

இப்படி உரையாடிக் கொண்டு, தம் உறைவிடம் நோக்கிச் சென்றனர்.

## இலக்கணக்குறிப்பு

**மாண்ட, பெற்ற, இட்ட, கொடுத்த, கட்டிய** – பெயரெச்சங்கள்

**சொல்ல, கடித்து, சொல்லி, நீண்டு, நெளிந்து, சுருண்டு** – வினையெச்சங்கள்

**சுண்டுவிரல்** – இருபெயரொட்டுப் பண்புத்தொகை

**திருகுமுருகு** – உம்மைத்தொகை

## உறுப்பிலக்கணம்

1. **பெற்ற – பெறு (பெற்று) + அ**
   **பெறு** – பகுதி, 'பெற்று' என ஒற்று இரட்டித்து இறந்தகாலம் காட்டியது, **அ** – பெயரெச்ச விகுதி.
2. **நடந்தாய் – நட + த் (ந்) + த் + ஆய்**
   **நட** – பகுதி, **த்** – சந்தி, 'ந்' ஆனது விகாரம், **த்** – இறந்தகால இடைநிலை, **ஆய்** – முன்னிலை ஒருமை வினைமுற்று விகுதி.
3. **சொல்ல – சொல் + ல் + அ**
   **சொல்** – பகுதி, **ல்** – சந்தி, **அ** – வினையெச்ச விகுதி.
4. **கடித்து – கடி + த் + த் + உ**
   **கடி** – பகுதி, **த்** – சந்தி, **த்** – இறந்தகால இடைநிலை, **உ** – வினையெச்ச விகுதி.
5. **சொல்லி – சொல் + ல் + இ**
   **சொல்** – பகுதி, **ல்** – சந்தி, **இ** – வினையெச்ச விகுதி.

MERCY PUBLICATIONS - CHENNAI

6. **கொடுத்த – கொடு + த் + த் + அ**
**கொடு** – பகுதி, **த்** – சந்தி, **த்** – இறந்தகால இடைநிலை, **அ** – பெயரெச்ச விகுதி.
7. **நெளிந்த – நெளி + த் (ந்) + த் + அ**
**நெளி** – பகுதி, **த்** – சந்தி, 'ந்' ஆனது விகாரம், **த்** – இறந்தகால இடைநிலை, **அ** – பெயரெச்ச விகுதி.

## புணர்ச்சி விதிகள்

1. **பயமில்லை – பயம் + இல்லை**
"உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே" (பயமில்லை)
2. **காலாழி – கால் + ஆழி**
"உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே" (காலாழி)
3. **விரியன் – விரி + அன்**
"இ ஈ ஐ வழி யவ்வும்" (விரி + ய் + அன்)
"உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே" (விரியன்)
4. **குண்டலப் பூச்சி – குண்டலம் + பூச்சி**
"மவ்வீறு ஒற்றழிந்து உயிரீறு ஒப்புவும் ஆகும்" (குண்டல + பூச்சி)
"இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும்" (குண்டலப்பூச்சி)

## பலவுள் தெரிக

1. கீழுள்ளவற்றைப் பொருத்தி விடை தேர்க.
அ) விரியன் – 1. தண்டை
ஆ) திருகுமுருகு – 2. காலாழி
இ) நாங்கூழ்ப்புழு – 3. சிலம்பு
ஈ) குண்டலப்பூச்சி – 4. பாடகம்
i – 3 4 2 1, ii – 3 1 4 2, iii – 4 3 2 1, iv – 4 1 3 2
**விடை:** ii – 3 1 4 2

## கூடுதல் வினாக்கள்

2. திரிகூட ராசப்பக் கவிராயரின் 'கவிதைக் கிரீடம்' என்று போற்றப்பட்ட நூல் ______.
அ) குற்றால மாலை ஆ) குற்றாலக் கோவை
இ) நன்னகர் வெண்பா ஈ) குற்றாலக் குறவஞ்சி
**விடை:** ஈ) குற்றாலக் குறவஞ்சி
3. முத்தமிழ்க் காப்பியமாகத் திகழும் சிற்றிலக்கியம் ______.
அ) காவடிச்சிந்து ஆ) திருமலை முருகன் பள்ளு
இ) குற்றாலக் குறவஞ்சி ஈ) திருச்சாழல்
**விடை:** இ) குற்றாலக் குறவஞ்சி
4. நாடக இலக்கிய வடிவத்தில் அமைந்தது ______.
அ) பரணி ஆ) கலம்பகம் இ) குறவஞ்சி ஈ) காவடிச்சிந்து
**விடை:** இ) குற்றாலக் குறவஞ்சி
5. 'குறத்திப்பாட்டு' என வழங்கப் பெறுவது ______.
அ) பள்ளு ஆ) காவடிச்சிந்து இ) பரணி ஈ) குறவஞ்சி
**விடை:** ஈ) குறவஞ்சி
6. குற்றாலக் குறவஞ்சி பாடியவர் ______.
அ) வில்வரத்தினம் ஆ) பெரியவன் கவிராயர்
இ) திரிகூட ராசப்பக் கவிராயர் ஈ) அழகிய பெரியவன்
**விடை:** இ) திரிகூட ராசப்பக் கவிராயர்

MERCY PUBLICATIONS - CHENNAI

www.Padasalai.Net

7. குற்றாலக் குறவஞ்சி இயற்றி அரங்கேற்றக் காரணமானவர் ______.
   அ) வள்ளல் சீதக்காதி
   ஆ) சென்னிகுளம் அண்ணாமலையார்
   இ) மதுரை முத்துவிசயரங்க சொக்கலிங்கனார்
   ஈ) இராசராசசோழன்
   **விடை:** இ) மதுரை முத்துவிசயரங்க சொக்கலிங்கனார்
8. சிங்கிக்குச் சிலம்பைப் பரிசளித்த நாடு ______.
   அ) கோலத்து நாடு ஆ) பாண்டி நாடு இ) சேலத்து நாடு ஈ) கண்டிதேசம்
   **விடை:** இ) சேலத்து நாடு
9. 'திருகுமுருகு' என்று சிங்கன் குறிப்பிட்டது ______.
   அ) காலாழி பீலி ஆ) பாடகம்
   இ) முறுக்கிட்ட தண்டை ஈ) அணிமணிக்கெச்சம்
   **விடை:** இ) முறுக்கிட்ட தண்டை
10. அரசர்களையும், வள்ளல்களையும், வீரர்களையும், தனி மனிதர்களையும் பாடியவை ______.
   அ) சமய நூல்கள் ஆ) சங்க இலக்கியங்கள்
   இ) சிறுகாப்பியங்கள் ஈ) சிற்றிலக்கியங்கள்
   **விடை:** ஆ) சங்க இலக்கியங்கள்
11. கடவுளோடு மனிதர்களைப் பாடியவை ______.
   அ) சங்க இலக்கியங்கள் ஆ) சிற்றிலக்கியங்கள்
   இ) சமய இலக்கியங்கள் ஈ) காப்பியங்கள்
   **விடை:** ஆ) சிற்றிலக்கியங்கள்
12. பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| 1. | குழல் | – | அ. சன்மானம் |
| 2. | நாங்கூழ் | – | ஆ. பூமாலை |
| 3. | வரிசை | – | இ. கூந்தல் |
| 4. | கொத்து | – | ஈ. கோலம் |
| | | – | உ. மண்புழு |

   **விடை:** 1–இ, 2–உ, 3–அ, 4–ஆ

## 3. திருச்சாழல்

### (மாணிக்கவாசகர்)

### குறுவினாக்கள் – கூடுதல்

**1. சாழல் – விளக்குக.**
- ★ 'சாழல்' என்பது, மகளிர் விளையாட்டுகளுள் ஒருவகை.
- ★ இது ஒரு மொழி விளையாட்டு. ஒருத்தி ஒரு செய்தி குறித்து வினா எழுப்புவாள்; மற்றொருத்தி தோள் வீசி நின்று, விடை கூறுவதாகச் சாழல் விளையாட்டு அமையும்.
- ★ விடையைக் கூறும்போது இறைவன் செயல்களையும், அவற்றால் விளங்கும் உண்மைகளையும் விளக்குவது போல் அமைந்திருத்தலால், 'திருச்சாழல்' எனப்பட்டது.

**2. 'சாழல்' என்பதை எவ்வெவர் பயன்படுத்தியுள்ளனர்?**
- ★ மாணிக்கவாசகர் பாடிய திருவாசகத்தில், 'திருச்சாழல்' இடம் பெற்றுள்ளது.
- ★ திருமங்கையாழ்வார் தமது 'பெரிய திருமொழி'யில் இவ்வடியைப் பயன்படுத்தியுள்ளார்.

**3. 'திருச்சாழல்' எங்கு யாரால் பாடப்பட்டது?**
- ★ 'திருச்சாழல்' என்பது, தில்லைக் கோவிலில், மாணிக்கவாசகரால் பாடப்பட்டது.

MERCY PUBLICATIONS - CHENNAI

## சிறுவினா

**1. தமிழகப் பெண்கள் பாடிக்கொண்டே விளையாடும்போது, வெளிப்படுத்தும் மேன்மையான கருத்துகளாகத் திருச்சாழல் உணர்த்துவன யாவை?**

★ சாழல்' என்பது, மகளிர் விளையாட்டு. இந்த விளையாட்டின்போது ஒருத்தி வினாக் கேட்க, மற்றொருத்தி விடை கூறுவதாக அமையும். இறைவன் செயலைப் பழிப்பதுபோல் அந்த வினா இருக்கும். இறைவன் செயலை நியாயப்படுத்துவதுபோல் அந்த விடை இருக்கும்.

எ – கா : "சுடுகாட்டைக் கோவிலாகவும், புலித்தோலை ஆடையாகவும் கொண்ட உங்கள் தலைவனுக்குத் தாய் தந்தை இல்லை. இத்தன்மையனோ உங்கள் கடவுள்?" என்பது பழிப்பான வினா!

★ "எங்கள் தலைவனுக்குத் தாய் தந்தை இல்லாவிடினும், அவன் சினத்தால் உலகம் அனைத்தும் கல்பொடியாகி விடும்" என்பது, செயலை நியாயப்படுத்தும் விடை.

## கூடுதல் வினாக்கள்

**2. திருவாசகம் – குறிப்புத் தருக.**

★ சிவபெருமான்மீது மாணிக்கவாசகர் பாடிய பாடல்களின் தொகுப்பு திருவாசகம்.

★ பன்னிரு சைவத் திருமுறைகளில் எட்டாம் திருமுறையாக உள்ளது. திருவாசகத்தில் 51 திருப்பதிகங்களும், 658 பாடல்களும் உள்ளன; 38 சிவத்தலங்கள் குறித்துப் பாடப்பெற்றுள்ளன.

★ திருவாசகப் பாடல்கள், பக்திச் சுவையோடு, மனத்தை உருக்கும் இயல்புடையவை.

★ 'திருவாசகத்துக்கு உருகார் ஒரு வாசகத்துக்கும் உருகார்' என்னும் மூதுரை வழக்கைப் பெற்றுள்ளது. ஜி.யு.போப், திருவாசகம் முழுவதையும் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார்.

**3. மாணிக்கவாசகர் குறித்துக் குறிப்பெழுதுக.**

★ மாணிக்கவாசகர், சைவ சமயக் குரவர் நால்வருள் ஒருவர்.

★ இவர், திருவாதவூரைச் சேர்ந்தவர். எனவே, 'திருவாதவூரார்' எனவும் அழைக்கப் பெற்றார்.

★ அரிமர்த்தனப் பாண்டியனின் தலைமை அமைச்சராகப் பணியாற்றியவர்.

★ மாணிக்கவாசகர் பாடியவை, திருவாசகமும் திருக்கோவையாருமாகும்.

**4. அந்தமிலான் செய்த புதுமை, மேன்மை குறித்துச் சாழலால் அறியப்படும் செய்தி யாது?**

★ "அழிவு இல்லாதவனாகிய அவன், தன்னை அடைந்த நாயினும் இழிந்தவனையும் எல்லை இல்லா ஆனந்த வெள்ளத்தில் அழுத்தும் புதுமையை எவ்வாறு செய்தானடி?" என்று, ஒருத்தி இகழ்வதுபோல் வினா எழுப்பினாள்.

★ இன்னொருத்தி தன் தோள்களை அசைத்து ஆடியபடி, "அடைந்தவனை ஆனந்த வெள்ளத்தில் அழுந்தச் செய்த திருவடிகள், தேவர்களுக்கு மேன்மையான பொருளாகும் என்பதை அறிந்துகொள்!" என, அவன் சிறப்பை விடையாகக் கூறினாள்.

## நெடுவினா (கூடுதல்)

**1. இறைவனின் பெருமையைத் தெரிவிக்கும் திருச்சாழல்மூலம் மாணிக்கவாசகரின் மொழி விளையாட்டினை விவரிக்கவும்.**

**சாழல் என்னும் விளையாட்டு :**

மகளிர் விளையாடும் ஒருவகை விளையாட்டு சாழல். இதில் ஒருத்தி வினா எழுப்புவாள். மற்றொருத்தி அதற்கு ஏற்ற விடை கூறுவாள். இறைவன் செயல்களையும் அச்செயல்களால் விளங்கும் உண்மைகளையும் விளக்குவதாக அமைந்தது திருச்சாழலாகும். 'திருச்சாழல்' என்னும் ஒருவகை மொழி விளையாட்டின்மூலம் இருபது பாடல்களில் இறைவனின் பெருமைகளை மாணிக்கவாசகர் பாடியுள்ளார்.

**ஆற்றல் நிறைந்தவன் இறைவன்!**

சாழல் ஆடும் ஒருத்தி, "சுடுகாட்டைக் கோவிலாகவும் புலித்தோலை ஆடையாகவும் கொண்டவனுக்குத் தாயுமில்லை; தந்தையுமில்லை! இத்தகையவரா உங்கள் கடவுள்?" எனக் கேள்வி எழுப்பினாள். அதற்கு, "எங்கள் கடவுளுக்குத் தாய் தந்தை இல்லையாயினும், அவன் சினந்தால் உலகு அனைத்தும் கல்பொடியாகிவிடும்" என்று மற்றொருத்தி விடை கூறி இறைவனின் ஆற்றலை நிலைப்படுத்தினாள்.

MERCY PUBLICATIONS - CHENNAI

www.Padasalai.Net

**பிறரைக் காக்கவே நஞ்சை உண்டான் :**

உடனே அவள், "பாற்கடலைக் கடைந்தபோது உண்டான நஞ்சைப் பருகினானே. அதற்குக் காரணம் என்ன?" என வினவினாள். அதற்கு மற்றொருத்தி, "அந்த நஞ்சை எங்கள் இறைவன் அன்று உண்டிருக்காவிட்டால் பிரமன், விஷ்ணு உள்ளிட்ட தேவர்கள் அனைவரும் அன்றே அழிந்திருப்பார்களே!" எனக் கூறி விளக்கினாள்.

**அனைவருக்கும் அவன் அடியே மேலானது :**

"முடிவு இல்லாதவனாக இருக்கும் அவனை அடைந்த என்னை, ஆனந்த வெள்ளத்தில் அழுந்தச் செய்தது என்னே புதுமை" எனக் கேட்டாள். அதற்கு மற்றொருத்தி, "உன்னை ஆனந்த வெள்ளத்தில் அழுந்தச் செய்த அதே திருவடிகள் தேவர்களுக்கும் மேன்மையானதேயாகும்" என்று கூறி அமைந்தாள்.

**சுவைக்கத்தக்க நயம் :**

இவ்வகையில் திருச்சாழல் என்னும் விளையாட்டுப் பாடல்மூலம் ஒருத்தி இறைவனைப் பழிப்பதுபோலவும், இன்னொருத்தி இறைவனின் செயல்களை நியாயப்படுத்துவதுபோலவும் மாணிக்கவாசகர் சிவபெருமானின் பெருமைகளைப் புலப்படுத்தியுள்ள நயம் சுவைக்கத் தக்கதாகும்.

## இலக்கணக்குறிப்பு

**சுடுகாடு, கொல்புலி, குரைகடல்** – வினைத்தொகைகள்

**நல்லாடை** – பண்புத்தொகை

**அயன்மால்** – உம்மைத்தொகை

**கற்பொடி** – ஆறாம் வேற்றுமைத்தொகை.

## உறுப்பிலக்கணம்

1. **உண்டான் – உண் + ட் + ஆன்**
   **உண்** – பகுதி, **ட்** – இறந்தகால இடைநிலை, **ஆன்** – படர்க்கை ஆண்பால் வினைமுற்று விகுதி.
2. **உண்டிலன் – உண் + ட் + இல் + அன்**
   **உண்** – பகுதி, **ட்** – இறந்தகால இடைநிலை, **இல்** – எதிர்மறை இடைநிலை,
   **அன்** – படர்க்கை ஆண்பால் வினைமுற்று விகுதி.
3. **அடைந்த – அடை + த் (ந்) + த் + அ**
   **அடை** – பகுதி, **த்** – சந்தி, 'ந்' ஆனது விகாரம், **த்** – இறந்தகால இடைநிலை,
   **அ** – பெயரெச்ச விகுதி.

## புணர்ச்சி விதிகள்

1. **கற்பொடி – கல் + பொடி**
   "லள வேற்றுமையில் வலிவரின் றடவும் ஆகும்" (கற்பொடி)
2. **உலகனைத்தும் – உலகு + அனைத்தும்**
   "உயிர்வரின் உக்குறள் மெய்விட் டோடும்" (உலக் + அனைத்தும்)
   "உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே" (உலகனைத்தும்)
3. **திருவடி – திரு + அடி**
   "ஏனை உயிர்வழி வவ்வும்" (திரு + வ் + அடி)
   "உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே" (திருவடி)
4. **தாயுமிலி – தாயும் + இலி**
   "உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே" (தாயுமிலி)
5. **தேவரெல்லாம் – தேவர் + எல்லாம்**
   "உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே" (தேவரெல்லாம்)
6. **தனையடைந்த – தனை + அடைந்த**
   "இ ஈ ஐ வழி யவ்வும்" (தனை + ய் + அடைந்த)
   "உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே" (தனையடைந்த)

MERCY PUBLICATIONS - CHENNAI

7. **புலித்தோல் – புலி + தோல்**
"இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும்" (புலித்தோல்)

8. **தனியன் – தனி + அன்**
"இ ஈ ஐ வழி யவ்வும்" (தனி + ய் + அன்)
"உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே" (தனியன்)

9. **நல்லாடை – நன்மை + ஆடை**
"ஈறுபோதல்" (நன் + ஆடை), "முன்னின்ற மெய்திரிதல்" (நல் + ஆடை)
"தனிக்குறில்முன் ஒற்று உயிர்வரின் இரட்டும்" (நல்ல் + ஆடை),
"உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே" (நல்லாடை)

## பலவுள் தெரிக

1. பெண்கள் விளையாடும் விளையாட்டு வகைகளுள் ஒன்று ______.
அ) சாழல் ஆ) சிற்றில் இ) சிறுதேர் ஈ) சிறுபறை
**விடை :** அ) சாழல்

## கூடுதல் வினாக்கள்

2. திருவாசகம் முழுமையையும் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தவர் ______.
அ) பெஸ்கி ஆ) கால்டுவெல் இ) வீரமாமுனிவர் ஈ) ஜி.யு. போப்
**விடை :** ஈ) ஜி.யு. போப்

3. சைவத் திருமுறைகளில் திருவாசகம், ______ திருமுறையாக உள்ளது.
அ) பன்னிரண்டாம் ஆ) ஆறாம் இ) எட்டாம் ஈ) ஏழாம்
**விடை :** இ) எட்டாம்

4. திருமங்கையாழ்வார் பாடியது ______.
அ) திருச்சாழல் ஆ) நாட்டார் வழக்கியல்
இ) தேவாரம் ஈ) பெரிய திருமொழி
**விடை :** ஈ) பெரிய திருமொழி

5. திருவாசகத்தில் இடம் பெற்றுள்ள திருப்பதிகங்கள் ______.
அ) 658 ஆ) 12 இ) 51 ஈ) 12
**விடை :** இ) 51

6. சாழல் வடிவத்தைக் கையாண்ட ஆழ்வார் ______.
அ) பெரியாழ்வார் ஆ) திருமங்கை ஆழ்வார்
இ) ஆண்டாள் ஈ) திருப்பாணாழ்வார்
**விடை :** ஆ) திருமங்கை ஆழ்வார்

7. சைவத் திருமுறைகள் ______.
அ) எட்டு ஆ) பதினெட்டு இ) பத்து ஈ) பன்னிரண்டு
**விடை :** ஈ) பன்னிரண்டு

8. சைவத் திருமுறைகளில் எட்டாம் திருமுறையாக அமைந்தது ______.
அ) தேவாரம் ஆ) திருவாய்மொழி இ) திருவாசகம் ஈ) திருக்குறள்
**விடை :** இ) திருவாசகம்:

9. மாணிக்கவாசகர் இயற்றிய நூல்கள் ______.
அ) திருவாசகம், தேவாரம் ஆ) திருக்கோவையார், தேவாரம்
இ) திருவாசகம், திருக்கோவையார் ஈ) திருவாசகம், திருப்புகழ்
**விடை :** இ) திருவாசகம், திருக்கோவையார்

10. ஒருவர் வினா கேட்டு, அதற்கு மற்றொருவர் விடை கூறும் வகையில் இறைவனைப் போற்றிப் பாடப்பட்டவை ______.
அ) திருச்சாழல், திருப்புகழ் ஆ) பெரிய திருமொழி, திருவருட்பா
இ) திருப்புகழ், திருவருட்பா ஈ) திருச்சாழல், பெரிய திருமொழி
**விடை :** ஈ) திருச்சாழல், பெரிய திருமொழி

MERCY PUBLICATIONS - CHENNAI

www.Padasalai.Net


11. மாணிக்கவாசகர், 'திருச்சாழலில்' ______ பாடல்களைப் பாடியுள்ளார்.

அ) பன்னிரண்டு ஆ) எட்டு இ) இருபது ஈ) பத்து

**விடை :** இ) இருபது

12. பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| 1. | காயில் | – | அ. திருமால் |
| 2. | அந்தம் | – | ஆ. நஞ்சு |
| 3. | அயன் | – | இ. வெகுண்டால் |
| 4. | ஆலாலம் | – | ஈ. முடிவு |
| | | – | உ. பிரமன் |

**விடை :** 1–இ, 2–ஈ, 3–உ, 4–ஆ

## விரிவானம்

# இசைத்தமிழர் இருவர்

**1. 'சிம்பொனி'த் தமிழரும், 'ஆஸ்கர்' தமிழரும் இசைத்தமிழுக்கு ஆற்றிய பணிகளை, நும் பாடப்பகுதி கொண்டு தொகுத்தெழுதுக.**

### சாதனை புரிந்த இளையராஜா

**சிம்பொனித் தமிழர் :**

"ஆசியக் கண்டத்தவர், 'சிம்பொனி' இசைக்கோவையை உருவாக்க முடியாது" என்னும் மேலை இசை வல்லுநர் கருத்தைச் சிதைத்தவர் இளையராஜா. இவர், தமிழ்நாட்டுத் தேனி மாவட்டத்து இராசையா ஆவார். தாலாட்டில் தொடங்கித் தமிழிசைவரை அனைத்தையும் அசைபோட்ட இசை மேதை.

**இசையைச் செவியுணர் கனியாக்கியவர் :**

திரையுலகில் கால் பதித்த இளையராஜா, இசையில் சிலம்பம் சுழற்றி, மக்களை இசை வெள்ளத்தில் மிதக்க வைத்தவர். பழந்தமிழிசை, உழைப்போர் பாடல், கர்நாடக இசை எனப் பல இசை மெட்டுகளை அறிமுகப்படுத்தி, மெல்லிசையில் புது உயரம் தொட்டவர். எழுபது எண்பதுகளில் இவர் இசை, இசை வல்லாரை மட்டுமன்றி, பாமர மக்களையும் ஈர்த்துத் தன்வசப் படுத்தியது.

**இசையில் சாதனைப் படைப்புகள் :**

ஐவகை நிலப்பரப்பைக் காட்சிப்படுத்தும் இளையராஜாவின் இசை மெட்டுகள், நெடுந்தூரப் பயணங்களுக்கு வழித்துணையாயின. இளையராஜாவின் இசையில், மண்ணின் மணத்தோடு, பண்ணின் மணமும் கலந்திருக்கும். எனவே, இசை மேதைகளால் மதிக்கப்பட்டார்.

'எப்படிப் பெயரிடுவேன்?', 'காற்றைத் தவிர ஏதுமில்லை!' என்னும் இசைத் தொகுப்புகள், இசையுலகின் புதிய முயற்சிகள். 'இந்தியா 24 மணிநேரம்' என்னும் குறும்படப் பின்னணி இசை, மனித உணர்வுகளான மகிழ்ச்சி, ஏக்கம், நம்பிக்கை, உற்சாகம், வலி என்பவற்றை உணர்த்துவன.

**இலக்கியங்களை இசையாக்கியவர் :**

மாணிக்கவாசகரின் பாடல்களுக்கு இசைவடிவம் கொடுத்த இளையராஜாவின் 'இரமணமாலை', 'கீதாஞ்சலி', மூகாம்பிகை பக்தித் தொகுப்பு, மீனாட்சி ஸ்தோத்திரம் என்றென்றும் நிலைத்து நிற்கும். 'பஞ் சமுகி' என்னும் கர்நாடகச் செவ்வியல் இராகத்தை உருவாக்கியுள்ளார்.

**இசையில் இந்திய மொழிகளை இணைத்தவர் :**

'இசைஞானி' எனப் போற்றப்படும் இளையராஜா, மேற்கத்திய இசையிலும், இந்துஸ்தானி இசையிலும் தம் திறமையை வெளிப்படுத்தியுள்ளார். இசைக் குறியீடுகளை மனத்தில் உருவாக்கிக் காகிதத்தில் எழுதிப் பயன்படுத்தினார். திரை இசைக்கு ஏற்ப உணர்வின் மொழியை மாற்றுவதில் வல்லவர். தமிழ், தெலுங்கு, இந்தி, மலையாளம், கன்னடம், மராத்தி என, இந்திய மொழிகள் அனைத்திலும் இசையை வாரி வழங்கிய சிறப்புடையவர்.

MERCY PUBLICATIONS - CHENNAI

**அரிய செயல் :**

தேசத் தந்தை மகாத்மாகாந்தி எழுதிய 'நம்ரதா கே சாகர்' பாடலுக்கு இசை அமைத்து, 'அஜொய் சக்கரபர்த்தி'யைப் பாடவைத்து வெளியிட்டார். ஆசியாவில் 'முதல் சிம்பொனி' இசைக்கோவையை உருவாக்கினார். இன்று இளையராஜாவின் இசை ஆட்சி, உலகு முழுவதும் பரவியுள்ளமை தமிழராகிய நமக்குப் பெருமை.

**பெற்ற விருதுகள் :**

இளையராஜா, தமிழக அரசின் 'கலைமாமணி' விருதைப் பெற்றார்; சிறந்த இசையமைப்பாளருக்கான தேசிய விருதை நான்குமுறை பெற்றார். மத்தியப்பிரதேச அரசு அளித்த 'லதா மங்கேஷ்கர்' விருதைப் பெற்றார்; கேரள நாட்டின் 'நிஷாகந்தி சங்கீத விருதை'ப் பெற்றார். இந்திய அரசு, 'பத்ம விபூஷண்' விருது வழங்கிப் பெருமைப்படுத்தியது. இசையால் உலகளக்கும் இளையராஜாவின் புகழ், காலம் கடந்து நின்று பாராட்டைப் பெறும். வாழ்க இசை! வளர்க இளையராஜாவின் இசைப்பணி!

## தமிழ் இசை உலகில் சாதனைபுரிந்த இரஹ்மான்

**ஆஸ்கர் விருது வென்ற தமிழர் :**

2009ஆம் ஆண்டு அமெரிக்க 'கோடாக்' அரங்கில், இசைக்கான 'ஆஸ்கர்' விருதுக்கு, ஐந்து பேர் பெயர்கள் அறிவிக்கப்பட்டன. அவற்றில் இரஹ்மான் பெயரும் இருந்தது.

ஏனைய நால்வர், பலமுறை பரிந்துரை பெற்றவர்கள். எனினும், முதன்முறை பரிந்துரைக்கப்பட்டவர் அரங்கில் ஏறி, இரு கைகளிலும் ஆஸ்கர் விருதுக்கான சிலைகளை ஏந்தி, இறைவனை வணங்கியபின், தன் தாய்மொழியில் உரை நிகழ்த்தித் தமிழுக்குப் பெருமை சேர்த்தார்.

**இளமையில் இசையும் படிப்பும் :**

மலையாளத் திரைப்பட உலகில் புகழுடன் விளங்கிய தம் தந்தை ஆர். கே. சேகரை எண்ணினார். நான்கு வயதில் தந்தையுடன் ஹார்மோனியம் வாசித்துத் திறமைகாட்டியதை எண்ணினார்.

தந்தையை இழந்த சூழலில் பள்ளிப் படிப்புக்கு இடையூறு ஏற்படாவகையில், இரவெல்லாம் இசைக்குழுவில் பணி செய்து, காலையில் நேராகப் பள்ளி சென்று, வாயிலில் காத்திருக்கும் தாய் தந்த உணவை உண்டு, பள்ளிச் சீருடை அணிந்த காலத்தை நினைத்தார். வாழ்க்கைப் போராட்டம், பதினோராம் வகுப்போடு படிப்பை முடிக்க வைத்தது.

**துள்ளல் இசைக்கு ஆட வைத்தவர் :**

1992இல் 'ரோஜா' படத்திற்கு இசையமைத்துத் திரை இசைப் பயணத்தைத் தொடங்கினார். தம் இசையால் தமிழ்த் திரையுலகில் புத்தெழுச்சியை ஏற்படுத்தினார். இளைஞர்களிடையே இசை ஆளுமையை வளர்த்தார். இவரது தமிழிசையின் துள்ளல் ஓசைக்கு மயங்காதவர் இலர். இசையின் நுட்பமுணர்ந்து, செம்மையாகக் கையாண்டு இளைஞர்களைத் தம் பாடலுக்கு ஆடவும் பாடவும் வைத்தார்.

**இசையில் கணினித் தொழில்நுட்பம் :**

கணினித் தொழில்நுட்ப உதவியுடன் நாட்டுப்புற இசை, கர்நாடக இசை, இந்துஸ்தானி இசை, மேற்கத்திய இசை முறைகளைக் கலந்து, உலகத்தரத்தில் இசை அமைத்தார். இளம் பாடகர்களை அறிமுகப்படுத்தினார்.

இசைப்பாடலின் மெட்டை உருவாக்குமுன், தாளத்தைக் கட்டமைத்துப் பாடலுக்கான சூழலை உள்வாங்கி, அதன்பின் பாட்டை வெளிக்கொணர்வது இரஹ்மானின் தனிஆற்றல். பாடலின் பல்லவிக்கும் சரணத்துக்கும் இடையில் வரும் இசையை, மக்களை ஈர்க்கும் வகையில் அமைத்துத் தம் வல்லமையை வெளிப்படுத்துவார்.

**உலகக் கலாசாரத்தை இசையில் இணைத்தல் :**

இவர் இசையமைத்த 'வந்தே மாதரம்', 'ஜனகணமன' இசைத் தொகுதிகள், நாட்டுப் பற்றைத் தூண்டுவன. தென்னிந்திய மொழிப்படங்களுக்கும் இந்தித் திரைப்படங்களுக்கும் இசையமைத்ததோடு, மேலை நாட்டுப் படங்களுக்கும் நாடகங்களுக்கும் இசையமைத்து, இசையுலகில் தம்மை நிலைப்படுத்திக் கொண்டார். தம் இசையால் வெவ்வேறு கலாசார மக்களை ஒருங்கிணைக்கவும் செய்தார்.

**பெற்ற விருதுகள் :**

ஏ. ஆர். இரஹ்மானுக்குத் தமிழக அரசு, 'கலைமாமணி' விருது வழங்கியது. கேரள அரசு, 'தங்கப்பதக்கம்' வழங்கிப் பாராட்டியது. உத்தரப்பிரதேச அரசு, 'ஆவாத் சம்மான்' விருதும், மத்தியப் பிரதேச அரசு, 'லதா மங்கேஷ்கர்' விருதும் வழங்கின.

MERCURY PUBLICATIONS - CHENNAI

www.Padasalai.Net

மொரிஷியஸ் அரசும் மலேசியா அரசும், 'தேசிய இசை விருது' வழங்கிச் சிறப்பித்தன. ஸ்டான் ஃபோர்ட் பல்கலைக்கழகம், 'சர்வதேச இசை விருது' வழங்கிப் பாராட்டியது.

இந்திய அரசு, 'பத்மபூஷண்' விருது வழங்கிப் பெருமைப்படுத்தியது. 'ஸ்லம் டாக் மில்லியனர்' படத்திற்கு இசையமைத்து, 'கோல்டன் குளோப்' விருதைப் பெற்று, உலகப் புகழ் பெற்றார்.

இந்த விருதைப் பெற்ற முதல் இந்தியராக வலம் வரும் இரஹ்மானின் வாழ்க்கை, சாதனை படைக்கத் துடிக்கும் இளைஞர்களுக்குப் பாடமாக அமையும் என்பதில் ஐயமில்லை.

### கூடுதல் வினா

**2. சிம்பொனித் தமிழர் இசைத் தமிழுக்கு ஆற்றிய பணிகளை நும் பாடப்பகுதி கொண்டு விளக்குக.**

**சிம்பொனித் தமிழரின் சாதனைப் படைப்புகள் :**

பழந்தமிழிசை, உழைப்போர் பாடல், கர்நாடக இசை எனப் பல இசை மெட்டுகளை அறிமுகப்படுத்தி மெல்லிசையில் புது உயரம் தொட்டவர் இளையராஜா. இந்தியாவின் பஹார், பஹாடி இன மக்கள் தொடங்கி, மதுரைக் கிராமிய இசைவரை அனைத்தையும் தம் கைவண்ணத்தில் வழிந்தோடச் செய்தார். 'எப்படிப் பெயரிடுவேன்?', 'காற்றைத் தவிர எதுவுமில்லை!' என்னும் இசைத் தொகுப்புகள், இசையுலகின் புதிய முயற்சிகள். 'இந்தியா 24 மணிநேரம்' என்னும் குறும்படத்திற்குப் பின்னணி இசை அமைத்துள்ளார்.

**இலக்கியங்களை இசையாக்கியவர் :**

மாணிக்கவாசகரின் பாடல்களுக்கு இசைவடிவம் கொடுத்த இளையராஜாவின் 'இரமண மாலை', 'கீதாஞ்சலி', 'மூகாம்பிகை பக்தித் தொகுப்பு', 'மீனாட்சி ஸ்தோத்திரம்' என்றென்றும் நிலைத்து நிற்கும். 'பஞ்சமுகி' என்னும் கர்நாடகச் செவ்வியல் இராகத்தை உருவாக்கியுள்ளார்.

**இசையில் இந்திய மொழிகளை இணைத்தவர் :**

இசைக் குறியீடுகளை மனத்தில் உருவாக்கிக் காகிதத்தில் எழுதிப் பயன்படுத்தினார். மூன்றே சுரங்களோடு ஒரு தெலுங்குப் பாடலுக்கு இசை அமைத்தது சிறப்பு. தமிழ், தெலுங்கு, இந்தி, மலையாளம், கன்னடம், மராத்தி என, இந்திய மொழிகள் அனைத்திலும் இசையை வாரி வழங்கிய சிறப்புடையவர்.

**அரிய செயல் :**

மகாத்மா காந்தி எழுதிய 'நம்ரதா கே சாகர்' பாடலுக்கு இசை அமைத்து, அஜொய் சக்கரபர்த்தியைப் பாடவைத்து வெளியிட்டார். ஆசியாவில் முதல் சிம்பொனி இசைக்கோவையை இளையராஜா உருவாக்கினார். தமிழர் வாழ்வின் எல்லா நிலைகளிலும் இசைக்கென்று ஓர் இனிமையான இடமுண்டு. அதில், இளையராஜாவின் புகழ், மகுடமாக ஒளிர்கின்றது.

# இனிக்கும் இலக்கணம்

## கலைச் சொல்லாக்கம்

### குறுவினாக்கள்

**1. அயர்ந்து, எழுந்த – பகுபத உறுப்பிலக்கணம் தருக.**

**அயர்ந்து – அயர் + த் (ந்) + த் + உ**

**அயர்**–பகுதி, **த்**–சந்தி, 'ந்' ஆனது விகாரம், **த்**– இறந்தகால இடைநிலை, **உ**– வினையெச்ச விகுதி.

**எழுந்த – எழு + த் (ந்) + த் + அ**

**எழு** – பகுதி, **த்** – சந்தி, 'ந்' ஆனது விகாரம், **த்** – இறந்தகால இடைநிலை, **அ** – பெயரெச்ச விகுதி.

**2. தொடர் அமைத்து எழுதுக.**

**அன்றொருநாள் :** அன்றொருநாள் நான் கண்ட அழகிய காட்சியை, மீண்டும் காண ஏங்கினேன்.

**நிழலிலிருந்து :** வெயில் வேளையில் நிழலிலிருந்து இளைப்பாறினேன்.

### கூடுதல் வினாக்கள்

**3. கலைச்சொற்கள் பயன்படும் துறைகள் சிலவற்றைக் கூறுக.**

வேளாண்மை, மருத்துவம், பொறியியல், தகவல் தொடர்பியல் முதலான துறைசார்ந்து இன்றைய சூழலுக்கு ஏற்பக் கலைச்சொற்கள் பயன்படுத்தப்படுகின்றன.

**4. கலைச்சொல் உருவாக்கத்தில் மாணவர்களின் பங்களிப்புக் குறித்து எழுதுக.**

★ நாள்தோறும், துறைதோறும் கண்டுபிடிப்புகள் உருவாகி வெளிவந்து கொண்டிருக்கின்றன.

★ இந்தச் சூழலில் அவற்றிற்கெனக் கலைச்சொல்லாக்கங்களும் நிகழ்ந்துகொண்டே இருக்கின்றன. அவை ஏட்டளவில் இல்லாமல் பயன்பாட்டிற்கு வருவதே, மாணவர்களின் பங்களிப்பாக அமையும்.

**5. கலைச்சொற்கள் குறித்த விழிப்புணர்வை எவ்வாறு பெறலாம்?**

★ காலத்திற்கு ஏற்ப வளரும் சில துறைகள்சார்ந்த கலைச்சொற்களின் தேவை மிகுதி. அதனால் கலைச்சொற்கள் உருவாக்கப் பணியில், எல்லாரும் ஈடுபாடு கொள்ளவேண்டும்.

★ இப்பணிக்கு இதழ்களும் ஊடகங்களும் துணைபுரியும். இதழ்கள், மின் இதழ்கள், தமிழ் இணையக் கல்விக் கழகத்தின் இணையதளம் போன்றவற்றில் கலைச்சொற்களைப் பெறலாம். பள்ளி இதழ்களில் இவற்றை வெளியிட்டு, மாணவர்களிடம் கலைச்சொல்லாக்க விழிப்புணர்ச்சிக்கு வழிவகுக்கலாம்.

**6. தாய்மொழிவழிக் கற்றலில் ஜப்பானியர் சிறக்கக் காரணம் என்ன?**

★ உலகின் எம் மூலையில், எவ்வகைக் கண்டுபிடிப்பு நிகழ்ந்தாலும், ஜப்பானியர் உடனுக்குடன் தம் தாய் மொழியில், அதனை ஆக்கம் செய்து விடுகின்றனர். அதனால், தாய்மொழிவழியில் அறிவியல் தொழில்நுட்பப் பாடங்களைக் கற்கின்றனர். ஆகையால், ஜப்பானில் நாள்தோறும் புதிய கண்டுபிடிப்புகள் நிகழ்கின்றன.

## சிறுவினாக்கள்

**1. கலைச்சொல்லாக்கத்திற்கும், அகராதிக்கும் உள்ள வேறுபாடு யாது?**

காலத்திற்கு ஏற்ப வளரும் சில துறைகள் சார்ந்து, புதிய கண்டுபிடிப்புகளுக்கு வழங்கும் பிறமொழிச் சொற்களுக்குத் தமிழில், இணையான சொற்களை உருவாக்க வேண்டியுள்ளது. அவ்வாறு கலைச்சொல்லை உருவாக்கும் முறையில் முழு ஈடுபாடு காட்டவேண்டும்.

பொருள் தெரியாத சொற்களுக்குப் பொருள் கூறுவது அகராதி. ஆனால், பொருள் தெரிந்த பிறமொழிச் சொற்களுக்குத் தாய்மொழியில் வழக்கிலுள்ள சொற்களை அடையாளம் காட்டியும், தேவையான இடத்தில் புதிய சொற்களை உருவாக்கியும் தருவது கலைச்சொல்லாக்கம்.

## கூடுதல் வினாக்கள்

**2. கலைச்சொல், அதன் சிறப்புக் குறித்து எழுதுக.**

காலத்திற்கு ஏற்ப, வளரும் துறைசார்ந்த புதுக்கண்டுபிடிப்புக்கென உருவாக்கிப் பயன்படுத்தும் சொல், கலைச்சொல். மொழியின் வேர்ச்சொல் (பகுதி) கொண்டு, இதனை உருவாக்க வேண்டும்.

அவ்வாறு புதிய கலைச்சொற்களை உருவாக்கும்போது, மொழி தன்னைப் புதுப்பித்துக் கொள்வதோடு, புது வளர்ச்சியும் பெறும். கலைச்சொற்கள் பெரும்பாலும் காரணப் பெயர்களாகவே இருக்கும்.

**3. மருத்துவம், கல்வித்துறை சார்ந்த சில கலைச்சொற்களை எழுதுக.**

**மருத்துவத்துறை சார்ந்த சில கலைச்சொற்கள் :**

Clinic – மருத்துவமனை
Compounder – மருந்தாளுநர்
Typhoid – குடல் காய்ச்சல்
Blood Group – குருதிப் பிரிவு
X - ray – ஊடுகதிர்
Ointment – களிம்பு

**கல்வித்துறை சார்ந்த சில கலைச்சொற்கள் :**

Note Book – எழுதுசுவடி
Rough Note book – பொதுக்குறிப்புச் சுவடி
Answer Book – விடைச்சுவடி
Prospectus – விளக்கச் சுவடி

**4. கலைச்சொல் அகராதி என்பது யாது?**

பல்வேறு துறைகள்சார்ந்த கலைச்சொற்களைத் தனித்தனியே தொகுத்து, அகர வரிசைப்படுத்தி வெளியிடப்படுவது, ‘கலைச்சொல் அகராதி’ எனப்படும்.

**5. அன்றாடம் பயன்படுத்தும் ஆங்கிலச் சொற்களுக்கு இணையான தமிழ்க் கலைச்சொற்களை அறிக.**

Smart phone – திறன்பேசி
Touch screen – தொடுதிரை
Bug – பிழை
Website – இணையம்
Blog – வலைப்பூ
Gazette – அரசிதழ்

MERCY PUBLICATIONS - CHENNAI

www.Padasalai.Net

Ceiling – உச்சவரம்பு
Circular – சுற்றறிக்கை
Sub Junior – மிக இளையோர்
Customer – வாடிக்கையாளர்
Consumer – நுகர்வோர்
Account – பற்று வரவுக் கணக்கு
Cell phone – கைப்பேசி, அலைபேசி, செல்லிடப்பேசி/
Despatch – அனுப்புகை
Subsidy – மானியம்
Super Senior – மேல் மூத்தோர்
Carrom – நாலாங்குழி ஆட்டம்
Sales Tax – விற்பனை வரி
Referee – நடுவர்

**6. உருவாக்கும் சொல் பல சொற்களை உருவாக்கும் ஆக்கத்திறன் கொண்டதாக இருக்கவேண்டும் என்பதற்குச் சான்று தந்து விளக்குக.**

ஒரு சொல்லை மொழி பெயர்க்கும்போதோ, புதிய சொற்களை உருவாக்கும்போதோ அச்சொல்லானது, அதே போன்று வேறு பல சொற்கள் உருவாக உதவுவதாக இருக்க வேண்டும்.

சான்றாக 'Library' என்னும் ஆங்கிலச் சொல்லுக்கு 'நூலகம்', 'நூல் நிலையம்' என்னும் சொற்களைப் பயன்படுத்துகிறோம்.

இவற்றில் 'நூலகம்' என்னும் சொல், 'நூலகர்' (Librarian), 'நூலக அறிவியல்' (Library Science) என்னும் சொற்கள் உருவாகத் துணை புரிந்துள்ளமை காண்க.

**7. கலைச்சொற்களை ஏன் தரப்படுத்த வேண்டும்?**

கற்றவர், கல்லாதவர், கைவினைஞர், பயிற்றுநர், மாணவர், மகளிர் எனப் பலரும் இன்றைய சூழலில் கலைச்சொற்களை உருவாக்குகின்றனர். அறிவியல் சார்ந்த கலைச்சொற்களை உருவாக்கும்போது, ஒரே பொருளைக் குறிக்கப் பலவேறு சொற்களைக் கையாளுகின்றனர்.

அக்கலைச் சொற்கள், தமிழின் சொல்லாக்க வளர்ச்சியைக் காட்டினாலும், புரிந்து கொள்ளுதல் நிலையில் பொருள் குழப்பத்தை ஏற்படுத்தும். இக்குழப்பத்தைத் தவிர்த்துத் தெளிவைப் பெறக் கலைச்சொற்களைத் தரப்படுத்திப் பயன்படுத்துதல் அவசியமாகும்.

**சான்று :** 'ANTIBIOTICS' என்னும் சொல்லைத் தமிழில் எதிர் உயிர்ப்பொருள், நுண்ணுயிர்க் கொல்லி, உயிர் எதிர் நச்சுகள், கேடுயிர்க் கொல்லிகள், நச்சுயிர்க் கொல்லிகள் எனப் பலவாறு தமிழில் வழங்குவது, குழப்பத்தை ஏற்படுத்துதல் காண்க.

## இலக்கணத் தேர்ச்சி கொள்

**1. கலைச்சொல்லாக்கம் – பொருள் தருக.**

ஒரு மொழியில் காலத்திற்கேற்ப, துறைசார்ந்த புதிய கண்டுபிடிப்புகளுக்காக உருவாக்கிப் பயன்படுத்தப் படும் சொற்கள், 'கலைச்சொற்கள்' எனப்படும்.

**2. கலைச்சொல்லாக்கப் பணிகள் தொடங்குவதற்குரிய விதிமுறைகள் யாவை?**

★ புதிதாக உருவாக்கப்பெறும் கலைச்சொல், தமிழ்ச்சொல்லாக இருத்தல் வேண்டும்.
★ பொருள் பொருத்தமுடையதாகவும், செயலைக் குறிப்பதாகவும் அமைதல் வேண்டும்.
★ வடிவில் சிறியதாகவும் எளிமையானதாகவும் இருத்தல் வேண்டும்.
★ ஒசை நயமுடையதாகவும், தமிழ் இலக்கண மரபுக்கு உட்பட்டதாகவும் இருத்தல் வேண்டும்.
★ மொழியின் வேர்ச்சொல்லை அடிப்படையாகக் கொண்டு, பல சொற்களை மேலும் உருவாக்கும் ஆக்கத்திறன் கொண்டதாகக் கலைச்சொற்களை உருவாக்கல் வேண்டும்.
★ இவ்விதிமுறைகளைக் கலைச்சொல்லாக்கப் பணிகள் தொடங்குமுன், பின்பற்ற வேண்டும்.

**3. பின்வரும் ஆங்கிலச் சொற்களுக்கு இணையான தமிழ்க் கலைச்சொற்களை எழுதுக.**

Personality – ஆளுமை, வேறுபட்ட பண்பு.
Plastic – நெகிழி
Straw – நெகிழிக்குழல், உறிஞ்சுகுழல்.
Horticulture – தோட்டக்கலை
Apartment – அடுக்குமாடி, அடுக்ககம், தொகுப்புமனை.
Emotion – மனஉணர்ச்சி, மனக்கிளர்ச்சி.
Escalator – நகரும் மின்படி
Mass Drill – கூட்டு உடற்பயிற்சி
Average – நடுத்தரம், சராசரி அளவு.

MERCY PUBLICATIONS CHENNAI

**4. Ship என்னும் ஆங்கிலச் சொல்லின் பழந்தமிழ் இலக்கியப் பெயரைக் கூறுக.**

நாவாய், கலம்.

**5. உலக அளவில் கணிதச் சூத்திரங்களையும், வேதியியல் குறியீடுகளையும் தமிழில் எவ்வாறு பயன்படுத்த வேண்டுமென்று வா. செ. குழந்தைசாமி கூறுகிறார்?**

உலக அளவில் பயன்படுத்தப்படும் கணிதச் சூத்திரங்களையும், வேதியியல் குறியீடுகளையும் தமிழில் பயன்படுத்தும்போது, பழந்தமிழிலக்கியச் சொல்லைத் தேர்ந்து பயன்படுத்துதல். (எ–கா: வலவன்/Pilot)

பேச்சுமொழிச் சொல்லைப் பயன்படுத்துதல் . (எ–கா : அம்மை)

பிறமொழிச் சொற்களைக் கடன் பெறுதல். (எ–கா : தசம முறை / Decimal)

புதுச்சொல் படைத்தல். (எ–கா : மூலக்கூறு / Molecule)

உலக வழக்கை அப்படியே ஏற்றுக் கொள்ளல். (எ–கா : எக்ஸ் கதிர் / Xray)

பிறமொழித்துறைச் சொற்களை மொழி பெயர்த்தல். (ஒளிச்சேர்க்கை / Photosynthesis)

ஒலிபெயர்த்துப் பயன்படுத்துதல். (எ–கா : மீட்டர் / Meter) (ஓம் / Om)

உலக அளவிலான குறியீடுகள் – சூத்திரங்களை $R\sqrt{A} = r, r^2$ $H_2O$, Ca

அப்படியே ஏற்றல் என்னும் நெறிமுறையைக் கையாள வேண்டுமென்று, வா.செ.குழந்தைசாமி கூறுகிறார்.

## பலவுள் தெரிக

1. ஈறுபோதல், முன்னின்ற மெய்திரிதல், தனிக்குறில்முன் ஒற்று உயிர்வரின் இரட்டும், உடல்மேல் உயிர்வந்து ஒன்றுதல் ஆகிய வரிசையில் புணர்ந்த சொல் ______.

அ) மூதூர் ஆ) வெற்றிடம் இ) நல்லாடை ஈ) பைந்தளிர்

**விடை :** இ) நல்லாடை

## கூடுதல் வினாக்கள்

2. பொருள் தெரியாத சொற்களுக்குப் பொருள் கூறுதல் ______ நோக்கம்.

அ) கலைச் சொல்லின் ஆ) இணையத்தின் இ) அகராதியின் ஈ) வலைப்பூவின்

**விடை :** இ) அகராதியின்

3. மக்கள் பயன்பாட்டிற்குக் கலைச்சொற்களைக் கொண்டு சேர்க்கத் துணை நிற்பவை ______.

அ) பொதுமக்களும் இதழ்களும் ஆ) பள்ளிகளும் இதழ்களும்

இ) மாணவர்களும் ஊடகங்களும் ஈ) இதழ்களும் ஊடகங்களும்

**விடை :** ஈ) இதழ்களும் ஊடகங்களும்

4. மாணவர்களிடையே கலைச்சொற்கள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த உதவுவது ______.

அ) செய்தித்தாள்

ஆ) வார மாத இதழ்

இ) பள்ளியில் செயல்படும் கையெழுத்து இதழ்

ஈ) வானொலி

**விடை :** இ) பள்ளியில் செயல்படும் கையெழுத்து இதழ்

5. ‘தென்ஆப்பிரிக்காவின் பெண்கள் விடுதலை’ என்னும் கட்டுரை எழுதியவர் ______.

அ) பாரதிதாசன் ஆ) திரு. வி. கலியாணசுந்தரனார்

இ) காந்தியடிகள் ஈ) பாரதியார்

**விடை :** ஈ) பாரதியார்

MERCY PUBLICATIONS - CHENNAI

www.Padasalai.Net

## கலைச்சொற்கள் அறிவோம்

| | | | |
|---|---|---|---|
| Ability | – ஆற்றல் | Abstraction | – பொதுமைப்படுத்துதல் |
| Adjustment | – பொருத்தப்பாடு | Affection | – உணர்வுநிலை |
| Allegory | – உள்ளுறை உவமம் | Alliteration | – மோனை |
| Attitude | – மனப்பான்மை | Act | – அங்கம் |
| Action | – செயல் / நடிப்பு | Appropriateness | – பொருத்தப்பாடு |
| Active Voice | – செய்வினை | Adjective | – பெயரடை |
| Adverb | – வினையடை | | |
| Affirmative Sentence | – உடன்பாட்டுத் தொடர் | | |
| Analysis of Sentence | – தொடரைப் பகுத்தல் | Analysis | – பகுப்பாய்வு |
| Art Editor | – கலைப்பகுதி ஆசிரியர் | | |
| Anchor | – நெறியாளர் | | |
| Balance | – சமநிலை | Beat Reporter | – செய்திக்கள நிருபர் |
| Bit News | – துணுக்குச் செய்திகள் | | |
| Bureau | – செய்தி நிறுவனம் | | |
| Browser | – உலவி | Browsing | – உலவுதல் |
| Beauty | – அழகு | Characteristics | – சிறப்பியல்புகள் |
| Cognition | – அறிவுநிலை | Concept | – பொதுமைக் கருத்து |
| Conclusion | – முடிவு | Conflict | – முரண்பாடு |
| Concord of Agreement | – இசைவு | Consciousness | – நினைவு நிலை |
| Creating the atmosphere | – சூழ்நிலை காட்டும் முறை | | |
| Creativity | – படைப்பாற்றல் | | |
| Critic | – திறனாய்வாளர் | Catastrophe | – விளைவு அல்லது முடிவு |
| Cause and Effect | – காரணகாரியம் | Character | – பாத்திரம் |
| Climax | – உச்சம் | Comedy play | – இன்பவியல் நாடகம் |
| Complication | – சிக்கல் | Conflict | – முரண் |
| Contrast | – வேறுபாடு / வேற்றுமை | | |
| Crisis | – சிக்கல் | | |
| Complex Sentence | – கலவைத் தொடர் | | |
| Compound Sentence | – கூட்டுத்தொடர் | | |
| Conjunctions | – இணைப்புச் சொற்கள் | | |
| Communication | – தொடர்பாடல் | | |
| Component | – கூறுபாடு | Concept | – எண்ணக்கரு |
| Correlation | – இணைபு | Correspondence | – ஒத்தியைபு |
| Caricature | – கேலிச்சித்திரம் | Cartoon | – கருத்துப்படம் |
| Composing | – அச்சுக்கோத்தல் | Copy | – படி |
| Copy Editor | – எழுத்துப்படி திருத்துநர் | | |
| Crime News | – குற்றச் செய்திகள் | | |
| Corporate Website | – நிறுவன இணையத்தளம் | | |
| Irresolution | – முடிவின்மை | | |
| Cyber Crime | – இணையக் குற்றம் | Diction | – சொல்வளம் |
| Didactic | – அறங்கூறும் கவிதை | | |
| Disposition | – மனநிலை | | |
| Doctrine | – கோட்பாடு | Dialogue | – உரையாடல் |
| Discussion | – ஆய்வு | Dramatic Irony | – நாடக முரண் |
| Direct Speech | – நேர்க்கூற்று | Decoding | – குறியவிழ்ப்பு |

MERCY PUBLICATIONS - CHENNAI

| | | | |
|---|---|---|---|
| Dialect | – கிளைமொழி | Digital | – எண்மம் |
| Dynamic Website | – இயங்கு இணையத்தளம் | | |
| Emotion | – உள்ளக்கிளர்ச்சி | | |
| Environment | – சூழ்நிலை | Epic | – பெருங்காப்பியம் |
| Essence | – பிழிவு | Explanatory | – விளக்கமுறை |
| Economy | – உரையாடல் சிக்கனம் | | |
| Exposition | – தொடக்கம் | | |
| Exclamatory Sentence | – உணர்ச்சித் தொடர் | Efficiency | – வினைத்திறம் |
| Expressions | – மொழிவுகள் | Editor | – ஆசிரியர் |
| Editorial | – தலையங்கம் | Encoding | – குறியேற்றம் |
| E Learning Website | – மின்கற்றல் இணையத்தளம் | | |
| Feeling | – உணர்ச்சிக்கூறு | | |
| Figure of speech | – அணிகள் | Falling Action | – வீழ்ச்சி |
| Fake News | – பொய்யான செய்தி | Filler | – துண்டுச் செய்திகள் |
| Facebook | – முகநூல் | Font | – எழுத்துரு |
| Generative Grammar | – பிறப்பாக்க இலக்கணம் | | |
| Graphics | – வரைபடங்கள் | | |
| Hyperbole | – உயர்வு நவிற்சி | Hypothesis | – கருதுகோள் |
| Headlines | – தலைப்புச் செய்திகள் | | |
| Hot News | – அண்மைச்செய்தி | | |
| History of Internet | – இணைய வரலாறு | Host Computer | – கணினி சேவையகம் |
| Ideal level | – குறிக்கோள் நிலை | Image | – படிமம், உருக்காட்சி |
| Imitative | – போலச் செய்தல் | Impulse | – உள்தூண்டல் |
| Initiative | – தான் தொடங்காற்றல் | | |
| Inspiration | – அகத்தெழுச்சி | | |
| Intellect | – அறிவாற்றல் | Introduction | – அறிமுகம் |
| Introspection | – அகக்காட்சி | Irony | – வஞ்சப்புகழ்ச்சி |
| Imitation | – போலச்செய்தல் | Introduction | – அறிமுகம் |
| Indirect Speech | – அயற்கூற்று | | |
| Interrogative Sentence | – வினாத்தொடர் | | |
| Ideology | – கருத்தியல் | Idioms | – மரபுத்தொடர்கள் |
| Image | – படிமம் | Illustration | – விளக்கப் படம் |
| Impression | – அச்சுப்பதிப்பு | Interview | – நேர்காணல் |
| Interviewee | – நேர்காணல் தருபவர் | | |
| Interviewer | – நேர்காணல் நிகழ்த்துபவர் | | |
| Interface Tool | – இடைமுகச்செயலி | Internet | – இணையம் |
| ISP Account | – இணையதளக் கணக்கு | | |
| Internet Explorer | – இணையத் தேடல் ஆய்வாளர் | | |
| Internet Protocal - P | – இணைய நெறிமுறை | | |
| Journalism | – இதழியல் | | |
| Journalist | – இதழாளர் | Knowing | – அறிவுக்கூறு |
| Keyboard | – விசைப்பலகை | Little Magazines | – சிற்றிதழ்கள் |
| Local News | – உள்ளூர்ச் செய்திகள் | | |
| Meanings | – சொற்பொருள்கள் | | |
| Memorization | – மனப்பாடம் செய்தல் | Metonymy | – ஆகுபெயர் |

MERCY PUBLICATIONS - CHENNAI

| | | | |
|---|---|---|---|
| Metaphor | – உருவகம் | Method | – முறை |
| Metre | – யாப்பு | Mood | – உட்பாட்டுநிலை |
| Motive | – ஊக்கி | Motivation | – தூண்டுதல் உணர்ச்சி |
| Main Clause | – முதன்மைத் தொடர் | Magazine | – இதழ் |
| Mass Communication– | செய்தித் தொடர்பு | Mass Media | – மக்கள் தொடர்புச் சாதனம் |
| Modern | – இணக்கி | | |
| Negative Sentence | – எதிர்மறைத் தொடர் | | |
| Network | – கூட்டமைப்பு/வலையமைப்பு | | |
| News Agencies | – செய்தி நிறுவனங்கள் | | |
| News Paper | – செய்தித்தாள் | News Services | – செய்திச் சேவைகள் |
| Objective | – புறப்பொருள் கவிதை | | |
| Onomatopoetic | – ஒலிக்குறிப்புள்ள | | |
| Object | – செயப்படுபொருள் | Order of Words | – சொற்களின் முறை |
| Operating System | – இயங்குதளம் | Perception | – புலன்காட்சி |
| Personality | – ஆளுமை | Phonetic Power | – ஓசையாற்றல் |
| Poem | – பாட்டு | Poetic | – கவிதை |
| Poetic Sympathy | – கவிப்பிரிவு | Poetic Value | – கவிதை மதிப்பு |
| Poetry | – கவிதை | Power | – ஆற்றல் |
| Practice | – பயிற்சி | Prose | – உரைநடை |
| Prose poetry | – வசனகவிதை | Prosody | – யாப்பிலக்கணம் |
| Pace | – வேகம் | Parallellism | – இணைக்கதை |
| Plot | – கதைக்கோப்பு | Plot Structure | – கதையமைப்பு |
| Passive Voice | – செயப்பாட்டுவினை | Plural | – பன்மை |
| Predicate | – பயனிலை | Prefix | – முன்னொட்டுச் சொல் |
| Punctuation | – நிறுத்தக்குறி | Perception | – புலக்காட்சி |
| Pragmatic model | – பயன்வழி மாதிரியுரு | | |
| Pragmatic translation | – பயன்வழி மொழிபெயர்ப்பு | | |
| Process | – நிகழ்முறை | Proverb | – பழமொழி |
| Password | – கடவுச்சொல் | Personal Website | – தனியாள் இணையத்தளம் |
| Rhyme, Rime | – எதுகை | Rhythm | – ஒலிநயம் |
| Resolution | – சிக்கலின் தீர்வு | Rise and fall | – ஏற்றஇறக்கம் |
| Rising action | – வளர்ச்சி | Reference Books | – பார்வை நூல்கள் |
| Relativity | – தொடர்பியல் | Revised Edition | – மறுபதிப்பு |
| Reporter | – செய்தியாளர் | Review | – மீள்பார்வை, மீள்நோக்கு |
| Semantic Power | – பொருளாற்றல் | Sensation | – புலன் உணர்வு |
| Sentiment | – பற்று, சுவை | Simile | – உவமை |
| Stanza | – பாசுரம், செய்யுள் பத்தி | | |
| Stimulus | – தூண்டல் | | |
| Subjective | – அகப்பொருள் கவிதை | Symbol | – குறியீடு |
| Sympathy | – இரக்கம் | Setting | – பின்னணி / பின்புலம் |
| Soliloquies | – தனிமொழி | Stage Directions | – மேடைநெறிக் குறிப்புகள் |
| Story | – கதை | Sentence | – தொடர் |
| Simple Sentence | – தனித்தொடர் | Singular | – ஒருமை |
| Subject | – எழுவாய் | Subordinate Clause | – சார்புத் தொடர் |
| Suffix | – பின்னொட்டுச் சொல் | | |

MERCY PUBLICATIONS - CHENNAI

| | | | |
|---|---|---|---|
| Syntax | – தொடரியல் | | |
| Synthesis of Sentence | – தொடரைச் சேர்த்தல் | | |
| Semantic relationship | – சொற்பொருள் உறவு | | |
| Significance | – பொருண்மை | Signified | – குறிபடுபொருள் |
| Signifier | – குறிப்பான் | Structuralism | – அமைப்பியம் |
| Scanner | – வருடி | Search engines | – தேடுபொறி |
| Server | – வழங்கி | Skype | – இசுகை |
| Speech Recognizer | – பேச்சுரை மாற்றி | Source Books | – மூலநூல் / வளநூல் |
| Surface Level | – மேற்பரப்பு மட்டம் | Static Website | – நிலை இணையத்தளம் |
| Tendency | – உளப்போக்கு | Theory | – கொள்கை |
| Techniques | – உத்திகள் | Tragedy | – துன்பவியல் / துயர நிகழ்வு |
| Tragicomedy | – துன்பியல் நகைச்சுவை | | |
| Turning point | – திருப்புமுனை | | |
| The sequence of Tenses | – காலமுடிபு | Thesaurus | – தொகைச்சொல் நிகண்டு |
| Target Language | – இலக்குமொழி | Technique | – தொழில் நுண்முறை |
| Traditional model | – மரபுவழி மாதிரியுரு | Text to Speech | – எழுத்து – பேச்சு மாற்றி |
| Twitter | – கீச்சகம் | Understanding | – புரிந்துகொள்ளுதல் |
| Value | – மதிப்பு | Verse | – செய்யுள் |
| Unicode | – ஒருங்குறி | Username | – பயனர் பெயர் |
| Willing | – முயற்சிக்கூறு | WIFI | – அருகலை |
| Web Pages | – வலைப்பக்கங்கள் | Web Portal | – இணையத்தளத் தொகுப்பு |
| WhatsApp | – புலனம் / கட்செவி | Word Processor | – சொல்லாளர் / சொற்செயலி |
| World Wide Web | – உலகளாவிய வலை | Zip File | – சிப்பம் / குறுக்கக்கோப்பு |
| Wide Area Nerwork | – அகன்றபரப்பு வலைப்பின்னல் | | |
| Website | – வலைத்தளம் | | |
| Socio-relational patterns | – சமூக உறவுக்கோலம் | | |
| Syntactical elements | – தொடர் இலக்கணக் கூறுகள் | | |
| Empathy | – பிறர்நிலையில் தன்னை வைத்துப் பார்த்தல் | | |
| Interchange of Active and Passive | – செய்வினை – செயப்பாட்டுவினை மாற்றம் | | |
| TCP Transmission Control Program | – செய்திப்பரிமாற்றத் தொழில்நுட்பம் | | |
| URLs - Uniform Resource Locators | – சீரான வள இடங்காட்டிகள் | | |
| Intransitive Verb | – செயப்படுபொருள் குன்றிய வினை | | |
| ISP - Internet Service Provider | – இணைப்பு வழங்கும் நிறுவனம் | | |
| Hand Written Recognition | – கையெழுத்து உணரி | | |
| Typing Interface Tool | – தட்டச்சு இடைமுகச் செயலி | | |
| Web Directories | – தகவல் களஞ்சிய இணையத்தளம் | | |
| Pocket Switching Technology | – தரவு மாற்றத் தொழில்நுட்பம் | | |
| Optical Character Recognizer | – ஒளிவழி எழுத்தறிவான் | | |
| E Commerce Website | – மின் வணிக இணையத்தளம் | | |
| LAN - Local Area Network | – குறும்பரப்பு வலைப்பின்னல் | | |
| Green Proof | – திருத்தப்படாத அச்சுப்படி | | |
| Gaming Website | – விளையாட்டு இணையத்தளம் | | |
| Idiomatic Phrases | – மரபுத்தொடர் சொற்றொடர்கள் | | |
| Traformation of Sentence | – தொடர் மாற்றம் | | |
| Transitive Verb | – செயப்படுபொருள் குன்றா வினை | | |

MERCY PUBLICATIONS - CHENNAI

www.Padasalai.Net

## தெரிந்து கொள்வோம்

## நிறுத்தக்குறிகள்

### குறுவினா

**1. முக்காற் புள்ளி இடம்பெற வேண்டிய இடத்தினை எடுத்துக்காட்டுடன் எழுதுக.**

★ சிறுதலைப்பு, நூற்பகுதி, எண், பெருங்கூட்டுத் தொடர் முதலிய இடங்களில் முக்காற் புள்ளி இடவேண்டும்.

எ – கா : i. சார்பெழுத்து :
ii. பத்துப்பாட்டு 2 : 246
iii. எட்டுத்தொகை என்பன வருமாறு :

### கூடுதல் வினாக்கள்

**2. காற்புள்ளி இடம்பெற வேண்டிய இடங்களை எடுத்துக்காட்டுடன் எழுதுக.**

★ பொருள்களைத் தனித்தனியே குறிப்பிடும் இடங்கள், எச்சச் சொற்றொடர்கள், இணைப்புச் சொற்கள், திருமுகவிளி, இணைமொழிகள் முதலிய இடங்களில் காற்புள்ளி இடம்பெற வேண்டும்.

எ – கா : i. அறம், பொருள், இன்பம், வீடு என வாழ்க்கைப் பேறுகள் நான்கு.
ii. நாம் எழுதும்போது, பிழையற எழுதவேண்டும்.
iii. இனியன் நன்கு படித்ததனால், தேர்ச்சி பெற்றான்.
iv. ஐயா, / அம்மையீர்,
v. சிறியவன், பெரியவன், செல்வன், ஏழை.

**3. அரைப்புள்ளி இடம்பெறும் இடங்களைக் கூறுக.**

★ தொடர்நிலைத் தொடர்களிலும், ஒரு சொல்லுக்குப் பலபொருள் கூறும் இடங்களிலும் அரைப்புள்ளி இடுதல் வேண்டும்.

எ – கா : i. வேலன் கடைக்குச் சென்றான்; பொருள்களை வாங்கினான்; வீடு திரும்பினான்.
ii. அளி – அன்பு; அருள்; குளிர்ச்சி; வண்டு; இரக்கம்; எளிமை.

**4. முற்றுப்புள்ளி வரும் இடங்கள் இரண்டினைக் குறிப்பிடுக.**

★ தலைப்பின் இறுதி, தொடரின் இறுதி, முகவரி இறுதி, சொற்குறுக்கம், நாள் முதலிய இடங்களில், முற்றுப்புள்ளி இடுதல் வேண்டும்.

எ – கா : i. மரபியல். ii. உருவுகண்டு எள்ளாமை வேண்டும்.
iii. தலைமையாசிரியர், அரசு மேனிலைப்பள்ளி. iv. தொல். சொல். 58.
v. 12 / 12 / 2018.

**5. வினாக்குறி இடவேண்டிய இடம் குறித்து விளக்கு.**

★ ஒரு வினாத்தொடர் (முற்றுத் தொடராகவும்), நேர்க்கூற்றுத் தொடராகவும் இருப்பின், இறுதியில் வினாக்குறி வருதல் வேண்டும்.

எ – கா : i. அது என்ன? (வினா – முற்று) ii. "நீ வருகிறாயா?" என்று கேட்டான். (நேர்க்கூற்று)

**6. விளிக்குறி இடம்பெறும் இடத்தை எழுதுக.**

★ அண்மையில் இருப்பவரை அழைப்பதற்கும், தொலைவில் இருப்பவரை அழைப்பதற்கும் விளிக்குறி இடுதல் வேண்டும். (வியப்புக் குறிக்கும் விளிக்குறிக்கும் அடையாளம் ஒன்றே)

எ – கா : i. அவையீர்! ii. அவைத் தலைவீர்!

**7. வியப்புக்குறி இடம்பெறும் இடம் விளக்குக.**

★ வியப்பு, இடைச்சொல்லுக்குப் பின்பும், நேர்க்கூற்று, வியப்புத்தொடர் இறுதியிலும், அடுக்குச் சொற்களின் பின்னும் வியப்புக்குறி இடுதல் வேண்டும்.

எ – கா : i. எவ்வளவு உயரமானது! ii. "என்னே தமிழின் பெருமை!" என்றார் கவிஞர்.
iii. வா! வா! போ! போ! போ!

**8. மேற்கோள் குறி இடும் இடங்கள் யாவை?**

★ இரட்டை மேற்கோள்குறி, ஒற்றை மேற்கோள்குறி என, மேற்கோள் குறிகள் இரண்டு வகைப்படும்.

★ இரட்டை மேற்கோள்குறி : நேர்க்கூற்றுகளில் இரட்டை மேற்கோள்குறி இடம்பெறும்.

எ – கா : "நான் படிக்கிறேன்" என்றான்.

MERCURY PUBLICATIONS - CHENNAI

★ **ஒற்றை மேற்கோள்குறி :** ஓர் எழுத்தையோ, சொல்லையோ, சொற்றொடரையோ தனியே குறிக்கும் இடம், கட்டுரைப் பெயர், நூற் பெயர், பிறர் கூற்று இடம்பெறும் வேறு கூற்று ஆகியவற்றைக் குறிக்க, ஒற்றை மேற்கோள்குறி இடல் வேண்டும்.

எ – கா : i. 'ஏ' என்று ஏளனம் செய்தான்.

ii. பேரறிஞர் அண்ணா, 'செவ்வாழை' என்னும் சிறுகதை எழுதினார்.

iii. 'கம்பனும் மில்டனும்' என்னும் நூல், சிறந்த ஒப்பீட்டு நூல்.

iv. 'செவிச்செல்வம் சிறந்த செல்வம்' என்பர்.

## சிறுவினா

**1. நிறுத்தற் குறிகளின் வகைகளையும், அவை எங்கெங்கு இடம் பெறுதல் வேண்டும் என்பதையும் தொகுத்து எழுதுக.**

★ காற்புள்ளி, அரைப்புள்ளி, முக்காற்புள்ளி, முற்றுப்புள்ளி, வினாக்குறி, வியப்பு (விளி)க்குறி, மேற்கோள்குறி என்பன நிறுத்தற்குறிகளாகும்.

(விடை : குறுவினா 1முதல் 8வரை உள்ளவற்றைத் தொகுத்துப் படிக்க)

## பலவுள் தெரிக

1. சரியான நிறுத்தக்குறியுடைய சொற்றொடரைக் கண்டுபிடிக்க

அ) மலரவன் தன் பாட்டியிடம் நான் படிக்கிறேன் என்றான்.

ஆ) மலரவன், தன் பாட்டியிடம், "நான் படிக்கிறேன்" என்றான்.

இ) மலரவன் தன் பாட்டியிடம், "நான் படிக்கிறேன்" என்றான்.

ஈ) மலரவன் தன் பாட்டியிடம், நான் படிக்கிறேன்! என்றான்.

விடை : ஆ) மலரவன், தன் பாட்டியிடம், "நான் படிக்கிறேன்" என்றான்.

## கூடுதல் வினா

2. சரியான நிறுத்தற்குறியுடைய சொற்றொடரைக் காண்க.

அ) பேரறிஞர் அண்ணா செவ்வாழை என்னும் சிறுகதை எழுதினார்.

ஆ) பேரறிஞர் அண்ணா செவ்வாழை என்னும் 'சிறுகதை' எழுதினார்.

இ) பேரறிஞர் அண்ணா, 'செவ்வாழை' என்னும் சிறுகதை எழுதினார்.

ஈ) 'பேரறிஞர் அண்ணா' செவ்வாழை என்னும் சிறுகதை எழுதினார்.

விடை : இ) பேரறிஞர் அண்ணா, 'செவ்வாழை' என்னும் சிறுகதை எழுதினார்.

## இலக்கணத் தேர்ச்சிகொள்

**1. நிறுத்தற் குறிகளின் பயன்களைக் கூறுக.**

★ நிறுத்தற் குறிகள், வெறும் அடையாளங்கள் அல்ல. அவை பொருள் பொதிந்தவை. மக்களது உணர்வின் இயக்கமாக விளங்குவது மொழி. மொழியின் தெளிவை உணர்த்த, நிறுத்தல்களும் குறியீடுகளும் அடையாளங்களாகும். நிறுத்தற்குறிகள், ஒரு தொடரிலுள்ள பொருள் வேறுபாட்டை உணர்த்துவதற்கு அடிப்படையாகும்.

★ மொழியைத் தெளிவாகப் பேசவும் எழுதவும் நிறுத்தற்குறிகள் துணை நிற்கின்றன. நிறுத்தற்குறிகளைப் பயன்படுத்திப் படிக்க முயலும்போது, தெளிவாகப் பொருள் உணர்ந்து, படிப்பவர்களும், கேட்பவர்களும் பயன்பெறுவர்.

**2. முற்றுப்புள்ளி வரும் இடங்கள் இரண்டினைக் குறிப்பிடுக.**

★ தொடரின் இறுதி, முகவரி இறுதிகளில் முற்றுப்புள்ளி இடவேண்டும்.

எ–கா: i. உருவுகண்டு எள்ளாமை வேண்டும்.

ii. தலைமை ஆசிரியர், அரசு மேனிலைப்பள்ளி, சென்னை – 600 002.

**3. விளிக்குறி, வியப்புக்குறி வரும் இடங்களை வேறுபடுத்துக.**

★ விளிக்குறிக்கும், வியப்புக்குறிக்கும் இடப்படும் அடையாளம் ஒன்றே. விளிக்குறி, அண்மையில் இருப்பவரையோ, தொலைவில் இருப்பவரையோ அழைப்பதற்கு இடப்படும்.

★ வியப்பு, இடைச்சொல்லுக்குப் பின்பும், நேர்க்கூற்றின் வியப்புத்தொடர் இறுதியிலும், அடுக்குச்சொற்களுக்குப் பின்பும் வியப்புக்குறி இடப்படும்.

MERCY PUBLICATIONS - CHENNAI

www.Padasalai.Net

4. **சிலப்பதிகாரத்தைப் படித்தேன் வியந்தேன் மகிழ்ந்தேன் – இத்தொடர்க்குரிய நிறுத்தற்குறிகளைத் தகுந்த இடங்களில் இட்டெழுதுக.**

"சிலப்பதிகாரத்தைப் படித்தேன். வியந்தேன்! மகிழ்ந்தேன்!".

## மொழியை ஆள்வோம்

### சான்றோர் சித்திரம்

### (சங்கரதாசு சுவாமிகள்)

நாடகத்தமிழை வளர்த்த நல்லறிஞராய்த் திகழ்ந்த சங்கரதாசு சுவாமிகள், நாடகங்களை உருவாக்கிய ஆசிரியர்களுக்கெல்லாம் முன்னோடியாகவும், முதல்வராகவும் விளங்கினார். பெரும்புலவர்கள், சுவாமிகளின் பாடல் திறத்தையும், உரையாடல் தரத்தையும் உணர்ந்து நெஞ்சாரப் பாராட்டியுள்ளனர். இளமையில் புலவரேறு பழநி தண்டபாணி சுவாமிகளைத் தேடிச் சென்று, தமிழறிவைப் பெற்ற இவர், தம்முடைய 16ஆவது வயதிலேயே கவியாற்றல் பெற்று, வெண்பா, கலித்துறை, இசைப்பாடல்களை இயற்றத் தொடங்கிவிட்டார். இரணியன், இராவணன், எமதருமன் ஆகிய வேடங்களில் நடித்துப் புகழடைந்தபோது அவருடைய வயது 24. வண்ணம், சந்தம் பாடுவதில் வல்லவராயிருந்த சுவாமிகளின் 'சந்தக் குழிப்புகளின்' சொற்சிலம்புகளைக் கண்டு, அக்காலத்தில் மக்கள் வியப்புற்றனர்.

சங்கரதாசு சுவாமிகள், 'சமரச சன்மார்க்க சபை' என்னும் நாடகக் குழுவை உருவாக்கினார். இந்தக் குழுவில் பயிற்சி பெற்ற எஸ். ஜி. கிட்டப்பா, நாடகக் கலைத்துறையில் பெரும்புகழ் ஈட்டினார். நாடக மேடை, நாகரிகம் குன்றிய நிலையில், மதுரை வந்த சுவாமிகள், 1918இல், 'தத்துவ மீனலோசனி வித்துவ பால சபை' என்னும் நாடக அமைப்பை உருவாக்கி, ஆசிரியர் பொறுப்பேற்றார். இங்கு உருவானவர்களே டி. கே. எஸ். சகோதரர்கள். நாடகத்தின்மூலம் மக்களுக்கு அறவொழுக்கத்தையும், தமிழின் பெருமையையும் பண்பாட்டையும் தம் சுவை மிகுந்த பாடல், உரையாடல் வழியே உணர்த்திய சங்கரதாசு சுவாமிகளை நாடகத்துறைக் கலைஞர்கள், 'தமிழ் நாடகத் தலைமை ஆசிரியர்' என்று உளமகிழ்ந்து போற்றுகின்றனர்.

1. **தமிழ்ச் சொல்லாக்குக – சன்மார்க்கம், வித்துவ பால சபை.**

சன்மார்க்கம் – ஆன்மநெறி

வித்துவ பால சபை – இளங்கலைஞர் மன்றம்

2. **நாடகத் தமிழை வளர்த்த நல்லறிஞராய்த் திகழ்ந்தவர் சங்கரதாசு சுவாமிகள் – அடிக்கோடிட்ட வினையாலணையும் பெயரை வினைமுற்றாக்கித் தொடரை எழுதுக.**

சங்கரதாசு சுவாமிகள், நாடகத் தமிழை வளர்த்த நல்லறிஞராய்த் திகழ்ந்தார்.

3. **ஈட்டினார் – பகுபத உறுப்பிலக்கணம் தருக.**

ஈட்டு + இன் + ஆர்

ஈட்டு – பகுதி, இன் – இறந்தகால இடைநிலை, ஆர் – படர்க்கைப் பலர்பால் வினைமுற்று விகுதி.

4. **தன்னன தானன தன்னனனே – இந்தச் சந்தத்தில் பொருள் பொதிந்த இரண்டு அடிகள் கொண்ட பாடல் எழுதுக.**

எ – கா : இந்திய நாட்டினில் வாழ்வதையே
இன்பமாய்க் கொண்டிடல் வேண்டுமப்பா......
இங்குமங் கையராய் வந்ததையே
ஏற்றதாம் என்றிடல் வேண்டுமையா.

5. **தமிழ் நாடகத் தலைமையாசிரியர் – சிறப்புப் பெயருக்கான காரணத்தை அளிக்க.**

நாடகத்தின்வழித் தமது சுவை மிகுந்த பாடல்கள், உரையாடல்கள்மூலம் மக்களுக்கு அறவொழுக்கத்தையும், தமிழின் பெருமையையும், பண்பாட்டையும் உணர்த்தினார். எனவே, நாடகத்துறைக் கலைஞர்கள், சங்கரதாசு சுவாமிகளைத் 'தமிழ் நாடகத் தலைமையாசிரியர்' எனப் போற்றிச் சிறப்பித்தனர்.

**விடைக்கேற்ற வினா அமைக்க.**

1. பெரும்புலவர்கள், சங்கரதாசு சுவாமிகளின் பாடல் திறத்தையும், உரையாடல் தரத்தையும் உணர்ந்து நெஞ்சாரப் பாராட்டியுள்ளனர்.

   **வினா :** பெரும்புலவர்கள் எவற்றை உணர்ந்து, சங்கரதாசு சுவாமிகளை எவ்வாறு பாராட்டியுள்ளனர்?

2. சங்கரதாசு சுவாமிகளை நாடகத்துறைக் கலைஞர்கள், 'தமிழ் நாடகத் தலைமை ஆசிரியர்' என்று உளமகிழ்ந்து போன்றுகின்றனர்.

   **வினா :** நாடகத்துறைக் கலைஞர்கள் உளமகிழ்ந்து யாரை என்னவென்று போன்றுகின்றனர்?

3. தம் நாடகத்தின்மூலம் சங்கரதாசு சுவாமிகள், மக்களுக்கு அறவொழுக்கத்தையும், தமிழின் பெருமையையும், பண்பாட்டையும் உணர்த்தினார்.

**வினா :** சங்கரதாசு சுவாமிகள், தம் நாடகத்தின்மூலம் மக்களுக்கு எவற்றை உணர்த்தினார்?

**தமிழாக்கம் தருக**

The oldest documented forms of art are visual arts, which include creation of images or objects in fields including today painting, sculpture, printmaking, photography and other visual media. Music, theatre, film, dance, and other performing arts, as well as literature and other media such as interactive media, are included in a broader definition of art or the arts. Until the 17th century, art referred to any skill or mastery and was not differentiated from crafts or sciences. Art has had a great number of different functions throughout its history, making its purpose difficult to abstract or quantity to any single concept. This does not imply that the purpose of Art is "vague", but that it has had many unique, different reasons for being created.

மிகவும் பழமையான ஆவணப்படுத்தப்பட்ட கலை வடிவங்கள் எல்லாம், காட்சி வடிவக் கலைகளாக உள்ளன. அவை, பல்வேறு துறைகளில் கற்பனையாக உருவாக்கப்பட்டவை. இன்றைய ஓவியம், சிற்பம், அச்சுப் படங்கள், நிழற்படங்கள் மற்றும் காட்சிப்படங்கள் போன்றவையும் அவற்றுள் அடங்கியனவேயாகும். இசை, நாடகம், திரைப்படம், நடனம், கலை நிகழ்ச்சிகள், இலக்கியங்கள் மற்றும் ஊடகங்களில் காணப்படும் கலைகள் எல்லாமும், ஒரு பரந்த வரையறைக்குள் சேர்க்கப்பட்டவையே ஆகும். பதினேழாம் நூற்றாண்டுவரை கலை என்பது ஏதோ ஒரு திறமை, நிபுணத்துவமாகக் கருதப்பட்டது. கைவினைத் தொழில் அறிவியலோடு வேறுபட்டதாக இருந்தது. கலை மற்றும் அதன் வரலாறு முழுவதும் பெரும் எண்ணிக்கையிலான பல்வேறு செயல்பாடுகளைக் கொண்டிருக்கின்றன. கலைகளின் நோக்கம் எந்த ஒரு கருத்தையும் சுருக்கமாக அல்லது அளவுக்கு அதிகமாக வெளிப்படுத்துவதாக இருக்காது. வெவ்வேறு தனித்தனிக் காரணங்களால், தனித்துவமான தன்மைகளால் உருவாக்கப்பட்டனவாகவே உள்ளன.

## தொடர் மாற்றம்

1. மூன்று நாள்கள், கல்லூரிக்கு விடுமுறை. மாணவர்கள், தஞ்சாவூர் பிரகதீஸ்வரர் கோவிலுக்குச் சென்றனர். சிற்பங்களைக் கண்டு மகிழ்ந்தனர். (கலவைத் தொடராக மாற்றுக)

   **விடை :** மூன்று நாள்கள் கல்லூரிக்கு விடுமுறையாதலால் மாணவர்கள், தஞ்சாவூர் பிரகதீஸ்வரர் கோவிலுக்குச் சென்று, சிற்பங்களைக் கண்டு மகிழ்ந்தனர்.

2. தஞ்சைக் கோவில், எண்பட்டை வடிவில் கட்டப்பட்ட திராவிடக் கலைப்பாணியாகும். (வினாத் தொடராக்குக)

   **விடை :** தஞ்சைக் கோவில் கட்டப்பட்ட கலைப்பாணி யாது?

3. என்னே! மதுரை மீனாட்சி அம்மன் கோவில் சிற்பக் கலை. (செய்தித் தொடராக்குக)

   **விடை :** மதுரை மீனாட்சி அம்மன் கோவில் சிற்பக் கலை மிக அழகானது.

4. நான், வாரத்தின் இறுதி நாள்களில் நூலகத்திற்குச் செல்வேன். (பொருள்மாறா எதிர்மறைத் தொடராக மாற்றுக)

   **விடை :** நான் வாரத்தின் இறுதிநாள்களிலன்றிப் பிற நாள்களில் நூலகத்திற்குச் செல்லேன்.

**மெய்ப்புத் திருத்துநர் பணிவேண்டி, நாளிதழ் முதன்மையாசிரியருக்குக் கீழ்க்காணும் விவரங்களுடன் தன்விவரக்குறிப்பு ஒன்று எழுதுக.**

(பெயர், வயது, பாலினம், பிறந்தநாள், பெற்றோர், முகவரி, அலைபேசி எண், மின்னஞ்சல் முகவரி, அறிந்த மொழிகள், எடை, உயரம், குருதிவகை, கல்வித்தகுதி)

அனுப்புநர்

க. அன்புச்செல்வன்,
8, 82ஆவது தெரு,
கலைஞர் நகர்,
சென்னை – 600078.

பெறுநர்

ஆசிரியர்,
'தினமலர்' நாளிதழ்,
சென்னை – 600002.

MERCY PUBLICATIONS CHENNAI

www.Padasalai.Net

மதிப்பிற்குரிய ஐயா,

பொருள் : மெய்ப்புத் திருத்துநர் பணிவேண்டி விண்ணப்பம்.

வணக்கம். நான், பன்னிரண்டாம் வகுப்புத் தேர்ச்சி பெற்றுள்ளேன். தமிழில் தட்டச்சுச் செய்வேன். பத்திரிகைகளின் மெய்ப்புத் திருத்தும் பணியையும் செய்த அனுபவம் உண்டு. பணி அளித்தால், சிறப்பாகச் செய்வேன் என உறுதி அளிக்கிறேன்.

நன்றி.

உங்கள்,

உண்மையுள்ள,

க. அன்புச்செல்வன்.

## தன்விவரக் குறிப்பு

| | | |
|---|---|---|
| பெயர் | : | க. அன்புச்செல்வன் |
| தந்தை | : | கோ. கந்தசாமி |
| தாயார் | : | சாரதாதேவி |
| பிறந்தநாள் | : | 15. 07. 1999 |
| கல்வித்தகுதி | : | பன்னிரண்டாம் வகுப்புத் தேர்ச்சி |
| தொழில் பயிற்சித் தகுதி | : | தமிழ்த் தட்டச்சு, சுருக்கெழுத்துத் தேர்வு. |
| கணினி | : | அடிப்படைக் கணினித் தேர்வு |
| பட்டறிவு | : | இரண்டு ஆண்டுகள் சிறுபத்திரிகைகளில் மெய்ப்புத் திருத்தல் |
| முகவரி | : | 8, 82ஆவது தெரு, கலைஞர் நகர், சென்னை – 600078. |
| அலைபேசி எண் | : | 9677074899 |
| மின்னஞ்சல் முகவரி | : | anbuselvan08@gmail.com |
| அறிந்த மொழிகள் | : | தமிழ், ஆங்கிலம், தெலுங்கு. |
| உயரம் | : | 6’ |
| எடை | : | 68 கிலோ |
| குருதிவகை | : | O + |

### இலக்கியநயம் பாராட்டுக

தண்டலை மயில்கள் ஆட, தாமரை விளக்கம் தாங்க,
கொண்டல்கள் முழவின் ஏங்க, குவளைகண் விழித்து நோக்க,
தெண்திரை எழினி காட்ட, தேம்பிழி மகர யாழின்
வண்டுகள் இனிது பாட, மருதம்வீற் றிருக்கும் மாதோ.

– கம்பர்

**ஆசிரியர் குறிப்பு :** ‘கல்வியில் பெரியவர் கம்பர்’, ‘கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவிபாடும்’ என்னும் வழக்குகள், கம்பரின் கல்விப் பெருமையை விளக்கும். வடமொழியில் வால்மீகி முனிவர் எழுதிய இராமாயணத்தைத் தழுவித் தமிழ் மரபுக்கு ஏற்ப, இக்காப்பியத்தைப் பாடியுள்ளது சிறப்பாகும். இங்குக் கம்பரின் பாடலொன்று, நயம் பாராட்டக் கொடுக்கப்பட்டுள்ளது. இது, கம்பராமாயணத்திலிருந்து தேர்வு செய்யப்பட்டதாகும்.

**நயம் :** மருதநிலம் தலைவன்போல் கொலுவீற்றிருக்க, மயில் ஆடுமகளாகவும், தாமரைஅரும்பு விளக்காகவும், மேகமுழக்கம் மத்தள ஓசையாகவும், குவளைமலர்கள் கண்விழித்து நோக்கும் மக்களாகவும், வண்டுகளின் ரீங்காரம் மகர யாழிசையாகவும், தெளிந்த நீர்ப்பரப்பு எழினியாகவும் உருவகம் செய்துள்ளார். கம்பரின் கற்பனை வளத்திற்கு இது மிகச் சிறந்ததோர் எடுத்துக்காட்டு.

**எதுகை நயம் :**

அடிதோறும் முதல்சீரில் முதலெழுத்து அளவு ஒத்து நிற்க, இரண்டாம் எழுத்து ஒன்றிவந்து – தண்டலை, கொண்டல்கண், தெண்திரை, வண்டுகள் – அடி எதுகைத் தொடை அமைந்துள்ளது.

MERCY PUBLICATIONS CHENNAI

பாடல் அடியின் சீர்களில் முதலெழுத்து ஒன்றிவந்து – தண்டலை, தாமரை, தாங்க – கொண்டல், குவளை, கண் – தெண்டிரை, தேம்பிழி – சீர்மோனை அமைந்துள்ளது.

ஆட, தாங்க, ஏங்க, நோக்க, காட்ட, பாட என இனிய ஓசை தரும் சொற்கள் கையாளப்பட்டுள்ளன.

**அணிநயம் :** மருதநிலக் காட்சி, இயல்பாக உள்ளது உள்ளபடி வருணித்துக் கூறப்பட்டிருந்தாலும், புலவரின் கற்பனை இணைந்து, தற்குறிப்பேற்ற அணியை உள்ளடக்கியதாகவும் செய்யுள் திகழ்கிறது. உவமை, உருவகம், கற்பனை எனப் பலவும் நிறைந்த பாடலாக உள்ளது.

## மொழியோடு விளையாடு

**எண்ணங்களை எழுத்தாக்குக.**



மீனைச் சமைத்து
உண்ணக் கொடுக்காதே!
மீனைப் பிடித்துச்
சமைத்துண்ணக் கற்றுக்கொடு!
உழைத்துப் பிழைக்க வழிகாட்டியவர்
கூறிய நன்மொழி!
பிழைத்துக் கொள்வானிவன்
தூண்டிலில் சிக்கியது மீன்தானே!

**விடுபட்ட இடத்தில் அடுத்து வரவேண்டிய சொற்களைக் கண்டறிந்து எழுதுக.**

1. தனிமொழி – அறிவு; ______ – வண்ணமயில்; பொதுமொழி – ______

   **விடை :** தொடர்மொழி, பலகை (பலகை / பல கை)

2. கார்காலம் – ______; குளிர்காலம் – ஐப்பசி, கார்த்திகை; ______ – மார்கழி, தை

   **விடை :** ஆவணி, புரட்டாசி; முன்பனிக்காலம்.

3. எழுத்து, சொல் ______, யாப்பு, ______.

   **விடை :** பொருள், அணி

4. எழுத்து, ______, சீர், தளை, ______, தொடை.

   **விடை :** அசை, அடி

5. சேரன் – வில், சோழன் – ______, ______ – மீன்.

   **விடை :** புலி, பாண்டியன்

## நிற்க அதற்குத் தக

நம் நாட்டின் பெருமைகளில் ஒன்று தொன்மைச் சின்னங்கள். அவை நம் வரலாற்றைப் பறைசாற்றுபவை. கோவில்களிலும், தொன்மையான இடங்களிலும், கல்வெட்டுகளிலும் சிலர் கிறுக்குவதை, சிதைப்பதைப் பார்த்திருக்கிறீர்களா? நம்முடைய பெருமையை நாமே சிதைக்கலாமா? அவற்றை அழியாமல் பாதுகாக்க, நாம் என்ன செய்யப் போகிறோம்? பட்டியலிடுக. செல்லும் இடம் கோவிலோ, தொல்லியல் சார்ந்த இடமோ, இன்றளவும் இருப்பதனால் வழிபடவும் கண்டு மகிழவும் செல்கிறோம். எனவே, அவற்றைப் பழமை சிதையாமல், நம் பிற்காலச் சந்ததியினர் காணவும் பாதுகாக்கவும் வேண்டும். சுவர்களைக் கண்டால், கீறவோ கிறுக்கவோ கூடாது. நம் உறைவிடத்தைச் சிதைப்போமா? குப்பைகளையும் நெகிழிப்பைகளையும் போடக்கூடாது. வீட்டை மட்டுமன்று நாம் சார்ந்துள்ள பகுதிகளையும் தூய்மையோடு வைக்கவேண்டும். நம் பாரம்பரியத்தையும், நாகரிகத்தையும், பண்பாட்டையும் பாதுகாக்கும் சின்னங்கள் அவை. அவற்றை அழிக்கவோ, சேதப்படுத்தவோ, நமக்கோ மற்றவர்களுக்கோ உரிமை கிடையாது. நன்றும் தீதும் பிறர் தர வருவதில்லை! எனவே, நாம் அவற்றைப் பாதுகாக்க முயற்சி மேற்கொள்ள வேண்டும்.

**கலைச்சொல் அறிவோம்**

| | | | |
|---|---|---|---|
| நுண்கலைகள் | – Fine Arts | தானியக் கிடங்கு | – Grain Warehouse |
| ஆவணப்படம் | – Documentary | பேரழிவு | – Disaster |
| கல்வெட்டு | – Inscription / Epigraph | தொன்மம் | – Myth |

MERCY PUBLICATIONS - CHENNAI

 www.Padasalai.Net 

# உள்நிலைத் தேர்வு

நேரம் : 40 நிமிடங்கள் மதிப்பெண் : 30

**I. பலவுள் தெரிக.** **8 × 1 = 8**

1. கூற்று 1 : தஞ்சைப் பெரியகோவிலிலுள்ள ஓவியங்களை எஸ். கே. கோவிந்தசாமி கண்டறிந்தார்.
   கூற்று 2 : அங்குள்ள சோழர்காலத்து ஓவியங்கள், ஃப்ரெஸ்கோ வகையைச் சார்ந்தவை
   அ) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு ஆ) கூற்று இரண்டும் தவறு
   இ) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி ஈ) கூற்று இரண்டும் சரி
2. ‘ழ’ என்னும் பெயரில் கவிஞர் ஆத்மாநாமால் வெளியிடப்பட்டது; ‘கவிதைக் கிரீடம்’ என்று போற்றப்படுவது ______.
   அ) சிற்றிதழ்; குற்றாலக்குறவஞ்சி ஆ) கவிதைநூல், திருச்சாழல்
   இ) நாளிதழ், நன்னகர் வெண்பா ஈ) கட்டுரை நூல், குற்றாலக்கோவை
3. கீழுள்ளவற்றைப் பொருத்தி விடை தேர்க.
   அ) விரியன் – 1. தண்டை
   ஆ) திருகுமுருகு – 2. காலாழி
   இ) நாங்கூழ்ப்புழு – 3. சிலம்பு
   ஈ) குண்டலப்பூச்சி – 4. பாடகம்
   i – 3 4 2 1, ii – 3 1 4 2, iii – 4 3 2 1, iv – 4 1 3 2
4. பெண்கள் விளையாடும் விளையாட்டுகளுள் ஒன்று ______.
   அ) சாழல் ஆ) சிற்றில் இ) சிறுதேர் ஈ) சிறுபறை
5. ஈறுபோதல், முன்னின்ற மெய்திரிதல், தனிக்குறில்முன் ஒற்று உயிர்வரின் இரட்டும், உடல்மேல் உயிர்வந்து ஒன்றுதல் ஆகிய வரிசையில் புணர்ந்த சொல் ______.
   அ) மூதூர் ஆ) வெற்றிடம் இ) நல்லாடை ஈ) பைந்தளிர்
6. கலைச்சொற்கள், பெரும்பாலும் ______ பெயர்களாகவே இருக்கும்.
   அ) சிறப்புப் ஆ) பொதுப் இ) காரணப் ஈ) வினைப்
7. Personality என்ற ஆங்கிலச் சொல்லுக்கு இணையான தமிழ்க் கலைச்சொல் எழுதுக.
8. திருவாசகம் முழுமையையும் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தவர் ______.
   அ) பெஸ்கி ஆ) கால்டுவெல் இ) வீரமாமுனிவர் ஈ) ஜி.யு. போப்

**II. எவையேனும் நான்கனுக்கு விடை தருக.** **4 × 2 = 8**

9. இந்தியக் கட்டடக் கலையின் மூன்று வகைகள் யாவை?
10. அணில் எங்கே உறங்கச் சென்றது? அதன் கனவு எதைக் குறித்தது?
11. சிங்கிக்குப் பரிசளித்த நாடுகள் எவை?
12. தொடர் அமைத்து எழுதுக. : அன்றொருநாள், நிழலிலிருந்து
13. கலைச்சொல் அகராதி என்பது யாது?

**III. எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** **2 × 4 = 8**

14. ஃப்ரெஸ்கோ ஓவியங்கள், கற்றளிக் கோவில்கள் குறித்து நீவிர் அறிவன யாவை?
15. சிங்கி பெற்ற பரிசுப் பொருட்களாகக் குற்றாலக் குறவஞ்சி கூறுவன யாவை?
16. தமிழகப் பெண்கள் பாடிக்கொண்டே விளையாடும்போது, வெளிப்படுத்தும் மேன்மையான கருத்துகளாகத் திருச்சாழல் உணர்த்துவன யாவை?
17. மருத்துவம், கல்வித்துறை சார்ந்த சில கலைச்சொற்களை எழுதுக.

**III. பின்வரும் வினாக்களில் ஏதேனும் ஒன்றனுக்கு விரிவான விடை தருக.** **1 × 5 = 5**

18. ‘கல்லும் கதை சொல்லும்’ – என்னும் தொடர், தஞ்சைப் பெரிய கோவிலுக்குப் பொருந்துவதை விளக்கி எழுதுக.
19. இயற்கையைப் போற்றும் கவிதைகளாக ஆத்மாநாம் கவிதைகள் விளங்குவதை நிறுவுக.
20. ‘சிம்பொனி’த் தமிழரும், ‘ஆஸ்கர்’ தமிழரும் இசைத்தமிழுக்கு ஆற்றிய பணிகளை, நும் பாடப்பகுதி கொண்டு தொகுத்தெழுதுக.

MERCY PUBLICATIONS - CHENNAI

www.Padasalai.Net

# இயல் – 7

## உரைநடை உலகம்

## காற்றில் கலந்த பேரோசை

### (சுந்தர இராமசாமி)

### குறுவினா

1. **'நாழிக்குள் திணிக்கும் மருந்துபோல்' என்னும் உவமையை ஜீவானந்தம் வாழ்வுடன் ஒப்பிடுக.**

★ 'வாண வேடிக்கைக்காரன் நாழிக்குள் திணிக்கும் மருந்துபோல்' என்னும் உவமை ஜீவானந்தத்தின் மேடைப்பேச்சின் சிறப்பை விளக்குகிறது. சில கருத்துகளை விரிவாகக் கூறிப் புரிய வைத்தால் போதும் என்பதே அவர் எண்ணம்.

★ எனவே, இரண்டு கைப்பிடி விசயத்துடன் மேடை ஏறுவார். வெடிமருந்துக்கு நெருப்பு வைத்ததும், பச்சை, மஞ்சள், சிவப்பு எனக் குடைகுடையாய் உதிர்வதுபோல, மாலை மாலையாய் இறங்கி வரும் கருத்து வண்ணஜாலம் அறிந்தவர் ஜீவா என்பதைத் தெளிவுபடுத்த, இவ்வுவமை கூறப்பட்டுள்ளது.

### கூடுதல் வினாக்கள்

2. **ஜீவா குறித்து அறிந்தவற்றைச் சுருக்கமாக எழுதுக.**

★ 'ஜீவா' என அழைக்கப்பெறும் 'ப. ஜீவானந்தம்', சாதாரண விவசாயக் குடும்பத்தில் பிறந்தவர்.

★ தொடக்கக் காலத்தில் காந்தியவாதி; பின்னர்ச் சுயமரியாதை இயக்கப் போராளி.

★ ஜீவா, சிறந்த தமிழ்ப் பற்றாளர்; எளிமையின் அடையாளமாக வாழ்ந்தவர்.

3. **ஜீவாவின் மனத்தில் பசுமையாக இருந்த எண்ணம் எது?**

★ "நான் ஒரு பள்ளி மாணவன். படித்துக்கொண்டிருக்கிறேன்; படித்துக்கொண்டே இருப்பேன்" என்பது, ஜீவாவின் மனத்தில் பசுமையாக இருந்த எண்ணமாகும்.

4. **ஜீவாவின் பிரார்த்தனை யாது?**

★ "மனிதச் சிந்தனையே! கற்பனைக்கும் எட்டாத பேராற்றலே! நீ சிந்தித்தவற்றில் சிறந்தவற்றை ஒருமுறை என்னிடம் கூறு. அதனை எட்டுத் திசைகளிலும் பரப்பி, மனித இனத்தை நீ சொல்லும் இடத்திற்கு அழைத்து வருவேன். முடிந்தமட்டும் என்னைப் பயன்படுத்திக்கொள். கைம்மாறு வேண்டேன்! என்னைப் பயன்படுத்திக் கொள்வதே, நீ எனக்குச் செய்யும் கைம்மாறு" என்பதே, ஜீவாவின் பிரார்த்தனை.

5. **ஜீவாவின் கொள்கையும் நம்பிக்கையும் எதிலிருந்து பிறந்தன?**

★ 'கற்பனைக்கு எட்டாத பேராற்றலான மனிதச் சிந்தனையில் சிறந்தவற்றை, எட்டுத் திசைகளிலும் பரப்பி, மனித இனத்தை உயர்த்தத் தம்மால் இயன்றதைக் கைம்மாறு கருதாமல் செய்யவேண்டும்' என்னும் அடிப்படை மனோபாவத்திலிருந்து பிறந்ததே, ஜீவாவின் கொள்கையும் நம்பிக்கையுமாகும்.

6. **ஜீவாவின் நினைவில் எப்போதும் நிற்கும் எளிய உண்மை யாது?**

★ தமக்குத் தெரியாத அரிய செய்திகள் பிறருக்குத் தெரிந்திருக்கும் என்னும் எளிய உண்மை, ஜீவாவின் நினைவில் எப்போதும் நிலைத்திருக்கும்.

### சிறுவினா

1. **ஜீவாவின் பேச்சுநடை குறித்துச் சுந்தர ராமசாமி கூறுவன யாவை?**

★ ஜீவாவின் பாணி, இரவல் பாணியோ, கற்று அறிந்ததோ அன்று! 'பேச்சுக்கலை' என்பது ஜீவா பெற்ற வரம்!

★ மக்கள் தரத்தை, அனுபவ அறிவை, பழக்க வழக்கங்களை, நம்பிக்கைகளைத் தெளிவாக அறிந்த ஒருவர், கூறவந்த செய்திகளைக் கலைநோக்கோடு அணுகி, கற்பனை கலந்த காலப்போக்கில் வெற்றிகரமாக அமைத்துக் கொண்ட பேச்சுநடை, ஜீவாவின் பேச்சுநடை!

★ உழுது விதைத்தால் நல்ல அறுவடை காணமுடியும் என்பதை உணர்ந்தவர் ஜீவா!

MERCY PUBLICATIONS - CHENNAI

www.Padasalai.Net

### கூடுதல் வினாக்கள்

**2. ஜீவா சமூக நலனுக்காகத் தம்மை ஈடுபடுத்திக் கொண்ட முதல் நிகழ்வு குறித்து எழுதுக.**

★ நாஞ்சில் நாட்டுத் தோவாளையில் மக்களிடம் பள்ளி மாணவர் குழு ஒன்று, திருவாங்கூர் வெள்ளப் பெருக்கின் பாதிப்பை எடுத்துக் கூறித் துயர் துடைக்க நிதி திரட்டியது.

★ பள்ளி இறுதி வகுப்பு மாணவரான ஜீவா, அக்குழுவின் தலைவராகச் செயல்பட்டார்.

★ சமூக நலனுக்காக ஜீவா தம்மை ஈடுபடுத்திக் கொண்ட முதல் நிகழ்வு அது.

★ அதுவே அரசியல் சிந்தனையிலும் பொதுவுடைமைச் சிந்தனையிலும் ஜீவா, தம்மைக் கூர்வாளாக மெருகேற்றிக் கொண்ட முதல் நிகழ்வாகும்.

**3. ஜீவா மேடையில் வாழ்ந்த மாமனிதர் என்பதை விவரி.**

★ எளிமையின் அடையாளமாகத் திகழ்ந்த ஜீவா, சிறந்த மேடைப் பேச்சாளர்.

★ ஜீவா, தமக்கென ஒரு தத்துவத்தைப் படைத்துக் கொண்டவர் அல்லர்.

★ தாம் நம்பிய தத்துவத்தை, அச்சில் உயிரிழந்து கிடக்கும் சித்தாந்தக் கருத்துகளைத் தமது அரிய பேச்சாற்றலால், கலைநோக்கால், கற்பனையால் உயிர்பெற்று எழச் செய்தார்.

★ தம் மேடைப்பேச்சால் அந்த மின் சக்திக்கு ஒளியுருவம் கொடுத்தார் எனலாம்.

★ தம் மேடைப்பேச்சால், மனித இனத்தை உன்னத உயரத்திற்குக் கொண்டுசெல்ல முயன்றார்.

★ 'என் வாழ்க்கை என் கைகளில்' என்னும் நம்பிக்கையோடு மேடையில் வாழ்ந்தார்.

### நெடுவினா

**1. சுந்தர ராமசாமியின் 'காற்றில் கலந்த பேரோசை' என்னும் தலைப்பு, ஜீவாவின் வாழ்க்கைக்கு எங்ஙனம் பொருந்தும் என்பதை விளக்குக.**

**மக்கள் நம்பிக்கை :**

மக்கள் கூட்டத்தின் முன் நின்று அண்டம் முட்ட, நாற்றிசையும் அலை பரவச் சங்கநாதமென முழங்கிய ஜீவாவின் மரணம், முத்திரை கொண்டதாகத்தான் இருக்குமென அனைவரும் நம்பினர். மேடையில் வாழ்ந்த மனிதன், வாழ்ந்த இடத்தில்தானே மறைந்திருக்க வேண்டுமென, மக்களின் பேதை மனம் எண்ணுகிறது. ஜீவா என்கிற தொண்டன், இறுதி மூச்சு நிற்பதுவரை மேடையில் கர்ஜித்துக்கொண்டு இருந்திருப்பான் என்பதில், அனைவருக்கும் அத்தனை நம்பிக்கை.

**மேடைப்பேச்சில் வண்ண ஜாலம் :**

பேச்சு, அவர் பெற்ற வரம். பேச்சுக்கலை குறித்துக் கூறும் புத்தக விதிகளை மறுத்து, தம் சொந்தப் பாணியில் கற்றதை வெளிப்படுத்தியவர். மக்களின் தரம், அறிவு, பழக்கவழக்கம், நம்பிக்கைகளைப் புரிந்து, விஷயத்தோடும், கலைநோக்கோடும் கற்பனை கலந்ததாக அவர் பேச்சுப் பாணி அமைந்தது. உழுது விதைத்து நல்ல அறுவடைகாண விரும்பியவர் அவர். எனவே, செய்திகளைக் குவியல் குவியலாகக் கூறிக் குழப்பாமல், சில கூறிப் புரிய வைத்தவர்.

**காற்றில் கலந்த பேரோசை :**

பேச்சுக்கலை, அவர் காலடியில் விழுந்து கிடந்தது. இப்போது மேடையில் ஒரு நாற்காலி காலியாகிவிட்டது. அது, இனிக் காலியாகவே கிடக்கும். ஆற்றில் விழுந்த கிளை, எதிர்நீச்சல் போட்டுக் கடவுளின் முன்னேற்பாடுகளைத் தகர்த்து எறிந்துவிட்டு, மலை உச்சிக்குச் சென்றுவிட்டது. பேரோசை, காற்றில் கலந்துவிட்டது என்கிறார் சுந்தர ராமசாமி.

### பலவுள் தெரிக

1. 'ஜனப் பிரளயம்' என்னும் வடமொழிச் சொல்லுக்குரிய தமிழ்ச்சொல் எது?

அ) மக்கள் அலை ஆ) உயிர் அலை இ) மக்கள் வெள்ளம் ஈ) மக்கள் அவை

**விடை :** இ) மக்கள் வெள்ளம்

MERCY PUBLICATIONS - CHENNAI

## கூடுதல் வினாக்கள்

2. சரியான விடையைத் தெரிவு செய்க.
   1. நான் ஒரு பள்ளி மாணவன் என்ற எண்ணம் உடையவர்
   2. இயற்கையின் விதிகளை எதிர்த்து எதிர்நீச்சல் போட்டவர்
   3. என் வாழ்வு என் கையில் என்று நம்பியவர்
   4. பொதுவுடைமை இயக்கத் தலைவர்

   அ) சுந்தர ராமசாமி ஆ) ப. ஜீவானந்தம்
   இ) குமட்டூர் கண்ணனார் ஈ) குடவாயில் பாலசுப்பிரமணியன்

   **விடை :** ஆ) ப. ஜீவானந்தம்

3. ‘சொரிமுத்து’ என்பது, ______ இயற்பெயர்.
   அ) மதுசூதனின் ஆ) வைத்தியலிங்கத்தின்
   இ) ஜீவாவின் ஈ) ராசேந்திரனின்

   **விடை :** இ) ஜீவாவின்

4. ‘காற்றில் கலந்த பேரோசை’ கட்டுரையை எழுதியவர் ______.
   அ) ஆத்மாநாம் ஆ) பிரபஞ்சன் இ) பாரதியார் ஈ) சுந்தர ராமசாமி

   **விடை :** ஈ) சுந்தர ராமசாமி

5. மாணவர்கள் குழுவாகச் சென்று வெள்ளப் பெருக்கிற்காக ஜீவா நிதி திரட்டிய இடம் ______.
   அ) திருவிதாங்கூர் ஆ) நாகர்கோவில் இ) தோவாளை ஈ) குற்றாலம்

   **விடை :** இ) தோவாளை

6. ‘மின் சக்திக்கு ஒளியுருவம் கொடுத்தவர்’ எனச் சுந்தர ராமசாமியால் குறிப்பிடப்பட்டவர் ______.
   அ) திரு. வி. க. ஆ) அறிஞர் அண்ணா
   இ) ஜீவானந்தம் ஈ) சங்கரதாசு சுவாமிகள்

   **விடை :** இ) ஜீவானந்தம்

7. ஜீவா நினைவில் கொண்டிருந்த எளிய உண்மையாகச் சுந்தர ராமசாமி குறிப்பிடுவது ______.
   அ) பேச்சு எனக்குக் கைவந்த கலை ஆ) எல்லாம் கரைத்துக் குடித்துவிடவில்லை
   இ) இயற்கை விதிகளை மறுத்து எதிர்நீச்சல் போடமுடியும்
   ஈ) எனக்குத் தெரியாத விஷயங்கள் பிறருக்குத் தெரிந்திருக்கும்

   **விடை :** ஈ) எனக்குத் தெரியாத விஷயங்கள் பிறருக்குத் தெரிந்திருக்கும்

**விடைக்கேற்ற வினா அமைக்க.**

1. மேடையில் வாழ்ந்த மனிதன், வாழ்ந்த இடத்தில்தானே மறைந்திருக்கவும் வேண்டுமென எண்ணுகிறது பேதை மனசு.

   **வினா :** பேதை மனசு எவ்வாறு எண்ணுகிறது?

2. “மூச்சு நின்றுவிட்டது” என்று நான் சொன்னபோது, “பேச்சு நின்றபோதா?” எனத் திருப்பிக் கேட்கிறார்கள்.

   **வினா :** “பேச்சு நின்றபோதா?” என எப்போது திருப்பிக் கேட்கிறார்கள்?

3. பேச்சுக்கலை, அவர் பெற்ற வரம் என்றுதான் சொல்ல வேண்டும்.

   **வினா :** அவர் பெற்ற வரம் என்று, எதனைச் சொல்ல வேண்டும்?

4. பேச்சுக்கலைதான் அவருடைய காலடியில் விழுந்து கிடந்தது.

   **வினா :** அவருடைய காலடியில் விழுந்து கிடந்தது எது?

5. தனக்குத் தெரியாத விஷயங்கள் பிறருக்குத் தெரிந்திருக்கும் என்ற எளிய உண்மை, எப்போதும் அவர் நினைவில் நிற்கும்.

   **வினா :** எவ்வுண்மை அவர் நினைவில் எப்போதும் நிற்கும்?

6. ‘என் வாழ்வு என் கைகளில்’ என்று நம்பினார் அவர்.

   **வினா :** அவர் என்னவென்று நம்பினார்?

MERCY PUBLICATIONS - CHENNAI

www.Padasalai.Net

7. நீரில் விழுந்த கிளை மலைக்குச் சென்றுவிட்டது.

**வினா :** நீரில் விழுந்த கிளை எங்குச் சென்றுவிட்டது?

| வடமொழிச் சொற்கள் | தமிழ்ச் சொற்கள் | வடமொழிச் சொற்கள் | தமிழ்ச் சொற்கள் |
|---|---|---|---|
| கர்ஜித்து | முழங்கி | வர்ணஜாலம் | வண்ணக்கோலம் |
| அர்த்த புஷ்டி | பொருள் பொதிந்த | கனவேகமான | மிக விரைவாக |
| ஜீவகளை | உயிரோட்டமுள்ள | சிருஷ்டித்து | படைத்து |
| சங்கநாதம் | சங்கின் முழக்கம் | பிராயம் | வயது / பருவம் |
| ஜாதி | இனம் | சந்தேகம் | ஐயம் |
| பிரார்த்தனை | வேண்டுதல் | மனோபாவம் | மனநிலை |
| விஷயம் | செய்தி | நிர்ப்பந்தம் | அழுத்தமான நம்பிக்கை |
| பிரசங்கம் | மேடைப்பேச்சு | நிச்சயதாம்பூலம் | மணஉறுதி |

## கவிதைப்பேழை

## 1. புரட்சிக்கவி

### குறுவினாக்கள்

**1. உழைப்பாளர்களின் தோள்வலிமையால் விளைந்தன யாவை?**

★ உழைப்பாளர்கள் தங்கள் தோள்வலிமையால் பாழ்நிலத்தைப் பண்படுத்திப் புதுநிலமாக்கினர்.

★ அழகு நகர்களையும் சிற்றூர்களையும் உருவாக்கினர்.

★ வரப்பெடுத்து வயல்களையும், ஆற்றைத் தேக்கி நீர்வளத்தையும் பெருக்கி, உழுது விளைபொருள்களை உற்பத்தி செய்தனர்.

**2. அலைகடல், புதுக்கியவர் – இலக்கணக்குறிப்புத் தருக.**

★ அலைகடல் – வினைத்தொகை; புதுக்கியவர் – வினையாலணையும் பெயர்.

### கூடுதல் வினாக்கள்

**3. 'உதாரன் அழகும் அறிவும் இளமையும் வாய்ந்தவன்' – யார், யாரிடம் கூறியது?**

★ "உதாரன் அழகும் அறிவும் இளமையும் வாய்ந்தவன்" என்று அரசனிடம் அமைச்சர் கூறியது.

**4. "சில பேச்சுப் பேசிடுக" – யார், யாரிடம், எங்கு கூறியது?**

★ "சில பேச்சுப் பேசிடுக" தலைப்பாகை அதிகாரி, உதாரனிடமும் மங்கையிடமும் கொலைக்களத்தில் கூறியது.

**5. அரசன், அமைச்சரிடம் எதற்கு ஆலோசனை கேட்டான்?**

★ அரசன், தன் மகள் இளவரசி அமுதவல்லிக்குக் கவிதை எழுதும் கலையைக் கற்றுத் தர விரும்பியதால், அமைச்சரிடம் ஆலோசனை கேட்டான்.

**6. அரசன், எதற்குத் தயங்கினான்?**

★ அழகும் அறிவும் இளமையும் வாய்ந்த உதாரனே, கவிதை எழுதும் கலை கற்பிக்க ஏற்றவன் என அமைச்சர் கூறியதால், 'தன் மகள் எளிய கவிஞனோடு காதல் வயப்படுவாளோ?' என அரசன் தயங்கினான்.

**7. தயங்கிய அரசனுக்கு அமைச்சர் கூறிய உத்தி யாது?**

★ "உதாரன் பார்வையற்றவன்" என அமுதவல்லியிடமும், "அமுதவல்லி தொழுநோயாளி" என உதாரனிடமும் கூறி, இருவருக்கும் இடையே, ஒருவரை மற்றொருவர் காணாவகையில் திரை இடுமாறும் அரசனுக்கு அமைச்சர் உத்தி கூறினார்.

**8. பாரதிதாசனைப் 'புரட்சிக்கவி' எனக் கூறக் காரணங்கள் என்ன?**

★ தம் கவிதைகளில் தாய்மொழி, தமிழினம், குடியாட்சி உரிமைகள், சமூக சீர்திருத்தங்கள் என்பன பற்றி, உரத்த சிந்தனைகளை வெளியிட்டுள்ளமையே, பாரதிதாசனைப், 'புரட்சிக்கவி' எனக் கூறக் காரணங்கள் ஆகும்.

MERCY PUBLICATIONS - CHENNAI

**9. மக்களாட்சி அடிப்படைக் கூறுகளாகப் புரட்சிக்கவி கூறுவன யாவை?**

★ சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்பன, மக்களாட்சி அடிப்படைக் கூறுகள் எனப் புரட்சிக்கவி கூறுகிறது.

**10. பாரதிதாசன் இயற்றிய காப்பியங்கள் யாவை?**

★ குடும்ப விளக்கு, பாண்டியன் பரிசு, இருண்ட வீடு, சேர தாண்டவம், பிசிராந்தையார், அழகின் சிரிப்பு என்பன, பாரதிதாசன் இயற்றிய காப்பியங்களாகும்.

## சிறுவினாக்கள்

**1. "உயர் தமிழை உயிரென்று போற்றுமின்கள்" – இடம் சுட்டிப் பொருள் விளக்கம் தருக.**

இடம் : பாரதிதாசனால் இயற்றப்பட்ட புரட்சிக்கவி பாடல்.

பொருள் : உயர்ந்த தமிழை உங்களின் உயிராகப் போற்றுங்கள்.

விளக்கம் : கொலைத்தண்டனை விதிக்கப்பட்டுக் கொலைக்களத்தில் நிறுத்தப்பட்ட உதாரன், அங்குக் கூடியிருந்தோரிடம், சில சொற்கள் பேசினான். "யானறிந்த தமிழே என் மரணத்துக்குக் காரணம் என மக்கள் தமிழை இகழ்வார்களோ! மக்களே, மாசு இல்லாத உயர்ந்த தமிழை உயிராகப் போற்றுங்கள்" என்று வேண்டினான்.

**2. பெருங்காடு, உழுதுழுது – பிரித்துப் புணர்ச்சிவிதி எழுதுக.**

**பெருங்காடு – பெருமை + காடு**

'ஈறுபோதல்' (பெரு + காடு), 'இனம் மிகல்' (பெருங்காடு)

**உழுதுழுது – உழுது + உழுது**

"உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்" (உழுத் + உழுது)

"உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே" (உழுதுழுது)

## கூடுதல் வினா

**3. புரட்சிக் கவிஞர் – குறிப்பெழுதுக.**

★ புதுச்சேரியை வாழ்விடமாகக் கொண்ட கனக சுப்புரத்தினம், பாரதியாரிடம் கொண்ட பற்றுதலால், தம் பெயரைப் 'பாரதிதாசன்' என மாற்றிக் கொண்டார்.

★ சமுதாயப் பொறுப்புணர்ந்து கவிதைகளைப் படைத்தார். தம் பாடல்களில் மொழி, இனம், குடியாட்சி உரிமைகள் ஆகியன குறித்த கருத்துகளை உரக்க வெளிப்படுத்தியமையால், 'புரட்சிக் கவிஞர்' எனவும், 'பாவேந்தர்' எனவும் அழைக்கப்பெற்றார்.

★ குடும்ப விளக்கு, பாண்டியன் பரிசு, இருண்ட வீடு, சேர தாண்டவம், பிசிராந்தையார், அழகின் சிரிப்பு முதலான நூல்களை இயற்றினார். 'குயில்' என்னும் இலக்கிய இதழை நடத்தினார்.

★ வடமொழியில் எழுதப்பட்ட 'பில்கணீயம்' என்னும் காவியத்தைத் தழுவி 1937இல், 'புரட்சிக்கவி'யை எழுதினார். பிரெஞ்சு மொழியில் அமைந்த தொழிலாளர் சட்டத்தைத் தமிழ் வடிவில் தந்தார்.

★ இவருடைய 'பிசிராந்தையார்' நாடகத்திற்குச் சாகித்திய அகாதெமி விருது வழங்கப்பட்டது.

★ தமிழக அரசு இவர் பெயரில் திருச்சியில், 'பல்கலைக்கழகம்' ஒன்றை நிறுவியுள்ளது.

★ இவர் இயற்றிய 'வாழ்வினில் செம்மையைச் செய்பவள் நீயே' என்னும் பாடலைப் புதுவை அரசு, 'தமிழ்த்தாய் வாழ்த்தாக' ஏற்றுச் சிறப்பித்துள்ளது.

## நெடுவினா

**1. பாரதிதாசன் ஒரு 'புரட்சிக்கவி' என்பதை, உதாரன் பாத்திரம் வாயிலாக மெய்ப்பிக்க.**

**உதாரன் புரட்சிக்கவி :**

வடமொழியில் எழுதப்பட்ட 'பில்கணீயம்' காவியத்தைத் தழுவிப் பாரதிதாசன், 'புரட்சிக்கவி'யைப் படைத்துள்ளார். அதில் புரட்சிக்கவியாக இடம் பெற்றவன் 'உதாரன்'.

தனிமனித ஆட்சியை, ஆதிக்கத்தை அழித்து, உதாரன் மக்களாட்சியை நிறுவுகிறான். அதற்கு அவன் ஆற்றிய வீரவுரைகளே காரணம். அவ்வுரைகள் அத்தனையும் பாரதிதாசன் சிந்தையில் உருவானவையே.

MERCY PUBLICATIONS - CHENNAI

www.Padasalai.Net

**வாய்ப்பைப் பயன்படுத்தும் உதாரன் :**

தொழுநோயாளி என அறிமுகப்படுத்தப்பட்ட இளவரசி அமுதவல்லிக்குப் பார்வையற்றவனாகக் கூறப்பட்ட கவிஞன் உதாரன், கவிதை எழுதும் கலையைக் கற்பிக்கத் தொடங்கினான். அவர்கள் இறுதியில் காதலர்களாயினர். அதனால், மரண தண்டனைக்கு உள்ளாகி, இருவரும் கொலைக்களம் கொண்டு செல்லப்பட்டனர். அங்கே கிடைத்த வாய்ப்பைத் தனதாக்கிப் புரட்சிக்காரனாகிறான் கவிஞன். இங்குக் கவிஞன் உதாரனின் முழக்கமெல்லாம், பாவேந்தரின் கருத்துகளே என்பதில் ஐயமில்லை!

பாட்டாளி மக்களின் உழைப்பால் விளைந்த நலன்களை, உதாரன் பட்டியலிடுகின்றான்! "பாழ் நிலத்தை அந்நாளில் புதுக்கியவர் யார்?", "பயன்விளைக்கும் நின்ற உழைப்புத் தோள்கள் எவரின் தோள்கள்?", "கருவியெலாம் செய்த அந்தக் கைதான் யார் கை?", "கடல் முத்தை எடுக்க அடக்கிய மூச்சு எவரின் மூச்சு?" இவையெல்லாம் பாரதிதாசனது உணர்ச்சியின் வெளிப்பாடாகவே தோன்றுகின்றன.

**உதாரன் புரட்சியைத் தூண்டுதல் :**

மக்கள் உள்ளத்தில் புரட்சியைத் தூண்ட விரும்பியதால் கவிஞன் உதாரன், தனக்கும் அரசனுக்கும் உண்டான வழக்கின் அடிப்படையை எடுத்துரைக்கிறான்.

"மக்களுக்காக ஆட்சியா? ஆட்சிக்காக மக்களா?" என்னும் சிந்தனையைத் தூண்டி, "மக்களுக்காக மட்டுமே ஆட்சி இருக்க வேண்டும்" என்பதை உறுதிப்படுத்தும் வகையில் பாவேந்தர், உதாரன் வாய்மொழியாக வைத்து, "ஒரு மனிதன் தேவைக்கே இந்தத் தேசம் உண்டென்றால், அந்தத் தேசம் ஒழிதல் நன்றாம்" எனக் கூறுகின்றார்.

**புரட்சிக்கவியின் தமிழ்ப்பற்று :**

தமிழின்மேல் தமக்குள்ள பற்றுதலைப் பாவேந்தர், உதாரன் மூலமாக வெளிப்படுத்துகிறார். "அமுது சொல்லும் இந்தத் தமிழ், என் ஆவி அழிவதற்குக் காரணமாய் இருந்தது என்று சமுதாயம் நினைத்திடுமோ?" அஞ்சுவதாகக் கூறி, "என் தாய்மொழிக்குப் பழிவந்தால் சகிப்பதுண்டோ?" என வேதனைப்படுகிறான்.

எனவே மக்களை நோக்கி, "உமை ஒன்று வேண்டுகின்றேன்; மாசில்லாத உயர் தமிழை உயிர் என்று போற்று மின்கள்" என்கிறான். இவை அனைத்தும் பாரதிதாசன் ஒரு புரட்சிக்கவியே என்பதனை உறுதிப்படுத்துகின்றன.

## இலக்கணக்குறிப்பு

**ஓதுக, பேசிடுக, ஆழ்க, வாழிய, வீழிய** – வியங்கோள் வினைமுற்றுகள்

**அலைகடல், நிறைஉழைப்பு, உயர்தமிழ், வீழ்கொள்ளி** – வினைத்தொகைகள்

**தமிழ்க்கவிஞன், பாம்புக்கூட்டம்** – இருபெயரொட்டுப் பண்புத்தொகைகள்

**பேரன்பு, நெடுங்குன்றம், இளஞ்சிங்கம், பெருங்காடு, சிற்றூர், நெடுமரங்கள், நன்னாடு, பொன்னாடு, பெருமக்கள்** – பண்புத்தொகைகள்

**ஒழிதல், சாதல், தவிர்தல், முழக்கம்** – தொழிற்பெயர்கள்

**உழுதுழுது, பதைபதைத்து** – அடுக்குத்தொடர்கள்

**பெரியோரே, தாய்மாரே, இளஞ்சிங்கங்காள், பெரியீர், அன்னையீர்** – அண்மை விளிகள்

**பூட்டி** – வினையெச்சம்

**வந்திருந்தார், கொண்டவர்** – வினையாலணையும் பெயர்

**எலாம்** – இடைக்குறை

**கற்பிளந்து, மலைபிளந்து** – இரண்டாம் வேற்றுமைத்தொகை

அரசனுக்**கும்** எனக்**கும்**, இவ**ளும்** நா**னும்**, கவிஞனுக்**கும்** காதலிக்**கும்** – எண்ணும்மைகள்

**வந்தோம்** – தன்மைப்பன்மை வினைமுற்று

**கண்ணீர்வெள்ளம்** – உருவகம்

## உறுப்பிலக்கணம்

1. **நின்றார் – நில் (ன்) + ற் + ஆர்**

   **நில்** – பகுதி, 'ல்', 'ன்' ஆனது விகாரம், **ற்** – இறந்தகால இடைநிலை,

   **ஆர்** – பலர்பால் வினைமுற்று விகுதி.

2. செய்வான் – செய் + வ் + ஆன்
செய் – பகுதி, வ் – எதிர்கால இடைநிலை, ஆன் – ஆண்பால் வினைமுற்று விகுதி.
3. அழைத்தான் – அழை + த் + த் + ஆன்
அழை – பகுதி, த் – சந்தி, த் – இறந்தகால இடைநிலை, ஆன் – ஆண்பால் வினைமுற்று விகுதி.
4. வேண்டுகின்றேன் – வேண்டு + கின்று + ஏன்
வேண்டு – பகுதி, கின்று – நிகழ்கால இடைநிலை, ஏன் – தன்மை ஒருமை வினைமுற்று விகுதி.
5. ஆழ்க – ஆழ் + க
ஆழ் – பகுதி, க – வியங்கோள் வினைமுற்று விகுதி.
6. பறித்தார் – பறி + த் + த் + ஆர்
பறி – பகுதி, த் – சந்தி, த் – இறந்தகால இடைநிலை, ஆர் – பலர்பால் வினைமுறு விகுதி.
7. உரைப்பாய் – உரை + ப் + ப் + ஆய்
உரை – பகுதி, ப் – சந்தி, ப் – எதிர்கால இடைநிலை,
ஆய் – முன்னிலை ஒருமை வினைமுற்று விகுதி.
8. தந்தார் – தா (த) + த் (ந்) + த் + ஆர்
தா – பகுதி, 'த' ஆனது விகாரம், த் – சந்தி, 'ந்' ஆனது விகாரம்,
த் – இறந்தகால இடைநிலை, ஆர் – பலர்பால் வினைமுற்று விகுதி.
9. ஏகுகின்றேன் – ஏகு + கின்று + ஏன்
ஏகு – பகுதி, கின்று – நிகழ்கால இடைநிலை, ஏன் – தன்மை ஒருமை வினைமுற்று விகுதி.
10. வாழார் – வாழ் + (ஆ) + ஆர்
வாழ் – பகுதி, (ஆ) – எதிர்மறை இடைநிலை புணர்ந்து கெட்டது,
ஆர் – பலர்பால் வினைமுற்று விகுதி.
11. செய்தார் – செய் + த் + ஆர்
செய் – பகுதி, த் – இறந்தகால இடைநிலை, ஆர் – பலர்பால் வினைமுற்று விகுதி.
12. ஓதுக – ஓது + க
ஓது – பகுதி, க – வியங்கோள் வினைமுற்று விகுதி.
13. பூட்டி – பூட்டு + இ
பூட்டு – பகுதி, இ – வினையெச்ச விகுதி.
14. வெட்டி – வெட்டு + இ
வெட்டு – பகுதி, இ – வினையெச்ச விகுதி.
15. அறுத்தல் – அறு + த் + தல்
அறு – பகுதி, த் – சந்தி, தல் – தொழிற்பெயர் விகுதி.
16. வாழிய – வாழ் + இய
வாழ் – பகுதி, இய – வியங்கோள் வினைமுற்று விகுதி.
17. செய்தேன் – செய் + த் + ஏன்
செய் – பகுதி, த் – இறந்தகால இடைநிலை, ஏன் – தன்மை ஒருமை வினைமுற்று விகுதி.
18. குனிந்தான் – குனி+ த் (ந்) + த் + ஆன்
குனி – பகுதி, த் – சந்தி, 'ந்' ஆனது விகாரம், த் – இறந்தகால இடைநிலை,
ஆன் – ஆண்பால் வினைமுற்று விகுதி.

## புணர்ச்சி விதிகள்

1. நீரோடை – நீர் + ஓடை
"உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே" (நீரோடை)
2. சிற்றூர் – சிறுமை + ஊர்
"ஈறுபோதல்" (சிறு + ஊர்)
"தன்னொற்று இரட்டல்" (சிற்று + ஊர்)
"உயிர்வரின் உக்குறள் மெய்விட் டோடும்" (சிற்ற் + ஊர்)
"உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே" (சிற்றூர்)

MERCURY PUBLICATIONS - CHENNAI

www.Padasalai.Net

3. **கற்பிளந்து - கல் + பிளந்து**
"லள வேற்றுமையில் வலிவரின் றடவும் ஆகும்" (கற்பிளந்து)
4. **மணிக்குலம் - மணி + குலம்**
"இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும்" (மணிக்குலம்)
5. **அமுதென்று - அமுது + என்று**
"உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்" (அமுத் + என்று)
"உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே" (அமுதென்று)
6. **புவியாட்சி - புவி + ஆட்சி**
"இ ஈ ஐ வழி யவ்வும்" (புவி + ய் + ஆட்சி)
"உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே" (புவியாட்சி)
7. **ஒப்பவில்லை - ஒப்ப + இல்லை**
"ஏனை உயிர்வழி வவ்வும்" (ஒப்ப +வ் + இல்லை)
"உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே" (ஒப்பவில்லை)
8. **நெற்சேர - நெல் + சேர**
"லள வேற்றுமையில் வலிவரின் றடவும் ஆகும்" (நெற்சேர)
9. **பொற்றுகளை - பொன் + துகளை**
"னலமுன் றன ஆகும் தநக்கள்" (பொன் + றுகளை)
"லள வேற்றுமையில் வலிவரின் றடவும் ஆகும்" (பொற்றுகளை)
10. **பேரன்பு - பெருமை + அன்பு**
"ஈறுபோதல்" (பெரு + அன்பு), "ஆதி நீடல்" (பேரு + அன்பு)
"முற்றும் அற்று ஒரோ வழி" (பேர்அன்பு)
"உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே" (பேரன்பு)
11. **இளஞ்சிங்கம் - இளமை + சிங்கம்**
"ஈறுபோதல்" (இள + சிங்கம்), "இனம் மிகல்" (இளஞ்சிங்கம்)
12. **பொன்னாடு - பொன் + நாடு**
"னலமுன் றன ஆகும் தநக்கள்" (பொன்னாடு)
13. **நன்னாடு - நன்மை + நாடு**
"ஈறுபோதல்" (நன் + நாடு), "னலமுன் றன ஆகும் தநக்கள்" (நன்னாடு)
14. **கண்ணீர் - கண் + நீர்**
"ணளமுன் டண ஆகும் தநக்கள்" (கண்ணீர்)
15. **ஆவென்று - ஆ + என்று**
"ஏனை உயிர்வழி வவ்வும்" (ஆ + வ் + என்று),
"உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே" (ஆவென்று)
16. **தூதொன்று - தூது + ஒன்று**
"உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்" (தூத் + ஒன்று)
"உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே" (தூதொன்று)
17. **நலிவில்லை - நலிவு + இல்லை**
"முற்றும் அற்று ஒரோவழி" (நலிவ் + இல்லை)
"உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே" (நலிவில்லை)
18. **தலைப்பாகை - தலை + பாகை**
"இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும்" (தலைப்பாகை)
19. **நெடுங்குன்று - நெடுமை + குன்று**
"ஈறுபோதல்" (நெடு + குன்று), "இனமிகல்" (நெடுங்குன்று)
20. **பாம்புக் கூட்டம் - பாம்பு + கூட்டம்**
"இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும்" (பாம்புக் கூட்டம்)

MERCY PUBLICATIONS - CHENNAI

## பலவுள் தெரிக

1. அழகும் அறிவும் இளமையும் வாய்த்தவன் – யார், யாரிடம் கூறியது?
அ) அமைச்சர் கவிஞரிடம் ஆ) மன்னன் அமைச்சரிடம்
இ) அமைச்சர் மன்னனிடம் ஈ) மன்னன் அமுதவல்லியிடம்
**விடை :** இ) அமைச்சர் மன்னனிடம்

## கூடுதல் வினாக்கள்

2. மக்களாட்சியின் அடிப்படைக் கூறுகள் ______.
அ) சட்டம், நிருவாகம், நீதி ஆ) அரசு, அமைச்சர், தூதுவர்
இ) சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் ஈ) மக்கள் புரட்சி, போராட்டம், மக்களாட்சி
**விடை :** இ) சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம்

3. மக்களாட்சிச் சிந்தனைகளைப் பரப்பியதில் ______ பெரும்பங்கு உண்டு.
அ) புரட்சிக்கு ஆ) போராட்டத்திற்கு
இ) இலக்கியத்திற்கு ஈ) காலத்திற்கு
**விடை :** இ) இலக்கியத்திற்கு

4. “உயிர் எமக்கு வெல்லமன்று” எனக் கூறியவர் ______.
அ) கவிஞர் உதாரன் ஆ) மந்திரி
இ) திரண்டிருந்த மக்கள் ஈ) இளவரசி அமுதவல்லி
**விடை :** ஈ) இளவரசி அமுதவல்லி

5. சிரம் அறுத்தல் ______ பொழுதுபோக்கு!
அ) கவிஞனுக்கு ஆ) அமைச்சனுக்கு
இ) வேந்தனுக்கு ஈ) கொலைகாரனுக்கு
**விடை :** இ) வேந்தனுக்கு

6. “சாதல் எனில் இருவருமே சாதல் வேண்டும்” – இதில் இருவர் என்பது ______ குறித்தது.
அ) அரசன், அமுதவல்லி ஆ) அமைச்சர், அரசர்
இ) அமுதவல்லி, உதாரன் ஈ) உதாரன், அமைச்சர்
**விடை :** இ) அமுதவல்லி, உதாரன்

7. குடிகட்கெல்லாம் ஆளுரிமையைப் பொதுவாக்க நினைத்தது ______.
அ) உதாரன் ஆ) அமைச்சன் இ) மக்கள் ஈ) அமுதவல்லி
**விடை :** ஈ) அமுதவல்லி

8. ‘உலகம்’ என்னும் பொருள் தரும் சொல் ______.
அ) முழக்கம் ஆ) படிகம் இ) படி ஈ) மணி
**விடை :** இ) படி

9. ‘தந்திட்டான்’ என்னும் சொல்லின் பகுதி ______
அ) தா ஆ) தந்து இ) தந்த ஈ) தந்திடு
**விடை :** ஈ) தந்திடு

10. தமிழ்அறிந்த தால்வேந்தன் எனைஅழைத்தான்
தமிழ்க்கவிஎன் றெனைஅவளும் காதலித்தாள் – இப்பாடல் வரி இடம்பெற்ற நூல்
அ) அழகின் சிரிப்பு ஆ) பாண்டியன் பரிசு
இ) பிசிராந்தையார் ஈ) புரட்சிக்கவி
**விடை :** ஈ) புரட்சிக்கவி

11. பாரதிதாசன், ‘புரட்சிக்கவி’க் காவியத்தை, எதனைத் தழுவி எழுதினார்?
அ) பாரதம் ஆ) சாகுந்தலம் இ) பில்கணீயம் ஈ) பெருங்கதை
**விடை :** இ) பில்கணீயம்

12. எப்பெயரைப் ‘பாரதிதாசன்’ என மாற்றிக் கொண்டார்?
அ) ராஜகோபாலன் ஆ) அரவிந்தன் இ) வில்வரத்தினம் ஈ) சுப்புரத்தினம்
**விடை :** ஈ) சுப்புரத்தினம்

MERCY PUBLICATIONS - CHENNAI

www.Padasalai.Net

13. பாரதிதாசன், தமிழ் வடிவில் தந்தது ______ மொழியில் அமைந்த தொழிலாளர் சட்டம்.
அ) ஆங்கில ஆ) டச்சு இ) பிரெஞ்சு ஈ) போர்த்துகீசிய
விடை : இ) பிரெஞ்சு

14. பாரதிதாசன் நடத்திய இலக்கிய இதழின் பெயர் ______.
அ) வானம்பாடி ஆ) கரும்பு இ) இந்தியா ஈ) குயில்
விடை : ஈ) குயில்

15. சாகித்திய அகாதெமி விருது பெற்ற பாரதிதாசனின் நாடகம் ______.
அ) பாண்டியன் பரிசு ஆ) சேரதாண்டவம் இ) இருண்டவீடு ஈ) பிசிராந்தையார்
விடை : ஈ) பிசிராந்தையார்

16. புதுவை அரசின் தமிழ்த்தாய் வாழ்த்துப்பாடல், ______ எனத் தொடங்கும்.
அ) தமிழுக்கு அமுதென்று பேர் ஆ) நீராரும் கடலுடுத்த நிலமடந்தை
இ) வாழ்வினில் செம்மையைச் செய்பவள் ஈ) என் அம்மை ஒற்றி எடுத்த நெற்றிமண்
விடை : இ) வாழ்வினில் செம்மையைச் செய்பவள்

17. சொல் பொருள் பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| 1. | மீட்சி | - அ. | உலோகங்கள் |
| 2. | முழக்கம் | - ஆ. | மாணிக்கம் |
| 3. | மணி | - இ. | விடுதலை |
| 4. | கனிகள் | - ஈ. | உலகம் |
| | | - உ. | ஓங்கி உரைத்தல் |

விடை : 1-இ, 2-உ, 3-ஆ, 4-அ

## 2. பதிற்றுப்பத்து

(குமட்டூர்க் கண்ணனார்)

### குறுவினா

1. **செந்துறைப் பாடாண் பாட்டு - துறைவிளக்கம் எழுதுக.**
★ பாடப்படும் ஆண்மகனின் ஒழுகலாறுகளைக் கூறுவது, 'பாடாண்' எனப்படும்.
★ உலகினுள் இயற்கை வகையால் இயன்ற மக்களைப் பாடுதல் செந்துறையாகும்.
★ இவ்வகையில், அமைந்த பாடல் செந்துறைப் பாடாண்பாட்டுத் துறை ஆகும்.

### கூடுதல் வினாக்கள்

2. **வண்ணம், ஒழுகு வண்ணம் - விளக்குக.**
★ 'வண்ணம்' என்பது, சந்த (ஓசை நய) வேறுபாடாகும்.
★ 'ஒழுகு வண்ணம்' என்பது, ஒழுகிய (நெகிழ்ந்த) ஓசையால் சொல்லுதலாகும்.

3. **தூக்கு, செந்தூக்கு - விளக்குக.**
★ 'தூக்கு' என்பது, செய்யுள் அடி அளவை வரையறை செய்வதாகும். 'செந்தூக்கு' என்பது, வஞ்சிப் பாவின் இறுதி அடி போன்றோ, ஆசிரியப்பா அடியின் இறுதி போன்றோ அமைவதாகும்.

4. **திருவள்ளுவர், சிறந்த நாடு குறித்துக் கூறும் செய்தி யாது?**
★ மிகுபசியும் தீராநோயும் பெரும்பகையும் இல்லாதிருப்பதே சிறந்த நாடு எனத் திருவள்ளுவர் கூறுகிறார்.

5. **சேரலாதனின் எச்சிறப்புகளைக் குமட்டூர்க் கண்ணனார் புகழ்ந்து பாடியுள்ளார்?**
★ சேரலாதனின் நாடுகாத்தல் சிறப்பையும், கொடைச்சிறப்பையும் குமட்டூர்க் கண்ணனார் புகழ்ந்து பாடியுள்ளார்.

MERCY PUBLICATIONS - CHENNAI

**6. சேரலாதனைக் குறித்து நீ அறிந்தன யாவை?**

★ உதியன் சேரலாதனுக்கும் வேண்மாளுக்கும் மகனாகப் பிறந்தவன் நெடுஞ்சேரலாதன்.

★ இமயம்வரை படை நடத்தி வெற்றி பெற்றவன்.

★ கடம்பர்களை வென்று, தன் வீரர்களுக்குக் கவசமாக விளங்கியவன்.

★ தமிழின் சிறப்பை உலகறியச் செய்தவன்.

**7. பாடாண் திணை – விளக்குக.**

★ பாடு + ஆண் + திணை – பாடாண்திணை. பாடப்படும் ஆண்மகனின் ஒழுகலாறுகளைக் கூறுவது.

★ அதாவது ஒரு சிறந்த தலைவனின் புகழ், வலிமை, வள்ளன்மை, அருள் முதலிய பண்புகளை ஆராய்ந்து கூறுவதாகும். கைக்கிளைத் திணைக்குப் பாடாண் திணை புறனாகும்.

**8. இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனைப் பாடியவர் யார்? பெற்ற பரிசில்கள் யாவை?**

★ இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனைப் பாடியவர் குமட்டூர்க் கண்ணனார். அதற்காக உம்பற்காட்டில் 500 ஊர்களையும், தென்னாட்டு வருவாயுள் பாதியையும் பரிசில்களாகப் பெற்றார்.

**9. சேரநாட்டு மக்கள் புலம் பெயர்ந்ததில்லை – ஏன்?**

★ செல்வவளம் மிக்கது சேரநாடு.

★ அச் சேரநாட்டு மக்களை இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன், தன் கண்போலப் பாதுகாத்தான்.

★ எனவே, சேரநாட்டு மக்கள் புலம் பெயர்ந்ததில்லை.

★ வேற்று நாடு சென்று குடியேறுவதையும் விரும்பியதில்லை.

## சிறுவினா

**1. சேரநாடு, செல்வவளம் மிக்கது என்ற கூற்றிற்குரிய காரணங்களைக் குறிப்பிடுக.**

★ நெடுஞ்சேரலாதன், தன் நாட்டையும் மக்களையும் கண்போல் பாதுகாத்தான்.

★ மக்கள், பசியும் பிணியும் அறியாது, வேற்று நாட்டுக்கும் செல்ல விரும்பாமல் சுற்றம் சூழ வாழ்ந்தனர்.

★ புதுவருவாய்ப் பெருக்கமும், ஈந்து உவக்கும் இன்பமும் உடையவன் சேரலாதன்.

★ இக்காரணங்களால், சேரநாடு செல்வவளம் மிக்கதாக விளங்கியது.

## கூடுதல் வினா

**2. பதிற்றுப்பத்துக் குறித்துக் குறிப்பெழுதுக.**

★ எட்டுத்தொகை நூல்களுள், புறப்பொருள் குறித்த நூல் பதிற்றுப்பத்து.

★ இது, சேர மன்னர்கள் பத்துப் பேரின் சிறப்புகளை எடுத்தியம்புகிறது.

★ புறப்பொருள்களுள், ‘பாடாண் திணை’ குறித்தமைந்த நூல்.

★ ஒவ்வொரு பாடலின் இறுதியிலும் துறை, வண்ணம், தூக்கு, பாடலின் பெயர் ஆகியன இடம் பெற்றிருக்கும். பாடலில் இடம்பெறும் சிறந்த சொற்றொடர், அப்பாடலுக்குத் தலைப்பாக இடப்பட்டிருக்கும்.

★ இத்தொகை நூலுள், முதல் பத்தும் இறுதிப் பத்தும் கிடைக்கவில்லை.

## இலக்கணக்குறிப்பு

**துய்த்தல், பிழைப்பு** – தொழிற்பெயர்கள்

**ஒரீஇய** – சொல்லிசை அளபெடை

**புகழ்பண்பு** – வினைத்தொகை

**நன்னாடு, கடுந்துப்பு, நல்லிசை** – பண்புத்தொகைகள்

**மருண்டனென்** – தன்மை ஒருமை வினைமுற்று

**ஒடியா, தண்டா** – ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சங்கள்

**இகந்து, கண்டு, நல்கி** – வினையெச்சங்கள்

**புரைவயின் புரைவயின்** – அடுக்குத்தொடர்

MERCY PUBLICATIONS - CHENNAI

www.Padasalai.Net

## உறுப்பிலக்கணம்

1. **மருண்டனென் – மருள் (ண்) + ட் + அன் + என்**
   **மருள்** – பகுதி, 'ள்', 'ண்' ஆனது விகாரம், **ட்** – இறந்தகால இடைநிலை
   **அன்** – சாரியை, **என்** – தன்மை ஒருமை வினைமுற்று விகுதி.
2. **துய்த்தல் – துய் + த் + தல்**
   **துய்** – பகுதி, **த்** – சந்தி, **தல்** – தொழிற்பெயர் விகுதி.
3. **நல்கி – நல்கு + இ**
   **நல்கு** – பகுதி, **இ** – வினையெச்ச விகுதி.
4. **எய்தி – எய்து + இ**
   **எய்து** – பகுதி, **இ** – வினையெச்ச விகுதி.
5. **தருதல் – தா (தரு) + தல்**
   **தா** – பகுதி, 'தரு' என்றானது விகாரம், **தல்** – தொழிற்பெயர் விகுதி.

## புணர்ச்சி விதிகள்

1. **மண்ணுடை – மண் + உடை**
   "தனிக்குறில்முன் ஒற்று உயிர்வரின் இரட்டும்" (மண்ண் + உடை)
   "உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே" (மண்ணுடை)
2. **புறந்தருதல் – புறம் + தருதல்**
   "மவ்வீறு ஒற்று வன்மைக்கு இனமாத் திரிபவும் ஆகும்" (புறந்தருதல்)
3. **நன்னாடு – நன்மை + நாடு**
   "ஈறுபோதல்" (நன் + நாடு), "னலமுன் றன ஆகும் தநக்கள்" (நன்னாடு)
4. **நல்லிசை – நன்மை + இசை**
   "ஈறுபோதல்" (நன் + இசை), "முன்நின்ற மெய்திரிதல்" (நல் + இசை)
   "தனிக்குறில் முன்ஒற்று உயிர்வரின் இரட்டும்" (நல்ல் + இசை)
   "உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே" (நல்லிசை)

**குறள் பொருள் அறிக.**

1. **உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்**
   **சேரா தியல்வது நாடு.**
   மிக்க பசியும், துன்புறுத்தும் நோயும், அழிக்கும் பகையும் சூழாது இருப்பதே சிறந்த நாடாகும்.
2. **பிணியின்மை செல்வம் விளைவின்பம் ஏமம்**
   **அணியென்ப நாட்டிற்கிவ் வைந்து.**
   நோயில்லாமை, பொருட்செல்வம், விளைபொருள், இன்பவாழ்வு, பாதுகாப்பு என்னும் ஐந்தும், ஒரு நாட்டிற்கு அணிகளாகும்.

## பலவுள் தெரிக

1. கூற்று : எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றான பதிற்றுப்பத்து, புறம் சார்ந்த நூல்.
   காரணம் : சேர மன்னர் பதின்மரின் சிறப்புகளைக் கூறுகிறது இந்நூல்.
   அ) கூற்று சரி; காரணம் தவறு ஆ) இரண்டும் சரி
   இ) இரண்டிற்கும் தொடர்பு இல்லை ஈ) கூற்று தவறு காரணம் சரி.
   **விடை :** ஆ) இரண்டும் சரி

## கூடுதல் வினாக்கள்

2. "பதிபிழைப்பு அறியாது துய்த்தல் எய்தி" – இத்தொடரில், 'வாழ்தல்' என்னும் பொருளுடைய சொல் ______.
   அ) பதி ஆ) பிழைப்பு இ) துய்த்தல் ஈ) எய்தி
   **விடை :** ஆ) பிழைப்பு

MERCY PUBLICATIONS - CHENNAI

3. புரைவயின் புரைவயின் பெரிய நல்கி
ஏமம் ஆகிய சீர்கெழு விழவின்” இத்தொடரில், 'பாதுகாப்பு' என்னும் பொருளை உணர்த்தும் சொல் ______
அ) புரைவயின் ஆ) நல்கி இ) ஏமம் ஈ) சீர்கெழு
விடை :

4. சேர மன்னர் பதின்மரின் சிறப்புகளை எடுத்தியம்புவது ______.
அ) புறநானூறு ஆ) பரிபாடல்
இ) பதிற்றுப்பத்து ஈ) புறப்பொருள் வெண்பாமாலை
விடை : இ) ஏமம்

5. சீர்கெழு விழவின் நெடியோன் அன்ன நல்லிசை
ஒடியா மைந்தநின் பண்புபல நயந்தே – இப்பாடலில், நெடியோன் என்பவன் யார்?
அ) சிவபெருமான் ஆ) திருமால்
இ) நெடுஞ்சேரலாதன் ஈ) விழாத்தலைவன்
விடை : ஆ) திருமால்

6. "உறுபசியும் ஓவாப்பிணியும் செறுபகையும் சேராது இயல்வது நாடு" என்று கூறியவர் ______.
அ) குமட்டூர்க் கண்ணனார் ஆ) திருஞானசம்பந்தர்
இ) திருவள்ளுவர் ஈ) இமயவரம்பன்
விடை : இ) திருவள்ளுவர்

7. இமயத்தில் வில் பொறித்தவன் ______.
அ) உதியன் சேரலாதன் ஆ) நெடுஞ்செழியன்
இ) செங்குட்டுவன் ஈ) நெடுஞ்சேரலாதன்
விடை : ஈ) நெடுஞ்சேரலாதன்

8. கடம்பர்களை வென்றவன் ______.
அ) உதியன் சேரலாதன் ஆ) செங்குட்டுவன்
இ) கரிகாலன் ஈ) நெடுஞ்சேரலாதன்
விடை : ஈ) நெடுஞ்சேரலாதன்

9. பதிற்றுப்பத்துள் இரண்டாம் பத்தைப் பாடியவர் ______.
அ) கபிலர் ஆ) பரணர்
இ) குமட்டூர்க் கண்ணனார் ஈ) ஔவையார்
விடை : இ) குமட்டூர்க் கண்ணனார்

10. 'நிரைய வெள்ளம்' என்னும் தொடரின் பொருள் ______.
அ) வானுலக வீரர்கள் ஆ) வெற்றி பெற்றோர்
இ) கவசமானோர் ஈ) நரகத்து வீரர்கள்
விடை : ஈ) நரகத்து வீரர்கள்

11. கைக்கிளைக்குப் புறனாக அமையும் திணை ______.
அ) பெருந்திணை ஆ) வெட்சித்திணை
இ) வாகைத்திணை ஈ) பாடாண்திணை
விடை : ஈ) பாடாண்திணை

12. 'வண்ணம்' என்பது ______.
அ) செய்யுள் வேறுபாடு ஆ) துள்ளல் ஓசை
இ) சந்த வேறுபாடு ஈ) புலமை வேறுபாடு
விடை : இ) சந்த வேறுபாடு

MERCY PUBLICATIONS - CHENNAI

www.Padasalai.Net

13. எட்டுத்தொகையில் அமைந்த புறத்திணை நூல்கள் ______.

அ) பதிற்றுப்பத்து, நற்றிணை ஆ) பதிற்றுப்பத்து, பரிபாடல்

இ) பதிற்றுப்பத்து, புறநானூறு ஈ) புறநானூறு, பரிபாடல்

**விடை :** இ) பதிற்றுப்பத்து, புறநானூறு

14. பதிற்றுப்பத்து நூல் முழுமையும், ______ திணையில் அமைந்துள்ளது.

அ) வெட்சி ஆ) நொச்சி இ) பாடாண் ஈ) பொதுவியல்

**விடை :** இ) பாடாண்

15. பதிற்றுப்பத்து என்பது, ______ மன்னர்கள் பத்துப்பேரின் சிறப்புகளைப் பாடுவது.

அ) பாண்டிய ஆ) சோழ இ) பல்லவ ஈ) சேர

**விடை :** ஈ) சேர

16. பாடப்படும் ஆண்மகனின் ஒழுகலாறுகளைக் கூறும் திணை ______.

அ) கரந்தை ஆ) வஞ்சி இ) பாடாண் ஈ) பொதுவியல்

**விடை :** இ) பாடாண்

17. சந்த வேறுபாட்டைக் குறிப்பது, ______ என்னும் தொடர்.

அ) துறை ஆ) திணை இ) தூக்கு ஈ) வண்ணம்

**விடை :** ஈ) வண்ணம்

18. பதிற்றுப்பத்துள் கிடைக்காத பத்துகள் ______.

அ) முதற்பத்து, எட்டாம்பத்து ஆ) நான்காம்பத்து, ஆறாம்பத்து

இ) எட்டாம்பத்து, இறுதிப்பத்து ஈ) முதல்பத்து, இறுதிப்பத்து

**விடை :** ஈ) முதல்பத்து, இறுதிப்பத்து

19. இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டது ______.

அ) முதல்பத்து ஆ) நான்காம்பத்து இ) பத்தாம்பத்து ஈ) இரண்டாம்பத்து

**விடை :** ஈ) இரண்டாம்பத்து

20. 'பதிற்றுப்பத்து' என்னும் தொடர், ______ எனப் பிரியும்.

அ) பதிற் + றுப்பத்து ஆ) பதிறு + பத்து இ) பதிற்று + பத்து ஈ) பத்து + பத்து

**விடை :** ஈ) பத்து + பத்து

21. பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| 1. | சான்றோர் | – அ. | கடுந்துப்பு |
| 2. | புதுவருவாய் | – ஆ. | மருண்டனென் |
| 3. | மிகுவலிமை | – இ. | மன்னுயிர் |
| 4. | வியப்படைந்தேன் | – ஈ. | புரையோர் |
| | | – உ. | யாணர் |

**விடை :** 1 – ஈ. 2 – உ, 3 – அ, 4 – ஆ

23. தவறான விடையைக் கண்டறிக.

பாடாண் திணை என்பது.

அ) கைக்கிளைக்குப் புறனானது

ஆ) மன்னனின் புகழ், வலிமை, வள்ளன்மைகளைக் கூறுவது

இ) ஆண்மகனின் ஒழுகலாறுகளைப் பாடுவது

ஈ) ஆண்மகனின் போர்ச்சிறப்பை மட்டும் பாடுவது.

**விடை :** ஈ) ஆண்மகனின் போர்ச்சிறப்பை மட்டும் பாடுவது.

MERCY PUBLICATIONS - CHENNAI

www.Padasalai.Net

## விரிவானம்

## சிந்தனைப் பட்டிமன்றம்

**1. சிந்தனைப் பட்டிமன்றத்தின் நிகழ்வுகளைச் சுவை குன்றாமல் தொகுத்து எழுதுக.**

**சிந்தனைப் பட்டிமன்றத்தின் நிகழ்வுகள் :**

அரசு மேல்நிலைப் பள்ளியில் இளைஞர்களை முதன்மைப்படுத்தி, 'இளைஞர்களின் முன்னேற்றத்திற்குப் பெரிதும் உதவுவது வீடா? நாடா? என்னும் தலைப்பில் பட்டிமன்றம் நடைபெற்றது.

மொத்த மக்கள் தொகையில், சரிபாதியாக உள்ள இளைஞர்களின் துணையின்றி நாடு வளர்ச்சி பெற முடியாது என்பதை எடுத்துரைத்த நடுவர், 'இளைஞர்தம் முன்னேற்றத்திற்குப் பெரிதும் உதவுவது வீடே' எனப் பேச எழிலை அழைத்தார்.

**இளையோர் முன்னேற்றத்தில் பெரிதும் உதவுவது வீடே :**

இளையோர் முன்னேற்றத்தில் முதல்படி வீடு. பிறக்கும் குழந்தைக்கு உலகை அறிமுகப்படுத்துவது வீடு. அன்பையும், அறிவையும் உணர்த்தி அடித்தளமிட்டு, வெற்றிகளைக் கட்டி எழுப்ப உதவுவது வீடு.

"எத்தனை உயரம் இமயமலை! அதில் இன்னொரு சிகரம் உனது தலை" என்பதை வாழ்வின் ஒவ்வொரு நிலையிலும் உணர வைப்பது வீடே! எனவே, இளையோர் முன்னேற்றத்தின் முகமும் அகமுமாக அமைவது வீடே எனத் தீர்ப்பு வழங்குமாறு வேண்டிக்கொண்டு, எழில், தன் உரையை முன்வைத்தாள்.

**வீடு அன்று நாடே :**

நடுவர் அழைப்பை ஏற்று, அடுத்து மறுத்துப் பேசவந்த அப்துல்லா, "வீடு ஒரு சிறிய கூடு! வீடு என்னும் சிறுவட்டத்தைத் தாண்டி, நாட்டில் கால் பதிக்கும் போதுதான் நல்வாழ்வு துளிர்க்கிறது.

பாரதி, வீதிக்கு வந்தே உலகைப் படித்தார்; பலதிசை அறிமுகம் கிடைத்தது. வீதிதோறும் தமிழ்ப் பள்ளிகளில் ஐரோப்பிய சாஸ்திரங்களைக் கற்றுக் கொடுக்கச் சொன்னார்.

புத்தகங்கள் வழி கல்விச்சாலைகள் உலகத்தைத் திறந்து காட்டுகின்றன. அறிவியல் தொழில்நுட்பக் கல்வியை, நாடுதான் நமக்கு அறிமுகம் செய்கிறது" என, தம் உரைவீச்சை முன்வைத்தார்.

**நாடு அன்று வீடே! :**

நடுவர் அழைப்பை ஏற்று, அடுத்ததாகத் தன் கருத்தோட்டத்தைக் கூறவந்த எலிசபெத், தனக்கு வீட்டினுள்ளே உலகை அறிமுகப்படுத்திய பெற்றோரைப் போற்றி உரையைத் தொடங்கினார்.

சிறு கூடு அன்று வீடு! நம் பண்பாட்டையும் மரபையும் காத்து நிற்கும் கருவூலம்! எத்தேடலுக்கும் தலைவாசல்! அறிவின் நாற்றங்கால்!

வீட்டில் கேட்ட தாலாட்டும், நுங்கு தின்றது, பனையோலைக் காற்றாடி செய்யப் பழகியது எனப் பிள்ளைப் பருவ நிகழ்ச்சிகள், வளமான பல நெறிகளைக் கற்பித்தது வீடே என்பதை நினைவில் கொண்டு, தீர்ப்பு வழங்குமாறு எலிசபெத் தன் உரையை முடித்தாள்.

**பெண்களுக்கு விடியலைத் தந்தது பள்ளி :**

விடியலுக்கான வெளிச்சமாக உரையாற்ற வருமாறு அமுதாவை நடுவர் அழைத்தார். நாட்டு நலனைப் புதிய தடத்தில் வழிநடத்தக் கற்றுக்கொடுத்த முண்டாசுக் கவிஞனை வணங்கி, அமுதா தன் உரையைத் தொடங்கினாள்.

வீடு, பெண்களுக்குத் தங்கக் கம்பிகளால் செய்யப்பட்ட கூடுதான். பள்ளிக்கு வந்தபின்தான், 'பெண்மை வெல்க' எனக் கூத்திட முடிந்தது. இன்று விஞ்ஞானிகளாக, கல்வியாளர்களாக, கவிஞர்களாகப் பெண்கள் கம்பீரமாக நடைபோட நாடே காரணம். நாடே இளையோரை நம்பிக்கையோடு வழிநடத்துகிறது. எதிர்காலம் வளமாகத் துணைபுரிகிறது எனத் தன் வாதங்களை முன்வைத்தாள்.

இருபக்க வாதங்களையும் சீர்தூக்கி ஆராய்ந்த நடுவர், "ஆண் பெண் சமத்துவச் சிந்தனை, பேதங்களைக் கடந்த தோழமை, கல்வி சார்ந்த உயர்ந்த கருத்துகள் என, எல்லாவற்றையும் வழங்கி, முழுமையான முன்னேற்றத்திற்கு வழிகாட்டுவது நாடே!" என்று தீர்ப்பு வழங்கினார்.

www.Padasalai.Net

கற்பவை கற்றபின்

**"மனித வாழ்வை உயர்த்துவதற்குப் பெரிதும் தேவை – பணமே, கல்வியே" என்பது பற்றி ஒரு சொற்போர் நிகழ்த்துக.**

**ஆசிரியர் :** இன்று வகுப்பறையில் எழிலன், முகிலன், நறுமுகை ஆகிய மூவரும் 'மனித வாழ்வை உயர்த்து வதற்குப் பெரிதும் தேவை பணமே' என்னும் தலைப்பிலும், வேலன், முருகன், தேன்மொழி ஆகிய மூவரும் 'மனித வாழ்வை உயர்த்துவதற்குப் பெரிதும் தேவை கல்வியே' என்னும் தலைப்பிலும் ஒருவர் மாற்றி மற்றொருவராக வந்து சொற்போர் நிகழ்த்துவார்கள். அனைவரும் கவனமாக உற்று நோக்கி, நற்கருத்துகளை அறிய முயற்சி செய்யுங்கள்.

**எழிலன் :** அனைவருக்கும் வணக்கம். இன்று சொற்போருக்கான தலைப்பு அனைவரும் அறிந்ததே! நான் எதையும் சொல்லவில்லை. "பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லை" என்று திருவள்ளுவரே சொல்லியுள்ளார். அதுமட்டுமா? "ஒரு பொருட்டாக மதிக்கத்தக்க சிறப்பு இல்லாதவனையும் பெருமதிப்பு உடையவராகச் செய்வது செல்வமே" எனவும் கூறியுள்ளார். பொருள் இல்லாமல் எவரும் உலகில் எச்செயலையும் செய்ய முடியாது. ஆகையால், வாழ்வை உயர்த்தவல்லது பொருள் செல்வமே எனக் கூறி, விடைபெறுகிறேன். நன்றி.

**வேலன் :** எல்லாரையும் வணங்கி, என் உரையைத் தொடங்குகிறேன். காலத்தால் அழியாதது கல்விச் செல்வம். உலகில் எத்தனை எத்தனையோ செல்வர்கள், மன்னர்கள், பெருவேந்தர்கள் வாழ்ந்திருக்கிறார்கள். அவர்கள் வாழ்ந்தவரைதான், அவர்கள் செல்வத்திற்கு மதிப்பு இருந்திருக்கிறது. திருவள்ளுவரும் இளங்கோவும் செல்வம் காரணமாகவா இன்றளவும் போற்றப்படுகிறார்கள்? அவர்கள் காலத்தில் செல்வமுடையோர் வாழவே இல்லையா? அவர்கள் எங்கே? இன்றளவும் திருக்குறளையும் சிலப்பதிகாரத்தையும் உலகம் போற்றுகிறதல்லவா? அதனால், 'மனித வாழ்வை உயர்த்துவதற்குப் பெரிதும் தேவை கல்வியே' எனக் கூறி, என் உரையை முடிக்கிறேன்.

**முகிலன் :** நண்பர்களே! இன்றைக்கு உலகில் பொருள் இல்லை என்றால் வாழ்வே கிடையாது என்பது, அனைவரும் அறிந்ததே. 'பணம் இல்லாதவன் பிணம்' என்பது உலக வழக்கு. 'ஏழை சொல் அம்பலம் ஏறாது' என்பதும் அனைவரும் அறிந்ததே. நாம் உண்மையிலேயே மதிப்புப் பெறவேண்டுமானால், கையில் பெரும்பொருள் இருக்க வேண்டும். 'பணம் பந்தியிலே' என்பதே உண்மை எனக்கூறி, உரையை முடிக்கிறேன்.

**முருகன் :** உங்கள் அனைவரையும் வணங்கி என் உரையைத் தொடங்குமுகமாக ஒன்றை நினைவு படுத்துகிறேன். சில ஆண்டுகளுக்குமுன் பெருமழை பெய்தது. எதிர்பாராத வெள்ளம், எண்ணற்ற உயிர்களைச் சூறையாடியது. உயிர் பிழைத்தவர்களில் பலர், தம் வீடுவாசல்களை இழந்தனர்; வாகனங்களைப் பறிகொடுத்தனர்; பொன்னையும் பொருளையும் வெள்ளம் கொள்ளை கொண்டது. கல்வி அறிவைப் பெறாதவர்கள், பிறரிடம் கை ஏந்தினர். கற்றறிந்தவர்கள், தம் கல்வியால் கௌரவமாக வாழ்வை மீட்டு எடுத்தனர். அதனால், கல்வியே மனித வாழ்வை உயர்த்த உதவும் எனக் கூறி, என் உரையை நிறைவு செய்கிறேன்.

**நறுமுகை :** நல்லதையே நினைப்போம் எனக் கூறி அனைவரையும் வணங்கி, என் உரையைத் தொடங்கு கிறேன். எனக்கு முன் பேசியவர் வெள்ளச்சேதம் பற்றிக் கூறினார். அப்போது எத்தனையோ செல்வர்கள் பொருளுதவி செய்து, பாதிக்கப்பட்டவர்களைக் காப்பாற்றியதை மறக்க முடியுமா? செல்வம் என்ற ஒன்று வந்து குவிந்தால்தான் மனித வாழ்வு மதிப்புப் பெறுகிறது என்பதே உண்மை. எனவே, பொருளே மனித வாழ்வுக்கு உயர்வைத் தேடித் தரும் எனக் கூறி, என் உரையை முடிக்கிறேன். நன்றி; வணக்கம்.

**தேன்மொழி :** தோழமைக்குரிய அனைவருக்கும் வணக்கம். செல்வம் தேவைதான். ஆனால் அது நிரந்தரமாக இருக்காது. கல்வி அப்படி அன்று. கற்றவரை விட்டு அதைப் பிரிக்க முடியாது. செல்வம் அப்படியா? 'தாங்கொணா வறுமை வந்தால் சபைதனில் சொல்ல நாணும்' என்பார்கள். கல்வி கற்றவர், வறுமையிலும் வளமாக வாழ்வர். அவரைத் தேடி, வளம் தானேவரும். செல்வர்களுக்குத் தம் தேசத்தில்மட்டுமே சிறப்பு உண்டு. கற்றவருக்கோ சென்ற இடமெல்லாம் சிறப்புக் கிடைக்கும். எனவே, கல்வியாலேயே மனித வாழ்வை உயர்த்த முடியும் என்று கூறி, என் உரையை நிறைவு செய்கிறேன்.

**ஆசிரியர் :** இருதரப்பு வாதங்களையும் நான் கேட்டு மகிழ்ந்தேன். உங்கள் கல்வி அறிவு ஆழ்ந்து அகன்றதாக உள்ளது; மகிழ்ச்சி. தலைப்புக்கு வருவோம். செல்வமோ கல்வியோ, இரண்டுமே மனித வாழ்வுக்கு இன்றியமையாதன. அளவு அறிந்து வாழ்தல் என்பதைக் கற்றவரும் செல்வரும் கடைப்பிடிக்க வேண்டும். அளவு அறியாது செயல்பட்டால், இருவருக்குமே தீமை விளையும். நீங்கள் அனைவரும் நன்றாகக் கற்பன கற்க வேண்டும். செல்வத்தைத் தேடிச் சீரும் சிறப்புமாக வாழவேண்டும் எனக் கூறி முடிக்கிறேன்.

## பலவுள் தெரிக

1. சரியான விடையைத் தேர்க.
"பெண்ணடிமை தீருமட்டும் பேசும் திருநாட்டில்
மண்ணடிமை தீர்ந்து வருதல் முயற்கொம்பே" எனப் பாடியவர்
அ) பாரதியார் ஆ) பாரதிதாசன் இ) கண்ணதாசன் ஈ) கவிஞர் வாலி
**விடை :** ஆ) பாரதிதாசன்

2. "பட்டி மண்டபத்துப் பாங்கறிந்து ஏறுமின்" என ______ குறிப்பிடுகிறது.
அ) நற்றிணை ஆ) பதிற்றுப்பத்து இ) சிலப்பதிகாரம் ஈ) மணிமேகலை
**விடை :** ஈ) மணிமேகலை

3. "வீட்டுக்கு உயிர்வேலி!
வீதிக்கு விளக்குத்தூண்!
நாட்டுக்குக் கோட்டைமதில்!
நடமாடும் கொடிமரம்நீ!" எனப் பாடியவர் ______.
அ) பாரதிதாசன் ஆ) கண்ணதாசன் இ) கம்பதாசன் ஈ) தாராபாரதி
**விடை :** ஈ) தாராபாரதி

4. "எத்தனை உயரம் இமயமலை – அதில்
இன்னொரு சிகரம் உனது தலை!
எத்தனை ஞானியர் பிறந்த தரை – நீ
இவர்களை விஞ்சிட என்ன தடை" – இவ்வரிகளுக்குச் சொந்தக்காரர் ______.
அ) பாரதியார் ஆ) கண்ணதாசன் இ) தாராபாரதி ஈ) பாரதிதாசன்
**விடை :** இ) தாராபாரதி

5. கல்விக் கூடங்களின் இன்றியமையாமையை வலியுறுத்தும் வரிகள் ______.
அ) "சொல்லடி சிவசக்தி எனைச்
சுடர்மிகும் அறிவுடன் படைத்துவிட்டாய்"
ஆ) "பெண்ணடிமை தீருமட்டும் பேசும் திருநாட்டில்
மண்ணடிமை தீர்ந்து வருதல் முயற்கொம்பே"
இ) "தேடுகல்வி இலாததோர் ஊரைத்
தீயினுக்கு இரையாக மடுத்தல்"
ஈ) விசாலப் பார்வையால் விழுங்கு மக்களை
மானுட சமுத்திரம் நானென்று கூவு
**விடை :** இ) "தேடுகல்வி இலாததோர் ஊரைத்
தீயினுக்கு இரையாக மடுத்தல்"

6. "எத்தனை கோடி இன்பம் வைத்தாய் எங்கள் இறைவா!" – எனப் பாடியவர் ______.
அ) பாரதிதாசன் ஆ) தாராபாரதி இ) அண்ணா ஈ) பாரதியார்
**விடை :** ஈ) பாரதியார்

7. "வீதிதோறும் தமிழ்ப் பள்ளிக் கூடங்கள் போட்டு ஐரோப்பிய சாஸ்திரங்களை எல்லாம் தமிழில் கற்றுக் கொடுக்க ஏற்பாடு செய்" எனக் கட்டளையிட்டவர் ______.
அ) பாரதியார் ஆ) புரட்சிக்கவிஞர் இ) தாராபாரதி ஈ) அறிஞர் அண்ணா
**விடை :** அ) பாரதியார்

8. "வல்லமை தாராயோ – இந்த
மாநிலம் பயனுற வாழ்வதற்கே"
என, நாட்டு நலத்திற்குப் புதிய வழித்தடம் அமைத்தவர் ______.
அ) பாரதிதாசன் ஆ) அறிஞர் அண்ணா
இ) முண்டாசுக் கவிஞன் ஈ) தாராபாரதி
**விடை :** இ) முண்டாசுக் கவிஞன்

MERCY PUBLICATIONS - CHENNAI

www.Padasalai.Net


9. "பெண்மை வெல்க என்று கூத்திடுவோம்" என்று பாடியவர் ______.
அ) தாராபாரதி ஆ) புரட்சிக்கவிஞர் இ) அறிஞர் அண்ணா ஈ) சுப்பிரமணிய பாரதி
**விடை :** ஈ) சுப்பிரமணிய பாரதி

10. "பெண்ணடிமை தீருமட்டும் பேசும் திருநாட்டில்
மண்ணடிமை தீர்ந்து வருதல் முயற்கொம்பே"
– இப்பாடலுக்குச் சொந்தக்காரர் ______.
அ) தேசியக்கவி ஆ) புரட்சிக்கவிஞர் இ) தமிழ்த்தென்றல் ஈ) பேரறிஞர்
**விடை :** ஆ) புரட்சிக்கவிஞர்

11. "நல்லதொரு குடும்பம் பல்கலைக் கழகம்" எனக் கூறியவர் ______.
அ) நாவேந்தர் ஆ) சொல்வேந்தர் இ) பாவேந்தர் ஈ) நாவலர்
**விடை :** இ) பாவேந்தர்

12. "வீட்டிற்கோர் புத்தகசாலை வேண்டும்" என்று கூறியவர் ______.
அ) பாரதியார் ஆ) பாவேந்தர் இ) பேரறிஞர் ஈ) நாவலர்
**விடை :** இ) பேரறிஞர்

13. "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்னும் மேன்மையான பார்வைக்கு வழி கூறியவர் ______.
அ) தொல்காப்பியர் ஆ) திருவள்ளுவர்
இ) திருமூலர் ஈ) கணியன் பூங்குன்றன்
**விடை :** ஈ) கணியன் பூங்குன்றன்

14. "விசாலப் பார்வையால் விழுங்கு மக்களை
மானுட சமுத்திரம் நானென்று கூவு
புவியை நடத்து பொதுவில் நடத்து"
எனக் கூறி உலகத்தை வீடாகக் காட்டியவர் ______.
அ) பாரதியார் ஆ) கண்ணதாசன் இ) தாராபாரதி ஈ) புரட்சிக்கவிஞர்
**விடை :** ஈ) புரட்சிக்கவிஞர்

MERCY PUBLICATIONS - CHENNAI

# இனிக்கும் இலக்கணம்

## ஆக்கப்பெயர்கள்

### சிறுவினா

**1. ஆக்கப்பெயர் விகுதிகள் தற்கால வாழ்வியலில் மிகுந்துள்ளன. – ஏன்?**

★ காலச்சூழலுக்கு ஏற்றவாறு, பயன்பாட்டிற்காகப் பல்வேறு பெயர்களைப் புதிதாக ஆக்கிக்கொள்கிறோம்.
★ இடுகுறியாகவும், காரணமாகவும் ஆக்கப்படும் புதிய சொல், ஆக்கப்பெயராகும்.
★ பெயர், வினைச்சொற்களுடன் 'காரன், காரர், காரி, ஆள், ஆளர், ஆளி' என்னும் விகுதிகள் சேர்த்து உருவாக்கப்படும் புதுச்சொற்கள், தமிழின் சொற்களஞ்சியத்தை விரிவடையச் செய்கின்றன.

### கூடுதல் வினாக்கள்

**2. தமிழில் பயன்படும் ஆக்கப்பெயர் விகுதிகள் யாவை?**

★ காரன், காரர், காரி, ஆள், ஆளர், ஆளி, தாரர், மானம், அகம் என்பன, தமிழில் பயன்படும் ஆக்கப்பெயர் விகுதிகள்.

எ–டு: வண்டிக்காரன், சமையல்காரர், வேலைக்காரி, பணியாள், ஆணையாளர், குற்றவாளி, விண்ணப்பதாரர், கட்டுமானம், அலுவலகம்.

**3. பொருள்களுக்கு முன்னோர் எவ்வாறு பெயரிட்டு வழங்கினர்?**

★ உலகப் பொருள்கள் அனைத்தும் பெயரிட்டு அழைக்கப்படுகின்றன. சில பொருள்களுக்குக் காரணம் கருதியும், சில பொருள்களுக்குக் காரணம் இன்றியும் முன்னோர், பெயரிட்டு வழங்கினர்.

எ–டு: i. நாற்காலி, காற்றாடி, (காரணப்பெயர்கள்)
ii. இலை, கல், மண் – (இடுகுறிப்பெயர்கள் – காரணம் இன்றிப் பெயர் இடப்பட்டவை)

**4. காரணப்பெயர்கள், இடுகுறிப்பெயராவதனை விளக்குக.**

★ காலப்போக்கில், பொருளின் மாற்றத்தால், அவை பயன்படும் நிலைக்கு ஏற்றவாறு, சில நேரங்களில் காரணப்பெயர், இடுகுறிப்பெயராகி விடுகிறது.

எ–டு : நான்கு கால்களோடு பின்புறம் சாயவும் கைகளை வைத்துக் கொள்ளவும் வசதியாக மரத்தால் செய்யப்பட்ட இருக்கை, காரணம் கருதி 'நாற்காலி' எனப் பெயரிடப்பட்டது.

★ இன்று நான்கு கால்கள் இல்லாத இருக்கைகளையும் 'நாற்காலி' என அழைக்கிறோம்.

★ அதாவது, கருதி வழங்கப்பட்ட ஒரு பொருளுக்கான பெயர், இன்று 'இடுகுறியாக' வழங்கப்படுகிறது.

**5. ஆக்கப்பெயர் விகுதிகளின் தனிச்சிறப்பை எழுதுக.**

★ தமிழ்ச்சொற்களோடு ஆக்கப்பெயர் விகுதிகள் சேரும்போது, எண்ணற்ற புதுச்சொற்கள் உருவாகின்றன.

★ அவை தமிழ்மொழியின் சொற்களஞ்சியத்தை விரிவடையச் செய்கின்றன.

★ தமிழ்மொழியில் பேச்சு வழக்கில் ஆக்கப்பெயர்கள், மிகுதியாக வழங்குவதனைக் காணலாம்.

எ–டு : பூ விற்கும் பெண் –பூக்காரி (காரி)
நெசவு செய்பவர் – நெசவாளி / நெசவாளர் (ஆளி / ஆளர்)
உழைப்பவர் – உழைப்பாளி / உழைப்பாளர் (ஆளி / ஆளர்)

**6. 'காரன்' விகுதி பெற்ற ஆக்கப்பெயர்கள் சில கூறு.**

★ வண்டிக்காரன், சினிமாக்காரன், மாட்டுக்காரன், ஆட்டோக்காரன், தோட்டக்காரன்.

**7. ஆக்கப்பெயர்ச்சொற்களை, விகுதிகளைக் கொண்டு எத்தனை வகைகளாகப் பிரிக்கலாம்? அவை யாவை?**

ஆக்கப்பெயர்ச்சொற்களை விகுதிகளைக் கொண்டு, மூன்று வகைகளாகப் பிரிக்கலாம். அவை:

i. பெயருடன் சேரும் விகுதிகள்.

ii. பெயருடனும் வினையுடனும் சேரும் விகுதிகள்.

iii. வினையுடனும் எச்சத்துடனும் சேரும் விகுதிகள்.

**8. பெயருடன் சேரும் ஆக்கப்பெயர் விகுதிகள் யாவை? சான்று தருக.**

★ காரன், காரர், காரி, ஆள், ஆளர், ஆளி, தாரர் என்பன, பெயருடன் சேரும் ஆக்கப்பெயர் விகுதிகளாகும்.

| பெயர் + விகுதி | ஆக்கப்பெயர் | பெயர் + விகுதி | ஆக்கப்பெயர் |
|---|---|---|---|
| வண்டி + காரன் | வண்டிக்காரன் | ஆணை + ஆளர் | ஆணையாளர் |
| சமையல் + காரர் | சமையல்காரர் | குற்றம் + ஆளி | குற்றவாளி |
| வேலை + காரி | வேலைக்காரி | விண்ணப்பம் + தாரர் | விண்ணப்பதாரர் |
| பணி + ஆள் | பணியாள் | | |

**9. பெயருடனும் வினையுடனும் சேரும் ஆக்கப்பெயர் விகுதியைச் சான்று தந்து விளக்குக.**

★ 'அகம்' என்னும் ஆக்கப்பெயர் விகுதி, பெயருடனும் வினையுடனும் சேர்ந்து வரும்.

★ அச்சு + அகம் – அச்சகம் ('அச்சு' என்னும் பெயருடன் வந்தது)

★ அலுவல் + அகம் – அலுவலகம் ('அலுவல்' என்னும் வினையுடன் வந்தது)

**8. வினையுடனும் எச்சத்துடனும் சேரும் ஆக்கப்பெயர் விகுதியைச் சான்று தந்து விளக்குக.**

★ 'மானம்' என்னும் ஆக்கப்பெயர் விகுதி, வினையுடனும் எச்சத்துடனும் சேர்ந்து வரும்.

★ அடை + மானம் – அடைமானம் ('அடை' என்னும் வினையுடன் வந்தது)

★ கட்டு + மானம் – கட்டுமானம் ('கட்டு' என்னும் எச்சத்துடன் வந்தது)

★ தேய் + மானம் – தேய்மானம் ('தேய்' என்னும் எச்சத்துடன் வந்தது)

**9. காரன், காரி, காரர் என்னும் ஆக்கப்பெயர் விகுதிகள், எவ்வெப்பொருள்களில் வரும்? சான்று தருக.**

★ ஆக்கப்பெயர் விகுதிகளுள் 'காரன், காரி, காரர்' என்பன, உடைமை, உரிமை, உறவு (தொடர்பு), தொழில் (ஆளுதல்) என்னும் நான்கு பொருள்களில் வரும்.

MERCY PUBLICATIONS CHENNAI

www.Padasalai.Net

| எ – டு : | காரன் | காரி | காரர் |
|---|---|---|---|
| உடைமை : வீடு | வீட்டுக்காரன் | வீட்டுக்காரி | வீட்டுக்காரர் |
| உரிமை : தமிழ்நாடு | தமிழ்நாட்டுக்காரன் | தமிழ்நாட்டுக்காரி | தமிழ்நாட்டுக்காரர் |
| உறவு : சொந்தம் | சொந்தக்காரன் | சொந்தக்காரி | சொந்தக்காரர் |
| தொழில் : தையல் | தையல்காரன் | தையல்காரி | தையல்காரர் |

**10. (விகுதி பெற்ற) தொழிற்பெயருடன் சேரும் ஆக்கப்பெயர் விகுதி எது? சான்று தருக.**

'ஆளர்' என்னும் ஆக்கப்பெயர் விகுதி, (விகுதிபெற்ற) தொழிற்பெயருடன் சேரும்.

| எ – கா : | தொழிற்பெயர் | விகுதி | | ஆக்கப்பெயர் |
|---|---|---|---|---|
| | ஆட்சி | (சி) | ஆளர் | ஆட்சியாளர் |
| | செயல் | (அல்) | | செயலாளர் |
| | செய்தி | (தி) | | செய்தியாளர் |
| | இறக்குமதி | (மதி) | | இறக்குமதியாளர் |
| | பார்வை | (வை) | | பார்வையாளர் |
| | தேர்வு | (வு) | | தேர்வாளர் |
| | அழைப்பு | (பு) | | அழைப்பாளர் |

**11. பணிபுரிவோரைப் பிரித்து அறிய உதவும் ஆக்கப்பெயர் விகுதிகள் யாவை?**

★ ஆக்கப்பெயர் விகுதிகளுள் 'ஆள்' என்பது கடைநிலைப் பணிபுரிவோரையும்,
★ 'ஆளர்' என்பது உயர்நிலைப் பணிபுரிவோரையும்,
★ 'ஆளி' என்பது பணிபுரிவோருள் இருபாலாரையும் குறிக்கும் ஆக்கப்பெயர்களோடு வரும்.

| எ–டு : | ஆள் | ஆளர் |
|---|---|---|
| உதவி | உதவியாள் | உதவியாளர் |
| காப்பு | காப்பாள் | காப்பாளர் |
| மேல் | மேலாள் | மேலாளர் |

| | ஆளி |
|---|---|
| நெசவு | நெசவாளி |
| முதல் | முதலாளி |
| தொழில் | தொழிலாளி |

**12. கீழ்க்காணும் ஆக்கப் பெயர்ச்சொற்களில் காணப்பெறும் விகுதிகளை எழுதுக.**

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| அறிவியல் | – | அறிவு + இயல் | | திறமைசாலி | – | திறமை + சாலி |
| கோழைத்தனம் | – | கோழை + தனம் | | சமத்துவம் | – | சமம் + துவம் |
| பெண்ணியம் | – | பெண் + இயம் | | பேச்சாளன் | – | பேச்சு + ஆளன் |
| ஏற்றுமதி | – | ஏற்று + மதி | | குரங்காட்டி | – | குரங்கு + ஆட்டி |
| வண்டியோட்டி | – | வண்டி + ஓட்டி | | பழந்தின்னி | – | பழம் + தின்னி |
| வாயாடி | – | வாய் + ஆடி | | குடித்தனம் | – | குடி + தனம் |
| நீதிமான் | – | நீதி + மான் | | | | |

## பலவுள் தெரிக

1. அடையாறுப் பாலத்தின் சுவற்றில் எழுதாதீர்கள். – இவ்வரியில் உள்ள சொற்பிழைகளின் திருத்தம்.

அ) அடையாற்றுப் பாலத்தின் சுவற்றில் ஆ) அடையாறுப் பாலத்தின் சுவரில்
இ) அடையாறுப் பாலத்தின் சுவற்றில் ஈ) அடையாற்றுப் பாலத்தின் சுவரில்

**விடை :** ஈ) அடையாற்றுப் பாலத்தின் சுவரில்

2. ஆக்கப்பெயர் விகுதி பெறாத சொல்லைத் தேர்க.

அ) காவலாளி ஆ) மேலாளர் இ) உதவியாள் ஈ) ஆசிரியர்

**விடை :** ஈ) ஆசிரியர்

MERCY PUBLICATIONS - CHENNAI

## கூடுதல் வினாக்கள்

3. உடைமைப்பொருளில் வந்த ஆக்கப்பெயர் எது?
அ) தோட்டக்காரர் ஆ) உறவுக்காரர் இ) நாட்டுக்காரி ஈ) வீட்டுக்காரன்
**விடை :** ஈ) வீட்டுக்காரன்

4. உரிமைப்பொருளில் வந்த ஆக்கப்பெயர் ______.
அ) வீட்டுக்காரன் ஆ) தமிழ்நாட்டுக்காரி
இ) உறவுக்காரர் ஈ) தோட்டக்காரர்
**விடை :** அ) வீட்டுக்காரன்

5. உறவுப்பொருளில் வந்த ஆக்கப்பெயருக்குச் சான்று ______.
அ) வீட்டுக்காரன் ஆ) தமிழ்நாட்டுக்காரி
இ) உறவுக்காரர் ஈ) தோட்டக்காரர்
**விடை :** இ) உறவுக்காரர்

6. தொழில் பொருளில் வந்த ஆக்கப்பெயர் ______.
அ) வண்டிக்காரர் ஆ) தமிழ்நாட்டுக்காரன்
இ) சொந்தக்காரன் ஈ) தையல்காரன்
**விடை :** ஈ) தையல்காரன்

7. புதியதாக ஆக்கப்படும் சொல்லுக்கு ______ எனப் பெயர்.
அ) பொருட்பெயர் ஆ) இடப்பெயர் இ) வினைப்பெயர் ஈ) ஆக்கப்பெயர்
**விடை :** ஈ) ஆக்கப்பெயர்

8. கடைநிலைப் பணிபுரிவோரைக் குறிக்கும் ஆக்கப்பெயர் ______ விகுதி பெறும்.
அ) ஆளர் ஆ) ஆளி இ) ஆள் ஈ) கார்
**விடை :** இ) ஆள்

9. உயர்நிலைப் பணிபுரிவோரைக் குறிக்கும் ஆக்கப்பெயர், ______ விகுதி பெறும்.
அ) கள் ஆ) ஆளி இ) ஆள் ஈ) ஆளர்
**விடை :** ஈ) ஆளர்

10. இருபால் பொதுப்பெயர்களைக் குறிக்கும் ஆக்கப்பெயர்கள், ______ விகுதி பெறும்.
அ) ஆளர் ஆ) கள் இ) ஆளி ஈ) ஆள்
**விடை :** இ) ஆளி

11. பெயர்ச்சொற்களை ஆக்கப் பயன்படும் விகுதிகளை, ______ விகுதிகள் என அழைப்பர்.
அ) சினைப்பெயர் ஆ) குணப்பெயர் இ) ஆக்கப்பெயர் ஈ) ஆகுபெயர்
**விடை :** இ) ஆக்கப்பெயர்

12. ஆக்கப்பெயர்களில் தனிச் சிறப்புடையவை ______.
அ) பகுதிகள் ஆ) இடைநிலைகள் இ) விகுதிகள் ஈ) சந்திகள்
**விடை :** இ) விகுதிகள்

## இலக்கணத் தேர்ச்சி கொள்

### பயிற்சி – 1

**கீழ்க்காணும் பத்தியில் உள்ள ஆக்கப் பெயர்களை எடுத்தெழுதுக.**

எங்கள் பள்ளியில் நடைபெற்ற புத்தகத் திருவிழாவிற்குக் காவல்துறை ஆணையாளர், சிறப்பு அழைப்பாளராகக் கலந்துகொண்டு உரையாற்றினார். அவர், "மாணவர்களாகிய நீங்கள் படிப்பகங்களைப் பயன்படுத்தி விண்ணியல், மண்ணியல் போன்ற துறைகளில் சிறந்து விளங்கவேண்டும். நல்ல பண்பாளர்களைக் கூட்டாளி ஆக்கிக்கொண்டு, உதவியாள் இல்லாமலே ஒரு நிறுவனத்தின் மேலாளராகவோ முதலாளியாகவோ ஆகலாம்" என்று கூறி, மாணவர்களை ஊக்கப்படுத்தினார்.

**ஆக்கப்பெயர்கள் :** ஆணையாளர், அழைப்பாளர், விண்ணியல், மண்ணியல், பண்பாளர், கூட்டாளி, உதவியாள், மேலாளர், முதலாளி.

MERCY PUBLICATIONS - CHENNAI

www.Padasalai.Net

### பயிற்சி – 2

**அடைப்புக்குள் உள்ள ஆக்கப்பெயர் விகுதிகளைக் கொண்டு, விடுகதைகளுக்குரிய ஆக்கப்பெயர்களைக் கண்டறிக.**

| | | | |
|---|---|---|---|
| 1. | வேவு பார்த்திடுவான்; ஓசையின்றிச் சென்றிடுவான் | (ஆளி) | உளவாளி |
| 2. | அறிவைத் தேடிப் போகுமிடம்; உலகம் அறிய உதவுமிடம் | (அகம்) | நூலகம் |
| 3. | வந்தால் மகிழ்ச்சி இது; உழைத்தால் கிடைக்கும் இது | (மானம்) | வருமானம் |
| 4. | வேட(ஷ)ம் போட்டவன்; வேடதாரிப் பட்டம் வாங்கியவன்? | (தாரி) | பட்டதாரி |
| 5. | அளந்து அளந்து கொட்டிடுவான்; அகம் மகிழத் தந்திடுவான் | (ஆள்) | கொடையாள் |

## மொழியை ஆள்வோம்

### சான்றோர் சித்திரம்

### மயிலை சீனி. வேங்கடசாமி (1900 – 1980)

தமிழ் மொழியில் மறந்ததும் மறைந்ததுமான சிறந்த செய்திகள், அளவுகடந்து உள்ளன. அவற்றை வெளிக்கொணர்ந்து, வீரிய உணர்வுடன் வெளியிட்டவர் அறிஞர் மயிலை சீனி. வேங்கடசாமி ஆவார். அவர் எழுதிய கட்டுரைகள் அனைத்தும் புதிய புதிய செய்திகளைப் புலப்படுத்திய விந்தைப் படைப்புகள். இராமேசுவரத்தீவு, உறையூர் அழிந்த வரலாறு, மறைந்துபோன மருங்காப்பட்டினம் போன்ற தனித்தன்மை கொண்ட அவர்தம் கட்டுரைகள், வரலாற்றில் புதிய வெளிச்சம் பாய்ச்சின. கொங்கு நாட்டு வரலாறு, துளுவ நாட்டு வரலாறு, சேரன் செங்குட்டுவன், மகேந்திரவர்மன், நரசிம்மவர்மன், மூன்றாம் நந்திவர்மன் முதலிய நூல்கள், அவர் நமக்கு வழங்கியுள்ள வரலாற்றுச் செல்வங்கள். அவருடைய 'களப்பிரர் காலத் தமிழகம்' என்னும் ஆய்வு நூல், இருண்டகாலம் என்று ஆய்வாளர்களால் வருணிக்கப்பட்ட களப்பிரர் காலத்திற்கு ஒளியூட்டி, வரலாற்றுத் தடத்தைச் செப்பனிட்டது.

நகராட்சிப் பள்ளி ஆசிரியராக நெடுங்காலம் பணியாற்றிய அவர், தன்னுணர்வால், உறுதியான உழைப்பால், தமிழ்ப்பற்றால் பல்கலைக்கழகப் பேராசிரியர்களும் மதித்துப் போற்றும் பணிகளைச் செய்தார். ஆங்கிலம், மலையாளம், கன்னடம் ஆகிய மொழிகளைக் கற்றுத் தேர்ந்தவர். சிறந்த வரலாற்றாசிரியர், நடுநிலை பிறழாத ஆய்வாளர், மொழியியல் அறிஞர், இலக்கியத் திறனாய்வாளர் என்றெல்லாம் போற்றப்பட்ட பன்முகச் சிறப்புக் கொண்டவர். அவருக்கு மதுரைப் பல்கலைக்கழகம் 1980ஆம் ஆண்டு, 'தமிழ்ப் பேரவைச் செம்மல்' என்னும் பட்டமளித்துப் பாராட்டியது. கிறித்துவமும் தமிழும், சமணமும் தமிழும், பௌத்தமும் தமிழும், மறைந்து போன தமிழ் நூல்கள் போன்ற பல நூல்களால் தமிழ் ஆய்வு வரலாற்றில் மயிலை சீனி. வேங்கடசாமி, அழியாச் சிறப்பிடம் பெற்றுள்ளார்.

1. மறந்ததும் மறைந்ததும் – இதுபோன்ற இரண்டு தொடர்களை உருவாக்குக.
   எ – கா : படித்ததும் படைத்ததும், கண்டதும் கொண்டதும், உணர்ந்ததும் உவந்ததும்.
2. <u>அழிந்த</u> வரலாறு, <u>புதிய</u> வெளிச்சம் – அடிக்கோடிட்ட சொற்களின் எச்ச வகைகளை எழுதுக.
   அழிந்த – தெரிநிலைப் (இறந்தகாலப்) பெயரெச்சம், புதிய – குறிப்புப் பெயரெச்சம்
3. அழியாச் சிறப்பிடம் – இலக்கணக்குறிப்புத் தருக.
   அழியாச் சிறப்பிடம் – ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் (தொடர்)
4. முதலிய, முதலான – பொருளறிந்து சொற்றொடர் அமைக்க.
   உப்பு, மிளகாய், புளி முதலிய மளிகைப் பொருள்களை வாங்கினார்.
   தமிழ், ஆங்கிலம் முதலான மொழிகளைக் கற்றான்.
5. பத்தியில் உள்ள உயர்வு சிறப்பு உம்மையைக் கண்டு எழுதுக.
   பேராசிரியர்க**ளும்**, போற்**றும்**

**விடைக்கேற்ற வினா அமைக்க.**

1. மயிலை சீனி வேங்கடசாமி தமிழ்மொழியில் மறந்ததும் மறைந்ததுமான சிறந்த அளவு கடந்த செய்திகளை வெளிக்கொணர்ந்தார்.
   **வினா :** மயிலை சீனி வேங்கடசாமி எவற்றை வெளிக்கொணர்ந்தார்?
2. மயிலை சீனி வேங்கடசாமி தம் கட்டுரைகள்மூலம் தமிழர் வரலாற்றில் புதிய வெளிச்சம் பாய்ச்சினார்.
   **வினா :** தமிழர் வரலாற்றில் புதிய வெளிச்சம் பாய்ச்சியவர் யார்? எவ்வாறு?

MERCURY PUBLICATIONS CHENNAI

3. ‘களப்பிரர் காலத் தமிழகம்’ என்னும் ஆய்வு நூல், இருண்ட காலம் என்று ஆய்வாளர்களால் வருணிக்கப்பட்ட களப்பிரர் காலத்திற்கு ஒளியூட்டி, வரலாற்றுத் தடத்தைச் செப்பனிட்டது.

**வினா :** ‘களப்பிரர் காலத் தமிழகம்’ எதற்கு ஒளியூட்டி, எதைச் செப்பனிட்டது?

4. மயிலை சீனி வேங்கடசாமி தன்னுணர்வால், உறுதியான உழைப்பால், தமிழ்ப்பற்றால் பல்கலைக் கழகப் பேராசிரியர்களும் மதித்துப் போற்றும் பணிகளைச் செய்தார்.

**வினா :** மயிலை சீனி வேங்கடசாமி எவ்வெவற்றால், எவர் மதித்துப் போற்றும் பணிகளைச் செய்தார்?

**தமிழாக்கம் தருக**

Balu : Hi Velu, Good evening
Velu : Hi Balu. Good evening.
Balu : Yesterday you were watching the Republic day function the whole day.
Velu : Yes. I was touched by one award ceremony.
Balu : Which award?
Velu : Param vir Chakra award, highest award for army personnel.
Balu : Why were you touched?
Velu : Most of the awards were received by the wives of soldiers posthumously
Balu : Why? What do you mean by posthumous?
Velu : It means ‘after death’. Many soldiers had laid down their lives protecting the border of our Motherland. They have sacrificed their lives to save our Country. So that we can be free and safe.

**விடை :**

**பாலு :** வேலு! மாலை வணக்கம்.
**வேலு :** பாலு! மாலை வணக்கம்.
**பாலு :** நீ நேற்று முழுவதும் குடியரசு தினவிழா நிகழ்ச்சிகளைப் பார்த்தாயா?
**வேலு :** ஆமாம். அவற்றுள் விருது ஒன்று வழங்கிய நிகழ்ச்சியில் நெகிழ்ந்து போனேன்.
**பாலு :** எந்த விருது?
**வேலு :** இராணு வீரர்களுக்கு வழங்கப்படும் உயரிய விருதான ‘பரமவீரர் சக்கர’ விருதுதான் அது.
**பாலு :** எதனால் நீ நெகிழ்ந்து போனாய்?
**வேலு :** பெரும்பாலான விருதுகள், வீரர்களின் இறப்புக்குப்பின் மனைவியரால் பெறப்பட்டதுதான் காரணம்.
**பாலு :** ஏன்? இறப்புக்குப்பின் என்றால்?
**வேலு :** அதற்கு ‘மரணத்திற்குப்பின்’ என்பது பொருள். நம் தாய்நாட்டின் எல்லையைப் பாதுகாப்பதற்காக வீரர்கள் பலர் தம் உயிரை ஈந்துள்ளனர். அவர்கள் தங்கள் உயிரை நம் நாட்டைக் காக்கத் தியாகம் செய்துள்ளனர். அதனால்தான் நாம் எல்லோரும் இவ்வளவு சுதந்திரமாகவும், பாதுகாப்பாகவும் வாழமுடிகிறது.

**மரபுச் சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக.**

**சான்று :** எதிர் நீச்சல் – வாழ்க்கையில் எத்தனை தோல்விகள் ஏற்பட்டாலும், அவற்றைக் கடந்து எதிர்நீச்சல் போட்டு, வெற்றி பெற வேண்டும்.

1. **சொந்தக்காலில் நிற்றல் :** தனக்கு எவரேனும் பொருளுதவி செய்வார்கள் என எதிர்பார்க்காமல், வேலவன் பள்ளியில் படிக்கும்போதே சிறுசிறு பணிகளைச் செய்து, பொருளீட்டித் தன் தேவைகளைத் தானே பூர்த்தி செய்துகொண்டு, **சொந்தக்காலில்** நிற்கப் பழகிக் கொண்டான்.
2. **தாளம் போடுதல் :** அரசியலில் மாறிமாறிக் கூட்டணி அமைக்கும் தலைவர்கள், தங்கள் கூட்டணித் தலைவர்களின் கூற்றுகளையெல்லாம் ஆராய்ந்து பார்க்காமல், **தாளம் போடுதலை** நாம் காண்கிறோம்.
3. **மதில்மேல் பூனை :** தேர்வு நெருக்கத்தில்மட்டுமே படித்துத் தேர்வு எழுதுவோர், தேர்வு முடிவு வெளிவரும்போது, **மதில்மேல்பூனைபோல்** மன அழுத்தத்தில் திண்டாடுவர்.
4. **நிறைகுடம் :** நன்றாக, தெளிவுபடக் கற்றறிந்த சான்றோர், **நிறைகுடம்போல்** அமைதியாக இருப்பர்.

MERCY PUBLICATIONS - CHENNAI

www.Padasalai.Net

5. **கைதூக்கிவிடுதல்** : ஊர்தோறும் பள்ளிகளைத் திறந்து, கல்வி கற்பித்து, மக்களைக் **கைதூக்கிவிடக்** காமராசர் பாடுபட்டார்.
6. **கண்ணாயிருத்தல்** : இளையோர், மாணவப்பருவத்தில் கல்வி கற்பதில்மட்டுமே **கண்ணாயிருத்தல்** வேண்டும்.
7. **அவசரக்குடுக்கை**:மக்களிடம் ஓரளவுக்கு அறிமுகமானவுடனே தன்னைத் தலைவனாகத் தேர்ந்தெடுத்து விடுவர் எனச் சிலர் **அவசரக்குடுக்கைபோல்** செயல்பட்டு, மூக்கறுபட்டுத் தோல்வி காண்பது உண்டு.
8. **முதலைக் கண்ணீர்** : தேர்தல் நெருங்கும் நேரத்தில் சிலர், மக்கள் படும் துன்பங்களுக்காகத் தாம் போராடப் போவதாகப் பேசி, **முதலைக்கண்ணீர்** வடிப்பது உண்டு.
9. **கானல்நீர்** : முதியோர் இல்லத்தில் மகனால் சேர்க்கப்பட்டபோது, தங்கள் எதிர்கால வாழ்க்கை **கானல் நீராகிப்** போனதைப் பெற்றோர் உணர்ந்தனர்.

**வரைபடம் கொண்டு விவரிக்க**

**நீங்கள் பேருந்து நிறுத்தத்தில் நின்று கொண்டிருக்கிறீர்கள். வழி தெரியாத ஒருவர், உங்களிடம் வந்து நூலகத்திற்கு வழி கேட்கிறார். கீழ்க்காணும் வரைபடத்தைக் கொண்டு, அப்புதியவருக்கு வழிகாட்டுங்கள்.**




எதிரில் இருக்கும் வாய்க்கால் தெருவில் நடந்து நேராகச்சென்றால், திருவள்ளுவர் தெரு வரும்; அங்கு இடப்புறம் திரும்பி நடந்தால், ஒரு நாற்சந்தி வரும். அங்கு மேலைத் தேர்த்தெருவும்,தெற்குத்தேர்த் தெருவும் சந்திக்கும் மூலையில் நூலகம் உள்ளது என வழிகாட்டுவேன்.

**இலக்கியநயம் பாராட்டுக**

சுதந்திரம் தருகிற மகிழ்ச்சியைக் காட்டிலும்
சுகம்தரும் உணர்ச்சியும் வேறுண்டோ?
பதம்தரும் பெருமையும் பணம்தரும் போகமும்
பார்த்தால் அதைவிடக் கீழன்றோ?
இதம்தரும் அறங்களும் இசையுடன் வாழ்தலும்
எல்லாம் சுதந்திரம் இருந்தால்தான்
நிதம்தரும் துயர்களை நிமிர்ந்துநின் றெதிர்த்திட
நிச்சயம் சுதந்திரம் அதுவேண்டும்.

**– நாமக்கல் கவிஞர்**

**ஆசிரியர் குறித்து :** ஈரோடு மாவட்டம் ‘நாமக்கல்’ என்னும் ஊரில் வாழ்ந்தமையால், ‘நாமக்கல் கவிஞர்’ என அழைக்கப்பெற்றார். இவர் சிறந்த கவிஞர்; ஓவியம் வரைபவர்; கதை எழுதுபவர். தேசப்பற்றும் தமிழ்மொழிப் பற்றும் உடையவர். சுதந்திரப் போராட்டக் களத்தில் பங்கு பெற்றவர். தேசியத்தையும் தமிழையும் தமிழ் இனத்தையும் போற்றி வாழ்ந்தவர். சுதந்திர இந்தியாவில், தமிழ்நாடு சட்டமன்றத்தில், அரசவைக் கவிஞராகவும் திகழ்ந்தவர்.

**பாடல் பொருள் :** உலகில் சுதந்திரம் தருகின்ற மகிழ்ச்சியைவிட இனிய சுகம் தரும் உணர்வு வேறு ஏதேனும் இருக்கிறதா? வகிக்கின்ற பதவி கொடுக்கின்ற பெருமையையும், சேர்த்த செல்வத்தால் அனுபவிக்கும் இன்பமும் சுதந்திரத்துடன் ஒப்பிடும்போது தாழ்ந்தவைதாமே? வாழ்வுக்கு இதம் தரும் அறச்செயல்களும், புகழுடன் வாழ்வதும் ஆகிய எல்லாம், சுதந்திரம் இருப்பதால்தானே நம்மால் அனுபவிக்க முடிகிறது? தினமும் நம்மை வருத்தும் துன்பங்களை நிமிர்ந்து நின்று எதிர்த்து விரட்ட, நிச்சயமாக நமக்குச் சுதந்திரம் வேண்டும் அல்லவா?

**மையக்கருத்து :** சுதந்திரம் இல்லை என்றால், வாழ்வில் நாம் எந்தச் சுகத்தையும் பெறவோ, அனுபவிக்கவோ முடியாது. எதையும் சாதித்து இன்பம் துய்க்கச் சுதந்திரமே இன்றியமையாதது என்னும் மையக்கருத்தைக் கவிஞர் வலியுறுத்துகிறார்.

**நயம் :** எளிய சொற்களில், அரிய கருத்தைச் சந்த நயம் அமையக் கவிஞர் கூறியுள்ளது நயம் பயக்கிறது.

இச்செய்யுள், எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தமாகும். இச்செய்யுளில் சுதந்திரத்தின் சிறப்புகள் இயல்பாகக் கூறப்பட்டுள்ளன. எனவே, 'இயல்பு நவிற்சி அணி' அமைந்துள்ளது.

**தொடை நயம் :** அடிதோறும் முதல் சீர்களில் (சுதந்திரம், பதம்தரும், இதம்தரும், நிதம்தரும் என்பவற்றில்) இரண்டாம் எழுத்து ஒன்றிவந்து, அடிஎதுகை அமைந்துள்ளது.

சீர்தோறும் முதலெழுத்து ஒன்றிவருவது சீர்மோனை. பதம்தரும், பணம்தரும்; இதம்தரும், இசையுடன்; நிதம்தரும், நிமிர்ந்துநின் – சீர்மோனை.

இறுதிச்சீர் ஒன்றுவது இயைபுத்தொடை ஆகும். வேறுண்டோ? கீழன்றோ? என்னும் சீர்களில் ஓசை ஒன்றி, இயைபுத்தொடை அமைந்துள்ளது. அவற்றின் ஓ என்னும் ஓசை படிப்பதற்கு இன்பமளிக்கிறது.

## மொழியோடு விளையாடு

**கீழுள்ள கட்டத்தினுள் நுழைந்து சொற்களை எடுத்தும் தேவையான சொற்களைச் சேர்த்தும் தொடரமைக்க. (அடைபட்ட பகுதியில் உள்ள சொற்களைத் தவிர்க்கவும்.**



www.Padasalai.Net

எ – டு : மாணவர்கள் வகுப்பறையினுள் நுண்கலைகளையும் கற்க வேண்டும்.

[அடைப்பட்ட பகுதியில் உள்ள தவிர்க்கப்பட்ட சொற்கள் :

1. தாமதம், 2. மன்னிப்பு, 3. வெளியேற்றம், 4. பட்டினி, 5. புறக்கணிப்பு, 6. வேலையின்மை, 7. தண்டனை, 8. தவறவிடல்]

[கட்டத்தினுள் நுழைந்து, எடுத்துக்கொள்ளப்பட்ட சொற்கள் :

1. வகுப்பு, 2. வகுப்பறை, 3. கரும்பலகை, 4. சிந்தனை, 5. எழுதுகோல், 6. காமராசர், 7. ஆசிரியர், 8. மாணவர், 9. வழிபாடு, 10. விளையாட்டு, 11. திறமை, 12. மதிய உணவு, 13. கூடுதல் நேரம், 14. வாசிப்பு, 15. உடல்உறுதி, 16. வேண்டும், 17. நடக்கும், 18. செய்வோம், 19. நுண்கலை, 20. பள்ளிக்கூடம்]

அமைக்கப்பட்ட தொடர்கள் : மேற்கோள் குறியில்

1. ‘மாணவர்கள், தவறாமல், பள்ளிக்கூடம்’ செல்வதற்குக் கரும வீரர் ‘காமராசர்’ மதிய உணவுத் திட்டத்தைக் கொண்டுவந்தார்.
2. காலை எழுந்தவுடன் ‘வாசிப்பும்’, மாலை வந்தவுடன் ‘விளையாட்டு’ம் என வைத்துக்கொள்ள வேண்டும்’.
3. ‘வகுப்பறை’ தூய்மையாக இருக்குமாறும் ‘வகுப்பு’ அமைதியாக இருக்குமாறும் பார்த்துக்கொள்க.
4. பள்ளி தொடங்குமுன், கூட்டு ‘வழிபாடு’ ‘நடக்கும்’.
5. ‘சிந்தனை’ வளர்வதற்கும், ‘திறமை’ கூடுவதற்கும் ‘நுண்கலை’ப் பயிற்சி இன்றியமையாதது.
6. ‘ஆசிரியர்’ ‘கரும்பலகை’யிலும், மாணவர்கள் குறிப்பேட்டிலும் எழுத, ‘எழுதுகோல்’ (முறையே சுண்ணக்கோல், கரிக்கோல் அல்லது மைக்கோல்) அவசியம்.
7. மாணவர்களாகிய நாங்கள், காலையில் படிப்பதற்கும், மாலையில் எழுதுவதற்கும் ‘கூடுதல் நேரம்‘ ஒதுக்கீடு ‘செய்வோம்’.
8. மாணவர்களாகிய நாங்கள், “உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே” என்னும் திருமூலர் கூற்றுப்படி, ‘உடல் உறுதி’ பெறுவதற்கு ஆவன செய்வோம்

**படித்துப் பார்த்துப் படைக்க.**

| | | |
|---|---|---|
| பத்தாவது தடவையாக விழுந்தவனுக்கு<br>முத்தமிட்டுச் சொன்னது பூமி<br>‘ஒன்பது முறை எழுந்தவனல்லவா நீ!’<br>– ஈரோடு தமிழன்பன் | எப்போதும் மத்தாப்புக்<br>கொளுத்தி விளையாடுகிறது<br>மலையருவி<br>– கழனியூரன் | **வியப்பு:**<br>கோடையைச் சாடுகின்றவனே நீ,<br>குளிர்தருக்களை வெட்டியபோது<br>மகிழ்ந்தாய் அல்லவா? |

## நிற்க அதற்குத் தக

**உம்முடைய பொறுப்பை உணர்ந்து, கட்டங்களை நிறைவு செய்க.**

| அடையாளம் | பெருமிதம் |
|---|---|
| இந்தியன் | ஒருமைப்பாட்டுணர்வுடன் சமூகக் கூட்டமைப்பில் இணைந்து வாழ்கிறேன். |
| தமிழன் | தலை நிமிர்ந்து வாழ்கிறேன். |
| மாணவன் | கசடறக் கற்கிறேன். |
| மகன் / மகள் | செய்ந்நன்றி மறவேன். |
| சகோதரன் / சகோதரி | சுற்றம் பேணி வாழ்வேன். |
| தோழன் / தோழி | ஏழைமை பேசேன். |

## கலைச்சொல் அறிவோம்

உத்திகள் – Strategies
தொழிற்சங்கம் – Trade Union
பன்முக ஆளுமை – Multiple Personality
சமத்துவம் – Equality
பட்டிமன்றம் – Debate
புனைபெயர் – Pseudonym

MERCY PUBLICATIONS - CHENNAI

# உள்நிலைத் தேர்வு

நேரம் : 40 நிமிடங்கள் மதிப்பெண் : 30

**I. பலவுள் தெரிக. 8 × 1 = 8**

1. ‘ஜனப் பிரளயம்’ என்னும் வடமொழிச் சொல்லுக்குரிய தமிழ்ச்சொல் எது?
   அ) மக்கள் அலை ஆ) உயிர் அலை இ) மக்கள் வெள்ளம் ஈ) மக்கள் அவை
2. அழகும் அறிவும் இளமையும் வாய்த்தவன் – யார், யாரிடம் கூறியது?
   அ) அமைச்சர் கவிஞரிடம் ஆ) மன்னன் அமைச்சரிடம்
   இ) அமைச்சர் மன்னனிடம் ஈ) மன்னன் அமுதவல்லியிடம்
3. கூற்று : எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றான பதிற்றுப்பத்து, புறம் சார்ந்த நூல்.
   காரணம் : சேர மன்னர் பதின்மரின் சிறப்புகளைக் கூறுகிறது இந்நூல்.
   அ) கூற்று சரி; காரணம் தவறு ஆ) இரண்டும் சரி
   இ) இரண்டிற்கும் தொடர்பு இல்லை ஈ) கூற்று தவறு காரணம் சரி.
4. “பட்டி மண்டபத்துப் பாங்கறிந்து ஏறுமின்” என ______ குறிப்பிடுகிறது.
   அ) நற்றிணை ஆ) பதிற்றுப்பத்து இ) சிலப்பதிகாரம் ஈ) மணிமேகலை
5. ஆக்கப்பெயர் விகுதி பெறாத சொல்லைத் தேர்க.
   அ) காவலாளி ஆ) மேலாளர் இ) உதவியாள் ஈ) ஆசிரியர்
6. ‘சிம்பொனித் தமிழர்’ என அழைக்கப்படுபவர் ______.
   அ) ஏ. ஆர். ரஹ்மான் ஆ) இளையராஜா
   இ) அஜொய் சக்கரபர்த்தி ஈ) நம்ரதா கே சாகர்
7. அடையாறுப் பாலத்தின் சுவற்றில் எழுதாதீர்கள். – இவ்வரியில் உள்ள சொற்பிழைகளின் திருத்தம்.
   அ) அடையாற்றுப் பாலத்தின் சுவற்றில் ஆ) அடையாறுப் பாலத்தின் சுவரில்
   இ) அடையாறுப் பாலத்தின் சுவற்றில் ஈ) அடையாற்றுப் பாலத்தின் சுவரில்
8. சரியான விடையைத் தேர்க.
   “பெண்ணடிமை தீருமட்டும் பேசுந் திருநாட்டில்
   மண்ணடிமை தீர்ந்து வருதல் முயற்கொம்பே” எனப் பாடியவர்
   அ) பாரதியார் ஆ) பாரதிதாசன் இ) கண்ணதாசன் ஈ) கவிஞர் வாலி

**II. எவையேனும் ஐந்தனுக்கு விடை தருக. 4 × 2 = 8**

9. செந்துறைப் பாடாண் பாட்டு – துறைவிளக்கம் எழுதுக.
10. ‘உதாரன் அழகும் அறிவும் இளமையும் வாய்ந்தவன்’ – யார், யாரிடம் கூறியது?
11. அலைகடல், புதுக்கியவர் – இலக்கணக்குறிப்புத் தருக.
12. ‘நாழிக்குள் திணிக்கும் மருந்துபோல்’ என்னும் உவமையை ஜீவானந்தம் வாழ்வுடன் ஒப்பிடுக.
13. சொந்தக்காலில் நிற்றல் – மரபுச் சொல்லைத் தொடரில் அமைத்து எழுதுக.

**III. எவையேனும் இரண்டனுக்கு விடை தருக. 2 × 4 = 8**

14. ஜீவாவின் பேச்சுநடை குறித்துச் சுந்தர ராமசாமி கூறுவன யாவை?
15. “உயர் தமிழை உயிரென்று போற்றுமின்கள்” – இடம் சுட்டிப் பொருள் விளக்கம் தருக.
16. சேரநாடு, செல்வவளம் மிக்கது என்ற கூற்றிற்குரிய காரணங்களைக் குறிப்பிடுக.
17. ஆக்கப்பெயர் விகுதிகள் தற்கால வாழ்வியலில் மிகுந்துள்ளன. – ஏன்?

**IV. பின்வரும் வினாக்களில் ஏதேனும் ஒன்றனுக்கு விரிவான விடை தருக. 1 × 6 = 6**

18. சிந்தனைப் பட்டிமன்றத்தின் நிகழ்வுகளைச் சுவை குன்றாமல் தொகுத்து எழுதுக.
19. பாரதிதாசன் ஒரு ‘புரட்சிக்கவி’ என்பதை, உதாரன் பாத்திரம் வாயிலாக மெய்ப்பிக்க.
20. சுந்தர ராமசாமியின் ‘காற்றில் கலந்த பேரோசை’ என்னும் தலைப்பு, ஜீவாவின் வாழ்க்கைக்கு எங்ஙனம் பொருந்தும் என்பதை விளக்குக.

MERCY PUBLICATIONS - CHENNAI

www.Padasalai.Net

# இயல் – 8

## உரைநடை உலகம்

## தாகூரின் கடிதங்கள்

### குறுவினாக்கள்

**1. நாட்டுப்புறத்திலும் பட்டணத்திலும் சிறந்து விளங்குவதாகத் தாகூர் எவற்றைக் கூறுகிறார்?**

★ நாட்டுப்புறங்களில் இருக்கும்போது, இயற்கையே சிறந்து விளங்குகிறது.

★ பட்டணத்திலோ, மனித சமுதாயமே முக்கியமானதாகத் தலைதூக்கி நிற்கிறது.

**2. பாரம்பரியத்தில் வேரூன்றிய நவீன மனிதர் என்றும் கிழக்கையும் மேற்கையும் இணைத்த தீர்க்கதரிசி என்றும் அழைக்கப்பட்ட தாகூர் தமது 16ஆம் வயதிலேயே கவிதைகள் எழுதத் தொடங்கினார் – நிறுத்தக்குறியிடுக.**

★ 'பாரம்பரியத்தில் வேரூன்றிய நவீன மனிதர்' என்றும். 'கிழக்கையும் மேற்கையும் இணைத்த தீர்க்கதரிசி' என்றும் அழைக்கப்பட்ட தாகூர், தமது 16ஆம் வயதிலேயே கவிதைகள் எழுதத் தொடங்கினார்.

### கூடுதல் வினாக்கள்

**3. ஒரு பறவையின் வாழ்க்கை பற்றித் தம்மால் எதனால் சிந்திக்காமல் இருக்க முடிவதில்லை எனத் தாகூர் கூறுகிறார்?**

★ ஒரு பறவையின் சின்னஞ்சிறு இதயத்துக்குள்ளும் வாழ்க்கையின் களிப்பு. எத்துணை அதிகமாக இருக்கும் என்பது பற்றித் தம்மால் சிந்திக்காமல் இருக்க முடிவதில்லை எனத் தாகூர் குறிப்பிடுகிறார்.

**4. அலட்சிய மனப்பான்மை (தோல்விகளுக்கான மூலகாரணம்) குறித்துத் தாகூர் கூறியுள்ளதென்ன?**

★ நம் தோல்விகள் அனைத்திற்கும் மூலகாரணம், இயற்கையிடம் நாம் காட்டும் அலட்சிய மனப்பான்மைதான்.

★ இந்தச் சுபாவம் காரணமாகத்தான், நம் அலட்சிய மனப்பான்மை நாட்டு மக்களிடமும் தீவிரமாகத் தலை தூக்குகிறது எனத் தாகூர், அலட்சிய மனப்பான்மை குறித்துக் கூறுகிறார்.

**5. விஸ்வபாரதி பல்கலைக்கழகத்தை ஏன் தாகூர் நிறுவினார்?**

★ குழந்தைகள், இயற்கையின் மடியில் எளிமையாக வளர்க்கப்பட வேண்டும்.

★ தங்கள் வேலைகளைத் தாங்களே கவனித்துக்கொண்டு, மற்றவர்களுக்கும் தொண்டு செய்ய வேண்டும் என்ற எண்ணத்தால், விஸ்வபாரதி பல்கலைக்கழகத்தைத் தாகூர் நிறுவினார்.

**6. விஸ்வபாரதி பல்கலைக்கழகத்தை நிறுவியர் யார்?**

★ விஸ்வபாரதி பல்கலைக்கழகத்தை நிறுவியவர் தாகூர்.

### சிறுவினா

**1. 'தாமஸிகம்' என்றால் என்ன?**

★ நாகரிக வழக்கத்தில் காலத்துக்கு ஏற்றபடி சீக்கிரம் வாடிவிடும் மலர்களுடன் தொடர்பு உண்டு. தோட்டக்காரன் கைகளில் அவற்றைப் பராமரிக்கும் பொறுப்பு இருக்கும். மலர்ச்செப்பினுள் வழக்கம்போல் போவதும் வருவதும் தான் அவற்றின் வேலை. இதனைத் 'தாமஸிகம்' என்பர்.

★ ஸ்தூலப் பொருளுக்கு அப்பால் செல்ல இயலாமல், நம் மனம் திகைப்படைந்து நின்றுவிடுகின்ற நிலை. அதாவது, பூஜைக்குத் தேவையான மலர்களைத் தவிர, வேறு எந்தப் பூக்களுடனும் நமக்கு அவசியம் எதுவும் இல்லை என்பதாம்.

### கூடுதல் வினாக்கள்

**2. கடித இலக்கியம் குறித்து எழுதுக.**

★ 'கடிதம்' என்பது. குறிப்பிட்ட செய்தியை உரியவருக்குத் தெரிவிக்க எழுதி அனுப்புவதாகும்.

★ உரிய வடிவுடன் அமைந்த கடிதம். பொருள் செறிவாலும், கற்பனை நயத்தாலும், மொழி வளத்தாலும் இலக்கிய வடிவம் பெறுகிறது.

★ கடித இலக்கியத்தின் காலத் தொன்மையைக் காப்பியங்களிலும் சிற்றிலக்கியங்களிலும் காணப்பெறும் கடிதங்கள் விளக்கும். தாகூரின் கடிதங்கள். கற்பனை, நகைச்சுவை, ஆழ்ந்த சிந்தனை முதலானவற்றை உள்ளடக்கிய கவித்துவ இயல்பு கொண்டவை.

**4. ஆற்றில் செத்து மிதந்து வந்த பறவையின் வரலாறாகத் தாகூர் கூறியது என்ன?**

★ எங்கோ ஓர் ஊரின் எல்லையில் அமைந்த தோப்பின் மரக்கிளையில் பறவையின் கூடு இருந்திருக்கும். இருளுக்குப்பின் கூடு திரும்பித் தன் துணையுடன், விரித்த சிறகுகளின் வெம்மை தணிய, உடல் சோர்ந்து உறங்கி இருக்கலாம்.

★ இரவில் மாமரத்தின் கீழிருந்த மண் சரிந்து விழ, கூட்டைவிட்டுப் பறவை சிதறி விழுந்திருக்கும். அதன்பின், ஒரு கணம் கண்விழித்த பறவை, மீண்டும் விழிக்க அவசியம் இல்லாமல் போய்விட்டது என, ஆற்றில் செத்து மிதந்து வந்த பறவையின் வரலாற்றைத் தாகூர் கூறியுள்ளார்.

**5. நம் நாட்டில் மரங்களில் மலரும் பூக்களை மனிதன் எவ்வாறு ஏற்கிறான்?**

★ மரத்தின் கிளையில் பூ மலர்கிறது. அதற்குப் புகலிடம் மரக்கிளைதான்.

★ மனிதன் அதற்குப் பெயரிட்டுத் தன் உள்ளத்தில் இடம் அளிக்கிறான்.

★ நம் நாட்டில் மரங்களில் மலரும் பூக்கள் பல உள்ளன.

★ அவை அனைத்தையும் மனிதன் மனத்தினுள் ஏற்றுக் கொள்வதில்லை.

★ மலரிடம் இவ்வளவு அலட்சிய மனப்பான்மை, வேறு எந்த நாட்டிலும் காணப்படுவதில்லை எனத் தாகூர் கூறுகிறார்.

**8. தாகூர் எதனை நினைத்துப் பார்க்கச் சொல்கிறார்?**

★ தேர்வில் தேர்ச்சி பெறச் சரித்திரப் பாடத்தைப் புறக்கணிக்க முடியாது.

★ நம் தேசப்பற்று என்பது அப்புத்தக மூட்டைகளால் உருவானது.

★ தேசத்து மக்களிடம் கொண்டுள்ள பற்றுதலால் உண்டானதன்று.

★ சிந்தித்துப் பார்த்தால், நம் உலகம் எத்தனை குறுகலானது என்பது புலப்படும்.

**9. தாகூர், குறித்து நீ அறிவன யாவை?**

★ தாகூர், தம் 16ஆம் வயதில் கவிதைகள் எழுதினார். இசைப்பாடல்கள், கவிதைகள், நாடகங்கள், குறு நாடகங்கள், பெருநாவல்கள், சிறுகதைகள் எனப் பல எழுதி, இலக்கியப் பணியாற்றினார்.

★ பயணக் கட்டுரைகள் எழுதினார். ஆங்கில மொழிபெயர்ப்பு நூல்கள் பல எழுதினார். ஓவியங்கள் தீட்டுவதிலும் சிறந்து விளங்கினார்.

★ 'கீதாஞ்சலி' கவிதை நூலுக்கு 1913ஆம் ஆண்டு நோபல் பரிசு பெற்றார். 'பாரம்பரியத்தில் வேரூன்றிய நவீன மனிதர்' என்றும், 'கிழக்கையும் மேற்கையும் இணைத்த தீர்க்கதரிசி' என்றும் போற்றப்பட்டார்.

★ 'ஜாலியன் வாலாபாக் (1919) படுகொலையால் மனம் வருந்தி, ஆங்கில அரசைக் கண்டித்துத் தமக்கு அளித்த 'சர்' பட்டத்தைத் துறந்தார். 1921இல் 'விஸ்வபாரதி' பல்கலைக்கழகத்தை நிறுவினார்.

★ 'குருதேவ்' என அனைவராலும் அழைக்கப்பட்டார். இவரது 'ஜனகணமன' பாடல், இந்தியாவிலும், 'அமர் சோனார் பங்களா' பாடல், வங்க தேசத்திலும், நாட்டுப் பண்களாகப் போற்றப்படுகின்றன.

**10. த. நா. குமாரசுவாமி பற்றி அறிவன யாவை?**

★ த. நா. குமாரசுவாமி, தமிழ், சமஸ்கிருதம், தெலுங்கு, வங்கம், பாலி, ஆங்கிலம் ஆகிய மொழிகளைக் கற்றுத் தேர்ந்தவர். 'தாகூரின் கடிதங்கள்' என்னும் நூலைத் தமிழில் மொழியாக்கம் செய்தவர்.

★ அதனைச் சாகித்திய அகாதெமி வெளியிட்டுள்ளது. தமிழ் – வங்க மொழிகளுக்கு அவர் ஆற்றிய தொண்டைப் பாராட்டி, வங்க அரசு, 'நேதாஜி இலக்கிய விருது' அளித்துச் சிறப்பித்துள்ளது.

## நெடுவினா

**1. 'சிதறிய கடிதங்கள்' உணர்த்தும் கருத்துகளைச் சிதறாது விளக்குக.**

**'சிதறிய கடிதங்கள்' உணர்த்தும் கருத்துகள் :**

தாகூரின் சிதறிய கடிதங்கள், ஆழ்ந்த சிந்தனையைத் தூண்டும் அரிய செய்திகளை உணர்த்துகின்றன. ஆற்று வெள்ளத்தில் இறந்து மிதந்துவந்த பறவையை யாரும் பொருட்படுத்த மாட்டார்கள். ஆனால், தாகூர் அதன் இறப்பு எப்படி நிகழ்ந்திருக்கும் என்பதை ஊகித்துத் தம் சிதறிய கடிதத்தில் கூறுகிறார்.

**பறவை மரணம் :**

எதிர்க்கரை புலப்படாதவகையில் ததும்பிய நீரோடு பெருக்கெடுத்த 'பத்மா' ஆறு ஒருபுறமாகப் புரண்டதால் சாய்ந்து, சரிந்த மரத்தில் கூடுகட்டி வாழ்ந்த சிறுபறவை கீழே விழுந்து, ஆற்றில் வெற்று உடலாக மிதந்து வந்ததாகத் தாகூர் குறிப்பிடுகிறார். சிறு பறவையின் அழகு, கூட்டின் அழகு, உழைப்பின் சிறப்பு, ஓய்வு எடுக்கும் நிலை ஆகியவற்றை அந்தப் பறவையின் வரலாறாகச் சுட்டி, அதன் மரணத்தில் முடிக்கிறார்.

MERCURY PUBLICATIONS - CHENNAI

www.Padasalai.Net

**தம் சிந்தனைக்கான காரணம் :**

மனிதன் தன் சுகத்திற்குமுன், பிற உயிர்களின் சுகதுக்கங்களைப் பற்றிக் கவலைப்படுவதில்லை என்பதைத் தெளிவுபடுத்துகிறார். மற்றப் பிராணிகளை அற்பமாக நினைப்பதையும் காட்டுகிறார். பிற உயிர்களிடம் கருணை காட்டுவதை, நடக்க முடியாத அதிசயமாக நம் சரித்திரம் விட்டுவிடவில்லை. அதனால், ஒரு பறவையின் சின்னஞ்சிறு வாழ்க்கைக் களிப்பு, எத்துணை அளவு இருக்கும் என்பதைத் தம்மால் சிந்திக்க முடிவதாகத் தாகூர் கூறுகிறார்.

**அலட்சிய மனப்பான்மை :**

மரங்களில் மலரும் பூக்கள் பல, நம் நாட்டில் உள்ளன. அவற்றின் அனைத்துப் பெயர்களையும், மனிதன் அறிந்திருக்கவில்லை. இலக்கியங்களில் கூறப்பட்ட பல மலர்களின் பெயர்களை மட்டுமே அறிவோம். அவை, எவை எனத் தெரிந்துகொள்ள முயற்சி செய்வதில்லை. சில மலர்களின் பெயர்களை அறிவோம். ஆனால், அப்பெயருக்குரிய மலர் எது என அறியோம். பறவைகள், மரங்கள், பூக்கள் விஷயத்தில் அலட்சியம் காட்டுவோர், ஆறுகளை மட்டும் நினைவில் கொள்கின்றனர்.

**தோல்விகளுக்குக் காரணம் :**

நாகரிக வாழ்க்கையில் சீக்கிரம் வாடும் மலர்களுடன் மனிதனுக்குத் தொடர்பு உண்டு. நம் மனம் ஸ்தூலப் (போகப்) பொருளுக்கு அப்பால் செல்ல இயலாமல் திகைத்து நின்று விடுகிறது. இதனைத் 'தாமஸிகம்' என்பர். அதாவது 'மெடீரியலிஸம்'; உலகில் எத்தனையோ நேர்த்தியான புட்கள் (பறவைகள்) உள்ளன. அவற்றின் பெயர்களை அறியோம். இயற்கையிடம் அலட்சிய மனப்பான்மை வளர்வதே, நம் தோல்விகளுக்குக் காரணம். இயற்கையை அலட்சியப்படுத்தாமல், இயற்கையோடு இணைந்து வாழவும், இயற்கையை நேசித்து வாழவும் கற்றுக்கொள்ள வேண்டும். அதனால் வாழ்வில் உயரலாம் என்னும் கருத்துகளை எல்லாம் உணர்த்துவனவாகத் தாகூரின் கடிதங்கள் உள்ளன.

## கூடுதல் வினா

**2. நம் தோல்விகளுக்கு எல்லாம் மூலக்காரணமாகத் தாகூர் சுட்டுவன யாவை?**

**சிதறிய கடிதங்கள் உணர்த்துவன :**

தாகூரின் சிதறிய கடிதங்கள், ஆழ்ந்த சிந்தனையைத் தூண்டுவன. பத்மா ஆற்றின் கரை தெரியா வெள்ளத்தால் மரம் சாய, பறவை ஒன்று உயிரிழந்து மிதந்து வந்தது. நாட்டுப்புறங்களில் மாபெரும் இயற்கை, எல்லாவற்றையும் விழுங்கும் இயல்புடையதாக விளங்குகிறது. பட்டணங்களில் இயற்கையின் வளங்களான பிற உயிரினங்கள் மதிக்கப்படுவதில்லை. பாரத நாட்டின் பண்பு, எல்லா உயிர்களிடத்தும் கருணை காட்டுவதாகும்.

**அலட்சிய மனப்பான்மை :**

மரங்களில் மலரும் பூக்கள் பல, நம் நாட்டில் உள்ளன. அவற்றின் அனைத்துப் பெயர்களையும், மனிதன் அறிந்திருக்கவில்லை. சில மலர்கள், தம் மணத்தால் மனிதனைத் திரும்பிப் பார்க்க வைக்கின்றன. இலக்கியங்களில் கூறப்பட்ட பல மலர்களின் பெயர்களை அறிவோம். அவை எவை எனத் தெரிந்துகொள்ள, முயற்சி செய்வதில்லை. அவ்வளவு அலட்சியம்.

**தோல்விகளுக்குக் காரணம் :**

நாகரிக வாழ்க்கையில் சீக்கிரம் வாடும் மலர்களுடன் மனிதனுக்குத் தொடர்பு உண்டு. நம் மனம் ஸ்தூலப் (போகப்) பொருளுக்கு அப்பால் செல்ல இயலாமல், திகைத்து நின்று விடுகிறது. இதனைத் 'தாமஸிகம்' என்பர். அதாவது 'மெடீரியலிஸம்'. உலகில் எத்தனையோ நேர்த்தியான புட்கள் (பறவைகள்) உள்ளன. அவற்றின் பெயர்களை அறியோம். இயற்கையிடம் அலட்சிய மனப்பான்மை வளர்வதே, நம் தோல்விகளுக்குக் காரணம்.

**வாழ்வில் உயர வழி :**

மக்களிடம் கொண்ட பற்றுதல் காரணமாக உண்டானதில்லை தேசப்பற்று. அது தேர்வுக்குப் படிக்கும் பாடநூல்களால் உருவானது. நாம் அறிந்த உலகம் குறுகலானது. அதில் அதிகமான பொருள்கள் இடம்பெற வாய்ப்பு இல்லை. இயற்கையை அலட்சியப்படுத்தாமல், இயற்கையோடு இணைந்து வாழவும், இயற்கையை நேசித்து வாழவும் கற்றுக்கொள்ள வேண்டும். அதனால் வாழ்வில் உயரலாம் எனக் கருத்துகளை எல்லாம் உணர்த்துவனவாகத் தாகூரின் கடிதங்கள் உள்ளன.

## பலவுள் தெரிக

1. பூஜை, விஷயம், உபயோகம் – என்பவை முறையே ______ என்று தமிழில் வழங்கப்படும்.
அ) வழிபாடு, செய்தி, பயன்பாடு ஆ) பயன்பாடு, வழிபாடு, செய்தி
இ) வழிபாடு, பயன்பாடு, செய்தி ஈ) வழிபாடு, பயன்பாடு, செய்தி
**விடை :** அ) வழிபாடு, செய்தி, பயன்பாடு

## கூடுதல் வினாக்கள்

2. செய்தியை உரியவருக்குத் தெரிவிப்பதற்காக எழுதி அனுப்பப்படுவது ______.
அ) செய்தித்தாள் ஆ) குறுஞ்செய்தி இ) தொலைபேசி ஈ) கடிதம்
**விடை :** ஈ) கடிதம்

3. தாகூரின் கடிதங்கள், ______ என்பர்.
அ) கற்பனையானவை ஆ) நகைச்சுவையானவை
இ) அறிவுரை வழங்குபவை ஈ) கவித்துவ இயல்பு கொண்டவை
**விடை :** ஈ) கவித்துவ இயல்பு கொண்டவை

4. "பாரம்பரியத்தில் வேரூன்றிய நவீன மனிதர்" / "கிழக்கையும் மேற்கையும் இணைத்த தீர்க்கதரிசி" – என்று குறிப்பிடப்படுபவர் ______.
அ) த. நா. குமாரசுவாமி ஆ) தேவேந்திரநாத தாகூர்
இ) இரவீந்திரநாத தாகூர் ஈ) பூபேந்திரநாத தாகூர்
**விடை :** இ) இரவீந்திரநாத தாகூர்

5. இலக்கியத்திற்கான நோபல் பரிசு பெற்ற தாகூரின் கீதாஞ்சலி என்பது ______.
அ) நாடக நூல் ஆ) சிறுகதை நூல் இ) நாவல் ஈ) கவிதை நூல்
**விடை :** ஈ) கவிதை நூல்

6. தாகூர் நிறுவிய பல்கலைக்கழகம் ______.
அ) கல்கத்தா பல்கலைக்கழகம் ஆ) சாந்திநிகேதன் பல்கலைக்கழகம்
இ) வங்க பல்கலைக்கழகம் ஈ) விஸ்வபாரதி பல்கலைக்கழகம்
**விடை :** ஈ) விஸ்வபாரதி பல்கலைக்கழகம்

7. தாகூரின் கடிதங்களைத் தமிழில் மொழியாக்கம் செய்து வெளியிட்டது ______.
அ) தமிழ்நாடு அரசு ஆ) மேற்கு வங்க அரசு
இ) மியூசிக் அகாதெமி ஈ) சாகித்திய அகாதெமி
**விடை :** ஈ) சாகித்திய அகாதெமி

8. த. நா. குமாரசுவாமிக்கு வங்க அரசு செய்த சிறப்பு ______.
அ) தாகூர் இலக்கிய விருது ஆ) நேதாஜி இலக்கிய விருது
இ) நேரு இலக்கிய விருது ஈ) ஜோதிபாசு இலக்கிய விருது
**விடை :** ஆ) நேதாஜி இலக்கிய விருது

9. 'பத்மா' என்பது, ______.
அ) இறந்துபோன பறவையின் பெயர் ஆ) ஒருவகை மலரின் பெயர்
இ) பௌ – கதா – கவோ என்னும் புறா இனம்
ஈ) கிழக்கு வங்காளத்தின் பெரிய நதி
**விடை :** ஈ) கிழக்கு வங்காளத்தின் பெரிய நதி

10. 'தாமஸிகம்' என்பது ______.
அ) ஒருவகைப் பறவை ஆ) ஒரு நதி இ) ஒருவகை மலர் ஈ) மெடீரியலிஸம்
**விடை :** ஈ) மெடீரியலிஸம்

11. 'பௌ – கதா – கவோ' என்பது ______.
அ) ஒருவகை மலர் ஆ) ஒரு புறா இனம்
இ) மைனா ஈ) ஒரு நதி
**விடை :** ஆ) ஒரு புறா இனம்

MERCY PUBLICATIONS - CHENNAI

www.Padasalai.Net

12. சாந்தி நிகேதனத்திலுள்ள காவியப் புகழ்பெற்ற மரம் ______.
அ) ஸேவுந்தி ஆ) தாமஸிகம் இ) பௌ–கதா–கவோ ஈ) பியால
**விடை :** ஈ) பியால

13. 'விருப்புடையவள்' என்பதைக் குறிக்கும் சொல் ______.
அ) ஸேவுந்தி ஆ) கபோதாக்ஷி இ) மயூராக்ஷி ஈ) இச்சாமதி
**விடை :** ஈ) இச்சாமதி

14. 'பத்மா', சற்று ஒருபுறமாகப் புரண்டாள். இதில் 'பத்மா' என்பது ______.
அ) மாமரக்கிளை ஆ) பெரிய நதி இ) பறவைக்கூடு ஈ) மண் சரிவு
**விடை :** ஆ) பெரிய நதி

15. 'விஸ்வபாரதி பல்கலைக்கழகத்'தை நிறுவியவர் ______.
அ) மகாத்மா காந்தியடிகள் ஆ) இரவீந்திரநாத தாகூர்
இ) த. நா. குமாரசாமி ஈ) ஜவகர்லால் நேரு
**விடை :** ஆ) இரவீந்திரநாத தாகூர்

**விடைக்கேற்ற வினா அமைக்க.**

1. பொருட்செறிவாலும், கற்பனை நயத்தாலும், மொழி வளத்தாலும் கடிதம், இலக்கியமாக உருப்பெறுகின்றது.
**வினா :** கடிதம் இலக்கியமாக எப்போது உருப்பெறுகின்றது எவ்வாறு?
2. இறந்துபோன ஒரு சின்னஞ்சிறு பறவை, ஆற்று வெள்ளத்தில் மிதந்து வருவதை இன்று கண்டேன்.
**வினா :** ஆற்று வெள்ளத்தில் இன்று கண்டது என்ன?
3. தன் சுகதுக்கத்திற்குமுன் மற்ற உயிர்களின் சுகதுக்கங்களைப் பற்றி மனிதன் எண்ணுவதுகூட இல்லை.
**வினா :** எப்போது, எதை மனிதன் எண்ணுவதுகூட இல்லை?
4. நமது சாத்திரங்கள் எல்லா உயிர்களிடத்தும் கருணை காட்டுவதை நடக்க முடியாத ஓர் அதிசயம் என்று விட்டுவிடவில்லை.
**வினா :** நடக்க முடியாத ஓர் அதிசயம் என்று நமது சாத்திரங்கள் எதை விட்டுவிடவில்லை?
5. மலரிடம் இவ்வளவு அலட்சிய மனப்பான்மை வேறு எந்த நாட்டிலும் காணப்படுவதில்லை.
**வினா :** வேறு எந்த நாட்டிலும் காணப்படாத அலட்சிய மனப்பான்மை எது?
6. ஸ்தூலப் பொருளுக்கு அப்பால் செல்ல இயலாமல் நம் மனம் திகைப்படைந்து நின்று விடுகிறது.
**வினா :** நம் மனம் எதற்கு அப்பால் செல்ல இயலாமல் எவ்வாறு நின்று விடுகிறது?
7. இயற்கையிடம் இந்த அலட்சிய மனப்பான்மைதான் நம்முடைய தோல்விகளுக்கெல்லாம் மூலகாரணம்.
**வினா :** நம்முடைய தோல்விகளுக்கெல்லாம் எம் மனப்பான்மை மூலகாரணம்?
8. பரிட்சையில் தேற வேண்டின் சரித்திரப் பாடத்தைப் புறக்கணிக்க முடியாது.
**வினா :** சரித்திரப் பாடத்தை ஏன் புறக்கணிக்க முடியாது?
9. தாய்மொழிக் கல்வி வழியாகப் பிற பாடங்களைப் படிப்பது, மாணவர்களிடம் புரிதலை மேம்படுத்தும்.
**வினா :** பிற பாடங்களை எம் மொழி வழியாகப் படிப்பது, மாணவர்களிடம் புரிதலை மேம்படுத்தும்?
10. மாற்றுத் திறனாளிகளுக்குக் குறைந்த எடையுள்ள செயற்கைக் காலை உருவாக்கிக் கொடுத்த பெருமை அப்துல்கலாமைச் சாரும்.
**வினா :** மாற்றுத் திறனாளிகளுக்குக் குறைந்த எடையுள்ள செயற்கைக் காலை உருவாக்கிக் கொடுத்த பெருமை யாரைச் சாரும்?
11. தகவல் தொழில் நுட்ப உலகில் கணினிப் புரட்சி இன்றியமையாதது.
**வினா :** கணினிப் புரட்சி எவ்வுலகில் இன்றியமையாதது?
12. சொற்களை இணைத்துப் பேசும் திறனை நாம் குழந்தைப் பருவம் முதலே பெற்று வந்திருக்கிறோம்.
**வினா :** எத்தகு திறனை நாம் குழந்தைப் பருவம்முதலே பெற்று வந்திருக்கிறோம்?

MERCY PUBLICATIONS - CHENNAI

# கவிதைப்பேழை

## 1. ஒவ்வொரு புல்லையும்

### (இன்குலாப்)

### குறுவினா

1. **"நீளும் கைகளில் தோழமை தொடரும்
நீளாத கைகளிலும் நெஞ்சம் படரும்" – தொடைநயங்களை எடுத்தெழுதுக.**
   - ★ அடிதோறும் முதற்சீரில் முதலெழுத்து ஒன்றி வருவது, மோனை. – (நீளும், நீளாத)
   - ★ இரண்டாம் அடியில் 'நீளாத – நெஞ்சம்' எனச் சீர்மோனை அமைந்துள்ளது.
   - ★ அடி இயைபு (தொடரும், படரும்) என்னும் தொடைகள், இவ்வடிகளில் நயம்பட அமைந்துள்ளன.

### கூடுதல் வினாக்கள்

2. **யாருடைய என்ன தொடர், இன்குலாபின் நீட்சிக்குரலாக ஒலிக்கிறது?**
   - ★ மகாகவியின் "காக்கை குருவி எங்கள் ஜாதி" என்னும் தொடரே, "கூவும் குயிலும் கரையும் காகமும் விரியும் எனது கிளைகளில் அடையும்" என்னும் இன்குலாபின் நீட்சிக்குரலாக ஒலிக்கிறது.
3. **இன்குலாப் எவ்வாறு வாழ்ந்தார்?**
   - ★ 'தம் எழுத்துகள், எளிய மக்களுக்கானவை' என்னும் உறுதியுடன் எண்ணம், சொல், செயல் ஆகிய மூவகைகளிலும் நின்று, இன்குலாப் வாழ்ந்தார்.
4. **'இன்குலாப்' இயங்கிய தளங்கள் யாவை?**
   - ★ கவிதை, சிறுகதை, கட்டுரை, நாடகம், மொழிபெயர்ப்பு ஆகிய இலக்கியத்தின் விரிவான தளங்களில் இன்குலாப் இயங்கினார்.

### சிறுவினா

1. **இன்குலாப், "உலகுக்கு வேண்டும் நானும் ஓர் துளியாய்" எனக் கூறுவதன் நயத்தை விளக்குக.**
   - ★ கைகள் நீளும்போது, தோழமை தொடர வாய்ப்பு உண்டு.
   - ★ ஆனால், நீளாத கைகளிலும், நெஞ்சத்தைப் படரவிட வேண்டும்.
   - ★ இந்த உலகம், பெருங்கடல் போன்றது.
   - ★ அது, எனக்கு முழுமையாகத் தேவைப்படுகிறது.
   - ★ அந்த உலகக் கடலில் நானும் ஒரு துளியாக இருப்பதால், உலகிற்கு நானும் தேவைப்பட்டவனாவேன்.
   - ★ "மனிதக் கடலில் நானும் ஒரு துளியாக இருக்கிறேன்" என்பதை, இன்குலாப் நயம்படக் கூறுகிறார்.

### கூடுதல் வினாக்கள்

2. **தாம் எவற்றை எல்லாம் அழைக்க விரும்புவதாக இன்குலாப் கூறுகிறார்?**
   - ★ இன்குலாப், ஒவ்வொரு புல்லையும் பெயர் சொல்லி அழைக்க விரும்புகிறார்.
   - ★ பறவைகளோடு சேர்ந்து, எல்லைகளைக் கடந்து பறக்க ஆசைப்படுகிறார்.
   - ★ பெயர் தெரியாத கல்லையும், மண்ணையும்கூடப் பெயர்களைச் சொல்லி அழைக்க விருப்பப்படுகிறார்.
3. **சமயம் கடந்து மானுடம் கூடவேண்டுமென்பதை இன்குலாப்வழி விளக்குக.**
   - ★ போதி மரத்தின் நிழல், சிலுவை , பிறை ஆகியவை சமத்துவம் என்னும் பெருவெள்ளத்தில் கலந்திட வேண்டும். உலகின் எம்மூலையில் விசும்பல் கேட்டாலும், எல்லார் செவிகளிலும் எதிரொலிக்க வேண்டும். கூண்டில் அடைபட்ட பறவை, சிறகு ஒடிந்தால், நம் சிறகிலும் குருதி வடிய வேண்டும்.
   - ★ இவ்வகையில் சமயம் கடந்து மனித இனம் சேர்ந்திட வழி ஏற்பட வேண்டும். மூடி மறைக்காத முகங்களில் விழித்து, 'மனிதம்' என்னும் பொதுத்தன்மையைப் பாடவேண்டும் என, இன்குலாப் விரும்புகிறார்.
4. **கவிஞர் இன்குலாப் குறித்து அறிவன யாவை?**
   - ★ 'இன்குலாப்' என்னும் புனைபெயரில் 'சாகுல் அமீது', கவிதை, சிறுகதை, கட்டுரை, நாடகம், மொழிபெயர்ப்பு நூல்களை எழுதியுள்ளார்.

www.Padasalai.Net

★ இன்குலாப் கவிதைகள், 'ஒவ்வொரு புல்லையும் பெயர் சொல்லி அழைப்பேன்' என்னும் பெயரில் தொகுக்கப்பட்டுள்ளன. இவர் மரணத்திற்குப்பின், இவர் விரும்பியபடி, செங்கை அரசு மருத்துவக் கல்லூரிக்கு இவருடைய உடல், கொடையாக அளிக்கப்பட்டது.

## இலக்கணக்குறிப்பு

கல்லையும் மண்ணையும் – எண்ணும்மை

சொல்லி – வினையெச்சம்

விளிப்பேன் – தன்மை ஒருமை வினைமுற்று

சமத்துவப்புனல் – உருவகம்

## உறுப்பிலக்கணம்

1. **தெரிந்த – தெரி + த் (ந்) + த் + அ**
   தெரி – பகுதி, த் – சந்தி, 'ந்' ஆனது விகாரம், த் – இறந்தகால இடைநிலை, அ – பெயரெச்ச விகுதி.
2. **அழைப்பேன் – அழை + ப் + ப் + ஏன்**
   அழை – பகுதி, ப் – சந்தி, ப் – எதிர்கால இடைநிலை, ஏன் – தன்மை ஒருமை வினைமுற்று விகுதி.
3. **கடந்து – கட + த் (ந்) + த் + உ**
   கட – பகுதி, த் – சந்தி, 'ந்' ஆனது விகாரம், த் – இறந்தகால இடைநிலை, உ – வினையெச்ச விகுதி.
4. **கடப்பேன் – கட + ப் + ப் + ஏன்**
   கட – பகுதி, ப் – சந்தி, ப் – எதிர்கால இடைநிலை, ஏன் – தன்மை ஒருமை வினைமுற்று விகுதி.

## புணர்ச்சி விதிகள்

1. **பறவைகளோடு – பறவைகள் + ஒடு**
   "உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே" (பறவைகளோடு)
2. **சுவரில்லாத – சுவர் + இல்லாத**
   "உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே" (சுவரில்லாத)
3. **சமத்துவப்புனல் – சமத்துவம் + புனல்**
   "மவ்வீறு ஒற்றழிந்து உயிரீறு ஒப்பவும் ஆகும்" (சமத்துவ + புனல்)
   "இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும்" (சமத்துவப்புனல்)

## பலவுள் தெரிக

1. கூவும் குயிலும், கரையும் காகமும் – தொடரில் இடம்பெற்ற மரபு ______.
   அ) பெயர்மரபு ஆ) வினைமரபு இ) ஒலிமரபு ஈ) இவை மூன்றும்
   **விடை :** ஆ) வினைமரபு

## கூடுதல் வினாக்கள்

2. 'சாகுல் அமீது' என்னும் இயற்பெயரை உடையவர் ______.
   அ) குருதேவ் ஆ) மீரான் சாகிப் இ) இன்குலாப் ஈ) அப்துல் வகாப்
   **விடை :** இ) இன்குலாப்
3. இன்குலாபின் கவிதைகள், முழுமையாக ______ என்னும் பெயரில் தொகுக்கப்பட்டுள்ளது.
   அ) உயிர்த்தெழும் காலத்துக்காக ஆ) கனவுகள் + கற்பனைகள் = காகிதங்கள்
   இ) ஒவ்வொரு புல்லையும் பெயர் சொல்லி அழைப்பேன்
   ஈ) நேயர் விருப்பம்
   **விடை :** இ) ஒவ்வொரு புல்லையும் பெயர் சொல்லி அழைப்பேன்
4. மரணத்திற்குப்பின் இன்குலாப் உடலை அவர் விருப்பப்படி ______ அரசு மருத்துவக் கல்லூரிக்கு வழங்கினர்.
   அ) சென்னை ஆ) தஞ்சை இ) மதுரை ஈ) செங்கை
   **விடை :** ஈ) செங்கை

MERCY PUBLICATIONS - CHENNAI

www.Padasalai.Net

# 2. தொலைந்து போனவர்கள்

## (கவிக்கோ அப்துல் ரகுமான்)

### குறுவினா

**1. "கற்றேன் என்பாய் கற்றாயா?" என்று, அப்துல் ரகுமான் யாரிடம் கேட்கிறார்?**

★ நடக்காததை நடந்ததாகக் கருதிக்கொண்டு, மாயையில் சிக்குண்ட மக்களிடம் கேட்கிறார்.

### கூடுதல் வினாக்கள்

**2. எதனை உண்மையான விடியல் எனக் கவிஞர் கூறுகிறார்?**

★ வானம் வெளுப்பது விடியல் அன்று; வாழ்க்கை விடிய வேண்டும்.

★ அதுவே உண்மையான விடியலாகும் என்கிறார் கவிஞர்.

**3. கவிக்கோ அப்துல் ரகுமான் படைப்புகளுள் நான்கினைக் கூறுக.**

★ பால்வீதி, நேயர் விருப்பம், பித்தன், ஆலாபனை.

**4. 'உண்மையான உடை' என்று கவிக்கோ எதனைக் கூறுகிறார்?**

★ உடலை அலங்கரிக்க அணிவது உடையன்று. மனத்தை அலங்கரித்து அழகுபடுத்தும் நல்ல எண்ணமே, உண்மையான உடை எனக் கவிக்கோ கூறுகிறார்.

**5. 'உண்மையான வெற்றி' என்பது எதில் இருப்பதாகக் கவிக்கோ கூறுகிறார்?**

★ வென்று விட்டதாகக் கூறுவது, உண்மையான வெற்றி ஆகாது. உண்மையான வெற்றி என்பது, ஒருவன் மனிதனாக ஆவதில்தான் இருக்கிறது எனக் கவிக்கோ கூறுகிறார்.

**6. பாரசீக ஞான காவியம் எது? அதனை எழுதியவர் யார்?**

★ 'மஸ்னவி' என்பது, உலகப் புகழ்பெற்ற பாரசீக ஞான காவியம்.

★ அதனை இயற்றியவர், 'மௌலானா ரூமி'.

★ இவர், ஆப்கானிஸ்தானில் 1207இல் பிறந்தவர்.

★ தம் காவியத்தில் புல்லாங்குழலை ஆன்மாவாகக் குறியீடு செய்து, கவிதை படைத்துள்ளார்.

### சிறுவினா

**1. அப்துல் ரகுமானின் கவிதையிலிருந்து வினா – விடை வடிவத்திற்கு ஏற்ற அடிகளைத் தருக.**

கற்றேன் என்பாய் கற்றாயா? – வெறும்
காகிதம் தின்பது கல்வியில்லை.
பெற்றேன் என்பாய் எதைப்பெற்றாய்? – வெறும்
பிள்ளைகள் பெறுவது பெறுவதல்ல.

என்பன, வினா – விடை வடிவத்திற்கு ஏற்ற அடிகளாகும்.

### கூடுதல் வினா

**2. கவிக்கோ அப்துல் ரகுமான் குறித்து நீ அறிவன யாவை?**

★ கவிக்கோ அப்துல் ரகுமான், வாணியம்பாடி இஸ்லாமியக் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றியவர். அவர், 'வானம்பாடி'க் கவிஞர்களுள் ஒருவர்.

★ புதுக்கவிதை, வசனகவிதை, மரபுக்கவிதை எனப் பல வடிவங்களில் கவிதைகளைப் படைத்துள்ளார்.

★ பால்வீதி, நேயர் விருப்பம், பித்தன், ஆலாபனை முதலிய நூல்களை எழுதியுள்ளார்.

★ பாரதிதாசன் விருது, தமிழன்னை விருது, சாகித்திய அகாதெமி விருது பெற்றவர்.

### நெடுவினா (கூடுதல்)

**1. எவற்றையெல்லாம் மாயை என்று கவிக்கோ அப்துல் ரகுமான் கருதுகிறார்? மாயையிலிருந்து விடுபட, அவர்கூறும் வழிமுறையை ஆராய்க.**

**கவிக்கோ மாயை எனக் கருதுபவை :**

நாள்தோறும் காலையில் விடிந்துவிட்டது எனக் கூறுவது, எடுத்த செயல் ஒன்று முடிந்துவிட்டதாகச் சொல்வது, சில நூல்களைப் படித்துவிட்டு அனைத்தையும் கற்றுவிட்டதாகக் கூறுவது, பிள்ளைகளைப் பெற்றேன் எனக் கூறுவது, காலம் காலமாய்த் தினமும் குளித்துவிட்டேன் எனச் சொல்லுவது,

www.Padasalai.Net

'இதைக் கொடுக்கின்றேன்' என்று கூறி ஒன்றைக் கொடுப்பது, உடலை அலங்கரிப்பதாகக் கூறி உடைகளை அணிவது, விடை அறிந்துவிட்டேன் எனக் கூறுவது, 'உண்டேன்' எனக் கூறுவது, 'வென்று விட்டேன்' என்று சொல்லுவது ஆகிய எல்லாவற்றையும், கவிக்கோ மாயை என்று கூறுகிறார்.

**மாயையிலிருந்து விடுபடக் கவிக்கோ கூறும் வழிமுறைகள் :**

வாழ்க்கையில் விடிவு ஏற்படுவதுதான் உண்மையான விடியல்.

எந்தச் செயலும் முழுமையாய் முடிந்து விடுவதில்லை; செயலைத் தொடர்வதே நியதி.

வாழ்க்கையைப் படிப்பதுதான் உண்மையான கல்வி.

பெறுவது என்பது ஞானத்தைப் பெற்றதாக இருக்க வேண்டும்.

மனஅழுக்குப் போகுமாறு குளிப்பதே உண்மைக் குளியலாகும்.

கொடுப்பவை எல்லாம் நம்முடையன அல்ல என, நினைவு கொள்ள வேண்டும்.

உள்ளத்தை அலங்கரிக்கும் நல்ல எண்ணமே நல்ல உடையாகும்.

உண்மையான வெற்றி என்பது, ஒருவன் மனிதனாக மாறுவதுதான்.

கேள்வியை ஒளியாக வைத்துக்கொண்டு தொலைந்து போன உன்னைத் தேடு என்று கவிக்கோ அப்துல் ரகுமான், மாயையில் இருந்து விடுபட வழிகாட்டுகிறார்.

## இலக்கணக்குறிப்பு

**கற்றேன், பெற்றேன், குளித்தேன், அளித்தேன், அணிந்தேன், தின்றேன், வென்றேன்** – தன்மை ஒருமை வினைமுற்றுகள்.

**உரைத்தாய், நிற்கின்றாய், என்பாய், பேசுகிறாய்** – முன்னிலை ஒருமை வினைமுற்றுகள்.

**உடை அணிந்தேன், காகிதம் தின்பது, பிள்ளைகள் பெறுவது** – இரண்டாம் வேற்றுமைத்தொகை.

## உறுப்பிலக்கணம்

1. **வென்றேன் – வெல் (ன்) + ற் + ஏன்**
   **வெல்** – பகுதி, 'ல்', 'ன்' ஆனது விகாரம், **ற்** – இறந்தகால இடைநிலை,
   **ஏன்** – தன்மை ஒருமை வினைமுற்று விகுதி.
2. **நிற்கின்றாய் – நில் (ற்) + கின்று + ஆய்**
   **நில்** – பகுதி, ல்', 'ற்' ஆனது விகாரம், **கின்று** – நிகழ்கால இடைநிலை,
   **ஆய்** – முன்னிலை ஒருமை வினைமுற்று விகுதி.
3. **பெற்றேன் – பெறு (பெற்று) + ஏன்**
   **பெறு** – பகுதி, 'பெற்று' என ஒற்று இரட்டித்து இறந்தகாலம் காட்டியது,
   **ஏன்** – தன்மை ஒருமை வினைமுற்று விகுதி.
4. **அணிந்தேன் – அணி + த் (ந்) + த் + ஏன்**
   **அணி** – பகுதி, **த்** – சந்தி, 'ந்' ஆனது விகாரம், **த்** – இறந்தகால இடைநிலை,
   **ஏன்** – தன்மை ஒருமை வினைமுற்று விகுதி.
5. **தோற்கின்றார் – தோல் (ற்) + கின்று + ஆர்**
   **தோல்** – பகுதி, 'ல்', 'ற்' ஆனது விகாரம், **கின்று** – நிகழ்கால இடைநிலை,
   **ஆர்** – படர்க்கைப் பலர்பால் வினைமுற்று விகுதி.

## புணர்ச்சி விதிகள்

1. **கல்வியில்லை – கல்வி + இல்லை**
   "இ ஈ ஐ வழி யவ்வும்" (கல்வி + ய் + இல்லை)
   "உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே" (கல்வியில்லை)
2. **போகவில்லை – போக + இல்லை**
   "ஏனைஉயிர்வழி வவ்வும்"(போக + வ் + இல்லை)
   "உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே" (போகவில்லை)

MERCY PUBLICATIONS - CHENNAI

### பலவுள் தெரிக

1. "கற்றேன் என்பாய் கற்றாயா? – வெறும்
காகிதம் தின்பது கல்வியில்லை" – இவ்வடிகளில் பயின்று வருவது _____.
அ) அடி எதுகை, அடிமோனை ஆ) சீர்மோனை, அடி எதுகை
இ) அடிமோனை, அடி இயைபு ஈ) சீர்மோனை, அடி மோனை
**விடை :** ஈ) சீர்மோனை (கற்றேன், கற்றாயா), அடிமோனை (கற்றேன், காகிதம்)
2. சொற்களை ஒழுங்குப்படுத்திச் சொற்றொடராக்குக.
அ) நான் எழுதுவதோடு இன்று இலக்கிய மேடைகளிலும் இதழ்களில் பேசுகிறேன்.
ஆ) இன்று நான் இதழ்களில் எழுதுவதோடு இலக்கிய மேடைகளிலும் பேசுகிறேன்.
இ) இலக்கிய மேடைகளிலும் இன்று எழுதுவதோடு நான் இதழ்களில் பேசுகிறேன்.
ஈ) இதழ்களில் பேசுகிறேன் நான் இன்று இலக்கிய மேடைகளிலும் எழுதுவதோடு.
விடை : ஆ) இன்று நான் இதழ்களில் எழுதுவதோடு இலக்கிய மேடைகளிலும் பேசுகிறேன்.

### கூடுதல் வினாக்கள்

2. "வென்றேன் என்பர் மனிதரெல்லாம் – பெறும்
வெற்றி யில்தான் தோற்கின்றார்" – இவ்வடிகளில் பயின்று வருவது _____.
அ) அடி எதுகை, அடிமோனை ஆ) சீர்மோனை, அடி எதுகை
இ) அடிமோனை, சீர் எதுகை ஈ) சீர்மோனை, சீர் எதுகை
**விடை :** இ) அடிமோனை (வென்றேன், வெற்றியில்), சீர்எதுகை (வென்றேன், என்பர்)
3. 'உரைத்தாய்' என்பது, ______ வினைமுற்று.
அ) தன்மை ஒருமை ஆ) முன்னிலை ஒருமை
இ) முன்னிலைப் பன்மை ஈ) தன்மைப் பன்மை
**விடை :** ஆ) முன்னிலை ஒருமை
4. 'வானம்பாடி' இயக்கக் கவிஞர்களுள் ஒருவர் ______.
அ) பிரமிள் ஆ) பானுசந்திரன் இ) அப்துல் ரகுமான் ஈ) புதுமைப்பித்தன்
**விடை :** இ) அப்துல் ரகுமான்
5. சாகித்திய அகாதெமி விருது பெற்ற அப்துல் ரகுமானின் கவிதைத் தொகுப்பு ______.
அ) சுட்டுவிரல் ஆ) மஸ்னவி இ) ஆலாபனை ஈ) நட்சத்திரவாசி
**விடை :** இ) ஆலாபனை
6. அப்துல் ரகுமான் பெற்ற விருதுகள் ______.
அ) தமிழன்னை விருது, அண்ணா விருது ஆ) தமிழன்னை விருது, பெரியார் விருது
இ) பாரதிதாசன் விருது, காமராஜர் விருது ஈ) தமிழன்னை விருது, பாரதிதாசன் விருது
**விடை :** ஈ) தமிழன்னை விருது, பாரதிதாசன் விருது

## 3. மனோன்மணீயம்

(பெ. சுந்தரனார்)

### குறுவினா

1. **"ஒழுக்கமும் பொறையும் உனைப்போல் யார்க்குள" – இவ்வடி, எதனைக் குறிப்பிடுகிறது?**
★ எம்மண்ணையும் நன்மண்ணாக்கும் நாங்கூழ்ப் புழுவின் செயல்பாடுகளை, இவ்வடி குறிப்பிடுகிறது.

### சிறுவினா

1. **இயற்கையுடன் உரையாடல் ஒன்றைக் கற்பனையாகப் பத்து வரிகளில் எழுதுக.**
★ எத்தனை வகை விலங்குகள்! எத்தனை வகை பறவைகள்! எத்தனை வகை பூச்சிகள்! அனைத்தையும் சமமாகவே கவனித்து ஆதரவு தருகிறது! ஓரறிவு உயிர்வகையுள் சேர்த்திருந்தாலும், பல்வேறு உயிரினங்களுக்கும் அன்போடு நிழல் தருகிறது!

MERCY PUBLICATIONS - CHENNAI

www.Padasalai.Net

★ உணவாக இலைகளையும் காய்களையும் பழங்களையும் தருகிறது; தாவர வகைகள் பூக்கும் காலத்தில் தேனையும், இனிய மணத்தையும் தருகின்றது! தாவரங்கள் காய்த்துக் கனிந்தபின், பறவைகளும் விலங்கினங்களும் பசித்தபோது உண்ண உதவுகின்றன! தேடி வருபவர் பசி போக்குகின்றன.

★ உலகில் அனைத்து உயிர்களையும் சமமாகக் கருதிப் போற்றும் இயற்கையே! உன் பயன் கருதாக் கொடைப்பண்பை யார் பெறுவார்?

**2. வாய்க்காலின் சிறப்புகளாகக் குறிப்பிடப்படுவன யாவை?**

★ சிறு வாய்க்கால், நமக்கு உணவு நல்கும் வயலுக்கு உபயோகப்படுகிறது; அலை கடலை மலையாகவும், மலையை அலைகடலாகவும் மாற்றிட நடக்கிறது; கூழாங்கற்களை நெறுநெறு என உராய்ந்து நுண் துகளாக்கிச் சிறு மணலாக்குகிறது. மேலும், தன் வலிமைக்குள் அடங்கிய புல், புழு அனைத்தையும் கொண்டுவந்து, காலத்தச்சன் கடலில் கட்டும் மலைக்கு வழங்குகிறது.

★ மலையில் பொழிந்த மழையானபின், அருவியாய் இறங்கி, குகைமுகம் புகுந்து, பூமியின் வெடிப்புகளில் நுழைந்து, பொங்கி எழுந்து, சுனையாய்க் கிடந்து, ஊற்றாய்ப் பரந்து, ஆறாக நடந்து, மடுவாகக் கிடந்து, மதகுகளைச் சாடி, வாய்க்கால் வழி ஓடித் தான் பட்ட பாடுகளைக் கூறி, மேலும் இயன்றதைக் கொண்டுவருவதாக உறுதி கூறுகிறது.

★ நீக்கம் இல்லா அன்பும், ஊக்கமும் உறுதியும் கொண்டு அனுதினமும் உழைக்கிறது என்று, வாய்க்காலின் சிறப்புகள் குறிப்பிடப்பட்டுள்ளன.

**3. "நீக்கமில் அன்பும் ஊக்கமும் உறுதியும்**
**உன்னைப்போல் உளவேல் பினைப்பேறு என்னை?"– யார், யாரிடம், எப்போது கூறியது?**

★ வாய்க்காலின் விசித்திரச் செயலை வியந்து பார்த்துக் கொண்டிருந்த நடராசன், இறுதியாக அந்த வாய்க்காலையும் அதன் செயலையும் பாராட்டும்வகையில், "உன்னைப்போல் தினமும் உழைப்பவர் யார்?

★ நீக்க முடியாத அன்பு, ஊக்கம், உழைப்பில் உறுதி உனக்கு இருப்பதுபோல் பெற்றால், அதற்குமேல் பெறவேண்டிய பேறு வேறு உளதோ?" எனக் கூறினான்.

**4. 'மனோன்மணீயம்' – குறிப்பெழுதுக.**

★ தமிழின் முதல் செய்யுள் வடிவ நாடக நூல் மனோன்மணீயம்.

★ தமிழ்மொழியில் நாடக நூல் இல்லாக் குறைபோக்கப் பெ. சுந்தரனார், ஆங்கிலத்தில் 'லிட்டன் பிரபு' எழுதிய 'இரகசிய வழி' (The Secret Way) என்னும் நூலைத் தழுவித் தமிழில் இயற்றினார்.

★ தமிழ்நாட்டு வரலாறு, பண்பாடு, கதைக்களம் அமைத்து எழுதப்பட்ட இந்த நாடக நூலில், ஐந்து அங்கங்களும் இருபது களங்களும் உள்ளன.

★ நூலின் தொடக்கத்தில் இறை வாழ்த்துடன் தமிழ்த்தாய் வாழ்த்தும் இடம்பெற்றுள்ளது. அத்துடன் 'சிவகாமியின் சரிதம்' என்னும் கிளைக்கதையும் உள்ளது.

**5. பேராசிரியர் சுந்தரனார் குறித்து நீ அறிவன யாவை?**

★ திருவிதாங்கூரின் ஆலப்புழையில், 'மனோன்மணீயம்' சுந்தரனார் 1855இல் பிறந்தார்.

★ திருவனந்தபுரம் அரசுக் கல்லூரியில் தத்துவப் பேராசிரியராகப் பணியாற்றினார்.

★ சென்னைப் பல்கலைக்கழகம் இவருக்கு, 'ராவ்பகதூர்' பட்டம் வழங்கிச் சிறப்பித்துள்ளது. தமிழ்நாடு அரசு, திருநெல்வேலியில் பல்கலைக்கழகம் ஒன்றை, இவர் பெயரில் நிறுவிப் பெருமை சேர்த்துள்ளது.

**6. மனோன்மணீயத்தின் சிறப்புகளை எழுதுக?**

★ மனோன்மணீயம், 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தோன்றியது. மொழிப்பற்று, நாட்டுப்பற்று, வீர உணர்வுகளை ஊட்டக்கூடியது.

★ தமிழன்னையின் நல்லணிகளுள் நாடகத்துறை சார்ந்த நூல்கள் இல்லை என்னும் குறைதீர்க்க உருவானது. நாடக நூலாயினும், காப்பிய இலக்கணத்தை முழுமையாகப் பெற்றுள்ளது.

★ இயற்கையோடு இயைந்து, தோய்ந்து, இணையற்ற இன்ப வாழ்வு நடத்தியவர் தமிழர் என்பதைத் தெளிவு படுத்தும் வகையில் அமைந்துள்ளது. இவை மனோன்மணீயத்தின் தனிச் சிறப்புகளாகும்.

## நெடுவினா

**1. நடராசன் தனிமொழிகளிலிருந்து நீங்கள் அறியும் கருத்துகளை எழுதுக.**

**இலக்கே தூண்டுகோல் :**

தான் ஏற்ற செயலை முடிக்க, அதிகாலையில் ஊர்ப்புறத்தில் தனித்திருக்கும்போது, எச்செயலையும் முடிப்பதற்கு ஓர் இலக்குத் தேவை என்பதை, நடராசன் உணர்கிறான். அது, உயிர்க்குத் தூண்டுகோலாக உள்ளதையும் உணர்த்துகிறான்.

**புல்லின் செயல்பாடு :**

சிறுபுல்லும், பூங்கொத்தை உயர்த்தித் தேனை உணவாக அளித்து, தன் மலரைக் காயாக்குவதனையும், தன் இனம் தழைத்து வளர வேறிடம் செல்லும்வகையில் முள் துரட்டியைக் கொடுத்து, 'நாம் அனைவரும் ஒரே இடத்தில் தழைத்து வாழ முடியாது. ஆகவே வேறிடம் செல்க' என அறிவுரை கூறுவதுபோல் செயல்படுவதையும் சிந்திக்கிறான்.

அத்துடன், அப்புல்லின் ஆற்றல், அன்பு, முயற்சி முதலானவற்றைப் பார்த்துப் பார்த்துக் கண்களில் நீர் கசிய நிற்கிறான். நடராசன் அப்போது கூறும் மொழிகளைக் கேட்கும்போது, நாமும் சிந்திக்க முடிகிறது.

**நடராசன் கண்ட வாய்க்கால் :**

நாம் நீரோடும் வாய்க்காலைச் சாதாரணமாகக் கண்டிருப்போம். நடராசன் காணும் காட்சி வேறாக உள்ளது. வாய்க்கால், மலையைக் கடலாகவும், கடலை மலையாகவும் மாற்றிட நடப்பதாகக் கூறுகிறான். வாய்க்கால், தான் பட்டபாட்டை எல்லாம் காலத்தச்சனிடம் கூறுவதுபோல் காண்கிறான். அப்போதுதான் நமக்கும் அத்தகைய எண்ண ஓட்டம் உருவாகிறது.

வாய்க்கால் ஓடிஓடி நிரந்தரமாக உழைப்பதைக் கண்டு, அதற்கு ஓய்வு கொடுக்கத் தடுப்பதும், சலசலத்தபோது, அழாது செல்லுமாறு கூறி விடுத்து, "உன்னைப்போல் அனுதினமும் உழைப்பவர் யார்? உன்னைப்போல் நீக்க முடியாத அன்பும் ஊக்கமும் உறுதியும் இருக்குமானால், வேறு என்ன பெருமை உண்டாக முடியும்?" எனக் கூறுகிறபோது, நமக்கும் உள்ளத்தில் அந்த உணர்வு தைக்கிறது.

**புழு உணர்த்தும் செய்தி :**

புல்லின் செயலையும், வாய்க்காலின் பெரும்பாட்டையும் கொண்டு அறிவூட்டிய நடராசன், அடுத்து நாங்கூழ்ப் புழுவைக் காண்கிறான். அற்பப்புழு எனக் கருதக்கூடாது என்பதை, அவன் வாய்மொழி நமக்கு உணர்த்துகிறது.

உலகில் உயர்தொழில் செய்யும் உழவர்களின் நண்பனாக நாங்கூழ்ப் புழு செயல்படுவதை விவரிக்கிறான். எம் மண்ணையும் நன் மண்ணாக்கி, எறும்பு, புழு, பூச்சிகள் தரும் தொல்லைகளைப் பொருட்படுத்தாமல், தன் செயலில் கண்ணுங்கருத்துமாக உள்ள நிலையைத் தெளிவுபட விரித்து உரைக்கிறான்.

**நடராசன் தனிமொழி தரும் விளக்கம் :**

தான் செய்யும் பணிக்குப் பாராட்டை எதிர்பார்க்காமல் நாங்கூழ்ப் புழு ஒளிந்து கொள்வதாகக் கூறுவது பாராட்டுக்குரிய செயல். ஆறறிவு படைத்த மனிதன் கற்க வேண்டிய அரிய பாடங்கள் இயற்கையில் பொதிந்து கிடப்பதை, நடராசன் தனிமொழி விளக்குகிறது.

வாழ்நாளில் எவரையும், எதனையும் மதித்து வாழ வேண்டும் என்பதை, இயற்கையின் செயல்பாடுகள் கற்பிப்பதைத் தெளிவாக அறிய, நடராசன் தனிமொழி துணைபுரிகிறது.

## இலக்கணக்குறிப்பு

**கடிநகர், சாலத்தகும்** – உரிச்சொற்றொடர்கள்

**உருட்டி, கடந்து, சிக்கி, கலந்து** – வினையெச்சங்கள்

**பின்னிய, முனைந்த, சென்ற** – பெயரெச்சங்கள்

**இளமுகம், நல்லூண், சிறுபுல், பேரழகு, முந்நீர், நன்மண்** – பண்புத்தொகைகள்

**பூக்குலை** – இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை

**தேன்துளி** – இருபெயரொட்டுப் பண்புத்தொகை

**ஆசிலா, ஓவா** – ஈறு கெட்ட எதிர்மறைப் பெயரெச்சங்கள்

**ஏகுமின்** – ஏவல் பன்மை வினைமுற்று

www.Padasalai.Net

பார்த்துப்பார்த்து, நில்நில், உழுதுழுது – அடுக்குத்தொடர்கள்
வாய்க்கால் (கால்வாய்) – (முன்பின் தொக்க) இலக்கணப்போலி
செய்தொழில், அலைகடல், வீழருவி – வினைத்தொகைகள்
நெறுநெறு – இரட்டைக்கிளவி
மண்கல், புல்புழு, இராப்பகல், மலையலை, குகைமுகம் – உம்மைத்தொகைகள்
காலத்தச்சன் – உருவகம்
ஏகுதி – ஏவல் ஒருமை வினைமுற்று
புழுக்களும் பூச்சியும் – எண்ணும்மை
தங்குதல் – தொழிற்பெயர்
விடுத்தனை – முன்னிலை ஒருமை வினைமுற்று
ஏகுவன் – தன்மை ஒருமை வினைமுற்று

### உறுப்பிலக்கணம்

1. முளைத்த – முளை + த் + த் + அ
   முளை – பகுதி, த் – சந்தி, த் – இறந்தகால இடைநிலை, அ – பெயரெச்ச விகுதி.
2. ஏகுமின் – ஏகு + மின்
   ஏகு – பகுதி, மின் – ஏவல் பன்மை வினைமுற்று விகுதி.
3. விடுத்தனை – விடு + த் + த் + அன் + ஐ
   விடு – பகுதி, த் – சந்தி, த் – இறந்தகால இடைநிலை, அன் – சாரியை,
   ஐ – முன்னிலை ஒருமை வினைமுற்று விகுதி.
4. சென்ற – செல் (ன்) + ற் + அ
   செல் – பகுதி, 'ல்', 'ன்' ஆனது விகாரம், ற் – இறந்தகால இடைநிலை, அ – பெயரெச்ச விகுதி.
5. ஏகுவான் – ஏகு + வ் + ஆன்
   ஏகு – பகுதி, வ் – எதிர்கால இடைநிலை, ஆன் – ஏவல் ஒருமை வினைமுற்று விகுதி.
6. உயர்த்தி – உயர் + த் + த் + இ
   உயர் – பகுதி, த் – சந்தி, த் – இறந்த கால இடைநிலை, இ – வினையெச்ச விகுதி.
7. அழைத்து – அழை + த் + த் + உ
   அழை – பகுதி, த் – சந்தி, த் – இறந்தகால இடைநிலை, உ – வினையெச்ச விகுதி.
8. காண்போர் – காண் + ப் + ஓர்
   காண் – பகுதி, ப் – எதிர்கால இடைநிலை, ஓர் – பலர்பால் வினைமுற்று விகுதி.
9. பார்த்து – பார் + த் + த் + உ
   பார் – பகுதி, த் – சந்தி, த் – இறந்தகால இடைநிலை, உ – வினையெச்ச விகுதி.
10. திளைப்பர் – திளை + ப் + ப் + அர்
    திளை – பகுதி, ப் – சந்தி, ப் – இறந்தகால இடைநிலை, அர் – பலர்பால் வினைமுற்று விகுதி.
11. உருட்டி – உருட்டு + இ
    உருட்டு – பகுதி, இ – வினையெச்ச விகுதி.
12. அடைந்து – அடை + த் (ந்) + த் + உ
    அடை – பகுதி, த் – சந்தி, 'ந்' ஆனது விகாரம், த் – இறந்தகால இடைநிலை,
    உ – வினையெச்ச விகுதி.
13. உழைப்போர் – உழை + ப் + ப் + ஓர்
    உழை – பகுதி, ப் – சந்தி, ப் – எதிர்கால இடைநிலை, ஓர் – பலர்பால் வினைமுற்று விகுதி.
14. ஈர்த்து – ஈர் + த் + த் + உ
    ஈர் – பகுதி, த் – சந்தி, த் – இறந்தகால இடைநிலை, உ – வினையெச்ச விகுதி.
15. எடுத்த – எடு + த் + த் + அ
    எடு – பகுதி, த் – சந்தி, த் – இறந்தகால இடைநிலை, அ – பெயரெச்ச விகுதி.

MERCY PUBLICATIONS - CHENNAI

## புணர்ச்சி விதிகள்

1. **காலத்தச்சன் – காலம் + தச்சன்**
"மவ்வீறு ஒற்று அழிந்து உயிரீறு ஒப்பவும் ஆகும்" (கால + தச்சன்)
"இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும்" (காலத்தச்சன்)
2. **உழுதுழுது – உழுது + உழுது**
"உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்" (உழுத் + உழுது)
"உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே" (உழுதுழுது)
3. **பேரழகு – பெருமை + அழகு**
"ஈறுபோதல்" (பெரு + அழகு), "ஆதிநீடல்" (பேரு + அழகு)
"முற்றும் அற்று" (பேர் + அழகு)
"உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே" (பேரழகு)
4. **நல்லூண் – நன்மை + ஊண்**
"ஈறுபோதல்" (நன் + ஊண்), "முன்நின்ற மெய் திரிதல்" (நல் + ஊண்)
"தனிக்குறில்முன் ஒற்று உயிர்வரின் இரட்டும்" (நல்ல் + ஊண்)
"உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே" (நல்லூண்)
5. **அடியொன்று – அடி + ஒன்று**
"இ ஈ ஐ வழி யவ்வும்" (அடி + ய் + ஒன்று)
"உயிர்வரின்.... உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே" (அடியொன்று)
6. **குதித்தெழுந்து – குதித்து + எழுந்து**
"உயிர்வரின் உக்குறள் மெய்விட் டோடும்" (குதித்த் + எழுந்து)
"உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே" (குதித்தெழுந்து)
7. **மண்ணாயினும் – மண் + ஆயினும்**
"தனிக்குறில் முன்ஒற்று உயிர்வரின் இரட்டும்" (மண் + ண் + ஆயினும்)
"உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே" (மண்ணாயினும்)
8. **தூசிடை – தூசு + இடை**
"உயிர்வரின் உக்குறள் மெய்விட் டோடும்" (தூச் + இடை)
"உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே" (தூசிடை)
9. **மலையலை – மலை + அலை**
"இ ஈ ஐ வழி யவ்வும்" (மலை + ய் + அலை)
"உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே" (மலையலை)

## பலவுள் தெரிக

1. "யாரே உனைப்போல் அனுதினம் உழைப்போர்" – இது எவர் மொழி?
அ) வாய்க்கால் ஆ) நாங்கூழ் இ) நடராசன் ஈ) புல்
**விடை :** இ) நடராசன்
2. தமிழின் முதல் பா வடிவ நாடகநூல் ______.
அ) இரகசிய வழி ஆ) மனோன்மணீயம்
இ) நூல்தொகை விளக்கம் ஈ) திருவிதாங்கூர் அரசர் வரலாறு
**விடை :** ஆ) மனோன்மணீயம்

## கூடுதல் வினாக்கள்

3. காப்பிய இலக்கணம் முழுவதுமாய் நிரம்பிய நாடக நூல் ______.
அ) இரணியன் ஆ) நளதமயந்தி
இ) மணிமேகலை ஈ) மனோன்மணீயம்
**விடை :** ஈ) மனோன்மணீயம்
4. மனோன்மணீயத்திற்கு மூல நூலாக அமைந்தது ______.
அ) இரகசியவழி ஆ) மணிமேகலை இ) இருண்டவீடு ஈ) சிலப்பதிகாரம்
**விடை :** அ) இரகசியவழி

MERCY PUBLICATIONS - CHENNAI

www.Padasalai.Net

7. பேராசிரியர் சுந்தரனார் பிறந்த ஊர் ______.
அ) திருநெல்வேலி ஆ) மார்த்தாண்டம் இ) ஆலப்புழை ஈ) கன்னியாகுமரி
**விடை :** இ) ஆலப்புழை

8. தமிழக அரசின் தமிழ்த்தாய் வாழ்த்து இடம் பெற்றுள்ள நூல் ______.
அ) சிலப்பதிகாரம் ஆ) மனோன்மணீயம்
இ) மணிமேகலை ஈ) பாண்டியன் பரிசு
**விடை :** ஆ) மனோன்மணீயம்

9. சென்னைப் பல்கலைக்கழகம், பேராசிரியர் சுந்தரனாருக்கு வழங்கிய பட்டம் ______.
அ) ராவ்பகதூர் ஆ) திவான் பகதூர் இ) கலைமாமணி ஈ) நாடகச்செம்மல்
**விடை :** அ) ராவ்பகதூர்

10. சுந்தரனார் பெயரில் பல்கலைக்கழகம் அமைந்துள்ள இடம் ______.
அ) திருச்சி ஆ) மதுரை இ) புதுக்கோட்டை ஈ) திருநெல்வேலி
**விடை :** ஈ) திருநெல்வேலி

12. "சிறார் நீர் பிழைப்பதற்கு ஏகுமின்" – யார் கூறியது?
அ) சிறுபுல் ஆ) வாய்க்கால் இ) நடராசன் ஈ) நாங்கூழ்ப் புழு
**விடை :** அ) சிறுபுல்

13. "விழுப்புகழ் வேண்டலை உன்தொழில் நடத்துதி" – யாரிடம் கூறப்பட்டது?
அ) புல்லிடம் ஆ) வாய்க்காலிடம்
இ) நாங்கூழ்ப் புழுவிடம் ஈ) மேகத்திடம்
**விடை :** இ) நாங்கூழ்ப் புழுவிடம்

14. என்பெலாம் கரைக்கும் நல் இன்பம் திளைப்பதற்குக் காரணம் ______.
அ) வாய்க்காலின் செயல் ஆ) புல்லின் பரிவான செயல்
இ) நடராசனின் செயல் ஈ) நாங்கூழ்ப்புழுவின் செயல்
**விடை :** ஆ) புல்லின் பரிவான செயல்

15. விசித்திரமான தொழில் செய்வது ______.
அ) அலைகடல் ஆ) மலை இ) வாய்க்கால் ஈ) புல்
**விடை :** இ) வாய்க்கால்

16. "யாரே உன்னைப்போல் அனுதினம் உழைப்போர்" – அனுதினம் உழைப்பதாகக் குறிப்பிடப்பட்டது ______.
அ) வாய்க்கால் ஆ) நாங்கூழ்ப்புழு இ) புல் ஈ) நடராசன்
**விடை :** அ) வாய்க்கால்

17. மனோன்மணீயத்தில் உள்ள கிளைக்கதை ______.
அ) புல்லின் பரிவு ஆ) வாய்க்காலின் விசித்திரம்
இ) சிவகாமியின் சரிதம் ஈ) நாங்கூழ்ப் புழு செயல்
**விடை :** இ) சிவகாமியின் சரிதம்

18. "தூசிடைச் சிக்கும் தோட்டியும் கொடுத்தே" – இத்தொடரில் 'துறட்டி' என்னும் பொருளுடைய சொல் ______.
அ) தூசு ஆ) சிக்கும் இ) தோட்டி ஈ) கொடுத்து
**விடை :** இ) தோட்டி

19. சரியான விடையைப் பொருத்துக.
அ. வீழருவி – 1. உவமைத்தொகை
ஆ. குகைமுகம் – 2. பண்புத்தொகை
இ. பேரழகு – 3. வினைத்தொகை
ஈ. புல்புழு – 4. எண்ணும்மை
– 5. உம்மைத்தொகை

1. அ – 2, ஆ – 4, இ – 5, ஈ – 3 2. அ – 4, ஆ – 3, இ – 2, ஈ – 1
3. அ – 5, ஆ – 2, இ – 1, ஈ – 4 4. அ – 3, ஆ – 1, இ – 2, ஈ – 5
**விடை :** 4. அ – 3, ஆ – 1, இ – 2, ஈ – 5

MERCY PUBLICATIONS - CHENNAI

## விரிவானம்

## செவ்வி

### (நர்த்தகி நடராஜ்)

### நெடுவினா

**நர்த்தகி நடராஜின் நேர்காணல்வழி அறிந்தவற்றைத் தொகுத்து அளிக்க.**

**வேதனையில் சாதனை :**

**வேதனையில் சாதனை :**

திருநங்கையர்க்கு இருக்கும் தடைக்கற்களைப் படிக்கற்களாக மாற்றிக் காட்டியவர் நர்த்தகி நடராஜ். அமெரிக்காவில் இரண்டு வார நிகழ்ச்சியை எதிர்ப்பார்த்துச் சென்றவர். ஒருநாள் நிகழ்ச்சியாக மாற்றப்பட்டதை அறிந்து வேதனையுற்றார். எனினும், தம் கால் சதங்கை ஒலியை அரங்கில் நிறைத்து, காண்பவரை வியக்கவைத்து, இரு மாதங்கள் தொடர்ந்து தம் ஆற்றலை வெளிப்படுத்திய நிகழ்வே, அவர்தம் ஆற்றலை விளக்கப் போதுமான சான்று.

**நாட்டியத்தில் ஈடுபாடு :**

பெண்மையை உணரத் தொடங்கிய குழந்தைப் பருவத்தில் திரைப்பட நடனங்கள் தன்னை ஈர்த்ததையும், ஆடத் தொடங்கியபின் நாட்டியத்தின் உட்கூறுகளை அறிய முயற்சி செய்தது, ராக தாளத்துடன் நாட்டியத்திற்கான கருத்தை அறிமுகம் செய்து கொண்டது ஆகியவற்றை வெளிப்படுத்தியுள்ளார்.

**நடனத்திற்குக் கரு தேர்வு :**

எதிர்கொள்ளும் பிரச்சனைக்காக மட்டுமன்றி விழிப்புணர்வை ஏற்படுத்தவும், தமிழ் மரபில் தோன்றிய தான் பரதத்தைத் தேர்ந்தெடுத்ததாகவும், தமிழ் இலக்கியங்களில் அதன் இடத்தைத் தெரிந்து, நம் கலையை நாம் ஆடவேண்டும் என்ற உறுதியோடு சங்க இலக்கியம் தொடங்கி நவீன கவிதைவரை தக்கவற்றைத் தம் நடனத்தில் கருவாக எடுத்துக்கொண்டு விழிப்புணர்வை ஆயுதமாகக் கொண்டதாகவும் கூறியுள்ளார்.

**உலகைக் கவரும் பரதம் :**

ஜப்பானின் ஒசாகா நகரில் திருவாசக, தேவாரப் பண்களுக்குத் தாம் நிகழ்த்திய பரத அபிநயங்களைக் கண்டு கண்கலங்கி மௌனத்தோடு கரஒலி எழுப்பியுள்ளதைக் கூறி, பரதத்தை உலகின் எப்பகுதியினரும் முழுமையாக உள்வாங்கிப் புரிந்துகொள்வர் என்பதை விவரித்துள்ளார்.

**நம் பண்பாட்டைத் தேடவைத்தல் :**

நம் பண்பாடு, வாழ்வாங்கு வாழ்ந்த மரபு சார்ந்தது. அதை எப்பண்பாட்டாலும் புறக்கணிக்க முடியாது. நார்வேயில் திருக்குறளை மையப்படுத்தி நிகழ்த்திய நிகழ்ச்சி, அம்மக்களைத் திருக்குறளைத் தேடிக் கற்கத் தூண்டியது, நம் பண்பாட்டுப் புலமை என விளக்கியுள்ளார்.

தமிழ்வழிக் கல்வி பயின்று, வழக்கறிஞராக எண்ணியவர், இன்று மேடையேறிப் பல்வேறு இலக்கிய மேடைகளில் பேசுவதையும், தமிழ் இலக்கியங்களை வாசிப்பதையும், அவை குறித்த ஆய்வு செய்வதையும் பணியாகக் கொண்டுள்ளதைத் தெளிவுபடுத்தினார்.

**சோதனை வென்று சாதனை :**

நடனக் கலைக்கூடம் வாயிலாகப் பலர் தம்மை அம்மா என அழைப்பதை எண்ணிக் கருணையில் நெகிழ்வதை உணர்வதாகக் கூறியுள்ளார். நர்த்தகி நடராஜ், இன்றைய உலகில் பல உயரங்களைத் தொட்டுச் சாதனை படைத்து வருகிறார்.

### திருநங்கையாகப் பிறந்து சாதித்தவர்கள்

**காவல்துறை :**

சேலத்தில் பிறந்த பிரித்திகா யாஷினி, மிகுந்த சிரமங்களுக்கு இடையே 2011ஆம் ஆண்டு 'கணினி' பாடப்பிரிவில் இளநிலைப் பட்டப்படிப்பை முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்றார். பின்னர்க் காவல்துறையில் பயிற்சி பெற்றுத் தற்போது சென்னையில் காவல்துறையில் சட்டம் ஒழுங்குப் பிரிவில் பணியாற்றி வருகிறார். இவருக்கு 'இந்தியாவின் முதல் திருநங்கை காவல் உதவி ஆய்வாளர்' என்னும் பெருமை கிடைத்துள்ளது.

www.Padasalai.Net

**நீதித்துறை :**

ஜோயிதா மோண்டல் மாஹி என்பவர், மேற்கு வங்கத்தைச் சேர்ந்த திருநங்கை. இவர் திருநங்கையரின் முன்னேற்றத்திற்காகப் பல பணிகளை மேற்கொண்டுள்ளார். இவர், வடக்கு தினாஜ்பூர் மாவட்டம் இஸ்லாம்பூரில் 'லோக் அதாலத்' நீதிபதியாக அண்மையில் நியமிக்கப்பட்டார். லோக் அதாலத் நீதிபதி பதவிக்குத் திருநங்கை ஒருவரை நியமித்தது, இந்திய நாட்டில் இதுவே முதன்முறையாகும்.

**சித்த மருத்துவம்:**

தமிழ்நாட்டில் மூன்றாம் பாலினப் பிரிவில் பள்ளிப்படிப்பை முடிக்கும் முதலாமவரான தாரிகாபானு, திருவள்ளூர் மாவட்டம் அம்பத்தூர் காமராஜர் அரசு பெண்கள் மேனிலைப் பள்ளியில், அறிவியல் பாடப்பிரிவில் பயின்றார். 2017ஆம் ஆண்டு பொதுத்தேர்வில் தேர்ச்சி பெற்று, தற்போது அரசு சித்த மருத்துவக் கல்லூரியில் பயின்று வருகிறார். சாதனை புரிவதற்குப் பாலினம் தடையில்லை என்பதை, இவர்கள் திறமையின் செயல்களால் தெளிவுபெற வேண்டும்.

# இனிக்கும் இலக்கணம்

## மெய்ப்புத் திருத்தக் குறியீடுகள்

### நம்மை அளப்போம்

### பலவுள் தெரிக

**1. கீழ்க்காணும் திருத்தற்குறியீடுகளைப் பொருத்திச் சரியான விடை காண்க.**

1. நிறுத்தற்குறிகள் 2. இடைவெளி தரவேண்டியவை
3. இணைக்க வேண்டியவை 4. எழுத்து வடிவம்

அ.  ஆ. ; ? ! :

இ. ic Trs Bold ஈ. / # ⌒

1. 1 – ஆ, 2 – ஈ, 3 – அ, 4 – இ 2. 1 – அ, 2 – இ, 3 – ஈ, 4 – ஆ
3. 1 – ஈ, 2 – அ, 3 – ஆ, 4 – இ 4. 1 – இ, 2 – ஆ, 3 – அ, 4 – ஈ

**விடை :** 1. 1 – ஆ, 2 – ஈ, 3 – அ, 4 – இ

### இலக்கணத் தேர்ச்சி கொள்

**1. திருத்தக் குறியீடுகளின் வகைகளைக் கூறுக?**

நூல்களோ, இதழ்களோ பிழைகளோடு வெளிவந்தால், படிப்பவர் கருத்துகளைத் தவறாக உணர்வர். எனவே, எழுத்துப்பிழை, தொடர்பிழை, மயங்கொலிப்பிழை, ஒருமை பன்மைப்பிழை இல்லாமல் திருத்தமாக அச்சிட வேண்டும். அச்சுப்படி (மெய்ப்பு) திருத்துபவர், இப்பணியைச் செய்வதற்குரிய நெறிமுறைகளை திருத்தக் குறியீடுகளைத் தெளிவாக அறிந்திருத்தல் வேண்டும்.

அச்சுப்படி திருத்துபவர் அறிந்திருக்க வேண்டிய குறியீடுகளை ஐந்து வகைகளாகப் பிரிப்பர்.

i. பொதுவானவை (General)
ii. நிறுத்தக்குறியீடுகள் தொடர்பானவை (Punctuations)
iii. இடைவெளி தரவேண்டியவை (Spacing)
iv. இணைக்க வேண்டியவை (Alignment)
v. எழுத்து வடிவம் (Type / Font) என்பனவாகும்.

**i. பொதுவானவை :**

| குறியீடு | குறியீட்டுப் பொருள் |
|---|---|
| Dt | அச்சடித்திருக்கும் சொல்லையோ எழுத்தையோ நீக்குக. |
| ^ | சொல்லையோ எழுத்தையோ இந்தக் குறிப்பிட்ட இடத்தில் சேர்த்துக் கொள்க. |
| [ | புதிய பத்தி (New Paragraph) தொடங்குக. |

MERCY PUBLICATIONS - CHENNAI

**ii. நிறுத்தக் குறியீடுகள் :**

| குறியீடு | குறியீட்டுப் பொருள் | குறியீடு | குறியீட்டுப் பொருள் |
|---|---|---|---|
| ,/ | கால் புள்ளியைச் சேர்க்கவும் | ?/ | வினாக்குறியை இடவும். |
| ;/ | அரைப் புள்ளியைச் சேர்க்கவும். | !/ | வியப்புக் குறியைச் சேர்க்கவும். |
| ./ | முற்றுப்புள்ளியை இடவும். | :/ | முக்காற்புள்ளியைச் சேர்க்கவும் |

**iii. இடைவெளி தரவேண்டியவை :**

| குறியீடு | குறியீட்டுப் பொருள் |
|---|---|
| ⌣ | சொற்களை அல்லது எழுத்துகளைச் சேர்க்கவும். இடைவெளி விடவேண்டாம் |
| # | பத்திகளுக்கிடையில், வரிகளுக்கிடையில், சொற்களுக்கிடையில் இடைவெளி தருக |

**iv. இணைக்க வேண்டியவை :**

| குறியீடு | குறியீட்டுப் பொருள் | குறியீடு | குறியீட்டுப் பொருள் |
|---|---|---|---|
| ⊐ | இடப்பக்கம் தள்ளவும் | ’ | ஒற்றை மேற்கோள் குறியீடு இடுக |
| ⊏ | வலப்பக்கம் தள்ளவும். | “ | இரட்டை மேற்கோள் குறியீடு இடுக |
| ∽ | பத்திகளை இணைக்கவும் | | |

**v. எழுத்து வடிவம் :**

| குறியீடு | குறியீட்டுப் பொருள் | குறியீடு | குறியீட்டுப் பொருள் |
|---|---|---|---|
| Unbold | வழக்கமான எழுத்தில் மாற்றுக | Trs | சொற்கள், எழுத்துகளை இடம் மாற்றுக |
| Bold | தடித்த எழுத்தில் மாற்றுக | I.C. | எழுத்துருவைச் சிறியதாக ஆக்குக |

| நிறுத்தற் குறியீடுகளின் தமிழ்ப் பெயர்கள் | | | | | |
|---|---|---|---|---|---|
| Apostrophe | ’ | காற்புள்ளி | Dash | & | இடைக்கோடு |
| Semicolon | ; | அரைப்புள்ளி | Bar | / | வெட்டுக்கோடு |
| Colon | : | முக்காற்புள்ளி | Brackets | ( ) | பிறைக்கோடு |
| Colondash | : & | வரலாற்றுக்குறி | Ditto mark | ,, | மேற்படிக்குறி |
| Double Brackets | { } | இரட்டைப் பிறைக்கோடு | Large Brackets | [ ] | பகர அடைப்பு |

**2. ஏற்ற இடங்களில் அச்சுத் திருத்தக் குறியீடுகளைப் பயன்படுத்தும் முறையைக் கீழ்க்காணும் பத்தியின்மூலம் அறிக.**


அறிஞர் வாழ்வில் நகைச்சுவை

கவிஞர் கண்ணதாசன் கல்லூரி ஒன்றில் கவியரங்கத்தில் கலந்துகொண்டு கவிதை யை வாசிக்க ஆரம்பித்தார்ர். அரங்கத்தில் உற்சாக ஆரவாரம் எழுந்தது.அவர் கவிதை வாசிக்கும்போது ஒவ்வொரு வரிக்கும் பலத்த கைதட்டல் எழுந்தது. வாசித்து முடித்தது கரவொலி அடங்க வெகு நேரம் பிடித்தது கைதட்டல்கள் முடிந்ததும், கண்ணதாசன் சொன்னார் ,"இன்று நான் வாசித்த கவிதை நான் எழுதியது அல்ல. உங்கள் கல்லூரி மாணவர் ஒருவர் நேற்று ஒரு கவிதைய எழுத்துக்கொண்டு வந்து என்னிடம் காண்பித்தார் அது மிக நன்றாக இருந்தது. எனவே நான் எழுதியஅ கவிதையை அவரை வாசிக்கசொ சொல்லிவிட்டு அவர் எழுதிய கவிதையை நான் வாசித்தேன். என்கவிதையை அவர் வாசிக்கும்போது எந்தவித ஆரவாரமும் இல்லை. அவர் எழுதிய கவிதையை நான் வாசித்தபோது பலத்த வரவேற்பு. ஆக, சொல்பவன் யார் என்பதைத்தான் உலகம் பார்க்கிறதே ஒழிய சொல்லும் பொருளைப் பற்றிக் கவலைப்படுவதில்லைஎன்பதுதான் உண்மை என்று புரிகிறது".

MFRCV PUBLICATIONS - CHENNAI

www.Padasalai.Net

**விடை :** கவிஞர் கண்ணதாசன், கல்லூரி ஒன்றில் கவியரங்கத்தில் கலந்துகொண்டு கவிதையை வாசிக்க ஆரம்பித்தார். அரங்கத்தில் உற்சாக ஆரவாரம் எழுந்தது. அவர் கவிதை வாசிக்கும்போது, ஒவ்வொரு வரிக்கும் பலத்த கைதட்டல் எழுந்தது. வாசித்து முடித்ததும், கரவொலி அடங்க வெகுநேரம் பிடித்தது. கைதட்டல்கள் முடிந்ததும், கண்ணதாசன் சொன்னார், "இன்று நான் வாசித்த கவிதை, நான் எழுதியது அன்று. உங்கள் கல்லூரி மாணவர் ஒருவர், நேற்று ஒரு கவிதையை எடுத்துக்கொண்டு வந்து, என்னிடம் காண்பித்தார். அது மிக நன்றாக இருந்தது. எனவே, நான் எழுதிய கவிதையை அவரை வாசிக்கச் சொல்லிவிட்டு, அவர் எழுதிய கவிதையை நான் வாசித்தேன். என் கவிதையை அவர் வாசிக்கும்போது, எந்தவித ஆரவாரமும் இல்லை. அவர் எழுதிய கவிதையை நான் வாசித்தபோது, பலத்த வரவேற்பு. ஆக, சொல்பவன் யார் என்பதைத்தான் உலகம் பார்க்கிறதே ஒழியச் சொல்லும் பொருளைப் பற்றிக் கவலைப்படுவதில்லை என்பதுதான் உண்மை என்று புரிகிறது."

**3. அச்சுப்படி திருத்துபவரின் பணிகள் யாவை?**

i. அச்சுப்படியில் ஒவ்வொரு வரியையும் படித்து, மூலப்படியில் உள்ளபடியே செய்திகள் அச்சாகி உள்ளனவா எனக் கவனிக்க வேண்டும்.

ii. செய்தியின் உள்ளடக்கம், புள்ளி விவரங்கள், எண்கள், அட்டவணைகள் முதலியன விடுபட்டுள்ளனவா என்பதை, மூலப்படியுடன் ஒப்பிட்டுக் கவனிக்க வேண்டும்.

iii. அச்சுப்படி திருத்துவோர் செய்தியின் உருவையோ, உள்ளடக்கத்தையோ மாற்றுதல் கூடாது.

iv. பிழை ஏற்பட்ட சொல்லின்மீது திருத்தத்தை எழுதக்கூடாது. வலமாகவே இடமாகவோ ஓரத்தில் எழுதவேண்டும்.

v. ஒரு வரியில் ஒன்றுக்கு மேற்பட்ட பிழைகள் இருந்தால், பிழைகளைக் குறிக்கும் கோடுகளைத் தெளிவாகக் காட்டல் வேண்டும்.

vi. பிழைகள் பல இருந்தால், அதை நீக்கித் தெளிவாக எழுத வேண்டும்.

vii. அச்சுப்படியில் இருக்கும் வண்ணத்திற்கு மாறான வண்ண மையால் திருத்த வேண்டும்.

## மொழியை ஆள்வோம்

### சான்றோர் சித்திரம்

### திரு. வி. கலியாணசுந்தரனார் (1883–1953)

"பொறுமையைப் பூணுங்கள்; பொறுமையின் ஆற்றலை உணருங்கள்; உணர்ந்து உலகை நோக்குங்கள்; நமது நாட்டை நோக்குங்கள்; நமது நாடு நாடாயிருக்கிறதா? தாய்முகம் நோக்குங்கள்; அவள் முகத்தில் அழகு காணோம். அவள் இதயம் துடிக்கிறது. சாதி வேற்றுமை, தீண்டாமை, பெண்ணடிமை, உட்பகை முதலிய நோய்கள் அவளை அரிக்கின்றன; எரிக்கின்றன; இந்நோய்களால் குருதியோட்டங்குன்றிச் சவலையுற்றுக் கிடக்கிறாள். இள ஞாயிற்றொளி நோக்கி நிற்கிறாள். இள ஞாயிறுகளே! உங்கள் தொண்டெனும் ஒளியே அவள் நோய்க்குரிய மருந்து. அவ்வொளி வீசி எழுங்கள்; எழுங்கள்" என்று, இளமை விருந்து நூலில் தமிழினைக் கட்டுக்குள் அடக்காமல் செழுமையுறச் செய்ய இளைஞர்களை அழைத்தவர் திரு.வி.க.

திரு.வி.க. தம் தந்தையிடம் தொடக்கத்தில் கல்வி பயின்றார். வெஸ்லி பள்ளியில் படித்தபோது, நா. கதிரைவேல் என்பவரிடம் தமிழ்ப் படித்தார். பிறகு மயிலை தணிகாசலம் என்பவரிடம் தமிழோடு சைவ நூல்களையும் பயின்றார். தமிழ்த்தென்றல் என்று அழைக்கப்படும் திரு.வி.க., பெண்ணின் பெருமை, முருகன் அல்லது அழகு, மனித வாழ்க்கையும் காந்தியடிகளும், என் கடன் பணி செய்து கிடப்பதே, சைவத்திறவு, இந்தியாவும் விடுதலையும், பொதுமை வேட்டல், திருக்குறள் விரிவுரை முதலிய நூல்களை எழுதினார். சிறந்த மேடைப்பேச்சாளராகவும், எழுத்தாளராகவும் விளங்கிய இவர், தேசபக்தன், நவசக்தி இதழ்களுக்கு ஆசிரியராக விளங்கினார். தமிழ்க் கவிஞர்களில் அரசியல் இயக்கங்களில் அதிகமான ஈடுபாடு கொண்டிருந்தார். தொழிற்சங்கத்தைத் தோற்றுவித்துத் தொழிலாளர்களின் உரிமைக்கும் முன்னேற்றத்திற்கும் பாடுபட்டார். சென்னை இராயப்பேட்டை வெஸ்லி கல்லூரியில் தலைமைத் தமிழாசிரியராக இருந்தார். இலக்கியப் பயிற்சியும் இசைப்பயிற்சியும் பெற்றவர்.

**கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளி:**

1. பொறுமையைப் பூணுங்கள்; பொறுமையின் ஆற்றலை உணருங்கள்; உணர்ந்து, உலகை நோக்குங்கள் – ஒரே தொடராக மாற்றுக.

   பொறுமையைப் பூண்டு, அதன் ஆற்றலை உணர்ந்து உலகை நோக்குங்கள்.

MEGA PUBLICATIONS - CHENNAI

2. எவையேனும் இரண்டு முன்னிலைப் பன்மை வினைமுற்றுச் சொற்களைப் பத்தியிலிருந்து எடுத்து எழுதுக.

நோக்குங்கள், உணருங்கள்.

3. தமிழ்த்தென்றல் என்று திரு.வி.க. அழைக்கப்படுகிறார். – இத்தொடரைச் செய்வினைத் தொடராக மாற்றுக.

திரு.வி.க.வைத் தமிழ்த்தென்றல் என அழைக்கின்றனர்.

4. ஞாயிற்றொளி – புணர்ச்சிவிதி கூறுக.

ஞாயிற்றொளி – ஞாயிறு + ஒளி

"நெடிலோடு உயிர்த்தொடர்க் குற்றுகரங்கள் டறஒற்று இரட்டும்" (ஞாயிற்று + ஒளி)

"உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்" (ஞாயிற்ற் + ஒளி)

"உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே" (ஞாயிற்றொளி)

5. எண்ணும்மைத் தொடர்கள் இரண்டனை எடுத்து எழுதுக.

மனித வாழ்க்கையும் காந்தியடிகளும், இந்தியாவும் விடுதலையும்.

**விடைக்கேற்ற வினா அமைக்க.**

1. தமிழினைக் கட்டுக்குள் அடக்காமல், செழுமையுறச் செய்ய இளைஞர்களை 'இளமைவிருந்து' நூலில் அழைத்தவர் திரு.வி.க.

**வினா :** 'இளமைவிருந்து' நூலில் இளைஞர்களைத் திரு.வி.க. எதற்காக அழைத்தார்?

2. திரு. வி. க. தொழிற்சங்கத்தைத் தோற்றுவித்துத் தொழிலாளர்களின் உரிமைக்கும் முன்னேற்றத்திற்கும் பாடுபட்டார்.

**வினா :** திரு.வி.க., எதைத் தோற்றுவித்து, எதற்காகப் பாடுபட்டார்?

3. சிறந்த மேடைப் பேச்சாளராகவும் எழுத்தாளராகவும் விளங்கிய திரு.வி.க. தேசபக்தன், நவசக்தி இதழ்களுக்கு ஆசிரியராகவும் விளங்கினார்.

**வினா :** திரு.வி.க. எவ்வெவற்றில் சிறந்து விளங்கினார்?

**தமிழாக்கம் தருக.**

1. An eye for an eye only ends up making the whole world blind.

கண்ணுக்குக் கண் எனப் பழிவாங்கும் செயல், முடிவில் உலகம் முழுவதையுமே குருடாக்கிவிடும்.

2. You must be the change you wish to see in the world.

இந்த உலகத்தில் மாற்றத்தைக் காண விரும்பினால், நீ முதலில் மாறவேண்டும்.

3. The week can never forgive. Forgiveness is the attribute of the strong.

வலிமை இல்லாதவன் மறக்கமாட்டான். மறப்பது என்பது வலிமையானவனின் உயர்பண்பு.

4. Nobody can hurt me without my permission.

என் அனுமதி இல்லாமல் என்னை எவரும் வேதனைப்படுத்த முடியாது.

5. You must not lost faith in humanity. Humanity is an ocean, if a few drops of the ocean are dirty, the ocean does not become dirty. - Mahatma Gandhi

மனித இனத்திடம் நீ நம்பிக்கையை இழக்கக்கூடாது. மனித இனம் என்பது பெருங்கடல். அதில் சில துளிகள் அழுக்காக இருந்தால், கடலே அழுக்கடைந்து விடாது.

**கதையைப் படித்துப் பொருளுணர்ந்து, நிகழ்வை உரையாடலாக மாற்றுக. கதையில் காணலாகும் எவையேனும் ஐந்து பிறமொழிச் சொற்களுக்கு உரிய தமிழ்ச்சொற்களை எழுதுக.**

**நிகழ்வை உரையாடலாக மாற்றுதல்.**

(அலுவலகத் தொலைபேசி ஒலிக்கிறது)

**அம்மா** : வணக்கம்.

**செந்தில்** : உடனே நீ அலுவலகத்திற்கு விடுப்புச் சொல்லிவிட்டு, என் அலுவலகம் வா. இன்று ஆயுள்காப்பு விண்ணப்பத்தில் கையெழுத்துப் போடவேண்டும். உன் நிழற்படத்தையும், சஞ்சுவின் நிழற்படத்தையும் எடுத்து வா (தொலைபேசி துண்டிப்பு)

MEPCO PUBLICATIONS - CHENNAI

www.Padasalai.Net

**அம்மா** : (தனக்குள்) அலுவலகத்தில் கணக்குத் தணிக்கை நடக்கிறது. என்ன செய்வது? (மீண்டும் தொலைப்பேசி ஒலிக்கிறது) (தனக்குள்) இது, சஞ்சுவின் பள்ளி அழைப்புப்போல் உள்ளதே! என்னவோ?

**சஞ்சு** : அம்மா, நான் சஞ்சு பேசுகிறேன்.

**அம்மா** : என்னடா, உடம்புக்கு ஏதாவதா? (பதற்றத்தை மறைத்தபடி)

**சஞ்சு** : அதெல்லாம் ஒன்றுமில்லை அம்மா. வகுப்பு ஆசிரியரிடம் சிறப்பு அனுமதி பெற்றுத்தான் பேசுகிறேன். மன்னித்துக்கொள் அம்மா.

**அம்மா** : சஞ்சு, எதற்கு மன்னிப்பு?

**சஞ்சு** : இன்று உங்கள் பிறந்தநாள் ஆயிற்றே! மறந்துவிட்டீர்களா?

**அம்மா** : அடடே. ஆமாம், ஜூலை பத்து இல்லே. எப்படி மறப்பேன்? உன் அப்பாகூட நினைவில் வைத்து வாழ்த்துச் சொல்லவில்லையே!

**சஞ்சு** : (கொஞ்சும் குரலில்) ம்மா...இரவுகூட நினைவு இருந்தது. காலையில் திடீரென மறந்து போனது. மன்னித்துக்கொள்ளுங்கள் அம்மா. உங்களுக்கு மகிழ்ச்சியான பிறந்தநாள்!

(மகிழ்ச்சியில் திக்கித் திணறியபோது) அம்மா, நான் உங்களுக்காக ஒரு சூரியகாந்திப்பூ வரைந்து வைத்துள்ளேன். மாலை வீடு வந்ததும் தருகிறேன். சரியா?

**அம்மா** : ரொம்ப நன்றி செல்லம். ரொம்ப நன்றி! (மனச்சுமை குறைந்து, மகனுடன் நடப்பதுபோல் உணர்தல்)

**ஏழு பிறமொழிச் சொற்கள் – உரிய தமிழ்ச்சொற்கள்**

| | | | |
|---|---|---|---|
| 1. போன் | – தொலைபேசி | 2. லீவ் | – விடுப்பு |
| 3. இன்ஷூரன்ஸ் பேப்பர் | – ஆயுள்காப்பீட்டுப் படிவம் | 4. ஸ்பெஷல் பர்மிஷன் | – சிறப்பு அனுமதி |
| 5. பர்த்டே | – பிறந்தநாள் | 6. ஈவ்னிங் | – மாலை |
| 7. தாங்க்ஸ் | – நன்றி | | |

## உரை எழுதுவோம்

உன் பள்ளியில் திரு. அப்துல்கலாம் அவர்களின் நினைவுதினம் கொண்டாடப்படுகிறது. பள்ளிக்கு அருகில் உள்ள கல்லூரியின் மாணவர்கள் திரட்டிய நிதியைக் கொண்டு, பள்ளியின் உயர்வகுப்பு மாணவர்கள் அனைவருக்கும் திருக்குறள் கையடக்கப் பிரதி ஒன்றும், நில வரைபடப் புத்தகம் ஒன்றும் பரிசளிக்கிறார்கள். அவர்களுக்குப் பள்ளியின் சார்பாக நன்றி கூற, ஒருபக்க அளவில் நன்றியுரை ஒன்றை எழுதுக.

விழா நாயகர் அவர்களே!

விழா நடத்தும் கல்லூரி மாணவச் சகோதரர்களே!

கூடி இருக்கும் மாணவ நண்பர்களே!

இந்த விழாவின் நோக்கம் இன்னது என்பதை நாம் அறிவோம். சாதனை பல படைத்து, சாதாரண குடிமகனும் தன் அருஞ்செயல்களால் இந்திய நாட்டின் தலைமகனாகச் செயல்பட முடியும் என்பதை நிலைநாட்டியவர், மேனாள் குடியரசுத் தலைவர் அப்துல்கலாம் அவர்கள்.

அவர் இன்று நம்மோடு இல்லை. எனினும், அவர் குறிப்பாக மாணவச் சமுதாயத்துடன் கொண்ட தொடர்பையோ, நம்மிடம் செலுத்திய அன்பையோ, நம் முன்னேற்றத்திற்கு அவர் கூறிய அறிவுரைகளையோ நாம் மறந்துவிட முடியாது. அதற்கு வாழும் சான்றாக, நம் அருகிலுள்ள கல்லூரியில் பயிலும் மாணவர்கள், அண்ணன்மார்கள், நமக்கு வழிகாட்டவும், அறிவை வளர்த்துக் கொள்ளவும் திருக்குறள் கையடக்கப் பதிப்பு நூல் ஒன்றையும், நில வரைபடப் புத்தகம் ஒன்றையும் வழங்கி இருக்கிறார்கள். இதற்காக மட்டுமல்ல, நாங்கள் எப்படி வாழ வேண்டும் என்பதைக் கற்பித்ததற்காகவும் என் சார்பாகவும், எங்கள் பள்ளியின் சார்பாகவும், நெறிகாட்டும் தலைமை மற்றும், ஆசிரியர்கள் சார்பாகவும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். வணக்கம்.

– மகாத்மா காந்தி

MERCY PUBLICATIONS - CHENNAI

இலக்கிய நயம் பாராட்டுக

## சங்கத் தமிழ் அனைத்தும் தா

இரண்டாயிரமாண்டு நீளமுள்ள கவிதையை ஈன்ற
மூதாயியை தேடியலைந்த களைப்பில் பறவை
ஒருகாலத்தில் தன் தாகம் தணித்த
மண்பானையைத்தேடி அல்லலுற்றது.
பாடப்புத்தகத்தில் படம்பார்த்துச் சொன்ன
கதைக்குள்ளிருந்து நீரூற்று எதுவும் பீறிடவில்லை
ஐவகை நிலங்களையும் அலகில் கொத்தி
அடைகாக்க இன்னொரு இடமற்றுப் போக......
நீலவண்ணக் கடற்பரப்பில்
அந்தப் பறவை ஒரு முட்டை இட்டது.
அதன் குஞ்சு பொரிப்பில்
ஆயுதமும் புல்லாங்குழல் மறுகையுமாய்
அணங்கொருத்தி உதித்தெழுந்தாள்.
வயல்வெளியெங்கும் சலசலத்துத் திரிந்த
மருதயாழின் ஓசை வழிந்தோட
கால்கள் சுழன்றாடிய விறலி கூத்தின்முன்
பிரபஞ்சமே தன்னைப் புனைந்து கொண்டது.
பாணனின் கோப்பை
இப்போது காலியாயிருந்தது
தன் உடலிலிருந்து கிள்ளிப் பறித்த பூவைக்
குழந்தைக்குத் தந்து வலியில் மூழ்கிய
பச்சைத்தாவரத்தின் கண்களில்
ஒருதுளி ரத்தம் தேங்கியிருந்தது
சங்கக் கவிதையின் எழுத்தொன்றைத்திறந்து
காக்கைப்பாடினி வெளியேவந்தாள்.
ஆறாம்நிலத்தில் துளிர்த்த அறிவியல்தமிழி நீயென
அருகே வந்தவள் முத்தம் தருகையில்
பறவைகள் தொலைந்துபோன பூமியில்
குளிரூட்டப்பட்ட அறைக்குள் உட்கார்ந்து
கணிப்பொறித்திரையில்
என் சின்னமகள்
ஒரு காக்கையை வரைந்து கொண்டிருந்தாள்.

– ஹெச். ஜி. ரசூல்

## சங்கத் தமிழ் அனைத்தும் தா

**ஆசிரியர் குறிப்பு :** இந்தப் புதுக்கவிதையைப் பாடியுள்ளவர் ஹெச். ஜி. ரசூல் ஆவார். இவர் இயற்கை, மொழி, இலக்கியம், தமிழ்ப் பண்பாடு ஆகிய அனைத்தையும் உள்ளடக்கி இதனைப் படைத்துள்ளார்.

**பாடல் பொருள் :** இரண்டாயிரம் ஆண்டுக்கால வாழ்வுடைய நீண்ட நெடிய கவிதையைப் பெற்றெடுத்த முதுமையான தாயைத் தேடிக் களைத்தேன். அது, ஒரு காலத்தில் தன் தாகத்தைத் தணிக்கத் தண்ணீரைத் தேடி அலைந்த காக்கை, மண் பானையைக் கண்டு நீர் பருக அல்லல் உற்றதுபோல் உள்ளது. பாடப் புத்தகத்தில் படங்களைப் பார்த்துச் சொல்லிக் கொடுத்த கதைக்கு உள்ளிருந்து எந்த நீரூற்றும் பீறிட்டு எழவில்லை. குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல் என்னும் ஐந்துவகையான நிலங்களையும் பெயர்த்தெடுத்து, வேறு இடத்தில் வைத்துப் பாதுகாக்க வழி இல்லை.

MERCY PUBLICATIONS - CHENNAI

www.Padasalai.Net

நீலவண்ணக் கடலை ஒட்டிய நிலப்பரப்பில் அந்தப் பறவை முட்டை ஒன்றை இட்டது. அது குஞ்சு பொரித்தபோது, பெண் ஒருத்தி, ஒருகையில் படைக்கருவியும் இன்னொரு கையில் புல்லாங்குழலுமாகத் தோன்றினாள்! வயல்வெளி எங்கும் மருதயாழின் ஓசை சலசலத்து வழிந்து ஓடியது! கால்களைச் சுழற்றி ஆடிய நாட்டிய நங்கை (விறலி)யின் கூத்தின்முன், இந்தப் பிரபஞ்சமே தன்னை அலங்கரித்துக் கொண்டது. பாடலிசைப்பவனின் (பாணனின்) கைக்கோப்பை கள்ளின்றி இப்போது காலியாக உள்ளது. அதோ, தன் உடலிலிருந்து கிள்ளிப் பறித்து எடுத்த பூவைக் குழந்தைக்குக் கொடுத்துவிட்டு, வலியில் மூழ்கித் துன்புறும் பசுமையான தாவரத்தின் கண்களில் இரத்தம் ஒரு துளியாகத் தேங்கி இருப்பதைப் பார்த்தாயா? சங்க இலக்கியக் கவிதையிலிருந்து எழுத்து ஒன்றைத் திறந்துகொண்டு, காக்கைப்பாடினி அம்மை வெளிவந்தாள். என்னைக் கண்டு, “ஆறாம் திணையில் துளிர்த்தெழுந்த அறிவியல் தமிழ், நீ” எனக் கூறியபடி அருகில் வந்து முத்தம் கொடுத்தாள். அப்போது பூமியில் பறவைகள் தொலைந்துபோய் இருந்தன. குளிர் ஊட்டப்பட்ட அறை ஒன்றுக்குள் உட்கார்ந்துகொண்டு, என் சிறிய மகள் கணிப்பொறித் திரையில் ஒரு காக்கையின் படத்தை வரைந்து கொண்டிருந்தாள்.

**மையக்கருத்து :** இயற்கைவழி வாழ்ந்ததை மறந்து, இன்று மக்கள் அறிவியல் சாதனங்களோடு செயல்பட்டுக் கொண்டிருக்கின்றனர். வெளியில் சிட்டுக் குருவிகளையும் காக்கைகளையும் காண முடியவில்லை. வசிக்கும் அறை குளிரூட்டப்பட்டிருக்கிறது. வாழ்வுமுறைகள் அனைத்தும் மாறி இருக்கின்றன. பண்டைய இயற்கை வாழ்வை இலக்கியங்களில் இருந்துதான் காணமுடிகிறது. அவற்றையாவது காப்போம். தாகம் தீர்க்க முயல்வோம் என்பதே மையப்பொருளாகும்.

## மொழியோடு விளையாடு

### எண்ணங்களை எழுத்தாக்குக



ஆறறிவு படைத்த மனிதஇனம் நீ
ஐயறிவு படைத்த விலங்கினம் நான்
நான் தோன்றிய காலம்முதல் இப்படியே வாழ்கிறேன்
நீ குளிரில் கம்பளிக் கோட்டும் குல்லாயும் அணிந்துள்ளாய்
உன் அறிவும் செயலும் இயற்கையை மாற்றிவிட்டது
நான் இன்றும் இயற்கையோடு பொருந்தியே வாழ்கிறேன்.
என்ன அறிவு இருந்து என்ன பயன்?
இயற்கைவழி வாழ்வே நல்வாழ்வு என்று தெளிவுகொள்!
நாய்தானே சொன்னது என்று நக்கல் செய்யாதே!
மெய்ப்பொருள் காண்பதே அறிவு என்றார் ஐயன் வள்ளுவர்!

### குறுக்கெழுத்துப் புதிர்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 பொ | ரு | ண் | மொ | ழி | க் | 2 கா | ஞ் | 3 சி | 4 ப |
| 5 த | | ர் | ம் | ன | ச | ஞ் | 6 அ | த் | ஞ் |
| னி | | வூ | | ள் | | ச | ணி | தி | ச |
| ம | | த | ழை | மி | | னை | மா | ரா | மு |
| க | | வா | 7 பி | ர | ச | ம் | ய் | வ | கி |
| னா | | ரு | யா | 8 பி | ல் | ட | 9 வே | ளி | |
| ர் | | 10 தி | 11 கா | க் | த | 12 சீ | | 13 க | |
| 14 கு | | 15 வி | ட் | 16 ம | ன் | ற | ம் | ன் | ரை |
| யி | | | | 17 எ | ழு | த் | து | ன | 18 வ |
| ல் | 19 தி | ரு | வா | ச | க | ம் | ன | ன் | 20 அ |

MERCY PUBLICATIONS - CHENNAI

**இடமிருந்து வலம் :**

1. மக்களுக்கு நலம் செய்யும் வாழ்வியல் நெறிகளைக் கூறும் துறை (9) – பொருண்மொழிக் காஞ்சி
7. தேன் – மற்றொரு சொல் (4) – பிரசம்
15. புல்லின் இதழ்கள் – நூலாசிரியர் (4) – விட்மன்
16. கற்ற வித்தைகளை அரங்கேற்றும் இடம் (4) – மன்றம்
17. சி.சு.செல்லப்பா நடத்திய இதழ் (4) – எழுத்து
19. ஜி.யு.போப், ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த பக்தி இலக்கியம் (6) – திருவாசகம்

**வலமிருந்து இடம் :**

6. யானை – வேறொரு சொல் (5) – அஞ்சனம்
9. வந்தவாசிக்கு அருகில் சமணப்பள்ளி இருந்த ஊர் (3) – வேடல்
12. உமறுப்புலவரை ஆதரித்தவர் (5) – சீதக்காதி
20. கவிஞர் மீரா நடத்திய பதிப்பகம் (4) – அன்னம்

**மேலிந்து கீழ் :**

2. புதுமைப்பித்தனின் புகழ்பெற்ற சிறுகதை (4) – காஞ்சனை
3. பாரதி நடத்த விரும்பிய கருத்துப்பட இதழ் (6) – சித்திராவளி
4. இளையராஜா உருவாக்கிய இராகம் (5) – பஞ்சமுகி
5. நற்றிணை 153ஆவது பாடலை இயற்றியவர் (6) – தனிமகனார்
6. அணுவைப்போலச் சிறுத்து நிற்கும் ஆற்றல் (3) – அணிமா
12. இந்தச் சொல்லின் திரிபே சீறா (3) – சீறத்
13. மகாபாரதத்தில் கொடைவீரன் (4) – கர்ணன் (கன்னன்)
14. பாரதிதாசன் நடத்திய இதழ் (3) – குயில்

**கீழிருந்து மேல் :**

7. தவறு – வேறொரு சொல் (2) – பிழை
8. தருமு சிவராம் என்னும் புனைபெயரிலும் எழுதியவர் (4) – பிரமிள்
9. மூங்கில் – மற்றொரு சொல் (2) – வேய்
10. மாணிக்கவாசகர் பிறந்த ஊர் (6) – திருவாதவூர்
11. ஐங்குறுநூறு பாடும் மலர்களில் ஒன்று (2) – காயா
18. மலை என்றும் சொல்லலாம் (2) – வரை (கிரி)
19. பத்தாம் திருமுறை (7) – திருமந்திரம்

## நிற்க அதற்குத் தக

**மனித இனம் கூடிவாழும் இயல்புடையது. நாம் அன்றாடம் பலருடன் பழகக்கூடிய இன்றைய சூழலில் ஏற்படக்கூடிய சிறிய சிக்கல்களை எவ்வாறு எதிர்கொள்வீர்கள்?**

| சிக்கல் | தீர்வு |
|---|---|
| பக்கத்து வீட்டுக்காரர், மிகச் சத்தமாகப் பாடல் கேட்டுக் கொண்டிருக்கின்றார். | கனிவோடு பேசி ஒலியைக் குறைக்க வேண்டலாம். |
| நீங்கள் மட்டைப்பந்துப் போட்டியைப் பார்க்க வேண்டும் என்று விரும்பும் நேரத்தில், உங்கள் தங்கை தொலைக்காட்சித் தொடர் ஒன்றைப் பார்த்துக் கொண்டிருக்கிறார் | தங்கைக்குத் தொல்லை கொடுக்காமல் விளம்பர இடைவெளியில் போட்டியைக் காணலாம். |
| உங்கள் அருகில் அமர்ந்திருக்கும் உங்கள் வகுப்புத் தோழர், உங்கள் மேசைமீது உணவினை இறைத்தபடி சாப்பிட்டுக் கொண்டிருக்கிறார். | அடுத்தவர் இடத்தை அசுத்தம் செய்வது தவறு எனச் சுட்டிக்காட்டித் திருத்தலாம். |
| நீங்கள் அடுத்த நாள் தேர்வுக்காகப் படித்துக் கொண்டிருக்கும் போது, உங்கள் வகுப்புத் தோழர், பாடத்தில் ஏற்பட்ட ஐயத்திற்காக உங்களுக்குத் தொலைபேசியில் அழைப்பு விடுக்கிறார். | நண்பனாயிற்றே; முடிந்தவரை உதவுவதோடு, நிலைமையைப் புரிய வைக்க வேண்டும். |

MERCY PUBLICATIONS - CHENNAI

www.Padasalai.Net

## கலைச்சொல் அறிவோம்

| | | | |
|---|---|---|---|
| நாங்கூழ்ப் புழு | – Earthworm | உலகமயமாக்கல் | – Globalisation |
| முனைவர் பட்டம் | – Doctor of Philosophy (Ph.D) | விழிப்புணர்வு | – Awareness |
| கடவுச்சீட்டு | – Passport | பொருள்முதல் வாதம் | – Materialism |

## உள்நிலைத் தேர்வு

நேரம் : 40 நிமிடங்கள் மதிப்பெண் : 30

**I. பலவுள் தெரிக.** 8 × 1 = 8

1. பூஜை, விஷயம், உபயோகம் – என்பவை முறையே ______ என்று தமிழில் வழங்கப்படும்.
   அ) வழிபாடு, செய்தி, பயன்பாடு ஆ) பயன்பாடு, வழிபாடு, செய்தி
   இ) வழிபாடு, பயன்பாடு, செய்தி ஈ) வழிபாடு, பயன்பாடு, செய்தி
2. கூவும் குயிலும், கரையும் காகமும் – தொடரில் இடம்பெற்ற மரபு ______.
   அ) பெயர்மரபு ஆ) வினைமரபு இ) ஒலிமரபு ஈ) இவை மூன்றும்
3. தமிழின் முதல் பா வடிவ நாடகநூல் ______.
   அ) இரகசிய வழி ஆ) மனோன்மணீயம்
   இ) நூல்தொகை விளக்கம் ஈ) திருவிதாங்கூர் அரசர் வரலாறு
4. ‘உரைத்தாய்’ என்பது ______ வினைமுற்று.
   அ) தன்மை ஒருமை ஆ) முன்னிலை ஒருமை
   இ) முன்னிலைப் பன்மை ஈ) தன்மைப் பன்மை
5. “யாரே உனைப்போல் அனுதினம் உழைப்போர்” – இது எவர் மொழி?
   அ) வாய்க்கால் ஆ) நாங்கூழ் இ) நடராசன் ஈ) புல்
6. காப்பிய இலக்கணம் முழுவதுமாய் நிரம்பிய நாடக நூல் ______.
   அ) இரணியன் ஆ) நளதமயந்தி
   இ) மணிமேகலை ஈ) மனோன்மணீயம்
7. சாகித்திய அகாதெமி விருது பெற்ற அப்துல் ரகுமானின் கவிதைத் தொகுப்பு ______.
   அ) சுட்டுவிரல் ஆ) மஸ்னவி இ) ஆலாபனை ஈ) நட்சத்திரவாசி
8. நர்த்தகி நடராஜின் தோழி ______.
   அ) தாரிகா ஆ) பிரித்திகா இ) ஜோயிதா ஈ) சக்தி

**II. எவையேனும் நான்கனுக்கு விடை தருக.** 4 × 2 = 8

9. “ஒழுக்கமும் பொறையும் உனைப்போல் யார்க்குள” – இவ்வடி, எதனைக் குறிப்பிடுகிறது?
10. “கற்றேன் என்பாய் கற்றாயா?” என்று, அப்துல் ரகுமான் யாரிடம் கேட்கிறார்?
11. “நீளும் கைகளில் தோழமை தொடரும்
    நீளாத கைகளிலும் நெஞ்சம் படரும்” – தொடைநயங்களை எடுத்தெழுதுக.
12. நாட்டுப்புறத்திலும் பட்டணத்திலும் சிறந்து விளங்குவதாகத் தாகூர் எவற்றைக் கூறுகிறார்?
13. தமிழினைக் கட்டுக்குள் அடக்காமல், செழுமையுறச் செய்ய இளைஞர்களை ‘இளமைவிருந்து’ நூலில் அழைத்தவர் திரு.வி.க. – விடைக்கேற்ற வினா அமைக்க.

**III. எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** 2 × 4 = 8

14. ‘தாமஸிகம்’ என்றால் என்ன?
15. இன்குலாப், “உலகுக்கு வேண்டும் நானும் ஓர் துளியாய்” எனக் கூறுவதன் நயத்தை விளக்குக.
16. ‘உடைஅணிந்தேன்’ எனத் தொடங்கும் தொலைந்து போனவர்கள் பாடலை அடிமாறாமல் எழுதுக.
17. இயற்கையுடன் உரையாடல் ஒன்றைக் கற்பனையாகப் பத்து வரிகளில் எழுதுக.

**IV. பின்வரும் வினாக்களில் ஏதேனும் ஒன்றனுக்கு விரிவான விடை தருக.** 1 × 6 = 6

18. நடராசன் தனிமொழிகளிலிருந்து நீங்கள் அறியும் கருத்துகளை எழுதுக.
19. ‘சிதறிய கடிதங்கள்’ உணர்த்தும் கருத்துகளைச் சிதறாது விளக்குக.
20. எவற்றையெல்லாம் மாயை என்று கவிக்கோ அப்துல் ரகுமான் கருதுகிறார்? மாயையிலிருந்து விடுபட, அவர்கூறும் வழிமுறையை ஆராய்க.

MERCY PUBLICATIONS CHENNAI

## கூடுதல் வினாக்கள்

### தமிழாக்கம் தருக

1. Indian people, always dislike violence.
இந்திய மக்கள், வன்முறையை எப்போதும் விரும்பமாட்டார்கள்.
2. Rain water harvest is a must to improve ground water level.
நிலத்தடி நீர்மட்டத்தை உயர்த்துவதற்கு, மழைநீர்ச் சேமிப்பு, இன்றியமையாததாகும்.
3. By hard work, Japan has become number one in Industry.
கடின உழைப்பால் ஜப்பானியர்கள், தொழில்துறையில் முதலிடத்தை வகிக்கின்றனர்.
4. Libraries serve as a means of spreading education among people.
கல்வியைப் பொதுமக்களிடம் பரப்புவதற்கு, நூலகம் ஒரு சாதனமாகப் பயன்படுகிறது.
5. Education should develop and promote good values.
கல்வி, நல்ல விழுமங்களை (பண்புகளை) வளர்த்து, உயர்த்த வேண்டும்.
6. An ideal teacher is a friend, philosoper and guide of the students.
நல்லாசிரியர்கள் எல்லாரும் மாணவர்களுக்கு நண்பர்களாகவும், அறிவுறுத்துபவர்களாகவும், வழிகாட்டிகளாகவும் இருப்பர்.
7. Everybody thinks alike.
ஒவ்வொருவரும் ஒன்றுபோல் சிந்திக்க வேண்டும்.
8. Ask not what your country has done for you. Ask what you have done for your country.
உனக்கு நாடு என்ன செய்தது என்று கேட்காதே! நீ நாட்டுக்கு என்ன செய்தாய் எனக் கேள்.
9. Many thanks for your kind messages of greetings.
நல்வாழ்த்துச் செய்திக்காக உனக்கு நன்றி பல.
10. Television is one of the modern wonders electronics.
தொலைக்காட்சி என்பது, மின்னியல் துறையின் புத்தம் புதிய அதிசயம்.
11. "Villages are the back bone of our country" said Gandhiji.
காந்தியடிகள், ''நம் நாட்டின் முதுகெலும்பாக விளங்குபவை கிராமங்களே'' என்று கூறினார்.
12. Hard work and self - confidence are the main sources for our success.
கடின உழைப்பும் தன்னம்பிக்கையும் நம் வெற்றிக்கு அடிப்படை.
13. Shaking hands is a symbol of Friendship.
கைகளை இணைத்துக் குலுக்குதல் என்பது நட்பின் அடையாளம்.
14. Madurai is known as city of temples.
'கோயில் நகரம்' என்று அறியப்படுவது மதுரை.
15. United we stand, divided we fall.
ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு; ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வே.

### பழமொழியை வாழ்க்கை நிகழ்வோடு பொருத்தி எழுதுதல்

**1. சுடர் விளக்கானாலும் தூண்டுகோல் வேண்டும்.**

முகிலன் பிறந்த குடும்பம், வறுமையில் வாடியது. படிக்கவேண்டும் என்பதில், அவன் ஆர்வமாக இருந்தான். குடும்பச் சூழல், ஆர்வத்திற்குத் தடை விதித்தது. அவனுடைய ஆர்வத்தைக் கண்டு, ஆசிரியர் ஒருவர் ஊக்கப்படுத்தினார். காலையில் சில வீடுகளுக்குச் செய்தித்தாள் போடுதல், பால் வாங்கிக் கொடுத்தல் போன்ற செயல்களைச் செய்து, சிறிதளவு பணம் சம்பாதிக்க வழிசெய்தார். பிறரிடம் கை ஏந்தாமல் உழைத்துப் பொருள்தேடி வாழ, வழிசெய்தார். நன்றாகப் படிப்பதற்கும் வழிகாட்டினார். முகிலன், விடா முயற்சியுடன் செயல்பட்டான். படித்து நல்ல மதிப்பெண் பெற்று, உயர்வடைந்தான். **சுடர் விளக்கானாலும் தூண்டுகோல் வேண்டும்** என்பது, முகிலன் வாழ்வில் உண்மையாயிற்று.

MEGA PUBLICATIONS - CHENNAI

www.Padasalai.Net

**2. கூடிவாழ்ந்தால் கோடி நன்மை.**

முருகனும், முனியனும் எதிர்எதிர் வீடுகளில் வாழ்ந்தனர். முருகன், எதிலும் போட்டி போட்டுச் செயல்படுவான். முனியன், நூறு கோழிகளை வளர்த்து, சிறுபண்ணை நடத்தினான். முருகன், ஆயிரம் கோழிகளை வாங்கிவைத்து, பெரிய பண்ணை நடத்தினான். முருகன் பண்ணையில் பல கோழிகள் இறந்தன. முனியனின் பண்ணையில், இழப்பு ஏதும் இல்லை. முருகனுக்கு ஏற்பட்ட இழப்புக்கு வருந்திய முனியன், பயனை எதிர்பார்க்காமல், முருகனுக்கு உதவி செய்தான். முனியனை வெறுத்துவந்த செயலுக்கு முருகன் வருந்தினான். தன் இயல்பை மாற்றிக்கொண்டு,முனியனின் அறிவுரைகளை ஏற்றுச் செயல்பட்டான். அதனால் பேரிழப்பிலிருந்து மீண்டான். **கூடிவாழ்ந்தால் கோடிநன்மை** என்னும் உண்மையை உணர்ந்தான்.

**3. யானைக்கும் அடி சறுக்கும்.**

தமிழ்நாட்டில் வாழ்ந்த பெரும்புலமை பெற்றிருந்த ஔவையார், பலவேறு மன்னர்களைப் பாடிப் போற்றினார்; ஈயாத செல்வர் சிலரின் செருக்கழித்தார். ஒருமுறை குற்றுக்காடு வழியாக நடந்து சென்றபோது, வழியில் ஒரு நாவல் மரத்தில், பசியால் பழம் பறித்துத் தின்று கொண்டிருந்தவனிடம், நாவல்பழம் தரும்படி கேட்டார். சிறுவன், ''பாட்டி, சுட்ட பழம் வேண்டுமா? சுடாத பழம் வேண்டுமா?'' என்று கேட்டான். ஔவையார், சுடாத பழம் தரும்படி கூறினார். சிறுவன் கிளையைப் பிடித்து ஆட்டினான். பழங்கள் கீழே விழுந்தன. ஔவையார், அவற்றுள் கனிந்த பழம் ஒன்றை எடுத்து, அதில் படிந்திருந்த மண்ணை ஊதினார். சிறுவன், ''என்ன பாட்டி? பழம் சுடுகிறதா?'' என்று கேட்டான். ஔவையார் திகைத்தார்; **"யானைக்கும் அடி சறுக்கும்"** என்பதை உணர்ந்தார்.

**4. காக்கைக்கும் தன்குஞ்சு பொன்குஞ்சு.**

கைவண்டி இழுக்கும் கடினமான உழைப்பை மேற்கொண்டு வாழ்ந்த குப்பனும் காளியும், நடைபாதை ஓரம் குடும்பம் நடத்தினர். அவர்களுக்குப் பிறந்த குழந்தை, கறுப்பாகவும் கால் ஊனத்துடனும் இருந்தது. அந்தக் குழந்தையைப் பார்த்தவர்கள், அருவருப்புடன் முகம் சுளித்துக்கொண்டு நடந்தனர். ஆனால், குப்பனும் காளியும் அந்தக் குழந்தையைக் கொஞ்சிக் குலாவி, அன்புடன் பாலூட்டி வளர்த்தனர். அவர்கள் இருந்த நடைபாதை வழியாக வந்த இருவரில் ஒருவர், குழந்தையைக் கண்டு, வெறுப்புடன் முணுமுணுத்தபடி நடந்தார். அடுத்தவர், முணுமுணுத்தவரின் செயல் தவறு என்பதைச் சுட்டிக்காட்டி, ''**காக்கைக்கும் தன்குஞ்சு பொன்குஞ்சு**'' என்பதை மறந்து விடாதே' என்று, அறிவுரை கூறினார்.

**5. ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?**

விவசாயி கந்தப்பனுக்கு நிலங்கள் இருந்தன. இரண்டு பெண்களுக்குப்பின், ஆண்குழந்தை பிறந்தது. 'அழகன்' எனப் பெயரிட்டு வளர்த்தார்; பள்ளிக்கூடத்தில் சேர்த்தார். படிக்கும்போது ஆசிரியர் கண்டித்ததால் பள்ளி செல்ல மறுத்தான். பெற்றோர், அவன் போக்கில் விட்டுவிட்டனர். அவன் தமக்கையர் இருவரும், திருமணமாகி வெளியூர் சென்றுவிட்டனர்; கந்தப்பனும் நோயுற்றார். அழகன் விவசாயம் செய்யத் தெரியாமல் துன்புற்றான். அவனைப் பார்த்தோர், **"ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?"** எனப் பேசிக்கொண்டனர்.

**6. தன்கையே தனக்குதவி**

தந்தை விட்டுச்சென்ற ஆட்டோ ஒன்றுதான் வேலனுடைய சொத்து. அதை வாடகைக்கு விட்டு வாழ்ந்து வந்தான். அவனுடைய பள்ளித்தோழன் குமரன் ஒருநாள் சந்தித்தான். குமரனும் ஆட்டோ ஓட்டுபவன்தான். தன் துன்பங்களை வேலன், நண்பனிடம் கூறி வருந்தினான். "வேலா! உன் ஆட்டோவைப் பழுதுபார்க்க ஓட்டுநர் முந்நூறு ரூபாய்தானே வாங்கினார்?" எனக் கேட்டான் குமரன். "இல்லை! ஐந்நூறு ரூபாய் வாங்கினாரே'' என்றான் வேலன். ''நானும் இப்படித்தான் ஏமாந்திருக்கிறேன். நீ இப்படியே அடுத்தவரை நம்பி வாழ்ந்தால், இறுதியில் ஆட்டோவையே விற்கவேண்டியதாகிவிடும். நீ முயன்றால் விரைவில் ஆட்டோ ஓட்டப் பழகி ஓட்டுநர் உரிமமும் பெற்றுவிடலாம். **"தன்கையே தனக்குதவி"** என்பதை எக்காலத்தும் மறவாதே'' என்றான் குமரன்.

**7. நுணலும் தன் வாயால் கெடும்.**

மிகவும் வசதியாக வாழ்ந்தவர் பரந்தாமன். அவர் மகன் எல்லப்பன். ஊரில், தன்னை அறிவாளியாகக் காட்டிக் கொண்டவன். வலிந்து சென்று பிறருக்கும் அறிவுரை கூறினான். ஊர்மக்கள் அவனை, 'எல்லாம் தெரிந்த எல்லப்பன்' என அழைத்தனர். பேராசிரியர் ஒருவர், எல்லப்பன் வீட்டுக்குச் சென்றார். அவர் பேராசிரியர் என்பதை அறியாத எல்லப்பன் வழக்கம்போலத் தன் பெருமைகளை அளவின்றிக் கூறித் தன் முதுகைத் தானே தட்டிக் கொடுத்துக் கொண்டான். அவன் கோமாளித்தனத்தை உணர்ந்த பேராசிரியர், அவனுடன் தமிழ், ஆங்கிலம், பொருளாதாரம், அறிவியல் ஆகியவை குறித்துக் கலந்துரையாடினார். தன் சாயம் வெளுத்துவிட்டதை அறிந்த எல்லப்பன், ''ஐயா! **"நுணலும் தன் வாயால் கெடும்"** என்பார்கள்! என்னை மன்னித்து விடுங்கள்'' என்று வேண்டிக் கொண்டான்.

### 8. சிறுதுளி பெருவெள்ளம்

முருகனும் குமரனும் நண்பர்கள். ‘அவசரச் செலவுக்கும் எதிர்காலச் செலவுக்கும்’ எனத் தன் வருவாயில் ஒரு பகுதியை முருகன் சேமித்து வந்தான். ஆனால், குமரனோ சேமிப்பின் பயனை யுணராமல் தன் வருமானம் முழுவதையும் செலவு செய்தான். குமரன் மகன் உடல்நலக் குறைவால் படுத்துவிட்டான். தன் மகனின் மருத்துவச் செலவுக்குப் பணமின்றிக் குமரன் தவித்தான். நண்பன் முருகனிடன் சென்று தன் இயலாமையைக் கூறி வருந்தினான். ‘‘குடும்பம் என்றால் இப்படி எதிர்பாராச் செலவுகள் வரத்தான் செய்யும். உன் மகன் மருத்துவச் செலவுக்கு நான் பணம் தருகிறேன். இனிமேலாவது, ‘**சிறுதுளி பெருவெள்ளம்**’ என்பதை உணர்ந்து, சிறுகசிறுகச் சேமிக்கத் தொடங்கு’’ என்றான் முருகன்.

### 9. தான் ஆடாவிட்டாலும், தன் தசை ஆடும்

நல்லப்பர், செல்வமும் செல்வாக்கும் உடையவர். அவருக்குக் குமரேசன், கதிரேசன் என மகன்கள் இருவர் இருந்தனர். குமரேசன், ‘தந்தை சொல்மிக்க மந்திரமில்லை’ என வாழ்ந்தான். கதிரேசனோ ‘மனைவி சொல்லே மந்திரம்’ என்று தனியாக வாழ்ந்தான். கதிரேசனுக்குக் கடன் கொடுத்தவன், அடியாட்களின் உதவியுடன், கதிரேசனைத் தெருக்கம்பத்தில் கட்டிப் போட்டான். நல்லப்பர் ஓடோடி வந்து, ‘‘ஐயா! என் மகன் கடன் தொகையை நான் கொடுத்து விடுகிறேன். அவனை விட்டுவிடுங்கள்’’ என்றார். அவர்களும் கதிரேசனை அவிழ்த்து விட்டனர். அங்கிருந்தவர்கள், நல்லப்பரின் செயலைக்கண்டு, **“தான் ஆடாவிட்டாலும் தன் தசை ஆடும்”** என்று பேசிக்கொண்டனர்.

### 10. வாய்மையே வெல்லும்

ஆனந்தன், தன் நண்பர்களோடு சேர்ந்து, அன்பரசரை மரத்தில் கட்டிவைத்துத் துன்புறுத்தினான். அப்போது தெய்வநாயகம் வந்தார்; விரைந்து சென்று, ‘‘தம்பிகளா! இவரை ஏன் இவ்வாறு துன்புறுத்துகிறீர்கள்?’’ என்றார். “நாங்கள் பள்ளிக்குச் செல்லாமல் விளையாடியதை எங்கள் பெற்றோரிடம் கூறிவிட்டார். அவர்கள் எங்களைக் கடுமையாகத் தண்டித்தனர்’’. ‘‘தம்பிகளா! ‘வாய்மை’ என்றால் என்ன? அறநெறியிலிருந்து பிறழாமல், எவ்வுயிர்க்கும் எவ்விதத் தீங்கும் ஏற்படாமல் நன்மை ஏற்படுமாறு பேசுவதுதானே? இதைத்தானே தமிழ்மறை கூறுகிறது. உங்களை நல்வழிப்படுத்தி, உங்கள் வாழ்க்கைக்கு ஒளியேற்ற நினைத்த இவரை வணங்குவதற்குப் பதிலாகத் தண்டிக்கலாமா? உடனே இவரை அவிழ்த்துவிட்டு மன்னிப்புக் கேளுங்கள்’’ என்றார். தவற்றை உணர்ந்து அவர்களும் திருந்தினார்கள். ‘**வாய்மையே வெல்லும்**’ என்பது தெய்வநாயகத்தின் அறிவுரை உண்மையானது.

MERCY PUBLICATIONS - CHENNAI

www.Padasalai.Net

# அரையாண்டுத் தேர்வு

## பகுதி – I பொதுத்தமிழ்

நேரம் : 2.30 மணி | மதிப்பெண் : 90

### பகுதி – அ

(செய்யுள், உரைநடை)

**I. பலவுள் தெரிக. (அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க)** 6 × 1 = 6

1. சரியானதைத் தேர்ந்தெடுக்க.
   அ) வரைமாலை ஆ) வதுவை திருமணம்
   இ) வாரணம் யானை ஈ) புடவி கடல்
   i) அ, ஆ, இ சரி, ஈ தவறு ii) ஆ, இ, ஈ சரி, அ தவறு
   iii) அ, இ, ஈ சரி, ஆ தவறு iv) அ, ஆ, ஈ, சரி, இ தவறு
2. காவடிச் சிந்துவுக்குத் தந்தை என்று அழைக்கப்படுபவர் யார்?
   அ) பாரதிதாசன் ஆ) அண்ணாமலையார்
   இ) முருகன் ஈ) பாரதியார்
3. 24 பணம் என்பது
   அ) இரண்டு வராகன் ஆ) ஒரு வராகன்
   இ) மூன்று வராகன் ஈ) நான்கு வராகன்
4. வளைஇ, அலைகடல் ஆகியவற்றின் இலக்கணக் குறிப்பு
   அ) வினைத்தொகை, சொல்லிசையளபெடை
   ஆ) சொல்லிசையளபெடை, வினைத்தொகை
   இ) இன்னிசையளபெடை, பண்புத்தொகை
   ஈ) செய்யுளிசையளபெடை, வினைத்தொகை
5. சிறுகதை மன்னர் என்று போற்றப்பட்டவர்
   அ) புதுமைப்பித்தன் ஆ) புலமைப்பித்தன் இ) கமலக்கண்ணன் ஈ) சுஜாதா
6. கற்றேன் என்பாய் கற்றாயா? – வெறும் காகிதம் தின்பது கல்வியில்லை – இவ்வடியில் பயின்று வருவது
   அ) அடி எதுகை, அடி மோனை ஆ) சீர் மோனை, சீர் எதுகை
   இ) அடி மோனை, அடி இயைபு ஈ) சீர் மோனை, அடிமோனை

**II. அ) குறுவினா (எவையேனும் மூன்றனுக்குமட்டும் விடைதருக)** 3 × 2 = 6

7. எப்போது மருந்து தேவையில்லை என்று திருவள்ளுவர் கூறுகிறார்?
8. இங்கே ஐம்பதாண்டு வேம்பு
   கோடையில் கொட்டும் பூக்களை
   எண்ணச் சொல்கிறார்கள்– எண்ணச் சொல்கிறவர்கள் யார்? எண்ணுபவர்கள் யார்?
9. சின்னச் சீறா விளக்குக.
10. காவடிச்சிந்து என்பது யாது?

**ஆ) குறுவினா (எவையேனும் இரண்டனுக்குமட்டும் விடையளி)** 2 × 2 = 4

11. தமிழ்நாட்டின் மாநில மரம் – சிறு குறிப்பு வரைக.
12. ஆனந்தரங்கரின் வருணனைத் திறனுக்கு ஓர் எடுத்துக்காட்டுத் தருக.
13. கற்றளிக் கோவில்கள் யாவை?

**III. அ) சிறுவினா (எவையேனும் இரண்டனுக்குமட்டும் விடை தருக)** 2 × 4 = 8

14. இன்குலாப், “உலகுக்கு வேண்டும் நானும் ஓர் துளியாய்” எனக் கூறுவதன் நயத்தை விளக்குக.
15. உணவும் உறக்கமும் அணில் கனவாம்; உங்கள் கனவை உங்கள் சொற்களில் விளக்குக.
16. முல்லைத்திணை (அல்லது) பாடாண்திணையை விளக்குக.

MERCURY PUBLICATIONS CHENNAI

**ஆ) சிறுவினா (எவையேனும் இரண்டனுக்குமட்டும் விடை தருக)** **2 × 4 = 8**

17. சமணப் பள்ளிகளும் பெண்கல்வியும் – குறிப்பு வரைக.
18. ஜீவாவின் பேச்சுநடை குறித்துச் சுந்தர ராமசாமி கூறுவன யாவை?
19. இயற்கையுடன் உரையாடல் ஒன்றைக் கற்பனையாகப் பத்துவரிகளில் எழுதுக.

**IV. அ) நெடுவினா (எவையேனும் இரண்டிற்கு மட்டும் விடை தருக)** **2 × 6 = 12**

20. கண்ணன் கன்னனிடம் வேண்டி நின்ற நிகழ்வை வில்லிபாரதம்வழி விரிவாக எழுதுக. (அல்லது) பாரதிதாசன் ஒரு 'புரட்சிக்கவி' என்பதை உதாரன் பாத்திரம் வாயிலாக மெய்ப்பிக்க.
21. நீங்கள் மொழியை வெளிப்படுத்தும் நிலையில் பேச்சுமொழியையும் எழுத்துமொழியையும் எவ்வாறு உணர்கிறீர்கள் என்பதை விவரிக்க. (அல்லது)

    தாம் வாழ்ந்த காலக்கட்டத்தின் நாகரிகப் புதையலாக நாட்குறிப்பைப் பயன்படுத்தியவர் ஆனந்தரங்கர் என்பதை நிறுவுக.

**ஆ) அடிபிறழாமல் எழுதுக.** **4 + 2 = 6**

அ) "உற்றில வாய்"........ எனத் தொடங்கும் நீலகேசிப் பாடல்.

ஆ) "........ இடத்து" என்று முடியும் திருக்குறள்.

## பகுதி – ஆ

**(இலக்கணம், துணைப்பாடம், மொழிப்பயிற்சி)**

**V. பலவுள் தெரிக. (அனைத்து வினாக்களுக்கும் விடை தருக)** **8 × 1 = 8**

23. நிழல் போலத் தொடர்ந்தான் – அது எவ்வகை உவமை?

    அ) வினை ஆ) பயன் இ) வடிவம் ஈ) மெய்

24. 'ஓடு' என்ற வேர்ச்சொல்லின் வினையாலணையும் பெயர் எது?

    அ) ஓடினான் ஆ) ஓடுவான் இ) ஓடியவன் ஈ) ஓடிய

25. 'முனிவிலர்' – இச்சொல்லுக்குரிய சரியான பகுபதப்பிரிப்பு முறையைத் தேர்க.

    அ) முனிவு + இலர் ஆ) முனி + வு + இலர்

    இ) முனி + வ் + இல் + அர்ஈ) முனிவு + இல் + அர்

26. பொருந்தாத இணையைக் கண்டறிக.

| சிறுகதை | | கதைமாந்தர் |
|---|---|---|
| அ) ஆறாம் திணை | – | பிரீஸ் |
| ஆ) யானைடாக்டர் | – | டாக்டர். கே. |
| இ) பிம்பம் | – | மனச்சாட்சி |
| ஈ) சிம்பொனித்தமிழர் | – | ஏ. ஆர். ரஹ்மான் |

27. 'கற்பிளந்து' – இச்சொல்லில் புணர்ந்து வரும் புணர்ச்சி விதி ______.

    அ) உடல்மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே

    ஆ) தனிக்குறில் முன்வந்து ஒற்று உயிர்வரின் இரட்டும்

    இ) லள வேற்றுமையில் வலி வரின் றடவும்

    ஈ) ணன வல்லினம் வர றடவும்

28. 'இடன்' என்ற சொல்லின் இலக்கணக் குறிப்பு ______.

    அ) முற்றுப்போலி ஆ) ஈற்றுப்போலி

    இ) இலக்கணப்போலி ஈ) இடைப்போலி

29. நேரொன்றாசிரியத்தளை காணப்படுவது ______.

    அ) காய் முன் நேர் ஆ) காய் முன் நிரைஇ) கனி முன் நிரை ஈ) மா முன் நேர்

30. "பிம்பம்" – என்ற சிறுகதையின் ஆசிரியர் ______.

    அ) புதுமைப்பித்தன் ஆ) பிரபஞ்சன் இ) அ. முத்துலிங்கம் ஈ) ஜெயமோகன்

**VII. குறுவினா (எவையேனும் ஏழனுக்குமட்டும் விடை தருக)** **7 × 2 = 14**

31. ஏதேனும் ஒன்றனுக்கு உறுப்பிலக்கணம் தருக. அ) அலர்ந்து ஆ) உண்டான்
32. ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சிவிதி தருக. அ) உலகனைத்தும் ஆ) சிறுகோல்
33. பிறமொழிச் சொற்களைத் தமிழ்ப்படுத்துக. அ) Consumer ஆ) Website

MERCY PUBLICATIONS - CHENNAI

www.Padasalai.Net

34. கலவைத் தொடராக மாற்றுக.

மூன்று நாள்கள் கல்லூரிக்கு விடுமுறை. மாணவர்கள், தஞ்சாவூர் பிரகதீஸ்வரர் கோவிலுக்குச் சென்றனர். சிற்பங்களைக் கண்டு மகிழ்ந்தனர்.

35. பொருத்துக.

அ) நேரிசை ஆசிரியப்பா – முதலடியும் இறுதியடியும் அளவடிகளாய் வரும்

ஆ) இணைக்குறள் ஆசிரியப்பா – அடிகளை மாற்றினாலும் ஓசையும் பொருளும் மாறாது வரும்

இ) நிலைமண்டில ஆசிரியப்பா – இறுதி அடியின் முந்தைய அடி சிந்தடியாய் வரும்

ஈ) அடிமறி மண்டில ஆசிரியப்பா – எல்லா அடிகளும் அளவடி பெற்று வரும்.

36. மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக. : உலை, உளை, உழை.

37. வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.

அ) கல்வி கேள்விகளில் சிறந்தவர் நன்மை தீமைகளைப் புரிந்து பேசுபவர்

ஆ) சான்றோர் மிகுந்தப் பொறுப்புடன் சேவைப் புரிந்து கொள்கையை நிலைநாட்டச் செய்தனர்.

38. மரபுப் பிழையை நீக்கி எழுதுக.

அ) தென்னை இலையால் கீற்று பின்னுவார்கள். ஆ) சோளத் தோட்டத்திற்குச் சென்றேன்.

39. தமிழாக்கம் தருக.

Education is the most powerful weapon, which you can use to change the world.

## VII. எவையேனும் மூன்றனுக்குமட்டும் விடை தருக. (மொழித்திறன் பயிற்சிகள்) 3 × 4 = 12

40. பின்வரும் பாடலைப் படித்துணர்ந்து, மையக்கருத்தை எழுதி ஏற்புடைய நயங்கள் மூன்றனை எடுத்து எழுதுக.

சுதந்திரம் தருகிற மகிழ்ச்சியைக் காட்டிலும்
சுகந்தரும் உணர்ச்சியும் வேறுண்டோ
பதம்தரும் பெருமையும் பணம் தரும் போகமும்
பார்த்தால் அதைவிடக் கீழன்றோ
இதம்தரும் அறங்களும் இசையுடன் வாழ்தலும்
எல்லாம் சுதந்திரம் இருந்தால்தான்
நிதம்தரும் துயர்களை நிமிர்ந்துநின் றெதிர்த்திட
நிச்சயம் சுதந்திரம் அது வேண்டும்.

– நாமக்கல் கவிஞர்

41. கருத்துப்படத்தைப் புரிந்து கொண்டு பத்தியாக எழுதுக.




42. சொற்பொருள் பின்வரும் நிலையணி (அல்லது) உருவக அணியை விளக்குக.

43. தாய் (அல்லது) நிலா என்னும் தலைப்பில் எட்டு வரிகளுக்குக் குறையாமல் கவிதை ஒன்றை இயற்றுக.

## VIII. பின்வரும் துணைப்பாடப் பகுதி வினாவிற்கு இரு பக்கங்களுக்கு மிகாமல் விடை எழுதுக. 1 × 6 = 6

44. யானைடாக்டர் கதை வாயிலாக இயற்கை உயிரினப் பாதுகாப்பு ஆகியவை குறித்து நீவிர் அறிந்தவற்றைத் தொகுத்து எழுதுக.

(அல்லது)

சிம்பொனித் தமிழரும், ஆஸ்கர் தமிழரும் இசைத்தமிழுக்கு ஆற்றிய பணிகளை, நும் பாடப்பகுதி கொண்டு தொகுத்தெழுதுக.

MERCY PUBLICATIONS - CHENNAI

www.Padasalai.Net

# மாதிரி வினாத்தாள் – 1

## பகுதி – I பொதுத்தமிழ்

காலஅளவு : 3 மணி நேரம் | மதிப்பெண் : 90

### பகுதி – I

குறிப்பு : (i) அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. 14 × 1 = 14

(ii) கொடுக்கப்பட்ட நான்கு மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுக.

1. கலைகளின் உச்சம் ______.

அ) கட்டுரை ஆ) கதை இ) கவிதை ஈ) நாடகம்

2. 'சிந்துவெளிப் பண்பாட்டின் திராவிட அடித்தளம்' என்ற நூலின் ஆசிரியர் ______.

அ) சி. சு. செல்லப்பா ஆ) பி. எஸ். இராமையா

இ) ஆர். பாலகிருஷ்ணன் ஈ) அண்ணாமலையார்

3. சரியான விடையைத் தேர்க.

அ) கல்வி அழகே அழகு – 1) தொல்காப்பியம் சிறப்புப்பாயிர உரைப்பாடல்

ஆ) இளமையில் கல் – 2) திருமந்திரம்

இ) துணையாய் வருவது தூயநற் கல்வியே – 3) ஆத்திசூடி

ஈ) பாடம் போற்றல் கேட்டவை நினைத்தல் – 4) திருக்குறள்

– 5) நாலடியார்

அ) அ – 2, ஆ – 3, இ – 4, ஈ – 1 ஆ) அ – 3, ஆ – 4, இ – 1, ஈ – 2

இ) அ – 5, ஆ – 3, இ – 2, ஈ – 1 ஈ) அ – 4, ஆ – 1, இ – 2, ஈ – 5

4. ஏமம் என்பதன் பொருள் ______.

அ) கெடுக ஆ) செல்வான் இ) பாதுகாப்பு ஈ) விரைந்து

5. பெண்கள் விளையாடும் விளையாட்டு வகைகளுள் ஒன்று ______.

அ) சாழல் ஆ) சிற்றில் இ) சிறுதேர் ஈ) சிறுபறை

6. "யாரோ உனைப்போல் அனுதினமும் உழைப்போர்"–இது எவர் மொழி?

அ) வாய்க்கால் ஆ) நாங்கூழ் இ) நடராசன் ஈ) புல்

7. தவறான இணையைத் தேர்க.

அ) மொழி + ஆளுமை = உயிர் + உயிர் ஆ) கடல் + அலை = உயிர் + மெய்

இ) தமிழ் + அறிஞர் = மெய் + உயிர் ஈ) மண் + வளம் = மெய் + மெய்

8. உடனிலை மெய்ம்மயக்கச் சொற்கள் ______.

அ) அச்சம், கப்பம் ஆ) பாட்டி, தேர்தல் இ) வெற்றி, தந்த ஈ) எச்சம், வலிமை

9. வழி, வளி என்பதன் பொருள் ______.

அ) காற்று, பாதை ஆ) பாதை, காற்று இ) பாதை, வலிமை ஈ) காற்று, வலிமை

10. WHO என்பதன் தமிழ் விரிவாக்கம் ______.

அ) உலக வர்த்தக மையம் ஆ) உலக நல நிறுவனம்

இ) உலக வணிக அமைப்பு ஈ) உலகப் பொருளாதாரமன்றம்

11. ஆசிரியப்பாவிற்குரிய ஓசை ______.

அ) துள்ளல் ஆ) செப்பல் இ) அகவல் ஈ) தூங்கல்

12. ஆக்கப்பெயர் விகுதி பெறாத சொல்லைத் தேர்க.

அ) காவலாளி ஆ) மேலாளர் இ) உதவியாளர் ஈ) ஆசிரியர்

13. கூவும் குயிலும், கரையும் காகமும் – தொடரில் இடம் பெற்ற மரபு ______.

அ) பெயர் மரபு ஆ) வினை மரபு இ) ஒலிமரபு ஈ) இவை மூன்றும்

14. தமிழ்ச்சொல்லைக் கண்டறிக : Document

அ) ஒப்பந்தம் ஆ) ஆவணம் இ) கோப்பு ஈ) பட்டியல்

MERCY PUBLICATIONS - CHENNAI

www.Padasalai.Net

பகுதி – II

**இரண்டு அல்லது மூன்று வரிகளில் விடை தருக.**

பிரிவு – 1

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.** 3 × 2 = 6

15. பாயிரம் பற்றி நீ அறியும் கருத்து யாது?
16. 'காவடிச்சிந்து' என்பது யாது?
17. "ஊனமில் ஊக்கமும் ஒளிரக் காய்த்தநல்
 தீன்எனுஞ் செல்வமே பழுத்த சேனகர்"–இப்பாடலடிகளில், ஒளிரக் காய்த்தது எது? பழுத்தது எது?
18. உழைப்பாளர்களின் தோள்வலிமையால் விளைந்தன யாவை?

பிரிவு – 2

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** 2 × 2 = 4

19. 'தொழுஉரம்' என்பது என்ன?
20. உ.வே.சா. பயின்ற கல்விமுறை குறித்துக் குறிப்பு வரைக.
21. 'நாழிக்குள் திணிக்கும் மருந்து போல்' என்னும் உவமையை ஜீவானந்தம் வாழ்வுடன் ஒப்பிடுக.

பிரிவு – 3

**எவையேனும் ஏழனுக்கு விடை தருக.** 7 × 2 = 14

22. மொழிக்கு முதலில் வரும் எழுத்துகள் எத்தனை? அவை யாவை?
23. மெய்ம்மயக்கச் சொற்களை வகைப்படுத்துக.
 வாய்க்கால், வாழ்க, வாழ்ந்த, பாக்கம், சேர்தல், நார்ச்சத்து, எச்சம், மொத்தம்.
24. புணர்ச்சிவிதி தந்து விளக்குக. அ) வழியில்லை
 ஆ) திரைப்படம்
25. உவமைத்தொடர்களால் அழைக்கப்பெறும் சங்கப்புலவர்கள் பெயர்களைத் தொகுத்து அவற்றில் உள்ள உவமையைக் கண்டறிக.
26. பின்வரும் ஆங்கிலச் சொற்களுக்கு இணையான தமிழ்க் கலைச்சொற்களை எழுதுக.
 அ) Personality ஆ) Plastic இ) Emotion ஈ) Apartment
27. அலைகடல், புதுக்கியவர் – இலக்கணக்குறிப்புத் தருக.
28. நிறுத்தக்குறிகளின் பயன்களைக் கூறுக.
29. "நீளும் கைகளில் தோழமை தொடரும்
 நீளாத கைகளில் நெஞ்சம் படரும்" – தொடை நயங்களை எடுத்தெழுதுக.
30. மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக. : குரை, குறை

பகுதி – III

**ஐந்து அல்லது ஆறு வரிகளில் விடை தருக.**

பிரிவு – 1

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** 2 × 4 = 8

31. நூல் ஒன்றின் முகவுரையில் இடம்பெற வேண்டுவனவாக நன்னூல் எவற்றைக் குறிப்பிடுகிறது?
32. புறநானூற்றுப் பாடலின் கருத்திற்கு இணையான குறட்பாக்களைக் குறிப்பிடுக.
33. சிங்கி பெற்ற பரிசுப் பொருட்களாகக் குற்றாலக் குறவஞ்சி கூறுவன யாவை?
34. "சலச வாவியில் செங்கயல் பாயும்" – இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.

பிரிவு – 2

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** 2 × 4 = 8

35. வேதிக்கலப்பில்லாத பூச்சிக்கொல்லி நடைமுறைக்குச் சாத்தியமா? நும் கருத்தை விளக்குக.
36. ஆனந்தரங்கர் ஒரு வரலாற்று ஆசிரியர் என்பதைப் பாடப்பகுதி வழி எடுத்துக்காட்டுக.
37. 'கலை' என்பது குறித்து நீ அறிவன யாவை?
38. ஜீவா சமூக நலனுக்காகத் தம்மை ஈடுபடுத்திக் கொண்ட முதல் நிகழ்வு குறித்து எழுதுக.

MERCY PUBLICATIONS - CHENNAI

பிரிவு – 3

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.** **3 × 4 = 12**

39. 'நுணலும் தன் வாயால் கெடும்' என்னும் பழமொழியை வாழ்க்கை நிகழ்வுகளோடு தொடர்புபடுத்தி எழுதுக.

40. தமிழாக்கம் தருக.

The folk songs of TamilNadu have in them a remarkable charm just as we find in the folk songs of any other country. But what is special in these Tamil songs is, they not only possess a native charm and the aroma of the soil but have preserved in them a certain literary and artistic quality. This is so because the people who speak the language of these folk songs, the Tamils, have had a great historical past and a wonderful literary tradition. Folk songs are so old and yet so full of life that they are always new and progressively modern. These songs were born several centuries ago; they are being born every generation; they will be born and reborn over and over again!

41. உவமை அணிக்குத் திருக்குறள் ஒன்றை எடுத்துக்காட்டாகத் தந்து விளக்குக.

42. பின்வரும் பாடலைப் படித்துப் பொருளுணர்ந்து மையக்கருத்தினை எழுதி, ஏற்புடைய நயங்கள் மூன்றனையும் எழுதுக.

செந்நெல்லும் கரும்பும் விளைந்தனவே – நல்ல
தேன்பொழி மலர்களும் விரிந்தனவே
இன்னலும் பசியும் போயொழிக – தேசம்
எழிலுடன் கூடியே நலமுறுக!

தமிழன் திருநாள் பொங்கலென்றால் – அதில்
தமிழன் பண்புகள் பொங்குமன்றோ?
புவியெலாம் சேர்ந்தொரு வீடதிலே – யாரும்
புறம்பிலை என்றசொல் தமிழன்றோ?

பிரிவுகள் பேசியே பூசலிட்ட – பழம்
பேதமை தனைத்தள்ளி அனைவருமே
ஒருதனிக் குடும்பமாய் வாழ்ந்திடுவோம் – நம்முள்
ஒற்றுமை ஓங்கிடச் செய்திடுவோம்!

யாதும் ஊரெனச் சாற்றியதும் – மக்கள்
யாவரும் கேளிர் என்றதுவும்
மேதினிக் குரைத்தவர் நம்முன்னோர் – இன்று
வேற்றுமை நாமெண்ணல் சரியாமோ?

– பெ. தூரன்

43. மயில் அல்லது தென்றல் என்னும் தலைப்பில் புதுக்கவிதை ஒன்றை எட்டு வரிகளுக்குக் குறையாமல் எழுதுக.

பகுதி – IV

**பின்வரும் வினாக்களுக்கு இரு பக்கங்களுக்கு மிகாமல் விடை தருக.** **3 × 6 = 18**

44. அ) நன்னூல் பொதுப்பாயிரம், சிறப்புப்பாயிரம் வாயிலாக அறியலாகும் செய்திகளைத் தொகுத்துரைக்க.

(அல்லது)

ஆ) பாரதிதாசன் ஒரு 'புரட்சிக்கவி' என்பதை உதாரன் பாத்திரம் வாயிலாக மெய்ப்பிக்க.

45. அ) இயற்கையோடு இயைந்து வாழ்வு நடத்திய தமிழர்களின் வாழ்வியல் இருப்பிடங்களின் பெயர்களும் இயற்கையோடு இயைந்தே இருந்தன – கூற்றினை மெய்ப்பிக்க.

(அல்லது)

ஆ) சிதறிய கடிதங்கள் உணர்த்தும் கருத்துகளைச் சிதறாது விளக்குக.

46. அ) பாரதியின் இதழாளர் முகம் குறித்து நீங்கள் அறிவன யாவை?

(அல்லது)

ஆ) சிந்தனைப் பட்டிமன்றத்தின் நிகழ்வுகளைச் சுவை குன்றாமல் எழுதுக.

பகுதி – V

47. அடிமாறாமல் செய்யுள் வடிவில் எழுதுக **4 + 2 = 6**

அ) 'உற்றில வாய்' எனத் தொடங்கும் நீலகேசிப் பாடலை அடிபிறழாமல் எழுதுக.

ஆ) "........ இடத்து" என்று முடியும் குறட்பாவை எழுதுக.

MERCY PUBLICATIONS, CHENNAI

# மாதிரி வினாத்தாள் – 2

## பகுதி – I பொதுத்தமிழ்

காலஅளவு : 3 மணி நேரம் | மதிப்பெண் : 90

### பகுதி – I

**குறிப்பு :** (i) அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. **14 × 1 = 14**

(ii) கொடுக்கப்பட்ட நான்கு மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுக.

1. பொருத்தமான இலக்கிய வடிவம் எது?
   அ) ஏதிலிக்குருவிகள் – மரபுக்கவிதை
   ஆ) திருமலை முருகன் பள்ளு – சிறுகதை
   இ) யானை டாக்டர் – குறும்புதினம்
   ஈ) ஐங்குறுநூறு – புதுக்கவிதை

2. படத்திற்குப் பொருத்தமான திருக்குறளைக் கண்டறிக.



   அ) வில்லேர் உழவர் பகைகொளினும் கொள்ளற்க சொல்லேர் உழவர் பகை.
   ஆ) இரவென்னும் ஏமாப்பில் தோணி கரவென்னும் பார்தாக்கப் பக்கு விடும்.
   இ) உள்ளியது எய்தல் எளிதுமன் மற்றுந்தான் உள்ளியது உள்ளப் பெறின்.
   ஈ) இளைதாக முள்மரம் கொல்க களையுநர் கைகொல்லும் காழ்த்த விடத்து.

3. 'செஞ்ஞாயிற்றுச் <u>செலவும்</u> அஞ்ஞாயிற்று' – இப்பாடலில் அடிக்கோடிட்ட சொல்லின் பொருள்
   அ) நிறுத்தமும் ஆ) பயணமும் இ) அழிவும் ஈ) பணமும்

4. ஆனந்தரங்கருக்குத் தொடர்பில்லாதது ______.
   அ) மொழிபெயர்ப்பாளர் ஆ) இந்தியாவின் பெப்பிசு
   இ) தலைமைத் துவிபாஷி ஈ) உலக நாட்குறிப்பு இலக்கியத்தின் தந்தை

5. 'காற்றில் கலந்த பேரோசை' கட்டுரையை எழுதியவர் ______.
   அ) ஆத்மாநாம் ஆ) பிரபஞ்சன் இ) பாரதியார் ஈ) சுந்தர ராமசாமி

6. வில்லிபாரதத்தில், "சூரியனின் தோன்றல்" என்று குறிப்பிடப்படுபவர் யார்?
   அ) கண்ணன் ஆ) கன்னன் இ) அருச்சுனன் ஈ) பிரமன்

7. பகுபத உறுப்புகளுள் இடம்பெறும் அடிப்படை உறுப்புகள் யாவை?
   அ) பகுதி, இடைநிலை, சந்தி, சாரியை, விகுதி, விகாரம்
   ஆ) பகுதி, இடைநிலை, சாரியை
   இ) பகுதி, சந்தி, விகாரம் ஈ) பகுதி, விகுதி

8. 'பெருங்கலம்' என்னும் சொல்லிற்குரிய புணர்ச்சி விதியைத் தேர்க.
   அ) ஈறுபோதல், தன்னொற்றிரட்டல் ஆ) ஈறுபோதல், இனமிகல்
   இ) ஈறுபோதல், ஆதிநீடல் ஈ) ஈறுபோதல், இனையவும்

9. நிழல் போலத் தொடர்ந்தான் – இது எவ்வகை உவமை?
   அ) வினை ஆ) பயன் இ) வடிவம் ஈ) மெய்

10. உறுபகை, இடன் ஆகிய சொற்களின் இலக்கணக்குறிப்பு
    அ) வினையெச்சம், வினைத்தொகை ஆ) வினைத்தொகை, இடவாகுபெயர்
    இ) உரிச்சொற்றொடர், ஈற்றுப்போலி ஈ) பெயரெச்சம், பண்புத்தொகை

11. தமிழ்க் கலைச்சொல்லைக் கண்டறிக – Consumer.
    அ) விற்பனையாளர் ஆ) நுகர்வோர் இ) நடுவர் ஈ) தொழிலாளி

12. சரியான நிறுத்தக்குறியுடைய சொற்றொடரைக் கண்டுபிடிக்க.
அ) மலரவன் தன் பாட்டியிடம் நான் படிக்கிறேன் என்றான்.
ஆ) மலரவன், தன் பாட்டியிடம், "நான் படிக்கிறேன்" என்றான்.
இ) மலரவன் தன் பாட்டியிடம், "நான் படிக்கிறேன்" என்றான்.
ஈ) மலரவன் தன் பாட்டியிடம், நான் படிக்கிறேன்! என்றான்.
13. அடையாறுப் பாலத்தின் சுவற்றில் எழுதாதீர்கள் – இவ்வரியில் சொற்பிழைகளின் திருத்தம்.
அ) அடையாற்றுப் பாலத்தின் சுவற்றில் ஆ) அடையாறுப் பாலத்தின் சுவரில்
இ) அடையாறுப் பாலத்தின் சுவற்றில் ஈ) அடையாற்றுப் பாலத்தின் சுவரில்
14. 'வேளிர் ஆடல்' குறித்துப் பேசும் நூல் ______.
அ) நன்னூல் ஆ) மணிமேகலை இ) சிலப்பதிகாரம் ஈ) தொல்காப்பியம்

## பகுதி – II

**இரண்டு அல்லது மூன்று வரிகளில் விடை தருக.**

### பிரிவு – 1

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.** 3 × 2 = 6

15. வளருங் <u>காவில் முகில்தொகை ஏறும்</u> – பொன்
மாடம் எங்கும் அகிற்புகை நாறும் – அடிக்கோடிட்ட தொடர் குறிப்பிடுவன என்ன?
16. சீர்தூக்கி ஆராயவேண்டிய ஆற்றல்கள் யாவை?
17. ஆத்மாநாம் தம் கவிதைவழி தூண்டுவது யாது?
18. "கற்றேன் என்பாய் கற்றாயா?" என்று அப்துல்ரகுமான் யாரிடம் கேட்கிறார்?

### பிரிவு – 2

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** 2 × 2 = 4

19. "கோட்டை" என்னும் சொல் திராவிட மொழிகளில் எவ்வாறு எடுத்தாளப்படுகிறது?
20. மதீனா நகரம் ஒரு மாளிகை நகரம் என்னும் கூற்றினை உறுதிப்படுத்துக.
21. ஜீவாவின் மனத்தில் பசுமையாக இருந்த எண்ணம் எது?

### பிரிவு – 3

**எவையேனும் ஏழனுக்கு விடை தருக.** 7 × 2 = 14

22. மரபுச் சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக. : **அவசரக்குடுக்கை**
23. ஏதேனும் ஒன்றனுக்கு மட்டும் பகுபத உறுப்பிலக்கணம் தருக.
அ) அலர்ந்து ஆ) செய்க
24. ஏதேனும் ஒன்றனுக்கு மட்டும் புணர்ச்சிவிதி தந்து விளக்குக.
அ) புலனறிவு ஆ) கருவிழி
25. உவமை எவ்வெவற்றின் அடிப்படையில் தோன்றும்?
26. சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க.
அ) தங்கை ஆ) பிண்ணாக்கு
27. விடைகளுக்கேற்ப வினா அமைக்க. (தாய்மொழிக் கல்வி, அப்துல் கலாம்)
1. எம்மொழிக் கல்வி, சிந்தனையைத் தூண்டும்?
2. மாணவர்கள், கனவு காண வேண்டும் எனக் கூறியவர் யார்?
28. தமிழில் பயன்படும் ஆக்கப்பெயர் விகுதிகள் யாவை?
29. முக்காற்புள்ளி இடம்பெற வேண்டிய இடத்தினை எடுத்துக்காட்டுடன் எழுதுக.
30. தமிழாக்கம் தருக.
அ) A picture is worth a thousand words.
ஆ) Knowledge rules the world.

## பகுதி – III

**ஐந்து அல்லது ஆறு வரிகளில் விடை தருக.**

### பிரிவு – 1

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** 2 × 4 = 8

31. "சலச வாவியில் செங்கயல் பாயும்" – இடம் சுட்டிப் பொருள் விளக்கம் தருக.
32. மேகத்திடம் கூறுவதுபோலத் தோழி தலைவனுக்கு உணர்த்திய இறைச்சிப் பொருள் யாது?

MERCURY PUBLICATIONS – CHENNAI

www.Padasalai.Net

33. இவ்வுலகம் நிலைத்திருப்பதற்கான காரணங்களாக இளம்பெருவழுதி கூறுவனவற்றை எழுதுக.
34. அப்துல் ரகுமானின் கவிதையிலிருந்து வினா – விடை வடிவத்திற்கு ஏற்ற அடிகளைத் தருக.

### பிரிவு – 2

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** 2 × 4 = 8

35. கொற்கை, வஞ்சி, தொண்டிவளாகம் – குறிப்புத் தருக.
36. சமணப்பள்ளியும் பெண்கல்வியும் – குறிப்பு வரைக.
37. ஃப்ரெஸ்கோ ஓவியங்கள், கற்றளிக் கோவில்கள் குறித்து நீவிர் அறிவன யாவை?
38. தாகூர் எதனை நினைத்துப் பார்க்கச் சொல்கிறார்?

### பிரிவு – 3

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.** 3 × 4 = 12

39. தீயினாற் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
நாவினாற் சுட்ட வடு. – இக்குறட்பாவில் பயின்றுவரும் அணியை விளக்குக.
40. ஆசிரியப்பாவின் பொது இலக்கணத்துள் எவையேனும் நான்கினைக் கூறுக.
41. குறிப்புகளைக் கொண்டு பத்தியாக எழுதுக.
வீடு – மின்சாதனக் கருவி – கவனம் – ஈரக்கை – தவிர்த்தல் – தொலைக்காட்சி – அலைபேசி – இரவு – அணை – அதிகாலை – பள்ளிகள் – பொதுவிடங்கள் – திடல் – மின்கம்பம் – கவனம்.
42. பின்வரும் பாடலைப் படித்துப் பொருளுணர்ந்து மையக்கருத்தினை எழுதி, ஏற்புடைய நயங்கள் மூன்றனையும் எழுதுக.

பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான் – புவி
பேணி வளர்த்திடும் ஈசன்;
மண்ணுக்குள்ளே சிலமூடர் – நல்ல
மாதர் அறிவைக் கெடுத்தார்.
கண்கள் இரண்டினில் ஒன்றைக் – குத்தி
காட்சி கெடுத்திட லாமோ?
பெண்கள் அறிவை வளர்த்தால் – வையம்
பேதமை யற்றிடும் காணீர்.

– பாரதியார்

43. அருவி அல்லது தாயன்பு என்னும் தலைப்பில் புதுக்கவிதை ஒன்றை எட்டு வரிகளுக்குக் குறையாமல் எழுதுக.

### பகுதி – IV

**பின்வரும் வினாக்களுக்கு இரு பக்கங்களுக்கு மிகாமல் விடை தருக.** 3 × 6 = 18

44. அ) திருமலை முருகன் பள்ளு கூறும் வடகரை, தென்கரை நாட்டுப் பாடல்கள் வழி இயற்கை வளங்களை விவரிக்க. (அல்லது)
ஆ) சிறைப்புறத்தானாகிய தலைவனுக்கு மேகத்திடம் கூறுவதுபோல் தோழி சொல்லியன யாவை?
45. அ) நீங்கள் மொழியை வெளிப்படுத்தும் நிலையில் பேச்சுமொழியையும் எழுத்து மொழியையும் எவ்வாறு உணர்கிறீர்கள் என்பதை விவரிக்க. (அல்லது)
ஆ) 'கல்லும் கதை சொல்லும்' – என்னும் தொடர் தஞ்சை பெரிய கோவிலுக்குப் பொருந்துவதை விளக்கி எழுதுக.
46. அ) சிம்பொனித் தமிழர் இசைத் தமிழுக்கு ஆற்றிய பணிகளை நும் பாடப்பகுதி கொண்டு விளக்குக. (அல்லது)
ஆ) பிம்பம் கதையின் வாயிலாகப் பிரபஞ்சன் தெளிவுபடுத்தும் மனித முகங்களைப் பற்றி விவரிக்க.

### பகுதி – V

**அடிமாறாமல் செய்யுள் வடிவில் எழுதுக** 4 + 2 = 6

47. அ) நன்னூல் மனப்பாடப் பாடலை அடிபிறழாமல் எழுதுக.
ஆ) "யாதனின்..." எனத் தொடங்கும் குறட்பாவை எழுதுக.

MERCY PUBLICATIONS CHENNAI

www.Padasalai.Net

# மாதிரி வினாத்தாள் – 3

## பகுதி – I பொதுத்தமிழ்

காலஅளவு : 3 மணி நேரம் | மதிப்பெண் : 90

### பகுதி – I

**குறிப்பு** : (i) அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. 14 × 1 = 14

(ii) கொடுக்கப்பட்ட நான்கு மாற்று விடைகளில், மிகவும் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுக.

1. பொருத்தமானதைத் தேர்ந்தெடுக்க.
   அ) அ. முத்துலிங்கம் – யுகத்தின்பாடல்
   ஆ) பவணந்தி முனிவர் – நன்னூல்
   இ) சு. வில்வரத்தினம் – ஆறாம்திணை
   ஈ) இந்திரன் – பேச்சுமொழியும் கவிதைமொழியும்
2. காவடிச்சிந்தின் தந்தை ______.
   அ) இரசூல் கம்சதோவ் ஆ) மல்லார்மே இ) அண்ணாமலையார் ஈ) வால்ட் விட்மன்
3. ஏடு, சுவடி, பொத்தகம், பனுவல் முதலிய சொற்கள் தரும் பொருள் ______ என்பதாகும்.
   அ) நூல் ஆ) ஓலை இ) எழுத்தாணி ஈ) தாள்
4. கட்டடக் கலை என்பது, 'உறைந்து போன இசை' என்று கூறியவர் ______.
   அ) எஸ். கே. கோவிந்தசாமி ஆ) ஃபிரெஸ்கோ
   இ) ஷெல்ஸ் ஈ) பிரடிரிகா வொன்ஸ்லீவிங்
5. அழகும் அறிவும் இளமையும் வாய்த்தவன் – யார், யாரிடம் கூறியது?
   அ) அமைச்சர், கவிஞரிடம் ஆ) அமைச்சர், மன்னரிடம்
   இ) மன்னர், அமைச்சரிடம் ஈ) மன்னர், அமுதவல்லியிடம்
6. 'பிரமிள்' என்னும் பெயரில் எழுதியவர் ______.
   அ) இராசேந்திரன் ஆ) அரவிந்தன் இ) சிவராமலிங்கம் ஈ) விருத்தாச்சலம்
7. இறந்தகால இடைநிலைகள் ______.
   அ) ப், வ் ஆ) த், ட், ற், இன் இ) கிறு, கின்று ஈ) ஆ, அல்
8. மலை, குன்றுகள் குறித்த ஆய்வு ______.
   அ) Sociology ஆ) Epigraphy இ) Biology ஈ) Orology
9. வேளாண்மை செய்தற் பொருட்டு – பொருள் கூறுக.
10. தொல்காப்பியத்திலுள்ள மொத்த இயல்களின் எண்ணிக்கை ______.
    அ) 9 ஆ) 18 இ) 27 ஈ) 3
11. 'சிம்பொனித் தமிழர்' என அழைக்கப்படுபவர் ______.
    அ) ஏ. ஆர். ரஹ்மான் ஆ) இளையராஜா இ) அஜொய் சக்கரபர்த்தி ஈ)சாகர்
12. ஆக்கப்பெயர்களில் தனிச் சிறப்புடையவை ______.
    அ) பகுதிகள் ஆ) குணப்பெயர் இ) விகுதிகள் ஈ) இடைநிலை
13. கொள் – என்னும் வேர்ச்சொல்லின் வினையாலணையும் பெயரைத் தேர்ந்தெடுக்க.
    அ) கொள்க ஆ) கொள்ளுதல் இ) கொள்ளும் ஈ) கொள்வோன்
14. தமிழ்ச்சொல்லைக் கண்டறிக. – Passport.
    அ) கடவுச்சீட்டு ஆ) பயணச்சீட்டு இ) நுழைவுஇசைவு ஈ) தேர்ச்சி அட்டை

MERCY PUBLICATIONS - CHENNAI

www.Padasalai.Net

## பகுதி – II

**இரண்டு அல்லது மூன்று வரிகளில் விடை தருக.**

### பிரிவு – 1

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.** 3 × 2 = 6

15. நல்ல குறுந்தொகை நூல் குறித்து நீங்கள் அறியும் செய்தி யாது?
16. இங்கே, ஐம்பதாண்டு வேம்பு
கோடையில் கொட்டும் பூக்களை
எண்ணச் சொல்கிறார்கள்.–எண்ணச் சொல்கிறவர்கள் யார்? எண்ணுபவர்கள் யார்?
17. பாரதிதாசன் இயற்றிய நூல்கள் எவையேனும் நான்கினைக் கூறுக.
18. "ஒழுக்கமும் பொறையும் உனைப்போல் யார்க்குள" – இவ்வடி எதனைக் குறிப்பிடுகிறது?

### பிரிவு – 2

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** 2 × 2 = 4

19. இனம், மொழி குறித்த இரசூல் கம்சதோவ் பார்வையைக் குறிப்பிடுக.
20. உ.வே.சா. அவர்கள் பயின்ற கல்விமுறை குறித்துக் குறிப்பு வரைக.
21. அணில் எங்கே உறங்கச் சென்றது? அதன் கனவு எது குறித்தது?

### பிரிவு – 3

**எவையேனும் ஏழனுக்கு விடை தருக.** 7 × 2 = 14

22. உயிரீறு, மெய்யீறு – விளக்குக.
23. வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.
அ) தமிழர் ஆற்று தண்ணீரை தேக்கி சேமித்து கால்வாய் வெட்டிப் பாசனம் செய்தனர்.
ஆ) சான்றோர் மிகுந்தப் பொறுப்புடன் சிறப்பான சேவைப் புரிந்து கொள்கையை நிலைநாட்ட செய்தனர்.
24. பகுபதத்தில் சந்தி, சாரியை எவ்வெவ்விடங்களில் அமையும்?
25. ஏதேனும் ஒன்றனுக்கு மட்டும் உறுப்பிலக்கணம் தருக. :
அ) கொடுத்த ஆ) தோன்றி
26. இலக்கணக்குறிப்புத் தருக. : அ) சுடச்சுட ஆ) சுடச்சுடரும்
27. செய்யுள் உறுப்புகள் எவை?
28. தொடர்மாற்றம் செய்க.
அ) என்னே! மதுரை மீனாட்சி அம்மன் கோவில் சிற்பக்கலை. (செய்தித் தொடராக்குக)
ஆ) தஞ்சைக் கோவில், எண்பட்டை வடிவில் கட்டப்பட்ட திராவிடக் கலைப்பாணியாகும். (வினாத் தொடராக்குக.)
29. உவமை, உருவகம் – வேறுபடுத்துக.
30. மரபுச் சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக. :
அ) மதில்மேல்பூனை ஆ) அவசரக்குடுக்கை

## பகுதி – III

**ஐந்து அல்லது ஆறு வரிகளில் விடை தருக.**

### பிரிவு – 1

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** 2 × 4 =8

31. ஐங்குறுநூற்றுப் பாடல் சுட்டும் திணை, முதற்பொருள், கருப்பொருள்களை அட்டவணைப்படுத்துக.
32. தலைவி ஆற்றும் இல்லறச் செவ்வியைப் பாராட்டி நற்றாயிடம் செவிலித்தாய் கூறியதென்ன?
33. தமிழகப் பெண்கள் பாடிக்கொண்டே விளையாடும்போது வெளிப்படுத்தும் மேன்மையான கருத்துகளாகத் திருச்சாழல் உணர்த்துவன யாவை?
34. துறை : 'தலைமகன் தமர் வரைவொடு வந்து சொல்லாடுகின்றுழி வரைவு மறுப்பவோ' எனக் கவன்ற தலைமகட்குத் தோழி சொல்லியது – விளக்குக.

MERCY PUBLICATIONS - CHENNAI

பிரிவு – 2

எவையேனும் இரண்டனுக்கு விடை தருக. 2 × 4 = 8

35. 'மலை மனித வாழ்வில் சிறப்பிடம் பெற்றுள்ளது' – என்பதை எடுத்துக் காட்டுகளுடன் விவரிக்க.
36. ஆனந்தரங்கர் நாட்குறிப்பின் சிறப்பு யாது?
37. 'தாமஸிகம்' என்றால் என்ன?
38. 'குருகுலக் கல்விமுறை' குறித்துப் பெறப்படும் செய்தி யாது?

பிரிவு – 3ஷ்

எவையேனும் மூன்றனுக்கு விடை தருக. 3 × 4 = 12

39. 'வாய்மையே வெல்லும்' என்னும் பழமொழியை வாழ்க்கை நிகழ்வுகளோடு தொடர்புபடுத்தி எழுதுக.
40. சொற்பொருள் பின்வரு நிலையணிக்குத் திருக்குறள் ஒன்றைச் சான்று தந்து விளக்குக.
41. தமிழாக்கம் தருக.

The Zero ! One of the grandset creations of Indian genius. The discovery of Zero is probably one of the few areas where India is accorded its rightful standing in the development of mathematics. This is not knows for certain that who discovered zero and when. The importance of Zero is manifested by their wide spread use in today's world. This discovery is certainly one that has helped science to reach its current status.

42. இலக்கிய நயம் பாராட்டுக.

பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான் – புவி
பேணி வளர்த்திடும் ஈசன்;
மண்ணுக்குள்ளே சிலமூடர் – நல்ல
மாதர் அறிவைக் கெடுத்தார்.
கண்கள் இரண்டினில் ஒன்றைக் – குத்திக்
காட்சி கெடுத்திட லாமோ?
பெண்கள் அறிவை வளர்த்தால் – வையம்
பேதைமை யற்றிடும் காணீர்.

– பாரதியார்

43. காடின்றேல் நாடில்லை அல்லது புதிய பாரதம் மலரட்டும்! என்னும் தலைப்பில் புதுக்கவிதை ஒன்றை எட்டு வரிகளுக்குக் குறையாமல் எழுதுக.

பகுதி – IV

பின்வரும் வினாக்களுக்கு இரு பக்கங்களுக்கு மிகாமல் விடை தருக. 3 × 6 = 18

44. அ) பாதசாரிகளின் வழிநடைப் பாடலாகக் காவடிச்சிந்து உள்ளது – இக்கூற்றை அண்ணாமலையாரின் பாடல்வழி மதிப்பீடு செய்க.

(அல்லது)

ஆ) 'மதீனா நகரம் ஒரு வளமான நகரம்' என உமறுப்புலவர் வருணிக்கும் செய்திகளைத் தொகுத்து எழுதுக.

45. அ) 'சுற்றுச்சூழலை வளப்படுத்துவது இயற்கை வேளாண்மையே' என்னும் தலைப்பில் மேடைப்பேச்சிற்கான உரையை உருவாக்குக. (அல்லது)

ஆ) சுந்தர ராமசாமியின் "காற்றில் கலந்த பேரோசை" என்னும் தலைப்பு ஜீவாவின் வாழ்க்கைக்கு எங்ஙனம் பொருந்தும் என்பதை விளக்குக.

46. அ) தமிழர் வாழ்வோடும் புலம்பெயர் நிகழ்வுகளோடும் அ. முத்துலிங்கத்தின் திணைப்பாகுபாடு எவ்வாறு இணைக்கப்படுகிறது? (அல்லது)

ஆ) **நீங்கள் கண்டுகளித்த ஏறு தழுவுதல் நிகழ்வின் காட்சிகளை வகுப்பில் நேர்முக வருணனை செய்து காட்டுக.**

பகுதி – V

அடிமாறாமல் செய்யுள் வடிவில் எழுதுக. 4 + 2 = 6

அ) 'சிறகிலிருந்து' எனத் தொடங்கும் பிரமிளின் காவியம் என்னும் கவிதையை எழுதுக.
ஆ) "...பகை" என முடியும் குறட்பாவினை எழுதுக.

MERCY PUBLICATIONS - CHENNAI

www.Padasalai.Net

# கவிமணி மாதிரி வினாத்தாள் – 4

## பகுதி – I பொதுத்தமிழ்

கால அளவு : 3 மணி நேரம் மதிப்பெண் : 90

### பகுதி – I

**குறிப்பு** : (i) அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. 14 × 1 = 14

(ii) கொடுக்கப்பட்ட நான்கு மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுக.

1. ஒற்றை வைக்கோல் புரட்சி என்ற நூலின் ஆசிரியர் ______.
   அ) நம்மாழ்வார் ஆ) மசானுபு ஃபுகோகா
   இ) சொக்கலிங்கம் ஈ) மங்கை
2. மீரா பற்றிய கூற்றுகளுள் தவறானதைத் தேர்க.
   அ) 'விஞ்ஞானி' என்பது மீராவின் கவியரங்கக் கவிதை ஆகும்.
   ஆ) அன்னம் விடு தூது இதழை நடத்தியவர்.
   இ) கனவுகள் + கற்பனைகள் = காகிதங்கள் என்பது மீராவின் கவிதை நூல்.
   ஈ) 'எழுத்து' என்னும் இதழின் ஆசிரியராக விளங்கியவர்.
3. அகநானூற்றின் வேறு பெயர் ______ .
   அ) அகப்பொருள் ஆ) குறுந்தொகை இ) நானூறு ஈ) நெடுந்தொகை
4. 'ழ' என்னும் பெயரால் கவிஞர் ஆத்மாநாமால் வெளியிடப்பட்டது; 'கவிதைக் கிரீடம்' என்று போற்றப்படுவது ______.
   அ) சிற்றிதழ், குற்றாலக்குறவஞ்சி ஆ) கவிதைநூல், திருச்சாழல்
   இ) நாளிதழ், நன்னகர்வெண்பா ஈ) கட்டுரை, குற்றாலக் கோவை
5. சாதிப் பிரிவினிலே தீயை மூட்டுவோம் – என்பது யார் கூற்று?
   அ) திருமூலர் ஆ) சிவாக்கியர் இ) பாம்பாட்டிச் சித்தர் ஈ) பட்டினத்தார்
6. 'சாகுல் அமீது' என்னும் இயற்பெயரை உடையவர் ______.
   அ) இராசேந்திரன் ஆ) இன்குலாப் இ) சிவராமலிங்கம் ஈ) விருத்தாச்சலம்
7. ஆறாம் திணை எது?
   அ) மலையும் மலை சார்ந்த இடமும் ஆ) கடலும் கடல் சார்ந்த இடமும்
   இ) காடும் காடு சார்ந்த இடமும் ஈ) பனியும் பனி சார்ந்த இடமும்
8. வாடகை, மாதம் என்ற சொற்களின் தமிழ்ச்சொற்கள் ______.
   அ) சம்பளம், நாடு ஆ) குடிக்கூலி, ஆண்டு
   இ) குடிக்கூலி, திங்கள் ஈ) ஊதியம், நாள்
9. வாழிய – இலக்கணக்குறிப்புத் தருக.
   அ) வியங்கோள் வினைமுற்று ஆ) வினைத்தொகை
   இ) பண்புத்தொகை ஈ) அசை
10. உவமையின் செறிவார்ந்த வடிவமே ______ எனப்படும்.
    அ) உவமை ஆ) இறைச்சி இ) உவமேயம் ஈ) உருவகம்
11. சரியானவற்றைத் தேர்ந்தெடுக்க.
    1. வரை – மலை 2. வதுவை – திருமணம்
    3. வாரணம் – யானை 4. புடவி – கடல்
    அ) 1, 2, 3 சரி; 4 – தவறு ஆ) 2, 3, 4 சரி; 1 – தவறு
    இ) 1, 3, 4 சரி; 2 – தவறு ஈ) 1, 2, 4 சரி; 3 – தவறு
12. SHIP என்னும் ஆங்கிலச் சொல்லின் பழந்தமிழ் இலக்கியப் பெயர் ______.
    அ) படகு ஆ) நாவாய் இ) கப்பல் ஈ) விசைப்படகு

MERCY PUBLICATIONS - CHENNAI

13. சிலப்பதிகாரத்தைப் படித்தேன் வியந்தேன் மகிழ்ந்தேன் – இத்தொடர்க்குரிய நிறுத்தக்குறிகளைத் தகுந்த இடங்களில் இட்டு எழுதுக.”

14. பெட்டிக்கு வந்தபின்
எல்லாக் காய்களும் சமம்தான்
சதுரங்கக் காய்கள் – என்ற ஜப்பானிய ஹைக்கூவின் குறியீடு
அ) மனிதர்கள் ஆ) பழங்கள் இ) தேங்காய் ஈ) பெட்டி

## பகுதி – II

**இரண்டு அல்லது மூன்று வரிகளில் விடை தருக.**

### பிரிவு – 1

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.** **3 × 2 = 6**

15. ஏதிலியாய்க் குருவிகள் எங்கோ போயின – தொடரின் பொருள் என்ன?
16. மருந்து மரமாக இருப்பவர் யார்? மருந்து எது?
17. அகநானூற்றின் பிரிவுகள் எத்தனை? அவை யாவை?
18. காற்றின் தீராத பக்கங்களில் எது எதனை எழுதிச் சென்றது?

### பிரிவு – 2

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** **2 × 2 = 4**

19. தமிழ்நாட்டின் மாநில மரம் – சிறுகுறிப்பு வரைக.
20. இந்தியக் கட்டடக்கலையின் மூன்று வகைகள் யாவை?
21. நாட்டுப்புறத்திலும் பட்டணத்திலும் சிறந்து விளங்குவதாகத் தாகூர் எவற்றைக் குறிப்பிடுகிறார்?

### பிரிவு – 3

**எவையேனும் ஏழனுக்கு விடை தருக.** **7 × 2 = 14**

22. என் அம்மை, ஒற்றியெடுத்த
நெற்றிமண் அழகே!
வழிவழி நினதடி தொழுதவர்,
உழுதவர், விதைத்தவர்,
வியர்த்தவர்க்கெல்லாம்
நிறைமணி தந்தவளே! – இக்கவிதை அடிகளில் உள்ள வினையாலணையும் பெயர்களை எழுதுக.

23. தொடரில் உள்ள சொற்களை ஒழுங்குபடுத்தி, இரண்டு சொற்றொடர்களாக்குக.
பிறர் செய்யாவிட்டாலும் செய்த தீமை மறக்கக்கூடாது நன்மை செய்யக் கூடாது உதவியை.

24. தொடர்களில் உடனிலையாகவும், வேற்றுநிலையாகவும் இடம்பெறும் மெய்ம்மயக்கச் சொற்களைக் கண்டறிக.
அ) இந்திய விண்வெளி ஆய்வுக்கழகம், வெற்றி ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது.
ஆ) நேர்மை என்னும் சிறந்த கொள்கையைச் சார்ந்து வாழ்பவர்களே, உயர்ந்தவர்களாகக் கருதப்படுவர்.

25. ஒன்றனுக்கு மட்டும் உறுப்பிலக்கணம் தருக.
அ) பார்த்தான் ஆ) உண்டாள்

26. குற்றியலுகரப் புணர்ச்சியை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

27. புதிர்களுக்கான விடையைத் தேர்ந்தெடுக்க. (கம்பு, மதி, வளை)
அ) எலியும் நுழையும்; எழிலரசி கையும் நுழையும் ______.
ஆ) அறிவின் பெயரும் அதுதான்; அம்புலியின் பெயரும் அதுவேதான் ______.

28. பாடாண் திணை – விளக்குக.

29. முற்றுப்புள்ளி வரும் இடங்கள் இரண்டினைக் குறிப்பிடுக.

30. விடைக்கேற்ற வினா அமைக்க.
அ) கல்வியின் நோக்கம், நாகரிகத்தையும் பண்பாட்டையும் வளர்ப்பதாகும்.
ஆ) சங்கம் என்ற அமைப்பு, பலர்கூடி விவாதிக்கும் பாங்குடையது.

MERCY PUBLICATIONS - CHENNAI

www.Padasalai.Net

## பகுதி – III

**இரண்டு அல்லது மூன்று வரிகளில் விடை தருக.**

### பிரிவு – 1

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** 2 × 4 = 8

31. சு. வில்வரத்தினம் பாடத்தான் வேண்டும் என எவற்றைக் குறிப்பிடுகிறார்?
32. மருந்து, மருத்துவர், மருத்துவம் ஆகியன பற்றித் திருக்குறள் கூறுவன யாவை?
33. உயர்தமிழை உயிரென்று போற்றுங்கள் – இடம் சுட்டிப் பொருள் விளக்கம் தருக.
34. அண்ணாமலையார் குறித்து அறிவன யாவை?

### பிரிவு – 2

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** 2 × 4 = 8

35. 'என்னுயிர் தமிழ்மொழி என்பேன்' என்னும் தலைப்பில் நீவிர் கொண்டுள்ள மொழிப்பற்றினை எழுதுக.
36. தஞ்சைப் பெரிய கோவில் விமான அமைப்பின் சிறப்பினை விளக்குக.
37. ஜீவாவின் பேச்சுநடை குறித்துச் சுந்தரராமசாமி கூறுவன யாவை?
38. 'குருகுலக் கல்விமுறை' குறித்துப் பெறப்படும் செய்தி யாது?

### பிரிவு – 3

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.** 3 × 4 = 12

39. 'காக்கைக்கும் தன்குஞ்சு பொன்குஞ்சு' என்னும் பழமொழியை வாழ்க்கை நிகழ்வுகளோடு தொடர்புபடுத்தி எழுதுக.
40. பிறிதுமொழிதலணிக்குச் சான்று தந்து விளக்குக.
41. கீழ்க்காணும் பத்தியில் உள்ள ஆக்கப்பெயர்களை எடுத்தெழுதுக.

    எங்கள் பள்ளியில் நடைபெற்ற புத்தகத் திருவிழாவிற்குக் காவல்துறை ஆணையாளர், சிறப்பு அழைப்பாளராகக் கலந்து கொண்டு உரையாற்றினார். அவர், "மாணவர்களாகிய நீங்கள் படிப்பகங்களைப் பயன்படுத்தி விண்ணியல், மண்ணியல் என்ற துறைகளில் சிறந்து விளங்க வேண்டும். நல்ல நண்பர்களைக் கூட்டாளி ஆக்கிக்கொண்டு உதவியாளர் இல்லாமலே ஒரு நிறுவனத்தின் மேலாளராகவோ முதலாளியாகவோ ஆகலாம்" என்று கூறி, மாணவர்களை ஊக்கப்படுத்தினார்.

42. பழமொழிகளை ஒழுங்கு செய்தபின் வாழ்க்கை நிகழ்வுகளோடு தொடர்புபடுத்தி எழுதுக.

    அ) ஊரக் எறும்பு தேயும் கல்லும். ஆ) வையகத்தில் வல்லவன் உண்டு வல்லவனுக்கு.

43. கருத்துப்படத்தைப் புரிந்துகொண்டு பத்தியாக எழுதுக.




## பகுதி – IV

**பின்வரும் வினாக்களுக்கு இரு பக்கங்களுக்கு மிகாமல் விடை தருக.** 3 × 6 = 18

44. அ) வாழ்வின் உயர்வுக்கு உறுதுணையாக நீங்கள் கருதும் குறட்பாக்கள் சிலவற்றை விளக்கிக் கட்டுரையாக்குக. (அல்லது)

    ஆ) கண்ணன் கன்னனிடம் வேண்டி நின்ற நிகழ்வை வில்லிபாரதம்வழி விரிவாக எழுதுக.

    (அல்லது)

    ஆ) நம் தோல்விகளுக்கு எல்லாம் மூலக்காரணமாகத் தாகூர் சுட்டுவன யாவை?

46. அ) வாடிவாசல் கதை வாயிலாக நீங்கள் உணர்ந்த கருத்துகளை விளக்குக. (அல்லது)

    ஆ) நர்த்தகி நடராஜின் நேர்காணல் வழி அறிந்தவற்றைத் தொகுத்து அளிக்க.

## பகுதி – V

**47. அடிமாறாமல் செய்யுள் வடிவில் எழுதுக.** 4 + 2 = 6

அ) 'உண்டாலம்ம' எனத் தொடங்கும் புறநானூற்றுப் பாடலை அடிபிறழாமல் எழுதி பாவகையைச் சுட்டுக.

ஆ) "விடற்கு" என முடியும் குறட்பாவினை எழுதுக.

MERCY PUBLICATIONS - CHENNAI

www.Padasalai.Net

# பொதுத்தேர்வு வினாத்தாள்

## மார்ச் – 2019

## பகுதி – I பொதுத்தமிழ்

நேரம் : 2.30 மணி மதிப்பெண் : 90

அறிவுரைகள் : (1) அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளனவா என்பதனைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின், அறைக்கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) நீலம் அல்லது கறுப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும், அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

குறிப்பு : (i) விடைகள் தெளிவாகவும், குறித்த அளவினவாகவும், சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

(ii) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுக.

### பகுதி – I

**குறிப்பு** : (i) அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. 14 × 1 = 14

(ii) கொடுக்கப்பட்ட நான்கு மாற்று விடைகளில், மிகவும் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுக.

1. ‘கனவுகள் + கற்பனைகள் = காகிதங்கள்’ என்னும் கவிதை நூலின் ஆசிரியர் :

அ) மீரா ஆ) இரா. மீனாட்சி இ) அப்துல் ரகுமான் ஈ) வாரா

2. ‘உணவே மருந்து’ என்னும் கருத்துக்குப் பொருத்தமான திருக்குறளைக் கண்டுபிடிக்கவும்.

அ) மாறுபாடு இல்லாத உண்டி மறுத்து உண்ணின்
ஊறுபாடு இல்லை உயிர்க்கு.

ஆ) மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது
அற்றது போற்றி உணின்.

இ) உள்ளியது எய்தல் எளிதுமன் மற்றும்தான்
உள்ளியது உள்ளப் பெறின்.

ஈ) நோய்நாடி நோய்முதல்நாடி அது தணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்.

3. யாரோ உனைப்போல் அனுதினம் உழைப்போர்? – இது எவர் மொழி?

அ) நடராசன் ஆ) புல் இ) வாய்க்கால் ஈ) நாங்கூழ்

4. கோடு, மலை, சிகரம், விளிம்பு, எல்லை முதலிய பொருள்களைத் தரும் சொல் :

அ) மரை ஆ) திரை இ) வரை ஈ) உரை

5. கூற்று – 1 : தஞ்சைப் பெரிய கோவிலிலுள்ள ஓவியங்களை, எஸ். கே. கோவிந்தசாமி கண்டறிந்தார்.
கூற்று – 2 : அங்குள்ள சோழர் காலத்து ஓவியங்கள், ஃபிரேஸ்கோ வகையைச் சார்ந்தவை.

அ) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி ஆ) கூற்றுகள் இரண்டும் சரி
இ) கூற்று 1 சரி கூற்று 2 தவறு ஈ) கூற்றுகள் இரண்டும் தவறு

6. பொருத்தமான தொடரைத் தேர்ந்தெடுக்கவும் :

அ) உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே – திருமூலர்
ஆ) மனமது செம்மையானால் மந்திரம் செபிக்க வேண்டாம் – கடுவெளிச்சித்தர்
இ) எனக்கு முன்னே சித்தர் பலர் இருந்தார் அப்பா – பத்திரகிரியார்
ஈ) சாதி வகை இல்லாமல் சஞ்சரிப்பது எக்காலம்? – பாரதியார்

7. ‘தனிக்குறில் முன்ஒற்று உயிர்வரின் இரட்டும்’ என்னும் விதிப்படி அமைந்த சொல் :

அ) வில்லொடிந்தது ஆ) திரைப்படம்
இ) பூஞ்சோலை ஈ) வயிற்றுப்பசி

www.Padasalai.Net

8. ஆசிரியப்பாவிற்கு உரிய சீர் :
அ) வெண்சீர் ஆ) கனிச்சீர் இ) ஆசிரிய உரிச்சீர் ஈ) வஞ்சியுரிச்சீர்
9. பொருந்தாததைக் கண்டறிக.
அ) யானைடாக்டர் – ஜெயமோகன்
ஆ) செவ்வி – நர்த்தகி நடராஜ்
இ) பிம்பம் – பிரபஞ்சன்
ஈ) வாடிவாசல் – அ. முத்துலிங்கம்
10. 'அறிவும் ஒழுக்கமும்' – என்பதன் இலக்கணக்குறிப்பு :
அ) உவமை ஆ) எண்ணும்மை இ) பெயரெச்சம் ஈ) உம்மைத்தொகை
11. Document – என்பதன் தமிழ்ச்சொல்லைத் தேர்ந்தெடுக்கவும் :
அ) ஒப்பந்தம் ஆ) சட்டம் இ) ஆவணம் ஈ) கோப்பு
12. 'கொள்' என்னும் வேர்ச்சொல்லின் வினையாலணையும் பெயரைத் தேர்ந்தெடுக்கவும் :
அ) கொள்ளும் ஆ) கொள்வோன் இ) கொள்க ஈ) கொள்ளுதல்
13. ஈரொற்று மெய்ம்மயக்கம் இடம் பெற்றுள்ள சொல் :
அ) கப்பல் ஆ) மகிழ்ச்சி இ) பட்டம் ஈ) மார்கழி
14. சரியான நிறுத்தற் குறியுடைய சொற்றொடரைக் கண்டுபிடிக்கவும். (நீக்கப்பட்ட பாடம்)
அ) வில்லிபாரதத்தில், சூரியனின் தோன்றல் என்று, குறிப்பிடப்படுபவர் யார்?
ஆ) வில்லிபாரதத்தில், 'சூரியனின் தோன்றல்' என்று, குறிப்பிடப்படுபவர் யார்?
இ) வில்லிபாரதத்தில் சூரியனின் தோன்றல் என்று, குறிப்பிடப்படுபவர் யார்?
ஈ) வில்லிபாரதத்தில் "சூரியனின் தோன்றல்" என்று, குறிப்பிடப்படுபவர் யார்?

## பகுதி – II

**இரண்டு அல்லது மூன்று வரிகளில் விடை தருக.**

### பிரிவு – 1

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.** **3 × 2 = 6**

15. தமிழர்கள் புகழ், பழியை எவ்வாறு ஏற்றதாகப் புறநானூறு கூறுகிறது?
16. ஏவல் மறுக்கும் சிறுவிளையாட்டி
அறிவும் ஒழுக்கமும் யாண்டுணர்ந்தனள் கொல்"
– இவ்வடிகள், இடம்பெற்ற நூல் எது? ஆசிரியர் யார்?
17. பாயிரம் பற்றி நீவிர் அறியும் கருத்து யாது?
18. சிங்கி பெற்ற பரிசுப் பொருட்களுள் நான்கினைக் குறிப்பிடுக.

### பிரிவு – 2

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** **2 × 2 = 4**

19. ஐந்து விவசாய மந்திரங்கள் எவை?
20. இந்தியக் கட்டடக் கலையின் மூன்று வகைகள் யாவை?
21. நாட்டுப்புறத்திலும், பட்டணத்திலும் சிறந்து விளங்குவதாகத் தாகூர் எவற்றைக் கூறுகிறார்?

### பிரிவு – 3

**எவையேனும் ஏழனுக்கு விடை தருக.** **7 × 2 = 14**

22. ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக.
அ) அழைத்தான் ஆ) மலிந்த
23. ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சிவிதி தருக.
அ) திருவடி ஆ) கருங்கடல்
24. மரபுப்பிழையை நீக்கி எழுதுக.
களிமயில் கூவும்; புள்ளிக்
கருங்குயில் பேசும்.

MERCY PUBLICATIONS - CHENNAI

25. மெய்ப்புத் திருத்தக் குறியீடுகளுக்கு உரிய பொருளைத் தருக.

அ) ? /   ஆ) 

26. விகுதியைக் கொண்டு ஆக்கப் பெயரைக் கண்டறிக.

அ) அறிவைத் தேடிப்போகுமிடம் உலகம் அறிய உதவுமிடம் (அகம்) ______.

ஆ) வந்தால் மகிழ்ச்சி இது உழைத்தால் கிடைக்கும் இது (மானம்) ______.

27. விடைக்கேற்ற வினா அமைக்கவும்.

அ) தமிழ் இதழியல் துறையில் முதன்முதலாகக் கருத்துப்படங்களை அறிமுகப்படுத்தியவர் பாரதி.

ஆ) நீலகேசி என்பது, ஐஞ்சிறுங் காப்பியங்களுள் ஒன்று. (நீக்கப்பட்ட பாடம்)

28. தேவையான இடங்களில் வல்லின மெய்களை இட்டு எழுதுக.

அ) புறநானூறு, எட்டுதொகை நூல்களுள் ஒன்று. புறத்திணை சார்ந்த நானூறு பாடல்களை கொண்டது.

ஆ) அனைத்துத் துறைகளிலும் ஆண்களை போலவேப் பெண்களும் அரசு பணியை பெறவேண்டும்.

29. மயங்கொலிச் சொற்களின் பொருளறிந்து சொற்றொடர் அமைக்கவும்.

கனை – கணை

30. கலைச்சொல்லாக்கம் – பொருள் தருக.

## பகுதி – III

**ஐந்து அல்லது ஆறு வரிகளில் விடை தருக.**

### பிரிவு – 1

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** **2 × 4 = 8**

31. 'உயர்தமிழை உயிரென்று போற்றுமின்கள்' – இடம் சுட்டிப் பொருள் விளக்கம் தருக.

32. முல்லைத் திணைக்குரிய முதற்பொருள், கருப்பொருள்களை அட்டவணைப்படுத்துக.

33. சங்ககாலத்தில் நடைபெற்ற சமூக நிகழ்வு வெள்ளிவீதியார் பாடலில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. இக்காலச் சமூக நிகழ்வுகள் எழுத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளமையை ஒப்பிட்டு விளக்குக.

34. இவ்வுலகம் நிலைத்திருப்பதற்கான காரணங்களாக, கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி கூறுவனவற்றை எழுதுக.

### பிரிவு – 2

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** **2 × 4 = 8**

35. தமிழ் இலக்கியங்களில் கல்வி குறித்து நீவிர் அறிந்த செய்திகளை விளக்குக.

36. ஆனந்தரங்கர் ஒரு வரலாற்று ஆசிரியர் என்பதைப் பாடப்பகுதி வழி எடுத்துக்காட்டுக.

37. ஜீவாவின் பேச்சு நடை குறித்துச் சுந்தர ராமசாமி கூறுவன யாவை?

38. ஆனந்தரங்கர் 'இந்தியாவின் பெப்பிசு' என அழைக்கப்படுவது ஏன்?

### பிரிவு – 3

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.** **3 × 4 = 12**

39. உருவக அணி அல்லது பிறிது மொழிதல் அணியை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

40. கொடுக்கப்பட்டுள்ள பத்தியைப் படித்துத் தொடரும் வினாக்களுக்கு விடை தருக.

நகராட்சிப் பள்ளி ஆசிரியராக நெடுங்காலம் பணியாற்றிய அவர், தன்னுணர்வால், உறுதியான உழைப்பால், தமிழ்ப்பற்றால் பல்கலைக்கழகப் பேராசிரியர்களும் மதித்துப் போற்றும் பணிகளைச் செய்தார். ஆங்கிலம், மலையாளம், கன்னடம் ஆகிய மொழிகளைக் கற்றுத் தேர்ந்தவர். சிறந்த வரலாற்று ஆசிரியர், நடுநிலை பிறழாத ஆய்வாளர், மொழியியல் அறிஞர், இலக்கியத் திறனாய்வாளர் என்றெல்லாம் போற்றப்பட்ட பன்முகச் சிறப்புக் கொண்டவர். அவருக்கு மதுரைப்

MPCN PUBLICATIONS - CHENNAI

www.Padasalai.Net

பல்கலைக்கழகம் 1980 –ஆம் ஆண்டு, 'தமிழ்ப் பேரவைச் செம்மல்' என்னும் பட்டமளித்துப் பாராட்டியது. கிறித்தவமும் தமிழும், சமணமும் தமிழும், பௌத்தமும் தமிழும், மறைந்துபோன தமிழ்நூல்கள் போன்ற பல நூல்களால் தமிழ் ஆய்வு வரலாற்றில் மயிலை. சீனி. வேங்கடசாமி, அழியாச் சிறப்பிடம் பெற்றுள்ளார்.

அ) மயிலை சீனி வேங்கடசாமியின் பன்முகச் சிறப்புகள் யாவை?

ஆ) பத்தியில் இயைபு நயம் பொருந்திய சொற்களை எடுத்து எழுதுக.

இ) அழியாச் சிறப்பிடம் – இலக்கணக் குறிப்புத் தருக.

ஈ) நகராட்சிப் பள்ளி ஆசிரியராகப் பணியாற்றியவர் அவர் – யார்?

41. போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து – பழமொழியை வாழ்க்கை நிகழ்வுகளோடு தொடர்பு படுத்தி எழுதுக.

42. தமிழாக்கம் தருக.

அ) Culture does not make people. People make culture.

ஆ) In nature, light creates the Colour. In the Picture, Colour creates the light.

இ) Nobody can hurt me without my permission.

ஈ) Work while you work and play while you play.

43. வெண்ணிலா அல்லது மழை என்னும் தலைப்பில் புதுக்கவிதை ஒன்றை எட்டு வரிகளுக்குக் குறையாமல் எழுதுக.

## பகுதி – IV

**பின்வரும் வினாக்களுக்கு இரு பக்கங்களுக்கு மிகாமல் விடை தருக. 3 × 6 = 18**

44. அ) பாதசாரிகளின் வழிநடைப் பாடல் காவடிச்சிந்து என்பதை அண்ணாமலையாரின் பாடல் வழி நிறுவுக.

(அல்லது)

ஆ) மதீனா நகரின் வளத்தினை உமறுப்புலவர் எங்ஙனம் வருணிக்கிறார்.

45. அ) 'கல்லும் கதை சொல்லும்' – என்னும் தொடர், தஞ்சைப் பெரிய கோவிலுக்குப் பொருந்துவதை விளக்கி எழுதுக.

(அல்லது)

ஆ) 'சிதறிய கடிதங்கள்' உணர்த்தும் கருத்துகளைச் சிதறாது விளக்குக.

46. இதழாளர் பாரதி குறித்து நீவிர் அறிவன யாவை?

(அல்லது)

சிம்பொனித் தமிழர் இசைத் தமிழுக்கு ஆற்றிய பணிகளை நும் பாடப்பகுதி கொண்டு விளக்குக.

## பகுதி – V

47. அடிமாறாமல் செய்யுள் வடிவில் எழுதுக. **4 + 2 = 6**

அ) 'உண்டால் அம்ம' – எனத் தொடங்கும் புறநானூற்றுப் பாடல்.

ஆ) 'இடத்து' என முடியும் குறள்.

MERCY PUBLICATIONS CHENNAI

www.Padasalai.Net

# பொதுத்தேர்வு வினாத்தாள்

# மார்ச் – 2020

## பகுதி – I பொதுத்தமிழ்

நேரம் : 3.00 மணி நேரம்] மதிப்பெண்கள் : 90

**அறிவுரைகள் :** (1) அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளனவா என்பதனைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின், அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) நீலம் அல்லது கறுப்பு மையினைமட்டுமே எழுதுவதற்கும், அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

**குறிப்பு :** (i) விடைகள் தெளிவாகவும், குறித்த அளவினவாகவும், சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

(ii) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுக.

### பகுதி – I

**குறிப்பு : அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.** **14 × 1 = 14**

1. வடகரை நாட்டில் மீனைப் பிடித்து உண்பதற்காக வந்த பறவை :
   அ) நாரை ஆ) தூக்கணாங் குருவி
   இ) உள்ளான் பறவை ஈ) கழுகு

2. சரியான இணையைத் தேர்ந்தெடுக்கவும்.
   அ) குண்டலப்பூச்சி – (i) பாடகம்
   ஆ) விரியன் – (ii) தண்டை
   இ) திருகு முருகு – (iii) சிலம்பு
   ஈ) சாழல் – (iv) விளையாட்டு

3. பேராசிரியர் சுந்தரனார் பிறந்த ஊர் :
   அ) பேரணாம்பட்டை ஆ) ஆலப்புழை இ) தென்காசி ஈ) புதுச்சேரி

4. கவிதையினைப் பேசுவதுபோல் எழுதுவதுதான் உத்தமம். அதுவே மானுடத்துக்கு எழுத்தாளர்கள் செய்யும் கடமை என்று கூறியவர் :
   அ) மகாகவி பாரதியார் ஆ) இராசேந்திரன் இ) எர்னஸ்ட் காசிரர் ஈ) வால்ட் விட்மன்

5. ஏடு, சுவடி, பொத்தகம், பனுவல் முதலிய சொற்கள் தரும் பொருள் ______ என்பதாகும்.
   அ) தாள் ஆ) நூல் இ) ஓலை ஈ) எழுத்தாணி

6. சாந்திநிகேதனத்தில் உள்ள மரம் :
   அ) சமேலி ஆ) ஜூஹீ இ) பியால ஈ) ஸேவுந்தி

7. பேசிடுக – என்பதன் இலக்கணக்குறிப்பு :
   அ) வியங்கோள் வினைமுற்று ஆ) வினைத்தொகை
   இ) தொழில் பெயர் ஈ) பெயரெச்சம்

8. நேரொன்றாசிரியத்தளை எனப்படுவது :
   அ) மா முன் நேர் ஆ) காய் முன் நேர் இ) காய் முன் நிரை ஈ) கனி முன் நிரை

9. தவறான இணையைத் தேர்வு செய்க.
   அ) மண் + வளம் – மெய் + மெய் ஆ) மொழி + ஆளுமை – உயிர் + உயிர்
   இ) கடல் + அலை – உயிர் + மெய் ஈ) தமிழ் + உணர்வு – மெய் + உயிர்

10. Sailor – என்பதன் தமிழ்ச் சொல்லைத் தேர்ந்தெடுக்கவும் :
    அ) மாலுமி ஆ) ஆவணம் இ) ஒப்பந்தம் ஈ) இனக்குழு

www.Padasalai.Net

11. 'செவ்வி' – என்னும் சிறுகதையின் ஆசிரியர் :

அ) புதுமைப்பித்தன் ஆ) நர்த்தகி நடராஜ் இ) பிரபஞ்சன் ஈ) சி. சு. செல்லப்பா

12. Value Education – என்பதன் கலைச்சொல் :

அ) குழுக் கல்வி ஆ) ஆற்றல் கல்வி இ) மதிப்புக் கல்வி ஈ) முது கல்வி

13. "கல்லதர்" – என்னும் சொல்லிற்குரிய புணர்ச்சி விதிகளைத் தேர்வு செய்க :

அ) ஈறுபோதல், தன்னொற்றிரட்டல்

ஆ) இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும்

இ) உயிர்வரின் உக்குறள் மெய்விட்டு ஓடும்

ஈ) தனிக்குறில்முன் ஒற்று, உயிர்வரின் இரட்டும், உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே

14. ஈரொற்று மெய்ம்மயக்கம் இடம் பெற்றுள்ள சொல் :

அ) அச்சம் ஆ) காய்ச்சல் இ) கப்பல் ஈ) தேர்தல்

## பகுதி – II பிரிவு – 1

**குறிப்பு : எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.** **3 × 2 = 6**

15. தமிழர்கள் புகழ், பழி ஆகியவற்றை எவ்வாறு ஏற்றதாகப் புறநானூறு கூறுகிறது?
16. மதீனா நகரம் ஒரு பொன்னகரம் என்னும் கூற்றினை உறுதிப்படுத்துக.
17. ஒழுக்கமும் பொறையும் உனைப்போல் யார்க்குள – இவ்வடி எதனைக் குறிப்பிடுகிறது?
18. உழைப்பாளர்களின் தோள் வலிமையால் விளைந்தன யாவை?

## பிரிவு – 2

**குறிப்பு : எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** **2 × 2 = 4**

19. 'நாழிக்குள் திணிக்கும் மருந்துபோல்' என்னும் உவமையை ஜீவானந்தம் பேச்சுடன் ஒப்பிடுக.
20. 'ஃப்ரெஸ்கோ' என்ற சொல்லின் பொருள் யாது? இவ்வகை ஓவியங்கள் எங்கு காணப்படுகின்றன?
21. "தொழு உரம்" என்றால் என்ன?

## பிரிவு – 3

**குறிப்பு : எவையேனும் ஏழனுக்கு விடை தருக.** **7 × 2 = 14**

22. உயிரீறு, மெய்யீறு – விளக்குக.

23. ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக.

அ) தண்டுடை ஆ) புவியாட்சி

24. உள்ளுறை உவமம், இறைச்சி விளக்குக.

25. மெய்ப்புத் திருத்தக் குறியீடுகளுக்கு உரிய பொருளைத் தருக.

அ) # ஆ) ^

26. ஏதேனும் ஒன்றனுக்கு உறுப்பிலக்கணம் தருக.

அ) மலிந்து ஆ) அணிந்தேன்

27. சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க.

வைகை

28. மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக.

பொரி, பொறி

29. தொடரில் உள்ள சொற்களை ஒழுங்குபடுத்தி இரண்டு சொற்றொடர்களாக்குக.

நிலவு வீசுவதால் தெற்கிலிருந்து தென்றல் மகிழ்விக்கும் எனப்படுகிறது மனதை.

30. வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.

அனைத்துத் துறைகளிலும் ஆண்களை போலவேப் பெண்களும் அரசு பணியை பெற வேண்டும்.

MERCY PUBLICATIONS - CHENNAI

பகுதி – III பிரிவு – 1

**குறிப்பு : எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** **2 × 4 = 8**

31. "சலச வாவியில் செங்கயல் பாயும்" – இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.
32. மருந்து, மருத்துவர், மருத்துவம் ஆகியன பற்றித் திருக்குறள் கூறுவன யாவை?
33. சேரநாடு செல்வ வளம் மிக்கது என்ற கூற்றிற்குரிய காரணங்களைக் குறிப்பிடுக.
34. இன்குலாப், "உலகுக்கு வேண்டும் நானும் ஓர் துளியாய்" எனக் கூறுவதன் நயத்தை விளக்குக.

பிரிவு – 2

**குறிப்பு : எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** **2 × 4 = 8**

35. வேதிக் கலப்பில்லாத பூச்சிக்கொல்லி நடைமுறைக்குச் சாத்தியமா? – நும் கருத்தை எழுதுக.
36. மரபுவழிக் கல்வி முறைகளில் எவையேனும் இரண்டனை விளக்குக.
37. ஆனந்தரங்கரின் இறுதிக்கால நாட்குறிப்புகளில் இடம் பெற்ற செய்திகளை விவரிக்கவும்.
38. கற்றளிக் கோவில்கள் என்றால் என்ன? எடுத்துக்காட்டுகள் தருக.

பிரிவு – 3

**குறிப்பு : எவையேனும் மூன்றனுக்கு விடையளிக்கவும்.** **3 × 4 = 12**

39. வேற்றுமை அணி (அ) உருவக அணியை எடுத்துக்காட்டுடன் விளக்குக.
40. மெய்ப்புத் திருத்துநர் பணிவேண்டி நாளிதழ் முதன்மையாசிரியருக்குக் கீழ்க்காணும் விவரங்களுடன் தன் விவரக்குறிப்பு ஒன்று எழுதுக.
    பெயர், வயது, பாலினம், பிறந்த நாள், முகவரி, அலைபேசி எண், கல்வித்தகுதி, அறிந்த மொழிகள்.
41. அன்னை (அ) சுற்றுச்சூழல் ஏதேனும் ஒரு தலைப்பில் எட்டு வரிகளுக்கு குறையாமல் கவிதை எழுதுக.
42. புதிர்களுக்கான விடைகளைத் தேர்ந்தெடுத்து எழுதுக.
    (மதி, இதழ், கம்பு, வளை, சினை, ஆழி)
    1. எலியும் நுழையும்; எழிலரசி கையும் நுழையும் ______.
    2. அடிக்கவும் செய்யலாம்; கோடைக்குக் கூழாகவும் குடிக்கலாம் ______.
    3. அறிவின் பெயரும் அது தான்; அம்புலியின் பெயரும் அதுவே தான் ______.
    4. பூவின் உறுப்பும் நானே; புன்னகையின் பிறப்பிடமும் நானே ______.
43. தமிழாக்கம் தருக.
    1. You must be the change you wish to see in the world.
    2. Nobody can hurt me without my permission.
    3. The weak can never forgive. Forgiveness is the attribute of the strong.
    4. An eye for an eye only ends up making the whole world blind.

**43. காது கேளாதவர்களுக்கான மாற்று வினா :**

**பத்தியினைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்கவும்.**

'தமிழ்' என்ற சொல் தமிழர்க்கு இனிமையானது. 'இனிமையும் நீர்மையும் தமிழெனல்' ஆகும் என்று பிங்கல நிகண்டு குறிப்பிடுகிறது. 'தமிழ்' என்ற சொல்லை இனிமை, பண்பாடு, அகப்பொருள் என்னும் பொருள்களிலும் வழங்கியுள்ளனர்.

"அதூஉம் சாலும் நற்றமிழ் முழுதறிதல்" என்ற புறநானூற்றுப் பாடலடியில் 'தமிழ்' எனும் சொல் மொழி, கவிதை என்பவற்றைத் தாண்டிப் "பல்கலைப் புலமை" என்ற பொருளில் ஆளப்பட்டுள்ளது. "தமிழ்கெழு கூடல்" என்ற விடத்திலும் "கலைப்புலமை" என்ற பொருளிலே ஆளப்பட்டுள்ளது. கம்பன் "தமிழ் தழீஇய சாயலவர்" என்னும் இடத்து, 'தமிழ்' என்பதற்கு அழகும் மென்மையும் பொருளாகின்றன.

தேவாரம் போன்ற பக்தி இலக்கியங்களில் 'தமிழ்' பாட்டு என்னும் பொருளில் ஆளப்படுகிறது. ஞானசம்பந்தன் சொன்ன "தமிழ் இவை பத்துமே" மூலன் உரை செய்த மூவாயிரம் தமிழ் என்பன எடுத்துக்காட்டுகளாகும். முப்பது பாட்டுக்களாலான திருப்பாவையை ஆண்டாள் "தமிழ்மாலை" என்றே குறிப்பது இங்கு எண்ணத்தக்கும்.

MERCURY PUBLICATIONS - CHENNAI

www.Padasalai.Net

வினாக்கள் :

1. தமிழ் என்னும் சொல்லுக்குரிய பல்வேறு பொருள்கள் யாவை?
2. பத்தியில் உள்ள அளபெடைகளைக் கண்டறிக.
3. தமிழ் என்றவுடன் உங்கள் மனதில் தோன்றுவதை ஒரு வரியில் குறிப்பிடுக.
4. திருப்பாவைக்கு ஆண்டாள் குறிப்பிடும் பெயர் யாது?

## பகுதி – IV

**குறிப்பு : அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** **3 × 6 = 18**

44. அ) தலைவியின் இல்லறப் பாங்கினைப் பற்றிச் செவிலித்தாய் நற்றாயிடம் வியந்து கூறுவன யாவை?

(அல்லது)

ஆ) இறைவனின் பெருமையைத் தெரிவிக்கும் திருச்சாழல் மூலம் மாணிக்கவாசகரின் மொழி விளையாட்டினை விவரிக்கவும்.

45. அ) சுந்தர ராமசாமியின் "காற்றில் கலந்த பேரோசை" என்னும் தலைப்பு ஜீவாவின் வாழ்க்கைக்கு எங்ஙனம் பொருந்தும் என்பதை விளக்குக.

(அல்லது)

ஆ) நீங்கள் மொழியை வெளிப்படுத்தும் நிலையில் பேச்சு மொழியையும் எழுத்து மொழியையும் எவ்வாறு உணர்கிறீர்கள் என்பதை விவரிக்கவும்.

46. அ) "வாடிவாசல்" கதை வாயிலாக நீங்கள் உணர்ந்த கருத்துகளை விளக்குக.

(அல்லது)

சிம்பொனித் தமிழரும் ஆஸ்கர் தமிழரும் இசைத்தமிழுக்கு ஆற்றிய பணிகளை நும் பாடப்பகுதி கொண்டு தொகுத்தெழுதுக.

## பகுதி – V

47. அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக.

அ) "நான் என்பாய் அது" – எனத் தொடங்கும் பாடலை எழுதுக. 4

ஆ) "செயல்" – என முடியும் குறளை எழுதுக. 2

---

# விடைகள்

## பகுதி – I

**அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.** **14 × 1 = 14**

1. இ) உள்ளான் பறவை
2. ஈ) சாழல் – (iv) விளையாட்டு
3. ஆ) ஆலப்புழை
4. அ) மகாகவி பாரதியார்
5. ஆ) நூல்
6. இ) பியால
7. அ) வியங்கோள் வினைமுற்று
8. அ) மா முன் நேர்
9. இ) கடல் + அலை – உயிர் + மெய்
10. அ) மாலுமி
11. ஆ) நர்த்தகி நடராஜ்
12. இ) மதிப்புக் கல்வி
13. ஈ) தனிக்குறில்முன் ஒற்று, உயிர்வரின் இரட்டும், உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே
14. ஆ) காய்ச்சல்

MERCY PUBLICATIONS - CHENNAI

### பகுதி – II பிரிவு – 1

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.** **3 × 2 = 6**

15. புகழ் : புகழ் வரும் என்றால், தமிழர்கள் தம் உயிரையும் கொடுப்பர்.
பழி : பழி வரும் என்றால், உலகம் முழுவதும் கிடைத்தாலும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்.
16. மேருமலைபோல் மதீனா நகரின் மேல்மாடங்கள் உயர்ந்திருந்தன.
அங்காடிகள் நிறைந்த தெருக்களில் எழுந்த பேரொலி, பெருங்கடல்போல் இருந்தது.
மதீனா நகரின் வீதிகள், பிரபஞ்சம்போல் பரந்து விரிந்திருந்தன.
தோரணங்களும், கொடிகளும் கட்டப்பட்டுப் பொன்னகர்போல் பொலிந்தது.
17. எம்மண்ணையும் நன்மண்ணாக்கும் நாங்கூழ்ப் புழுவின் செயல்பாடுகளை, இவ்வடி குறிப்பிடுகிறது.
18. உழைப்பாளர்கள் தங்கள் தோள்வலிமையால் பாழ்நிலத்தைப் பண்படுத்திப் புதுநிலமாக்கினர்.
அழகு நகர்களையும் சிற்றூர்களையும் உருவாக்கினர்.
வயல்களையும், நீர்வளத்தையும் பெருக்கி, விளைபொருள்களை உற்பத்தி செய்தனர்.

### பிரிவு – 2

**குறிப்பு : எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** **2 × 2 = 4**

19. ‘வாண வேடிக்கைக்காரன் நாழிக்குள் திணிக்கும் மருந்துபோல்’ என்னும் உவமை ஜீவானந்தத்தின் மேடைப்பேச்சின் சிறப்பை விளக்குகிறது.
இரண்டு கைப்பிடி விசயத்துடன் மேடை ஏறுவார். வெடிமருந்துக்கு நெருப்பு வைத்ததும், பச்சை, மஞ்சள், சிவப்பு எனக் குடைகுடையாய் உதிர்வதுபோல, மாலை மாலையாய் இறங்கி வரும் கருத்து வண்ணஜாலம் அறிந்தவர் ஜீவா என்பதைத் தெளிவுபடுத்த, இவ்வுவமை கூறப்பட்டுள்ளது.
20. ‘ஃப்ரெஸ்கோ’ என்னும் இத்தாலியச் சொல்லுக்குப் ‘புதுமை’ என்பது பொருள்.
சுண்ணாம்புக் காரைப் பூச்சுமீது, அதன் ஈரம் காயும்முன் வரையப்படும் பழமையான ஓவியக்கலை நுட்பத்தை இவ்வாறு குறிப்பிட்டனர். இவ்வகை ஓவியங்கள் அஜந்தா, எல்லோரா, சித்தன்ன வாசல், தஞ்சைப் பெரிய கோவில், சாந்தார நாழிகைப் பகுதிச் சுவர் ஆகிய இடங்களில் காணப்படுகின்றன.
21. **நன்செய்நிலத் தொழுஉரம் :** மாட்டுச் சாணமும், கோமியமும் வைக்கோலுடன் கலந்து மக்கச்செய்து உருவாக்குவது.
**புன்செய்நிலத் தொழுஉரம் :** காய்ந்த இலை, சருகு, கால்நடைச் சாணத்தை எரிப்பதால் கிடைக்கும் சாம்பல் கலந்தது.

### பிரிவு – 3

**குறிப்பு : எவையேனும் ஏழனுக்கு விடை தருக.** **7 × 2 = 14**

22. **உயிரீறு :** நிலைமொழியின் இறுதி எழுத்து உயிர்மெய்யாக இருந்தாலும் அதன் இறுதியில் நிற்கும் வடிவம் உயிர் என்பதால் அது உயிரீறு எனப்படும்.
எ – கா : மணி அடி
**மெய்யீறு :**
நிலைமொழியின் இறுதி எழுத்து மெய்யாக இருந்தால் அது ‘மெய்யீறு’ எனப்படும்.
எ – கா : பசுமை + தளிர்
23. அ) தண்டுடை – தண்டு + உடை
 1. உயிர்வரின் உக்குறள் மெய்விட் டோடும்
 2. உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே.

 ஆ) புவியாட்சி – புவி + ஆட்சி
 1. இ ஈ, ஐ வழி யவ்வும்
 2. உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே

MERCY PUBLICATIONS - CHENNAI

www.Padasalai.Net

24. உள்ளுறை உவமம் : கவிஞர் தாம் கூறக் கருதிய, அகமாந்தர்களின் மன உணர்வுகளை வெளிப்படையாகக் கூறாமல், கருப் பொருள்கள்மூலம் உவமைப்படுத்துவது, உள்ளுறை உவமம் ஆகும்.

இறைச்சி : உரிப்பொருளோடு நேரிடைத் தொடர்பு இல்லாத குறிப்புப் பொருளே இறைச்சி எனப்படும்.

இறைச்சி, அகப்பாடல்களில் மட்டுமே வரும்.

25. அ) # – பத்திகளுக்கிடையில், வரிகளுக்கிடையில், சொற்களுக்கிடையில் இடைவெளி தருக

ஆ) ^ – சொல்லையோ எழுத்தையோ இந்தக் குறிப்பிட்ட இடத்தில் சேர்த்துக் கொள்க.

26. அ) மலிந்து – மலி + த் (ந்) + த் + உ

மலி – பகுதி; த் – சந்தி 'ந்' ஆனது விகாரம்;

த் – இறந்தகால இடைநிலை; உ – வினையெச்ச விகுதி.

ஆ) அணிந்தேன் – அணி + த் (ந்) + த் + ஏன்

அணி – பகுதி; த் – சந்தி 'ந்' ஆனது விகாரம்;

த் – இறந்தகால இடைநிலை; உ – தன்மை ஒருமை வினைமுற்று விகுதி.

27. வைகை

வைகை நதியைப் பாரதியார், "தமிழ் கண்டதோர் வைகை" எனப் பாடியுள்ளார்.

வை கை – குழந்தை தெருவிற்குச் செல்லாமல் இருக்க, , "வை கை"யை என்று கூறினான்.

28. பொரி, பொறி

சோளம் பொறிக்கப் பொறியைப் பயன்படுத்துகின்றனர்.

29. நிலவு வீசுவதால் தெற்கிலிருந்து தென்றல் மகிழ்விக்கும் எனப்படுகிறது மனதை.

தெற்கிலிருந்து வீசுவதால் தென்றல் காற்று எனப்படுகிறது.

நிலவு மனதை மகிழ்விக்கும்.

30. அனைத்துத் துறைகளிலும் ஆண்களைப் போலவே பெண்களும் அரசுப் பணியைப் பெற வேண்டும்.

## பகுதி – III பிரிவு – 1

**குறிப்பு : எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** **2 × 4 = 8**

31. இடம் : திருமலை முருகன் பள்ளுவில், வடகரை நாட்டின் வளத்தைக் கூறும்போது, 'சலச வாவியில் செங்கயல் பாயும்' என்று, பெரியவன் கவிராயரால் கூறப்படுகிறது.

பொருள் : நீர் நிறைந்த தாமரைத் தடாகத்தில், செம்மையான கயல்மீன்கள் துள்ளிப்பாய்ந்து, விளையாடும் என்பது பொருளாகும்.

விளக்கம் : வடகரை நாடு நீர் நில வளம் மிக்கது. அங்குத் தாமரை நிறைந்த குளத்தில், கயல் மீன்கள் துள்ளிப் பாய்ந்து விளையாடும்; மீனைப் பிடித்துண்ண வந்து சங்கிலியில் அமர்ந்துள்ள உள்ளான் பறவை, வண்டுகளின் இசையில் மயங்கி, வாலை ஆட்டியபடி அமர்ந்திருக்கும் என்று கூறப்பட்டுள்ளது. இதில் வடகரை நாட்டின் நீர், நிலவளம் தெளிவாக விளக்கப்பட்டுள்ளது.

32. முன்னர் உண்டது செரித்ததை அறிந்து உண்டால், மருந்து என ஒன்று உடலுக்குத் தேவையில்லை.

நோய், காரணம், நீக்கும் வழி, நோயாளியின் வயது, நோயின் அளவு, மருத்துவம் செய்தற்குரிய காலம் ஆகியவற்றை ஆராய்ந்து, மருத்துவர் செயல்பட வேண்டும்.

மருத்துவம் என்பது நோயாளி, மருத்துவர், மருந்து, மருந்தாளுநர் என்னும் நான்கு வகைக்குள் அடங்கும்.

33. நெடுஞ்சேரலாதன், தன் நாட்டையும் மக்களையும் கண்போல் பாதுகாத்தான்.

புதுவருவாய்ப் பெருக்கமும், ஈந்து உவக்கும் இன்பமும் உடையவன் சேரலாதன்.

மக்கள், பசியும் பிணியும் அறியாது, வேற்று நாட்டுக்கும் செல்ல விரும்பாமல் சுற்றம் சூழ வாழ்ந்தனர்.

இக்காரணங்களால், சேரநாடு செல்வவளம் மிக்கதாக விளங்கியது.

MERCY PUBLICATIONS - CHENNAI

34. கைகள் நீளும்போது, தோழமை தொடர வாய்ப்பு உண்டு.

ஆனால், நீளாத கைகளிலும், நெஞ்சத்தைப் படரவிட வேண்டும்.

இந்த உலகம், பெருங்கடல் போன்றது. அது, எனக்கு முழுமையாகத் தேவைப்படுகிறது.

அந்த உலகக் கடலில் நானும் ஒரு துளியாக இருப்பதால், உலகிற்கு நானும் தேவைப்பட்டவனாவேன்.

"மனிதக் கடலில் நானும் ஒரு துளியாக இருக்கிறேன்" என்பதை, இன்குலாப் நயம்படக் கூறுகிறார்.

## பிரிவு – 2

**குறிப்பு : எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** **2 × 4 = 8**

35. வேதிக்கலப்பில்லாத பூச்சிக்கொல்லி, நடைமுறைக்குச் சாத்தியமே.

பூச்சிக்கொல்லியைப் பயன்படுத்துவதால், மனிதர்களுக்குப் பல்வேறு நோய்கள் ஏற்படுகின்றன.

வேப்பங்கொட்டை, நொச்சி இலை, புங்கன், பிரண்டை, கற்றாழை ஆகிய அனைத்தையும் நன்றாக இடித்துக் கோமியத்தில் ஊற வைத்துப் பயிர்களில் தெளித்தால், பூச்சிகள் காணாமல் போய்விடும்.

வேதிக் கலப்பில்லாத பூச்சிக் கொல்லியால், நுண்ணுயிர்ப் பெருக்கம் ஏற்பட்டு, மண்வளம் பெருகும்.

36. மரபுவழிக் கல்விமுறை சார்ந்த குருகுலக் கல்வி முறையில், மாணவர்கள் ஆசிரியர்களை அணுகிப் பல ஆண்டுகள் அவருடன் தங்கி இருந்து, ஆசிரியருக்குத் தேவையான பணிகளைச் செய்து கல்வி கற்றனர்.

குருகுலக் கல்வி முறையானது செய்து கற்றல், வாழ்ந்து கற்றல், எளிமையாக வாழ்தல் என்னும் அடிப்படையில் அமைந்திருந்தது. இம்முறையானது, வாழ்வியலைக் கட்டமைப்பதில் உறுதியானதாக விளங்கியது.

19ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில், சிற்றூர்கள்தோறும் பெருமளவில் திண்ணைப் பள்ளிகள் தோன்றின. இவற்றைத் 'தெற்றிப் பள்ளிகள்' என அழைத்தனர். இதன் ஆசிரியர் 'கணக்காயர்' என அழைக்கப்பட்டார்.

இப்பள்ளிகள் ஒரே மாதிரியாக வரன்முறை செய்யப்படவில்லை. ஆங்கிலேயர்கள் திண்ணைப் பள்ளிகள், பாடசாலைகள், மத்தாபுகள் போன்ற கல்வி அமைப்புகளை 'நாட்டுக்கல்வி' என அழைத்தனர்.

இப்பள்ளிகளுக்கான பாடத்திட்டம், பள்ளிநேரம், பயிற்றுவிக்கும்முறை ஆகியன ஆசிரியர்களின் விருப்பப்படி அமைந்திருந்தன. இவை பொதுமக்களின் கல்வித் தேவையை நிறைவு செய்தன.

சென்னை மாகாணத்தில் 12,498 திண்ணைப் பள்ளிகள் இருந்ததாகவும், அவற்றின் கல்வித்தரம் ஐரோப்பிய நாடுகளின் கல்வித்தரத்தைவிட உயர்ந்திருந்ததாகவும் தாமஸ் மன்றோ நடத்திய ஆய்வு உறுதி செய்துள்ளது.

37. புதுச்சேரியை ஆங்கிலேயர் முற்றுகை இட்டதையும் புதுச்சேரியின் வீழ்ச்சியையும் ஆனந்தரங்கரின் இறுதிக் கால நாட்குறிப்புகள் பேசுகின்றன. புதுச்சேரியைத் தாக்க 1760 பிப்ரவரியில் ஆங்கிலக் கப்பல்கள் வந்தன.

செஞ்சியைச் சுற்றியுள்ள பகுதிகளை வென்ற ஆங்கிலத் தளபதி புதுச்சேரியில் நெருங்கியது, ஆங்கிலப் படைகள் சாரம்வரை வந்துவிட்டதைப் பொதுமக்கள் வேடிக்கைப் பார்த்தது, புதுச்சேரியில் பீதி நிலவும் வகையில் குண்டு சாலையை ஆங்கிலேயர் பிடித்தது,

தேவனாம் பட்டணத்தில் மேலும்மேலும் ஆங்கிலத் துருப்புகள் கப்பலில் வந்து இறங்கியது, புதுச்சேரியைச் சுற்றியுள்ள பகுதிகள் அனைத்தையும் ஆங்கிலேயர் கைப்பற்றியது என்னும் செய்திகளை எல்லாம் தம் குறிப்பேட்டில் ஆனந்தரங்கர் எழுதிவைத்துள்ளார். இவை இறுதிக்கால நாட்குறிப்புகளாகும்.

38. செங்கற்களை ஒன்றன்மேல் ஒன்றாக அடுக்கிக் கட்டுவதைப்போல் கருங்கற்களை அடுக்கிக் கட்டுவதற்குக் 'கற்றளி' என்று பெயர். இவ்வடிவத்தை ஏழாம் நூற்றாண்டில் பல்லவ மன்னன் இரண்டாம் நரசிம்மவர்மன் உருவாக்கினான்.

மகாபலிபுரம் கடற்கரைக் கோவில், காஞ்சிபுரம் கைலாசநாதர் கோவில், பனைமலைக்கோவில் ஆகியவற்றைக் கற்றளிக் கோவில்களுக்கு உதாரணங்களாகச் சொல்லலாம்.

அந்தவகையில் இராசராசசோழன் கட்டியது மிகப் பெரிய கற்றளிக் கோவிலாகும். 'தட்சிணமேரு' என இராசராசனால் பெருமையுடன் அழைக்கப்பட்ட தஞ்சைப் பெரியகோவில் நம் நாட்டிலுள்ள கற்றளிக் கோவில்களில் பெரியதும் உயரமானதுமாகும்.

MEENA PUBLICATIONS - CHENNAI

www.Padasalai.Net

பிரிவு – 3

**குறிப்பு : எவையேனும் மூன்றனுக்கு விடையளிக்கவும்.** 3 × 4 = 12

39. வேற்றுமையணி :

**இலக்கணம் :** இரு பொருள்களின் ஒற்றுமையை முதலில் கூறிப் பின்னர் அவற்றின் வேற்றுமையைக் கூறுவது வேற்றுமை அணி.

**சான்று :** தீயினாற் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
நாவினாற் சுட்ட வடு – இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்குக.

**விளக்கம் :** தீயினால் சுட்ட புண்ணும், நாவினால் சுட்ட வடுவும் சுடுதலால், ஒற்றுமை உடையன. புண் ஆறும்; வடு ஆறாது என்பது வேற்றுமை. எனவே, வேற்றுமை அணி பயின்று வந்துள்ளது.

**உருவக அணி :**

**இலக்கணம் :** உவமானத்தின் தன்மையை உவமேயத்தின்மேல் ஏற்றிக் கூறுவது உருவகம். இவ்வகை உருவகம் இடம் பெற்றுள்ள செய்யுளை, உருவக அணிச் செய்யுள் எனக் கூறுவர்.

**சான்று :** இரவென்னும் ஏமாப்பில் தோணி கரவென்னும்
பார்தாக்கப் பக்கு விடும்.

**விளக்கம் :** இக்குறளில் 'இரவு' (யாசித்தல்) 'ஏமாப்புஇல்' (பாதுகாப்பு இல்லாத) தோணியாகவும், 'கரவு' (ஈயாமை–கொடுக்காமை) 'பார்' (பாறை) ஆகவும் உருவகம் செய்யப் பெற்றுள்ளன. எனவே, உருவக அணி அமைந்துள்ளது.

40. பெயர், வயது, பாலினம், பிறந்த நாள், முகவரி, அலைபேசி எண், கல்வித்தகுதி, அறிந்த மொழிகள்.

41. அன்னை (அ) சுற்றுச்சூழல் ஏதேனும் ஒரு தலைப்பில் எட்டு வரிகளுக்கு குறையாமல் கவிதை எழுதுக.

42. 1. வளை 2. கம்பு 3. மதி 4. இதழ்

43. 1. இந்த உலகத்தில் மாற்றத்தைக் காண விரும்பினால், நீ முதலில் மாறவேண்டும்.
2. என் அனுமதி இல்லாமல் என்னை எவரும் வேதனைப்படுத்த முடியாது.
3. வலிமை இல்லாதவன் மறக்கமாட்டான். மறப்பது என்பது வலிமையானவனின் உயர்பண்பு.
4. கண்ணுக்குக் கண் எனப் பழிவாங்கும் செயல், முடிவில் உலகம் முழுவதையுமே குருடாக்கிவிடும்.

**43. 1.** இனிமை, பண்பாடு, மொழி, அழகு என்பன பொருள்களாகும்.
**2.** அதூஉம், தழீஇய
**3.** இனிமை, பொருள் செறிவு, எளிமை, தண்மைகளை உள்ளடக்கிய மொழி.
**4.** தமிழ்மாலை

MERCY PUBLICATIONS - CHENNAI

www.Padasalai.Net

# மனப்பாடப் பகுதி

## இயல் – 1

### யுகத்தின் பாடல்

ஏடு தொடக்கி வைத்து என்னம்மை
மண்ணிலே தீட்டித்தீட்டி எழுதுவித்த
விரல்முனையைத் தீயிலே தோய்த்து
திசைகளின் சுவரெலாம்
எழுதத்தான் வேண்டும்
எழுகின்ற யுகத்தினோர் பாடலை.

– சு. வில்வரத்தினம்

### 2. நன்னூல் – பாயிரம்

ஆக்கியோன் பெயரே வழியே எல்லை
நூற்பெயர் யாப்பே நுதலிய பொருளே
கேட்போர் பயனோடு ஆயஎண் பொருளும்
வாய்ப்பக் காட்டல் பாயிரத்து இயல்பே.

காலம் களனே காரணம் என்றுஇம்
மூவகை ஏற்றி மொழிநரும் உளரே.

– பவணந்தி முனிவர்

## இயல் – 2

### 1. காவியம்

சிறகிலிருந்து பிரிந்த
இறகு ஒன்று
காற்றின் தீராத பக்கங்களில்
ஒரு பறவையின் வாழ்வை
எழுதிச் செல்கிறது.

– பிரமிள்

## இயல் – 3

### 1. குறுந்தொகை

அம்ம வாழி தோழி நம்மூர்ப்
பிரிந்தோர்ப் புணர்ப்போர் இருந்தனர் கொல்லோ
தண்டுடைக் கையர் வெண்டலைச் சிதவலர்
நன்றுநன் றென்னும் மாக்களோடு
இன்றுபெரிது என்னும் ஆங்கண தவையே.

– வெள்ளிவீதியார்

www.Padasalai.Net


## 2. புறநானூறு

உண்டால் அம்ம இவ்வுலகம் இந்திரர்
அமிழ்தம் இயைவது ஆயினும், இனிதுஎனத்
தமியர் உண்டலும் இலரே; முனிவிலர்!
துஞ்சலும் இலர்பிறர் அஞ்சுவது அஞ்சிப்
புகழ்எனின் உயிருங் கொடுக்குவர்; பழியெனின்
உலகுடன் பெறினும் கொள்ளலர்; அயர்விலர்;
அன்ன மாட்சி அனையர் ஆகித்
தமக்கென முயலா நோன்தாள்
பிறர்க்கென முயலுநர் உண்மை யானே.

– கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி

## திருக்குறள்

### அடக்கமுடைமை

நிலையின் திரியாது அடங்கியான் தோற்றம்
மலையினும் மாணப் பெரிது.

யாகாவார் ஆயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு.

தீயினால் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
நாவினால் சுட்ட வடு.

### ஒப்புரவறிதல்

தாளாற்றித் தந்த பொருளெல்லாம் தக்கார்க்கு
வேளாண்மை செய்தல் பொருட்டு.

மருந்தாகித் தப்பா மரத்தற்றால் செல்வம்
பெருந்தகை யான்கண் படின்.

### புகழ்

தோன்றின் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று.

வசையொழிய வாழ்வாரே வாழ்வார் இசையொழிய
வாழ்வாரே வாழா தவர்.

### நிலையாமை

நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்துஇவ் வுலகு.

MERCY PUBLICATIONS - CHENNAI

### துறவு

யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்
அதனின் அதனின் இலன்.

பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு.

### வலியறிதல்

வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும்
துணைவலியும் தூக்கிச் செயல்.

அமைந்தாங் கொழுகான் அளவறியான் தன்னை
வியந்தான் விரைந்து கெடும்.

அளவறிந்து வாழாதான் வாழ்க்கை உளபோல
இல்லாகித் தோன்றாக் கெடும்.

### காலமறிதல்

ஞாலம் கருதினும் கைகூடும் காலம்
கருதி இடத்தால் செயின்.

## இயல் – 5

## திருக்குறள்

### குறிப்பறிதல்

குறிப்பில் குறிப்புணர் வாரை உறுப்பினுள்
யாது கொடுத்தும் கொளல்

### பகைத்திறம் தெளிதல்

வில்லேர் உழவர் பகைகொளினும் கொள்ளற்க
சொல்லேர் உழவர் பகை.
இளைதாக முள்மரம் கொல்க களையுநர்
கைகொல்லும் காழ்த்த விடத்து.

### மருந்து

மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது
அற்றது போற்றி உணின்.
நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்

### இரவச்சம்

இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக உலகியற்றி யான்

– திருவள்ளுவர்

MERCY PUBLICATIONS - CHENNAI

www.Padasalai.Net


## இயல் – 7

### புரட்சிக்கவி

சிற்றூரும் வரப்பெடுத்த வயலும் ஆறு
தேக்கியநல் வாய்க்காலும் வகைப்ப டுத்தி
நெற்சேர உழுதுழுது பயன்வி ளைக்கும்
நிறைஉழைப்புத் தோள்களெலாம் எவரின் தோள்கள்?
கற்பிளந்து மலைபிளந்து கனிகள் வெட்டிக்
கருவியெலாம் செய்துதந்த கைதான் யார்கை?
பொற்றுகளைக் கடல்முத்தை மணிக்கு லத்தைப்
போய்எடுக்க அடக்கியமூச் செவரின் மூச்சு?

– பாரதிதாசன்

## இயல் – 8

### 2. தொலைந்து போனவர்கள்

உடைஅணிந்தேன் எனச் சொல்லுகிறாய் – வெறும்
உடலுக் கணிவது உடையல்ல.
விடையைக் கண்டேன் என்றுரைத்தாய் – ஒரு
வினாவாய் நீயே நிற்கின்றாய்.
தின்றேன் என்பாய் அணுஅணுவாய் – உனைத்
தின்னும் பசிகளுக் கிரையாவாய்.
வென்றேன் என்பர் மனிதரெல்லாம் – பெறும்
வெற்றியிலே தான் தோற்கின்றார்.
'நான்' என்பாய் அது நீயில்லை – வெறும்
நாடக வசனம் பேசகிறாய்.
ஏன்? என்பாய் இது கேள்வியில்லை – அந்த
ஏன் என்னும் ஒளியில் உனைத் தேடு.

– அப்துல் ரகுமான்

★★★★★★★

MERCY PUBLICATIONS - CHENNAI

MERCY PUBLICATIONS - CHENNAI

www.Padasalai.Net

MERCY PUBLICATIONS - CHENNAI